இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா. ரா. அரசு

International Institute of Tamil Studies

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

தொகுதி – 1

இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

தொகுதி – 1

பதிப்பாசிரியர்
இ. சுந்தரமூர்த்தி
மா. ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Indhiya Viduthalaikku Munthaiya Thamil Idhalgal, Part - 1**
Editors	:	**E. Sundaramoorthy** **M. R. Arasu**
Publisher	:	**International Institute of Tamil Studies,** C.I.T. Campus, Taramani, Chennai - 600 113.
Publication No	:	289
Language	:	Tamil
Date of Publication	:	1998
Edition	:	First
Paper Used	:	TNPL Maplitho XL 18.6 kg
Size of the book	:	1/8 Demy
Printing types	:	10 points
No.of Pages	:	464
Price	:	Rs.100/- (Rupees One Hundred Only)
No.of Copies	:	1200
Printed by	:	Parkar Computers and Publications 293, Royapettah High Road, Chennai - 600 014.
Subject	:	Studies on Tamil Journalism

இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டுச்
சிறப்பு வெளியீடு – 1998

ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

அணிந்துரை

இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் இதழ்களின் பங்கு பேரளவினது. தமிழகத்தில் விடுதலை இயக்கத்தில் திலகர், காந்தி அடிகள் காலகட்டங்களில் பல இதழ்கள் தோன்றி வளர்ந்து வரலாறு படைத்தன.

இந்திய விடுதலையை நோக்கி நடைபயின்ற காங்கிரசுப் பேரியக்கம் 'தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம்' என்னும் முழக்கத்தை முன்வைத்தது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் மத நல்லிணக்கத்தையும் ஊக்குவிக்கும் வகையில் தமிழில் தோன்றிய பல இதழ்கள் இங்கு நினைவு கூரத்தக்கன.

தமிழ் இதழியலின் தொடக்க கால வரலாறு இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கதாகும். தமிழில் தோன்றிய முதல் இதழ், 'தமிழ் மாகசின்' என்ற பெயரிலேயே வெளிவந்தது. வெளிவந்த ஆண்டு 1831. சென்னையில் அந்நாளில் இயங்கி வந்த 'துண்டுப் பிரசுர சங்கம்' என்னும் கிறித்தவ அமைப்பு இந்த இதழை நடத்தியது. மாத இதழாக வெளி வந்த இது பல அரிய தகவல்களைக் கொண் டிருந்தது. என்றாலும், இதழின் ஆசிரியர் பொறுப்பில் ஒருவரே தொடர்ந்து செயல்படாமல், அவ்வப்போது ஆசிரியர் மாற்றப்பட்ட தனால் இதழ் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியாமல் போனது.

தமிழில் தோன்றிய முதல் வார இதழ் 'தினவர்த்தமானி' என்பதாகும். 1855இல் பெர்சிவல் பாதிரியாரை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த இந்த இதழ் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்தது. இலக்கியம், அறிவியல், கலை சார்ந்த கட்டுரைகள் மிகப்பலவாக இவ்விதழில் இடம் பெற்றன.

பின்னாளில் வேறுவேறு துறைகளில் புகழ் பெற்று விளங்கிய சி.வை. தாமோதரம் பிள்ளை, எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை, வீராசாமி செட்டியார், விசுவநாதபிள்ளை போன்றவர்கள் இவ்விதழில் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர்கள்.

தமிழில் தோன்றிய முதல் நாளிதழ் 'சுதேசமித்திரன்' ஆகும். 1882 இல் வார இதழாகத் தொடங்கப்பட்ட இவ்விதழ் 1899 இல் நாளிதழாக மாற்றப்பட்டது. தமிழ் இதழியல் வரலாற்றில் சுதேச மித்திரனுக்கும் அதன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயருக்கும் நிரந் தரமான ஓர் இடம் உண்டு.

'இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்' என்னும் தலைப்பு ஒரு நீண்ட வரலாற்றை உள்ளடக்கியதாகும். எண்ணற்ற இதழ்கள்; எண்ணற்ற ஆசிரியர்கள்; எனவே விரிப்பின் பெருகும். அந்தப் பட்டியலில் சாதனை படைத்த குறிப்பிடத்தக்க சில இதழ் களின் பெயர்களை மட்டும் இங்குச் சுட்டலாம்.

பகடால நரசிம்மலு நாயுடுவின் 'சேலம் தேசாபிமானி', சி.வி. சாமிநாதையரின் 'விவேகசிந்தாமணி', கந்தசாமிக் கவிராயரின் 'விவேகபாநு', எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையும், வி.கோ. சூரியநாரா யண சாஸ்திரியும் இணைந்து நடத்திய 'ஞானபோதினி', அல்லயன்ஸ் பதிப்பகத்தார் நடத்திய 'விவேகபோதினி', மதுரையில் இருந்து தமிழ்ச் சங்க வெளியீடாக வந்த 'செந்தமிழ்', கரந்தைத் தமிழ்ச் சங் கம் வெளியிட்ட 'தமிழ்ப் பொழில்', கழக வெளியீடான 'செந்தமிழ்ச் செல்வி', 'ஆனந்தவிகடன்', 'கல்கி', 'பிரசண்ட விகடன்', 'விமோசனம்', 'காந்தி' 'மணிக்கொடி', 'தினமணி', 'தினசரி', 'லோகோபகாரி', 'சுதந் திரச் சங்கு' முதலான இதழ்கள் வரலாறு படைத்தவை.

விடுதலைப் பொன்விழா ஆண்டில் இத்தகு இதழ்கள் பற்றிய தொடர் கருத்தரங்குகள் நிகழ்த்தவேண்டும் என எண்ணித் திட்டமிட் டோம். இதழியல் கருத்தரங்க முதல் நிகழ்ச்சியை உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையும் இதழியல் ஆய்வுத்துறையில் அரிய ஆய்வுகளைத் தொடர்ந்து நிகழ்த்தி வரும் டாக்டர் மா. இராச மாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் இணைந்து 13.10.97 - 14.10.97 ஆகிய நாள்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையில் நடத்தின.

எளிதில் கிடைக்காத அரிய இதழ்கள் பற்றிய ஆய்வுரைகளை அறிஞர் பலரும் இக்கருத்தரங்கு அமர்வுகளில் நிகழ்த்தினர். அவர்

தம் ஆய்வுரைகள் அனைத்தும் இம்முதல் தொகுதியில் தொகுக்கப் பெற்றுள்ளன.

அரிதின் முயன்று தேடித் தொகுத்தளித்த ஆய்வறிஞர்களின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது. அவர்கட்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்களும் இதழியல் ஆய்வுமைய இயக்குநர் மா.ரா. அரசு அவர்களும் இக்கருத்தரங்கு பல்லாற் றானும் சிறப்புற உதவினார்கள். திரளாக அறிஞர் பெரு மக்கள் இக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு சிறப்பித்தமை எங்கட்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

இத்தொகுதியில் காணப்பெறும் அனைத்துக் கட்டுரைகளும் பல்வேறு நிலைகளில் புதிய செய்திகளைத் தருவன. இன்றைய வளர்ந்த இதழியல் சூழலைப் பொருத்திக் காணும்போதுதான் அன்றைய இதழாசிரியர்கள் எத்துணையளவு பேரீடுபாடு கொண்டு இதழ்களை நடத்தி வந்தனர் என்பது நன்கு புலனாகும்.

இவற்றையெல்லாம் தொகுத்துத்தந்த ஆய்வுக் கட்டுரையா ளர்கள், கருத்தரங்கத் தொகுதியை வெளிக்கொணர்வதற்குப் பேரீடு பாட்டுடன் உழைத்துப் பதிப்பித்த பேராசிரியர்கள் இ. சுந்தரமூர்த்தி, மா.ரா. அரசு ஆகியோர்க்கும் எங்கள் நன்றி.

நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் திருமிகு. த.இரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களுக் கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

அழகிய முறையில் நூலுருவாக்கம் செய்த திரு.வே. கருணாநிதி அவர்கட்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

பொருளடக்கம்

1.	சுதேசமித்திரன்	– பெ. சு. மணி	29
2.	விவேகசிந்தாமணி	– மா. ரா. அரசு	81
3.	லோகோபகாரி	– பெ. சு. மணி	97
4.	தமிழர் நேசன்	– இராம. குருநாதன்	153
5.	தமிழ் நாடு	– சா. வளவன்	173
6.	நவசக்தி	– அ. நாகலிங்கம்	191
7.	செந்தமிழ்ச் செல்வி	– திருமதி. வெ. கனகசுந்தரம்	239
8.	தமிழ்ப் பொழில்	– க. பூரணச்சந்திரன்	263
9.	குடி அரசு	– நா. செயப்பிரகாசு	293
10.	விமோசனம்	– மா. ரா. அரசு	319
11.	சுதந்திரச்சங்கு	– சி. குமாரி	351
12.	காந்தி	– பா. மதிவாணன்	377
13.	மணிக்கொடி	– பழ. அதியமான்	397
14.	தினமணி	– பொன். தனசேகரன்	417
15.	ஹிந்துஸ்தான்	– ரா. அ. பத்மநாபன்	437
16.	இந்திய விடுதலையும் தமிழ் இதழ்களும்	– ந. கடிகாசலம்	451

பதிப்புரை

இதழியல் துறை

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியால் இன்று இதழியல் துறை பல்வேறு சிறப்பியல்புகளைப் பெற்று விளங்குகின்றது. உலகத்தின் எந்த இடத்திலும் நடைபெறும் சிறு நிகழ்வுகளும் செயற்கைக் கோள்கள் வழியாகப் பெறப்பட்டு அப்பொழுதே இதழ்கள் வழி மக்களுக்குச் சென்று சேரும்வண்ணம் அறிவியல் வளர்ச்சி மாற்றம் பெற்றுள்ளது. எனவேதான் பாவேந்தர் பாரதி தாசன் ‘ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப் பேரறி வாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்’ என இதழியல் துறை யைச் சுட்டுவார். மக்களின் வாழ்க்கைப் போக்கில் நீங்கா இடம் பெற்று விளங்குவன இதழ்கள். நம் மனத்தில் எழுகின்ற எண்ணங் களை வெளிப்படுத்தத் துணையாயுள்ளவை நம்மகத்தே உறுப்பு களாய் விளங்கும் இதழ்கள். இதழ் விரிந்து செயல்படும் போது தான் நம் எண்ணமும் பிறர்க்கு அறிய ஏதுவாகின்றது. அது போலவே தகவல் ஊடகச்சக்திகளுள் ஒன்றாக விளங்கும் இதழியல் துறையும் சமூக அரசியல் விழிப்புணர்வு எண்ணங்களை மக்களுக் குக் கொண்டு சேர்க்கும் பெருவாயிலாகத் திகழ்கின்றது. நாட்டின் வரலாற்றை மாற்றியமைக்கும் பேராற்றல் பெற்ற சக்திகளுள் ஒன்று இதழியல் துறை.

இதழியல்துறை இன்றைய சூழலில் எல்லாத்துறைகளிலும் ஊடுருவி ஆற்றல்மிக்க சமுதாயச் சக்தியாக விளங்குகின்றது. ‘அரசின் நான்காம்தூண்’ என்று வரலாற்று ஆசிரியர் மெக்காலே இதழியல் துறையைச் சுட்டுவார். இதற்கு மேலும் விளக்கமளிக்கும் வகையில் எட்மண்ட்பர்க் நாடாளுமன்றத்தில் அரச குடும்பம், பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை என மூன்று தூண்கள் உள்ளன; செய்தி யாளர்கள் நான்காம் தூண்’ என்று குறிப்பிட்டார் (மாபா. குருசாமி, இதழியல் பக். 5). எனவே மக்களின் வாழ்வியல் நெறிகள் சரியான முறையில் பேணப்படுவதற்கு இதழியல் துறைதான் காலம் கால மாக உழைத்து வந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இதழியல் நோக்கம்

இந்தியநாட்டு விடுதலைப் போராட்டத்தில் இதழ்கள் பெரும் பணியாற்றிவந்துள்ளன. ஆங்கிலேயர்களின் அடக்கு முறைக்கு எதிராகவும், சமுதாயக் கொடுமைகளுக்கு எதிராகவும் மக்களை ஒருங்கிணைப்பதில் இதழ்கள் ஆற்றிய பணி பேரளவினது. அண்ணல் காந்தியடிகள் இதழியலின் நோக்கமாக மூன்றைக் குறிப்பிடுவார்:

1. மக்களின் உணர்வினை அறிந்து வெளியிடுதல்
2. இன்றியமையாத உணர்வுகளை மக்களிடையே உருவாக்குதல்
3. பொதுமக்களிடம் இருக்கும் குறைகளைத் துணிவாக வெளியிடுதல்

இம்மூன்றும் இன்றும் இதழ்கள் பேணிவருகின்ற தலையாய கொள்கைகளாகும். எனவே இதழ்கள் மூலம் ஒரு சமுதாயம் சூழலுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்கின்றது என்பது உண்மை. இன்றைய செய்திகள் நாளைய வரலாறு எனக் குறிப்பிடுவதும் இக்காரணம் பற்றியே எனலாம். மக்களின் கருத்துக்களை உருவாக்குவதில் இதழ்கள் பெரும்பங்களிப்பைச் செய்து வருகின்றன.

இதழியல் முன்னோடிகள்

இந்திய விடுதலை உணர்வை மக்களிடையே விளக்குவதில் அன்றைய இதழ்கள் பெரும் பணியாற்றின. ஆங்கிலேயரின் அடக்கு முறையால் தலைமறைவு நிலையில் பல்வேறு இதழ்கள் வெளி வந்தன. ஹேஸ்டிங்ஸின் வருகைக்குப் பிறகுதான் இதழ்களுக்கு விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இதற்குப் பிறகு சிறிது சிறிதாக இதழ்களின் எண்ணிக்கை வளர்ச்சியடையத் தொடங்கிற்று. 1815இல் வெளிவந்த 'வங்காள கெஜட்' இவ்வகையில் குறிப்பிடத் தக்கது ஆகும். கங்காதூர் பட்டாச்சார்யா இதனைத் தொடங்கினார். பின்னர் 1818 இல் 'கார்டியன் இதழும்', 'சமாச்சார் தர்பன்' என்ற வங்காள வாரச் செய்தித்தாளும் வெளியாயின. இந்திய இதழ்களில் தனித்தரத்தை உருவாக்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஜேம்ஸ் சில்க் பக்கிங்காம். 1818இல் இவர் தொடங்கிய கல்கத்தா ஜெர்னல் (Calcutta Journal) அரசின் அடக்கு முறைகளை வெளிப் படுத்தி மக்களுக்குச் சுதந்திரச் சிந்தனையை ஊட்டியது. அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டுவதோடு அமையாது சமூகச் சீர்திருத்த

உணர்வையும் மக்களுக்கு ஊட்டியது. உடன்கட்டை ஏறும் வழக்கத்தை எதிர்த்துக் குரல் எழுப்பியது. அரசுக்கு எதிரான கருத்துக்களை அவர் கூறி வந்ததால் அவரை இந்தியாவினின்றும் திருப்பி அனுப்பினர். ஆயினும் பக்கிங்காம் இங்கிலாந்து சென்றும் 'ஓரியண்டல் ஹெரால்டு' (Oriental Herald) என்னும் இதழை நடத்தி அதன் வாயிலாக இந்தியாவில் நாட்டு நிருவாகத்தில் இந்தியர்களுக்கு உரிமைதர வேண்டும் என முழங்கினார். இந்திய இதழியல் வரலாற்றில் இந்தியர்களின் சுதந்திரத்திற்காகக் குரல் எழுப்பியவர்களுள் பக்கிங்காம் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தவர்.

இதழியல் உரிமை

இந்திய மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாக விளங்கிய இராஜா ராம் மோகனராய் இந்திய இதழியல் துறைக்கு அருந்தொண்டாற்றியவர். பன்மொழிப்புலமையாளராகிய அவர் சமூக சீர்திருத்தத்தைப் பரப்பியவர். அரசியல் உரிமையையும், இதழியல் உரிமையையும் மக்களுக்கு ஊட்டியவர். ஆங்கிலத்தில் 'Brahmanical Magazine' என்ற இதழையும், வங்காளமொழியில் 'சம்பத் கௌமுதி' (Sambat Kaumudi) என்ற இதழையும். பெர்சிய மொழியில் 'மீரட் அல் அக்பர்' (Mirat - ul - Akhbar) என்ற இதழையும் வெளியிட்டு அருந்தொண்டாற்றினார். இந்திய இதழ்களின் உரிமைக்காக அன்றைய அரசோடு போராடி இதழ்கள் வளர்வதற்குத் துணை நின்றார். சீர்திருத்த, அரசியல் முற்போக்கு எண்ணங்களை இதழ்களின்வழி மக்களிடையே பரப்பினார். ஆங்கிலக் கல்வி வளர்ச்சியால் இதழியல் துறை இந்தியாவில் மேன்மேலும் வளர்ந்தது. பொறியியல் வளர்ச்சி மாற்றத்தின் காரணமாக இதழியல் துறை புதிய பரிமாணம் பெறத் தொடங்கியது. தொடக்க காலத்தில் இத்துறை பெரிதும் வளர்ச்சி பெறுவதற்குக் காரணமாய் அமைந்தவர்களுள் இராஜா ராம் மோகன்ராயின் பங்கு அளவிடற்கரியதாகும். ஆனாலும் இடையிடையே ஆங்கில அரசு இந்திய இதழ்களுக்குக் கடும் கட்டுப்பாட்டை விளைவித்தது. முதல் சுதந்திரப் போருக்குப்பின் (1857) ஆங்கிலேய அரசு கொண்டு வந்த சட்டத்தால் (Gagging Act) இந்திய இதழ்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாயின. ஆயினும் இந்திய விடுதலை இயக்கத்திற்கு இதழ்கள் பெரும்பங்காற்றின. கடுமையான கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கில அரசிற்கு எதிராகக் கிளர்ச்சிகளை உருவாக்கவும், சுதந்திர வேட்கையை உருவாக்கவும் இதழ்கள் பெரும் துணை நின்றன.

தேசிய இயக்கம்

கோபால கிருஷ்ண கோகலே 'சுதாரக்' என்னும் இதழை முன்னின்று நடத்தித் தேசிய இயக்கங்களுக்கு வலுவூட்டினார். இதழின் சுதந்திரத்திற்காகத் திலகரும் தம் இதழ்கள் வழியே பெரும் போராட்டங்களைச் சந்தித்து வெற்றி பெற்றார். இந்தியத் தலைவர்கள் ஆங்கில ஆட்சியின் அடக்குமுறைக்குட்பட்டுச் சிறை சென்ற போதும் இதழ்கள் தம்பணிகளில் தொய்வு காட்டவில்லை. திலகரின் 'கேசரி', அரவிந்தரின் 'வந்தே மாதரம்', சுவாமி விவேகானந்தரின் சகோதரர் பூபேந்திரநாத்தின் 'ஜுகந்தர்', பிரமோ பந்தாப் உபாத்யாயாவின் 'சந்தியா', பிரோஷா மேத்தாவின் 'பாம்பே கிரானிக்ஸ்', மௌலானா முகம்மது அலியின் 'காம்ரேட்', அபுல்கலாம் ஆசாத்தின் உருது இதழான 'அல்ஹிலால்', சீனிவாசாச்சாரியாரின் 'செர்வென்ட் ஆப் இந்தியா' முதலாய இதழ்கள் தேசிய விடுதலை இயக்கத்திற்கு அரும் பணியாற்றின.

இந்திய விடுதலை இயக்கத்தில் அண்ணல் காந்தியடிகள் பங்கேற்றபின்னர் இந்திய இதழ்களின் வளர்ச்சிப் போக்கிலும் புதிய மாற்றங்கள் தோன்றின. தென்னாப்பிரிக்காவில் இதழியல் அனுபவம் பெற்றிருந்த காந்தியடிகள் தம் இதழ்களை உயர்ந்த குறிக்கோள் நெறிகளோடு வெளியிட்டார். 'யங் இந்தியா', 'ஹரிஜன்', 'நவஜீவன்' ஆகிய இதழ்கள் காந்தியடிகளின் அகிம்சை நெறிகளை அடிப்படையாகக் கொண்ட கருத்தியலாக்கங்களை மக்கள் முன்வைப்பதற்குப் பெரும் துணைநின்றன. காந்தியடிகளின் வருகைக்குப்பின் அவர் கொள்கைகளைப் பின்பற்றியே பெரும்பாலான இதழ்கள் விளங்கின. தேசிய இயக்கத்தை முன்னிறுத்தி இவ்விதழ்கள் தம் பணியை ஆற்றின.

தமிழ் இதழ்கள்

இந்திய இதழியல் வளர்ச்சிச் சூழலுக்கேற்பத் தமிழ் மொழியிலும் அக்காலகட்டத்தில் பல்வேறு இதழ்கள் தோன்றின. 'மெட்ராஸ் கெஜட்', 'கவர்ன்மெண்ட் கெஜட்', 'மெட்ராஸ் கூரியர்' என்னும் இதழ்கள் ஆங்கிலேயர்களின் தேவைக்காக உருவானவை. பின்னர் கிறித்தவப் பாதிரிமார்கள் சமயச் செய்திகளுக்காகச் சில இதழ்களை வெளியிட்டனர். பெர்சிவல் பாதிரியார் 1855 ஆம் ஆண்டில் 'தினவர்த்தமானி' என்னும் இதழை வெளியிட்டார். தமிழில் முதன் முதலில் நாளிதழ் அளவில் வெளிவந்த செய்தித்தாளாகத் 'தின வர்த்த மானியை' குறிப்பிடுவர். மர்டாக் குறிப்பிடும் முதல் செய்தித் தாள் இதுவேயாகும்.

பின்னர் வெளிவந்த 'ஜனவிநோதினி' (1870), 'லலிதா பிரசனோ தயா' (1887) முதலாய இதழ்கள் குறிப்பிடத்தக்கவை. இதற்கு முன்னர் வெளிவந்த பல்வேறு இதழ்களையும் இதழியல் அறிஞர் திரு. அ.மா. சாமி (19ஆம் நூற்றாண்டுத்தமிழ் இதழ்கள்) பட்டியலிட்டுள் ளார். அவற்றுள் சில வருமாறு : 'தமிழ்மேகசின்' (1831) 'புனிதஜார்ஜ் கெசட்டு' (1832), 'இராஜவிருத்தி போதினி' (1833) 'மெட்ராஸ் கிரானிகல்' (1835) 'புதுவை நடுநிலை' (ல இம்பார் டியல்டி) (1838), 'உதயதாரகை' (1841).

இதழியல் துறையின் தொடக்ககாலம் முதல் இன்று வரை காலந்தோறும் தேவைக்கேற்ப இதழ்கள் தோன்றிவருகின்றன. பல நூறு இதழ்களைப் பெற்றுவிளங்கும் தமிழ் இதழியல் துறையில் இந்திய விடுதலை உணர்வை வெளியிடும் போக்கிலும், சமய வரலாறு, பண்பாடு, மொழி ஆகியவற்றின் பெருமையை அனைவரும் உணரும் வகையிலும் பல இதழ்கள் தோன்றின. இந்திய விடுதலைக்கு முந் தைய இதழ்களின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு ஆகியவை தமிழ் நாட்டின் அரசியல் பண்பாட்டு வரலாறாக அமையும்.

சுதேசமித்திரன்

தமிழிதழியல் வரலாற்றில் தனித்த இடம்பெற்று விளங்கும் தலையாய சிறப்பினை உடையது சுதேசமித்திரன் இதழ். இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தொடங்கக் காரணமாக இருந்தவர் களுள் ஒருவரான திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் 1882 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற இதழ் சுதேசமித்திரன். இந்தியர்க்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை மக்களுக்கு உணர்த்தும்விதத்தில் இவ்விதழ் தன் பணியைத் தொடங்கியது. சுதேசமித்திரன் என்னும் பெயர் இதழின் நோக்கத்தைப் புலப் படுத்தியது. நாட்டு மக்களின் புதிய விழிப்புணர்வுக்கு நண்பனாக விளங்கியது ; 'தமிழ் ஜன சமூகத் தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மை' என்று இதழின் நோக்கத் தைப் புலப்படுத்தும்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நிகழ்த்திய அறப்போர், மற்றும் தென்னாப்பிரிக்க இந்தியர் போராட்டங்கள் முதலானவற் றிற்கு நல்லாதரவு நல்கி அரிய செய்திகளை வெளியிட்டது. நேட் டால், டிரான்ஸ்வால், கேப்காலனி, ஆரஞ்சுரிவர் ஸ்டேட்ஸ் என் னும் ஆப்பிரிக்க நாடுகளில் சுதேசமித்திரனுக்கு நிருபர்கள் இருந் தமையை ஆய்வாளர் சுட்டுவர். 1892ஆம் ஆண்டிலிருந்து 1914ஆம்

ஆண்டுவரை சுதேசமித்திரனில் வெளிவந்த தென்னாப் பிரிக்கக் கடிதங்கள் 195 என்று கூறுவார் இதழியல் அறிஞர் இளங்கோவன் (முதல் நாளிதழ்கள் மூன்று, பக்.41). காந்தியடிகளைப் பற்றி முதன் முதலாகச் செய்தி வெளியிட்ட பெருமையும் சுதேசமித்திரனுக்கே உண்டு என்பார். "மிஸ்டர் காந்தி என்பவர் மட்டும் நேடாலில் உள்ள இந்தியர்களுக்குப் பரிந்துபேசத் தலைப்பட்டு, அவ்வூர் ஐரோப் பியர்கள் செய்யும் அக்கிரமங்களை எடுத்துக்காட்டி, ஐரோப்பியர்க் குள்ள உரிமை இந்தியர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று வாதித் துக் கொண்டிராவிட்டால், இதற்குள்ளாக இந்தியர்களை நாட்டி லிருந்தே முடுக்கியோட்டிவிட்டு மறுகாரியம் பார்த்திருப்பார்கள்" (சுதேசமித்திரன் 27.06.1902: முதல் நாளிதழ்கள் மூன்று பக்.42) என்று சுதேசமித்திரன், அண்ணலின் அருந் தொண்டைப் பாராட்டி யுள்ளது. வெள்ளையரின் கொடுமை தாளாது இருநூறு தமிழ்க் குடிமக்கள் தங்கள் துன்பங்களைத் தமிழிலேயே எழுதியனுப்பச் சுதேசமித்திரன் அவற்றை வெளியிட்டது என்பர்.

இந்திய விடுதலை இயக்கச் சூழலில் அடக்குமுறைக்கு அஞ் சாது, நாட்டுப்பற்றினை மக்கள் உள்ளங்களில் கிளர்ந்தெழச் செய்த வகையிலும், உரிமைப் போராட்டத்திற்கு உறுதுணையாக நின்ற வகையிலும், அரசியல் பொருளாதாரம் போன்றவற்றைத் தமிழி லேயே ஆராய முடியும் என்ற உண்மையை - நம்பிக்கையை உண் டாக்கிய வகையிலும் சுதேசமித்திரன் செய்த தொண்டு போற்றுதற் குரியதாம் என்பர்.

சுதேசமித்திரன் இந்தியவிடுதலைப் பணியில் சக்தி மிக்க தேசி யக் குரலாக ஒலித்துச் சங்க நாதம் முழங்கியது. காங்கிரஸ் மகா சபையின் முதல் கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் நற்பேறு சுதேசமித்திரன் ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கட்கே கிடைத்தது. புதிய விழிப்பிற்குச் சுதேசமித்திரன் வாயி லாகப் பாடுபட்ட பெருந்தகை ஜி. சுப்பிரமணிய ஐயர். எனவேதான் பாரதியார் அவரைத் தமிழ்நாட்டின் விழிப்புணர்விற்குப் பாடுபட்ட முன்னோடி எனப் பாராட்டுவார். 'நம் தமிழை நன்கு எழுப்பச் செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரனைத் தொடங்கியவர்' எனக் கப்பலோட்டிய சிதம்பரச் செம்மல் அவரைப் புகழ்ந்துரைப்பார். 1882இல் தொடங்கப்பெற்ற சுதேசமித்திரனின் நோக்கம் குறித்துச் சுப்பிரமணிய சிவா 'சாதாரண ஜனங்களுக்குள் அறிவைப் பரப்பும் பொருட்டுத் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்ததை' எண்ணி வியந்து

சுட்டுவார்.1882 முதல் 1899 வரை 17 ஆண்டுகள் பல்வேறு இடையூறு களுக்கிடையே சுதேசமித்திரனை வளர்த்து ஆளாக்கியவர் ஜி. சுப்பிர மணிய ஐயர். சுதேசமித்திரனின் இதழியல் வரலாற்றை மூன்று கால கட்டங்களாகப் பகுத்துக்கொண்டு ஆராய வேண்டிய இன்றியமை யாமையைக் கட்டுரையாளர் தெளிவு படுத்தியுள்ளமை பெரிதும் எண்ணத்தக்கது. இந்திய விடுதலை உணர்வினையும் சமூக விழிப் புணர்வினையும் தமிழர்களுக்கு ஊட்டிய ஒரு மாபெரும் பணியைச் சுதேசமித்திரன் பேரீடுபாட்டோடு செய்தது என்பது வெள்ளிடை மலை.

விவேகசிந்தாமணி

தமிழ் இதழியல் துறையில் வரலாறுபடைத்த சி.வி. சாமி நாதை யர் விவேகசிந்தாமணி மூலம் 'அறிவைப் பரப்பச்செய்யும் நோக்கத் தில்' அக்காலத்தில் முழு வெற்றி பெற்றார் என்றே கூற வேண்டும். 1892ஆம் ஆண்டு தொடங்கிய இவ்விதழின் முதன்மையான நோக் கம் மக்களுக்கு அறிவை உண்டாக்குவதேயாம்.

'நாட்டுப் புறங்களில் பத்திரிகைகளைப் பரவச்செய்து அது மூலமாக ஜனங்களுக்குப் படிப்பில் பிரியமுண்டாகும்படி செய்ய வேண்டும் என்பதும் கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்கள் படிப்பதில் பிரியம் வைத்துப் பத்திரிகைகளையும் சிறு புஸ்தகங்களையும் வாசிக்க ஆவல் கொண்டபின் அவைகள் சுலபமான விலைக்குக் கிடைக் கும்படி செய்து பத்திரிகைகளாலும் சிறு புஸ்தகங்களாலும் ஜனங் களுக்கு அறிவையூட்டி, விவேகத்தை விசாலிக்கச் செய்து பொது விஷயங்களில் அவர்களுக்கு அக்கறையுண்டுபண்ண வேண்டும் என் பதும் இன்னும் பலவிதத்திலும் கிராமந்திர ஜனங்கள் நிலைமையை அவர்கள் சொந்த முயற்சியால் விருத்திக்குக் கொண்டுவர என்ன என்ன வழிவகைகளுண்டோ அவைகளையெல்லாம் தேட வேண்டும் என்பதும் ஆகிய இவையே சபையின் நோக்கங்கள் என்று தெளிவு படுத்தி அத்தகைய வரலாற்றின் அடிப்படையில் விவேகசிந்தாமணி தோன்றி வளர்ந்ததை எடுத்துரைப்பதும் உளங்கொளத்தக்கது. விவேக சிந்தாமணி தன் பெயருக்கேற்ப 'விவேகத்தை' மக்களுக் கிடையே உருவாக்கவேண்டும் என்பதில் முனைந்து நின்றது. இதனை உணர்ந்து போற்றுவதில் ஆசிரியர் பட்ட இடர்ப்பாடுகள் பல. அத்தனை இடர்ப்பாடுகளையும் கடந்து இதழ் வெள்ளி விழாக் கொண்டாடியது. தமிழ்மொழி இலக்கிய வரலாற்றில் பல முதன்மை யான முத்திரைகளை விவேகசிந்தாமணி பெற்றுத் திகழ்ந்தது.

லோகோபகாரி

1895ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற லோகோபகாரி தொடர்ந்து ஐம்பத்தைந்து ஆண்டுகள் வெளிவந்தது. வி. நடராஜ அய்யர், பண்டிதை விசாலாட்சி அம்மாள், கோ. வடிவேலு செட்டியார், பரலி சு நெல்லையப்பர், சாமி சிதம்பரனார் ஆகியோர் ஆசிரியர்களாக அமைந்து இவ்விதழுக்குத் தொண்டாற்றினர். தேசிய உணர்ச்சியின் முக்கூறுகளாக விளங்கும் மொழிப்பற்று, சமயப் பற்று, நாட்டுப்பற்று (பாஷாபிமானம், மதாபிமானம், தேசாபிமானம்) ஆகியனவற்றை மக்களுக்கு ஊட்டுவதில் இந்த இதழ் முன்னின்று உழைத்தது. நடராஜ அய்யர் சுவாமி விவேகானந்தரின் மேல் மிகுதியான ஈடுபாடு கொண்டவர் என்பதை அவர் தொகுத்துத் தந்த 'ஞானத்திரட்டு' புலப்படுத்தும். விவேகானந்தரின் பேருரையைத் தமிழாக்கித் தந்தவர். பெயருக்கு ஏற்றபடி உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவாய், அனைத்துச் சமயத்தினருக்கும் இன்பம் தருவதாய் எல்லா இனத்தினருக்கும் ஏற்றதாய் எல்லாச் செய்திகளும் இடம் பெற்றதாய்ப் பிற மதத்தினை இழிவுபடுத்தும் தன்மையின்றிச் சொல், நயம், பொருள்நயம் தோன்ற எழுதுவதே இதழின் நோக்கமாகக் கொண்டு விளங்கியது.

கோ. வடிவேலு செட்டியார் லோகோபாரியின் ஆசிரியராகத் திகழ்ந்தபோது இவ்விதழில் வெளியான 'வேதாந்தம் பற்றிய கட்டுரைகள் அவர்தம் நோக்கையும் போக்கையும் காட்டும். மக்கள் தாய் மொழியில் பேரீடு பாடு கொள்ள வேண்டும் என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்ன ரேயே இவ்விதழில் வெளிப்படுத்தி இதழின் நோக்கத்தையும் தெளிவுறுத்தியுள்ளனர். கோ. வடிவேலு செட்டியாருக்குப் பின் பரலி சு. நெல்லையப்பர் ஆசிரியராய்ப் பொறுப்பேற்றார். பாரதியாரின் கவிதைகளைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்துவதில் லோகோபகாரி முன்னின்றது பெரிதும் கருதத்தக்கது. இதழியல் மொழிநடை வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கியது லோகோபகாரி. எளிய தமிழில் பெரிய விஷயங்களை எழுதித் தமிழ்ப் பத்திரிகை வசன நடையை வளர்த்தவர்களில் நெல்லையப்பரும் ஒருவர் எனப் பாராட்டப் பெற்றவர். காந்தியம், சமூக சீர்திருத்தம், தமிழ் வளர்ச்சி, சமயவளர்ச்சி எனப் பல்வேறு துறைகளிலும் லோகோபகாரி தன் பெரும் பங்களிப்பைச் செய்தமையைக் கட்டுரை விரிவாக எடுத்துரைக்கின்றது.

தமிழர் நேசன்

1917 இல் தொடங்கப்பெற்ற இவ்விதழின் ஆசிரியராக விளங்கியவர் அ. மாதவையா. அறிவியல் விழிப்புணர்ச்சி வேண்டும் எனக் கருதிய காலச் சூழலில் இவ்விதழ் மலர்ந்தது. பலதுறை அறிவும் பெற்றுத் தமிழர்கள் சிறக்க வேண்டும் என்னும் பெருவிருப்பில் 'தமிழர் கல்விச்சங்கம்' என்னும் ஓர் அமைப்பைத் திரு. அ.மாதவையாவும், ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரும் உருவாக்கினர். இச் சங்கத்தின் சார்பில்தான் இவ்விதழ் தொடங்கப் பெற்றது. இதழ்கள், நூல்கள், சொற்பொழிவுகள் மூலமாய் ஆங்கிலம் தெரியாத தமிழ் நாட்டாருக்கு நவீன அறிவைப் பரப்புவதே இதன் நோக்கமாய் அமைந்தது. பிற நாட்டுச் செல்வங்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தமிழருக்குத் தரும் பணியில் பேரீடுபாட்டோடு உழைத்தவர் அ. மாதவையா. சமூக சீர்திருத்தத்தையும் மற்றொரு பணியாக அமைத்துக் கொண்டவர். குழந்தை மணத்தை எதிர்த்தும், விதவை மறுமணத்தை ஆதரித்தும் எழுத்துத் தொண்டாற்றியவர். இக்கருத்துக்களை உரியவாறு தமிழர் நேசனில் வெளியிட்டுத் தமிழ்நாட்டில் ஒரு புதிய மறுமலர்ச்சிக்கு அடிகோலியவர் அ. மாதவையா.

மேனாட்டாரின் அறிவியல் மற்றும் கலை இலக்கியம், வரலாறு தொடர்பான செய்திகளை அறிமுகப்படுத்துதல், தமிழ், தமிழர் ஆக்கங்களுக்கு அவற்றை உளப்படுத்துதல் என்னும் இரு வகை நெறிகளில் தமிழர் நேசன் உழைத்தது. எவ்வித இலாபமும் கருதாது தமிழருடைய அறிவுப்பயன் மட்டுமே கருதி இவ்விதழ் வெளிவந்தது. அக்காலத்திய புகழ் பெற்ற அறிஞர் பலரும் தமிழர் நேசனுக்கு அறிவார்ந்த கட்டுரைகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். அக்காலத்திய அறிவியல் இதழ் என்று பலரும் போற்றிச் சிறப்பிக்கும் அளவிற்கு அறிவியல் செய்திகளைத் தாங்கி வெளிவந்த இதழ் என்னும் பெருமையினைப் பெற்று விளங்கியது. அறிவியல் கலைச் சொற்களைத் தொகுக்கும் பெருமுயற்சியில் அன்றே இவ்விதழ் ஈடுபட்டது. போர்க்காலத்தில் ஆட்களைச் சோதித்து எடுப்பதுபோல் அகராதியைத் தொகுக்கும்போது சொற்களைச் சோதிக்கும் வேலையே முதன்மையான வேலை என்று அகராதியியல் நெறியை இவ்விதழ் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழரின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடும் வகையில் இவ்விதழ் தமிழ் இதழியல் வரலாற்றில் தன் பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

தமிழ்நாடு

தமிழ்நாட்டில் காங்கிரசின் தூண்களுள் ஒருவராக விளங்கிய டாக்டர் வரதராசுலு நாயுடு 1919ஆம் ஆண்டின் இறுதியில் 'தமிழ் நாடு' இதழை வார இதழாகத் தொடங்கினார். பின்னர் 1926 முதல் நாளிதழாக வெளிவரத் தொடங்கியது. இதழின் முகப்பில் தமிழ்ச் சொற்களையே அமைத்திருந்தமை அவர்தம் தமிழ் ஈடுபாட்டைக் காட்டும். 'மூவண்ணக் கொடியின் இடையே கலப்பை ஏந்திய உழவன் நிற்க இரு பக்கங்களிலும் இரண்டுவாள் ஒன்றோடு ஒன்று மோதுமாறு அமைந்திருக்கும். அதன் கீழே 'சுயராஜ்ய வாழ்வே சுக வாழ்வு' எனும் தொடர் அமைந்துள்ளது. இந்திய நாட்டுத் தொழி லின் மேன்மையை எடுத்துக்காட்டும் விதத்திலும் வாழ்வின் அடி நிலை மக்களும் விடுதலைக்காகப் போரிடத்தயங்கார் எனக் காட் டும் விதத்திலும் இதழின் இலச்சினை அமைத்திருப்பது எண்ணுதற் குரியது. முப்பதுகளில் பத்தாயிரம் படிகள் விற்பனையானமையை அறியும்போது தமிழ்நாடு இதழின் தனிப் பெருமையை உணர முடிகின்றது.

வரதராசலு இதழியல் நடையில் தமிழ் நெறியைப் பின் பற்றி னார். கட்டுரைகளிலும் மொழிபெயர்ப்புகளிலும் தமிழ் மரபே இருக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார். 'அரசியல், சமுதாய வாழ்வு, வர்த்தகம், சமயம் ஆகிய எத்துறைகளிலாயினும் சரி ஒவ் வோர் இந்தியனும் முதலில் போர் வீரனாகவும் அதற்குப் பின்பே குடிமகனாகவும் விளங்கவேண்டும் என வீர முழக்கம் செய்தார். தமிழகத்தின் அரசியல் வாழ்விலும் இதழியல் வளர்ச்சியிலும் 1917 முதல் 1930 வரை தமிழ் நாடு இதழ் மூலம் வரதராசுலு மிகச் சிறந்த சேவை செய்தவர். எழுத்துவன்மை மிக்க தமிழ்நாடு இதழாசிரியர் வரதராசுலு இதழ்களில் வீறுகொண்டு எழுதியதைப் போலவே தீவிரப் போராட்டங்களிலும் ஈடுபட்டவர். எனவேதான் வ. உ. சி. யால் 'தென்னாட்டுத் திலகர்' எனப் பாராட்டப் பெற்றார். தமிழ் நாடு இதழ் இந்திய விடுதலை, தமிழ் இதழியல் வரலாற்றில் நிலை யானதோர் இடத்தைப் பெற்று விளங்குகின்றது.

நவசக்தி

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் பன்முகப்பணிகளில் இதழியல் பணியும் ஒன்றாகும். நவசக்தி (1920)யின் ஆசிரியராக விளங்கித் தமிழ் இதழியல் வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றியவர். இதழியல்

வழியாகத் தமது கருத்தை மக்களுக்கு எளிய முறையில் அளிக்க முடியும் என்பதை நிறுவினார். தமிழகத்திற்குப் புத்துணர்ச்சியை உண்டாக்கினார். தமிழருக்குத் தனிவாழ்வு உண்டு என்பதை உணர்த்தினார். காந்தியக் கொள்கைகளுக்கும் இதழ்கள் வாயிலாக உரமூட்டியவர் திரு.வி.க. பெரியாரின் துணைகொண்டு நவசக்தி வாரப் பதிப்பாக வெளிவந்தது. விடுதலை உணர்வுக் கிளர்ச்சியை மக்களுக்கு ஊட்டியதால் ஆங்கில அரசின் அடக்குமுறை நவசக்தி இதழின் மேல் பன்முறை பாய்ந்தது. ஈடுகாணம் செலுத்த வேண்டும் என்றெல்லாம் அரசு துன்புறுத்தியது.

'இப்பொழுது நாட்டிற்கு வேண்டற்பாலது உரிமையுணர்வு. அவ்வுணர்வு சமரசம், சகோதர நேயம், இயற்கை வாழ்வு, காவிய ஓவியங்களில் கருத்து, தாய்மொழிப்பற்று, பிறர்க்கின்னா செய்யாமை முதலியவற்றினின்றும் அரும்புதல் சாலச் சிறப்புடையதாகும். இவைகளை ஓம்புதற்குத் திங்கள் வெளியீடு மிகச் சிறந்த கருவி என்பதை விளக்க வேண்டுவதில்லை' என இதழின் நோக்கத்தை எடுத்துரைப்பார். நவசக்தியின் குறிக்கோள்களை ஒன்பது வழிகளாகத் தெளிவுபடுத்தியும் வரையறுத்தும் திரு.வி.க. எடுத்துரைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. நவசக்தி அரசியலுடன் வேறு பல துறைகளிலும் இறங்கிப் பணி செய்தமையால் அரசியலில் மாறுபட்ட கருத்துடையாரையும் தன் வயப்படுத்தியது. தமிழ்மொழியின் வளத்திற்கும் வலிவிற்கும் இதழியல் வழித் திரு.வி.க. ஆற்றிய பணி பேரளவினது.

செந்தமிழ்ச் செல்வி

தமிழில் வெளிவரும் இலக்கிய இதழ்களுள் சிறப்பானதொரு இடத்தைப் பெற்று விளங்குவது செந்தமிழ்ச் செல்வி. 1923ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற இவ்விதழில் தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞர் பெருமக்கள் தம் பங்களிப்பைச் செய்துள்ளனர். தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளையின் மேற்பார்வையில் வளர்ந்த இதழ் செந்தமிழ்ச்செல்வி. செந்தமிழ்ச் செல்விக்குத் தமிழ் ஒரு கண்ணும் சைவம் மற்றொரு கண்ணுமாக அமைந்தது. தமிழ் இலக்கியங்களிலுள்ள அரும் பொருட்டிறங்களைப் புத்தம் புதிய முறையில் ஆராய்ந்து வெளியிட வேண்டும் என்னும் நோக்கத்தைக் கொண்டது. அவ்வாறே பெரும்பயன் தரும் பொருள்கள் பிறவற்றையும் பிற மொழிகளினின்று மொழி பெயர்த்து வெளியிட ஆவன செய்தது. புதிய சொல்லாக்கங்களை உருவாக்குதலில் ஈடுபாடு காட்டியது. வெறும் செய்திகளைத் தரும் களமாக இராமல் அறிவு வளர்ச்சிக்கு

ஆதாரமாக அமையும் பணியில் ஈடுபட்டது செந்தமிழ்ச்செல்வி. இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்களாக அக்காலத்துத் தலை சிறந்து விளங்கிய தமிழறிஞர்களைப் பெற்று விளங்கியது.

சமயப்பணி, இலக்கியப்பணி, வரலாற்றுப்பணி, சொல்லா ராய்ச்சி, நாடகப்பணி, இசைப்பணி, மொழிபெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம், தமிழ் முழக்கம் அறிவியல் ஆய்வு எனப் பல்வேறு துறைகளிலும் தக்க அறிஞர்களைக் கொண்டு கட்டுரைகளை வெளி யிட்டுத் தொண்டாற்றியது. தமிழகத்தில் தமிழ்ப் பணிக்கும் சமயப் பணிக்கும் எனத் தொடங்கப்பட்ட இதழ்களுள் தொடர்ந்து நடை பெறுவதும் தொடக்க காலம் முதல் ஆண்டு தோறும் வளர்ச்சியும், எழுச்சியும் பெற்றுச் சிறந்து விளங்குவதும் செந்தமிழ்ச் செல்வியின் சிறப்புக்களுள் ஒன்று எனக்கட்டுரையாளர் குறிப்பிடுவது கருதத் தக்கது. தமிழுக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் எனப் பல் லாண்டுகட்கு முன்பே குரல் எழுப்பியது செந்தமிழ்ச் செல்வி. மாக றல் கார்த்திகேயர், மறைமலையடிகளார், பாவாணர் ஆகியோரின் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் செந்தமிழ்ச் செல்வி வழங்கிய தமிழ்க் கொடைகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் குறிக்கோள்களுள் ஒன்றாக மலர்ந்தது தமிழ்ப்பொழில் இதழ். 1925 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற இவ்விதழ் தமிழகம், தமிழினம், தமிழ் மொழி சார்பான எந்தச் சிக்கல் நேரிடும்போதும் அவற்றை வாசகர்களுக்கு எடுத்து விளக்க முயற்சி செய்தது. ‘இவ்விதழ் ஓர் தமிழ்ச் சங்கத்தின் வெளி யீடு என்னும் தகுதிக்கேற்ப, தமிழ் வளர்ச்சியும் தமிழர் மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்னகத்துக் கொண்டு வரும். தமிழ் மொழி வரலாறு, தமிழர்வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ் நூல் ஆராய்ச்சி, பழந்தமிழ் நூல் வெளியீடு, தமிழ்நூல் மதிப்புரை, தமிழ்ச்சங்கச் செய்திகள் முதலிய எண்ணில் பல்வகை யானமையும் சிறந்த கட்டுரைகள், ஆங்கிலம் ஆரியம் தமிழ் மொழி களில் வல்லார் பலரால் கற்றாரேயன்றிக் கற்போர்க்கும் பயனுறத் தக்க நெறியில் தெள்ளிய (இனிய) தீந்தமிழ் நடையில் எழுதப் பெறும்’ என்று தன் குறிக்கோளை முன்வைத்து வளர்ந்தது.

தமிழ்ப்பொழிலுக்கான பெயர்க்காரணத்தையும் ஆசிரியர் குறிப் பிடுவது கருதத்தக்கது. ‘தனது பசுநிறத்தால், வண்டொலியால், தீங் கனியால், மலர் மணத்தால், பைம்புற்றரையால் கண்டு கேட்டு

உண்டு உயிர்த்து உற்று அறியும் பேரன்பினைத் தன்பால் எய்தும் எத்திறத்தோர்க்கும் எஞ்ஞான்றும் தரவல்லது பொழில் ஒன்றே யன்றோ? எனவே இங்ஙனம் ஒப்பும் உயர்வுமில்லாத சிறப்பின தாகிய பொழிலின் பொற்பினை - உணர்ந்தே இந்தத் திங்களிதழிற் குத் தமிழ்ப்பொழில் எனப் பெயரிட்டனம்' என்பார். எனவே பெயருக்கு ஏற்ப அக்காலத்திலிருந்தே தமிழ்ப்பொழில் இதழ் பல் வேறு வகையான ஆய்வு மலர்களைக் கொண்ட பொழிலாக மலர்ந்து மணம் வீசிப் பரப்பியது.

குடிஅரசு

1925ஆம் ஆண்டுமுதல் வெளிவந்த குடிஅரசு வார இதழுக்குத் தந்தை பெரியாரும் வா.மு. தங்கபெருமாள் அவர்களும் ஆசிரியராக அமைந்தனர். குடிஅரசின் தொடக்ககால இதழ்களில் 'எல்லோரும் ஓர் குலம் ஓர் இனம், சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் பாரதி யின் பாடல்வரிகள் முதற்பக்கத்தில் முத்திரையாகப் பொறிக்கப் பட்டிருந்தன. 'தமிழ்மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைய உழைக்கும் பத்திரிக்கை' என்னும் இதழின் நோக்கத்தைப் புலப்படுத்துவதாய் அமைந்தது. 'இப்பத்திரிகையை ஆரம்பிக்கும் நோக்கம் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் இன்னும் மற்ற விஷயங்களை ஜனங்களிடையே உணர்த்துதற்கேயாம்'. ஏனைய பத்திரிகைகள் பல இருந்தும் அவைகள் தங்களது மனச் சாட்சிக்குத் தோன்றிய உண்மையான அபிப்ராயங்களை வெளியிட அஞ்சுகின் றன. அவைகளைப் போலல்லாமல், பொது ஜனங்களுக்கு விஷயங் களை உள்ளவற்றை உள்ளபடி தைரியமாகத் தெரிவிக்க வேண்டு மென்பேத எமது நோக்கம். என்று குடியரசு இதழ் அலுவலகத் திறப்புவிழா வரவேற்புரையில் கூறுவது இதழின் நோக்கத்தைக் காட்டும். ஞானியார் சுவாமிகள் இதழைத் தொடங்கிவைத்து ஆற் றிய உரையும் அக்காலச் சூழலை நன்கு எடுத்துரைக்கின்றது. எட் டாம் ஆண்டுக் குடியரசு இதழில் வாழ்த்திய பாரதிதாசனாரின் வாழ்த்துப்பா 'பகுத்தறிவின் இயக்கங்கண்ட தூய குடிஅரசு' என்று போற்றும். குடிஅரசின் தலையங்கங்கள் தனித்தன்மை பெற்று விளங் குவதை ஆய்வாளர் நன்கு புலப்படுத்தியுள்மை குறிப்பிடத்தக்கது. சமுதாய ஈடுபாடும் அஞ்சாத நடுநிலையும் முறையாக மக்களை ஆற்றுப்படுத்தும் போக்கும் தலையங்கங்களில் காணப்படுகின்றன. இதழின் தனித்தன்மை தலையங்கங்கள் வாயிலாகத்தான் வெளிப் படும் என்பது உண்மையே. நமது அரசியல் நிலை, இந்துக்களின் கொடிய வழக்கம், எது தேசத்துரோகம், இதுதானா சுயராஜ்ஜியம்,

மதமும் மனிதசமதர்மமும், எல்லோர்க்கும் கல்வி முதலாய தலையங் கங்கள் இவ்வகையில் பெரிதும் குறிப்பிடத்தக்கவை. மொழி நலங் காக்கும் கவிதைகளும், தொன்மைப் பாடல்களும் குடிஅரசில் வெளியிடப் பெற்றுள்ளன. பெரும்பான்மையான கட்டுரைகள் சமு தாய விழிப்புணர்வு, பெண்ணடிமை, புராண இதிகாசப் பொய்ம் மைகள், மூடநம்பிக்கை, கள்ளுண்ணாமை முதலாய சமுதாய மேம் பாட்டுக் கட்டுரைகளாக விளங்குகின்றன. சமுதாயச் சீர்திருத்தத் திற்கும் மக்களின் சிந்தனைவளத்திற்கும் குடிஅரசு ஆற்றிய பங்கு பேரளவில் குறிப்பிடத்தக்கது.

விமோசனம்

மதுவிலக்குக் கொள்கையை வலியுறுத்துவதற்காகவே தொடங் கப் பெற்ற இதழ் விமோசனம். 1929 ஆம் ஆண்டில் இராஜாஜியால் தொடங்கப்பெற்றது. 'இவ்இதழ் முழுவதும் மதுவிலக்கு பற்றிய செய்திகளே அமையுமாறு இதழைநடத்த முடியுமா' என்று வின விய கல்கியின் ஐயங்களைப் போக்கிய இராஜாஜி பேரீடுபாட் டோடும் கொள்கை உறுதியோடும் இவ்விதழைத் தொடர்ந்து நடத்த உறுதியுடன் இருந்தார். ஆயிரம் எண்ணிக்கையில் தொடங் கியது முதல் இதழ். ஒன்பதாவது பத்தாவது இதழ்கள் நான்காயிரம் படிகள் என உயர் எண்ணிக்கையை அடைந்தது எனில் அக்கால மக்கள் ஆதரவின் தன்மை நன்கு புலனாகும். தனிப்பட்ட செய்தி யைப் பற்றிய ஒரு இதழ் அத்துணையளவு படிகள் விற்பனையானது பெரும் வெற்றியாகக் கருதப்படுகின்றது.

கருத்துப்படங்கள் விமோசனம் இதழின் தனிச் சிறப்பு என ஆய்வாளர் குறிப்பிடுவது பெரிதும் எண்ணத்தக்கது. தமிழ் இதழி யல் வரலாற்றில் விமோசனத்தில் வெளியான கருத்துப் படங்கள் வரலாற்றுப்புகழ் பெற்றனவாக அமைந்தன. இவை தனித்த ஆய்விற் குரிய வகையில் பேரளவினதாக அமைந்துள்ளன.

மதுவின் பிடியிலிருந்து ஏழைமக்களை விடுவித்த அமைதி யான புரட்சியை இதழியல் பணி மூலம் ஆற்றியவர் இராஜாஜி. இராஜாஜி தம் மனம், மொழி, மெய்களால் ஒருமுகப்பட்டு உரு வாக்கிய இதழ் விமோசனம் என்று ஆய்வாளர் குறிப்பிடுவது உண்மையேயாகும். 'பார்த்தாயா தம்பி' என்ற கருத்துப்படத்தில் காணலாகும் எள்ளற்கருத்து படிப்போர்க்கு அரிய விருந்தாக அமையும். சிறுகதை, கவிதை, நாடகம், தலையங்கங்கள், வினா விடை, அட்டை அமைப்பு முதலாய பல்வேறு கூறுகளிலும்

மதுவிலக்கு ஒன்றினையே வலியுறுத்தி மக்களின் துன்ப நீக்கத்தில் பெரும் வெற்றிபெற்ற இதழ் விமோசனம் என்பதில் ஐயமில்லை.

சுதந்திரச்சங்கு

சுதந்திரம் வேண்டிநின்ற தமிழ்மக்களுக்கு எழுச்சியூட்டும் வகையில் 1930 ஆம் ஆண்டில் திரு. கணேசன் திரு. சுப்பிரமணியன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த இதழ் சுதந்திரச் சங்கு. பாரதியின் 'சுதந்திரப் பள்ளு' என்னும் பாடலில் வரும் சுதந் திரம், சங்கு ஆகிய இருசொற்களையும் கொண்டு இப் பெயர் சூட் டப் பெற்றது. காந்தியின் தத்துவங்களை மக்களுக்கு உணர்த்தும் மாபெரும் பணியில் சுதந்திரச்சங்கு ஈடுபட்டது. காங்கிரஸ் பத்திரிகை யாக விளங்கிய சுதந்திரச்சங்கு பாரதி பாடல்களை நெற்றியில்தாங்கி நாட்டு நடப்புகளைச் சுட்டிக்காட்டியது. ஆட்சியாளர்களின் கடுமை யான கண்காணிப்பிலும் சுதந்திரச்சங்கு வீறுகொண்டு முழங்கியது. ஆசிரியர் சங்குகணேசன் காந்தியடிகளின் எழுத்துகளிலும் பேச்சி லும் தன் மனத்தைப் பறிகொடுத்தவர். நூற்றாண்டு வாழ்ந்து அண் மையில் மறைந்த (1994) சங்கு கணேசன் தமிழ் இதழியல் துறையில் தனித்த சிறப்புக்குரியவர். சங்கின் மற்றொரு ஆசிரியரான சுப்ரமணி யமும் காந்திய நெறி நின்றவர்; பன்மொழிப்புலவர். சுதந்திரச் சங்கு இதழ்களில் 'திப்பு' 'குசேலன்' என்னும் பெயர்களில் இவர் எழுதிய எள்ளற் கட்டுரைகள் பெரும் புகழ் வாய்ந்தவை. பொருத்தமான தலைப்பு, ஆழமான செய்திகள், கருத்தோட்டம் மிக்கநடை, பழ மொழி மற்றும் உவமை உருவக அமைப்புகளின் தேர்ந்த ஆட்சி, நடுநிலையை நயம்பட உரைத்தல் ஆட்சியாளர்களின் போக்கைச் சாடுதல், காந்தீயக் கொள்கைகளைப் பரப்புதல் எனப் பலநிலை களில் விடுதலை இயக்கப்போக்கை வளர்த்த சங்கின் விடுதலைப் பணி பேரளவினதாகும். முழுக்கமுழுக்க இந்திய நாட்டு விடுதலைப் போரின் பல்வேறு நிலைகளை எடுத்துரைத்த இதழ் சுதந்திரச்சங்கு.

சுதந்திரச் சங்கு காலணா இதழுக்கு என்று ஒரு தனித்த பெருமை உண்டு, முகவர் அமைப்பு முறையை ஏற்படுத்திய முதல் இதழ் சங்குதான். "உள்ளதை உள்ளபடி உரைக்க, ஊராருக்கு உழைக்க, உயர்வையே நாட, உரிமையை நிலைநாட்ட உறுதி கொண்டுள் ளோம். ஆண்டவன் அருளினால் மானமே நமது பூஷணம், உரி மையே நமது ஆடை; உண்மையே நமதுபொக்கிஷம் வளர்ச்சியே நமதுவருவாய்; வீராப்பே நமது விளைநிலம். பூரண சுயராஜ்யத் திருநாளில் சுதந்திரப் பயிர் பண்ணப் புறப்படுகின்றோம். வந்தே மாதரம்" எனத் தலையங்கத்தில் இதழின் நோக்கத்தை வெளிப்

படுத்தியுள்ளனர். இலட்சக்கணக்கான மக்களுக்குத் தேசிய உணர்ச்சியைப் புகட்டிய மாபெரும் வரலாற்றில் சுதந்திரச் சங்கு பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்கது.

காந்தி

1931 ஆம் ஆண்டில் தென்காசி சங்கரலிங்கம் சொக்கலிங்கம் அவர்களால் தொடங்கப்பெற்ற காந்தி இதழ் மணிக்கொடியின் முன்னோடி இதழ். கலை இலக்கியம் குறித்த மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இதழ் காந்தி. 'காந்திமா முனிவன் ஏந்திய கொள்கையை நிலன் எல்லாம் பரப்புதற்கு அவன் நற்பெயரால் பத்திரிகை யொன்றை எத்திசையும் செலுத்தும் சொக்கலிங்கத் தூயோய்' என இதழினைத் தொடங்கிவைத்த ஆசிரியரைப் பாராட்டுவர் கப்பலோட்டிய தமிழ்ச் செம்மல் வ.உ.சி. தமிழ் இதழியல் வரலாற்றில் தனிப்பெரும் சாதனைபுரிந்தவர் சொக்கலிங்கம். தினமணி, தினசரி, ஜனயுகம், நவசக்தி முதலாய ஏடுகளில் ஆசிரியராய்ப் பணியாற்றிய அனுபவம் நிறைந்தவர். அரசியல் இயக்கத்திலும் படைப்பிலக்கியத்திலும் பெரும்புகழ் பெற்றவர். ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு இடையேயும் இதழைத்தொடர்ந்து நடத்திய வரலாற்றுச் சாதனையாளர். காந்தி மலர்களில் கொள்கைப் பிடிப்போடு கூடிய பல கட்டுரைகள் வெளிவந்தன. காந்திமலர் தோறும் அறிவியல் செய்திகளும் கட்டுரையில் இடம்பெற்றன. ம. சிங்காரவேலு, டி. என். இராமசாமி ஆகியோர் அறிவியல் கட்டுரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளையும், காந்தியடிகளின் நடவடிக்கைகளையும் தமிழர்களுக்குத் தெளிவாக விளக்கி விடுதலைப்போரில் தமிழர் பங்கை மிகுவிப்பதே காந்தி இதழின் அடிப்படை நோக்கமாகும். இந்தியநாட்டு மக்களுக்குக் குறிப்பாகத் தமிழர்களுக்குப் பிறநாட்டுச் செய்திகளை அறிவிப்பதில் பேரார்வம் காட்டியது. சோவியத் நாட்டின் ஐந்து ஆண்டுச் சாதனை, நிற வேற்றுமையற்ற சமத்துவநிலை, இங்கிலாந்தின் பெருநூலகத்தை விட வளர்ந்துள்ள லெனின்கிராட் நூலகம், உலகப் பொருளாதார மாநாட்டில் சோவியத் அமைச்சர் ஆற்றிய உரையின் தெளிவு, அதனை முழுமையாக ஒலிபரப்ப இங்கிலாந்து அஞ்சியமை எனப் பல்வேறு செய்திகளும் காந்தி இதழ்களில் இடம்பெற்றன. புதுமைப்பித்தன், பி எஸ். இராமையா போன்றோரின் இலக்கியப் படைப்புகளும் இதழிற்குப் பெருமை சேர்த்தன. வ.ராவின் மொழிவளர்ச்சிச்

சிந்தனை பற்றிய கட்டுரை குறிப்பிடத்தக்கது. பத்திரிகையுலகில் மணிக்கொடி ஒன்றுடன் மட்டுமே ஒப்பிடத்தக்க புரட்சிகரமான எழுத்தாண்மைக் கொடியாக காந்திவிளங்கியது எனப் பாராட்டிப் போற்றினர்.

மணிக்கொடி

1933 ஆம் ஆண்டிலிருந்து 1950 வரை வெளிவந்த மணிக்கொடியின் காலகட்டத்தை நான்காகப் பகுத்துக்கொண்டு ஆராயும் ஆய்வாளர் முதற்காலகட்டத்தையே புதிய மறுமலர்ச்சியின் சின்னமாகப் புகழப்பட்டதை எடுத்துரைக்கின்றார். 'பொது வாழ்விற்குக் கண்ணும் காதும் பத்திரிகை, இந்நாட்டில் இன்று தோன்றிப் பயன்தரும் ஒவ்வொரு பொது இயக்கத்திற்கும் பத்திரிகைகளே ஆதாரம். இத்துறையில் சேவை செய்து வருவன நமது மூத்த பத்திரிகைகள் எனலாம். அந்தக் கூட்டத்தில் மணிக்கொடியும் இன்று சேருகிறது. ஒரு சிறிது பாரத்தை இதுவும் தூக்கட்டும்' (17.9.33) என்று உறுதியேற்றுப் புறப்பட்ட மணிக்கொடி இறுதிவரை பல்வேறு இயக்கங்களுக்குத் துணைநின்றது. தமிழ்நாட்டில் ராஜீயம், சமூகம், மதம், பொருளாதாரம், கலை வளர்ச்சி, இலக்கியம் ஆகிய துறைகளில் மணிக்கொடி தீவிர வழிகாட்டியாய்த் திகழ்ந்தது' நாட்டில் விடுதலை உணர்ச்சியைப் பரப்ப, தொடங்கப்பெற்ற மணிக்கொடி காங்கிரஸ் கொள்கையையே தன் கொள்கையாகக் கொண்டது. காந்தியடிகளின் கருத்தை மக்களுக்குத் தெரிவிப்பதைத் தன் கடமையாகக் கொண்டது. பல்கலைக் கழகக் கல்விப் போதனை தாய் மொழியில் இருக்க வேண்டிய அவசியத்தைத் தலையங்கத்தின் மூலம் வலியுறுத்தியது. சமூகச்சீர்திருத்த தளத்தில் ஈ.வெ. ராவை ஆதரித்த மணிக்கொடி, தமிழன்பர் மாநாட்டு நிகழ்வுகளில் திரு.வி.க.வை ஆதரித்த மணிக்கொடி, அரசியல் தளத்தில் காந்தியின் பெயரால் அவர்களை அடித்து நொறுக்கி' காந்தி அரசியலைத் தன் மூச்சாக ஏற்றுக் கொண்டு செயல்பட்டதை ஆய்வாளர் நுட்பமாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. காந்திய அரசியலையே தன் நோக்கமாகக் கொண்டது மணிக்கொடி இதழ். இலக்கியம், நுண்கலைகள் ஆகியவற்றிற்கும் பெரும் பங்களிப்பைத் தந்தது. ஜனநடை, ஸ்வதந்திரப் பண்ணை, பழங்கணக்கு, சதுர்முகம், சறுக்குமலை, புதுத்தராசு, இலக்கியச் சோலை, கலைக்கூடம், டமாரக் கடிதங்கள், நவாப்படை என்னும் பல தலைப்புகளில் கிளர்ச்சியூட்டும் கருத்துக்களை வழங்கிய மணிக்கொடி இதழ் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இதழ் என்பது குறிக்கத்தக்கது.

தினமணி

விடுதலைப் போராட்ட இயக்கத்திற்காக 1934 இல் தன்னை நாட்டுக்கு ஒப்படைத்துக் கொண்ட தினமணி இன்றுவரை அதன் நீண்ட நெடியவரலாற்றில் நாட்டின் பல்வேறு இயக்கங்கள், கிளர்ச் சிகள், போராட்டங்கள், விழிப்புணர்வியக்கங்கள் எனப் பலவற்றில் தொடர்ந்து பங்குபெற்று வருகின்றமை நாடறிந்தது. பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் தேதி தொடங்கப்பெற்ற தினமணியில் பாரதியின் பாடல்களே கொள்கை முழக்கங்களாகத் திகழ்ந்தன. 'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள் ஆகியன இதழின் கொள்கைகள்' என அறிவித்துத் தன்பணியைத் தொடங்கியது. 'நமது நாட்டில் சென்ற பதினைந்து வருஷங்களாக ஓர் அபூர்வ சுதந்திரப்போர் நடந்து வரு கின்றது. அதன் நடுவில் ஏற்படும் அற்ப வெற்றிகளால் மயங்காமலும் சிறிய தோல்விகளால் தளராமலும் பாரததேசம் விடுதலை அடை யும் வரையில் தமிழ் மக்களைப் போற்றியும் தேற்றியும் தினமணி துணைபுரியும் என 11.9.34 அன்று அறிமுகம் என்ற தலைப்பில் வெளி யான தலையங்கத்தில் தினமணி தன்நோக்கத்தை நாட்டுமக்களுக் குப் புலப்படுத்தியது. 'ஏழை துயர் துடைக்க எல்லோரும் களித்திருக்க எவருக்கும் அஞ்சாத தினமணி' என்னும் முழக்கத்தோடு வெளிவந்த தினமணி அனைவரின் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றுவிட் டது. சொக்கலிங்கனாரின் அரசியல் விமர்சனங்கள், ஆணித்தரமான கட்டுரைகள், வேகமான தலையங்கங்கள், விளக்கமான குறிப்புகள் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நடை ஆகியவை தினமணி இதழின் வெற்றிக்கு அடித்தளமிட்டன. சமூக விழிப்புணர்வு, அர சியல் விழிப்புணர்வு ஆகியவற்றில் தினமணி தன் தொண்டை ஆற்றி வந்த போதிலும் காங்கிரஸ் இயக்கத்திற்கே ஆதரவு என்ற நிலைப் பாட்டிலும் உறுதியாக இருந்துவந்தது. பின்னர் 1940ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து ஆசிரியராய் விளங்கிய ஏ. என். சிவராமன் அவர்களும் தினமணியின் வளர்ச்சிக்குப் பெரிதும் அடிகோலினார். 1947 ஆகஸ்ட் 15 அன்று எழுதிய தலையங்கத்தில் தொலை நோக்குப் பார்வையோடு பாரத சமுதாயம் இனி வறுமையை ஒழிக்க வேண் டும், எல்லோருக்கும் கல்வியும் நோயற்ற வாழ்வும் ஏற்பட உழைக்க வேண்டும்; ஏற்றத்தாழ்வுகளை நீங்க வேண்டும் என நாட்டு மக்களை வலியுறுத்தியது. தொடர்ந்து இன்றும் மொழி, சமுதாய, பண்பாட்டு மேம்பாட்டிற்காக உழைத்துவரும் தினமணி தமிழ் இதழியல் வரலாற் றின் வரலாறாகவே விளங்குகிறது.

ஹிந்துஸ்தான்

1938ஆம் ஆண்டில் திரு.எம்.எஸ். காமத் அவர்களால் தொடங்கப் பெற்ற இவ்விதழ் ஆறேழு ஆண்டுகள் சிறப்பாக வெளிவந்து பின்னர் 1954ஆம் ஆண்டில் மறைந்துபோயிற்று. ஆசிரியர் எம்.எஸ். காமத் பல்துறை வல்லுநராகத் திகழ்ந்தவர். பல்வேறு இதழ்களையும் வெளியிட்டவர். அவருடைய 'ஸண்டேடைம்ஸ்' இதழியல் உலகில் புகழ்பெற்று விளங்கியது. அவர் நடத்திய ஹிந்துஸ்தான் அக்காலத்திலேயே சுமார் 18,000 படிகள் விற்றதை ஆய்வாளர் குறிப்பிடுவது கருதத்தக்கது. பக்கம் முழுவதும் படங்கள் நிரம்பிய அவ்விதழ் வாசகர் அனைவரின் பெரும் வரவேற்பையும் பெற்றது. தேசிய நோக்கில் இராஜாஜியின் முதல் காங்கிரஸ் மந்திரி சபை ஓராண்டு காலம் பதவிவகித்து நற்சேவை புரிந்ததையொட்டி வெளியிடப் பெற்ற ஹனுமான் மலர் குறிப்பிடத்தக்க வெளியீடாகும். அவ்வாறே ஆய்வாளர் 1938இல் வெளியிட்ட பாரதிமலரும் பாரதியாருக்குப் புகழ் சேர்த்த மலர்களில் ஒன்றாகும். வீரவிளக்கு வ.வே.சு. ஐயர் மலர், ரமணர் மலர் முதலானவை ஹிந்துஸ்தான் சார்பாக வெளியிட்ட அரிய மலர்களாகும்.

'சிந்தனைச் சிதர்' எனும் தலைப்பில் ஊசிமிளகாய் எனும் புனை பெயரில் எழுதிய அரசியல் விமர்சனம் பெரும் வரவேற்பைப் பெற்றது. அறிஞர் வ.ரா. எழுதிய கட்டுரைகள், பாலர் பக்கங்கள் முதலானவை இவ்விதழுக்கு வளம் சேர்த்தவை.

இந்திய விடுதலையும் தமிழ் இதழ்களும்

இத்தொகுப்பில் அமைந்த இக்கட்டுரை விடுதலைப் போராட்டத்துக்கு உரமிட்டு நீர்பாய்ச்சிய தமிழ் இதழ்களை அறிமுகம் செய்து வைக்கின்றன. 'ஈசுவர சேவையை விடத் தேச சேவையே உயர்ந்தது' என்னும் குறிக்கோளாகக் கொண்டு தமிழகத்தில் பல இதழ்கள் வெளிவந்தன. 1855இல் தொடங்கப்பெற்ற 'தினவர்த்தமானி' விக்டோரியா அரசியின் பதவியேற்பின்போது வாணவேடிக்கைக்குச் செலவிடப்பெற்ற தொகையை ஏழைகளுக்குச் செலவிட்டிருக்கலாம் என்று கடுமையாகக் குறித்தமை நம் கவனத்திற்கு உரியது. 1870இல் தொடங்கப்பெற்ற நேடிவ் பப்ளிக் ஒபினியன், 1877இல் வெளிவந்த சுதேசபிமானி, சுதேசமித்திரன் (1882), தமிழ் நேஷனல் பத்திரிகை (1907), இந்தியா (1908), விஜயா (1909), சூரியோதயம் (1908), ஞானபாநு (1913), தேசபக்தன் (1917), நவசக்தி (1920), தமிழ்நாடு (1927),

ஊழியன் (1920) முதலாய இதழ்கள் விடுதலைவேள்விக்குத் தொண் டாற்றிய வேறுசில இதழ்களாகும்.

நிறைவுரை

இந்திய விடுதலை இயக்கத்திற்கு இதழ்கள் ஆற்றிய பங்கு நம் நாட்டு அரசியல், சமூக வரலாற்றில் பொன்னெழுத்துககளால் பொறிக்கத்தக்கது. கடந்த நூறு ஆண்டுகட்கு முற்பட்டுத் தோன் றிய இவ்விதழ்களை முறையாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டி யது வரலாற்றாய்வாளர்களின் கடமையாகும். இவ்விதழ்களின் அமைப்பு முறை, இவ்விதழ்கள் மொழி, நாடு, பண்பாடு ஆகிய வற்றிற்கு ஆற்றிய தொண்டு ஆகியன குறித்து இன்றியமையாத சில செய்திகளை இத்தொகுதி தொகுத்துக் கூறுகின்றது. மேலும் இத் துறையில் ஈடுபட்டு ஆராய முனைவோர்க்கு இத்தொகுதி பெரிதும் துணை நிற்கும். நூற்றுக்கணக்கான இதழ்கள் இந்திய விடுதலைக்கு முன் தோன்றிப் பல்வேறு துறைகளுக்கும் ஆக்கப்பூர்வமான கருத் துக்களை வழங்கி அருந் தொண்டாற்றியுள்ளன. அத்தகைய இதழ் கள் அனைத்தையும் முறையாக தொகுத்தும் வகுத்தும் பேணுவது உயா ஆய்விற்கு உரமூட்டும் வகையில் அமையும்.

○○○

சுதேசமித்திரன்

1882

‘தமிழ்மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவுள்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்க் - கமிழ்தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு.’

— வ. உ. சி.



இது இராட்டைவனம் ஆலமரம். அதன் நிழலில் பல குடும்பங்கள் தங்குகின்றன.

தமிழ் நாட்டில் கதர்

(ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாரும் கோவை ஸ்ரீமான் ஸி. அய்யாமுத்துவும் எழுதியது)



ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார்.

கதர் அதிக விலையென்றும், அந்நிய நாட்டுத் துணிகளே மலிவென்றும், அதனால் கதரை உற்பத்தி செய்வதும், விலை கொடுத்து வாங்கி உடுத்துவதும் பைத்தியக்காரத்தனமென்றும், ஏழைகட்குப் பயனற்றதென்றும் வாதாடப்படுகிறது. நாட்டில் கதரியக்கம் தோன்றிப் பத்தாண்டுகளுக்கு மேலாகின்றது. இன்றுள்ள நிலை என்ன? திடீரென ஒரு வேகம் கொண்டு கதரை அளவுக்கு மீறி ஆதரிக்கத் தொடங்குவதாலும் பின்னர் ஆவேசம் குன்றிப்போவதாலும் ஏற்படக்கூடியதென்ன? தமிழ் நாட்டில் கதரியக்கத்தின் பிதாவாக விளங்கும் ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும் சிறந்த கதர் அன்பரான கோவை ஸ்ரீமான் ஸி. அய்யாமுத்துவும் இக்கருத்துமிகுந்த கட்டுரையில் மேற்கூறிய விஷயங்களை விரிவாக ஆராய்ந்து கூறியிருக்கும் சிறந்த முடிவைக் காணலாம்.

நாட்டின் நிலைமை.

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்றார் நம் நாட்டுப் பெரியார் ஒருவர். மனிதன் உண்பது நாழியேது? நானாழிதான். ஆனால் இன்று? நம் நாட்டு மக்களில் எத்தனை பேருக்கு உண்பதற்குக் கால் நாழி அரிசியும், உடுப்பதற்கு நான்கு முழத் துணியும் கிடைக்கிறது! [illegible] எத்தனை லட்சம் மக்களோ [illegible] ர். அப்படிப்பட்டவர் [illegible] பின்றியும், உணவின்றியும், நீர்க் குடிலின்றியும் தவிக்கிறார்கள் [illegible]! [illegible] நாட்டின் பட்டினங்களை [illegible] மிகச் சில. கிராமங்களோ [illegible] ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. [illegible] தோன்றூறு பேர்கள் கிராமவாசிகள். அவர்களிற் பெரும் பகுதியினர் உழுதுண்டு வாழ்வோர். மற்றவர் உழவுத் தொழிலுக்கும் இதர வாழ்க்கை அவசியத்துக்குமேற்ற தொழில் பல செய்து பிழைப்பவர்.

நந்தமிழ் நாட்டிலே நன்செய் நிலங்களைவிடப் புன்செய் நிலங்களே அதிகம். வானம் பொய்த்திடில், கால மழை தவறிடில் நாட்டவர் பாதி பட்டினியாய் முடியும். [illegible] பிழைப்பதே! [illegible] தொழில்கள் [illegible] [illegible] னுக்கும் அவன் குடும்பத்தினர்கட்கும் வருடத்தில் ஆறு மாதங்கள்தான் வேலையுண்டு. இதர காலத்தில் சோம்பியிருத்தலைத் தவிர வேறு தொழில் இல்லை.

வேலையில்லாத காலங்களில் ஓய்வெடுத்துக்கொண்டு உல்லாசமாக வாழ முடியுமா? எவ்விதம் முடியும்? "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கோல்தான் மிச்சம்" என்பார்கள். மிஞ்சியது எலும்புந் தோலுந்தான். நாட்டுக் குத்தகை, அரசாங்கத் தீர்வை, [illegible] கல்யாணம், [illegible] [illegible] னும் ஓயாக் கவலையுந்தான் கண்ட பலன்.

பண்டைய நாளில் கிராமங்களிலே குடியானவனுக்கு வேண்டிய சகல தொழில்களும் நடைபெற்றன. அவன் எல்லாப் பொருள்களையும் தன் கிராம எல்லைக்குள் தயாரித்துக்கொண்டிருந்தான். உப்பு ஒன்றைத் தவிர அவன் மற்றெதையும் பிற இடத்திலிருந்து எதிர்பார்த்திருந்தானில்லை. ஆனால் இன்று? சகலமும் அயல் நாடுகளிலிருந்து கப்பலேறியும் [illegible] வந்து குவிகின்றன [illegible] பட்டுப்! [illegible] [illegible] முயற்சி [illegible] கிடைக்

சுதேசமித்திரன்

பெ.சு. மணி

பத்திரிகை ஒடுக்குமுறைச் சட்டங்கள் சுதந்திரக் கிளர்ச்சி வரலாறு

இந்தியாவில் ஆங்கில மொழி இதழ்களும், சுதேச மொழி இதழ்களும் ஆட்சியாளரின் பலவிதமான அடக்குமுறைகளை எதிர்கொண்டு பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலம் முதல் போராடின. 'பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி' எனும் வர்த்தகக் குழு 1600ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியன்று பிரிட்டிஷ் பேரரசியிடம் இந்தியாவில் வர்த்தகம் செய்திட உரிமைச் சாசனம் பெற்றது. 1612இல் இந்தியாவில் இந்தக்குழு வர்த்தக நிறுவனத்தைச் சூரத் நகரில் அமைத்தது. 1647இல் 23 வர்த்தக நிறுவனங்களை இந்தியாவின் பலவிடங்களில் அமைத்து வர்த்தகக் கோட்டைகளையும் உருவாக்கிக் கொண்டது.[1] இவ்வாறு அதன் வரலாறு வர்த்தகத்தில் தொடங்கி அரசியல் ஆதிக்கம் பெற்று இந்தியாவை அடிமைப் படுத்தியதில் முடிந்தது. புதிதாகப் 'பிரிட்டிஷ் இந்தியா' என்னும் காலனியாதிக்கம் தோன்றியது.

தங்கள் ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வகுத்துக்கொண்ட பல திட்டங்களில் பத்திரிகைச் சுதந்திர ஒடுக்குமுறையும் ஒன்றாகும். அந்நிய ஆட்சியின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட சமூகத்தில் பத்திரிகைச்

சுதந்திரம் என்பது 'பிரச்சினைக்குரியதாகும்' எனும் கருத்தைப் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த 'குறிப்பு'களில் கிழக்கிந்தியக் கம்பெனி தெரிவித்துள்ளது.[2]

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு ஆதரவாகக் கிளர்ச்சி செய்த முதல் இந்தியப் பத்திரிகையாளராக வரலாற்றுப் பெருமை கொண்டவர் இராஜா ராம்மோகன்ராய் (1772 - 1833). இவர் பத்திரிகைத் துறையில் மட்டுமன்றிப் பல்வேறு துறைகளில் புதிய தொடக்கங்களை ஏற்படுத்திப் 'புதிய இந்தியாவின் விடிவெள்ளி' என்னும் வரலாற்றுப் புகழ் பெற்றவர். அரசியல் சாசன வழிப்பட்ட கிளர்ச்சியின் மூலகர்த்தா இவர். முறையீடுகள் (Petitions), விண்ணப்பங்கள் (Memorials), துண்டுப்பிரசுரங்கள் (Pamphlets), பொதுக்கூட்டங்கள், பத்திரிகைகள் முதலானவற்றை முதன் முதலில் இந்தியாவில் அறிமுகப் படுத்தி அரசியல் கிளர்ச்சிக்கு உருவம் கொடுத்தவர் இராஜா ராம்மோகன்ராய்.

சமூக பொதுவாழ்க்கைப் பிரச்சினைகள் பத்திரிகைகளில் விவாதிக்கப்படத் தொடங்கியதும் இவரது காலத்தில்தான். இதற்கு முன் 1780 சனவரி 29இல் கல்கத்தாவில் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹைக்கி எனும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியரால் வார இதழாகத் தொடங்கப் பெற்ற 'பெங்கால் கெஜட் அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வர்டைசர்' என்னும் இதழ் பொது நலன்களைக் கருத்தில் கொள்ளாமல், தனிநபர் மீதான தாக்கு தல்கள், தனிநபர் அந்தரங்க வாழ்க்கை மீதான அவதூறு பிரச்சாரங்கள், பிரிட்டிஷ் வர்த்தகச் செய்திகள் முதலானவற்றிலேயே நாட்டம் செலுத்தியது. கல்கத்தாவில் பத்திரிகைகளில் பொது விவாதங்களுக்கு முதன் முதலில் வழி வகுத்தவர் ஜேம்ஸ் ஸில்க் பக்கிங்ஹாம் (James Silk Buckingham) எனும் முற்போக்காளரான ஆங்கிலேயர். 'கல்கத்தா ஜர்னல்' எனும் வாரமிருமுறை இதழிற்கு இவர் ஆசிரியரானதும் 1819இல் அதன் விற்பனை இருமடங்கு கூடியது. 1820, 1822இல் ஆயிரம் சந்தாதாரர்களைக் கொண்டு அக்காலத்தில் விற்பனையில் சாதனை படைத்தது.[3]

இராம்மோகனர் அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைக்கு ஆளான ஜேம்ஸ் ஸில்க் பக்கிங்ஹாமிற்கு ஆதரவளித்தார். பக்கிங்ஹாம் இராம் மோகனரின் நெருங்கிய நண்பர் ஆவார்.

முதலில் தனித்தனியான சுயேச்சை நிருவாக அமைப்புகளைக் கொண்டிருந்த கல்கத்தா, பம்பாய், சென்னை மாநிலங்கள் 'கவர்னர் ஜெனரல்' எனும் தலைமையில் மைய அரசில் ஒருங்கிணைக்கப் பட்டன. 1798 வரையில் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த விசேஷ மான தடைகள் எதுவும் இல்லை. 1799இல் வெல்லஸ்லி பிரபுவால் விதிக்கப்பட்ட முன் தணிக்கை முறைச் சட்டம் 1819இல் கவர்னர் ஜெனரலான ஹேஸ்டிங்ஸால் கைவிடப்பட்டது. பொதுவாக இந்த முடிவு வரவேற்கப்பட்டது.

சென்னையில் இருந்து 1819 ஜூன் திங்களில் வர்த்தகப் பிர முகர்கள், வழக்கறிஞர்கள், உத்தியோகஸ்தர்கள் அடங்கிய ஒரு குழுவினர் ஹேஸ்டிங்ஸ் பிரபுவைக் கல்கத்தாவில் சந்தித்து இந்தியா வில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு வாழ்வளித்ததைப் பாராட்டினர்.[4]

ஹேஸ்டிங்ஸ் பிரபு பதவி விலகிச் சென்ற மூன்று மாதங்களில், அவரிடத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஜான் ஆடம் என்பவர் பத்திரிகைக் கட்டுப்பாட்டிற்கெனப் புதிய சட்டத்தை 1823 மார்ச்சு 4இல் கொண்டு வந்தார். இந்தச் சட்டத்தின்படி பத்திரிகை உரிமை யாளர்கள், காவல் துறையினரிடம் சத்தியப்பிரமாண வாக்கு மூலம் தரவேண்டும். அரசாங்கத் தலைமைச் செயலாளரிடம் பத்திரிகை தொடங்குவதற்கு உரிமை பெறவேண்டும். இந்தச் சட்டம், பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரானது என்று ராம்மோகனர் எதிர்த் தார். இந்தக் காலத்தில் வங்காளத்தில் இருவங்காள மொழி இதழ் கள், இரு பாரசீக மொழி இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

இராஜாராம்மோகன்ராய் 1821இல் 'சம்பத கௌமுதி' எனும் வங்கமொழி இதழையும், 'மிரட்-உல்-அக்பார்' எனும் பாரசீக மொழி இதழையும், 'பிராமணிகல் மேகசைன்' எனும் ஆங்கில மொழி இதழையும், 'வங்க தூதன்' எனும் இந்திமொழி இதழையும் நடத்தி வந்தார்.

பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமெனக்கோரும் இரு விண்ணப்பங்களை அரசாங்கத்திடம் முன்வைத்தார். இவையிரண்டும் அச்சிடப் பெற்றுச் சிறுவெளியீடு களாக 1823இல் வெளிவந்தன. 'Petitions against the Press Regulations', 'Memorial to the Supreme Court' எனும் இரு விண்ணப்பங்களுடன், மூன்றாவதாக 'Appeal to the King in

Council' எனும் பிரசுரத்தையும் வெளியிட்டார். இவை பத்திரிகைச் சுதந்திரப் போராட்ட வரலாற்றின் முதல் வெளியீடுகளாகும். இந்தச் சட்டத்தின் காரணமாகப் பத்திரிகை வாயிலாக மக்கள் பெறும் பொதுக் கல்வியறிவும், மேலைநாட்டு - கீழை நாட்டு இலக்கிய அறிவும், இதனால் மக்கள் பெறும் வளர்ச்சியும் பெரிதும் தடைபடும் என்றும் வாதிட்டார் இராம் மோகனர்.

இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் பாரசீக மொழியில் நடத்தி வந்த 'மிரட்-உல்-அக்பார்' (செய்திக் கண்ணாடி) எனும் தமது வார இதழை நிறுத்திவிட்டார் இராம்மோகனர். 1823 ஏப்ரல் 4இல் கடைசியாக வெளிவந்த இந்த இதழில் ஜான் ஆடம் பிறப்பித்த சட்டத்தின் பாதிப்புகளை எடுத்துரைத்தார். தலைமைச் செயலர் அலுவலகத்தில் தவம் கிடந்து சாதாரண வேலையாள் உட்பட பலருடைய தயவைப் பெறவேண்டும். இந்தச் சிக்கல் ஐரோப்பியர்களுக்குக் கிடையாது. சத்தியப் பிரமாண வாக்குமூலம் தருவதில் பல தொல்லைகளும் உண்மையான உரிமையாளர்களுக்குப் பதிலாகப் போலிகளும் தோன்றிட வாய்ப்பேற்பட்டுவிடும். மூன்றாவதாக எந்த நேரத்திலும் அரசாங்கம் உரிமத்தை விலக்கி, உரிமையாளரின் கௌரவத்தையும், மன அமைதியையும் கெடுத்துவிடும்.

நீதிமன்றத்தில் இராம்மோகனரின் மனு நிராகரிக்கப்பட்டது. ராம்மோகனரின் நண்பர் ஜேம்ஸ் ஸில்க் பக்கிங்ஹாம், ஜான் ஆடம் சட்டத்தை எதிர்த்து இலண்டன் ப்ரிவி கவுன்சிலில் (Privy Council) வழக்கு தொடர்ந்தபொழுது, அவருடைய மனுவும் நிராகரிக்கப் பட்டது.

பாரசீகம், வங்கமொழி மற்றும் பிற இந்திய மொழிகளில் எழுதப்படுபவை சுதேசிகளின் கருத்தை உருவாக்கும். ஆகவே பத்திரிகை உரிமம், கட்டுப்பாடு அவசியமாகும் என்று ப்ரிவி கவுன்சில் கருத்து தெரிவித்தது.

இராம்மோகனரின் விண்ணப்பங்களில் ஒன்றான பிரிட்டிஷ் பேரரசர் நான்காம் ஜார்ஜிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பாராட்டி ஆங்கிலேய நண்பர் இலண்டனில் இருந்து 1825 சூன் 9இல் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு பாராட்டியுள்ளார்:

> பிரிட்டிஷ் இந்தியாவில் பத்திரிகைச் சுதந்திரத்தின் பாதுகாப்பையும் பயனையும் எடுத்துரைத்து, பத்திரிகைச் சுதந்திரம்

> மீண்டும் நிறுவப்பட வேண்டும் என்று இங்கிலாந்து அரசரிடம் தாங்கள் சமர்ப்பித்த விண்ணப்பம் பாராட்டுதலுக்குரியது. ஓர் அயல் நாட்டைச் சேர்ந்தவர் அதுவும் இக்காலத்தைச் சார்ந்த ஓர் இந்து தயாரித்த விண்ணப்பத்தில் உள்ள புலமை, நுட்பம், வாதத்திறமை, சொற் செறிவு முதலானவை சுதந்திரம் பேணும் நண்பர்களை வியப்படையச் செய்கின்றன.[5]

இராம் மோகனர் பத்திரிகைச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டது வீண் போகவில்லை. அவர் காலத்திலேயே அவருக்கு வெற்றி கிடைக்கவில்லையென்றாலும், அவர் மறைவிற்குப் பிறகு 1835 இல் வெற்றி கிட்டியது. 'லைசன்சு' - உரிமம் கட்டுப்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டது.

சென்னை மாநில கவர்னராக இருந்த தாமஸ் மன்ரோ பத்திரிகைச் சுதந்திரத்தை எதிர்த்துள்ளார். 1822இல் அவர் 'அயலார் ஆதிக்கமும், சுதந்திரமான பத்திரிகையும் முற்றிலும் முரண்பாடு உடையன' எனக் குறிப்பிட்டுள்ளார்.[6] இவர் மேலும் கூறியதாவது, 'அவதூறாகவும், உணர்ச்சியைத் தூண்டுவதாகவும் எழுதும் பத்திரிகையை உடனடியாக அடக்க வேண்டும். இதற்குரிய அதிகாரத்தையும், தணிக்கை முறையையும் ஏற்படுத்த வேண்டும்.'[7]

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியில் பத்திரிகைச் சுதந்திரத்தை ஒடுக்க ஓங்கிய குரல் கொடுத்தோர் இருந்ததைப் போல், பத்திரிகைச் சுதந்திரத்தைத் தரவேண்டும் என்று கூறியவர்களும் இருந்தனர். இவர்களுள் தாமஸ் பேரிங்கடன் மெக்காலேவும், சர் சார்லஸ் மெட்காப்பும் குறிப்பிடத்தக்கவர்கள்.

1835இல் கவர்னர் ஜெனரல் பொறுப்பேற்ற சர் சார்லஸ் மெட்காப்பும், மெக்காலேவும் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுகளில் இருந்து விடுவித்தவர்கள் என்று பாராட்டப்பட்டனர். மெட்காப் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட '1835ஆம் ஆண்டு பதினோராவது சட்டம்', இங்கிலாந்தில் இருப்பதைப் போலவே இந்தியாவிலும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு வழிவகுத்தது. இந்தச் சட்டத்தை வரைந்தவர் மெக்காலே. 'இந்தியா முழுவதிலும் பத்திரிகைத் தொடர்பான சட்டங்கள் ஒரே சீராகச் செம்மையுற வேண்டும்' எனும் கருத்து உடையவராயிருந்தார் மெக்காலே. இந்தச் சட்டம் 1835 ஆகஸ்டு 3இல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.[8]

வங்காளம், பம்பாய் மாநில அரசுகள் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரான சட்டங்களை ரத்து செய்தன (1853ஆம் ஆண்டுச் சட்டம்). மெக்காலேவும், மெட்காப்பும் பிரதேச மொழிப் பத்திரிகைகளின் கல்வி தொடர்பான முயற்சிகளின் ஆற்றலை அறிவார்கள். அறிவு சம்பந்தமான தகவல்களைப் பரப்புவதில் இந்தப் பத்திரிகைகள் பயன் தரத்தக்கன என்றும் அறிந்தார்கள்.

கல்கத்தாவில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் இவர்கள் இருவரும் 'இந்தியப் பத்திரிகைக்கு விடுதலையளித்தவர்கள்' (Liberators of the Indian Press) என்று போற்றப்பட்டனர்.[9]

சிப்பாய்ப் புரட்சியின் எதிர்விளைவுகள்

1857 சிப்பாய்ப் புரட்சி, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியை முடிவிற்கு கொண்டு வந்தது. இதற்கு முன் 'சார்டர் ஆக்ட்' (Charter Act) எனப்படும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியுரிமை, இருபதாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு 1813, 1833, 1853ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. சிப்பாய்ப் புரட்சி ஏற்படுத்திய விளைவுகளில் ஒன்றாக, கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்த பிரதேசங்கள் நேரடியாகப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற அதிகார வரம்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1858 நவம்பர் 1இல் வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியாவின் பிரகடனம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் முடிவை அறிவித்தது.

சிப்பாய்ப் புரட்சியின் மற்றொரு விளைவு, பத்திரிகை ஒடுக்கு முறையாகும். ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டுவதில் பத்திரிகைக்கு வாய்ப்பளிக்கக் கூடாதென்று முடிவு செய்யப்பட்டது. அன்றைய கவர்னர் ஜெனரல் கேனிங் பிரபு, '1857ஆம் ஆண்டு 15ஆவது சட்டம்' எனும் பெயரில் பத்திரிகைச் சுதந்திரத்தை ஒடுக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தார்.[9] இந்தச் சட்டத்தில் 1823இல் ஜான் ஆடம் என்பவரால் கொண்டு வரப்பட்டு, பின்பு கைவிடப்பட்ட, சட்டத்தின் முக்கிய அம்சங்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன.[10] 1857ஆம் ஆண்டு சட்டத்திற்கான அவசியம் சென்னை மாநிலத்திற்கு இல்லை என்று அக்காலச் சென்னை கவர்னர் கருதுவதாகச் சென்னை அரசாங்கச் செயலாளர், மத்திய அரசாங்கச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.[11]

சிப்பாய்ப் புரட்சி காரணமாக ஆங்கிலேய பத்திரிகை ஆசிரியர்கள், சுதேச மொழிப் பத்திரிகைகளைச் சந்தேகக்கண் கொண்டு பார்க்கத் தொடங்கினர். ஆட்சியாளரும், ஆங்கில மொழிப் பத்திரிகைகள், சுதேச மொழிப் பத்திரிகைகள் எனப் பாகுபாடு செய்தனர். பிரித்தாளும் கொள்கையைப் புகுத்திப் பிளவுண்டாக்கினர்.[12]

1857க்கு முன் இருந்த தமிழ் இதழ்கள்

சென்னை மாநிலத்தில் 1857 புரட்சி, படித்த வர்க்கத்தினரின், பத்திரிகைகளின் ஆதரவைப் பெறவில்லை. அக்காலத்தில் மூன்று தமிழ் இதழ்கள் இருந்தனவாகத் தெரிகின்றது. இந்தியர்கள் நடத்திய ஆங்கில இதழ்கள் மூன்று இருந்துள்ளன. 1840இல் 'நேடிவ் இன்டர்பிரட்டர்' எனும் பத்திரிகை சி. நாராயண சுவாமி நாயுடுவை ஆசிரியராகக் கொண்டும், 1844இல் 'தி கிரெசண்ட்' எனும் பத்திரிகை லட்சுமி நரசுசெட்டியை ஆசிரியராகக் கொண்டும், 1853இல் 'ரைசிங்சன்' வேங்கடராயலு நாயுடுவை ஆசிரியராகக் கொண்டும் வெளிவந்தன. தமிழில் வெளிவந்த மூன்று இதழ்களின் விவரம் வருமாறு:

1. தமிழ் சஞ்சிகை (Tamil Magazine)

இதுவரை கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு பார்க்கும் பொழுது, இப்பத்திரிகையே முதல் தமிழ் இதழாகக் கூறப்படுகின்றது. இந்த இதழின் ஒரு பிரதி கூடக் கிடைக்கவில்லை. 1818இல் சென்னையில் அமைக்கப்பட்ட சென்னை சமயத் துண்டுப் பிரசுர சங்கம் (Madras Religion and Tract Society) 1831இல் வெளியிட்ட இதழே 'தமிழ் சஞ்சிகை'யாகும். புராட்டஸ்டெண்ட் கிறிஸ்துவ சமயப் பிரச்சாரத்திற்காக வெளிவந்த இந்த இதழ் அரசாங்க ஆதரவைப் பெற்றிருந்தது. இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு மேல் இந்த இதழ் வெளிவரவில்லை.

2. ராஜ்ய விருத்தி போதினி

1855இல் மாதம் மும்முறையாக வெளிவந்தது. பொது அறிவு வளர்ச்சி தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டு, கல்வியறிவுப் பிரச்சாரத்திற்கு உதவியது. உள்நாட்டுச் செய்திகளுடன், வெளி நாட்டுச் செய்திகளும் இந்த இதழில் வெளிவந்தன. இதன் ஆசிரியர் அக்காலப் பிரபல கல்வியாளரான பெர்சிவல் பாதிரியார். இந்த இதழும் கிடைக்கவில்லை.

3. தினவர்த்தமானி

பெயரைக் கொண்டு நாளேடு என்று கொள்ளக்கூடாது; இது ஒரு வார இதழாகும். 1855இல் வெளிவரத் தொடங்கிய இந்த இதழிற்குச் சென்னை அரசு ஆண்டுதோறும் இருநூறு ரூபாய் நன்கொடையாக வழங்கியது. இதைப் பற்றி 1895 ஆகஸ்டு 3ஆம் தேதி சுதேசமித்திரன் இதழில் பின்வரும் செய்தி வெளிவந்துள்ளது:

> வர்த்தமான பத்திரிகைகள் நம் சமஸ்தானத்தில் பிறந்துலாவச் செய்ய வேண்டுமெனும் கருத்தால் சர்க்கார் தினவர்த்தமானிக்கு வருஷம் இருநூறு ரூபாய் தந்துவந்தார்கள். பிறகிட்டு அங்கங்கு பத்திரிகைகள் பிறந்திட்டதினால் ஈந்து வந்ததை அம்மட்டோடு நிறுத்தினார்கள். இஷ்டர்கள் பலம் கொண்டு அது சில தினம் நடைபெற்று வந்தது. தம் கைப்பணம் செலவிட்டு கனம் விஸ்வநாதப் பிள்ளை அவர்கள் சிலகாலம் நடத்தியும் - இஷ்டர்கள் ஆமளவிற்கு அதன்மீது கருத்து செலுத்தாது போனதினால் அவர் அதை மெல்ல கைநழுவ விட்டார்கள் - பிறகிட்டு ஒரு கம்பெனியார் இதை நடத்தியும் அவர்களாலும் மாளாது போயிற்று.

இந்த இதழின் ஆசிரியராகப் பெர்சிவல் பாதிரியார் இருந்தார். அவர் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் இலக்கியப் பேராசிரிய ராகப் பணியாற்றினார். இந்த இதழில் வெளிவந்த பல கட்டுரைகள் 'விநோதரஸ மஞ்சரி' எனும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை யாழ்ப்பாணத்தில் 1841முதல் வெளிவந்த 'உதய தாரகை'யும் இங்கு நினைவு கூரத்தக்கது. ஆங்கிலம் - தமிழ் இரு மொழிகளிலும் வார இதழாக இது வெளிவந்தது. ஆங்கிலப் பகுதிக்கு 'மார்னிங் ஸ்டார்' என்று பெயர்.

1857க்கு முற்பட்ட காலத்தில் தமிழ் இதழ்கள் பொதுமக்கள் தொடர்பாடலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைத் தரவில்லை.

சுதேசப் பத்திரிகைகளின் கருத்தறிய முயற்சி

ஆட்சியைப் பற்றிச் சுதேசப் பத்திரிகைகளின் கருத்தறிய பிரிட்டிஷ் அரசாங்கம் ஓர் ஏற்பாட்டைச் செய்தது. அரசாங்க மொழி பெயர்ப்பாளர்களை நியமித்து, சுதேச மொழிப் பத்திரிகைகளில் வெளி வந்த அரசு நிருவாகத்தைப் பற்றிய செய்திகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வைத்ததே அந்த ஏற்பாடு. அரசாங்க மொழி

பெயர்ப்பாளர் இந்தச் செய்திகளைத் தொகுத்து ஓர் அறிக்கை யாகத் தர வேண்டும். 'நேடிவ் நியூஸ் பேப்பர்ஸ் ரிப்போர்ட்' என்னும் பெயருடையது அந்த அறிக்கை. 1863இல் வங்காளத்திலும், 1864இல் வடமேற்கு மாகாணங்களிலும், 1869இல் பம்பாய் மாநிலத்திலும், 1872இல் சென்னை மாநிலத்திலும் இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது.

இந்த அறிக்கைகள் மூலம் சுதேசமொழிப் பத்திரிகைச் செய்தி களை அறிந்த அரசு, சுதேசமொழிப் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த முடிவு செய்தது. இதன் விளைவாக '1878 சுதேச பத்திரிகைகள் சட்டம்' என்று பொதுவாகக் கூறப்படும் சட்டம் பிறந்தது.

1878 மார்ச்சு 13இல் இந்திய கவர்னர் ஜெனரல் லிட்டன் பிரபு, இந்திய இராஜாங்கச் செயலர் (இலண்டன்) சாலிஸ்பரி பிரபுவிற்கு அனுப்பிய பின்வரும் செய்தியில் சுதேச பத்திரிகைச் சட்டத்திற்கான அனுமதி வேண்டிக் குறிப்பிட்டதாவது:

> சுதேச பத்திரிகைகளின் ராஜத்துரோகமான வன்முறைப் பிரசாரம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. புரட்சியை நேரடியாகத் தூண்டுகின்றது. இது நமது கவனத்தைக் கவர்ந்துள்ளது. சென்னையைத் தவிர - இங்கு குறிப்பிடத்தக்க முக்கியமான சுதேசமொழிப் பத்திரிகை இல்லை - பிற மாநிலங்களில் கடுமையான சட்டத்திற்கான தேவையுள்ளது.[13]

வங்காளப் பத்திரிகைகளின் பிரச்சாரக் கடுமை அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்தது.

1878 மார்ச்சில் இச்சட்டத்தின் முன்வடிவைக் கொண்டு வந்தார் லிட்டன் பிரபு. இது 'The Act for the Better control of Publications in Oriental language 1. Act IX of 1878' எனும் உத்தி யோக பூர்வமான பெயரைக் கொண்டது. இந்தச் சட்டத்தில் சென்னை மாகாணம் விலக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டம் தம் மாநிலத்திற்குத் தேவையில்லை என்று சென்னை மாநில ஆளுநர் கூறிவிட்டார்.

இந்தச் சட்டத்தில் ஒரு வியப்பு என்னவென்றால் ஆங்கில மொழிப் பத்திரிகையில் வெளிவரும் அரசு நிந்தனைச் செய்தி அல்லது விமர்சனம் சுதேச மொழியில் வெளியிடப்பட்டால் அது தண்டனைக்குரியதாகும். இதிலிருந்து சுதேச மொழியில் வெளி வந்தால் அது பொதுமக்கள் கருத்தை உருவாக்கி வலிமை பெறும்

என்று எண்ணி அரசாங்கம் அச்சமுற்றது என்பது தெரிந்தது. ஆகவே, ஆங்கில மொழிப் பத்திரிகைக்கு ஒரு நீதி, சுதேசமொழிப் பத்திரிகைக்கு ஒரு நீதி எனும் பாகுபாடு புகுத்தப்பட்டது. இந்த வேற்றுமையை அக்காலத்திலேயே 'ஷம்ஸ் - உல் - அக்பார்' எனும் உருதுமொழி ஏடு எடுத்துக்காட்டியது. ஆங்கிலம் கற்ற ஒருவர் தாம் விரும்பியதை ஆங்கிலத்தில் எழுத அனுமதிக்கப்படுகின்றார். ஆனால் அவரே அவருடைய தாய் மொழியில் அதை எழுதத் தடை செய்யப்படுகின்றார் என்று எழுதியது அந்த உருது மொழிப் பத்திரிகை.[15] சேலம் பகடால நரசிம்மலு நாயுடுவின் சேலம் சுதேசாபி மானி 1878 ஏப்பிரல் 1இல் இந்தச் சட்டம் சுதேச மொழிப் பத்திரிகை களுக்கு மரண அடியாகும் என்று குறிப்பிட்டது. 'சேலம் சுதேசா பிமானி' 1877 ஏப்பிரல் 11இல் 'சேலம் பேட்ரியட்' எனும் பெயருடன் மாதமிருமுறையாக வெளிவந்தது.[16]

அரசாங்கத்துக்கு எதிராகச் செய்திகளை வெளியிடும் சுதேச மொழிப் பத்திரிகையின் வைப்புத் தொகை, அச்சுயந்திர சாதனங் கள், சொத்துகள் முதலானவற்றைப் பறிமுதல் செய்ய இந்தச் சட்டம் அதிகாரமளித்தது. செய்திகள் அச்சிட்ட நிலையில், இறுதி வடிவம் பெறுவதற்கு முன் அரசாங்கத்தின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என்றும் இந்தச் சட்டம் விதித்தது. கல்கத்தா இந்தியன் அசோசியேஷன், பூனா சர்வ ஜனிக சபை எனும் மாநில அரசியல் அமைப்புகள் சட்டத்தை எதிர்த்தன. கல்கத்தா இந்தியன் அசோசி யேஷன் இலண்டன் காமன்ஸ் சபையில் எதிர்க்கட்சித் தலைவராய் இருந்த கிளாட்சனிடம் ஒரு விண்ணப்பத்தைத் தந்தது. காமன்ஸ் சபையில் சுதேசமொழிப் பத்திரிகைச் சட்டம் குறித்து விவாதம் நிகழ்ந்தது. சட்டத்திற்கு ஆதரவாக 360 உறுப்பினர்களும், எதிராக 152 உறுப்பினர்களும் வாக்களித்தனர். தீர்மானம் தோற்றாலும் சட்டத்தில் சில சிறுசிறு திருத்தங்கள் செய்யப்பட்டன.[17]

இந்தப் பத்திரிகைச் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிட கல்கத்தா 'அமிர்தபஜார் பத்திரிகை' ஒரே இரவில் வங்கமொழியில் இருந்து ஆங்கிலமொழிக்கு மாறிவிட்டது. கல்கத்தாவில் பல பத்திரிகைகள் அடக்குமுறைக்கு ஆட்பட்டன; அச்சுறுத்தப்பட்டன.

கிளாட்சன் பிரிட்டிஷ் பிரதமரானதும், 1880இல் ரிப்பன் பிரபு இந்திய ராஜப்பிரதிநிதியாக வந்ததும், 'வெர்னாகுலர் பிரஸ் ஆக்ட்' மறைவிற்குக் காரணமாயின. 1881இல் இந்தச் சட்டம் கைவிடப் பட்டது. பத்திரிகைகள், அரசியல் அமைப்புகள், பொதுமக்கள்

இடையே புதியதொரு தேசிய உணர்வு ஊக்கமுடன் மேலும் வளர்ந்தது.

1823 முதல் 1878 வரையில் ஐம்பத்தைந்து ஆண்டுக் காலம் அரசியல் களத்தில் இந்தியப் பத்திரிகைகள் சந்தித்த பல்வேறு பிரச்சினைகள் இதுகாறும் விவாதிக்கப்பட்டன. இவையாவும் சுதேச மித்திரனின் தோற்றுவாய்க்குப் பின்னணியாக அமைகின்றன.

சுதேசமித்திரன் வரலாறு – முதல் கட்டம்

சுதேசமித்திரன் இந்திய தேசியத்தின் சக்திமிக்க முதல் தேசியக்குரலாக ஒலித்துத் தனது வரலாற்றைத் தொடங்கியது. 'இந்திய தேசியம் காங்கிரஸ் என்ற பெயரில் மலர்ந்தது' என்று ராஜாஜி, காங்கிரசின் பொன்விழாவை முன்னிட்டு 1935இல் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டார். இந்தக் காங்கிரஸ் உருவாவதற்கு உதவியவர்களுள் ஜி. சுப்பிரமணிய ஐயர் (1855 - 1916) ஒருவர். 1885இல் முதல் காங்கிரசில் முதல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவதற்கு ஜி. சுப்பிரமணிய ஐயர் அழைக்கப்பட்டுக் கௌரவப்படுத்தப்பட்டார். இதன் வரலாற்றுச் சிறப்பைப் பாரதியார் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்:

'தமிழ்நாடு தவமுடையது. ஏனெனில் காங்கிரஸ் மகாசபையின் முதல் கூட்டத்தில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறை வேற்றும் பாக்கியம் தமிழ்நாட்டுத் தலைவராகிய சுதேசமித்திரன் ஜி. சுப்பிரமணிய ஐயருக்கே கிடைத்தது.'[18]

தமிழ்நாடு செய்த தவத்தின் பயன்களில் முந்தியது சுதேச மித்திரனின் தோற்றம் ஆகும். இது, தோன்றிய காலத்திற்குச் சற்று முன்பு வங்கம், பம்பாய் மாநிலங்களைக் கருத்தில் கொண்டு பார்க் கும்பொழுது, தமிழகத்தில் பொதுமக்கள் அரசியல், சமூக விழிப் புணர்வு பெறாதிருந்தனர். இந்தச் சூழலில் புதிய விழிப்பிற்குச் சுதேச மித்திரனைத் தொடங்கிப் பாடுபட்டார் ஜி. சுப்பிரமணிய ஐயர். இவ் வரலாற்றுண்மையைப் பாரதியாரும், வ.உ.சி.யும் சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

'தமிழ்நாட்டின் விழிப்பு' எனும் தலைப்பில் 1918இல் சுதேச மித்திரனில் எழுதிய கட்டுரையில் பாரதியார், "ராமலிங்க சுவாமி களும், 'சுதேச மித்திரன்' சுப்பிரமணிய ஐயரும் இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ்நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதி

கர்த்தாக்களாக விளங்கினர்" என்று சாற்றியுள்ளார். இங்கு பாரதி யார் பொதுவான விழிப்பிற்கு ஜி. சுப்பிரமணிய ஐயருடன் பிறரை யும் சேர்த்துக் கூறியிருந்தாலும், அரசியல் விழிப்பிற்கு --தமிழ் மக்களிடையே - முதல் ஆதிகர்த்தா ஜி. சுப்பிரமணிய ஐயரே ஆவார். இதை அவர் சுதேசமித்திரனைக் கொண்டே சாதனை செய்தார்.

சுதேசமித்திரனின் இருளகற்றிப் புத்தொளி பாய்ச்சிய வரலாற் றுச் சாதனையைப் பின்வரும் வெண்பாவில் 'கப்பலோட்டிய தமிழர்' சிதம்பரச் செம்மல் மிகத் தெளிவாக 1916இல் குறிப்பிட்டுள்ளார்:

தமிழ் மைந்தர் தூக்கத்தால் தாழ்வுற்றுச் சாவில்
அமிழ்கின்ற தன்மைகண் டன்னார்க் – கமிழ்தென்னச்
செந்தமிழில் நம்முயர் சுதேசமித்திரன் தொடங்கி
நந்தமிழரை யெழுப்பி நன்கு[19]

சுதேசமித்திரன் தோன்றிய காலத்தைத் 'தேசாபிமானமும் பாஷாபி மானமும் இன்னவையென்று எவரும் உணராத அக்காலம்' என்று தேசிய திரிசூல மும்முனைகளுள் ஒன்றாக (மற்ற இரு முனைகள் பாரதி, வ.உ.சி.) விளங்கிய சுப்பிரமணிய சிவா நினைவுறுத்தி யுள்ளார்.[20]

1878இல் 'இந்து'வை வாரப் பத்திரிகையாக உருவாக்கிய வர்களுள் ஒருவர் ஜி. சுப்பிரமணிய ஐயர். அவர் அதன் ஆசிரியராகி மிகச் சிறந்த தேசியப் பத்திரிகையாளர்களுள் ஒருவராக அனைத் திந்திய அளவில் புகழ் பெற்றார். ஆனால் அவர் தமிழ் நெஞ்சம் ஆங்கில மொழியறிந்த வாசகர்களுக்காகப் பத்திரிகையைப் பயன் படுத்துவதைக் காட்டிலும், தமிழ் மட்டுமே அறிந்தவர்கள், அவர் களுள்ளும் எளிய சாதாரணத் தமிழ் மக்களுக்கு அரசியல் அறி வைப்புகட்டி, அவர்களிடையே அரசியல் ஆர்வத்தைப் பெருக்கி, தேசிய - சர்வ தேசியப் பிரச்சினைகளை இனங்காணச் செய்து உண்மை யான ஜனநாயக வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டியதே காலத் தேவை யாகும் என்று முடிவெடுத்தார். தமது இந்த முடிவைப் பற்றி அவரே சுதேசமித்திரன் வெள்ளி விழாவில் - 1907இல் - பின்வருமாறு பேசியுள்ளார்:

> இந்து பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாக இருப்பதால் இங்கிலீஷ் பாஷையறியாத தமிழ் ஜனங்களும் தேச சமாசாரங் களை அறிந்து கொள்ள மார்க்கமில்லாதிருப்பதை யோசித்து 'சுதேசமித்திரன்' பத்திரிகையை விருத்தி செய்து தமிழ் ஜன சமூகத்தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மை என்று கருதினேன்.[21]

பொது மக்கள் அரசியலறிவு பெறமுடியாமல் இருந்த காரணத்தினாலேயே இந்தியா அடிமைப்படுத்தப்பட்டது எனும் தமது சீரிய கருத்தை 1909இல் வெளியான அவருடைய 'ஜன நிர்மாணம்' என்னும் நூலில் நூன்முகத்தில் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:

> பூர்வம் நமது ஜனங்கள் தேசப்பொதுக் காரியங்களில் பிரவேசித்ததில்லை. .... அரசர்களும், ராஜதந்திரிகளும் தேசத்தை நிர்வாகம் செய்ததில் ஜனங்களுடைய கூட்டுறவை நாடியவர்களல்லர். ஆகையால் ஜனங்களுக்கு ராஜிய சம்பந்தமாய் அறிவும் ஊக்கமும் உண்டாக வேண்டும் என்று விரும்பிய புஸ்தகங்கள் செய்தவர்களில்லை. இந்தியா அதன் பூர்வீக உன்னத நிலைமையை இழந்து அந்நியருக்கு வசப்பட்டு போனது முக்கியமாய் இந்தக் காரணத்தினால்தான்.

இதே நூன்முகத்தின் இறுதியில் சுதேச மொழிப் பத்திரிகைகள் நவீன ஜனநாயகத்தை வளமுறச் செய்யவல்லது எனும் தமது கருத்தைப் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார் ஜி. சுப்பிரமணிய ஐயர்.

> தேசபாஷைப் பத்திரிகைகளும், தேச பாஷை நூல்களும் அதிகம் தோன்றி ஜனங்களுக்குச் சகாயம் செய்யாவிட்டால் இந்த நவீன ஜனநாயக முறை நிறைவேறுதல் கஷ்டமாகும்.

இந்துவில் ஆசிரியராக இருந்து கொண்டே சுதேசமித்திரன் பத்திரிகையை வார இதழாக 1882 மார்ச்சு மாதத்தில் தொடங்கினார். 'சுதேசமித்திரன் பத்திரிகையை 1882ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வாராந்திரப் பத்திரிகையாகத் துவக்கினேன்' என்று அவர் சுதேசமித்திரன் வெள்ளி விழா உரையில் கூறியுள்ளார்.

1893இல் வாரம் இருமுறையாக சுதேசமித்திரன் வெளிவந்தது. 1897இல் வாரம் மும்முறையானது; 1899இல் நாளேடாக மாறியது. தினப் பதிப்புடன் சில ஆண்டுகள் வார மும்முறைப் பதிப்பும் வெளிவந்துள்ளது. சான்றாக 1904 பிப்பிரவரி 5ஆம் தேதி இதழில் தினப்பதிப்பிற்கும் வாரம் மும்முறைப் பதிப்பிற்கும் தனித்தனி சந்தா விகிதம் தரப்பட்டுள்ளது.

31.12.1896இல் இந்துவில் சுதேசமித்திரன் வாரம் மும்முறையாக வெளி வரப்போவதை வரவேற்றுத் தலையங்கமே எழுதப்பட்டது. இந்தத் தலையங்கத்தில் சுதேசமித்திரனில் பொதுவாக இந்து பத்திரிகைச் செய்திகளின் மொழி பெயர்ப்புகள் இடம் பெற்றன என்றும், சுதேசமித்திரன் நிருபர்கள் தரும் முக்கியமான

செய்திகள் இந்துவிலும் பயன்படுத்தப்பட்டன என்றும் கூறப் பட்டுள்ளன.[22]

சுதேசமித்திரன், 1885இல் தோன்றிய இந்திய தேசிய காங்கிர சின் பிரசார ஏடாகவும் விளங்கியது. 1893 மே மாதம் 5ஆம் தேதி வெளிவந்த சுதேசமித்திரன் வாரமிருமுறை இதழில் 'சந்தா விகிதம்' குறித்துப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> இந்தியாவில் தபால் கூலியோடு வருஷம் 1க்கு ரூபாய் ஆறு. மாதத்திற்கு ரூ.2-8-0; இலங்கை, பர்மா, அந்தமான் தீவு களுக்கு ரூபாய் 5-0-0; மோசஸ், சிங்கப்பூர் மற்ற இடங் களுக்கு ரூபாய் 7-0-0; ஒரு காபியின் விலை அணா 2.

மேற்குறிப்பிட்ட இதழின் முதல் பக்கம் விளம்பரங்களுக்கும் பஞ்சாங்கக் குறிப்புகளுக்கும் ஒதுக்கப்பட்டது. மற்றும் சமாசாரக் குறிப்பு, சமாசாரக் கடிதம், வர்த்தமானம், போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஸட் முதலானவைகளும் வெளிவந்தன. பக்கம் 72இல் தலையங் கமும் (சென்னை சட்டநிரூபண மெம்பர்கள் எலெக்ஷன்), துணைத் தலையங்கமாக 'வக்கீல்! வக்கீல்! எங்கும் வக்கீல்' இடம்பெற்றிருந்தன.

தலையங்கத்தின் தமிழ்நடைக்கு ஒரு சான்றாகப் பின்வருவதைக் கொள்ளலாம்:

> வட பிரிவுக்கு மெம்பர்களாக வர நிற்கும் நால்வரில் ஒருவர் கட்டாயம் மெம்பராக நியமிக்கப்பட வேண்டியவரென்று தோன்று கின்றது. பி.ஏ., பி.எல்.களும், வக்கீல்களும் போதுமான வரை யில் சட்ட நிரூபண சபையில் இருக்கிறார்கள். ஆனால், விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இந்த விஷயங்களில் விசேஷ அனுபவமும் இவைகளை விருத்தி செய்வதற்கேற்ற ஆலோசனை சொல்லத் தக்கவர்களும் சட்ட நிரூபண சபையில் ஒருவர்கூட இல்லை.

பழமொழிகளைத் தலையங்கத்தில் சுதேசமித்திரன் பயன் படுத்தியுள்ளதை 1893 ஆகஸ்டு மாத இதழின் தலையங்கத்தில் காண்கின்றோம். 'மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகளுடைத் தால் வெண்கலம்' என்பது தலையங்கத் தலைப்பாகும். இத் தலை யங்கத்தில் அலஹாபாத்தில் பிரசுரமாகும் 'பைனியர்', 'பெம்பாய் டைம்ஸ்' என்ற பத்திரிகைகள் செய்யும் இந்தியர் எதிர்ப்புப் பிர சாரம் கண்டிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 1894 டிசம்பர் இறுதியில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக்கு ஆல்ப்ரெட்வெப் எனும் ஐரீஷ் தேசாபிமானி தலைமை

வகித்தார். இவர் மீது இயற்றப்பட்ட கவியொன்று சுதேசமித்திரனில் 1895, ஜனவரி 2இல் வெளியிடப்பட்டுள்ளது. 'காங்கிரஸ் கூட்டத்தின் காக்ஷி' எனும் தலைப்பில் பின்வரும் கவிதையும் இதே இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

குருகுலம் விளங்கவந்த குந்தியின் மைந்தர்மேனாள்
விரிபுன லுலகிற்செய்த வேள்வியா மிராசசூயம்
தருவளர் சென்னைகாங்கிரஸ் தசமியாய்க் கூடி நின்ற
ஒருபெருங் கூட்டத்திற்கிங் கொக்குமோ வுலகிலம்மா!

8.3.1895இல் (வாரமிருமுறை) பக்கம் 4இல் வெளிவந்த 'சுதேசப் பத்திரிகைகளின் மீது வெறுப்பு' எனும் தலையங்கத்தின் பின்வரும் பகுதியும் கவனத்திற்குரியது:

> நமது தேசத்தை ஆண்டு வரும் ஆங்கிலேயர்கள் எந்த சத்துருக்களுக்கும் அஞ்சாமற் போன போதிலும், சுதேச பத்திரிகைகளுக்கு வெகு அஞ்சிக் கைப்படுவதாகத் தோன்றுகின்றது. இப்பத்திரிகைகள் இத்தேசத்தாருக்குள் மலை போல் வளர்ந்திருக்கும் அக்கியானத்தைப் போக்கடிக்க வல்லதென்று அநேக ஆங்கிலேயர்கள் அறிந்து எவ்விதத்திலாவது இப்பத்திரிகைகளை அடக்க வேண்டுமென்று முயன்று வருகிறார்கள்.

சுதேசமித்திரனின் 1882-1899 வரையிலான பதினேழு ஆண்டுக் காலம் விரிவான ஆய்விற்குரியது.

'சுதேசமித்திரன், ஹிந்து பத்திரிகையுடன் சேர்ந்து தனது வாழ்க்கையை ஆரம்பித்தது. அப்பத்திரிகையின் நோக்கத்தையே இதுவும் நோக்கமாகக் கொண்டது. அதாவது பத்திரிகைகள் அதிகம் இல்லாத காலத்தில் தேசத்திற்குச் செய்தியைப் பரப்பி அறிவைப் பெருக்கியும், படித்தவர்களுடையவும் சாமான்ய ஜனங்களுடையவும் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி அதை உருவாக்கியும், ஜனங்களுக்கு வழிகாட்டியும் தேச சேவை செய்வதே இந்தப் பொது உத்தேசமாகும்.'

இவ்வாறு சுதேசமித்திரன் பொன்விழாவில் சுதேசமித்திரனின் ஆசிரியராகவிருந்த ஸி.ஆர். சீனிவாஸய்யங்கார் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.[23]

சுதேசமித்திரன் வரலாற்றில் இரண்டாவது கட்டம்

1916 ஏப்பிரல் 18இல் ஜி. சுப்பிரமணிய ஐயர் அமரரானார். சுதேசமித்திரன் பத்திரிகையை 1915இல் இந்துவின் ஆசிரியராக

விருந்த ஏ. அரங்கசாமி ஐயங்காருக்கு விற்றுவிட்டார் ஜி. சுப்பிர மணிய ஐயர். 1915 நவம்பர் 1இல் அரங்கசாமி ஐயங்கார் இந்து வில் இருந்து விலகிச் சுதேசமித்திரன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.[24]

1915 நவம்பர் முதல் 1928 வரையிலான சுதேசமித்திரன் கால கட்டம், அரங்கசாமி ஐயங்கார் கால கட்டம். மித்திரனின் தேசிய மரபு மேலும் செழுமையடையப்பாடுபட்டார் அரங்கசாமி ஐயங்கார். ஜி. சுப்பிரமணிய ஐயரின் இந்து பத்திரிகை அனுபவம், சுதேச மித்திரனுக்குப் பயன்பட்டது போல் அரங்கசாமி ஐயங்காரின் இந்து பத்திரிகை அனுபவம் அவர் காலத்தில் சுதேசமித்திரனுக்குப் பயன் தந்தது. சுதேசமித்திரன் பொன்விழாவில், அரங்கசாமி ஐயங்காருக் குப் பிறகு சுதேசமித்திரன் ஆசிரியரான ஸி.ஆர். சீனிவாச ஐயங்கார், சுதேசமித்திரனின் வளர்ச்சிக்கு அரங்கசாமி ஐயங்கார் பாடுபட்டதைப் பற்றிப் பின்வருமாறு பேசியுள்ளார்:

> ஸ்ரீமான் ஐயங்கார் பத்திரிகாசிரியர் பதவியை ஏற்றபொழுது தேசத்தில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. மிண்டோ - மார்லி சீர்திருத் தத்தின் பயனாக சகஜமாக அரசியலைக் கவனியாத ஜனங் களுக்கு அரசியல் அறிவு ஏற்படச் சந்தர்ப்பமேற்பட்டது. இதனால் ஐரோப்பிய யுத்தச் செய்திகளைப் படிக்க வேண்டுமென்ற அவா ஜனங்களுக்கு உண்டாயிற்று. இதனடியாக வந்த சுய ஆட்சி இயக்கம் அக்காலத்திலே ஏற்பட்டிருந்த உற்சாகத்தை ஓர் உருவாக்கி வலுவடையச் செய்தது. அக்காலத் தேவைக்கனு கூலமாக ஸ்ரீமான் ஐயங்கார் பத்திரிகையைத் திருத்தியமைத்து அபிவிருத்தி செய்தார். அப்பொழுதப்போது விரிவாகச் செய்தி களை வெளியிடவும், அந்தந்த ஸ்தலச் செய்திகளை வெளியிட வும் அவர் ஏற்பாடுகள் செய்தார். ஆனால் இது ஒரு ஆரம்பம் தான். அவருக்கு அசாதாரணமாகவே இயற்கையாகவுள்ள வழி யில் சாமான்ய ஜனங்களின் நன்மையைக் கருதி செய்திகளின் பேரில் தக்க அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தார். ஜனங்கள் தாங்களாக விஷயங்களைப் படித்தறிய ஒரு ஆற்றலை அவர் உண்டு பண்ணினார்.
>
> இப்பொழுது தூரக்கிராமந்தரங்களில் ஆங்கில வாசனை அறி யாத பலர் தற்காலச் சம்பவங்களை நன்கறிந்து தேச விவ காரங்களை யுணர்ந்து அரசியல்வாதி களாக வெளிக்கிளம்பும் நிலையை அடைந்திருக்கின்றனர். ஸ்ரீமான் ஐயங்காரின் பெரிய வேலைக்கு அவர்கள் ஒரு சான்றாக விருக்கின்றனர்.[25]

டி.எஸ். விசுவநாதய்யர் (1887–1958)

சுதேசமித்திரன் பத்திரிகையை அரங்கசாமி ஐயங்கார் உரிமையாக்கிக் கொண்டாலும் பத்திரிகையின் அச்சு - வெளியீட்டுத்துறையின் பொறுப்பில் ஜி. சுப்பிரமணிய ஐயரின் ஒரே மகன் டி.எஸ். விசுவநாத ஐயர் தொடர்ந்து இருந்தார். சுதேசமித்திரன் அலுவலகம் 23 எர்ரபாலு செட்டித்தெரு, ஜார்ஜ்டவுனில் இருந்தது. பத்திரிகையின் மேன்மைக்கு ஒத்துழைப்புத் தந்தவர்களில் 'முக்கியமாக ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயரின் புத்திரர் ஸ்ரீமான் டி.எஸ். விசுவநாதய்யர் ஆரம்பமுதல் பத்திரிகையை நிர்வகிப்பவர்களுக்கு உற்ற உதவியாக விருந்திருக்கிறார்' என்று ஸி.ஆர். சீனிவாசய்யங்கார் குறிப்பிட்டுள்ளார். அரங்கசாமி ஐயங்கார் காலத்தில் சுதேசமித்திரன் நிருவாகம் 1920இல் (லிமிடெட் கம்பெனியாக) பல இயக்குநர்கள் அடங்கிய குழுவின் பொறுப்பிற்கு வந்தது. இதில் மூத்த இயக்குநராக விசுவநாதய்யர் இருந்தார்.[26] இவர் 1947 வரையில் சுதேசமித்திரனின் அச்சிடுபவர், வெளியீட்டாளராகப் பணியாற்றினார். இவர் முதல் மகாயுத்த காலத்தில், 'ஐரோப்பிய மகாயுத்தம்' எனும் தலைப்பில் எழுதியது நான்கு தொகுதிகளாக வெளிவந்தது.[27]

சுதேசமித்திரனில் மீண்டும் பாரதியார்

1904இல் சுதேசமித்திரனில் சேர்ந்ததற்குப் பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு பாரதியார் மீண்டும் அரங்கசாமி ஐயங்கார் காலகட்டத்தில் சுதேசமித்திரனில் சேர்ந்தது பத்திரிகைக்குப் புதிய பரிமாணத்தைத் தந்தது. பாரதியாரின் பலவகைப்பட்ட கட்டுரைகள் - 'தராசு' கட்டுரைகள் உட்பட - அரசியல் குறிப்புகள், சிறுகதைகள் முதலானவை சுதேசமித்திரனின் புதிய பரிமாணத்திற்குச் செழுமை தந்தன.

1920 நவம்பரில் பாரதியார் சுதேசமித்திரனில் மீண்டும் சேர்ந்தார்.[28] பாரதியார், சுதேசமித்திரனில் சேர வந்தபொழுது அரங்கசாமி ஐயங்கார், பாரதியாரிடம் 'பாரதி, சுதேசமித்திரன் 'பாலிஸி' என்னவென்று தெரியுமில்லையோ' என்று கேட்டாராம். பாரதியார், 'தெரியும் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்' என்று பதிலளித்ததாகப் பாரதியார் சகோதரர் ஓர் உரையில் குறிப்பிட்டு உள்ளார்.[29]

'சுதேசமித்திரன் பத்திரிகையும் தமிழ்நாடும்' எனும் கட்டுரையில் (சுதேசமித்திரன் நவம்பர் 30, 1920) பாரதியார் பத்திரிகையின்

- 'பாலிஸி' - கொள்கைக்கும் தமது பணிக்கும் இடையே இருந்த 'உறவை' விளக்கியுள்ளார்.

> ஒத்துழையாமை விஷயத்தில் உம்முடைய முடிவான கொள்கை யாது? சுதேசமித்திரன் பத்திரிகை ஒத்துழையாமையைப் பகிரங்க மாகவும் முடிவாகவும் எதிர்க்காவிடினும், அதில் உள்ளூர அபி மானமில்லாதது போல் காணப்படுகிறதோ? அப்படியிருக்க, நெடுங்காலத்து தேசாபிமானியாகிய நீர் இந்த ஸமயத்தில் அப் பத்திரிகையில் வேலை செய்ய அமர்ந்தது நியாயமா? என்று கேட்கிறார்கள்...
>
> ஸ்ரீமான் காந்தியின் கூட்டத்தாரும் உண்மையாகவே தேச நலத்தை விரும்புகிறார்களாதலால், சுதேசமித்திரன் பத்திரிகை அவர்களை எவ்வகையிலும் புண்படுத்த மனமில்லாமல், ஸ்வ ஜனங்களென்ற அன்பு மிகுதியால் அவர்களை இயன்றவரை ஆதரித்துக் கொண் டும் வருகிறது. அபிப்ராய பேதமுடையவர்களும் தேசாபிமானி களாக இருப்பாராயின், அவர்களை நாம் மிகமதிப்புடன் நடத்த வேண்டுமென்ற நியாயத்துக்கு இத்தருணத்தில் சுதேசமித்திரன் ஓரிலக்கியமாய்த் திகழ்ந்து வருகின்றது.

சுதேசமித்திரன் பத்திரிகை ஆசிரியர் அரங்கசாமி ஐயங்கார் 1920இல் கல்கத்தாவில் கூடிய 'ஸ்பெஷல்' காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்க ஆதரவு தீர்மானத்தை எதிர்த்தார். பத்திரிகையும் அவர் கருத்தைப் பிரதிபலித்தது. இதைத்தான் பாரதியாருக்குக் கடிதம் எழுதிய நண்பர் கருத்தில் கொண்டு கேள்வி எழுப்பினார். இவருடன் வ.உ.சி.யும் எஸ். சத்தியமூர்த்தியும் சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்தை எதிர்த்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.[30] பாரதியாரும் மேற்குறிப்பிட்ட கட்டுரையில் சுயராஜ்யக் கட்சியின் சட்டசபைப் பிரவேசக் கொள்கையையும், காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கையையும் சுட்டி, இதனால் 'குறிப்பிட்ட பயனெய்தி விடுமென்று தீர்மானிக்கவும் இடமில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். மோதிலால் நேருவின் வலக்கரமாய்த் திகழ்ந்து சுயராஜ்யக் கட்சியை ஆதரித்த அரங்கசாமி ஐயங்கார் மத்திய சட்ட சபைத் தேர்தலில் சுயராஜ்யக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டார். இலண்டனில் கூடிய வட்டமேஜை மாநாட்டிற்குக் காந்தி யடிகளின் செயலாளராக உடன் சென்றவர் இவர். சிற்சில வேலைத் திட்டங்களில் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் சுதேசமித்திரன் காங்கிரஸ் கட்சியைப் பலமாக ஆதரித்து வந்தது.

பாரதியார் மேற்கூறிய கட்டுரையில், "தென் இந்தியாவில் தேசியக் கக்ஷிக்கு மூலபலமாகச் சுதேசமித்திரன் பத்திரிகை யொன்று தான் ஆரம்ப முதல் இன்று வரை, ஒரே நெறியாக நிலை தவறாமல் நின்று வேலை செய்துகொண்டு வருகிறதென்ற செய்தியைத் தமிழ் நாட்டில் யாரும் அறியாதாரில்லை' என்று 'அரங்கசாமி ஐயங்கார் காலகட்ட சுதேசமித்திரன் வரலாற்றிற்கு' நற்சான்று கூறியுள்ளார்.

சுதேசமித்திரனின் ஆங்கிலப்பதிப்பு

இவர் காலத்தில் சுதேசமித்திரனின் வார மும்முறைப் பதிப்பும் வெளிவந்துள்ளது. சுதேசமித்திரன் ஆங்கிலத்தில் வார இதழாக வெளிவந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. எமது பார்வைக்கு 1.6.1924ஆம் தேதி இதழ் கிடைத்தது. இதழ் ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார்; ஆண்டுச் சந்தா ரூ 6; தனிப் பிரதியின் விலை இரண்டணா. மொத்தப் பக்கங்கள் 12; அளவு: உயரம் 33.5 செ.மீ., அகலம் 21.5 செ.மீ. இந்த இதழ் 'Vol-II - No:14' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழின் Contents பின்வருமாறு:

Events of the Week		page
Editorials	-	211
Congress Organisation	-	213
The Lee Squeeze	-	214
Fifty years of Cathay by Bhargava	-	215
The Wider World (By a Looker - On)	-	216
A Khadi Tour	-	218
Review	-	219
Indian Overseas	-	219
Indian Politics	-	220
Mahatma Gandhi on Congress Organisation	-	221
Commerce in Madras	-	222

சுதேசமித்திரன் இதழ் ஒன்றின் உள்ளடக்கம்

அரங்கசாமி ஐயங்கார் காலகட்ட சுதேசமித்திரன் ஒன்றின் உள்ளடக்கம் 1918 அக்டோபர், 22ஆம் தேதி இதழின் வாயிலாகப் பின்வருமாறு அறியப்படுகின்றது:

பக்கம்-1: முழுவதும் விளம்பரங்கள்; பத்திகள் - 5

பக்கம்-2: செய்திகள், விளம்பரங்கள்; பத்திகள் - 5

பக்கம்-3: உலகப் போர்ச் செய்திகள்; பத்திகள் - 5

பக்கம்-4: 'இந்திய அரசியல் திருத்தக் கமிட்டிகளின் வேலை' எனும் தலையங்கம். இரு பக்கங்களில் குதிரைகளும் நடுவில் பிரிட்டிஷ் அரசின் மகுடமும் உள்ள இலச்சினை தலையங்கத்தின் முதல் பத்தியில் உள்ளது.

பக்கம்-5: சென்னை சட்டசபையின் நடவடிக்கைகள்

பக்கம்-6: செய்திகள், இந்தியத் தந்திகள், சென்னை வர்த்தமானம், பலதிரட்டு.

பக்கம்-7: முழுவதும் விளம்பரங்கள்

பக்கம்-8: முழுவதும் விளம்பரங்கள் - இவற்றுள் குறிப்பிடத்தக்கன: பாரதியாரின் ஞானரதம், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, முரசு, நாட்டுப்பாட்டு - பிரதிகள் கிடைக்கும் இடம்: 'ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி, 21A, ஈசுவரன் கோயில் வீதி, புதுச்சேரி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதேசமித்திரன் வருஷ அநுபந்தங்கள்

அரசியல் இதழாக வெளிவந்தாலும் சுதேசமித்திரன் தமிழ் இலக்கியக் கட்டுரைகளை, உரைகளை அவ்வப்பொழுது வெளியிட்டு வந்தது. இந்த இலக்கியப் பணி ஜி. சுப்பிரமணிய ஐயர் காலகட்ட சுதேசமித்திரனிலேயே தொடங்கிவைக்கப்பட்டது. அரங்கசாமி ஐயங்கார் காலகட்ட சுதேசமித்திரனிலும் இலக்கியப் பணி தொடர்ந்தது. ஆண்டுதோறும் வெளிவந்த சுதேசமித்திரன் வருஷ அநுபந்தங்கள் அரிய இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் முதலானவற்றைக் கொண்டுள்ளன. இத்தகைய ஓர் அநுபந்தத்தில்தான் - 1918இல் - வ.வே.சு. ஐயரின் 'மறுமலர்ச்சி' எனும் அரிய கட்டுரை வெளிவந்துள்ளது. இதே அநுபந்தத்தில் வ.உ.சி.யின் 'தமிழ் நூல்கள்' எனும் நூல்விவரப் பட்டியலும் வெளியிடப்பட்டது.

இதே காலகட்டத்தில் திரு.வி.க.வின் 'தேசபக்தன்' வருஷ அநுபந் தங்களும் இலக்கியக் கட்டுரைகளை வெளியிட்டன என்பது நினைவு கூரத்தக்கது. 1921இல் வெளிவந்த சுதேசமித்திரன் வருஷ அநுபந் தத்தின் சிறப்பம்சங்களை விளக்கிச் சுதேசமித்திரனில் ஒரு துணைத் தலையங்கம் எழுதப்பட்டது. 1921 சனவரி 8இல் வெளிவந்த இந்தத் தலையங்கத்தின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

> *ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியால் எழுதப்பட்ட வருஷ வரலாறு டன் அநுபந்தம் ஆரம்பமாகிறது. அந்த வரலாறானது சென்ற 1920ஆம் வருஷத்தில் இந்தியர் பட்ட அவமானங்களை ஞாபகப் படுத்தி, நாம் சுவாதீனமடைய வேண்டுமென்ற ஆசையைப் பெருக்கக் கூடியதாயிருக்கின்றது. அடுத்தாற்போல் லோகமான்ய திலகரைப் பற்றி ஸ்ரீ சக்தி தாஸன் எழுதியுள்ள சில குறிப்புகள் சிதம்பர தரிசனத்துக்கு ஆசைப்பட்ட நந்தனாரைப் போல் சுவா தீனத்துக்குத் திலகர் ஆசைப்பட்டதை விளக்குகின்றன...*
>
> *மறுபடியும் 'மன்மதபாணி' என்று கதை சொல்ல ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி வந்துவிட்டார். உள்ளுறைப் பொருள் விளங்கும்படி கதை சொல்லுவதில் பாரதிக்குள்ள சாமர்த்தியம் இக் கதையில் நன்கு பிரகாசிக்கிறது...*
>
> *ஸ்ரீ பாரதியின் கதைகள் தெவிட்டாதனவாகையால் 'கோயில் யானை' என்ற கதையைப் படித்துவிட்டுப் பாரதியின் கதை இன்னு மிருக்கிறதா என்று நேயர்கள் தேடிப் பார்ப்பார்கள் என்பது நிச்சயம்.*[32]

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாரதியின் கட்டுரைகள், கவிதை கள் இன்னமும் கிடைக்கவில்லை. இந்த அநுபந்தம் கிடைக்கப் பெற்றால் பாரதி தமிழிற்கு மேலும் புதிய வரவுகள் கிடைக்கும்.

இந்த அநுபந்தத்தில் அ. மாதவய்யாவின் 'ஒரு கனவு', தியாகி கிருஷ்ணசாமி சர்மாவின் 'தமிழர் நாகரீகம்', பிரபல இசை ஆய்வாளர் ஸி.ஆர். ஸ்ரீநிவாசய்யங்காரின் 'நிஜ சங்கீதம்' முதலானவை வெளி வந்துள்ளன.

சுதேசமித்திரன் வரலாற்றின் மூன்றாவது கட்டம்

அரங்கசாமி ஐயங்கார் 1928 சனவரியில் மீண்டும் இந்து பத்திரிகையின் ஆசிரியரானார். அரங்கசாமி ஐயங்கார் காலத்திலேயே சுதேசமித்திரனின் நிருவாகியாக இருந்த ஸி.ஆர். சீனிவாசன் 1928இல் இருந்து சுதேசமித்திரன் ஆசிரியரானார். இவரிடமிருந்து

சுதேசமித்திரனின் மூன்றாவது காலகட்டம் தொடங்கியது. சுதேச மித்திரன் பொன்விழாவில் நன்றியுரை கூறியபொழுது ஆசிரியர் ஸி.ஆர். சீனிவாசன், 'இது சுதேசமித்திரனின் வாழ்க்கையில் மூன்றாவது பர்வமாகும்' என்று குறிப்பிட்டார். நன்றியுரையில் தாம் சுதேச மித்திரன் ஆசிரியர் பொறுப்பு ஏற்றதைப் பற்றிப் பின்வருமாறு பேசினார்:

> ஸ்ரீமான் ஐயங்கார் மித்திரனில் சம்பந்தப்பட்டது முதல் நானும் இதில் அவருடன் நெருங்கிய சம்பந்தம் பெற்றிருந்தேன். 1928இல் தட்டக் கூடாமல் அவர் வேறு இடத்திற்குச் செல்ல நேர்ந்தது. அவர் ஹிந்து ஆசிரியர் பதவியையேற்று சுதேச மித்திரன் ஆசிரியர் பதவியை எனக்களித்தார். மகாமேதாவிகள் வகித்து வந்த ஸ்தானத்தை நான் ஏற்க நேர்ந்தது. பத்திரிகையை நடத்துவதில் எனக்கு இரண்டுவித சிரமங்கள் தென்பட்டன. ஒன்று என்னைப் பற்றியது; மற்றொன்று வெளிநிலைமை பற்றியது. முதலாவது, மிகப் பிரபலர் ஆசிரியராகவிருந்த பின் நான் அதை ஏற்பதில் எனக்கிருந்த சுபாவமான அதைரியம் ஒன்று; மாகாணப் பொது வாழ்வின் புதிய தேவைகளுக்கேற்ப மித்திரன் தனது சேவையைச் சோதிக்க ஏற்படுத்தப்பட்டுவிட்ட அசாதாரணமான அளவுகோல் மற்றொன்று.

இவர் காலத்தில் முகப்பு இலச்சினையில் நடுவில் தாமரைப் பூவும், இரு பக்கங்களிலும் அன்னப் பறவைகளும் இடம் பெற்றிருந்தன. 'ஜனவாக்கே தெய்வவாக்கு' எனும் இலட்சியச் சொற்றொடரும் இருந்தது.

சி.ஆர். சீனிவாசனின் சுதேசமித்திரன் காங்கிரஸ் ஆதரவு ஏடாக 1947க்கு முன்பும், பின்பும் விளங்கியது. 'தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி தழைத்தோங்கி இருப்பதற்குச் சுதேசமித்திரனும் அதன் ஆசிரியர் சி.ஆர். சீனிவாசனின் சாதுர்யமான அறிவாற்றலுமே மூல காரணம்' என்று 9.2.1963இல் சுதேசமித்திரன் அலுவலகத்தில் சி. ஆர். சீனிவாசன் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த காங்கிரஸ் தலைவர் கு. காமராசர் பாராட்டியுள்ளார்.

1950இல் சி.ஆர். சீனிவாசன் சுதேசமித்திரனின் சில பக்கங்களை அன்றைய தமிழ் எழுத்துச் சீர்திருத்த முறையில் முதன் முதலில் அச்சடித்தார். இது வாசகர்களால் வரவேற்கப்படாததினால் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆறுமாத காலத்திற்குப் பிறகு பழைய முறையிலேயே அச்சடிக்கப்பட்டது.[31] சீனிவாசன் 1962 சனவரி 29இல் காலமானார். அப்பொழுது அவருக்கு வயது 73.

இவர் காலத்தில் சுதேசமித்திரன் வாரப் பதிப்பு நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் செய்த உதவி புகழ் பெற்றது. சி. ஆர். சீனிவாசன் தொடர்ந்து 34 ஆண்டுகள் ஆசிரியராகவிருந்து சாதனை படைத்தார். இவருக்குப் பிறகு சுதேசமித்திரனின் வரலாறு சுருண்டு தளர்ந்தது.

தேய்பிறை கண்ட சுதேசமித்திரன் வரலாறு

சி.ஆர். சீனிவாசனுக்குப் பிறகு சுதேசமித்திரன் வரலாற்றில் தேய்பிறைக் கட்டம் தொடங்கிவிட்டது. 1968 முதல் 1971 வரையில் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் மாறிமாறி நிகழ்ந்தன. இவை சுதேசமித்திரன் வரலாற்றை மிகவும் பாதித்தன. சுதேசமித்திரன் அலுவலகம் மவுண்ட் ரோடு 'விக்டோரியா ஹவுஸ்' என்னுமிடத்தில் இருந்து சென்னை இராயப்பேட்டை 'தேசபந்து நிவாஸ்' என்னு மிடத்திற்கு மாறியது. இந்த அலுவலக மாற்றம் சுதேசமித்திரன் தொடர்ந்து வெளிவர உதவவில்லை. தற்காலிகமாகச் சுதேசமித்திரன் வெளியீடு நிறுத்தப்பட்டது.

1972இல் 'சுதேசமித்திரன் பப்ளிக் லிமிடெட்' எனும் புதிய நிறு வனம் தொடங்கப் பெற்றது. இதன் தலைவரானார் எம். பக்தவத்சலம். சி.ஆர். ராமசாமி எனும் மற்றொரு காங்கிரஸ்வாதி நிருவாக இயக்குநர் ஆனார். புதிய நிறுவனத்தின் சார்பில் வெளிவந்த சுதேசமித்திரனுக்குப் பெயரளவில் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டார் சி. ஆர். ராமசாமி. நடைமுறையில் சி. சீனிவாசன் என்பவர் தலைமையில் இயங்கிய ஆசிரியர் குழு பத்திரிகைப் பணியைப் பார்த்துக்கொண்டது. இந்த நிலையிலும் சுதேசமித்திரன் கண்ட பொருள்இழப்புக் காரணமாக 1978 பிப்பிரவரி 12இல் மீண்டும் பத்திரிகை வெளிவருவது தடை செய்யப்பட்டது.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஜான் தாமஸ் என்பவர் நிருவாக ஆசிரியராகவும், என்.எஸ். சுந்தரேசன் என்பவர் இதழாசிரியராகவும் அமையச் சுதேசமித்திரன் 31.3.1980இல் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. இக்காலத்தில் சுதேசமித்திரனை உரிமையாக்கிக் கொண்டவர் ஜான் தாமஸ். இவராலும் சுதேசமித்திரன் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

சுதேசமித்திரனின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண் டிய காலத்தில் பத்திரிகை வெளிவராமல் இருந்தது தமிழ் இதழி யல் துறையில் நிகழ்ந்த பெரும் அவலமாகும்.

சுதேசமித்திரனுக்கு மீண்டும் வாழ்வளிக்க 'ராக்போர்ட் பப்ளி கேஷன்ஸ்' எனும் புதிய நிறுவனம் உருவாக்கப்பட்டது. 'பதினாறு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மறுபடியும் தமிழ் மக்கள் கையில் சுதேசமித்திரன்' எனும் அறிவிப்புடன் காலை இதழாக 3.11.1994 இல் சுதேசமித்திரன் மீண்டும் வெளிவந்தது. இதன் ஆசிரியர் முன் னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர். நாகராசன். தலையங்கப் பகுதியின் மேல் உள்ள இலச்சினையில் உலக உருண்டை மீது அமர்ந்த கழுகு சித்திரிக்கப்பட்டிருந்தது. பண்டைய சுதேசமித்திரன் தொடர்ச்சியாக ஆண்டு, தொகுதி பற்றிய குறிப்புகள் வெளியிடப்படவில்லை. இதற்கு பத்திரிகைச் சட்டத்தின் விதி அனுமதிக்கவில்லை. 'இந்தியன் முதலில், பிறகு தமிழன்' என்ற கண்ணோட்டத்தில் இந்த இதழ் நடத்தப்பட்டதென இதன் ஆசிரியர் நேர்காணலில் (தொலை பேசி யில்) குறிப்பிட்டார். வழக்கம் போல் பொருள் இழப்பின் சுமை தாங்காமல் சுதேசமித்திரன் நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. இறுதி இதழ் 1.5.1996இல் வெளிவந்தது. மகத்தான வரலாறு படைத்த சுதேசமித்திரனின் மாபெரும் வீழ்ச்சி வரலாற்றுச் சோகமாகும்.

ஜி. சுப்பிரமணிய ஐயர் கால கட்டம் – சிறப்பாய்வு

'காலஞ் சென்ற 'சுதேசமித்திரன்' சுப்பிரமணிய ஐயருடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன்' என்று சக்திதாஸன் (பாரதியார்) சுதேசமித்திரன் 25.1.1916இல் எழுதிய இரங்கல் கட்டுரையில் தமது பத்திரிகைக் குருவின் 'உள்ளத்திலிருந்த மூலதர்மங்'களில் ஒன்றாகத் 'தமிழ்வழி'யைப் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்:

> தமிழ்நாட்டார் விசேஷ அவசரங்கள் நேரிட்டாலொழிய மற்றப்படி எப்போதும் தமிழே பேசுவும், எழுதவும் வேண்டும். கற்கும் கலை களெல்லாம் தமிழ் வழியாலே கற்க வேண்டும்.

பாரதியார் சுட்டிக்காட்டியதைப் போல, ஜி. சுப்பிரமணிய ஐயர் சுதேசமித்திரனைத் தொடங்கியதும் தமிழ் வழியில் அரசியலறிவு பரவவேண்டும் எனும் மூலதர்மத்தின்பாற்பட்டதேயாகும்.

பத்திரிகை வழியாக மட்டுமன்று, அரசியல் பிரச்சார வெளியீடு கள் அரசியல் பிரச்சாரச் சுற்றுப்பயணங்கள் முதலான வழிகளிலும், தமிழ் வழியை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் 'ஜி.சு.'. 1883இல் அவர் எழுதி வெளியிட்ட 'சுய அரசாட்சி வினா--விடை' எனும் அரசியல் வெளியீடுதான் தமிழின் முதல் அரசியல் அரிச்சுவடி யாகும். இத்துடன் பன்னிரண்டு அரசியல் வெளியீடுகளையும்

தமிழில் எழுதி வெளியிட்டார். 1882இல் அக்கால 'ஸ்தல ஸ்தாபன திட்டம்' எனும் ரிப்பன் பிரபுவின் திட்டத்தைத் தமிழில் விளக்க முதல் முதலில் அரசியல் சுற்றுப்பயணம் மேற் கொண்டவர். மேடைப் பேச்சுகளை முடித்துக்கொண்டு கீழே இறங்கியதும் அரசியல் துண்டுப் பிரசுரங்களை இலவசமாக வழங்கும் ஏற்பாட்டையும் முதன்முதலில் தொடங்கி வைத்தவரும் 'ஜி.சு.' அவர்களே.

> ...உபந்நியாஸங்கள், பத்திரிகைகள், துண்டு கடிதாசிகள் முதலியவற்றின் மூலமாக ராஜரீதியில் உண்மைகளை ஜனங் களுக்குள் பரவச் செய்து முக்கிய சிந்தை ஏற்படுமாறு செய்ய வேண்டியது ஜனத்தலைவர்களின் கடமையென்று நம்புகிறார்.

என்று 'ஜி.சு.'வைப் பற்றிப் பாரதியார் 1907இல் குறிப்பிட்டதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகச் சீர்திருத்தப்பற்று மூன் றும் சமச்சீராக இணைந்த முதல் அரசியல் தலைவரான 'ஜி.சு.' சுதேசமித்திரனிலும் அந்த மூன்று விழுமியங்கள் செல்வாக்குப் பெற முதன் முதலில் வழிகாட்டினார். இதுவே, சிறப்பாய்வின் ஆதார சுருதியாகும்.

1898இல் சுதேசமித்திரனின் ஆசிரியர் பொறுப்பு முழுவதை யும் ஏற்று அவரே எழுதினார் என்பதை 4.10.1898இல் சுதேச மித்திரனில் வெளிவந்த பின்வரும் விளம்பரம் குறிப்பிடுகின்றது:

கையொப்பக்காரர்களுக்கு அறிக்கை

'அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் சுதேசமித்திரன் மானேஜ் மெண்ட் ஜி. சுப்பிரமணியய்யர் இடத்தில் வந்துவிட்டது. ஆர்டிகல் களும் அவரே எழுதுகிறார். மித்திரனை வாசிப்போர்க்கு இதுவே நல்ல சமயம்.' 1898 அக்டோபர் முதல் தேதியில் சுதேசமித்திரனைத் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்ட 'ஜி.சு.' 1899இல் அதைத் தினசரியாக்கிவிட்டார். 1882 முதல் 1898 வரையில் சுதேசமித்திர னின் ஆசிரியர் குழுவைப் பற்றி அறிய முடியவில்லை. ஆனால் 'விவேக சிந்தாமணி' ஆசிரியர் சி.வி. சுவாமிநாதய்யர், 1916 ஏப்பிரல் மாத விவேக சிந்தாமணியில் 'அப்பத்திரிகையை நடத்துவதில் அவருக்கு உதவியாக அமர்ந்து 1885ஆம் வருஷம் முதல் 10 வருஷத்துக்கு அவ்வேலையிலிருந்து உழைத்து' வந்ததாகக் கூறி யுள்ளார்.

'தெய்வத்தருவாக' விளங்கி 'ஜி.சு.' சுதேசமித்திரனை வளர்த்தெடுத்ததின் சிறப்பம்சங்களை விளக்கியுள்ளார் 'ஜி.சு.'வின் நெருங்கிய நண்பரான விருதை சிவஞானயோகி. 26.1.1914இல் நடைபெற்ற 'ஜி.சு.'வின் அறுபதாம் ஆண்டுவிழாவில் யாத்தளித்த வாழ்த்துப்பாவில் விருதை சிவஞான யோகி பின்வருமாறு சிறப்பம்சங்களை எடுத்துரைத்துள்ளார்:

நீளெழிற் புதினத் தாளைத் தந்ததில்
செந்தமிழ் நிலத்தின் முற்று சீர்த் தேற்றமும் (44)

மற்றுள நாட்டிற் கற்றவர் செய்தியும்
அரசிய லறிவும் பிறர்சீர்த் தேற்றமும் (46)

பயன்மிகு முலக வியற்கை யுணர்வும்
பெற்புறு கைத்தொழில் நுட்பமுஞ் செட்டும் (48)

நாட்டன் புணர்ச்சியுஞ் சேட்புலச் செய்தியும்
பற்பல நூல்களின் திட்பமும் பிறவும் (50)

தமிழ் நாடெங்கு மமர்ந்து தாமுறை
சிற்றூ ரன்றி மற்றொன் றறியா (52)

மக்களு மோர்ந்துயத் தக்கபடி யறைந்
தறிவுகளுள் தெய்வ தருவே வாழ்க[33] (54)

சுதேசமித்திரன் தோற்றம் குறித்து ஜி.சுப்பிரமணிய ஐயர்

17.1.1908இல் சுதேசமித்திரன் அலுவலகத்தில் விருதை சிவஞான யோகி தலைமையில் நடைபெற்ற சுதேசமித்திரன் வெள்ளி விழாவில் 'ஜி.சு' பேசியபொழுது 'சுதேசமித்திரன் பத்திரிகையை விருத்தி செய்து தமிழ் ஜன ஸமூகத்தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மையென்று கருதினேன்' என்று குறிப்பிட்டார். மற்றொரு சமயத்தில் வரகவி சுப்பிரமணிய பாரதியிடம் (மகாகவி பாரதியார் அல்லர்) 'ஜி.சு.' பின்வருமாறு கூறியதாக வரகவி சுப்பிரமணிய பாரதி 'பாரத மணி'யில் எழுதி வந்த தொடர் கட்டுரையில் நினைவு கூர்ந்துள்ளார்.

> நம் நாடு தழைக்கவேண்டும். நம்நாட்டில் கல்வி, கைத்தொழில், செல்வம், ஆசாரச் சீர்திருத்தம், தேசாபிமானம், தன்னைத்தானே காத்துக் கொள்ளத்தக்க ஆற்றல் இவைகள் பெருக வேண்டும் என்கிற விருப்பம் என்னுடைய இளவயதிலேயே முளைத்தது. ஆனாலும் அந்த விருப்பம் 1878ஆம் வருஷத்திலேதான் 'ஹிந்து' என்னும் பத்திரிகையாகப் பரிணமித்தது. அப்பால் ஆங்கிலங்

> கற்ற நம்மவர்களுக்கு உழைப்பதை விட சாமான்ய தென்னிந்தியத் தமிழ்நாட்டுக் குடிமக்களுக்குத் தக்க அறிவையூட்டுவது தான் சிறந்தது என்கிற விருப்பம் உதித்த அடுத்த நான்கு வருஷ காலத்திற்குள் அதாவது 1882ஆம் வருஷத்தில் அவ்விருப்பம் சுதேசமித்திரன் பத்திரிகையாகப் பரிணமித்தது.[34]

'சாமான்ய தென்னிந்தியத் தமிழ்நாட்டுக் குடிமக்களுக்கு' பத்திரிகைப் படிக்கும் பழக்கமோ, விருப்பமோ, மொழியறிவோ, பொதுவிஷய நாட்டமோ இல்லாத காலச் சூழலில் 'ஜி.சு.' சுதேசமித்திரனைத் தொடங்கியது உண்மையிலேயே வியப்பிற்குரியது. இந்த வியப்பைச் சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா பின்வருமாறு 1915இல் வெளிப்படுத்தியுள்ளார்:

> பிரம்ம ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் தாம் நடத்திக் கொண்டிருந்த ஹிந்து என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை விட்டுவிட்டுச் சாதாரண ஜனங்களுக்குள் அறிவைப் பரப்பும் பொருட்டுத் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தது மிகவும் வியக்கத்தக்கது.[35]

பத்திரிகைத் தமிழ்

சுதேசமித்திரன் முன் எழுந்த முதல் பிரச்சினை, பத்திரிகைத் தமிழ். சுதேசமித்திரனுக்கு முன்பு தமிழ் இதழ்கள் சிலவற்றிற்கு அரசியல் வழிப்பட்ட பத்திரிகைத்தமிழ் தேவைப்படவில்லை. ஏன் எனில் தமிழில் தோன்றிய முதல் அரசியல் பத்திரிகை சுதேசமித்திரனே யாகும். அரசியல் என்றால் தேசிய - சர்வதேசிய அரசியல் செய்திகளைத் தந்து விளக்கும் அரசியலாகும். இந்தப் பிரச்சினையைப் பற்றியும் சுதேசமித்திரன் வெள்ளி விழாப் பேச்சில் அவர் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்:

> இப்பத்திரிகையால் விளையும் நன்மைகள் அநந்தம் என்றாலும், இதை நடத்தும் விஷயத்தில் ஏற்படும் சிரமம் மிகுதி. இங்கிலீஷ் பத்திரிகைகளானால், மற்ற பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களைக் கத்திரிக்கோலால் துண்டுபடுத்திக் கோந்து போட்டு ஒட்டிக் கொடுத்துவிட்டால் கம்பாசிட்டர்கள் வேலையை முடித்துவிடுவார்கள். தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அவ்வாறு செய்யத்தக்க பத்திரிகைகள் அதிகமில்லை. இங்கிலீஷும் தமிழும் தெரிந்தவர்களே இதற்கு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இங்கிலீஷை மொழிபெயர்த்து எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தமிழ்ப் பத்திரிகைக்கு எடிட்டர் வேண்டுமென்றாலும் கிடைப்பதில்லை.

துணையாசிரியர் தேவையைப் பற்றிய சுதேசமித்திரன் விளம் பரத்தில் தமிழ்ப்புலமையும், ஆங்கில அறிவும் பெற்றிருக்க வேண் டும் என்று கூறப்பட்டுள்ளது:

தேவை – சுதேசமித்திரனுக்கு ஸப் எடிட்டர்

சம்பளம் ரூ 30 முதல் வருஷம் 2 ரூபாயாக 40 வரையில். திறமைசாலியானால் வேறு வரும்படியுங் கிடைக்கும். தமிழில் நல்ல பாண்டித்தியமும் இங்கிலீஷில் எப்.ஏ. வரையிலுமாவது படித்தவருமாயிருக்க வேண்டும். சுதேசமித்திரன் மானேஜருக்கு எழுதிக் கொள்ள வேண்டும்.[36]

சுதேசமித்திரனின் துணை ஆசிரியர்களாகச் சிறந்த இருமொழிப் புலமை நலம் வாய்ந்தவர்களை நியமித்தார் ஜி. சுப்பிரமணிய ஐயர். சி.வி. சுவாமிநாதய்யர் (பிற்காலத்தில் விவேக சிந்தாமணி ஆசிரியர்) கோதண்டராமய்யர், வரகவி அ. சுப்பிரமணிய பாரதி, சங்கரலிங்கம் பிள்ளை, குருமலை சுந்தரம் பிள்ளை, சி. சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் துணையாசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தில் சுதேசமித் திரனின் பத்திரிகைத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.

ஜி. சுப்பிரமணிய ஐயர் 1882இல் சுதேசமித்திரனைத் தொடங் கினாலும் 1899இல்தான் இந்துவில் இருந்து விலகி, முழுப் பொறுப்பேற்றார். இதைப் பற்றிக் குருமலை சுந்தரம் பிள்ளை எழுதிய தாவது:

முதல் பதினேழு வருஷ காலமும் சுதேசமித்திரன் தாய்ப்பால் குடிக்க வழியில்லாமல் தாதியரின் மேற்பார்வையில் வளர்க்கப் பட்ட சவலைக் குழந்தை போல் மிகவும் வறட்சியும் மெலிவுமான வளர்ச்சியடைந்து வந்தது.[37]

முதல் பத்தாண்டுகள் சி. வி. சுவாமிநாதய்யர் பொறுப்பில் சுதேசமித்திரன் வெளிவந்தது. இதைக் குறிப்பிட்டு ஜி. சுப்பிரமணிய ஐயரே பின்வருமாறு பேசியுள்ளார்:

'எனக்கு இந்து, சுதேசமித்திரன் என்ற இரண்டு பத்திரிகை களுக்கும் விஷயமெழுதி அவைகளை ஒரே காலத்தில் கவனித்து நடத்த முடியாததினால், இதோ என்னெதிரிலிருக்கிற சி.வி. ஸ்வாமி நாதய்யரவர்களிடம் (இப்போது விவேக சிந்தாமணி பத்திராதிபர்) சுதேசமித்திரன் வேலை ஒப்புவிக்கப்பட்டு அவரே பார்த்து வந்தார்.' சி.வி. ஸ்வாமிநாதய்யர் 1892 முதல் விவேக சிந்தாமணி எனும் இலக்கியத் தரம் வாய்ந்த மாத இதழைத் தொடங்கியவர்.

அரசியல் கருத்துகளை வெளியிடத் தமிழ்ச் சொல்லாக்கத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயர் படாத பாடுபட்டார். இதை நேரில் கண்ட துணையாசிரியர் வரகவி அ. சுப்பிரமணிய பாரதியார் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

சில அரசியல் விஷயங்களை விவரிக்கும்போது சில ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ்ப் பதம் கிடைக்காமற் போகும். அப்போது ஐயர், 'என்னடா பாரதி! உன் தமிழ் படாதபாடுபடுத்துகிறது. Passive Resistance, இதற்கென்னடா தமிழ் வார்த்தை போடலாம்? சாத்வீக எதிர்ப்பு என்று போடு' என்று சொல்லுவார். அப்போதுதான் சொல்லும் வேகம் மட்டுப்படும். இப்படியே அநேக ஆங்கிலப் பதங்களுக்கு ஐயர் தாமே தமிழ்ப் பதங்களை உண்டாக்கினார். அதனாலேதான் சுதேசமித்திரன் தமிழ் ஒருவித மாறுபாடு உடையதாயிருக்கிறது. ஏனைய தமிழ்ப் பத்திரிகைகள் அரசியல் தத்துவங்களை வெளியிடச் சுதேசமித்திரன் பாஷையையே ஆதாரமாகக் கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளாயின.

'சில சமயங்களில் சரியான தமிழ்ப் பதம் கிடைக்காமற் போய்விடும். அப்போது ஆங்கிலவார்த்தையையே போட்டெழுதும் படி ஐயர் சொல்வார். பிறகு எழுதி முடித்தபின் திருப்பிப் படிக்கும் படி சொல்லிக் கேட்டுக்கொண்டே வரும்போது, அந்த ஆங்கிலப் பதத்திற்கும் புதிய தமிழ்ப் பதம் உண்டாக்கிச் சொல்லிவிடுவார். அப்போது ஐயர், கண்டுபிடிக்க முடியாத ஒன்றைக் கண்டுபிடித்து விட்டது போல் கரை கடந்து சந்தோஷப்படுவார்.'[38]

தமிழ்ச் சொல்லாக்கத்திற்கு 'ஜி.சு.' பாடுபட்டதை அவருக்குப் பிறகு சுதேசமித்திரன் ஆசிரியராக வந்த அ. அரங்கசாமி ஐயங்காரும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

எளிய தமிழ் மக்களின் போதிய படிப்பின்மை, பத்திரிகை படிக்கும் பழக்கமின்மை, தமிழ் மொழியில் அரசியல் சொற்களின்மை ஆகிய பல இடர்ப்பாடுகளுக்கிடையே அவர் புதிய சொல்லாக்கத்திற்காகப் போராடியதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

'விஷயத்துக்கு மூளையைச் செலுத்துவதை விட, விஷயத்தைத் தகுந்தமுறையில் வெளிப்படுத்தத்தக்க தமிழ்மொழியைக் கண்டுபிடிப்பதிலேதான் என் மூளை சிதறுகிறது' என்று 'ஜி.சு.' வரகவி அ. சுப்பிரமணிய பாரதியிடம் கூறுவாராம்.

'ஜி.சு.'வின் தமிழ் நடை, அவருடைய ஆங்கில மொழி நடையைப் போல் அமையவில்லை என்று கூறியவர்களும் உண்டு.

'இவர் எழுதிவந்த ஆங்கில நடையைப் போல் தமிழ் நடை அவ்வளவு கம்பீரமாகவும் அழகாகவும் அமைந்திராவிட்டாலும், விஷயம் கௌரவம் நிறைந்ததாக இருக்கும்' என்று தமிழறிஞர் பி.ஸ்ரீ. ஆச்சார்யா கருதியுள்ளார்.[39]

சுதேசமித்திரனில் துணையாசிரியராகவிருந்த தமிழ்ப் பேரறிஞர் குருமலை சுந்தரம்பிள்ளை, ஜி. சுப்பிரமணிய ஐயரின் தமிழ் நடை 'அழகாயில்லை, செவ்வையாக இல்லை' என்று குறை கூறப் பட்டதை விமர்சித்து 'ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்' (1907) என்னும் தமது நூலில் பின்வருமாறு எழுதியுள்ளது ஏற்கத்தக்கதே.

> சுதேசமித்திரன் பத்திராதிபர் எழுதும் தமிழ் நடை அவ்வளவு செவ்வையாக இல்லை என்று சிலர் குறை கூறுகின்றனர். சுதேசமித்திரன் தமிழ்நடை அழகாய் இல்லை என்பது சிறிது உண்மையேயாயினும் அக்குறையைப் பத்திராதிபர் மீது ஏற்று வதினும் நமது பாஷையின் மீது ஏற்றுவதே பெரிதும் நியாய மாகும். ஏனெனில், நமது தமிழ்ப் பாஷையானது முக்கியமாய் மத சம்பந்தமான விஷயங்களுக்கும் பாடல்களுக்கும்தான் இயைந்த தாயிருக்கிறதேயன்றி ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைத் தெளிவாய் வெளியிடற்கேற்ற சொல் வளமும், விசாலமும், இளக்கமும் அதனிடம் இல்லை...
>
> இந்த நிலையில் சுதேசமித்திரன் பத்திராதிபருடைய தமிழ் நடை அழகாயில்லை என்று கூறப்படும் குறை மிகவும் பாரபட்ச மானது. அன்றியும் இக்குறை மித்திரன் ஆரம்ப காலத்தில் இருந் திருப்பினும் இப்பொழுது நமது ஐயர் தமிழ் வசன நடையில் தக்க தேர்ச்சியடைந்துவிட்டாரென்றே எண்ணுகின்றேன். இன்னும் மற்ற பாஷைகளில் காவிய நடையென்றும், பத்திரிகை நடை யென்றும், பல நடைகள் இருப்பதுபோல் நமது ஐயரும் பத்திரிகைத் தமிழ் நடை என்று ஒரு புதிய நடையில் தமது கருத்துக்களை மிக அழகாயும், சாதுரியமாயும் வெளியிடுகின் றார். அநேக புதிய பதங்களை புதிய கருத்துடன் துணிவாய்ப் பிரயோகிக்கவும் செய்கின்றார்...
>
> நமது தமிழ் நாட்டில் பிறருக்கு உதவி செய்யாமல் அறிந்த வற்றையெல்லாம் மனதில் அடக்கிக் கொண்டு குடத்துள் விளக் கெனவும், உட்கொண்டதை வெளியே கக்காத குடுக்கைகள் போலவும் வாழும் தமிழ்ப் பண்டிதர்களிடம் வீணே கிடக்கும் தமிழறிவும், தேர்ச்சியும் நமது தேச பக்தருக்கு வாய்த்திருக்கு மானால், இவர் இதுவரையும் தமிழ்ப் பாஷையையே ஒரு புதிய வழியில் திருப்பியிருப்பார்.

மேலும் இரு விமர்சனங்கள்

சுதேசமித்திரன் தமிழ் நடையைக் குறைகூறி ஒரு விவாதம் சுப்பிரமணிய சிவாவின் 'ஞானபாநு' மாத இதழில் 1915இல் நிகழ்ந் துள்ளது. இதைச் சிவா தொடங்கி நிகழ்த்தியுள்ளார். வ.உ.சி. சிவாவை ஆதரித்துச் சுதேசமித்திரனில் 29.10.1915இல் எழுதியுள்ளார். சுதேச மித்திரனில் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாகக் கலந்து வந்ததைச் சிவா எதிர்த்துள்ளார். 'தமிழ் ஜனங்களுக்கு சுதேசமித்திரன் அறிவைப் பரப்புகின்றதா? அல்லது ஆங்கில பாஷையைப் பரப்புகின்றதா?' என்று சீற்றமுடன் (ஞானபாநு - செப்டம்பர் 1915இல்) சிவா சொற் போர் தொடுத்தார் (விவரமறிய திரு. பெ.சு. மணியின் 'வீரமுரசு சுப்பிரமணிய சிவா' - 1984 எனும் நூலைப் பார்க்கவும்).

சிவாவின் குற்றச்சாட்டுகளுக்குச் சுதேசமித்திரனில் 1915 அக்டோபர் 1, 6, 15ஆம் இதழ்களில் 'பாரதபுத்ரன்' என்பவர் பதிலளித்தார். இவ்விதழ்கள் கிடைக்கவில்லை. ஆனால் பாரத புத்ரனுக்குப் பதிலளித்து வ.உ.சி. சுதேசமித்திரனில் (29.10.1915) எழுதிய கட்டுரையில் 'பாரதபுத்ரன்' கருத்துகள் எடுத்தாளப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக மறுக்கப்பட்டுள்ளன. வ.உ.சி.யின் பதில் கட்டுரையில் இருந்து 'பாரதபுத்ரன்' எழுதிய கட்டுரையின் தலைப்பு 'தமிழ்ப் பாஷையும் சுதேசமித்திரனும்' என்று தெரிகின்றது. சமஸ்கிருதச் சொற்கள் இல்லாமல் பத்திரிகையை நடத்த முடியாது என்று 'பாரதபுத்ரன்' கூறிய கருத்தை வ.உ.சி. மறுத்துள்ளார். ஆனால் சிவா, பாரதபுத்ரனின் இந்தக் கருத்தை மறுக்கவில்லை. அவர் மறுத்தது, ஆங்கிலம் கலந்த நடையை - 'இக்காலத்துச் செயல்களும் எண்ணங்களும் வஸ்துக்களும் 3000 ஆண்டுகளுக்கு முன் இருந்ததில்லை. ஆகவே அவைகளுக்குத் தமிழில் பதங்கள் கிடையா. ஆகையினால் நாம் பிறதேசத்தார் கூறும் சொற்களையே உபயோகிக்க வேண்டியிருக்கிறது. நாளா வட்டத்தில் அவை தமிழ்ப் பதங்களாய் விடுகின்றன' என்று 'பாரதபுத்ரன்' வாதிட்டதையும் வ.உ.சி. தக்க முறையில் மறுத்துள்ளார். அரங்கசாமி ஐயங்கார் சுதேசமித்திரன் ஆசிரியராகப் பொறுப்பேற்றதற்கு முந்திய சுதேச மித்திரனின் தமிழ் நடை சிவா, வ.உ.சி.யின் விமர்சனத்திற்குரிய தாயிற்று. சிவாவும் தமது தமிழ் நடையில் சமஸ்கிருதச் சொற்கள் கலப்பைக் கவனிப்பார் என்று வ.உ.சி. நம்பிக்கை தெரிவித்தார்.

'கல்கி' அவர்களும் சுதேசமித்திரனின் தமிழ் நடையில் ஆங்கிலச் சொற்களின் மிகுதிப்பாட்டைச் சுட்டிக்காட்டி, தேசபக்த

னின் தமிழ் நடையைப் பாராட்டியுள்ளார். சுதேசமித்திரனின் நடை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைக் 'கல்கி' பின்வருமாறு கற்பனை செய்து எழுதினார்:

> பெங்களூர் புரொவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகா சரண் மஜூம்தாரின் பிரஸிடென்ஷியல் அட்ரெஸில் இந்தியப் பிரஜைகளின் தேசிய அபிலாஷைகளை அடக்க இந்திய புயுராக்ஸி கையாண்டு வரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோக மற்ற தன்மையைப் பற்றிக் கரதலாமலகமாய்க் கூறியிருப்பது ஹிஸ்எக்ஸலென்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுமென்று நம்புகின்றோம் (குமரிமலர் 1943, ஆகஸ்ட்).

இதையே நல்ல தமிழில் தேசபக்தன் எப்படி எழுதியிருக்கும் என்பதையும் கல்கி கற்பனை செய்துள்ளார். அரங்கசாமி ஐயங்கார் கால சுதேசமித்திரன் தமிழ்நடை இங்கு விமர்சிக்கப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறுமிடத்து, 'ஜி.சு.'வின் பத்திரிகைத்தமிழ் சுதேசமித்திரனில் கருவாகி, உருவாகி, பல்லாயிரக்கணக்கான கிராம மக்களுடன் உறவாடி விழிப்புறச் செய்து உணர்வில் கலந்தது. கண் பார்வையற்ற நிலையிலும் 'ஜி.சு.' 1908 முதல் 1914 வரையில் துணையாசிரியர்களிடம் தலையங்கங்களையும் பிறவற்றையும் எடுத்துக்கூறி எழுதுவித்துப் பத்திரிகைத் தமிழை வளர்த்தார்.

பாரதியார் பார்வையில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சுதேசமித்திரன்

1904 நவம்பரில் சென்னை அரண்மனைக்காரத் தெருவில் இருந்த சுதேசமித்திரன் அலுவலகத்தில் துணையாசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்தார். 'பத்திரிகைத் தொழிலில் எனக்குப் பழக்கமும், தேர்ச்சியும் வரும்படி செய்தது அவர்தான். அவரை நான் ஒருவகையில் பரம குருவாக மதிக்கின்றேன்' என்று பாரதியார் 'ஜி.சு.'வைப் பற்றிக் குறிப்பிட்டதாக அமரர் வ.ரா. எழுதியுள்ளார்.[40] ஆங்கிலச் செய்திகளை மொழிபெயர்த்து, அவற்றிற்கு 'மகுடம்' சூட்டி மகிழ்ந்ததை 'ஜி.சு.' பாராட்டியுள்ளார். 'ரஸம் கெடாமல் தமிழில் மொழி பெயர்க்க உன்னைத்தவிர யாரால் முடியும்?' என்று பாரதியாரை 'ஜி.சு.' பாராட்டியதாகவும் வ.ரா. எடுத்துக்காட்டியுள்ளார்.

ஜி.சு.வின் கீழ் பணியாற்றிய பாரதியாருக்கு நவம்பர் 1904 முதல் ஏப்பிரல் 1906 வரையில் சுதேசமித்திரனில் மொழிபெயர்ப்பு வேலையே பெரும் வேலையாய் இருந்தது.

சுதேசமித்திரனையும், 'ஜி.சு.'வையும் பாரதியார் 'இந்தியா' இதழ்களிலே விமர்சனம் செய்துள்ளார். பாரதியார், திலகர் தலைமை யிலான 'நேஷனலிஸ்ட் பார்ட்டி' என்ற தீவிர தேசியவாதக் கட்சியின் குரலாக 'இந்தியா'வை ஒலிக்கச் செய்தார். பிரோஸ்ஷா மேத்தா, கோபால கிருஷ்ண கோகலேவின் வழிகாட்டுதலில் இயங்கிய காங்கிரஸை மிதவாத தேசியக்கட்சி என்று குறிப்பிட்டு அதைச் சாடுவதில் எப்பொழுதுமே முன்நின்றார் பாரதியார். மிதவாத தேசியத் தைக் கண்டிக்காமலோ அல்லது கண்டுகொள்ளாமல் இருந்தாலோ பாரதியார் சீற்றமடைவார். இந்த நோக்கில் அவர் 'ஜி.சு.'வையும் சுதேசமித்திரனையும் கண்டனம் செய்ததுண்டு.

6.12.1907இல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் சூரத் காங்கிரசிற்காகச் சென்னை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வ.உ.சி.யின் தலைமையில் கூட்டம் நடந்தது. 'ஜி.சு.'வின் பெயரை வ.உ.சி. முன்மொழிந்தபொழுது பாரதியார் எதிர்த்தார். 'பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் இந்தியா ஸ்வராஜ் பெற்று இன்புறமுடியும்' என்று ஜி.சு. மிதவாதக் குரலில் பேசியதை நினைவூட்டிப் பாரதியார் எதிர்த் தார். ஆயினும் 'ஜி.சு.' சூரத் காங்கிரஸ் பிரதிநிதியாகச் சென்றார்.

புதிய கட்சி அதாவது திலகர் தலைமையிலான கட்சியைப் பற்றிச் சுதேசமித்திரன் பகிரங்கமாகக் கருத்துக் கூறாமல் இருந் ததைப் பாரதியார் பின்வருமாறு விமர்சனம் செய்துள்ளார்:

> சுதேசமித்திரன் பத்ராதிபர் இந்தப் புதிய கட்சி ஏற்பட்ட நாள் முதலாக இதைப் பற்றி ஒன்றும் எழுதாமல் சாமர்த்தியமாக இருந்து வருகிறார்.[41]

'புதிய கட்சியாரும் சுதேசமித்திரன் பத்திரிகையும்' என்று பெயர் குறிப்பிட்டே சுதேசமித்திரன், புதிய கட்சியைப் பற்றி முரண்பட்டு எழுதியதாகப் பாரதியார் குறித்துள்ளார்:

> ...வாக்கியங்களிலே முன்பின் இவ்வளவு முரணாகவும் அர்த்த மில்லாமலும் எழுதும் சாமர்த்தியத்தை இதுவரை நாம் ஒரு இடத்திலேயும் பார்த்தது கிடையாது. பிரிட்டிஷ் ராஜ்யம் ஓய்ந்துவிட வேண்டுமென்று நினைப்பவன் முழு பைத்தியக் காரன் என்று அப்பத்திரிகை எழுதுகின்றது. பிறகு சில வாக்கியங்களுக்கப்பால் பிரிட்டிஷ் ராஜ்யம் ஓய்ந்து போய் தாமே ஆளும் காலம் வரவே வரும். நிச்சயமாய் வரும் என்று பிரமாணம் பண்ணுகிறது. ஆனால் மேற்படி காலம் இப்போது வந்துவிட வில்லையென்று அறிவுறுத்துகிறது.[42]

இவ்வாறு எழுதி வந்த பாரதியார் சுதேசமித்திரன் 1907இல் புதிய கட்சியை முற்றிலும் ஆதரிக்க வந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

'புதிய கட்சிக்கும் பழைய கட்சிக்கும் இடையிலே அங்கு பாதி, இங்கு பாதியாக நின்ற சுதேசமித்திரன் பத்திரிகை இப்போது முற்றிலும் நமது பட்டணத்தைச் சார்ந்துவிட்டது' என்று (11.5.1907) இந்தியாவில் எழுதியுள்ளார்.

3.5.1907 முதல் 8.5.1907 வரையில் திருவல்லிக்கேணி கடற்கரையில் நிகழ்ந்த விபின் சந்திரபாலரின் எழுச்சிமிக்க தொடர் சொற்பொழிவுகளின் முதல் நாள் கூட்டத்திற்கு 'ஜி.சு.' தலைமை யேற்றார். விபின் சந்திரபாலர் புதிய கட்சியின் 'வீரமுரசு' ஆவார்.

> புதிய அரசியல் இயக்கமானது (திலகர் தலைமையில் இயங்கிய நேஷனலிஸ்ட் கட்சி) தமிழக மத்யதர வர்க்கத்தினரிடையே சுதேசமித்திரன், இந்தியா ஆகிய பத்திரிகைகள் காரணமாக ஆதரவு பெற்றது. முற்கூறிய (சுதேசமித்திரன்) நாளிதழ்தான் இன்றளவும் சென்னை மாநிலத்தின் முன்னணி நாளிதழாகும். முதிய அனுபவம் வாய்ந்த ஜி. சுப்பிரமணிய ஐயர் அப்பொழுது அதன் ஆசிரியர். புதிய கட்சியின் கொள்கையை அந்தப் பத்திரிகை பிரசாரம் செய்தது; இதன் காரணமாக அதன் மீது வழக்கு போடப்பட்டது. ஆனாலும் அந்தப் பத்திரிகை அதன் பழைய மிதவாதத் தொடர்புகளை முழுமையாகத் துண்டித்துக் கொள்ளவில்லை. இதன் விளைவாக, இந்தியாவின் எதிர்கால இலட்சியங்களின் தேர்ந்த பிரதிநிதிகளாக விளங்கும் இளைய தலைமுறை சுதேசமித்திரனிடம் போதிய எதிர்பார்ப்பைத் தரும் பொறுப்பை 'இந்தியா' என்னும் வார இதழ் எடுத்துக் கொண்டது.

இவ்வாறு பாரதியார் தமது இறுதிக்காலத்தில் எழுதிய கட்டுரையின் ஓரிடத்தில் சுதேசமித்திரன் மீதான தமது கணிப்பை வெளியிட்டுள்ளார்.[43]

சுதேசமித்திரனின் தலையங்கங்கள்

நாட்டுப்பற்று, சமூக சீர்திருத்தப் பற்று, மொழிப்பற்று, பொருளாதாரச் சுரண்டல் எதிர்ப்பு முதலானவற்றை விளக்கும் எண்ணற்ற தலையங்கங்கள் சுதேசமித்திரனில் வெளிவந்துள்ளன. சென்னை அரசாங்கத்தின் கடுமையான கண்காணிப்பிற்குச் சுதேசமித்திரன் ஆளாகியது என்பதை 'நேடிவ் நியூஸ்பேப்பர்ஸ் ரிப்போர்ட்' எனும் அரசாங்கத் தொகுப்பறிக்கையில் காணலாம்.

1886இல் சென்னை அரசாங்கத்தின் பத்திரிகைத்துறை மொழிபெயர்ப்பாளர் திரு.சி.டி. மாக்லீன் என்பவர் சென்னை கவர்ன ரிடம் அளித்த அறிக்கையில் சுதேசமித்திரனில் 1886ஆம் ஆண்டில் வெளிவந்த தலையங்கங்களை மூன்று வகையாகப் பிரித்து, சுதேச மித்திரன் ராஜத்துரோகத்தை வளர்ப்பதாகக் குற்றம் சாட்டினார். ஒரே ஒரு ஆண்டிற்குள் வெளிவந்த, அதுவும் அரசியல் இயக்கத்தில் எழுச்சி தோன்றாத காலத்திலேயே சுதேசமித்திரன் தலையங்கங்கள் ராஜத்துரோகமானவை என்று சொன்னால் 1899 முதல் (சுதேச மித்திரன் நாளேடாக வந்தது முதல்) 1915 வரையில் சுதேசமித்திர னில் வெளிவந்த தலையங்கங்களைப் பற்றி மாக்லீன் என்ன கூறி யிருப்பாரோ?

திரு. மாக்லீன் பின்வரும் மூன்று பிரிவுகளில் ஆய்வு செய்து வகைப்படுத்தியுள்ளார்.[44]

1. சென்னை மாநிலத்திற்கு வெளியே நிகழும் நாட்டு நடப்பு களைப் பற்றிய எண்ணிக்கை 10.
2. சென்னை மாநிலத்திற்குட்பட்ட இனவேறுபாடுகள் பற்றிய சுட்டு இல்லாத செய்திகளைப் பற்றிய தலையங்கங்களின் எண்ணிக்கை 45.
3. ஆட்சியாளர்களுக்கும் - சுதேசிகளுக்கும் இடையே நிலவும் உறவு பற்றிய தலையங்கங்களின் எண்ணிக்கை 45.

சுதேசமித்திரனின் தலையங்கங்களில் ஆட்சியாளர் - சுதேசிகள் உறவு பற்றியதுதான் கவனத்திற்குரியது எனச் சுட்டிக்காட்டித் திரு. மாக்லின் 17.5.1886இல் எழுதப்பட்ட தலையங்கத்தின் ஒரு பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தளித்துள்ளார். இந்தத் தலை யங்கம் மகாபாரதக் கதைப் பாத்திரங்களான துரியோதனன், சகுனி முதலானவற்றைக் கொண்டு ஆள்வோரின் ஆணவப் போக்கையும், சூழ்ச்சியையும் மக்களுக்குப் புரியும் வழியில் எடுத்துரைக்கின்றது.

24.12.1887இல் 'நாஷனல் காங்கிரஸ் சபை' எனும் தலைப் பில் எழுதப்பட்ட தலையங்கத்தின் பின்வரும் பகுதி, சென்னையில் முதன்முறையாகக் கூடிய இந்திய தேசிய காங்கிரசிற்குச் சென்னை செய்த ஏற்பாடுகளின் தனிச்சிறப்புகளை விதந்தோதுகின்றது. இதில் ஒரு பகுதி வருமாறு:

> வங்காளத்தில் ஐசுவரிய மிகுந்த பெரிய ஜமீன்தார்கள் எத்தனையோ பேர்களிருக்கிறார்கள். பம்பாயில் இராஜ ஐசுவரியம் பெற்ற

வர்த்தகர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். இவர்களைப் போல ஐசுவரியம் படைத்த வியாபாரிகளாவது பெங்களாத்திலுள்ளவர்களைப் போல மிக ஐசுவரியம் படைத்த பெரிய ஜமீன்தார்களாவது மிகுதியாக இங்கே இல்லை. ஆகையால் கல்கத்தா, பம்பாய்வாசிகள் அவர்களுடைய ஐசுவரிய மிகுதியால் செய்யக் கூடியது, இவ்வித ராஜதானியில் ஜனங்களுடைய ஒற்றுமையாலும் அவர்கள் ஒன்று கூடி குமுக்கமாயிருந்து ஊக்கமும் தேசாபிமானமும் காட்டி உழைப்பதினாலுமே கைகூடத் தக்கதாய் இருக்கிறது.

அனேக கிராமங்களில் குடிகள் 1 அணா முதல் காங்கிரஸ் சபைக்குக் கையொப்பம் செய்து வந்ததையும் பார்த்த எவர்தான் காங்கிரஸ் சபை சாமான்ய ஜனங்களினுடைய அனுதாபமும் ஆதரவும் பெற்றதில்லை யென்று சொல்லத் துணிவார்கள்.[45]

1893 மே 5 வெள்ளிக்கிழமையன்று வெளிவந்த ஒரு துணைத் தலையங்கத்தின் தலைப்பு 'வக்கீல்! வக்கீல்! வக்கீல்! எங்கும் வக்கீல்!' இத்தலையங்கத்தில் சென்னை சட்டநிரூபண சபையில் உறுப்பினர்களாக வக்கீல்களே விரும்புகின்றார்கள் என்பதைக் கண்டித்து விவசாயம், கைத்தொழில், வியாபாரம் செய்பவர்களும் சட்ட நிரூபண சபையில் இருக்கவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.

1895 பிப்பிரவரி 15இல் எழுதப்பட்ட தலையங்கம் சற்று வித்தியாசமானது; புதுமையானது; முன்னோடியானது. எஸ்.வி. குருஸ்வாமி சர்மா என்பவர் எழுதிய 'பிரேம கலாவத்தியம்' எனும் புதினத்தின் சுருக்கம் தரப்பட்டுப் பெருமை செய்யப்பட்டுள்ளது. நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சுதேசமித்திரனுக்கு இருந்த ஆர்வம் இதனால் தெரிகின்றது.

1898 ஆகஸ்டு 9இல் வெளிவந்த 'நம் பண்டிதர்கள்' எனும் துணைத்தலையங்கம் தமிழ்ப் புலவர்கள் விடைத்தாள் பரிசோதகர்களாக நியமிக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை ஆதரித்தது.

11.5.1898இல் 'சட்ட நிரூபணத்தில் ஓர் விநோதம்' எனும் தலைப்பில் வெளிவந்த தலையங்கம் சுதேசமித்திரனின் நடுநிலையான சமூகநீதிக் கண்ணோட்டத்திற்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டு. 'எல்லாவிதமான கொடூர கொலை செய்த போதிலும் பிராமணர்களுக்கும், ஸ்திரிகளுக்கும் சட்டத்தில் மிக்க கொடூர தண்டனையாகிய தூக்கில் வாங்கும் தண்டனை விதிக்கப்பட மாட்டாது' எனும் ஒரு சட்டத்தைத் திருவாங்கூர் அரசின் தலைமைச்

செயலாளர் தாணுப்பிள்ளை கொண்டு வந்தார். இதை எதிர்த்து மேற்காணும் தலையங்கத்தில் சீர்திருத்தச் செம்மல் ஜி. சுப்பிரமணிய ஐயர் சாற்றிய கருத்து பின் வருவது:

> கொலை செய்யும் இருவருள் ஒருவன் ஒரு ஜாதியான படியினால் ஒருவித தண்டனையும், மற்றொருவன் வேறு ஜாதியான படியால் வேறு தண்டனையும் விதிப்பது மிகவும் கொடூரம். இவ்வித கொடூர மூடபக்தியைத் திருவாங்கூர் கவர்ன்மெண்ட் உடைத்தாயிருந்தபோதிலும் இவைகளையெல்லாம் இச் சென்னை கவர்ன்மெண்டார் அவர்களிடத்திலிருந்து நீக்கி விடுவார்கள் என்று நம்புகிறோம்.

தமிழ்நாட்டு சமூக சீர்திருத்த வரலாற்று ஆவணங்களுள் ஒன்றாக இந்தத் தலையங்கம் சிறப்பெய்திவிட்டது.

இதேபோல் இளவயதுக் கன்னியை மறுமணம் செய்யும் முதியவர்களைச் சாடும் ஒரு தலையங்கமும் சுதேசமித்திரனில் வெளிவந்துள்ளது. 1895 மே 10ஆம் தேதி இதழில் 'தைரியசாலியும் புத்திசாலியுமான ஒரு மாத்வப் பெண்' எனும் தலையங்கமும் பாராட்டுதலுக்குரியது. ஒரு மாத்வப் பெண் திருமண மேடையில் மிக வயதான மணமகனைப் பார்த்ததும் 'மூன்றாம் தாரமாகவோ நான்காம் தாரமாகவோ' வாழ்க்கைப்பட விரும்பாமல் திருமண முயற்சியை எதிர்த்தாள். இதைத்தான் தலையங்கம் பின்வருமாறு பாராட்டியுள்ளது:

> ஏழைப் பெண்கள் பாபத்தைக் கொட்டிக்கொள்ள யத்தனம் செய்யும் கிரிசை கெட்ட பணக்காரப் பிணங்களுக்கும் மனதில் அச்சமுண்டாகச் செய்யும். ஆகையால் இப்பெண்ணின் மனோ தைரியத்தையும், சாமார்த்தியத்தையும் எவ்வளவு மெச்சிக் கொண்டாடினாலும் அது அளவுக்கு மிஞ்சினதாகாதென்பது நம் துணிபு.'

இந்து பத்திரிகையாசிரியராயிருந்தபொழுது 'ஜி.சு.' சமூகச் சீர்திருத்தத்திற்குப் போர் முரசு கொட்டி எழுதி வந்தார். அது சுதேசமித்திரனிலும் தொடர்ந்தது. வாய்ச்சொல்லில் மட்டுமல்லாமல் செயல் வீரராகவும் திகழ்ந்தவர் ஜி.சு.. தமது அருமை மகள் சிவப்பிரியை பன்னிரண்டு வயதில் விதவையானதும், அவர்களுக்கு மறுமணம் செய்து வைத்தார் ஜி.சு.. பம்பாய்க்குக் காங்கிரஸ் மாநாட்டிற்காகச் சென்றபொழுது அங்கிருந்த ஒரு விதவை மறுமணச் சங்கத்தின் ஆதரவோடு டிசம்பர் 31, 1889இல் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் மறுமணத்தை நடத்தினார். வைதீக

இந்துக்களின் எதிர்ப்பையும் எதிர்கொண்டார். இந்தத் தீர்மானத்திற்குக் காங்கிரசிற்கு வந்த தலைவர்களான சர். வில்லியம் வெட்டர்பர்ன், பிரபல பிரிட்டிஷ் நாத்திக இயக்கத் தலைவரும், காங்கிரஸ் ஆதரவாளருமான சார்லஸ் பிராட்லா, மகாகோவிந்த ரானடே, பம்பாயில் பிரபல சமூக சீர்திருத்தவாதியான பி.ம். மலபாரி, சென்னை சமூக சீர்திருத்தத் தலைவர் ஆர். ரகுநாதராவ் ஆகியோர் வந்திருந்து ஜி.சு.வின் சீர்திருத்தச் செயலைப் பாராட்டினர். 1887இல் சென்னையில் தோன்றிய 'தேசிய சமூக மாநாடு' எனும் சீர்திருத்த இயக்கத்தில் பங்கேற்று அதன் வளர்ச்சிக்குப் பாடு பட்டவர் ஜி.சு.. சென்னையில் அவர் வீட்டில்தான் 9.11.1892இல் சென்னை இந்து ஆசார சீர்திருத்தசபை அமைக்கப்பட்டது.

9.6.1893இல் சுதேசமித்திரனில் 'சதிர்க் கச்சேரி' எனும் தலையங்கம் எழுதி தேவதாசி நடன ஏற்பாடுகளைக் கண்டித்தார். இதே தலையங்கத்தில் சமூக சீர்திருத்தம் காண்போர், கிறிஸ்துவப் பாதிரிமார்கள் பிரச்சாரத்திற்குத் துணை நிற்பவர்கள் எனும் குற்றச் சாட்டையும் மறுத்தார். பாதிரிமார்களின் சமூக சேவை பாராட்டுதலுக்குரியது என்றும் குறிப்பிட்டார்.

15.4.1905இல் 'பழைய ஆசாரங்களும், புது நாகரிகமும்' எனும் துணைத் தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

> பழைய ஆசாரங்களில் எவை தற்கால நாகரிகத்தையும், மாறுபட்ட நிலைமைகளையும் நோக்கி நமக்குத் தீங்கு செய்யாதவையாயிருக்கின்றனவோ, அவைகளை வைத்துக் கொண்டு, எவை தற்கால நாகரிகங்களையும் மாறுபட்ட நிலைமைகளையும் நோக்க மாறுபட்டு நம் நன்மைக்கு அவசியமோ அவைகளைத் தைரியமாக மாற்றுதலே தேச நன்மைக்குற்றநெறியென்று ஏற்படுகிறது.

மொழிப்பற்று பேணும் தலையங்கங்கள் பல வெளிவந்துள்ளன. 9.8.1898இல் 'நம் பண்டிதர்கள்' எனும் துணைத் தலையங்கத்தில் தமிழ் விடைத்தாள்களைத் திருத்தும் பொறுப்பிற்குத் தமிழ்ப் பண்டிதர்களையே நியமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுப் பின்வரும் கருத்தையும் வெளியிட்டார். 'இவ்வகுப்பினர்க்கு உதவி செய்ய வேண்டியது நமது ஜன சமூகத்தாரையும், நமது யூனிவேர்ஸிடிகளையும், நமது துரைத்தனத்தையும் பொறுத்த கடமை.'

5.4.1905இல் வெளிவந்த 'சமஸ்கிருதப்படிப்பும் தேசபாஷைப் படிப்பும்' எனும் தலையங்கத்தின் ஒரு பகுதி பின்வருவது:

> காலேஜ்களில் தேச பாஷை கற்பிக்கப்பட வேண்டியதில்லையென்றும், சமஸ்கிருதம் கட்டாயமாகப் படிப்பிக்க வேண்டுமென்றும் சர்வகலாசாலைப் பரிசீலனைக் கமிஷனர் சிபார்சு செய்ய, அதை நாம் சரியல்லவென்று வாதித்தபோது, நம் வாதத்தை வெகுபேர் ஒப்புக்கொள்ளவில்லை. யோசித்துப் பார்த்தால் தேச பாஷைகள் அபிவிருத்தியாவது தேச சேஷமத்துக்கு எவ்வளவு தூரம் அவசியம் என்பது விளங்கும். சர்வ ஜனங்களும் அந்தரங்கத்திலும், பகிரங்கத்திலும் பேசுவது தேச பாஷையே தவிர சமஸ்கிருதப் பாஷையல்ல... ஆகையால் சமஸ்கிருத பாஷையைக் கற்றலும் ஆதரித்தலும் தேசாபிமானத்தைக் காட்டினாலும் தேச பாஷையைக் கற்பதும் ஆதரிப்பதும் தேசாபிமானத்தைக் குறைவாகக் காட்டக் கூடியனவல்ல.

சுதேசமித்திரனில் 6.6.1905இல் 'ஆங்கிலங் கற்ற இந்தியர்களும் கல்லாத ஜனங்களும்' எனும் தலையங்கம் வெளிவந்தது. இத் தலையங்கத்தின் இறுதிப் பகுதி பின்வருவது:

> நம்மவர்க்கு ஆங்கிலத்தில் அவ்வளவு மோகமிருக்கின்றது. இந்த மோகம் தீங்கென்று நாம் சொல்லவில்லை. தாம் தாய் மடியில் கற்றுக் கொண்ட தேச பாஷையிலும் அபிமானம் வைத்து அதன் மூலமாகத் தம் தேசத்தவராகிய சகோதரர்களது அறிவைப் பரவச் செய்வதில் ஊக்கம் காட்டவேண்டும். அப்படி ஊக்கங் காட்டினால் கற்றவர் கல்லாதவர் இரு வகுப்பார்க்கும் மத்தியில் இப்போதிருக்கும் ஆழ்ந்த பள்ளத்தாக்கானது ஒருவாறு பாலங் கட்டி இணைக்கப்பட்டது போல இணைக்கப் படக்கூடும்.

இவ்வாறு தாய்மொழிப் புறக்கணிப்பை வேண்டுமிடங்களில் எல்லாம் எதிர்த்து சுதேசமித்திரனில் தலையங்கங்கள் எழுதப் பட்டுள்ளன.

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் பிரச்சினைகள் பற்றிய தலையங்கங்கள்

காந்தியடிகளின் புதிய அறப்போர் முறைகளாக உருவெடுத்த அகிம்சை, சத்யாக்கிரகம் இரண்டும் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் பிரச்சினைகள் மீதான அறப்போராட்டத்தின் கண்டுபிடிப்புகளாகும். காந்தியடிகள் அறப் போராட்டத்தையும், அங்குக் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த இந்தியர்கள் பிரச்சினைகளைப் பற்றியும் தமிழ்நாட்டு மக்கள் அறிய 1892 முதல் 1914 வரையில்

ஜி. சுப்பிரமணிய ஐயர் காலகட்டத்தில் ஏராளமான செய்திகளை வெளியிட்டு, தலையங்கங்களையும் எழுதியது சுதேசமித்திரன்.

'1902 முதல் 1914 வரை சுதேசமித்திரனில் வெளியான தலையங்கங்கள் மிகவும் அருமையானவை. கண்ணுக்கு எட்டாத தூரத்தில் நமது சதையும் இரத்தமும் போன்ற சகோதரர்கள் அனுபவித்த கொடுமைகளைப் பற்றித் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகளாக ஒரே ஆசிரியர் எளிய தமிழில் எழுதிய அரிய தலையங்கங்கள் எழுபதுக்கு மேலிருக்கும். தலையங்கங்களைப் படிக்கும்போது ஆசிரியர் தாம் எழுதும் விஷயத்தில் இரண்டறக் கலந்து விடுவதைப் பார்க்கலாம். இத் தலையங்கங்கள் சுதேசமித்திரனுக்கும், தமிழுக்கும், தமிழருக்கும், தேச பக்திக்கும் பெருமை தருவன.' இவ்வாறு சுதேசமித்திரன் தலையங்கங்கள் பலவற்றை மறுவெளியீடு செய்த குமரிமலர் ஏ.கே. செட்டியார் குறிப்பிட்டுள்ளார். 'புண்ணியவான் காந்தி' - பாகம் 1இல் 14 தலையங்கங்கள், செய்திகள், குறிப்புகள் ஐந்தும், நிருபர்களின் கடிதங்கள் இருபதும் ஏ.கே. செட்டியார் அரும் பாடுபட்டு வழங்கியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவில் சுதேசமித்திரனுக்குச் சந்தாதாரர்கள் நிறைய பேர்கள் இருந்தனர். நிருப நேயர்களும் இருந்தனர். இவர்களுள் 'ஞானசம்பன்னன்' எனப்படும் பிரசை சொ. விருத்தாசலம் பிள்ளை மிக முக்கியமானவர். '1892ஆம் ஆண்டிலிருந்து காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவை விட்டுப் புறப்பட்ட 1914ஆம் ஆண்டுவரை சுதேசமித்திரனில் வெளிவந்த தென்னாப்பிரிக்காக் கடிதங்களின் எண்ணிக்கை 195. அவற்றுள் 117 கடிதங்களை எழுதியவர் திரு. ஞான சம்பன்னன்' என்று ஏ.கே. செட்டியார் எடுத்துக்காட்டியுள்ளார். 24.12.1912இல் எழுதப் பெற்ற தலையங்கத்தில் காந்தியடிகள் பின்வருமாறு பாராட்டப்பட்டுள்ளார்:

> தென் ஆபிரிகா இந்தியரின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று தீக்ஷை செய்து கொண்டிருக்கும் மிஸ்டர் காந்தி, ஒரு மகாத்துமாவோ, ஈஸ்வராவதாரமோவென்று உலகோர் நினைக்கும்படி தன் மறுப்பையும், உறுதியையும் சாவதானத்தையும் காட்டி வருகிறார்.

22.9.1906இல் 'நேடாலில் இந்தியர்கள்' எனும் தலைப்பில் எழுதப் பெற்ற தலையங்கத்தில், தென்னாப்பிரிக்க வெள்ளையர் அரசின் இனத்துவேஷக் கொடுங்கோன்மை விரித்துரைக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதி வருமாறு:

> தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த டிரான்ஸ்வால், நேடால் நாடுகளில் இங்கிருந்து போயிருக்கும் இந்தியர்கள் அங்குள்ள வெள்ளையர்களால் மிருகத்திலும் கேடாக நடத்தப்படுகிறார்களென்று எவ்வளவு முறையோ சொல்லியிருக்கிறோம்... இந்தியர்கள் என்றால் கூலி வேலை செய்து பிழைக்க வந்த அநாகரிக ஜனங்களென்ற எண்ணமே அவ்வெள்ளையர்களுக்கு மேலாடி வருகிறது. இந்தியர்கள் அந்நாடுகளில் அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் லொகேஷன்கள் என்று சொல்லப்படுகிற ஒதுக்கிடங்களில்தான் குடியிருக்க வேண்டும். மற்ற இடங்களில் வீடுகள் வாங்கிக் கொண்டு, குடியிருக்கும் சுதந்திரம் அவர்களுக்குக் கிடையாது. இந்தியர்கள் அந்நாட்டில் சொந்தத்துக்குப் பூமி வாங்கியநுபவிக்கக் கூடாது. ரஸ்தாக்களில் நடப்பதிலுங் கூட அவர்கள் ஒரு ஓரமாய்த்தான் நடக்கலாம். டிரான்ஸ்வாலில் ஏஷியர்கள் அனைவரும் பதிவு செய்யப்படுகிறார்கள். அதற்கு அவர்கள் 3 பவுன் கொடுக்க வேண்டும். விரலடையாளங்கள் கொடுக்க வேண்டும். இந்தியர்கள் தென்னாப்பிரிக்கா நாடுகளில் படும் சிறுமைகளில் மேற்சொன்னவை சிலவேயாகும்.

தென்னாப்பிரிக்கத் தமிழர்களின் கடிதங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வெள்ளை நிறத்திமிர் பேயாட்டத்தைத் தமிழர்களும், ஆட்சியாளரும் அறிந்திட அம்பலப்படுத்தியதில் சுதேசமித்திரன் செய்த தொண்டு ஈடு இணையற்றது.

காந்தியடிகள் 1893இல் தென்னாப்பிரிக்கா சென்றதற்கு முன்பாகவே தென்னாப்பிரிக்காவில் 'டைமன் பீல்ட்சில்' வசித்த தமிழர்கள் 200 பேர்கள் கையொப்பமிட்டுத் தங்கள் குறைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர விண்ணப்பம் ஒன்றை அனுப்பி சுதேசமித்திரனின் உதவியை நாடியதை நவம்பர் 1, 1892ஆம் இதழில் பின்வருமாறு அறிகின்றோம்:

> எங்கள்மேல் கிருபை கூர்ந்த சகல சர்வ இந்து கனதனவான்கள் செவியில் ஏறச் சுதேசமித்திரனில் இன்னும் உங்களால் கூடிய அநேக பிரதிகளை விளம்பரப்படுத்தி இது விஷயத்துக்கு இந்தியன் நாஷனல் காங்கிரஸ் சபையோர்கள் கூடி, நமது மகிமை தங்கிய சக்கிரவர்த்தினி மாதாவுக்கு தெரியப்படுத்தி ஓர் நல்ல ஏற்பாடு செய்யக் கோருகின்றோம்.

'ஜி.சு.' அவர்கள் தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்காக நிதி திரட்டினார். அவர்கள் பிரச்சினைகளைப் பத்திரிகையாளர் என்ற முறையில் மட்டும் அணுகாமல், உயிர் கலந்த, உணர்வு கலந்த,

ரத்தமும் சதையுமான சகோதரப் பாசத்துடன் அணுகினார். தென்னாப் பிரிக்கத் தமிழர்கள், 'ஜி.சு.'வைத் தங்களில் ஒருவராக ஏற்றுப் போற்றினர். தென்னாப்பிரிக்கா டர்பன் நகரில் 'இந்துசுதார் சபை' எனும் ஓர் அமைப்பைத் தமிழர்கள் நிறுவினார்கள். 'இந்து சீர்திருத்த சபை' எனும் இந்த அமைப்பிற்கு 'ஜி.சு.'வைப் 'பரிபாலகராய்த்' தேர்ந்தெடுத்தனர். 'ஜி.சு.'வின் மீது, சுதேசமித்திரனில் வெளியிடப் பெற்ற சில கட்டுரைகளுக்காக, சென்னை அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தபொழுது இந்தச் சபையின் சார்பில் ஐம்பது பவுன், வழக்கிற்கு உதவி நிதி திரட்டப்பட்டது. வழக்கு விலக்கிக் கொள்ளப் பட்டதும் அந்த நிதியைக் கொண்டு 'சபை'யில் ஜி.சு.வின் முழு உருவப்படத்தை வைக்க முடிவு செய்தனர்.

தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட காந்தியடிகளைப் போல, சுதேசமித்திரன் வாயிலாக ஜி. சுப்பிரமணிய ஐயரும் விளங்கினார்.

சுதேசமித்திரன் மீது வழக்குகள்

13.1.1908 முதல் 25.6.1908 வரையில் சுதேசமித்திரனில் வெளிவந்த செய்திகள் பல ராஜத்துவேஷக் குற்றச்சாட்டுகளுக்கு உரியனவாக சென்னை அரசினால் கருதப்பெற்று வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றுள் பதினாறு செய்திகள் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' மீது ஏவப் பெற்ற அடக்குமுறைகள் மீதான கண்டனங்கள். தென்னாப்பிரிக்க இந்தியர்கள் அறப்போர் தொடர்பான செய்திகள் நான்கும் ராஜத் துவேஷத்திற்குரியனவாகத் தொடுக்கப்பட்டன. இறுதியாக ஆறு கட்டுரைகள் ராஜத்துவேஷக் குற்றச்சாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டன. குற்றப் பத்திரிகையில் ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்ட கட்டுரைத் தலைப்புகளின் தமிழாக்கம் வருமாறு:

1. மிதவாதிகளுக்குச் சவுக்கடி (4.4.1908)
2. வனத்துறையினர் விளைவித்த துன்பங்கள் (9.4.1908)
3. உயர்ந்தவர் யார்? இந்தியரா அல்லது ஐரோப்பிய நாயா? (27.4.1908)
4. இருநாள்களில் ஒரே ஒரு சாப்பாடு (20.5.1908)
5. மோசமான 'மாஜிஸ்டிரேட்' யார்? (3.6.1908)
6. ஆங்கிலேயரின் அறியாமை (6.6.1908)[47]

இந்தக் குற்றச்சாட்டுக்களின் பேரில் திருக்குற்றாலத்தில் கொடிய தொழுநோயின் காரணமாக ஓய்வில் இருந்த சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் கைது செய்யப்பட்டார். ஆகஸ்டு 21, 1908இல் கைது செய்யப்பட்டு சென்னைச் சிறையில் அடைக்கப் பட்டார். உடனடியாக ஜாமீனில் வெளிவரக் கொடுக்கப்பட்ட மனு சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியால் நிராகரிக்கப் பட்டது. சென்னை அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆளுநர் சபை உறுப்பினரான வி. கிருஷ்ணசாமி ஐயர், 'அட்வகேட் - ஜெனரல்' பி.எஸ். சிவசுவாமி ஐயர் முதலானோர் முயற்சியால் சில நிபந் தனைகள் பேரில் 'ஜி.சு.' செப்டம்பர் 5, 1908இல் விடுதலை செய்யப்பட்டார். இருவாரம் சிறையில் இருந்தார்.

எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக இராஜத்துவேஷம் ஏற்படும்படியாகவோ, இனவெறுப்பைத் தூண்டும் படியாகவோ, அரசு விசுவாசத்திற்குக் கேடு இழைக்கும்படியாகவோ, பொது மேடைகளில் பேசவோ, எழுதவோ ஈடுபடமாட்டேன் எனும் உறுதி மொழியைக் கொடுத்து 'ஜி.சு.' விடுதலை பெற வேண்டியதாயிற்று. இத்துடன் 5000 ரூபாய் நன்னடத்தை ஒப்பந்தப் பத்திரம் சொந்தப் பொறுப்பிலும், 2500 ரூபாய் ஓராண்டிற்கும் மற்றிருவர் நன்னடத் தைக்கான ஜாமீன் தொகை தரவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. பேராசிரியர் பி. இலட்சுமிநரசு, துலஜாராம் இருவரும் 'ஜி.சு.' விற்காக நன்னடத்தை ஜாமீன் தந்தனர்.

இந்த வழக்கில் வெளியான செய்தியில் சுதேசமித்திரன் நாளேட் டில் வந்த கட்டுரைகள்தாம் வழக்கிற்குரியவாயின. வாரம் மும்முறை சுதேசமித்திரன் பதிப்பும் அக்காலத்தில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது. சுதேசமித்திரன் நாளேடு நாள்தோறும் 1750 பிரதி களும், வாரம் மும்முறை 1900 பிரதிகளும் போய்க் கொண்டிருந்தன. சென்னையில் முறையே 280, 300 பிரதிகள் விற்பனையாயின.[43]

அரசியல் தலைவர்கள், பத்திரிகைகள், பொது வாழ்க்கைச் சான்றோர்கள் பலர் 'ஜி.சு.'வைக் கைது செய்ததற்குக் கண்டனம் தெரிவித்தனர். அவர் விடுதலை செய்யப்பட்டதை வரவேற்றனர்.

பாரதியார், அக்டோபர் 10, 1908 இந்தியா இதழில் 'ஜி. சுப்பிரமண்ய ஐயரின் கேஸ்' எனும் தலைப்பில் பின்வருமாறு எழுதி யது சற்று வித்தியாசமாக அமைந்தது.

> ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரைக் கவர்ன்மெண்டார் விடுதலை செய்துவிட்டார்கள். அதாவது ஆயிரக் கணக்கான பெருந்

தொகைக்கு நன்னடத்தை ஜாமீன் வாங்கிக் கொண்டு அந்த வயோதிக தேசாபிமானியை நிஷ்காரணமாக அவமானப்படுத்தி விட்டு, அப்பால் வழக்கம் போலத் தீவாந்திரமேற்றுவதற்குப் பதிலாக அதனினும் கொடுமையாக இனி ஆயுள் இருக்கு மளவும் நாட்டு விஷயங்களைப் பற்றிச் சர்க்கார் அதிருப்தி அடையும் வண்ணமாகப் பேசவோ, எழுதவோ செய்வதில்லை யென்று அவரிடம் உடன்படிக்கை வாங்கிக் கொண்டு வீட்டிற் குப் போகச் சொல்லியிருக்கிறார்கள்.

இதை ஓர் பெருங்கருணைச் செய்கையாக நாட்டிலே பல மூடர்கள் கொண்டாடுவது மட்டுமன்றி, கவர்ன்மெண்டாரும் அங்ஙனமாகவே கருதுவதாகக் தோன்றுகின்றது. எனினும் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய ஐயர் இதையோர் தயாளச் செய்கை யாக கருதமாட்டாரென்று நம்புகிறோம்.

ஜி. சுப்பிரமணிய ஐயரின் விளக்கம்

நிபந்தனைக்கு உட்பட்டு வெளிவந்ததால் 'ஜி.சு.'விற்கு மன வேதனையிருந்தது. அவர் வெளிவந்ததும் 'இந்து' நிருபர் ஒருவர் அவரைச் சந்தித்தார். நிருபரிடம் தமது மனவேதனையைப் பின்வரு மாறு பகிர்ந்து கொண்டார் 'ஜி.சு.':

இவ்வுலகம் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். என்னை நம்பி என் குடும்பத்தில் ஆறு பேர்கள் இருக்கின்றார்கள். இவர் களுக்காக நான் இருக்க வேண்டியிருக்கும் துர்பாக்கியசாலியாகி விட்டேன். சர் ஆர்தர் லாலியின் அரசாங்கம் எனக்குத் தூக்குத் தண்டனைத்தர உத்தரவாதம் அளித்திருந்தால், வழக்கு விசார ணையை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுத் துன்பத்தில் இருந்து விடுதலை பெற்றிருப்பேன். இந்த வயதில், பலவீனமான நிலை யில் சிறையில் கடுந்தண்டனைக்கான உழைப்பை எவ்வாறு பொறுத்துக் கொள்வேன்.[49]

'ஜி.சு.'வின் நெருங்கிய நண்பரான கே. வியாசராவ் சிறை நீங்கிய 'ஜி.சு.'வைச் சந்தித்ததைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

சில வாரங்களுக்குப் பிறகு அவரை அந்தி மாலையில் அவர் வீட்டில் சந்தித்தேன். வெல்ல முடியாத அவருடைய மன வுறுதியைக் கண்டேன்; ஒருவர் படித்துக் காட்டுவதை ஊன்றிக் கேட்டுக் கொண்டிருந்தார். எதிரே நிற்பது எவர் என்றுகூட அறிய முடியாத கண்பார்வைக் குறைவால், தாம் படிக்க முடியாததால் பிறரைக் கொண்டு படிக்கச் சொல்லும் வழக்கத்தை ஏற்படுத் திக் கொண்டார். கண்பார்வை இழந்த நிலையிலும் இந்தியர்

பிரச்னைகளைப் பற்றியும், உலக அரசியலைப் பற்றியும் மிகவும் தெளிந்த பார்வை பெற்றிருந்தார். சுதேச மித்திரனுக் காக நாள்தோறும் காலையில் இரு தலையங்கங்களை வாய் மொழியாகக் கூறி வருவதாகவும் குறிப்பிட்டார்.[50]

இவ்வாறு, துன்பங்கள் சூழ்ந்து நின்ற போதிலும், சுதேச மித்திரன் ஆசிரியர் பொறுப்பை நிறைவேற்ற அவர் காட்டிய அசைக்க முடியாத மனவுறுதி வியப்பிற்குரியது.

காந்தியடிகள் சந்திப்பு

தென்னாப்பிரிக்கத் தமிழர் கண்ணீரைத் துடைத்த 'மிஸ்டர் எம்.கே. காந்தி'யை, 'மகாத்மாவோ ஈஸ்வர அவதாரமோ' என்று 1912லேயே முன்னுணர்ந்து வியந்து எழுதிய ஜி. சுப்பிரமணிய ஐயரின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறக் காந்தியடிகள் நேரில் வந்து அவரைச் சந்தித்தார். காந்தியடிகள், 'ஜி.சு.'வை ஏப்பிரல் 20, 1915இல் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் 'ஜி.சு.'வின் வீட்டில் காலை 11 மணி அளவில் சந்தித்தார்.[51]

வி.எஸ்.எஸ். சாஸ்திரி, ஜி.ஏ. நடேசன் உடன் வந்தார்கள். இவர் கள் இருவரும் காந்தியடிகளின் தென்னாப்பிரிக்க அறப்போருக்குப் பேராதரவு தந்தவர்கள். சுதேசமித்திரனில் காந்தியடிகளைப் பாராட் டிய ஜி.சு., நேரிலும் தமது பாராட்டுதல்களை அன்று மன நெகிழ்ச்சி யுடன் சொல்லிக் கொண்டு வரும்பொழுது 'நானும் இருக்கிறேன் பாருங்கள்; கடும் நோயினால் துன்பப்படும் என்னால் நாட்டிற்கு மேற்கொண்டு தொண்டாற்ற முடியவில்லையே' என்று விழிகளில் நீர்பெருகிட உணர்ச்சிவசப்பட்டார் 'ஜி.சு.'

காந்தியடிகள் ஜி.சு.விற்கு ஆறுதல் கூறிக்கொண்டே வழிந் தோடிய நீரைத் தமது துணியால் துடைத்தார். கண்ணீரை மட்டு மல்ல, தொழுநோய்ப் புண்ணில் இருந்து வழிந்த நீரையும் துடைத் தார் காந்தியடிகள். 'தாங்கள் இந்த நாட்டிற்குப் போதிய அளவு தொண்டாற்றிவிட்டீர்கள்; மற்ற தலைவர்கள் தொடர்ந்து பாடு படுவார்கள்' என்றும் காந்தியடிகள் 'ஜி.சு.'வின் தொண்டின் சிறப் பைப் பாராட்டினார். இந்தச் சந்திப்பு விவரம் சுதேசமித்திரனிலும், வி.எஸ். எஸ். சாஸ்திரி எழுதியதிலும் கூறப்பட்டுள்ளது.

'ஜி.சு.' அமரராவதற்கு ஓராண்டிற்கு முன்பு காந்தியடிகள் குறிப் பிட்டதில் 'ஜி.சு.'வின் நாட்டுப்பணி ஒளிவீசுகின்றது. 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது அன்று இலக்கியமாகிவிட்டது.

குறிப்புகள்

1. 'கி.பி.1600 முதல் கி.பி.1947 வரை' (கட்டுரை: பெ.சு. மணி), மதுரை மாவட்ட சுதந்திரப் போராட்ட வரலாறு, தொகுப்பு: எஸ்.என். சோமயாஜுலு, 1980, ப.93
2. Ninteenth Century Press and the Development of Indian Nationalism, Prof. C.J. Nirmal, The Lajpat Rai Centenary Lectures, 1970 - 1971, Journal of the Madras University, Section - A, Humanities, June - July, 1970, University of Madras, P.40
3. A History of the Press In India, 1962, S. Natarajan, Asia Publishing House, Bombay, P.34
4. எஸ். நடராசனின் முற்கூறிய நூல், ப.32
5. Raja Rammohan Roy, 1988, Collet, fourth Edition, Edited by Biswas and Prabhat Chandra Ganguli, Calcutta, p.206
6. British policy and the Evolution of the vernacular Press In India, 1835-1878, Meraill Tilgamanboyce, 1975, Chanakya Publications, Delhi, P.31
7. மேற்காணும் நூல், ப.32
8. மேற்காணும் நூல், ப.40
9. எஸ். நடராசனின் முற்கூறிய நூல், ப.50
10. பேராசிரியர் நிர்மலின் முற்கூறிய ஆய்வுக்கட்டுரை, ப.54
11. மேற்காணும் கட்டுரை, ப.79
12. எஸ். நடராசனின் முற்கூறிய நூல், ப.50
13. முற்கூறிய சாணக்யா பதிப்பகம் நூல், ப.94
14. மேற்காணும் நூல், ப.103
15. பேராசிரியர் நிர்மலின் மேற்கூறிய கட்டுரை, ப.87
16. தமிழகத்தில் பிரம்ம சமாஜம், 1992, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை 4, ப.169
17. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், இரண்டாம் பதிப்பு, 1978, பெ.சு.மணி, பூங்கொடி பதிப்பகம், ப.316

18. பாரத ஜன சபை, காங்கிரஸ் மகாசபையின் சரித்கிரம் முதல் பாகம், 1918, சி. சுப்பிரமணிய பாரதி, சுதேசமித்திரன் வெளியீடு, ப.4

19. 1916இல் ஜி. சுப்பிரமணிய ஐயர் அமரரானபோது பாடப் பெற்ற பத்து வெண்பாக்களில் ஒன்று, மறுவெளியீடு - குமரி மலர் , சனவரி 1972, ஆசிரியர்: ஏ.கே. செட்டியார், ப.60

20. ஞானபாநு, மாத இதழ், ஆகஸ்டு 1915, ஆசிரியர் சுப்பிர மணிய சிவா, ப.199

21. குமரிமலர், ஆகஸ்டு, 1977, ப.7

22. பேராசிரியர் நிர்மலின் முற்கூறிய கட்டுரை, ப.85

23. அரசியல்ஞானி அரங்கசாமி ஐயங்கார், ஆர். கிருஷ்ண மாச்சாரியார், அல்லயன்ஸ் கம்பெனி, ப.371

24. A Hundered Years of the Hindu, 1978, Rangaswami Parthasarathy, Kasturi and Sons Ltd., Madras, p.203

25. முற்கூறிய அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார் நூல், ப.384

26. ஜி.சுப்பிரமணிய ஐயரின் பேரன், வி. சுப்பிரமணியன், நேர்காணல், 11.10.1997

27. மேற்படி நேர்காணல்

28. பத்திரிகையாளர் பாரதியார், 1989, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், ப.220

29. பாரதியார் சகோதரர் அமரர் சி. விசுவநாதன் தொலைக் காட்சி உரை, 19.11.1981

30. விடுதலைப் போரில் தமிழகம், முதல் பாகம், 1982, டாக்டர் ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், ப.460

31. சுதேசமித்திரன் முன்னாள் ஆசிரியர் சி. சீனிவாசன் நேர் காணல், 29.9.1997

32. சுதேசமித்திரன், சனிக்கிழமை, சனவரி 8, 1921, ப.4

33. மறுவெளியீடு, 18.4.1979இல் ஜி. சுப்பிரமணிய ஐயர் 63ஆவது நினைவு நாளையொட்டி பெ.சு.மணி வெளியிட்டது

34. பாரதமணி, வார இதழ், சென்னை, ஆசிரியர் அமரர் கே.எஸ். வெங்கடரமணி, 17.9.1939

35. ஞானபாநு, ஆசிரியர் சுப்பிரமணிய சிவா, ஆகஸ்டு 1915, ப.199

36. சுதேசமித்திரன், நவம்பர் 9, 1906, ப.2

37. ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம், 1907, குருமலை சுந்தரம்பிள்ளை, சுதேசமித்திரன் அச்சுக்கூடம், ப.25

38. பாரதமணி, கே.எஸ். வெங்கடரமணி, மறுவெளியீடு, குமரி மலர், மே, 1975, ப.27-28

39. குமரிமலர், டிசம்பர், 1982

40. மகாகவி பாரதியார், தொடர் கட்டுரை, வ.ரா., காந்தி, ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம், 11.11.1933, ப.31

41. இந்தியா - வார இதழ், சென்னை, சி. சுப்பிரமணிய பாரதி, 13.10.1906

42. இந்தியா, 22.12.1906, ப.51

43. Hindu Weekly Review, December 10, 1962, p.16

44. G.O. No's 2573, 2574, Public Dep., Dated 9.12.1886, Tamil Nadu Archives

45. மறுவெளியீடு, குமரிமலர், மே, 1969

46. புண்ணியவான் காந்தி, முதல் பாகம், 1969, தொகுப்பு - ஏ.கே. செட்டியார், சுதேசமித்திரன் வெளியீடு, ப.XVII

47. The Hindu, 5.9.1908

48. The Hindu, 5.9.1908

49. A Hundred Years of the Hindu, p.143

50. மேற்படி நூல், ப.143

51. Letters to the Editor, The Hindu, 8.11.96, V. Subramanian (Grand son of 'G.S.')

விவேகசிந்தாமணி

1892

'விவேகசிந்தாமணி இதழ் தொடக்கம் முதல் இறுதி வரை சுவையாக அமைந்துள்ளது.'

— ஜி. யு. போப்

தனிப் பிரதி
விலை அணா 5.

"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

வருஷ சந்தா (முன்
பணமாக) ரூ. 3-8.

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். 4. | 1895ஆு ஆகஸ்டுமீ | இலக்கம் 4.

எரிமலைகள், வெந்நீர் ஊற்றுகள், ஆவிக்குண்டங்கள் முதலியன.

I.



ம் வசிக்கும் இப்பூமண்டலத்தில உள்ள அதிக அற்புதத்தையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கக்கூடிய அனேகவிதமான விசித்திரங்களில் எரிமலைகள் முதலியவையாவராலும் வியக்கத்தக்கவைகளாயிருக்கின்றன. எரிமலைகள் நமது இந்தியாவில் கிடையா. ஆனதுபற்றியே அவைகளின் காரண காரியங்களை அனேகர் அறியார்கள். இவ்வதிசயச்சிருஷ்டியை யாவரும் அறிந்துகொள்ளும்பொருட்டே இதை இவ்விடத்தில் விவரமாய் எழுதலாயிற்று.

எரிமலைகள்.

எரிமலைகளென்பவை: பூமியின் உட்புறத்தில் சில விடங்களில் அதிக உஷ்ணத்தால் உருகி நீராயிருக்கும் கற்குழம்பு, சாம்பல், நீராவி, புகை முதலானவைகளைத் தங்கள் சிகர மூலியமாய் வெளியே கக்கும் குணமுள்ள மலைகள். இவ்வித மலைகளுக்கு இங்கிலீஷ் பாஷையில் "வல்கானோ" (Volcano) என்று பெயர். ஐரோப்பாகண்டத்தில் இத்தாலியா தேசத்திற்கு தக்ஷிணத்தில் உள்ள சிசிலித்தீவில் [1] "எட்னா" என்னும் ஓர் எரிமலை உண்டு. இம்மலையின் உட்புறத்தில் பூர்வீக [1] உரோமர்களின் அக்கினி பகவானாகிய "வல்கன்" (Vulcan) என்பவருடைய உலைக்கூடமிருந்ததாகவும், அவர் உலையூட்டியபோதெல்லாம் அந்த மலை நெருப்பைக் கக்கியதாகவும் அவ்விடத்திய பூர்வீக ஜனங்கள் அபிப்பிராயப் பட்டிருந்தார்கள். இது காரணம்பற்றியே எரிமலைகளுக் கெல்லாம் 'வல்கானோ' என்று பெயர் வரலாயிற்று.

அவற்றின் உற்பத்தி.

இவ்வுலகமானது ஒரு காலத்தில் சூரியன் இப்போது எவ்வளவு உஷ்ணமாயிருக்கிறதோ அவ்வளவு உஷ்ணமாயிருந்ததாகவும், நாளாவட்டத்தில் பூமியின் மேற்புறம் குளிர்ச்சியடைந்து கொண்டுவருவதாகவும் [2] புவனஉறுப்பிலக்கண சாஸ்திரிகள் சிலர் சொல்லுகிறார்கள். இப்போது அங்கங்கே பல விடங்களில் காணப்படும் அகோரமான நெருப்பைக் கக்கும் எரிமலைகளும், வெந்நீர் ஊற்றுகளுமே பூமியின் உட்புறத்தில் இருக்கும் உஷ்ணத்திற்கு அடையாளமாகக் காணப்படுகின்றன. மேலும் நாம் பூமியின் அடிப்புறத்தில் போகப்போக அதிக வெப்பமாயிருக்குமென்பது சுரங்கங்களில் வேலைசெய்து அப்பியாசப்பட்டவர்கள் சொல்ல நன்கே விளங்கும். இவ் வெரிமலைகளல்லாது பூமிக்குள் இருக்கும் விசித்திரக் காட்சிகளை யூகித்தறிந்துகொள்ள வேறு முக்கியமான சாதனங்கள் கிடையா. எரிமலையானது சாதாரணமாய் இப்பிரபந்தத்தின் முகப்பில் சித்திரித்துக் காட்டப்பட்டிருக்கும் [3] "எக்லா"

[1] Mount Ætna.

[1] Romans. [2] Geologists. [3] Mount Hecla in Ireland,

விவேகசிந்தாமணி

மா.ரா. அரசு

சாமிநாதையர்...

சாமிநாதையர் என்றதுமே நினைவுக்கு வருபவர் தமிழ் தந்த உ.வே. சாமிநாதையரே. இலக்கியத் துறையில் சாதனை நிகழ்த்திய சாமிநாதையரைப் போன்று இதழியல் துறையில் வரலாறு படைத்த சாமிநாதையர் ஒருவர் உண்டு.

அவர் உ.வே.சா; இவர் சி.வி.சா.

இவர் நடத்திய இதழைப் பற்றி அறியும்முன், இவருடைய வாழ்க்கை பற்றி அறிவது அவசியமாகும். அது இவருடைய இதழியல் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுதற்குப் பெரிதும் துணை செய்யும்.

சி.வி. சாமிநாதையர் – அறிமுகம்

இவர், 1863 இல் திருவையாற்றில் பிறந்தவர். வை. வேங்கட ராம ஐயரின் மகன்; முன்னோரர் வாழ்க்கை வளமான சூழலில்; தந்தை யின் வாழ்க்கை குந்தித் தின்று கரைத்த நிலையில்; சாமிநாதையரின் வாழ்வின் தொடக்கம், வசதிக்கும் வசதியின்மைக்கும் இடையேயான ஊசலாட்டம். தாங்கள் கிராமச் சூழலில் வாழ்ந்தாலும், தம்பிள்ளை கல்விச் சூழலில் வளர்ந்து சிறக்க வேண்டும் என்று விரும்பினர் பெற்றோர். விளைவு, சாமிநாதையருக்குக் கல்வி - உயர்கல்வி - கல்லூரிக் கல்வி வாய்த்தது. இளமை முதலே நெஞ்சில் ஊற் றெடுத்த தமிழ் ஒரு புறமும், அன்றைய சூழல் விதைத்த ஆங்கிலம் ஒரு புறமுமாக இரு மொழித் தகுதியை அவருள் வளர்த்தன.

கல்வி வாழ்க்கை குடந்தையில்; இதழியல் வாழ்க்கையோ சென்னையில். வேலை தேடி வரவில்லை சென்னைக்கு; வேறு வேலையாகச் சென்னைக்கு வந்தவரைக் காலம் வரவேற்றது. கால ஓட்டத்தில் கரைந்து போகாமல், காலத்தை நிறுத்தும் - தாம் வாழ்ந்த காலத்தை வரலாற்றில் நிறுத்தும் வல்லமை படைத்தவர் என்பதை உணர்ந்த காரணத்தால் காலம் இவரை வரவேற்றது. சுதேசமித்திரன் வேலை தேடிவந்தது. பத்து ஆண்டுகள் மித்திரனில் பணி; இடையில் பொதுப்பணியில் ஈடுபாடு; 'உபயோகமான அறிவைப் பரவச்' செய்வதில் ஆர்வம். 'உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை' என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயல்பட்டார். அந்த அமைப்பின் அங்கமாகத் தொடங்கப்பட்டதுதான் விவேகசிந்தா மணி. அமைப்பும் இதழும் கால நடையினில் வளர்ந்து செழித்தன.

காலத்துக்குச் சிறகு முளைத்தது. இயல்பான வாழ்க்கையில் ஒருதடை; சற்றும் நினையாத அதிர்வு. இவர் பணம் போட்டு வைத் திருந்த வங்கி (அர்பத் நாட்) திவாலாகியது. உழைத்துச் சேர்த்த பொருளில் பெரும் பகுதியை அந்த வங்கி விழுங்கியது. இளம் வயதிலேயே தத்துவச் சிந்தனைகளில் தோய்ந்த மனம் என்பதால், அந்தப் பேரிழப்பைத் தாங்கி நிமிர முடிந்தது; நிமிர்ந்து இயல்பாகச் செயல்பட முடிந்தது.

முன்னினும் முனைப்பாகத் தம் பணிகளில் ஆழ்ந்து போனார். என்றாலும், இளமை முதல் ஆன்மிகத்தில் ஊறித் திளைத்த மனம், வேதாந்த வித்தாக இவரை மாற்றியது. இயக்கம், இதழ் இரண்டி லிருந்தும் மனம் விடுபட்டது; இதழ், மூத்த மகனான சதானந்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. உலக பந்தங்களிலிருந்து விடுபட்ட மனம் பேரின்பத்தில் இணைந்து மகிழ்ந்தது. 23.1.1930இல் சி.வி. சாமி நாதையரின் வாழ்வு நிறைவுற்றது.

சுதேசமித்திரன் வாழ்க்கை

ஏறக்குறைய பத்தாண்டுகள் (1885-1895) சுதேசமித்திரனின் ஆசிரியர் பொறுப்பில் இருந்து அதன் தொடக்க காலப் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக அமைந்தவர் சி.வி. சாமிநாதையர். சுதேச மித்திரனில் இவர் ஆற்றிய பணிகளும் பெற்ற அனுபவங்களுமே விவேகசிந்தாமணியைத் தொடங்கி நடத்தவும், அதன் வழி, சாதனை கள் நிகழ்த்தி வரலாறு படைக்கவும் முதன்மைக் காரணமாயின.

சுதேசமித்திரனில் தாம் பணியில் சேர்ந்த விதத்தைச் சாமிநாதை யரே தெரிவித்துள்ளார்:

> ஏப்பிரல் 1885 இல் சென்னை வந்தேன்; சுதேசமித்திரனில் ஆசிரியனாக அமர்த்தப் பெற்றேன்..... வேறு ஒரு காரணம் பற்றிச் சென்னைக்கு வர நேர்ந்த இடத்தில் பத்திரிகாசிரியர் வேலை வலுவில் கிடைத்தது.[1]

சுதேசமித்திரனில் பத்து ஆண்டுகள் பணியாற்றிய தம் பழைய நினைவுகளை ஜி. சுப்பிரமணிய ஐயர் மறைவை ஒட்டி வெளியிட்ட இரங்கல் உரையில் குறித்துள்ளார் சாமிநாதையர்:

> சுதேசமித்திரனை நடத்துவதில் அவருக்கு உதவியாக அமர்ந்து 1885 ஆம் வருஷம் முதல் பத்து வருஷத்துக்கு அவ்வேலை யில் இருந்து உழைத்துத் தேறி அதன்பின் 'விவேகசிந்தாமணி' கைசோர்ந்து போகாதபடி பார்க்க வேண்டி, அவ்வேலையை விட்டு இதற்கே உழைத்துவரத் தீர்மானித்தோம்.[2]

17-1-1908 இல் சென்னையில் விருதை சிவஞானயோகியின் தலைமையில் நடைபெற்ற சுதேசமித்திரனின் வெள்ளிவிழா நிகழ்ச்சி யில் அதன் தோற்றம், வளர்ச்சி, அன்றைய நிலை ஆகியவை பற்றி நிகழ்த்திய சொற்பொழிவில், அதன் ஆசிரியரும் உரிமையாளரு மாகிய ஜி. சுப்பிரமணிய ஐயர், சி.வி. சாமிநாதையருக்குச் சுதேச மித்திரனின் வளர்ச்சியில் இருந்த பங்கைப் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்:

> எனக்கு இந்து, சுதேசமித்திரன் என்ற இரண்டு பத்திரிகைகளுக் கும் விஷயமெழுதி அவைகளை ஒரே காலத்தில் கவனித்து நடத்த முடியாததினால், இதோ என் எதிரிலிருக்கிற சி.வி. ஸ்வாமிநாதய்யர் அவர்களிடம் (இப்போது விவேகசிந்தாமணி பத்திராதிபர்) சுதேசமித்திரன் வேலை ஒப்புவிக்கப்பட்டு அவரே பார்த்து வந்தார்.[3]

தொடக்க கால சுதேசமித்திரனின் வாழ்விலும் வளர்ச்சியிலும் சி.வி. சாமிநாதையருக்கு இருந்த பெரும் பங்கை, அதன் உரிமை யாளரும் பின்னாளில் அதன் ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றுச் செயல் பட்டவருமான ஜி. சுப்பிரமணிய ஐயரின் வாய்மொழிச் சான்று தெளிவாகப் புலப்படுத்தும்.

ஜி.சுப்பிரமணிய ஐயர் வாழ்ந்த காலத்திலேயே, புகழின் உச்சி யில் அவர் இருந்த அந்த நாளிலேயே அவருடைய வாழ்க்கை வர லாற்றை எழுதி வெளியிட்டவர் குருமலை சுந்தரம்பிள்ளை. அவர், தம்முடைய நூலில், ஜி. சுப்பிரமணிய ஐயர் சுதேசமித்திரனின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு முன்பு அதாவது, 1898 வரையில் அது எப்படி இயங்கியது என்பதைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

> மித்திரன் தொடங்கப்பட்ட காலம் முதல், இந்துவை விட்டுப் பிரிந்த காலமாகிய 1898 ஆம் வருஷம் வரை அதற்கு ஜி. சுப்பிரமணிய ஐயர் பெயரளவில் பத்திராதிபராய் இருந்தார் அன்றி, அதில் உண்மையாய் எழுதி வந்தவர்கள் உப-பத்திராதி பர்களே ஆவர்.[4]

இதுவரையில் அறிந்த செய்திகள், தொடக்ககால சுதேச மித்திரனின் வரலாற்றில் சி.வி. சாமிநாதையர் பெறும் இடத்தை உணர்த்தவல்லன.

'புதிய விழிப்பின் முன்னோடி (ஜி. சுப்பிரமணிய ஐயர்)' என்னும் நூலில் இடம் பெற்றுள்ள குறிப்பு ஒன்று இங்குச் சுட்டத்தக்கது.

> 1886இல் சென்னை அரசாங்கத்தின் பத்திரிகைத் துறை மொழி பெயர்ப்பாளர் திரு சி.டி. மாக்லீன் என்பவர் சுதேசமித்திரன் தலை யங்கங்களை மூன்று வகைகளாகப் பிரித்து, சுதேசமித்திரன் ராஜத் துரோகத்தை வளர்ப்பதாகக் குற்றம் சாட்டினார். தமிழில் அரசியல் அறிவை வளர்க்க ஜி. சுப்பிரமணிய ஐயர் பாடு பட்டதை மேலே காணும் தலையங்கங்களின் பகுப்புமுறை எடுத்துக் காட்டுகிறது.[5]

நூலாசிரியர் தெரிவிக்கும் இக்கருத்து - 1886இல் தயாரிக்கப் பட்ட அறிக்கை கூறும் தலையங்கங்களோடு ஜி. சுப்பிரமணிய ஐயரைத் தொடர்புபடுத்தியிருப்பது - பொருத்தமற்றது என்பதை, ஜி. சுப்பிரமணிய ஐயரே கூறிய, 'சி.வி. ஸ்வாமி நாதய்யர் அவர் களிடம் சுதேசமித்திரன் வேலை ஒப்புவிக்கப்பட்டு அவரே பார்த்து வந்தார்' என்ற தகவலும், 'அதில் உண்மையாய் எழுதி வந்தவர்கள் உப-பத்திராதிபர்களே ஆவர்' என்னும் குருமலை சுந்தரம் பிள்ளை எழுதியுள்ள செய்தியும் தெளிவாக்குகின்றன.

வருங்காலத்தில் சுதேசமித்திரனின் வரலாறு எழுதப்படும் போது அதில், ஜி. சுப்பிரமணிய ஐயரின் காலகட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, சி.வி. சாமிநாதையர் ஆசிரியராக இருந்த காலம் (1885-1895) என்றும், ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்த காலம் (1898-1915) என்றும் தனித்தனியே எழுதப்பட வேண்டும். அப்போதுதான் 1882 முதல் 1915 வரையிலான - ஜி. சுப்பிரமணிய ஐயர் கால கட்டத்துச் சுதேசமித்திரனின் வரலாறு முழுமையாகவும் முறையாகவும் அமையும்.

சுதேசமித்திரனில் ஆசிரியராக இருந்த காலத்தில், சி.வி. சாமி நாதையர் ஆற்றிய பணிகள், எழுதிய செய்திகள் (தலையங்கங்கள், கட்டுரைகள், பிற செய்திகள்) அறியப்பட வேண்டியன. அவற்றை

அறிய முடிந்தால், சாமிநாதையரின் தொடக்ககால இதழ் - இதழி யல் பற்றிய கருத்துகளை அறிய முடியும். அப்படி அறிவது இதழா சிரியர் என்ற நிலையில் இவருடைய வளர்ச்சியை விவேகசிந்தா மணியில் கண்டறிய உதவும்.

இதழ் தொடங்குவதற்கான சூழல்

தங்கள் சமயத்தைப் பரப்புவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு 'சமயத் துண்டுப் பிரசுர சங்கம் (Religious Tract Societies) என்ற பெயரில் கிறித்துவ சமயம் சார்ந்த சங்கங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் தோன்றின.

சென்னை சமயத்துண்டுப் பிரசுர சங்கம்

1818[7] இல் சென்னையில் தொடங்கப்பெற்ற இந்த அமைப்பே தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதன்மையானதாகக் கருதப்படு கிறது. கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்காகவும் அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதற்காகவும் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனத்தில் முதல் செயலாளராக இருந்து பணியாற்றியவர் ரேனியல் பாதிரியார் ஆவார்.[8]

இந்து இலக்கியச் சங்கம்[9]

1830இல் சென்னையில் தோன்றிய இந்த அமைப்பு அரசியல், சமூகம் சார்ந்த நிகழ்வுகளை - அவற்றால் ஏற்படும் சிக்கல்களை விவாதிப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்தப் பின்னணியில் தோன் றிய அமைப்புகளில் இதுவே முதலாவதாகக் கருதப்படுகிறது.[10]

திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கம்[11]

சென்னையில் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரத்தில் ஈடுபாடு கொண்ட அமைப்புகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இச்சங்கம் செயல்பட்டது. மீர் இப்ராகிம் அலி என்பவரால், 1868இல் இச்சங்கம் தொடங்கப் பட்டது. ஆங்கிலக் கல்வி கற்றோர் தம்முள் கலந்து இலக்கியங் களை விவாதிப்பதற்காகச் சங்கங்களை உருவாக்கத் தொடங்கிய காலகட்டத்தில் தோன்றியதே இச்சங்கம். 1874 முதல் இது இந்து பட்டதாரிகள் பொறுப்பில் இயங்கத் தொடங்கியது. 1880 முதல் திருவல்லிக்கேணி இலக்கியச்சங்கம், இலக்கியச் சிந்தனைகளை விடுத்து அரசியல், சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளில் நாட்டம் செலுத்தியது.[12]

சென்னை இந்து சமூகச் சீர்திருத்த சங்கம்[13]

பெண்கல்வி, திருமணச் சீர்திருத்தம், குடும்பம், பழக்க வழக்கங்களில் சீர்திருத்தம், சாதிகளை ஒன்றாக்குதல் முதலான குறிக்கோள்களுடன் 9.11.1892இல் தொடங்கப்பட்டது சென்னை இந்து சமூகச் சீர்திருத்த சங்கம். ஜி. சுப்பிரமணிய ஐயர், வீரேசலிங்கம் பந்துலு, சங்கரன் நாயர் முதலியோர் இணைந்து பணியாற்றிய களம் இச்சங்கம்.[14]

உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை

ஜி. சுப்பிரமணிய ஐயரும் மு. வீரராகவாசாரியாரும் இணைந்து இச் சபையைத் தோற்றுவித்தனர். புரூகம் பிரபு இங்கிலாந்தில் அப்போது ஏற்படுத்தி நடத்தி வந்த 'உபயோகமான அறிவைப் பரவச் செய்வதற்கான சங்கம்' (Society for the Diffusion of useful knowledge) என்பதை அடியொற்றி நண்பர்கள் இருவரும் சென்னையில் இச்சங்கத்தைத் தொடங்கினார்கள்.[15] அரசியல் அறிவைப் பரப்புவதற்காகத் திருவல்லிக்கேணியில் இயங்கி வந்த இச் சபையின் சார்பில், 'சுய அரசாட்சி வினா-விடை' என்னும் சிறு வெளியீடு ஜி. சுப்பிரமணிய ஐயரால் 1883இல் இயற்றப்பெற்று விலை இன்றி, அன்பளிப்பாக வழங்கப்பட்டது.[16] வரவர ஊக்கம் குறைந்து சபை படுத்துக்கொண்டு ஒரே நித்திரையாகத் தூங்கிப் போய் விட்டது.[17]

அறிவைப் பரவச் செய்யும் சபை

அறிவைப் பரவச் செய்ய வேண்டும் என்ற பித்துப் பிடித்து அதுவே சிந்தனையாய் இருந்தவர் சி.வி. சாமிநாதையர். இவர் சென்னை வருவதற்கு முன்பு, இங்குப் பல்வேறு நோக்கங்களுடன் இயங்கிக் கொண்டிருந்த பொது அமைப்புகளே மேலே கண்டவை. அவை அனைத்தும் கால ஓட்டத்தில் கரைந்து போன நிலையில், சி.வி. சாமிநாதையர் தனியொருவராக முனைந்து அறிவைப் பரவச் செய்வதற்காகப் புதியதொரு இயக்கத்தைத் தொடங்கினார்.

'அறிவைப் பரவச் செய்வதற்கான ஏற்பாடு' என்ற தலைப்போடு விவேகசிந்தாமணியின் முதல் இதழில் (ப.32) வெளிவந்த அறிக்கையின் சில பகுதிகள் அறியத்தக்கன:

> சென்னை திருவல்லிக்கேணியில் தபாலாபீசுக்கு அருகில் மார்ச்சு மாதம் முதல் தேதியிலிருந்து 'அறிவைப் பரவச் செய்யும் ஏஜன்சி அல்லது காரிய விசாரணைச் சங்கம்' என்று ஒரு சபை ஏற்படுத்தி

இருக்கிறோம். சுருக்கமாகத் தமிழில் அதற்கு, 'அறிவைப் பரவச் செய்யும் சபை' என்று பெயர் கொடுத்திருக்கிறோம்.

இச்சபையின் நோக்கங்கள்

நாட்டுப் புறங்களில் பத்திரிகைகளைப் பரவச் செய்து அது மூல மாக ஜனங்களுக்குப் படிப்பில் பிரியமுண்டாகும்படி செய்ய வேண்டும் என்பதும் கிராமாந்தரங்களிலுள்ள ஜனங்கள் படிப்பதில் பிரியம் வைத்து பத்திரிகைகளையும் சிறு புஸ்தகங்களையும் வாசிக்க ஆவல் கொண்ட பின் அவைகள் சுலபமான விலைக்கு அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்து பத்திரிகைகளாலும் சிறு புஸ்தகங்களாலும் ஜனங்களுக்கு அறிவையூட்டி, விவேகத்தை விசாலிக்கச் செய்து பொது விஷயங்களில் அவர்களுக்கு அக்கறையுண்டுபண்ண வேண்டும் என்பதும் இன்னும் பல விதத்திலும் கிராமாந்திர ஜனங்கள் நிலமையை அவர்கள் சொந்த முயற்சியால் விருத்திக்குக் கொண்டுவர என்ன என்ன வழி வகை களுண்டோ அவைகளை யெல்லாம் தேட வேண்டும் என்பதும் ஆகிய இவையே.

'அறிவைப் பரவச் செய்யும் சபை' என்ற பெயரில் இவரால் தொடங்கப் பெற்ற அமைப்பு, கால் நூற்றாண்டுக்கு மேல் நாட்டுப் புறங்களில் அறிவை - கல்வியைப் பரவச் செய்வதில் முன்னின்று உழைத்தது. ஓர் இயக்கமாகச் செயல்பட்டு, தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் தடம் பதித்தது.

விவேகசிந்தாமணி – வரலாறு

'அறிவைப் பரவச் செய்யும் சபை'யின் நோக்கங்களை நிறை வேற்ற மாத இதழ் ஒன்று தொடங்க முடிவு செய்யப்பட்டது. விவேக சிந்தாமணி பிறந்தது. இதழைத் தொடங்கிய காலத்தில் சி.வி. சாமிநாதையர் சந்தித்த அனுபவங்கள் கசப்பானவையாக இருந்தன. சுற்றி நின்று கேலி பேசியவர் ஒரு புறம்; எட்டி நின்று சூது புரிந்தவர் மறுபுறம் என்று நல்லது செய்ய புறப்பட்ட சி.வி.சா.வுக்குத் துன்பம் இழைக்க கூட்டம் ஒன்று காத்திருந்தது. தம் பொது வாழ்வின் பிற்பகுதியில் தாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்துத் தம் நினைவலைகளைப் பதிவு செய்துள்ளார் சி.வி.சா. அவற்றுள் சில எண்ணிப் பார்க்கத்தக்கன:

அறிவைப் பரவச் செய்வதற்கான ஏற்பாடு தயார் செய்து ஏகாக்ர சிந்தையோடு அதற்கு உழைத்து வருகையில், பலரும் என்னைப் பித்தன் என்றும், பேயன் என்றும் பரிகாசம் செய்தது இன்னும் நன்றாக ஞாபகத்திலிருக்கிறது[13]

துன்பச் சூழலின் இடையே - இடிபாடுகளின் இடையே எங்கோ, தொலைதூரத்தில் ஒருவர் நல்லவராக - சி.வி.சா.வின் புது முயற்சி கண்டு வாழ்த்துபவராக - தூண்டி ஊக்குபவராக அமைந்தார். சி.வி. சா. கூறுகின்றார்:

> சர் முத்துசாமி அய்யர் ஒருவர் மட்டுமே எடுத்தும் அதைப் பூர்ண மத அங்கீகாரத்தோடு ஏற்றுக் கொண்டு அதை நடத்த வேண்டியது அவசியம் என்று சொல்லி இடைவிடாது உற்சாகப் படுத்தி வந்தார்.[19]

தடைபல கடந்து விவேகசிந்தாமணி வெள்ளி விழாக் கண்டது. இருபத்தைந்து ஆண்டுகள் (1892-1917) தாமே பொறுப்பேற்று நடத்திய விவேக சிந்தாமணியைத் தம் மூத்த மகனும் புகழ் மிக்க இதழாசிரியராக விளங்கியவருமான சதானந்தரிடம் ஒப்படைத்தார். 'சில அசந்தர்ப்பங்களால் சதானந்தர் நடத்த முடியாமல் போகவே, 1920ஆம் வருஷத்தில் விவேகசிந்தாமணி நின்றுவிட்டது.'[20]

இதழின் அமைப்பும் செய்திகளும்

திங்கள் இதழ்; இன்றைய அமுதசுரபி இதழின் அளவினது; 32 பக்கங்கள்; அறிவைப் பரவச் செய்யும் சபையின் வெளியீடாக வந்தது.

நாட்டுப்புறங்களில் கல்வியைப் பரப்புவதே முதன்மையான நோக்கம். அது தொடர்பான கட்டுரைகளும் செய்திகளும் பலவாக இடம் பெற்றுள்ளன. அறிவியல் தொடர்பான கட்டுரைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. 'புஷ்பங்களும் அவற்றின் தொழிலும்', 'மரங்களின் வளர்ச்சி', 'மரத்தின் கனி கீழே விழுவதேன்', 'சந்திரனைப் பற்றிய சில விஷயங்கள்', 'கடற் காற்று, தரைக் காற்று: இவற்றின் உற்பத்தி விவரம்' முதலான பல கட்டுரைகள் தகவல் களஞ்சியங்களாக உள்ளன.

இவற்றுடன் மாணவர்களை நெறிப்படுத்தும் நோக்கில், நீதி போதனைகளாகப் பல செய்திகள் இதழ்தோறும் இடம் பெற்றுள்ளன. 'மாணவர் பக்கம்' என்று தனிப்பகுதி அமைந்துள்ளது. அதில் மாணவர்க்குப் பயன் தரும் வகையில் பல்வேறு துறை சார்ந்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. சில தலைப்புகள். 'தண்ணீர் சொல்லிய தன் வரலாறு', 'லட்சியத்தில் கண்ணாயிரு', 'உண்மையில் பெருமைக்கு உரியவர் யார்?', 'உபாத்தியாயர் பக்கம்' என்ற பகுதி ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பலப்பல தகவல்களை உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. மகளிர் பகுதி, 'மாதர் மஞ்சரி' என்ற தலைப்பில்

இடம்பெற்றுள்ளது. இதில் பெரும்பாலான கட்டுரைகள் சி.வி. சாமிநாதையரால் எழுதப்பட்டுள்ளன. சாதனைகள் நிகழ்த்தி வாழ்வில் மேன்மை அடைந்த பெண்மணிகளின் வீர, அறிவார்ந்த, போற்றுதலுக்கு உரிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலகோணங்களில் எடுத்துக் காட்டப்படட்டுள்ளன.

அந்நாளில் புகழ் பெற்று விளங்கிய தமிழறிஞர் பலரும் விவேக சிந்தாமணியில் எழுதியுள்ளனர். திருமணம் செல்வக் கேசவ ராயர், வி.கோ.சூ., பி. ஆர். இராஜம் ஐயர், அ. மாதவையா, தி. த. சரவணமுத்துப் பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. சுப்பிரமணிய ஐயர், தி.த. கனக சுந்தரம் பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் நாவல் வரலாற்றில் தலையாய இடத்தைப் பெற்றுள்ள 'கமலாம்பாள் சரித்திரம்' விவேக சிந்தாமணியில் தொடராக வந்த நாவலாகும். இதுவே தமிழில் வெளிவந்த முதல் தொடர்கதையாகக் கருதப்படுகிறது. இதை இராஜமையர் விவேக சிந்தாமணியில் 1893 பிப்பிரவரி முதல் எழுதத் தொடங்கினார். முதல் இரண்டு இதழ்களில் 'அநியாய அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்' என்ற தலைப்பிலும், மூன்றாவது இதழிலிருந்து இறுதிவரை 'ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்' என்ற தலைப்பிலுமாகத் தொடர்ந்து வெளிவந்து 1895 சனவரியில் நிறைவுற்றது. 1896இல் நூல்வடிவில் விவேகசிந்தாமணி வெளியீடாக வந்தது.[21]

அ. மாதவையா 'சாவித்திரி' என்ற பெயரில் ஒரு புதினத்தை 1892 சூன் இதழில் தொடங்கினார்; டிசம்பர் 1892 வரையில் வெளிவந்த அந்தத் தொடர் அத்துடன் நின்று விட்டது. இதன் காரணம் அறியக்கூடியதாக இல்லை. இத்தொடர் பின்னால் 'முத்து மீனாட்சி' என்ற பெயரில் 1903இல் வெளிவந்தது.[22]

தமிழ்ப் புலவர் பலரின் வரலாறு .வி.கோ. சூரிய நாராயண சாத்திரியால் எழுதப்பட்டுள்ளது. அவர் மறைவிற்குப் பிறகு அவை தொகுக்கப்பட்டு, 'தமிழ்ப் புலவர் சரித்திரம்'[23] என்ற பெயரில் நூல் வடிவம் பெற்றன.

'தமிழ் மொழியை வளர்த்தல்' (தி. லட்சுமண பிள்ளை), 'தமிழ் பாஷை' (தி.த. சரவண முத்துப்பிள்ளை), 'திராவிட சப்த தத்துவம்' (சேஷகிரி சாஸ்திரி) முதலியன குறிப்பிடத்தக்க சில கட்டுரைத்

தொடர்கள். வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் 'சுவர்க்க நீக்கம்' (மில்டனின் பேரடைஸ் லாஸ்டின் தமிழாக்கம்) தொடராக வெளி வந்துள்ளது. தாகூரின் கட்டுரைகள், கவிதைகள் சிலவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

நூல் மதிப்புரைகள் பல இடம்பெற்றுள்ளன. அவற்றுள், அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியாரால் இயற்றப் பட்ட 'செய்யுள் இலக்கணம்' என்னும் நூலிற்கு வி.கோ.சூ: எழுதி யுள்ள மதிப்புரை குறிக்கத்தக்கது.[24]

'சிறுகதை' என்பதன் வடிவம் சரியாக உணரப்படாத காலகட் டத்தில் எழுந்த கதைகள் - தொடக்க காலக் கதைகள் பலவாக விவேகசிந்தாமணியில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் சில இலக் கியத் தரத்தோடு அமைந்துள்ளன என்று திறனாய்வாளர்கள் மதிப் பிடுகின்றனர்.

உருவத்தாலும், உள்ளடக்கத்தாலும், உணர்வுகளாலும் தனித் தன்மையோடு தன்னை வெளிப்படுத்திக் கொண்ட இதழ் விவேக சிந்தாமணி. நாட்டுப்புறக் கல்விக்காகவும், நகர்ப்புற இலக்கியத் திற்காகவும் வாழ்வியல் சார்ந்த ஆன்மிகத்திற்காகவும் முழுமை யாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இதழ் விவேகசிந்தாமணி. "சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பல தமிழ்ச் சஞ்சிகை களில் விவேகசிந்தாமணியின் சேவை தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற வேண்டும்."[25]

குறிப்புகள்

1. சி.வி. சாமிநாதையர், நாத - கீத நாமகள் சிலம்பொலி, ப.40
2. காலஞ்சென்ற ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர், விவேக சிந்தா மணி, ஏப்பிரல் 1916, ப.31
3. ஏ.கே. செட்டியார், புண்ணியவான் காந்தி, முன்னுரை, ப.XV
4. ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம், ப.25
5. பெ.சு. மணி, புதிய விழிப்பின் முன்னோடி ப.25
6. 1882-1884, 1896-1897 ஆகிய காலப் பகுதிகளில் சுதேசமித்திரனின் ஆசிரியர் பொறுப்பில் இருந்தவர் யார் என்பது தனியே ஆய்ந்து அறிய வேண்டிய செய்தியாகும்.

7. 29.9.1818 இல் இது தொடங்கப்பட்டது.
8. John Murdoch, Classified catalogue of Tamil Printed Books, p. 30
9. Hindu Literary Society
10. பெ.சு. மணி, புதிய விழிப்பின் முன்னோடி, ப.115
11. Triplican Literary Society
12. பெ.சு. மணி, இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப.349
    இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும், பக்.110-111.
13. Madras Hindu Social Reform Association
14. புதிய விழிப்பின் முன்னோடி, ப.128
15. சி.வி. சாமிநாதையர், முன்குறிப்பிட்ட நூல், ப.37
16. பெ.சு. மணி, வீர முரசு சுப்பிரமணிய சிவா, ப.12
17. சி.வி. சாமிநாதையர், முன் குறிப்பிட்ட நூல் ப.37
18. முன் குறிப்பிட்ட நூல், பக்.35-36
19. மேலது, ப.36
20. சா. நடராசன், 'சி.வி. சாமிநாதையர்' (கட்டுரை), இந்து நேசன் அனுபந்தம், 1936, ப.70
21. பி. ஆர். இராஜமையர், கமலாம்பாள் சரித்திரம் (முதற் பதிப்பின் பதிப்புரை), பக்.xii-xiii
22. பெ.கோ. சுந்தரராஜன், சோ. சிவபாத சுந்தரம், தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், ப.
23. வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், முதல் பதிப்பு 1933
24. ஏப்பிரல் 1983, பக். 393-394
25. பெ.கோ. சுந்தரராஜன், சோ. சிவபாதசுந்தரம், தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், ப.18

பயன்படுத்திய நூல்கள்

முதன்மை நூல் – விவேகசிந்தாமணி இதழ்கள்

துணை நூல்கள்

தமிழ் நூல்கள்

1. இராஜமையர், பி.ஆர், கமலாம்பாள் சரித்திரம், விவேக சிந்தாமணி வெளியீடு, சென்னை, 1930
2. சாமிநாதையர், சி.வி., நாத-கீத நாமகள் சிலம்பொலி, சென்னை, 1916
3. சுந்தரராஜன், பெ.கோ., சிவபாத சுந்தரம், சோ., தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறித்தவ இலக்கியக் கழகம், சென்னை, 1977
4. சுந்தரராஜன், பெ.கோ., சிவபாத சுந்தரம், சோ., தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், க்ரியா, சென்னை, 1989
5. சுந்தரம், குருமலை, ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம், சென்னை, 1907
6. சூரிய நாரராயண சாஸ்திரி, வி.கோ., தமிழ்ப் புலவர் சரித்திரம், மதுரை, 1968
7. செட்டியார், ஏ.கே., புண்ணியவான் காந்தி, சென்னை, 1977
8. மணி, பெ.சு., இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1978
9. மணி, பெ.சு., இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1990
10. மணி, பெ.சு., புதிய விழிப்பின் முன்னோடி, பூரம் பப்ளி கேஷன்ஸ், சென்னை, 1987
11. மணி, பெ.சு., வீரமுரசு சுப்பிரமணிய சிவா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984

ஆங்கில நூல்

Murdoch,J., Classified catalogue of Tamil Printed Books, Government of Tamil Nadu, Madras, 1968

இதழ்

இந்து நேசன், அனுபந்தம், 1936

லோகோபகாரி

1895

‘லோகோபகாரி மிக்க அபூர்வமும் சிறப்புமாய் அதற்கு முன்பு அவ்விதமான பத்திரிகையொன்றும் கிடையாதென்று சொல்லக் கூடியதாய் வெகு சிரேஷ்டமாக இருந்தது.’

– எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு

Registered No M. 15.

Subscription Annual { Foreign Rs. 3-0-0 / Inland Rs. 3-0-0

THE "LOKOPAKARI."

Rates of Advertisement Per month | One page 25 | 1 - column 10 | Half " 6 | Quarter " 3

A Tamil - Weekly, published every Monday.

லோகோபகாரி

சோமசேகரன்பேட்டை, சென்னை.

சோமவாரந்தோறும் பிரசுரமாகும்.

Liberty alone fits man for liberty.



[illegible]

பு—23] சென்னபட்டணம்—பிங்கள ஆடி 8உ (1917 ஜூலை 23உ) திங்கட்கிழமை. இ-30

[illegible]

லோகோபகாரி

பெ.சு. மணி

ஒரே பெயரில் தொடர்ந்தாற்போன்று ஐம்பத்தைந்து ஆண்டு களாகச் சென்னையில் இருந்து வெளிவந்த தமிழ் இதழ் 'லோகோப காரி'. வெளிவந்த இதழ்களின் பருவங்கள் மாறுபட்டிருந்தாலும் ஆசிரியர்களாக இருந்தவர்கள் வேறுபட்டிருந்தாலும் இதழ் வெளி யீட்டின் தொடர்ச்சி எண் ஒரே சீராக மாறுபடாமல் வெளிவந்த இதழ் லோகோபகாரியாகும்.

1895இல் வி. நடராஜ ஐயர் தோற்றுவித்த லோகோபகாரி, 1950இல் சாமிசிதம்பரனார் காலம் வரை வெளிவந்துள்ளதை அறிய முடிகின்றது. கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு லோகோபகாரி யின் காலகட்டங்கள் பின்வருமாறு பகுக்கப்படத்தக்கன:

வி. நடராஜ ஐயர்	1895 - 1906
பண்டிதை விசாலாட்சி அம்மாள்	1907 - 1910
கோ. வடிவேலு செட்டியார்	1911 - 1921
பரலி சு. நெல்லையப்பர்	1922 - 1941
பரலி சு. நெல்லையப்பர்	1943 - 1949
சாமி சிதரம்பரனார்	1949 - (?)

இவற்றுள் 1895 முதல் 1910 வரையில் வெளிவந்த இதழ்களின் படிகளில் ஒன்றுகூட கிடைக்கவில்லை. கோ. வடிவேலு செட்டியா ரின் இரண்டு அல்லது மூன்று படிகள் மட்டும் கிடைத்தன. பரலி சு. நெல்லையப்பரின் லோகோபகாரிதான் மிகுதியாகக் கிடைத் துள்ளது. சாமி சிதம்பரனாரின் லோகோபகாரியின் இரு இதழ்கள்

மட்டும் கிடைத்தன. இந்த நிலையில் அகச் சான்றுகளுடன் புறச் சான்றுகளைக் கொண்டு லோகோபகாரியின் வரலாற்றை ஓரளவு கட்டமைப்பு செய்ய முடிகின்றது.

வி. நடராஜ ஐயர் தமது லோகோபகாரியைப் பற்றிப் புறச் சான்றுகளாக விரிவாக விளக்கியுள்ளார். இவருடைய வாழ்க்கை குறிப்புகளைப் பற்றியும் விரிவாக அறிய முடியவில்லை. இவர் திருச்சி குளித்தலை அருகே மருதூரில் பிறந்தார். திருச்சியில் எஸ். பி.ஜி. கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். பி.ஏ. படிப்பில் தமிழில் உயர்தரமாய்த் தேறினார்.[1] சென்னை இந்து தியலாஜிகல் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இராமகிருஷ்ணர் இயக்க ஈடுபாடு

1898 ஏப்பிர ல் 1இல் இவருடைய 'ஞானத்திரட்டு' எனும் நூலின் இரண்டு பாகங்களிலும் உள்ள விளம்பர வாசகங்களில் லோகோபகாரியைப் பற்றிச் சற்று விரிவாக அறிய முடிகின்றது. நடராஜ ஐயர், சுவாமி விவேகானந்தரின் பேருரைகளில் நெஞ்சைப் பறிகொடுத்தவர். சுவாமிஜியின் பேருரைகள் பலவற்றைத் தமிழாக் கம் செய்து 'ஞானத்திரட்டு' எனும் தலைப்பில் இரு பாகங்களாக வெளியிட்டார். இந்த வெளியீடுகளுக்கு அக்காலத்தில் சென்னை இராமகிருஷ்ணர் மடத்தில் தலைவராய்த் திகழ்ந்த சுவாமி இராம கிருஷ்ணானந்தரின் அநுமதியையும் உதவியையும் பெற்றுக் கொண்டதாக முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஞானத்திரட்டு முதல் பாகத்தை அப்பொழுது டார்ஜிலிங்கில் இருந்த சுவாமி விவேகானந்தருக்கு அனுப்பி வைத்தார். சுவாமிஜி, 15.4.1898இல் நடராஜ ஐயருக்கு எழுதிய கடிதம் முழுமையாக இங்குத் தரப்பட்டுள்ளது.

> 'அன்பார்ந்த ஐயா,
>
> நிகழும் மாதம் 7 ஆம் தேதியன்று நீர் வரைந்து விடுத்த கடிதத் தையும் எனது உபன்யாசங்கள் சிலவடங்கிய ஞானத்திரட்டு புத்தகத்தையும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டேன். உண் மையாகவே நீர் பொதுவாய் தமிழ்பேசும் ஜனங்களுக்கும் முக்கியமாய் எனது பிரசங்கங்களைப் படிக்க விரும்பிய உமது பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கும் மிகப்பெரிய உபகாரம் செய்து இருக்கிறீர். நான் சொன்ன விஷயங்களைச் சகல ஜனங்களுக்கும் அறிய வேண்டுமென்பது என்னுடைய முக்கிய

கருத்து. சுதேச பாஷைகளில் என்னுடைய உபன்யாசங்களை மொழிபெயர்ப்பது தான் அதற்குத் தகுந்த வழி.

இவ்விஷயத்தில் நீர் மிகுந்த ஆவலுடன் முயற்சி செய்து எல்லோருக்கும் முதன்மையாய் எனது உபன்யாஸங்களைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக உம்மை நான் மிக மெச்சு கிறேன். பெருமையைத் தரத்தக்க உம்முடைய பிரயத்தனம் நன்றாகப் பலிக்குமாறு நான் கோருவதுடன் இக்கடிதம் மூல மாய் உமக்கு அனேக ஆசீர்வாதமும் செய்கிறேன்.

உமது உண்மையுள்ள,
விவேகாநந்தர்

சுவாமிஜியின் ஆங்கிலக் கடிதத்தை நடராஜ ஐயர் மொழி பெயர்த்து இரண்டாம் பாகத்தில் இணைத்துள்ளார். ஆங்கில மூலத் தையும் இணைத்துள்ளார்.

ஞானத்திரட்டைப்பற்றி, சைவ சித்தாந்த முரசாக ஒலித்த 'சித்தாந்த தீபிகை' எனும் ஆங்கில இதழும் (ஆசிரியர் ஜே. எம். நல்ல சாமிப் பிள்ளை) 1898 மே இதழில் பக்கம் 288இல் நூல் விமர் சனப் பகுதியில் பாராட்டுக்குறிப்பை எழுதியுள்ளது.

ஞானத்திரட்டு வழியே லோகோபகாரி வரலாறு

லோகோபகாரியின் அலுவலகம், சென்னை 176 தங்கசாலை வீதியில் இருந்தது.

பத்திரிகையின் தோற்றம், வெளியீடுகள் பற்றிப் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> 1895ஆம் வருஷம் டிசம்பர் முதல் வெளியாகி வரும் லோகோப காரி 96ஆம் வருஷத்தில் மாதம் மூன்று முறையாகவும், 97ஆம் வருஷத்தில் மாதம் நான்கு முறையாகவும் அதாவது வாரமொரு முறையாகவும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது.[2]

1932 சூலை 14இல் வெளிவந்த இதழில் 'லோகோபகாரி - நிறுவப் பெற்றது 1896' என்று காணப்படுகிறது.

'உள்ளூரில் 200 பேர்களும் வெளியூரில் 1700 பேர்களும் இப்பத்திரிகையை ஆதரிக்கும் கனவான்கள்' என்ற குறிப்பும் உள்ளது.

பத்திரிகையின் ஆசிரியரும், மானேஜரும் வி. நடராஜ ஐயரே ஆவார். வார இதழாக வெளிவந்த பொழுது எட்டு பக்கங்களைக்

கொண்டிருந்தது. 'விஞ்ஞாபனம்' எனும் தலைப்பில், 'கனம் பொருந்திய ஐயா' என்று தொடங்கி லோகோபகாரியைப் பற்றிக் கூறியுள்ளதைப் பின்வருமாறு ஆசிரியருடைய மொழியிலேயே வகைப்படுத்தலாம்:

1. லோகோபகாரியின் முதற் பக்கத்தில் எப்போதும் ஈசுவர பக்தியைப் பற்றிய விஷயங்களே எழுதப்படுகின்றன. அதன் பின் பழமொழிகளை உபயோகித்து அவைகட்கிணங்க நற் சமாசர்ரங்களும், ஸாரமான கதைகளும் வரையப்படு கின்றன.

2. பெயருக்கேற்றபடி உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் பொதுவாய், சகல மதஸ்தர்களுக்கும் இன்பமாய் எல்லா ஜாதியர்களுக்கும் ஏற்றதாய் எல்லா வர்த்தமானங்களும் இருக்கப் பெற்றதாய், பிற மத தூஷணையின்றிச் சொல் நயம், பொருள் நயம் தோன்ற எழுதப்படுகிறது.

3. லோகோபகாரியின் சொந்தக்காரராகிய அடியிற்கையொப்ப மிட்டிருக்கிறவரே அதன் ஆசிரியராகவிருக்கிறார். இதனால் தான் அப்பத்திரிகை யாதொரு இடையூறுமின்றி நடந்து வரு கின்றது. 'உடையவன் கண்ணோடங்கே பயிர் அழியாதே' என்று பழமொழியுண்டே. வருஷ சந்தா மூன்று ரூபாய்.

4. லோகோபகாரி ஏற்பட்டு மூன்று வருஷம் முடிந்து நாலாவது வருஷம் பிறக்கிறது. இதைத் தற்காலம் 1900 கனவான் கள் முன்பணம் கொடுத்து ஆதரிக்கின்றனர். அனேக பண்டிதர் களும் கல்விமான்களும் விஷயமெழுதி வருகின்றனர்.

5. 'முனைபுகு சேவகன் முனிந்தார்ப்பது போற் கசடறக் கற்ற கல்வியாற்றலில் தன்னைப் புகழத் தகுமெனச் சாற்றினர்' என்றபடி எங்களால் வெளியாகும் லோகோபகாரி பத்திரிகை யின் மேன்மையைப் பற்றி நாங்களே சொல்வதைத் தற் புகழ்ச்சி என்று நினைக்காமலும், அதனால் அசூயை கொள்ளாமலும் இருக்கக் கோருகிறோம்.

விளம்பரத்தின் மற்றொரிடத்தில், 'இப்பத்திரிகை அவசியமா?' எனும் கேள்வி எழுப்பப் பெற்றுப் பின்வரும் பதில் தரப்பட்டுள்ளது:

> ஆம், அவசியமே. சென்னை 22 ஜில்லாக்களே. நாகரீக ஜனங்கள் வசிப்பது தமிழ் ஜில்லாக்களே. அநேக மாயிரம் கிராமங்களில் ஊர்ப் பெரியதனக்காரர்கள், மிராசுதாரர்கள் தமிழ்ப் பாஷையை

> எழுதவும் படிக்கவும் கூடும். அவர்களின் அநேகர்கள் பண்டித சிகாமணிகளாவுமிருக்கிறார்கள். ஆனாலும் இங்கிலீஷ் பாஷை யறியாதவர்கள் அநேகர்கள். அறிந்தவர்களிருந்தாலும் இங்கிலீஷ் பத்திரிகைகள் வாங்குவது பிரயாஸம். இங்கிலீஷ் தெரிந்த பிரபுக்கள் இங்கிலீஷ் பத்திரிகைகளெல்லாம் வாங்கிப் படித் தாலும் தாங்கள் மட்டும் ஆனந்தப்படுவார்களே தவிர இதரர் களுக்கு அவ்விஷயங்களைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல் லுவதற்கு அவர்களுக்கு அவகாசமிராது. இந்த லோகோபகாரி யின் வருஷ சந்தா சொற்பமாயும் இப்பத்திரிகை இங்கிலீஷ் பத்திரிகைகள் எல்லாவற்றிலுமுள்ள சமாசாரங்களையும் தன் னிடத்திலிருந்தும் பெற்றதாயும் எல்லோரும் வாங்கித் தாங்களே படித்து ஆனந்தப்படும்படியாகவுமிருப்பதால் இப்பத்திரிகை ஒவ்வொருவரும் வாங்க வேண்டிய அவசியமே.

பிற மாநிலங்களில் வெளியாகும் இங்கிலீஷ் இதழ்களி லிருந்து தேவைப்படும் செய்திகளை லோகோபகாரியில் வழங்க ஆசிரியர் செய்த ஏற்பாடு பாராட்டத்தக்கது. அக்காலத்தில் வாரம் மும்முறையாக வெளிவந்த சுதேசமித்திரனில் பிறமாநில, உலக அரசியல் செய்திகள் வெளியிடப்பட்டு வந்தன. லோகோபகாரி, வேதாந்தம் பரப்ப வந்த பத்திரிகை என்று சிலரால் கூறப்பட்டு வந்தாலும், அதில் பிற உலகியல், அரசியல், சமூக செய்திகள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலேயுள்ள 'இங்கிலீஷ் பத்திரிகைகள்' என்னும் குறிப்பில் எவையெவை லோகோபகாரியில் வெளிவந்துள்ளன என்பதைப் பற்றியும் ஆசிரியர் விளம்பரத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> இங்கிலீஷ் பாஷையிலுள்ள 'மெட்ராஸ் மெயில்', 'டைம்ஸ்', 'ஸ்டாண்டர்ட்', 'தி ஹிந்து', கல்கத்தாவில் வெளியாகும் 'பவர்', 'வங்காளி', 'அமிர்தபஜார் பத்திரிகா', இன்னும் சீமை பம்பாய், பூனா, அலகாபாத் இவ்விடங்களில் ஆங்கிலேய பாஷையில் தேர்ந்த மேதாவிகளால் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் எல்லா வற்றையும் ஒருவர் வாசித்தால் எவ்வளவு சமாசாரம் அறிவரோ அவ்வளவு சங்கதிகளையும் இந்த லோகோபகாரியைப் படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

லோகோபகாரியை விடாமுயற்சியுடன் நடத்துவது "கேவலம் லோகோபகாரத்தின் பொருட்டேயல்லாமல் வேறுவிதமான லாபத்தை யுத்தேசித்தல்ல" என்றும் கூறியுள்ளார், ஆசிரியர். பத்திரிகையின் பின்வரும் உள்ளடக்கத்திலிருந்து வாசகர்களின் அரசியல் அறிவு, பொது விஷய ஞானம் வளரவும் பாடுபட்டதை அறிய முடிகின்றது.

1. பார்லிமெண்டு, கவர்னர் ஜெனரல், கவர்னர் இவர்களால் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும் சட்டதிட்டங்கள் நியாயமானவையா அவைகள் ஜனங்களுக்கு உபயோகமா அல்லது கெடுதலா என்பதைப் பற்றி ஜனங்களுடைய அபிப்பிராயத்தைப் பத்திரிகை மூலமாய்க் கவர்மெண் டாருக்குத் தெரிவிப்பது.

2. சர்க்கார் விஷயங்கள், ராஜாங்க ஸமாச்சாரங்கள்.

3. சீமையில் இந்தியாவைப் பற்றி அடிக்கடி பார்லிமெண்டு மெம்பர்கள் செய்கிற ஏற்பாடுகள்.

4. மதிராஸ், கல்கத்தா இவைகளில் பல விஷயங்களையும் ஜனங்களுடைய அநுகூலத்துக்காக எடுத்து வாதிப்பதை அப்படியே தமிழில் வெகு தெளிவாய் மொழிபெயர்த் தெழுதுவது.

5. அக்கிரமமான வரிகள் போடக்கூடாதென்று அடிக்கடி கவர்ன்மெண்டாரை மன்றாடிக் கேட்பது.

6. காங்கிரஸ் விஷயமும், காங்கிரஸ் மெம்பர்கள் செய்கின்ற ஏற்பாடுகளும்.

7. பற்பல இடங்களிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அக்கிரமம் செய்தால் அதைப் பத்திரிகையில் பகிரங்கமாய் எடுத்துரைப்பது.

8. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்தி ரேலியா, இக்கண்டங்களிலுள்ள தேசவாசிகள் விஷயங்கள்.

9. இந்தியாவில் முக்கியமாய்ச் சென்னை ராஜதானியில், பிரதிதினமும் நடக்கும் விசேஷ வர்த்தமானங்கள்.

10. போர்ட்ஸெண்டு ஜார்ஜு கெஜட்டின் சுருக்கம்.

11. நல்ல விவேக முண்டாகும்படியான நீதியைப் போதிக்கக் கூடிய விஷயங்களைத் தொடர்ச்சியாய் எழுதுவது.

12. சென்னை ஹைகோர்ட்டு, பிரசிடென்சி மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு, இன்னும் இதர ஜில்லாக்களிலுள்ள கோர்ட்டு களில் நடக்கும் சிவில், கிரிமினல் விவகாரங்களில் முக்கியமாயும் ஆச்சரியமாயும் இருக்கப்பட்ட கேஸுகளின்

ஸங்கிரகமும் அவைகளின் மேல் செய்யும் ஜட்ஜுகளின் தீர்மானங்களும்.

13. சில்லறை விஷயங்கள்.

பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே பத்திரிகையாளராகவும் இருந்த நடராஜ ஐயர் தாம் பெற்றிருந்த உயர்தர தமிழ்ப் புலமையைக் கொண்டு லோகோபகாரியின் பத்திரிகைத் தமிழையும் வளர்த்தார்.

லோகோபகாரியின் தமிழ்நடை

ஆசிரியரின் தமிழ்ப்பற்றும், தமிழ்நடைச் சிறப்பும் லோகோபகாரியில் வெளிப்பட்டதாக அவருடைய வாக்குமூலத்தினாலேயே அறிய முடிகின்றது. "இந்த லோகோபகாரி என்னும் பத்திரிகை யாதொரு இலக்கணப் பிழையுமின்றி நல்லா தெளிவான செந்தமிழ் நடையில் ஒரு அக்ஷரமேனும் பயனற்றதாயிராமல் அர்த்தபுஷ்டியும்" உண்டாகக்கூடியது என்பது ஆசிரியரின் வாக்குமூலம். இத்துடன், 'அவசியம் கவனிக்க வேண்டிய விஷயம்' எனும் தலைப்பில், "நம்மவர்களுக்குத் தமிழ்ப் பாஷாபிமானம் வரவர விருத்தியாகும்படி அவசியமான விஷயங்கள் நிறைந்ததாய் இலக்கணப் பிழையின்றி" இருக்கப் பெற்றதாய்ப் பத்திரிகையை நடத்திவருவதாகக் குறிப்பிட்டுள்ளார் வி. நடராஜ ஐயர்.

'தமிழ்ப் பாஷாபிமானம்', 'இலக்கணப் பிழைகளின்றி', 'பயனற்ற சொல்லின்றி' என்று பலவாறு வலியுறுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். இவையாவும் பத்திரிகைத் தமிழ் வளர்ச்சியைப் பேணுவன.

தமது காலத்தில் பத்திரிகைகளில் தமது முற்கூறிய கருத்தைக் காணவியலாததைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> தற்காலம் வழங்கும் நம்முடைய தமிழ்ப் பத்திரிகைகளில் சிலாக்கியமான சில பத்திரிகைகள் நீங்கலாக அநேக பத்திரிகைகள் நன்றாய் நடத்தப்படாமல் இலக்கணப் பிழைகள், அச்சுப் பிழைகள் நிரம்பியதாயும் சமாசாரம் அதிகமாயிராமல் வீண் வார்த்தைகள் பலவாயுமிருப்பதால் அநேகர்கள் பத்திரிகைகளைக் கைசோர விடுகிறார்கள்.

பழங்காலப் பத்திரிகைகளின் நடையைப் பற்றி எழுதியுள்ள பிரபல பத்திரிகையாளர் திரிசிரபுரம் எஸ்.ஜி. இராமாநுஜுலு நாயுடு, லோகோபகாரி நடராஜ ஐயரின் தமிழ் நடையைப் பின்வருமாறு பாராட்டியுள்ளார்:

> நடராஜ ஐயருக்கென்றே இனிய செந்தமிழ் நடையொன்று அமைந்திருந்தது. அந்த நடையின் சாதுர்யத்தை வேறு எவராலும் கைப்பற்றிக் கொள்ள முடியாததாயும் அவருக்கென்றே அந்த நடை தோன்றி அவருடனேயே அது முடியக்கூடியதாகவும் அத்துணைச் சிறந்ததாயும் பரிமளித்தது.[3]

தமிழ்ப் பழமொழிகளை மிகுதியாகப் பயன்படுத்தித் தமிழ் நடையின் வீச்சையும் பயன்பாட்டு அம்சத்தையும் வளர்த்தது லோகோபகாரி.

சந்தாதாரர்களை ஊக்குவித்த புதிய திட்டம்

லோகோபகாரியின் சந்தாதாரர்கள் வீட்டில் திருமணம் நிகழ்வதாக இருந்தால் அதற்கு நிதியுதவி வழங்கும் ஒரு புதிய திட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார் லோகோபகாரி நடராஜ ஐயர். இக்காலத்தில் பத்திரிகை விற்பனையைப் பெருக்கப் பல பரிசுத்திட்டங்களைப் பல பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு அறிவித்துக் கொண்டு வருகின்றன. ஆனால் அக்காலத்தில் லோகோபகாரி அறிவித்த திட்டம் 'சூதாட்டம்' போன்ற பரிசுத் திட்டங்களுடன் ஒப்பிட முடியாதது.

"இந்துக்களாகிய நம்மவர்களுக்குள் கல்யாணத்துக்காகும் செலவு அபரிதமாயிருப்பதால் திருமண உதவித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது" என்று விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைப் பற்றிய விவரம் வருமாறு:

> இதல்லாமல் இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு பெரிய ஒரு லாபம் இருக்கிறது. அதாவது இப்பத்திரிகைக்கு 2000 கையொப்பக்காரர்கள் சேரும் பக்ஷத்தில் வசூலாகிற 6000 ரூபாயில் 1000 ரூபாயை பிரத்தியேகமாக எடுத்து இதன் சந்தாதாரர்களுக்கு அல்லது அவருடைய பிள்ளை, பெண், சகோதரன், சகோதரிகளுக்கு அவ் வருஷத்தில் ஏதேனும் ஒரு விவாக கல்யாணம் நடந்ததாக அவர்களுடைய கிராம முன்சீப், தகுந்த கண்ணியமுள்ள 2 மிராசுதாரர்கள் இவர்களுடைய கையெழுத்து வாங்கின சர்டிபிக்கெட்டை மேற்படியார்கள் பத்திராதிபருக்கு அனுப்பும் பக்ஷத்தில் அவ்வருஷத்திய டிசம்பர் 15இல் 1,000 ரூபாயையும் விவாகம் நடந்ததற்கான சர்டிபிக் கெட்டை அனுப்பிய சந்தாதாரர்களுக்கு சம பாகமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். அதாவது பத்து சந்தாதாரர்கள் வீட்டில் கலியாணம் நடந்தால் ஆயிரம் ரூபாயையும் மேற்படி 10 பேர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதால் ஆளுக்கு 100 ரூபாய்

> கிடைக்கிறது. இதனால் சந்தாதாரர் தாம் கொடுப்பது 3 ரூபாயாயினும் ஒரு சமயம் 100 வரையில் லாபம் அடையக் கூடியதாயிருக்கிறது. 100 சந்தாதாரர்கள் வீட்டில் கல்யாணம் நடந்தாலும் அப்போதும் 10 ரூபாயாவது லாபம் பெறுகிறார்கள். இந்துக்களாகிய நம்மவர்களுக்குள் கல்யாணத்துக்காகும் செலவு அபரிதமாயிருப்பதால் இந்த மாதிரியான ஏற்பாடு செய்யப் பட்டது. சந்தாதாரர் ஒருவர் வீட்டில் ஒரே வருஷத்தில் 10 கல்யாணம் நடந்தாலும் ஒரே கல்யாணம் நடந்ததாகவே பாவிக்கப் பட்டு, 1000 ரூபாயைப் பங்கிடும்போது அவருக்கு ஒரு ஷேர் தான் கொடுக்கப்படும்.

இந்தத் திட்டம் எதிர்பார்த்தவாறு நடைமுறைப்படுத்தப்பட்டதா, இல்லையா என்பது ஒருபுறமிருந்தாலும், திட்டம் புதுமையானது. சமூகப்பணி நோக்குடையதாகும் என்பது பாராட்டுக்குரியது. சந்தா தாரர்களுக்கு இலவசமாகப் புத்தகம் ஒன்று கொடுக்கும்படியான ஏற்பாட்டையும் லோகோபகாரியே தொடங்கியது.

லோகோபகாரியுடன் 'ஞான சந்திரிகா' எனும் பத்திரிகையையும் நடராஜ ஐயர் நடத்தியுள்ளார்.

ஞானசந்திரிகா

1898இல் வெளிவந்த ஞானத்திரட்டு நூலின் மேலட்டையில் "லோகோபகாரி, ஞானசந்திரிகா பத்திரிகைகளின் ஆசிரியராகிய வி. நடராஜ ஐயரவர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஞான சந்திரிகா வின் இதழ்களும் கிடைக்கவில்லை. ஞானத்திரட்டில் கூறப்பட் டுள்ள செய்திகளைக் கொண்டுதான் இந்த இதழைப் பற்றிச் சில குறிப்புகளை அறிய முடிகின்றது.

ஞான சந்திரிகா 1898இல் தோன்றியது என்பதை 1898இல் லோகோபகாரி நடராஜ ஐயர் எழுதிய பின்வரும் குறிப்பில் இருந்து அறிய முடிகின்றது.

> நாம் இவ்வருஷ முதல் வெளியிடுகின்ற ஞான சந்திரிகா வென்னுமிச் சஞ்சிகையில் லோகோபகாரியில் பிரசுரமான எந்த விஷயமும் இராது.

புத்தக உருவத்தில் முப்பத்திரண்டு பக்கங்களுடன் ஒன்றே கால் ரூபாய் சந்தாவுடன் மாத இதழாக வெளிவந்தது ஞான சந்திரிகா. சந்தாதாரர்களுக்கு லோகோபகாரி வெளியீடுகள் அனுப் பப்பட்டன. இரு பத்திரிகைகளின் ஒரே ஆசிரியரான நடராஜ ஐயர்

இரண்டையும் பரஸ்பர பாதிப்பு இல்லாமல் நடத்தியுள்ளதையும் மேல் காணும் குறிப்பில் உய்த்துணர முடிகின்றது. ஞானத்திரட்டைப் போல், இந்து சமயத்தத்துவ ஞானத்தை விளக்க, ஞானதரிசினி எனும் நூலையும் இயற்றி வெளியிட்டார் நடராஜ ஐயர். அத்வைத வேதாந்தத்தைப் பிரசாரம் செய்யும் நூலாக ஞானதரிசினி எழுதப் பெற்றது. நூலினுள் கூறப்பெற்றுள்ள பின்வரும் கருத்து நூலின் கருத்தோட்டத்தை விளக்குகின்றது:

> சுற்றிச் சுற்றி வந்தாலும் சுண்டிச் சாவடி வழியாய்த்தான் வர வேண்டும். அதேபோல் எந்த மதஸ்தனாயினும் அவன் அத்வைத மார்க்கத்தையே அனுசரித்துத் தீரவேண்டும். துவைதம், அத் வைதம், விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம், பாவனாத்வைதம் ஆகிய எல்லாம் ஓர் வகை அத்வைதமேயன்றி வேறல்ல. அத் வைதிகளுக்கு எந்த மதஸ்தர்களும் வேறல்லர்.[4]

இந்த நூலில் தத்துவ ஞானத்தை விளக்க இருநூறு பழமொழி கள் ஆளப்பட்டுள்ளன.

தமிழ்ப்பற்றை வளர்த்த பத்திரிகை

ஞான சந்திரிகாவில் பத்திரிகையின் அவசியத்தைப் பற்றிக் கூறுமிடத்தில் தமிழ்ப்பற்றின் தேவை பின் வருமாறு உணர்த்தப் பட்டுள்ளது:

> எந்தப் பாஷையை நமது தாய்மார்கள் தங்கள் முலைப்பாலுடன் சேர்த்து நமக்கு ஊட்டினார்களோ அந்த அருமையான நமது தமிழ்ப் பாஷையை விர்த்தி செய்யத் தக்க வழியாகிய தமிழ்ப் பத்திரிகையை நமது நாட்டுவாசிகளாகிய பிரபுக்கள் அபிமானிக்க வேண்டாமா?'

> நமது அன்பிற்கினிய நம் நாட்டுச் சிறுவர்களும் சிறுமிகளும் தமிழ்ப் பாஷையில் தேர்ந்து நன்னடக்கை வாய்ந்து சொல்நயம் பொருள்நயம் தோன்ற இனிய மொழிகளில் வசனிப்பது எவ்வளவு பெருமையாய் இருக்கும்? ஆதலின் இப் பெருமையையடை வதற்கு இப்பத்திரிகை அதியவசியமானது.

லோகோபகாரியில் 'இராஜாங்க சமாசாரங்களே முக்கியமாய் இருக்கப் பெற்றதாயும்' எனும் அறிவிப்புப் போன்று, ஞானசந்திரிகா தொடர்பாக எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. ஞான சந்திரிகா பெயருக்கேற்ப இந்து சமயஞானமாகிய வேதாந்த ஞானத்தை விளக்கும் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. இந்த இதழ் எவ் வளவு காலம் வெளிவந்தது என்பதையும் அறிய முடியவில்லை.

லோகோபகாரி நடராஜ ஐயர் 1901 ஆகஸ்டு முதல் 'தி இண்டியன் நியூஸ்' எனும் ஆங்கில வார இதழையும் நடத்தியதாகத் தெரிகின்றது.

தமிழில் இரண்டும், ஆங்கிலத்தில் ஒன்றுமாக மூன்று இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையாளர் லோகோபகாரி வி. நடராஜ ஐயர் பி.ஏ.வின் இதழியல் பணியைப் புறச்சான்றுகள் வழியே அறியும்பொழுதே அதன் பெருஞ்சிறப்புகள் வெளிப்படுகிறதென்றால், அகச்சான்றுகள் கிடைத்துவிட்டால் இன்னும் எவ்வளவு அரிய சிறப்புகள் வெளிப்படும். 1906 டிசம்பர் வரையில் நடராஜ ஐயரின் லோகோபகாரி வெளிவந்தது.

பண்டிதை விசாலாட்சியம்மாள்

வி. நடராஜ ஐயருக்குப் பிறகு லோகோபகாரியின் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் விளங்கியவர் பண்டிதை விசாலாட்சியம்மாள். நடராஜ ஐயர் ஆசிரியராகவிருந்த காலத்திலேயே 1902இல் லோகோபகாரியில் உதவி ஆசிரியராக பண்டிதை விசாலாட்சியம்மாள் பணியாற்றியுள்ளதாகத் திரிசிரபுரம் எஸ்.ஜி. இராமாநுஜுலு நாயுடு குறிப்பிட்டுள்ளார். 'நடராஜ ஐயரின் இனிய நடையைப் பண்டிதை விசாலாட்சி அம்மாள் கொண்டிருந்தார்' என்றும் இராமாநுஜுலு நாயுடு கூறியுள்ளார். 'அந்த நடையின் சாதுரியத்தை வேறு எவராலும் கைப்பற்றிக் கொள்ள முடியாது' என்று எழுதிய இராமாநுஜுலு நாயுடு 'நடராஜ ஐயரின் இனிய நடையைக் கொண்டிருந்தார்' என்று பண்டிதை விசாலாட்சியின் தமிழ்நடையைப் பற்றியும் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

இவருடைய காலத்தில் லோகோபகாரியின் பதிப்பாளர் - அச்சகம் பெயர்கள் மாற்றப்பட்டன. பதிப்பாளர் - உரிமையாளராக பண்டிதை விசாலாட்சியம்மாளும், சென்னை தங்கசாலைத் தெரு எண் 379இல் இருந்த மகாலட்சுமி விலாசம் எனும் அச்சகத்தில் லோகோபகாரி அச்சிடப்பட்டதாகவும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்கள் 1907 சனவரி 17இல் நிகழ்ந்தன.

இவருடைய காலத்தில் லோகோபகாரி ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் இருமொழி இதழாக வெளி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.[5] 1500 பிரதிகள் விற்பனையாயின என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த எண்ணிக்கையை அப்பொழுது வேறெந்த இதழும் எட்டவில்லை.

1908இல் லோகோபகாரியின் அலுவலகம் 38, நல்லதம்பி முதலித் தெரு, திருவல்லிக்கேணிக்கு மாற்றப்பட்டது. அப்பொழுது ஆசிரியையின் வயது 28, இந்து பிராம்மணர் என்றும் விற்பனையான பிரதிகள் 710 என்றும் அறியப்படுகின்றது.[6]

1910 வரையில் பண்டிதை விசாலாட்சியம்மாவின் பொறுப்பில் வந்த லோகோபகாரியைப் பற்றி மேற்காணும் விவரத்தைத் தவிர வேறெதையும் அறிய வாய்ப்பில்லை.

கோ. வடிவேலு செட்டியாரின் லோகோபகாரி

லோகோபகாரி நடராஜ ஐயர் பணியாற்றிய இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் 1896ஆம் ஆண்டு முதல் 1933 சனவரி வரையில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றியவர் கோ. வடிவேலு செட்டியார் (1863-1936). நடராஜ ஐயரின் லோகோ பகாரியுடன் கோ. வடிவேலு செட்டியாருக்கு உறவு இருந்திருக்கக் கூடும். நடராஜ ஐயரும் அத்வைத வேதாந்தி; வடிவேலு செட்டி யாரும் அத்வைத வேதாந்தி. நடராஜ ஐயர் தொடங்கிய லோகோ பகாரியில் கோ. வடிவேலு செட்டியார் 1911 முதல் 1921 வரையில் ஆசிரியராகவிருந்துள்ளார். நடராஜ ஐயரைப் போலவே, ஆசிரியப் பணியில் இருந்து கொண்டே லோகோபகாரியின் ஆசிரியராக இருந்துள்ளார்.

திண்ணைப் பள்ளிக்கூடத் தொடக்க க்ல்வி மட்டுமே முறை யாகப் பயிலும் வாய்ப்புப் பெற்று, பலசரக்கு மளிகைக் கடையை நடத்திக் கொண்டே இலக்கண, இலக்கிய, தர்க்க, வேதாந்த, சம்சு கிருதக் கல்வியில் நிறைபுலமை பெற்றவர் கோ. வடிவேலுசெட்டியார்.

29ஆம் வயதில் சென்னை முத்தியாலுப்பேட்டை தம்பு செட்டித் தெருவில், வேதாந்த பாஸ்கரராய் விளங்கிய சற்குரு சை. இரத்தினச் செட்டியாரிடம் பன்னிரண்டு ஆண்டுகள் காலையிலும் மாலையிலும் வேதாந்த நூல்களைக் கற்றார். இது குறித்து அவரே 1929இல் 'இற்றைக்கு 30 வருஷத்திற்கு முன்னர்ச் சென்னை மாநகரம், முத்தியாலுப்பேட்டையின்கண் வேதாந்த பாஸ்கரராயெழுந்தருளி யிருந்த ஸ்ரீசாது இரத்தின சற்குரு மூர்த்திகளிடத்து (சை. இரத்தின செட்டியாரவர்களிடத்து) வேதாந்த சாஸ்திராப்பியாசஞ் செய்து வந்த அடியேன்' என்று குறிப்பிட்டுள்ளார். இரத்தினச் செட்டியார் தம் பொருட் செலவில் வடிவேலு செட்டியார் தருக்கநூல், சம்சுகிருதம் பயில வாய்ப்பளித்தார். 'சற்குரு இரத்தின செட்டியார் பாத சேகரராக'த் தம்மை அழைத்துக் கொண்டவர் வடிவேலு செட்டியார்.

வேதாந்த மாநாடுகளைத் தமிழகத்தில் நடத்தி வேதாந்தச் சூறாவளியாகப் புகழ் பூத்தவர் வடிவேலு செட்டியார். இவர் உரை எழுதி வெளியிட்ட நூல்கள்: 1. திருக்குறள்: விரிவான உரையுடன் 2 தொகுதிகள். 2. கைவல்யநவநீதம்: மூலம், மூலத்துக்கியைந்த வசன வினா விடை, விரிவுரை மேற்கோளுடன். 3. வேதாந்த சூடாமணி மூலம், வினாவிடை, பதவுரையுடன். 4. ஸ்ரீ பகவத் கீதை: மூலத்துக்கியைந்த வசனம் விருத்தியுரையுடன். 5. சசிவன்னபோதம்: மூலமும் மூலத்துக்கியைந்த வசனமும், விருத்தியுரையும் மேற் கோளுடன். 6. நாநாஜீவவாதக்கட்டளை: குறிப்புரையுடன். 7. தர்க்க பரிபாஷை: விரித்த வியாக்யாநத்துடன். 8. கந்தர் அநுபூதி: மூலம் - விரிவான உரையுடன். 9. சிவஞானபோதம்: தெளிபொருள் விளக்க வுரையுடன். 10. உபநிடதம்: விரிவுரை, சாஸ்திரமேற்கோளுடன்.

இவர் எழுதிய நூல்கள்: 1. மெய்ஞ்ஞான போதம், வேதாந்த உபந்நியாச வசனம், முதற் பாகம், இரண்டாம் பாகம்; 2. வியாச போதினி 1 - 2 பாகம்; 3. மஹாராஜாதுறவு - வசனம்; 4. புநிதவதி (காரைக்காலம்மையார்); 5. பரமார்த்தபோத வசனம்; 6. தர்ம வாசகம் என்னும் அறவுரை; 7. ஒரு பெண்ணரசியின் பிரஹ்மஞாநோ பதேசம்; 8. ஞாநஉவமை வெண்பா, மனன உவமை வெண்பா, தத்து வாதத்துவ விவேகம்; 9. அறிவாநந்தஉந்தியார்.

இவர் அச்சிட்ட நூற்கள் 9; மொழி பெயர்த்து அச்சிட்ட நூற்கள் 4; இவர் இயற்றிய பாடசாலைக்குரிய நூற்கள் 5; இவர் எழுதி வைத்துள்ள நூற்கள் 8.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இவர் வேதாந்த சங்கம் நிறுவினார். மிகச்சிறந்த ஆசிரியராகப் பலரைப் பயிற்றுவித்துப் புலமை பெறச் செய்தார். இவர்களுள் பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மொ. துரை அரங்கனார் குறிப்பிடத் தக்கவர்கள். வேதாந்த சங்கத்தில் அவர் முன்னிலையிலேயே அவருடைய சிலைத்திறப்பு நிகழ்ந்தது. இதில் தமிழ்ப் பெரியார் திரு. வி.க. உட்பட பலர் கலந்து கொண்டனர். 17.7.1936இல் திரு. வி.க. தமது 'நவசக்தி'யில் வடிவேலு செட்டியாரைப் பாராட்டிப் பின்வருமாறு எழுதினார்:

> திரு. செட்டியார் ஒரு தமிழ் ஞாயிறு. இத்தமிழ் ஞாயிற்றினின் றும் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், வேதாந்தம், பொதுமை ஒழுக்கம், ஒப்புரவு முதலிய கதிர்கள் கான்ற வண்ணமிருக்கும். ஒருவிதக் கலையில் பலர் புலவராகலாம். பலவிதக் கலையில்

பலர் புலவராதல் அருமை. மிகச் சிலரே கலைப்புலவராவர். இப்போது அறிஞர் வடிவேல் செட்டியார்க்கு வாய்த்தது.

வேதாந்தக் கடலில் அழுந்திடுவர். அதனால் அவரது நெஞ்சம் தம்மைத் தொல்காப்பியப் புலவரென்றோ சங்க இலக்கிய வல்லவரென்றோ நினைக்கவும் அவரை விட்டதில்லை.

இவ்வளவு பெருஞ்சிறப்புகள் பெற்றிருந்த இல்லற ஞானி கோ. வடிவேலு செட்டியார் பத்திரிகைத்துறையில் ஈடுபட்டார். இவர் தமிழுக்குச் செய்து வந்த பலதிறப்பட்ட தொண்டுகளில் லோகோப காரி இதழை நடத்தியதும் ஒன்றாகும். "லோகோபகாரி என்னும் தமிழ்ப் பத்திரிகையைப் பல வருஷங்கள் நடத்தியும் இவர்கள் தமிழுக்குச் செய்து வந்த தொண்டு பல திறப்பட்டதாகும்" என்று தமிழ்த் தாத்தா டாக்டர் 'உ.வே.சா.' பாராட்டியுள்ளார்.

தேசிய உணர்ச்சியின் முக்கூறுகளாக 'பாஷாபிமானம், மதாபி மானம், தேசாபிமானம்' வலியுறுத்தப்பட்டு வந்தன. கோ. வடிவேலு செட்டியாரையும் இந்த முக்கூறுகளை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவராகக் கருத இடமளிக்கின்றது. அவர் நடத்திய லோகோபகாரி இவ்வுண்மையை லோகோபகாரியின் 1916 நவம்பர் 20ஆம் தேதி வார இதழைக்கொண்டு நிறுவ முடிகின்றது. சென்னை கோமளேசு வரன் பேட்டையில் இருந்து 'சோமவாரந்தோறும் பிரசுரமாகும்' எனும் குறிப்புடன் லோகோபகாரி வெளி வந்தது. 'கோமளேசுவரன்பேட்டை' சச்சிதானந்தா பிரஸ்ஸில் அச்சிடப் பெற்று வந்த இந்த இதழின் அச்சிடுவோர், ஆசிரியர், வெளியிடுபவராக கோ. வடிவேலு செட்டி யார் இருந்தார். இதழின் தொடர் எண் 'பு.22 - இ.47' ஆகக் குறிப் பிடப்பட்டுள்ளது. புத்தகம் 22, இதழ் 47 என்பது 1895இல் வி. நடராஜ ஐயரால் தொடங்கப் பெற்ற லோகோபகாரியின் தொடர்ச்சி யைக் குறிப்பதாகும். இந்த இதழின் உருவம், உள்ளடக்கம் பற்றிய ஆய்வு பின்வருவது:

ஆங்கிலத்தில் 'The Lokopakari - A Tamil Weekly - Published Every Monday' என்று குறிப்பிடப் பெற்று இதன் கீழ் தமிழில் 'லோகோபகாரி' என்று அச்சிடப் பெற்றுள்ளது. சந்தா விவரம், விளம்பர விகிதம் என்பனவற்றின் அறிவிப்புகளுக்கிடையே நடராசப் பெருமானின் நடனத் தோற்றத்துடன் கூடிய சித்திரம் அச்சிடப்பெற்றுள்ளது. 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு' எனும் குறட்பா முகப்புச் சொல்லோவியமாக அமைந்துள்ளது.

சந்தா விவரம்:

	ரூ.	அ.
இந்தியாவிற்கு		
ஒரு வருஷத்திற்கு	3	8
ஆறு மாதத்திற்கு	1	14
3 மாதத்திற்கு	1	0
சென்னைக்கு		
வருடம்	3	8
6 மாதம்	1	14
மூன்றுமாதம்	1	0
மாத சந்தா	0	5
பிறதேசங்களுக்கு		
வருடம்	5	8
6 மாதம்	3	0

இதழின் அளவு அகலம் 28.5 செ.மீ.
உயரம் 41.5 செ.மீ.

மொத்தப் பக்கங்கள் 12: ஒவ்வொரு பக்கமும் மூன்று பத்திகளைக் கொண்டுள்ளது.

முதல் பக்கத்தில் 'ஓம் பரப்பிரஹ்மணே நம:' எனும் தலைப்பில் சீவகருணை, பாசவைராக்கியம், ஈசுவரபத்தி என்பனவற்றைப் பற்றிய தத்துவ ஞானக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. "சீவகருணை, பாச வைராக்கியம், ஈசுவர பத்தியென்று மூன்றுமுடையவராகவிருப்போமாயின், நாம் பிரம்மஞானத்தைப் பெறுவது மிக எளிதாம்" என்பது கட்டுரையின் மையக்கருத்தாகும்.

சிவாநந்தமாலை, பிரபுலிங்க லீலை, தாயுமானவர் பராபரக் கண்ணி, திருப்போரூர் சிதம்பரசுவாமிகளின் வைராக்கிய சதகம் முதலானவற்றின் பாடல் வரிகளைக் கொண்டு 'பிரஹ்ம ஞானம்' இக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பிரபுலிங்கலீலை பாடல் வரியின் மூலம் விளக்கப்படும் பின்வரும் பகுதி, சுக்ல யஜுர் வேதத்தின் ப்ரஹத்தாரண்ய உபநிடதத்தில் வரும் 'அகம் பிரம் மாஸ்மி' - நான் பிரம்மம் - எனும் பிரம்ம ஞானத் தெளிவையும், அதர் வன வேதத்தின் மாண்டூக்ய உபநிடதத்தில் வரும் 'அயம் ஆத்மா

பிரம்மம்' - இந்த ஆத்மா பிரம்மம் - எனும் பிரம்ம ஞான முடிவையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்துள்ளது.

'நாம் தூய்தா கியநெஞ் சுடையார்க்குத் தாமே சிவமாத் தோன்று மால்' என்று பிரபுலிங்க லீலை மனோலய கதியிற் கூறுவதைக் கவனித்து நோக்குவோமாயின் - தாமே (ஆத்மாவே) சிவமாகத் தோன் றுவதாகிய பிரஹ்ம ஞானம் தூய்தாகிய நெஞ்சுடையார்க்கன்றி மற்றவர்க்கு எவ்வாற்றானு முண்டாகா தென்பது நமக்குப் பிழை யில்லாது விளங்குவதாம்.'

இவ்வாறு லோகோபகாரியில் முதல் பக்கத்தில் வேதாந்தக் கட்டுரைகள் 1911இல் இருந்தே வெளிவந்துள்ளன. இவை தொகுக்கப் பெற்றுத் தனிநூலாக லோகோபகாரி வெளியீடுகளாக வந்துள்ளன. சான்றாக 1911ஆவது வருடத்து லோகோபகாரியின் முதற் பக்கத்திற் பிரசுரமான வேதாந்தக் கட்டுரைகள் 'மெய்ஞ்ஞான போதம்' - முதல் பாகம் - எனும் நூலாக வெளிவந்துள்ளது.[8] லோகோப காரியின் 'மதாபிமானம்' முதல் பக்கங்களிலே முழங்கப்பட்டு வந்தது. இந்நூலின் இரண்டாம் பாகமும் வெளிவந்துள்ளது.

பக்கம் 2

முதல் பக்கத்தில் வெளிவந்த வேதாந்தக் கட்டுரையின் தொடர்ச்சி இரண்டாம் பக்கத்தில் முதல் பத்தி முழுவதிலும் வெளியிடப் பட்டுள்ளது. இரண்டு, மூன்றாம் பத்திகளில் திருக்குறள் உரை ஆய்வின் தொடர்ச்சி வெளிவந்துள்ளது. '107. இரவச்சம்' எனும் தலைப்பில் விளக்கவுரை வெளிவந்துள்ளது.

'இரவின் (யாசித்தலின்) கொடுமையைக் கூறல்', 'வறுமை தீர்தற்கு வழி யிரத்தலன்றெனக் கூறல்', 'வழியால் வந்த பொருள் சிறியதாயினும் அது செய்யும் இன்பம் பெரிதாமெனக் கூறல்', 'அறமும் முயன்று செய்வதல்லாமல் இரந்து செய்தல் கூடாதெனக் கூறல்', 'மானங் கெடவரும் இரவை நீக்கல் வேண்டுமெனக் கூறல்', 'இரத்தலின் குற்றத்தையும் தமக்குள்ள பொருளையில்லை யென்று கூறி மறைத்தலின் குற்றத்தையும் கூறல்', 'இரத்தலினும் இல்லை யென்று கூறுதல் கொடிய தென்பதாம்' எனும் துணைத் தலைப்பு களில் 'இரவச்சம்' அதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களுக்கும் விரிவுரை எழுதியுள்ளார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

எனும் குறட்பாவிற்குப் பின்வருமாறு விளக்கவுரை எழுதப்பட்டு உள்ளது.

> இவ்வுலகத்தைப் படைத்த பிரமன் இவ்வுலகத்தில் வாழ்வார்க்கு முயற்சி செய்து உயிர் வாழ்தலையல்லாமல், இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக்கொடியோனாகிய பிரமனும் அவ்விரக்கின்றாரைப்போல் எங்குஞ் சுழன்று கெடுவானாக. பிரமன் மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அந்நாளுக்கு வேண்டுவதாகிய வுணவும், அவ்வுணவிற்குக் காரணமாகிய செய்தொழிலும், பழவினை வயத்தால் அவ்வுயிர்கள் கருவொடு (தாயாரது கருப்பத்தோடு) கூடியவப்போதே கற்பித்தானல்லவா? அவற்றுள் சில வுயிர்க்கு இரத்தலையும் ஒரு செய் தொழிலாகக் கற்பித்தானாயின், அத்தீவினையால் அவனும் அவ்விரப்பாரைப் போலத் துன்பமடைதல் வேண்டுமென்ப.

வடிவேலு செட்டியாரின் திருக்குறள் விரிவுரையானது 'பரிமேலழகரின் உரையாகிய கடற்கரையை அடைவதற்குக் கலங்கரை விளக்கே போன்று ஒளி செய்கின்றதை யாவரும் அறிவர்' என்று தமிழறிஞர் ரா. நடேசநாயகரவர்கள் பாராட்டியுள்ளார்.

1916இல் 'லோகோபகாரி'யில் திருக்குறள் விரிவுரை வெளிவந்ததற்கு முன்பே 1913இல் திருக்குறள் பரிமேலழகர் உரை, தெளிபொருள் விளக்கம், கருத்துரை குறிப்புரையுடன் 'டம்மி 8 பக்கங் கொண்ட அளவில் 1300 பக்கங்களுக்கு மேற்பட்ட'தாக இரு தொகுதிகளாக வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்பான விளம்பர வரிகள், பின் வருவன:

> உபாத்தியாயர் சகாயமில்லாமல் பரிமேலழகருரையின் அருமை பெருமைகளை யெல்லாம் இதனால் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். இது தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரைகள் பரிமேலழகருரைக் கிணங்கப் புதிதாக எழுதப்பட்ட முதற்பதிப்பு.[9]

1925இல் வெளிவந்த வடிவேலு செட்டியாரின் மற்றொரு நூலில் உள்ள விளம்பரமொன்றில் இவருடைய திருக்குறள் நூல் ஆங்கிலத்திலும் இரு தொகுதிகளாக வெளிவந்ததை அறிய முடிகின்றது.[10]

பக்கம் 3

லோகோபகாரியின் மூன்றாம் பக்கத்தில் வித்தியாசமான ஓர் அறிவிப்பு பின்வருமாறு ஆங்கிலத்தில் காணப்படுகின்றது:

(All Rights Reserved). Special to the 'Lokopakari'.

இந்த அறிவிப்பின்கீழ் 'தேச பாஷைகளை அருவருத்தல்' எனும் சொற்றொடருடன் கூடிய ஒரு கருத்துப்படம் வெளியிடப்பட்டுள்ளது. லோகோபகாரியின் 'பாஷாபிமான' பிரசாரத்தை விளக்கும் இந்தக் கருத்துப் படத்தின் விளக்கவுரை பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது:

> இந்தப் படத்தின் இடப்பக்கத்தில் கல்விக்கரசியராகிய கலை வாணியாரிருக்கின்றார். பாரத புத்ரர்கள் தம் தேச பாஷைகளை வேப்பஞ்சாறெனக் கருதி அவற்றைப் பயிலாது பராமுகஞ் செய்து வருகின்றனர்; அதனைப் பாரதமாதாவறிந்து அவர்கள் மீது இரக்கங்கொண்டு கலை வாணியாரருள் பெற்றுத் தமது புத்திரர்களைத் தேசபாஷையாகிய வெண்ணெயை வார்த்து வளர்க்கப் பிரயத்தனப்படுகிறார்; பாரத புத்ரர்கள் அவ்வெண்ணெயை யுட்கொள்ள அருவருப்புக் கொள்ளுகின்றனர். தேச பாஷைகள் உயிர்காப்பிற்கும், அந்ய பாஷைகள் உடற்காப்பிற்குமாக விருக்கின்றன. இந்த நுட்பத்தை மறந்து பாரத புத்ரர் உடல் காப்பிற் கேதுவாயிருகின்ற அந்ய பாஷையாகிய ஆங்கிலத்தையே பெரிதும் பயின்று அதனையே போற்றி வருகின்றனர்; தம் தேச பாஷைகளைப் பெரிதும் மறந்து வருகின்றனர். தற்காலத்தில் ஆங்கிலத்தை நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவரும், தவறாகவேனும் ஆங்கிலத்திலேயே எழுதவும், பேசவும் முற்படுகின்றனர்; தாய்ப் பாஷையிலெழுதுவதும் பேசுவதும் அகௌரவமாமென்று கருதுகின்றனர். என்ன அறியாமை? இனியேனும் பாரதபுத்ரர்கள் இவ்வறியாமையினின்றும் விழிப்படைந்து உயிர்க்குறுதி பயக்கும் தம் தாய்ப் பாஷையைப் பயில முற்படுவதற்கு பாரதமாதா அருள்புரிவாளாக.'

தாய்மொழிப்பற்றைத் தேசியப் பின்னணியில் வளர்க்கத் தூண்டுவதாய் அமைந்துள்ளது இந்தக் கருத்துப்படம். தமிழ்ப் பேரறிஞர்களிடையே 'தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம், பற்றிய ஒருங்கிணைந்த கருத்து 1887லேயே உருவாகிவிட்டது. இலங்கை யாழ்ப்பாணத் தமிழ்ப் பேரறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901), 1887இல் பதிப்பித்த கலித்தொகையின் பதிப்புரையில் 'தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் இவையில்லாதார் பெருமையும் பெருமையாமோ?' என்று குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாரம்பரியத்தைத் தமிழ்ப் பேரறிஞர் கோ. வடிவேலு செட்டியார் தமது காலத்தில் லோகோபகாரியின் மூலமும் முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

இந்தக் கருத்துப்படம், அதன் விளக்கவுரையுடன் 'சசிவன்ன போத வசனம்' எனும் வேதாந்த போதனையின் தொடர் கட்டுரையுடன் மூன்றாம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. இத்துடன் 'வித்தை', 'வித்வான்' பற்றிய விளக்கமும் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது பத்தியின் இறுதியில் காணப்படும் புத்தக விளம்பரம் கருத்தைக் கவர்கின்றது. 'ஐரோப்பிய யுத்தம்' எனும் நூலைப் பற்றிய விளம்பரம் கருத்தைக் கவர்வதற்குக் காரணம் முதல் உலக மகாயுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அதைப் பற்றித் தமிழில் விரி வாக 400 பக்கங்களில், 400 அத்யாயங்களில், 100 படங்களுடன் ஒரு நூல் வெளிவந்துள்ளதென்பதேயாகும். இதை எழுதிய ஜி.ஏ. வைத்யராமன் பி.ஏ. என்பவர் காலத்தேவைக்கேற்ற நூலைப் படைத்துள்ளது பாராட்டுதலுக்குரியது. விளம்பரத்தில் கூறப்பட்டு உள்ள பின்வரும் விளக்கமும் இந்நூலின் பயனுடைமையை உணர்த்துகின்றது:

> இதில் ஒவ்வொரு தேசமும் யுத்தத்தில் சேர்ந்து கொண்டதற்கு அந்தரங்க காரணங்களும், அந்தந்தத் தேசத்து ராஜதந்தரக் கொள்கைகள் எவ்வளவு தூரம் யுத்தத்திற்குக் காரணமாயிருந்தன வென்பதும், சரித்திரபூர்வமாக விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் யுத்த விஷயமாய் அறிய வேண்டிய பல விஷயங்களும் தெளிவாய் ஸுலபமான நடையில் பல படங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்த நூல் லோகோபகாரி அலுவலகத்தில் கிடைக்கும் என்னும் குறிப்பும் உள்ளது.

பக்கம் 4

இப்பக்கத்தில் 'பிரபஞ்சமித்திரன்' பத்திரிகையில் இருந்து எடுக்கப் பெற்று, மறுவெளியீடாக வந்துள்ள 'பரோடாவில் புத்தக சாலைகள்' எனும் சிறு கட்டுரை கவனத்தை ஈர்க்கின்றது. நூலக இயக்கம் பரோடா சமஸ்தானத்தில் பெற்றிருந்த வியக்கத்தக்க முன்னேற்றம் வாசகர்கள் சிந்தனைக்கு நல்விருந்தாகும். அக்கால பரோடா சமஸ்தான அரசர் மக்கள் கல்வியறிவை வளர்த்ததில் தன்னேரில்லாதவராகத் திகழ்ந்தார். தேசியவாதிகளும் அவரைப் போற்றினர். இந்தச் சிறு கட்டுரையுள் பின்வரும் பகுதி பிரிட்டிஷ் இந்தியாவில் எங்கும் அக்காலத்தில் காணமுடியாத நூலக இயக்க வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாகும்:

> இந்த சமஸ்தானத்தில் புத்தகசாலை விஷயமாகச் செய்யப் பட்டிருக்கும் ஏற்பாடுகள் வியக்கத்தக்கன. இதற்கென்று

தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஸமஸ்தானத்தில் பல இடங்களிலும் புத்தக சாலைக் காட்சிகளும் நிழல் படக்காட்சிகளும் நடைபெற்று வருகின்றன. மத்திய புத்தகசாலையில் மாத்திரம் 54000 புத்தகங்கள் இருக்கின்றன; தவிர சமஸ்கிருதம், குஜராத்தி, மராட்டி முதலிய பாஷைகளில் 30000 புத்தகங்கள் இருக் கின்றன. தினமொன்றுக்கு சராசரி 177 புத்தகங்கள் படிப்பவர் களால் கையாளப்பட்டு வருகின்றன. 423 ஜில்லாப் புத்தக சாலைகள் இருக்கின்றன. இதைத்தவிர எப்பொழுதும் சுற்றிக் கொண்டிருக்கும் படியாக 354 புத்தகசாலைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

பிரபஞ்சமித்திரன், 23.6.1916 முதல் வெளிவந்த வார இதழ்.[11] லோகோபகாரி அச்சிடப்பெற்று வந்த சச்சிச்சிதானந்தா அச்சகத்தில் பிரபஞ்சமித்திரனும் அச்சிடப்பட்டது. இதன் உரிமையாளர் மங்கலம் ஷண்முக முதலியார் வடிவேலு செட்டியாரின் நெருங்கிய நண்பர். பிரபஞ்சமித்திரன் - லோகோபகாரி இவையிரண்டிடையே பத்திரிகை உறவின் நெருக்கம் இருந்தது.

நான்காவது பக்கத்தில் 'பரோடா புத்தகசாலை' பற்றிய சிறு கட்டுரைகள், 'லண்டன் பட்டணம் - இரவில்' என்னும் தொடர் கட்டுரை யும் (எழுதியவர்: வ. ஆறுமுக செட்டியார், முத்தியாலு பேட்டை,. சென்னை) செய்தித் தொகுப்பும் வெளிவந்தன.

பக்கம் 5

இப்பக்கம் முழுவதிலும் முதல் உலக மகாயுத்தச் செய்திகள் வெளியிடப்பட்டன. பிரெஞ்சுப் பெல்ஜியப் போர்முகம், இத்தாலியப் போர்முகம், ரொமேனியப் போர்முகம், ருஷ்யப் போர்முகம், சலோனிக் கப் போர்முகம் எனும் தலைப்புகளில் செய்திகள் வெளிவந்தன. போர்க்காலச் செய்திகளை வாசகர்களுக்கு அறிவிப்பதையும் லோகோபகாரி பத்திரிகைக் கொள்கையாகக் கொண்டிருந்தது.

பக்கம் 6

லோகோபகாரியின் தலையங்கம் ஆறாம் பக்கத்தில் வெளி வந்தது. தலையங்கத்திற்கு மேலே 'லோகோபகாரி, கோமளேசுவரன் பேட்டை, சென்னை, 20.11.1916' என்று அச்சிடப் பெற்றுள்ளது. 'கடப்பை டிஸ்டிரிக்ட் கான்பரென்ஸ் கவனிக்கத்தக்க விஷயம்' என்பது தலையங்கமாகும். கடப்பை மாவட்ட மாநாட்டின் தலைவர் மீர்அசட் அலிகானின் தலைமையுரை பாராட்டப்பட்டு, அதன்

சாராம்சங்கள் பன்னிரண்டு தரப்பட்டுள்ளன. பன்னிரண்டாவது சாராம் சமாகப் பின்வருவதை லோகோபகாரி தலையங்கம் குறிப்பிட்டு உள்ளது:

> தென்னிந்தியாவில் இந்துக்களும், மகம்மதியர்களும் சிநேக பாவ மாயிருப்பது ஸ்லாகித்தற்குரியதாம். வடவிந்தியாவில் அவ்வாறில் லாதிருப்பது விசனகரமேயாம். மகம்மதியர்கள் பசுக்கொலையை விட்டுவிடுதல் வேண்டும்; இந்துக்கள் மசூதிக்களுக்கருகே விக்ரகங்களைக் கொண்டுபோதல் கூடாதாம். யுத்தம் முடிந்ததும் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் கௌரவ ஸ்தானத்தைப் பெறும்.

லோகோபகாரி, அக்காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸை யும், அன்னி பெசண்ட் அம்மையாரின் 'ஹோம்ரூல்' இயக்கத்தையும் ஆதரித்துச் செய்திகளை வெளியிட்டு வந்தது. 'லக்நோக் காங்கிரஸ்' எனும் தலைப்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இந்தியப் பாது காப்புச் சட்டம் ராஜத்துரோகிகளை யடக்க ஏற்பட்டதன்றி, ராஜ விசு வாசமும், தெய்வ விசுவாசமுமுள்ள அந்நிபெசண்ட் அம்மையாரைப் போன்றவரைத் தொந்தரவு செய்ய ஏற்பட்டதன்றாம்' என்று பத்திரிகை யின் கருத்தைச் செய்தி விமர்சனமாகவும் வெளியிட்டது லோகோப காரி. காங்கிரசும் ஹோம் ரூல் இயக்கமும் ராஜ விசுவாசத்தைக் கைவிடாமல் அக்காலத்தில் இந்திய தேசியத்தை வளர்த்து வந்தன என்பதும் நினைவிற்குரியதாகும். 'பம்பாய் ஹைகோர்ட்' எனும் செய் திக் குறிப்பில் 'திலகரது நன்னடக்கைக்காக வாங்கப்பட்ட ஜாமீன் பம்பாய் ஐக்கோர்ட்டில் ரத்து செய்யப்பட்டது' வரவேற்கப்பட்டது.

'தேசாபிமானம்' எனும் மற்றொரு செய்திக் குறிப்பும் முக்கியத் துவம் வாய்ந்ததாகும். கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அயல் நாட்டுப் பயணத்தில் தேசாபிமான உணர்வுடன் நடந்து கொண்டதாகவும் பாராட்டும் செய்திக் குறிப்பின் விவரம் வருமாறு:

> இப்போது அமெரிக்காவில் உபந்யாசஞ் செய்து வரும் சர் ரவீந்திர நாத தகோர் டாரண்டோவிலும் மாண்டரீலிலும் உபந்யாசஞ் செய்ய அழைக்கப்பட்டனர். அவர் அதற்கிணங்கவில்லை. அதற்குக் காரணம் கானடாவாசிகள் இந்துக்களை அவமரியாதையாக நடத்துவதேயாகும். இந்துக்களை அவமரியாதையாக நடத்தும் ஆஸ்திரேலியாவிலும், கானடாவிலும் அவர் காலடி வைக்க மாட்டேனென்று கூறுகின்றார். அவர் ஆஸ்திரேலியா வாசிகளும், கானடா வாசிகளும் இந்துக்களுக்குச் செய்யும் அவமரியாதை தமக்குச் செய்ததாகுமென்று கருதியிருக்கின்றார். இந்துக்க ளெல்லாம் இவ்வாறு கருதி நடப்பார்களாயின் அந்நிய தேசத்தார்

> இந்துக்களைக் கௌரவமாக நடத்த முற்படுவார்கள். இந்துக்கள் பொருள் வருவாயைப் பிரதானமாக நினைக்காது தமது கௌரவத்தைப் பிரதானமாக நினைத்து அதனைக் காப்பாற்ற முற்படுதல் வேண்டும்.

தேசிய சுயமரியாதையை வளர்த்துக்கொள்ள வேண்டும், பாது காத்துக் கொள்ள வேண்டும் என்பதில் லோகோபாரிக்கு இருந்த கொள்கைப்பிடிப்பை மேற்காணும் செய்தியின் இறுதி வரிகள் தெளி வாக்குகின்றன.

பக்கங்கள் 7, 8, 9

இந்த மூன்று பக்கங்களிலும், 'சென்னை வர்த்தமானம்', 'சுதேச வர்த்த மானம்', 'பிறதேச வர்த்த மானம்' எனும் தலைப்புகளில் பல விதமான செய்திகள் உரியதலைப்புகளுடன் வெளியிடப்பட்டன. இவற்றுள், 'ராய்ட்டர் கம்பெனி' எனும் பிறதேச வர்த்தமானம் வாசகர்களுக்கு 'ராய்ட்டர் செய்தி' நிறுவனத்தின் வரலாற்றைச் சுருக்கமாகப் பின்வருமாறு வழங்கியுள்ளது:

> உலக முற்றும் நடக்கும் சமாச்சாரங்களைத் தந்தி மூலமாகப் பற்பல தேசங்களுக்குத் தெரிவித்து வரும் ராய்ட்டர் கம்பெனியை லண்டனிலுள்ள கேபிஸ் கம்பெனியார் வாங்கி விட்டனரென்று தெரிகின்றது. இக்கம்பெனி 1851வது வருஷத்தில் ஜுலியஸ் ராய்ட்டரென்பவரால் லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் ஜெர்மன் தேசத்திலுள்ள காஸல் என்னுமூரில் பிறந்தவர். இவர் லண்டனுக்கு வந்து மேற்படி கம்பெனியை ஸ்தாபித்தபின், பிரிட்டிஷ் பிரஜையாக அதிகாரிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவர்க்குப்பின் இவரது புத்திரராகிய பாரன் ராய்ட்டரென்பவர் அக்கம்பெனியை நடத்தி வந்து சென்ற வருஷத்தில் தற்கொலை செய்து கொண்டிறந்தனர். இக்கம்பெனிக்கு உலக முற்றும் பிரதான கரங்களிடம் கிளையாபீ தக்களிருக்கின்றன. மேற்படி ஜுலியஸ் ராய்ட்டரென்பவர் முதலில் ஒரு பாங்கியில் குமாஸ்தா வாக விருந்து, தமது முயற்சியால் முன்னுக்கு வந்து பெரும் பெயர் பெற்றனர். இக்கம்பெனி இப்போது நடைபெற்று வரும் யுத்தங் காரணமாகப் பெரும் லாபமடைந்து வருகின்றது. 'ராய்ட்டர் தந்திகள்' என்ற தலைப்பில் செய்திகள் லோகோபகாரி யில் வெளிவந்தன.

பக்கம் 9இல் புதுவை என். சுப்பிரமணிய ஐயர் எழுதிய 'ஸ்ரீ கண்ணன் பிறந்த நாள்' (கோகுலாஷ்டமி) எனும் கவிதை வெளி வந்துள்ளது.

பக்கங்கள் 10, 11, 12

இப்பக்கங்களில் பெரும்பான்மை புத்தக விளம்பரங்களும், சிறுபான்மை 'சுதேசவர்த்தமானம்' செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

23.7.1917இல் வெளிவந்த லோகோபகாரி

இந்த இதழில் வெளிவந்துள்ள 'சுதேசியம்' எனும் தலையங்கம் குறிப்பிடத்தக்கது. 1905இல் வங்கத்தில் தோன்றிப் பாய்ந்து பரவிய வந்தே மாதர இயக்கத்துடன் கிளைத்த சுதேசி இயக்கத்தின் தீவிரவாதம் இந்தத் தலையங்கத்தில் எதிரொலிக்கவில்லை. மாறாக 'ராஜத்துவேஷமாகமாட்டாது', 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மாட்சிமைக்கு அடிப்படையாக விருக்கும்' என்னும் சொற்றொடர்கள் தலையங்கத்தின் மிதவாதத்தை அடையாளம் காட்டுகின்றன. தலையங்கத்தின் சில பகுதிகளைப் பார்ப்போம்.

> இப்போதும் எங்கும் சுதேசியப் பேச்சே பொங்கி வழிகின்றது. சுதேசியவுணர்ச்சி தேசாபிமானத்தையும் பொறுத்ததாக விருக்கின்றது. சுதேச வுணர்ச்சியைப் பரவச் செய்வது ராஜத்துவேஷமாக மாட்டாது... இந்தச் சுதேசியவுணர்ச்சி புதிதாகவுண்டானதன்று; அந்நிபெசண்ட் அம்மையார் முதலியோரைப் பந்தோபஸ்தில் வைத்ததனாலுண்டான கிளர்ச்சி யென்று அதிகாரிகள் நினைத்தல் கூடாது; லார்ட் கர்சன் காலத்தில், வங்காளப் பிரிவினையின் காரணமாக உண்டான தென்றும் கருதுதல் கூடாது. லார்ட் கர்சன் காலத்திற்கு முன்னரே சுதேசிய வுணர்ச்சி இந்தியாவில் தோன்றிப் பரவிவருகின்றது.... யுத்தங்காரணமாக இந்தியா இப்போது சிறிது நல்விழிப் படைந்திருக்கின்றது... இக்கட்சி வன்மை பெற்று வரவர நமது தேசம் பொருளாதார மிகுதியுடையதாகும். பொருளாதாரமுடைய தேசமே கல்வி - கைத்தொழில் - வியாபார முதலியவற்றில் மேல் நிலைமையடைதல் கூடும். இந்தியா மேல் நிலைமையை யடையுமாயின் அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மாட்சிமைக்கு அடிப்படையாகவிருக்கும்.

'சென்னை கிறிஸ்டியன் காலேஜ்' எனும் தலைப்பில் வெளிவந்துள்ள செய்தி, 'ஆசாரத்திருத்தத்தைக் காலேஜ் நிர்வாகஸ்தர் அதிகாரத்துடன் செலுத்த முற்படுவது முறை பிறழ்ந்த செய்கையேயாகும்' என்பதை வலியுறுத்துகின்றது. கிறிஸ்துவக் கல்லூரியில் பிராமணரல்லாத மாணவர்களுக்கென்று தனியாக சாப்பாட்டு விடுதி இருந்தது. இதில் கிறிஸ்துவ மாணவர்களையும் சேர்க்கக் கல்லூரி

நிருவாகம் முடிவு செய்ததை லோகோபகாரி கண்டித்தது. 'இந்துக்கள் பல்வேறு வகுப்பினராயிருத்தலின், அவர்களுக்குள் ஒற்றுமையில்லாதிருக்கின்றது. அவ்வாறுள்ள அவர்கள் அந்நிய ஜாதி மதஸ்தராகிய கிறிஸ்துவரோடு ஒற்றுமையுடன் வாழமாட்டார்களென்பதனைக் காலேஜ் அதிகாரிகள் தீர்க்கமாகக் கணித்து, இந்து மாணவர்கட்குண்டாயிருக்கும் கலக்கத்தை மேலும் பெருகச் செய்ய மாட்டார்களென்றெதிர்பார்க்கின்றோம்.' இவ்வாறு லோகோபகாரி எழுதியது அதன் சமூகச் சீர்திருத்தக் கண்ணோட்டத்தின் பலவீனத்தைக் காட்டுகின்றது.

'ஹோம் ரூல் தினக் கொண்டாட்டங்கள்' எனும் தலைப்பில் வெளிவந்த செய்தியொன்றிலும் லோகோபகாரியின் பலவீனம் வெளிப்பட்டுள்ளது. மக்கள் எழுச்சியில் முழக்கங்களும் அவற்றையெழுப்பும் ஊர்கோலங்களும் ஏற்கத்தக்கன. அரசியல் கிளர்ச்சியின் ஓர் அங்கமாகத் திகழ்வது திரண்டெழும் ஊர்க்கோலம் - இதை லோகோபகாரி ஏற்காதது வியப்பிற்குரிய பலவீனமாகும்.

1917 ஜூன் 16இல் அன்னிபெசண்ட் அம்மையார் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவருடைய 'ஹோம் ரூல்' இயக்கப் பிரச்சாரத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒடுக்க முற்பட்டது. இதனால் ஹோம்ரூல் இயக்கத்தை உருவாக்கிய அன்னி பெசண்ட் அம்மையார் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட நாளை 'ஹோம் ரூல்' நாளாக அந்த இயக்கத்தினர் கொண்டாடினர். இதற்காக ஊர்வலமும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டை லோகோபகாரி பின்வருமாறு விமர்சனம் செய்தது.

> இக்கூட்டங்களில் ஊர்க்கோலம் வரவேண்டுமென்னும் ஏற்படும் ஒருவிதமான அநுகூலத்தையும் ஜனங்களுக்கு உண்டாக்காதாம். இவ்வாற்றால் ஜனத்தலைவர்களென்று கூறப்படுவோர் கவர்ன்மெண்டாரின் அதிருப்தியைச் சம்பாதித்து கொள்ளுகின்றனரேயன்றித் தம் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளும் மார்க்கங்களைத் தேட முற்படாதிருக்கின்றனர்... ஊர்க்கோலம் வருவது முதலிய அற்பமான செய்கைகளில் ஜனத்தலைவர்களென்று கூறப்படுவோரும் தலையிட்டுக் கொள்ளுவதினால், அதிகாரிகள் தம்முடைய அதிகாரத்தைச் செய்ய முற்படுகின்றனர்.

லோகோபகாரி ஆசிரியர் வடிவேலு செட்டியார் இயக்கங்களின் அவசியத்தை ஆற்றலை முற்றிலும் அறிந்தவர். 'ஆஸ்திகத்தையும், அத்வைத வேதாந்தத்தையும், திருக்குறள் பகவத்கீதை போன்ற நூல்களையும் குறைகூறும் பகைவர்களை வீரவாதம் புரிந்து

அழிக்கவல்லவர்' என்றும் வடிவேலு செட்டியார் புகழ்பூத்தவர்; வேதாந்த பிரச்சாரத்திற்காக மாநாடுகள் பலவற்றை நடத்திய புதுமையைப் படைத்தவர்; அவர் ஜனநாயகக் கிளர்ச்சிக்கு ஆக்கம் தரும் ஊர்க்கோலத்தை 'அற்பமான செய்கை' என்று மதிப்பிடுவது கண்டனத்திற்குரியது. 1997 நவம்பர் 12இல் பாரதத்தின் உச்ச நீதிமன்றம் 'பந்த்', 'ஊர்வலம்' முதலானவற்றைச் சட்டவிரோதம் என்று தீர்ப்பளித்த போதிலும், அந்நிய ஆதிக்கத்தில் அவை தேவைப் பட்டன என்பது விடுதலைப் போராட்ட வரலாற்றில் போற்றப்பட்டது.

பிராமணரல்லாதார் இயக்க எதிர்ப்பில் லோகோபகாரி

நீதிக் கட்சியின் பிராமணரல்லாதார் இயக்கத்தை தேசாபிமான மற்ற இயக்கம் என்று லோகோபகாரி எதிர்த்தது.

1917 அக்டோபர் 7இல் சென்னை 'ஸ்பர்டேன்க்' சாலையில் நடைபெற்ற 'பஞ்சமர்' கூட்டத்தில் சில பஞ்சமர்கள் பிராமணர்கள் சிலரையும் பிராமணரல்லாதவர்கள் சிலரையும் அடித்துவிட்டனர். இதைக் கண்டனம் செய்து லோகோபகாரி அக்டோபர் 16, 1917 இல் எழுதியது. காவல் துறையினர் தலையிடாமல் பார்த்துக் கொண் டிருந்ததாகவும், அவர்கள் உடனடியாகத் தலையிட்டிருந்தால் இந்த அநியாயத்தை பஞ்சமர்கள் செய்திருக்கமாட்டடார்கள்' என்று லோகோபகாரி எழுதியது.[12]

'சென்னைப் பட்டிணத்தில் நாயர் சாதிக் கூட்டமொன்றில் பறையரை விட்டு இரண்டு மூன்று பார்ப்பனரை அடிக்கும்படி தூண்டியதாகப் பத்திரிகைகளில் வாசித்தோம்' என்று பஞ்சமர் என்னும் கட்டுரையில் பாரதியார் குறிப்பிட்டுள்ளார். இங்கு நாயர் சாதி என்பது நீதிக் கட்சியாகும். 'அடிக்கத் தூண்டியவனைக் கண்டித்து பாரதியார் எழுதியதுடன், 'நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேரே நடத்த வேண்டாமா? அது சரி தான் பறையன் கைநீட்டாமல் இருப்பதற்கு வழிதேடிக் கொள்ளுங் கள்' என்று எழுதினார்.[13]

1917 நவம்பர் 19 லோகோபகாரியில் விஜயவாடாவில் நடை பெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டில் நீதிக்கட்சித் தலைவர் பிட்டி தியாகராச செட்டியாரின் தலைமையுரை பற்றிய விமர்சனம் வெளி வந்தது. ஹோம் ரூல் இயக்கம் பிராமணர் ஆதிக்கத்திற்குத் துணை நிற்பது எனும் கருத்தை விளக்கித் தியாகராச செட்டியார் பேசினார். ஹோம்ரூல் இயக்கத்தில் மற்றச் சாதியினர் பெருமளவில் சேர்ந்து

விட்டால் பிரச்னை இருக்காது என்றும் ஹோம்ரூல் உலகெங்கும் காணப்பெறும் சுதந்திர வேட்கையில் மலர்ந்ததாகும் என்றும் லோகோபகாரி எழுதியது.[14] 3.6.1918இல் 'டாக்டர் நாயர்' எனும் துணைத்தலையங்கம் லோகோபகாரியில் வெளிவந்தது. இதில் டாக்டர் நாயரை தேசத்துரோகி என்று குறிப்பிட்டு மிகக் கடுமையாகப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

> இந்திய சுவராஜ்யக் கட்சிக்கு விரோதமாயிருக்கும் டாக்டர் நாயரை இங்கிலாந்திற்குச் செல்ல கவர்ன்மெண்டார் அநுமதி கொடுத்தது அடாத செய்கையேயாகும். சுவராஜ்யக் கட்சியினர் இங்கிலாந்துக்குச் செல்லவிருந்தது தடை செய்யப்பட்டது. டாக்டர் நாயர் தேக அசௌகரியத்தின் பொருட்டு இங்கிலாந் திற்குச் சென்றாரென்று மதராஸ் மெயில் பத்திரிகை கூறு கின்றது. தேசசுகத்திற்கன்றித் தேசத்துரோகஞ் செய்யச் செல்கிறா ரென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. டாக்டர் நாயர் தேசத் துரோகமான காரியங்களைச் செய்ய இங்கிலாந்து செல்கின்றா ராதலின் அவர் திரும்பி வருவது சந்தேகமேயாகும். தாம் பிறந்த தேசத்திற்கே கேட்டைத்தரும் காரியங்களைச் செய்ய முற்படுவர் களுக்குக் கடவுள் சகாயஞ்செய்வாரா?[15]

நீதிக்கட்சியின் பிராமணரல்லாதார் இயக்கத்தில் தேசாபிமான மற்ற பேச்சுகள் பேசப்பட்டதைப் பாரதியாரும் கேட்டுச் சீற்றமடைந்த செய்தியும் உண்டு. ஒரு முறை பிராமணரல்லாதார் இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவரான ஸர். சங்கரன் நாயர் (இவர் முதலில் காங்கிரஸ் இயக்கத் தலைவராய் இருந்தார்) அழைப்பின் பேரில் அவருடைய கட்சியின் கூட்டத்திற்குப் பாரதியார் சென்றார். அங்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பாரதியாரின் புதல்வி சகுந்தலா பாரதி பின்வருமாறு எழுதியுள்ளார்:

> அதில் பலர் பலவாறு பேசுவதையும் என் தந்தை பொறுமை யாகவே கேட்டுக் கொண்டு வந்தாராம். ஆனால் ஒருவர் தம் தாய் நாட்டை இகழ்ந்து பேசுவதை மட்டும் அவரால் பொறுக்க முடியவில்லையாம். எழுந்து நின்று ஆங்கிலத்தில் 'துரோகி' (Traitor) என்று கத்தினாராம். பின் அங்கிருந்தவர்கள் என் தந்தைக்குச் சமாதானம் கூறியழைத்து வந்தார்களாம்.[16]

லோகோபகாரியும் பிரபஞ்சமித்திரனும்

கோ. வடிவேலு செட்டியார், பிரபஞ்சமித்திரனின் உரிமை யாளரும், ஆசிரியருமான மங்கலம் ஷண்முக முதலியாரை 'எனது ஆப்த நண்பரும் தத்துவ சாஸ்திர விசுவாசமுடைய மங்கலம் - ஸ்ரீ மத்

ஷண்முக முதலியார்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.[17] மங்கலம் ஷண்முக முதலியார் சுப்பிரமணிய சிவாவின் நண்பரும் ஆவார். சிவாவின் 'ஞானபாநு' மாத இழை 1916 அக்டோபரில் தமக்கு உரிமையாக்கிக் கொண்டார். 23.6.1916இல் சென்னை கோமளேசுவரன் பேட்டையில் இருந்து வெளிவந்த வார இதழான பிரபஞ்ச மித்திரனின் 'காரியஸ்தராக' சுப்பிரமணிய சிவாவை நியமித்தார் ஷண்முக முதலியார்.

லோகோபகாரியின் அச்சகமான சச்சிதானந்தா அச்சகத்தில் தான் பிரபஞ்சமித்திரனும் அச்சிடப்பட்டது. இரு இதழ்களிலும் ஒன்றில் வெளிவந்த கட்டுரை மற்றொன்றில் மறுவெளியீடாக வெளியிடப்பட்டு வந்தது. ம. ஷண்முக முதலியாரும் கோ. வடிவேலு செட்டியாரும் இணைந்து சில நூல்களைப் பதிப்பித்துள்ளனர்.

தர்க்காமிர்தம் (1913), வேதாந்த சூடாமணி வசன வினா விடை பதவுரையுடன் (1927), சிவஞானபோத மூலமும் தெளி பொருள் விளக்கவுரையும் (1928) முதலான நூல்களை இருவரும் இணைந்து வெளியிட்டனர்.

லோகோபகாரியைப் போலவே பிரபஞ்சமித்திரனும் 'தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம்' பரவிடப் பாடுபட்டது. 'நாரதர்' எனும் புனைபெயரில் சுப்பிரமணிய சிவா எழுதிவந்த குறிப்புகள் புகழ் ஈட்டின. திலகரின் 'ஹோம்ரூல்' இயக்கத்தின் பம்பாய் - தாதர் கிளையின் செயலாளராக விருந்த கோ.வெ.பா. சிவம் எழுதிவந்த கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. விண்ணாற்று முடிச்செல்வனார் எழுதிய 'தனித்தமிழ்' எனும் கட்டுரை, தமிழ்ச்சொற்களின் தோற்றம், பொருட் சிறப்பு முதலானவற்றை ஆய்ந்துள்ளது.[13] பிரபஞ்ச மித்திரனின் முதல் பக்கத்தில் முகப்புக் கவிதையாகத் திருஞானசம்பந்தரின் 'வாழ்க வந்தணர் வானவ ரானினம்' என்று தொடங்கும் தேவாரப் பாடல் இடம் பெற்றுள்ளது. லோகோபகாரியைப் போலப் பிரபஞ்சமித்திரனும் சமூகச் சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் முற்போக்காக இல்லை.

பாரதியாரின் ஒரு கட்டுரை லோகோபகாரியிலும், பிரபஞ்ச மித்திரனிலும் மறுவெளியீடாகவும் வந்துள்ளது.

1917 அக்டோபர் 16இல் சுதேசமித்திரனில் பாரதியாரின் 'மிருகங்களைச் சீர்திருத்தல்' எனும் கட்டுரை வெளியிடப்பட்டது. இக்கட்டுரையில் மிருகங்களைப் பலியிடுவதையும், வேட்டை

யாடுவதையும், மாமிச உணவிற்காகக் கொல்வதையும் பாரதியார் கண்டித்துள்ளார். இந்தக் கட்டுரையை முதலில் லோகோபகாரி 22.10.1917இல் வெளியிட்டது. பிரபஞ்சமித்திரன் அடுத்த நாள் 23.10.1917இல் வெளியிட்டது.[19]

மிருகபலி தடுப்பு இயக்கத்தில் வடிவேலு செட்டியார் பங்கேற் றிருந்தார். இதனால் பாரதியார் கட்டுரை அவரைக் கவர்ந்துள்ளது. வடிவேலு செட்டியாரின் லோகோபகாரி இதழ்கள் அனைத்தும் கிடைக்காத நிலையில் அதன் ஆசிரியர் பாரதியாரைப் பற்றி ஏதேனும் கூறியுள்ளரா அல்லது பாரதியார் கவிதைகள் - கட்டுரை கள் லோகோபகாரியில் வெளிவந்தனவா என்பதை அறிவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் பிரபஞ்சமித்திரனில் பாரதியார் கடிதம் 10.11.1916இல் ‘தர்க்க நெறி’ எனும் தலைப்பில் வெளியிடப் பட்டுள்ளது.[20] பிரபஞ்சமித்திரன், புதுச்சேரியில் பாரதியார், வ.வே.சு. ஐயர், எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியர் - மூவரும் புயல் நிவாரணப் பணி புரிந்ததைப் பாராட்டி 1.12.1916இல் எழுதியுள்ளது.[21] புதுச்சேரியில் 1916 நவம்பரில் வீசிய புயல் காற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்படி மூவரும் தொண்டாற்றியதைப் பிரபஞ்சமித்திரன் பாராட்டி யுள்ளது. “இவர்கள் காற்று மழையாலிடிந்து வீழ்ந்த பல வீடுகளி லுஞ் சென்று ஏழை ஜனங்கள் அபாயத்திலாகதபடி தங்கள் பிராமண சாரத்தையும் பெருமையையும் விலக்கிச் சகோதர வாஞ்சையைக் கொண்டு தொண்டு புரிந்தார்கள்” என்று பிரபஞ்சமித்திரன் பாராட்டியுள்ளது.

கவிஞர் தாகூர் கனடாவில் பேசமறுத்த செய்தியைப் பாராட்டி லோகோபகாரி 1916 நவம்பர் 20இல் வெளியிட்ட செய்திக் குறிப்பு, பிரபஞ்சமித்திரனில் 1916 நவம்பர் 17இல் வெளிவந்த ‘சர் இரவீந்திரநாத்தாகூரும் கானடாவும்’ எனும் தலைப்பில் வெளி வந்த செய்தியை ஒத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபஞ்சமித்திரனில் 1917இல் வெளிவந்த சில கட்டுரைகள் அரசாங்கத்தின் கண்டனத்திற்குரியன என்பதால், பத்திரிகையை அச்சிட்ட வடிவேலு செட்டியாரின் சச்சிதானந்தா அச்சகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடிவேலு செட்டியார் ஈடுகாணம் கட்டவேண்டும் என்று கோரப்பட்டது. பிரபஞ்சமித்திரன் மீது சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படாமல் எச்சரிக்கை மட்டும் செய் யப்பட்டது. இதன் காரணமாக வடிவேலு செட்டியாரிடம் கோரப் பட்ட ஈடுகாணமும் கைவிடப்பட்டது.[22]

'சக்ரவர்த்தினி'யின் ஆசிரியராக கோ. வடிவேலு செட்டியார்

லோகோபகாரியின் ஆசிரியராக இருந்துகொண்டே, 'சக்கர வர்த்தினி' எனும் மாத இதழின் ஆசிரியராகவும் இருந்தார் வடிவேலு செட்டியார். சென்னை திருவல்லிக்கேணியில் இருந்து 1905 ஆகஸ்ட் முதல் 'தமிழ்நாடு மாதர்களின் அபிவிருத்தியே நோக்க மாகக் கொண்டு வெளிவந்தது சக்கரவர்த்தினி. இதன் உரிமையாளர் பி. வைத்திய நாதய்யர் என்னும் புத்தக விற்பனையாளர். பாரதியார் இதன் முதல் ஆசிரியராக 1905 ஆகஸ்ட் முதல் 1906 ஆகஸ்ட் வரையில் இருந்தார்.[23] இதற்குப் பிறகு உரிமையாளர், ஆசிரியர்கள் மாறியுள்ளனர். 1912 பிப்ரவரி முதல் கோ. வடிவேலுசெட்டியார் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் பொறுப்பேற்றார்.

> பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
> னொன்மை யுறவோங்கு முலகு

எனும் குறட்பா வடிவில் அமைந்தது பாரதியாரின் சக்கரவர்த்தினி முதல் இதழின் முகப்பு வரிகள். வடிவேலு செட்டியாரின் சக்கரவர்த்தினியில்,

> கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி

எனும் திருக்குறளின் மெய்யுணர்தல் அதிகாரத்தின் குறட்பாவை இலட்சிய முகப்பாகக் கொண்டது. இது வேதாந்தத் தத்துவ போதகாசிரியரான வடிவேலு செட்டியாரின் சக்ரவர்த்தினி தத்துவப் பார்வையை விளக்குவதாகும். லோகோபகாரி அச்சாகி வந்த சச்சிதானந்தா அச்சகத்திலேயே ஞானபாநுவும் அச்சாகி வந்தது. 1916இல் வெளிவந்த 68 இதழ்களில் சக்ரவர்த்தினியும் ஒன்றாகும். 200 பிரதிகள் வெளியிடப்பட்டன. இதே ஆண்டில் லோகோபகாரி 1300 பிரதிகள் வெளியிடப்பட்டது.

நெல்லையப்பரின் லோகோபகாரி – I

லோகோபகாரியின் உரிமையாளராகவும் ஆசிரியராகவும் 1922இல் பரலி சு. நெல்லையப்பர் பொறுப்பேற்றதற்கு முன்பு இந்திய தேசிய விடுதலைப் போராட்ட இதழ்களில் பணியாற்றிய முன் அனுபவம் பெற்றார்.

புதுச்சேரியில் இருந்து வெளிவந்த தேசிய இதழ்களில் பரலி சு. நெல்லையப்பருக்கு இதழியல் பயிற்சியும், பங்கேற்பும் வாய்த்தன.

புதுச்சேரி 'சூரியோதயம்', புதுச்சேரி 'விஜயா', 'கர்மயோகி' முதலான தேசிய இதழ்களில் நெல்லையப்பர் பணியாற்றியுள்ளார்.

சென்னையில் சதாவதானம் தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலரின் 'பாரதி' (நாளிதழ்) - 1916, தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் 'தேச பக்தன்' (நாளிதழ்) - 1917 இதழ்களிலும் நெல்லையப்பர் பணியாற்றித் தமது பத்திரிகைத்துறை ஆற்றலை வளர்த்துக் கொண்டார். 1921இல் தேசபக்தன் ஆசிரியர் வ.வே.சு. ஐயர் (திரு.வி.க.விற்குப் பிறகு ஆசிரியர்) சிறை செய்யப்பட்ட சமயம் நெல்லை யப்பர் அப் பத்திரிகையின் ஆசிரியரானார்' என்று பாரதி அறிஞர் ரா.அ. பத்மநாபன் குறிப்பிட்டுள்ளார்.[24] பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவச் செழுமை பெற்ற ரா.அ. பத்மநாபன், நெல்லையப்பரின் பத்திரிகையாளர் தகுதியை உறுதிப்படுத்திய பாரதியாரின் 'நன்கு மதிப்பு' என்று தலைப்பிட்ட அரிய கடிதத்தையும் 'சித்திர பாரதி' யில் பாரதியார் கையெழுத்திலேயே முதன்முதலில் வெளி யிட்டார்.

இந்தக்கடிதம், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் நெல்லையப்பர் இருந்த காலத்தில் 'ராக்ஷஸ வருஷம் ஐப்பசி 25'இல் அவருக்கு பாரதியார் எழுதியது. 1916இல் எழுதப் பெற்ற கடிதத்தின் வாசகங்கள் வருமாறு:

> தமிழ்ப் பத்திரிகை நடத்தும் தொழிலில் ஸ்ரீ ப.சு. நெல்லையப்ப பிள்ளை நல்ல திறமையுடையவர் என்பதை நானறிவேன். இவரை உதவியாகக் கொண்டு நடத்தப்படும் பத்திரிகையை ஜனங்கள் மிகவும் ஆதரிப்பார்களாதலால், அதற்கு நல்ல புகழும் லாபமும் உண்டாகுமென்பது என்னுடைய நம்பிக்கை.

1915இல் வடிவேலு செட்டியாரின் லோகோபகாரியில் நெல்லையப்பர் துணையாசிரியரானார் என்றும் கூறப்படுகின்றது.[25]

நெல்லையப்பர், லோகோபகாரியின் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் பொறுப்பேற்ற பின்னணியை அமரர் நாரண துரைக் கண்ணன் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:

> லோகோபகாரி பத்திரிகைக்கு இலக்கிய இலக்கண சமய தத்துவபோதக ஆசிரியர் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்று விளங்கியிருந்த கோ. வடிவேல் செட்டியார் நீண்ட காலம் ஆசிரியராக இருந்தார். அப்பத்திரிகையில் நெல்லையப்பர் அவர்கள் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார். அவ்வகையில் வடிவேல் செட்டியாருடன் நெல்லையப்பருக்கு நெருக்கமான நட்பு ஏற்பட்டது. லோகோபகாரி பத்திரிகையை

> வெளியிட்டு வந்தவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுப் பத்திரிகையை நடத்த முடியாமல் துன்புறலாயினர். எந்தச் சமயமும் பத்திரிகை நின்றுவிடும் அவலநிலை ஏற்பட்டது.
>
> இந்த நிலையறிந்த நெல்லையப்பர் பத்திரிகையைத் தன்னிடம் கொடுத்தால் தொடர்ந்து நடத்துவதாக வாக்குறுதி அளித்தார். எப்படியும் பத்திரிகை வந்தால் நல்லது என்ற எண்ணம் கொண்ட வடிவேல் செட்டியார் நெல்லையப்பர் கேட்ட உடனே நீங்களே லோகோபகாரியை ஏற்று நடத்துங்கள் என்று இசைவு தந்து விட்டார்.[26]

தமிழ் பத்திரிகை வளர்ச்சிக்குப் பிறமொழிப் பத்திரிகைகள் வளர்ச்சி பற்றித் தெரிந்துகொள்ளுதலும் பயன் தரத்தக்கது என்பதைக் குறிப்பாக பாரதியார் உணர்த்துவார் போன்று 1915 சூலை 19இல் புதுச்சேரியிலிருந்து நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்:

> ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திருந்து, அந்தப் பாஷைப் பத்திரிகைகள் என்ன அற்புத மான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத்தெரிந்து கொள்ள முடியுமானால், தமிழ் நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும்.[27]

பாரதியார் குறிப்பிட்டதுபோல் நெல்லையப்பருக்கு வாய்ப்பேற்படாது போனாலும், லோகோபகாரியை அதன் பாரம்பரியப் பெருமை மேலும் சிறந்திட நடத்தினார். "தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம்" மூன்றும் லோகோபகாரியின் பாரம்பரியப் பெருமையாகும். இதைச் செழுமைப்படுத்தும் வகையில் இந்திய தேசிய காங்கிரசின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வண்ணம் லோகோபகாரியை நடத்தி 'லோகோபகாரி நெல்லையப்பர்' என்றும் புகழ் பெற்றார்.

லோகோபகாரியின் தொடர் எண், வி. நடராச ஐயர், வடிவேலு செட்டியார் காலத்தின் லோகோபகாரியின் தொடர்ச்சியாகவே குறிப்பிடப்பட்டது. கோ. வடிவேலு செட்டியாரின் கோமளேசுவரன் பேட்டை சச்சிதானந்தா அச்சகத்தில் நெல்லையப்பரின் லோகோபகாரி அச்சிடப்பட்டு வியாழக்கிழமைதோறும் வெளிவந்தது. முதலாண்டு இதழ்கள் கிடைக்கவில்லை. லோகோபகாரிக்கு ஓராண்டுக் கையொப்பம் நான்கு ரூபாவாகவும், தனிப்பிரதியின் விலை இரண்டணாவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. நெல்லையப்பர் சென்னை குரோம்பேட்டையில் வாழ்ந்த காலத்தில் (1950-1971) பாதுகாத்து வைத்திருந்த லோகோபகாரி இதழ்களை எலிகள் 'பதம்' பார்த்து விட்டதால் பல

இதழ்கள் மறைந்து போனதாக நெல்லையப்பரின் அருமை நண்பர் ரா. அ. பத்மநாபன் கூறியுள்ளார்.

தம்முடைய 82 ஆண்டுகால வாழ்க்கையில் (19.9.1889 - 28.3.1971), வ.உ.சி., பாரதியார் இருவரையும் இரு கண்களாகக் கொண்டவர் நெல்லையப்பர். பாரதியார் கவிதைகள் சிலவற்றை முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டவர். இவருக்குப் பாரதியார் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தின் மகத்தான பங்களிப் பாகும். நெல்லையப்பரைத் 'தம்பி' என்று பாசமும் - நேசமும் பொங்க அழைத்தவர் பாரதியார். பாரதி புகழ் பரப்பிய முதல் முன்னோடி நெல்லையப்பர். விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகி; கவிஞராக, எழுத்தாளராக, பதிப்பாளராக, நூலாசிரியராக தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பத்திரிகையாளர் நெல்லை யப்பர். லோகோபகாரியில் பாரதியார் கவிதைகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தார். 'அப்பத்திரிகை மூலம் பாரதி எழுத்துக்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும் இணையற்ற தொண்டு புரிந்தார்' என்று 'சித்ரபாரதி'யில் ரா. அ. பத்மநாபன் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

நெல்லையப்பரின் பொது வாழ்க்கைப் பிரவேசம் சிதம்பரச் செம்மல் துணை கொண்டு நிகழ்ந்தது. பாரதியாரிடம் தோழமை கொண்டதற்கு முன்பாகவே வ.உ.சி.யிடம் தோழமை கொண்டார் நெல்லையப்பர். வ.உ.சி. அவர்கள் சிறையில் இருந்த காலத்தில் எழுதிய பாடல்களுள், 'சிரஞ்சீவி பரலி சு. நெல்லையப்ப பிள்ளைக்கு எழுதிய பாக்கள்' வழியே நெல்லையப்பர் வ.உ.சி.யின் குடும்பத்தில் ஒன்றிப் போய் ஆற்றிய தொண்டுகளைப் பற்றி விரிவாக அறிய முடிகின்றது. வ.உ.சி. அவர்கள் நெல்லையப்பருக்கு எழுதிய பாடல் களின் எண்ணிக்கை இருபதுக்கும் மேலாகும். தமது சிறைவாசக் காலத்தில் குடும்பத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்துக் கொள்ளுமாறு நெல்லையப்பருக்கு எழுதினார். இவற்றுள் மூன்று பின்வருவன:

1. அப்பனும்நீ ஐயனும்நீ ஆதியும்நீ யாவையும்நீ
செப்பமுடன் செப்பியதைச் செய்வாயேல் – தப்பில்
மனையாள்தன் மாதாவை மன்னிநிற்க – மாயேன்
மனையெய்தும் மாதம் வரை.

2. மாதம் முதல்தோறும் வள்ளிதரும் ஐம்மூன்றும்
ஏதமிலா தங்கவட்கே ஈந்திடுவாய் – மீதமா

வந்தாலோ அம்மாள்பால் வாங்கியோ மீட்டியணி
தந்தார்பால் தந்திருக்கச் செய்.

3. வாராதும் அன்னாள் வழங்காதும் நின்றிடுமேல்
சீரார் அணிவிற்றுத் தீர்த்தவற்றை – ஊரார்
கடன்களை முன்னம் கழறியுள சொத்தால்
கடன்கொடு கட்டிக் கழி.

பாரதியார், வ.உ.சி.யின் இலக்கியங்களில் நெல்லையப்பர் தோய்ந்தவரானாலும், தமக்கென்று ஒரு தனி நடையை உருவாக்கிக் கொண்டார். 'நெல்லையப்பருக் கென்றே ஒரு தனி நடை உண்டு. பாரதியிடம் அபார பக்தியும் நெல்லையப்பருக்கு உண்டு. எனினும் இவர் நடை பாரதியையோ, சிதம்பரம்பிள்ளையையோ தொத்தி அமைந்து இருக்கவில்லை. நெல்லையப்பர் பாணி என்றே சொல்லும்படி லோகோபகாரியில் எழுதி வந்தார்' என்று மூவரையும் நன்கு அறிந்த தமிழறிஞர் பி. ஸ்ரீ. ஆச்சார்யா குறிப்பிட்டுள்ளார்.[28]

நெல்லையப்பரின் லோகோபகாரி தமிழ் நடையைப் பற்றிச் 'சித்ரபாரதி' ரா. அ. பத்மநாபன் கூறியதாவது:

> எளிய தமிழில் பெரிய விஷயங்களை எழுதித் தமிழ்ப் பத்திரிகை வசன நடையை வளர்த்தவர்களில் நெல்லையப்பரும் ஒருவர். சிறுசிறு வாக்கியங்களில் எவரும் புரிந்து கொள்ளக் கூடிய சொற்களில் அவர் லோகோபகாரியில் எழுதி வந்த தலையங் கங்களும், 'பாரி' என்ற புனைபெயரில் எழுதி வந்த நானாவிதக் குறிப்புகளும், 'மண்ணெண்ணெய்ச் சனியனை' எதிர்த்தும் மகாத்மா காந்திக்காகவும், கதருக்காவும் ஆதரவு தந்தும் அவர் எழுதி வந்த விஷயங்களும் முந்தின தலைமுறைத் தமிழ்ப் பத்திரிகை வாசகர் களின் அபிமானத்தையும் பெரிதும் கவர்ந்தன.

மேற்கூறப்பட்ட கருத்துகளைச் சில அகச் சான்றுகளைக் கொண்டு சுருக்கமாக அறிவோம்.

1928 செப்டம்பர் 12இல் பக்கம் 6இல் எழுதப்பெற்ற 'பாரதி திருநாள்' எனும் தலையங்கத்தின் ஒரு பகுதியில் எளிமையும், தெளிவும், கருத்தாழமும் உள்ள தமிழ் நடையைக் காண்கின்றோம்:

> செல்வத்திற் சிறந்த தமிழ்நாட்டிலே பிறந்தும் அவர் தமது வாழ்நாளையெல்லாம் வறுமையிலும் அதனையொட்டிய சிறுமை யிலும் கழித்து விட்டு அவையிரண்டும் இல்லாத பெருநாட் டிற்குச் சென்றுவிட்டார்... பாரதியார் திருநாளைச் சென்னை

போன்ற சில நகரங்களில் கடற்கரைக் கூட்டங்களில், தமிழும் ஆங்கிலமும் அறியாத சிலர் அவர்களே போன்ற சிலரிடம் பாரதியார் பெருமையைப் பேசுவதால் மட்டும் கொண்டாடுவதால் பயன் விளையாது. பாரதியார் பாடல்களை - முதன்மையாக நாட்டுப் பாடல்களை லட்சக்கணக்காக அச்சிட்டு நாடெங்கும் பரவச் செய்து வாயுள்ள மக்களெல்லாம் பாடும்படி செய்ய வேண்டியது தலைமையான கடமையாகும்... பாரதி வாழ்க, அவரது பாடலும் வாழ்க.

பாரி என்ற புனைபெயர்

சங்ககாலக் கடையேழு வள்ளல்களில் ஒருவரான குறுநில மன்னன் பாரியின் பெயரைப் புனைபெயராகக் கொண்டு நெல்லை யப்பர், சொல்லிற்கேற்ற பொருள் விளங்கப் பல்வேறு கருத்துகளை 'பொழுதுபோக்கு' எனும் தலைப்பில் வாரி வழங்கிய பாரி வள்ள லாகத் திகழ்ந்தார். 'நான் கண்ட தமிழ் மணிகள்' எனும் நூலில் பாரி வள்ளலின் திருநாளை முதன்முதலில் கொண்டாடியவர் நெல்லை யப்பர் என்று பி.ஸ்ரீ. ஆச்சார்யா குறிப்பிட்டுள்ளார். பொழுதுபோக்கு, சிந்தனைப்போக்கைச் செழுமைப்படுத்த உதவும் வண்ணம் எழுதி வந்தார் நெல்லையப்பர். பெரும்பாலும் 'பொழுதுபோக்கு' பகுதி தலையங்கப் பக்கத்தின் நான்காம் பத்தியில் வெளிவந்து கொண் டிருந்தது. இப்பகுதியில் அவருடைய பலவகைப்பட்ட செய்தித் தொகுப்பாற்றலைக் காணமுடிகின்றது. சான்றாக 1928 செப்டம்பர் 18இல் பக்கம் 6இல் அவர் எழுதியதில் முதலாவதாக அமைந்த ஒரு கவிதை அவருடைய தேர்ந்த ரசனைச் சுவையை வெளிப் படுத்துகின்றது.

கிருஸ்துவ சமய ஞானியான ஜெர்மன் நாட்டு தாமஸ் எ. கெம்பிஸ் (1380 - 1471) அவர்கள் எழுதிய - தி இமிடேஷன் ஆஃப் க்ரைஸ்ட் (The Immitation of Christ) என்பது மிக அரிய சமய - தத்துவ ஞானநூல். சுவாமி விவேகானந்தர் இந்தியாவில் பரிவிராஜக ராகச் சுற்றுப் பயணம் செய்து வந்த காலத்தில் இரு ஞான நூல்களை எப்பொழுதும் கைவசம் வைத்திருப்பார். ஒன்று பகவத்கீதை; மற் றொன்று தாமஸ் எ. கெம்பிஸின் நூல். சுவாமி விவேகானந்தர் இந்த நூலின் முதல் பாகத்தில் இருந்து முதல் ஆறு அத்யாயங்களில் இருந்து சில பகுதிகளை வங்கமொழியில் மொழிபெயர்த்துள்ளார். இத்தகைய சிறப்பு வாய்ந்த தாமஸ் எ. கெம்பிஸின் சிந்தனைச் செறிவு வாய்ந்த ஓர் அருளுரையை நெல்லையப்பர் 'பொழுது போக்கு' என்னும் பகுதியில் பின்வருமாறு கவிதை வடிவில் எளிமை நனி துலங்க வழங்கியுள்ளார்:

எளிமையும் தூய்மையும்
இரண் டிறகாகும்
இவற்றால் மனிதன்
ஏற்றம் அடைகின்றான்
ஒழுக்கத்தில் எளிமையும்
காதலில் தூய்மையும்
பொருந்திய வாழ்க்கை
திருந்திய வாழ்க்கையாகும்

என்பது தாமஸ் எ. கெம்பிஸின் வாக்கு.

மண்ணெண்ணெய்ச்சனியன்

மண்ணெண்ணெய் விளக்குகள் கண்களுக்குத் தீங்கு பயப்பன. நமது பண்பாட்டுத் திருவிளக்கொளிக்கு நிகரானது அல்ல எனும் கண்ணோட்டத்தில் நெல்லையப்பர் லோகோபகாரியில் மண்ணெண்ணெய் உபயோகத்தைக் கண்டித்து வந்தார். இந்த 'மன எரிச்சலில்' மண்ணெய்ச் சனியன் என்றும் எழுதிவிட்டார்.

1928 சூன் 14இல் பின் வரும் விளம்பர வரிகளையும் தமது 'மண்ணெண்ணெய்' எதிர்ப்புப் பிரச்சாரத்தின் முழக்கமாக வெளியிட்டார் நெல்லையப்பர்:

மண்ணெண்ணெய்
விளக்கை
உடைத் தெறியுங்கள்
திருவிளக்கேற்றித்
தெய்வந்தொழுங்கள்

திரு.வி.க.வின் 'நவசக்தி'யில் லோகோபகாரியின் மண்ணெண்ணெய் எதிர்ப்புப் பிரச்சாரம் பற்றிக் குறிப்பிட்டதற்குப் பதிலுரையாக 1928 சனவரி 26இல் 'பொழுதுபோக்கு' எனும் தலைப்பில் 'பாரி' எனும் புனைபெயரில் நெல்லையப்பர் பின்வருமாறு எழுதினார்:

> நவசக்தியில் 'ஊர்வம்பு' எழுதும் ஒரு 'தேனீ' மண்ணெண்ணெயை ஒழிக்குமாறு பிரசாரம் செய்யும் லோகோபகாரி மீது இதற்காக அனுதாபம் காட்டுகிறது. லோகோபகாரி மண்ணெண்ணெயை ஒழிக்குமாறு பிரசாரஞ் செய்யவில்லை. மண்ணெண்ணெய் மண்ணிலே எப்பொழுதும் இருந்து கொண்டுதான் இருக்கும். மண்ணெண்ணெயைக் கொண்டு விளக்கேற்றிக் கண்ணைக் கெடுத்துக் கொள்ளலாகாதென்றுதான் லோகோபாகாரி பெரிதும்

> பிரசாரஞ் செய்து வருகிறது. ஆனால் மண்ணெண்ணெய் விளக்கேற்றிக் கண்ணைக் கெடுத்துக்கொண்ட தேனீ இந்த உண்மையை அறியாமற் போனது வியப்பல்ல.

இந்தத் தேனீ என்பவர் பிற்காலத்தில் புகழ்பெற்ற 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி ஆவார்.

இவ்விடத்தில் லோகோபகாரி கைக்குத்தல் அரிசியின் உயர்வுச் சிறப்பைப் பற்றிச் செய்துவந்த பிரசாரமும் நினைவு கூர்வதற்குரியது. இதைப் பற்றி, நெல்லையப்பரின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான பாரதி அறிஞர் பெ. தூரன் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> லோகோபகாரியில் கைக்குத்தல் அரிசியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினார். இந்தக் கட்டுரை அதே பத்திரிகையில் சுமார் நான்கு மாதங்களுக்கு ஒரு முறையாவது மீண்டும் மீண்டும் யாதொரு மாறுதலுமில்லாமல் வெளியாகும். பல தடவை இது வந்திருக்கிறதே என்று கேட்டால், 'நம் மக்கள்தானே! கைக்குத்தலரிசியின் முக்கியத்தை ஒரு தடவை படித்தால் மறந்து விடுவார்கள். அதற்காகத்தான் இப்படி வெளியிடுகிறேன்.'[29]

காந்தியப் பிரச்சாரம்

இந்திய தேசிய காங்கிரஸ், காந்தியடிகள் தலைமையின் கீழ் புத்தெழுச்சி கொண்ட காலத்தில் நெல்லையப்பரின் லோகோபகாரி காந்தியப் பிரசாரத்தில் முன்நின்றது. காந்தியடிகளின் 'சத்திய சோதனை' எனும் சுயசரிதை லோகோபகாரியில் தொடர் கட்டுரைகளாக வெளிவந்தது. அன்பகம் மு.பொ. ஈசுவரமூர்த்தி பிள்ளை மொழிபெயர்த்த காந்தியடிகளின் 'சுகவழி' எனும் தொடர் கட்டுரையும் லோகோபகாரியில் வெளிவந்து கொண்டிருந்தது. மகாத்மா காந்தியைப் பற்றிப் பல தலையங்கங்கள் லோகோபகாரியில் வெளிவந்தன. 1926 செப்டம்பர் 30இல் 'காந்தி வாழ்க' எனும் தலையங்கம் வெளிவந்தது.

1928 சனவரி 12இல் 'சொல்லும் செயலும்' எனும் துணைத் தலையங்கத்தில் காந்தியடிகள், காங்கிரஸ் பற்றிய சில கருத்துகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:

> மகாத்மா காந்தி நாட்டுக்குத் தலைமை வகிக்கத் தொடங்கிய பின்னர் காங்கிரசிலும் மற்ற முயற்சிகளிலும் உண்மையாளர்கள் பெருகிப் போலிகள் இடம் பெறாமற் போகிலும், இன்னும் போலிகள் இடம் பெற்றே வருகிறார்கள். பயிரிலே களைகள் சேராமல் நிலக்கிழவன் காப்பது போலத் தேசப் பெருந்தலைவர்கள்

காங்கிரஸ் முதலிய பெருஞ் சபைகளிலே போலிகள் சேராமல் காத்தல் கடன்.

கதர் இயக்கப் பிரசாரத்திலும் லோகோபகாரி தீவிரமாகப் பாடுபட்டது. கதர் இயக்கத் தொடர்பான நிகழ்ச்சிகளை வெளியிட்டு வந்ததுடன் 'கதர் உடுத்துங்கள்' எனும் விளம்பர வாசகத்தை வெளியிட்டு வந்தது. 1928 சூன் 7இல் கைராட்டினம் கொண்டு நூல் நூற்று நெய்த கதர்த்துணியை அணியுமாறு பின்வரும் கவிதையில் வேண்டுகோள் விடுத்தார்:

நாட்டிலே விளைந்த பஞ்சால்
ராட்டிலே நூற்ற நூலால்
நாட்டிலே நெய்த நாட்டுத்
துணியினை நாளும் கொள்வீர்
கேட்டினை ஒழிக்க வேண்டின்
கேடில்சீர் எய்த வேண்டின்
நாட்டினை ஆள வேண்டின்
ராட்டினைக் கொள்ளுவீரே

வாழ்நாள் முழுவதும் கதரணிந்தவர் நெல்லையப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகச் சீர்திருத்தப் பிரசாரம்

நாட்டுப் பற்று, மொழிப் பற்று, சமயப் பற்றுடன் சமூக சீர் திருத்தப் பற்றும் கொண்டவர் நெல்லையப்பர். வடிவேலு செட்டியாரின் லோகோபகாரியில் காண முடியாத சமூக சீர்திருத்தப் பிரச் சாரத்தை நெல்லையப்பரின் லோகோபகாரியில் காணமுடிகின்றது. இந்தப் பிரசாரம் காங்கிரஸ் வழிமுறையைப் பின்பற்றியது என் பதும் குறிப்பிடத்தக்கது.

1928 சனவரி 6இல் 'புது வருஷ வேலை' எனும் தலைப்பில் எழுதப்பெற்ற தலையங்கத்தில் பிராமணர் - பிராமணரல்லாதார் பிரச்னையைக் குறிப்பிட்டுப் பரிந்துரை ஒன்றையும் கூறியுள்ளார். இது தொடர்பான பகுதி பின்வருவது:

சென்ற வருஷத்துடன் காங்கிரஸ் வேலை முடிந்து விட்டது. இனி நடைபெறும் புதிய ஆண்டில் தேசத்தார் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்; காங்கிரஸ் பல முக்கிய தீர்மானங்களைச் செய்திருக்கிறது. ஆனால் அவற்றில் முக்கியமானவை ராயல் கமிஷன் பகிஷ்காரம், பிரிட்டிஷ் சரக்கு

பகிஷ்காரம் இரண்டுமாகும். இந்து முஸ்லீம் ஒற்றுமை மூன்றாவது விஷயமாகும். பிராமணர் - தமிழர் ஒற்றுமை நான்காவது விஷயமாகும். ராயல் கமிஷன் பகிஷ்காரம் விஷயத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் பிராமணர்களும் தமிழர்களும் ஒன்று சேர்ந்துழைக்க வேண்டும்.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வடநாட்டில் வேலை செய்ய வேண்டும். பிராமணர் - அல்லாதார் ஒற்றுமை நாடித் தென்னாட்டில் வேலை செய்ய வேண்டும்... பிராமணர் பதவி விஷயங்களிலும் மற்ற விஷயங்களிலும் தியாக புத்தியுடன் விட்டுக் கொடுத்தால் பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமை ஒழிதல் கூடும்.

பிராமணர் கடமை

பிராமணர்களுக்குக் கூறப்பட்ட மேற்படி பரிந்துரையை, இதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு அன்றைய சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) கூறியுள்ளார். அவருடைய பேருரையை 'பிராமணர் கடமை' எனும் தலைப்பில் திரு.வி.க.வின் நவசக்தி (3.12.1926) வெளியிட்டது. இதில் ஒரு பகுதி பின்வருமாறு:

> சென்ற சனிக்கிழமையன்று, மயிலாப்பூர் இந்திய நாகரிக அபிவிருத்தி சங்கத்தாரின் கூட்டத்தில் டாக்டர் ராமராவின் தலைமையில் ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியர் நிகழ்த்திய உபந்நியாசத்தின் சாராம்சத்தைக் கீழே தருகின்றோம்:
>
> இங்கு பெரும்பாலோர் பிராமணர்களாயிருப்பதால் பிராமணர்களுக்கென்று சில வார்த்தைகள் கூறுகின்றேன். உத்தியோகம், உத்தியோகம் என்று வயிற்றுப் பிழைப்பு வேட்கையில் ஈடுபட்டுப் பிறவகுப்பார் பொறாமைக்கும் பகைமைக்கும் ஏன் நீங்கள் ஆளாக வேண்டும்?... உத்தியோகப் போட்டியுள்ளளவும் பகைமையும் துவேஷமும் இருக்கத்தான் செய்யும். எளிய வாழ்க்கை மேற்கொள்வதின் மூலம் இந்தப் போட்டியிலிருந்து நீங்கள் ஏன் விலகிக் கொள்ளக் கூடாது?... அக்காலத்தில் பிராமணர்கள் பிறருடைய வேலைகளுடன் போட்டியிட வரவில்லை... அவர்களுடைய சந்ததிகளாகிய நீங்கள் ஏன் அவர்களைப் பின்பற்றக்கூடாது? பிராமணர்களிடம் மற்றவர்களுக்குள்ள பகைமையைப் போக்க இதுதான் வழி.

விதவை மறுமண இயக்கச் செய்திகளை வெளியிட்டு ஊக்குவித்தது லோகோபகாரி. 1927 பிப்ரவரி 21இல் 'விதவா விவாக இயக்கம்' எனும் தலைப்பில் சென்னையில் நிகழ்ந்த ஒரு கூட்டத்தின் செய்தியை வெளியிட்டது. லாகூர் விதவா விவாக சபையின்

ஆதரவில் சென்னை சௌராஷ்டிர மகாலில் நடைபெற்றது கூட்டம். அக்கூட்டம் ஸர். வெங்கடரத்தினம் நாயுடு தலைமையில் மாஜி நீதிபதி சதாசிவய்யர், அவருடைய மனைவி ஸ்ரீமதி மங்களாம்பாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மாள், திரு.வி. கலியாணசுந்தர முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார், கெத்தா ரங்கய்ய நாயுடு முதலானோர் 'விதவா விவாகத்தை' ஆதரித்துப் பேசினர்.

அக்காலத்தில் வடநாட்டில் இருந்த லாகூர் (தற்காலத்தில் பாகிஸ்தானில் உள்ளது) நகர 'விதவா விவாக சபை'யின் கிளை சென்னையில் 1926இல் அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது.[30]

1928 செப்டம்பர் 6இல் 'இள மணத்தடுப்பு மசோதாவிற்கு வைதீகப் பிராமணர்கள் எதிர்ப்பு' எனும் தலைப்பில் வெளியான செய்தியில் லோகோபகாரியின் சமூகச் சீர்திருத்தப்பற்று சற்றுச் சீற்றமுடன் பின்வருமாறு வெளிப்பட்டது:

> கும்பகோணம் வைதிக பிராமணர்கள் கூட்டம் - திவான் பகதூர் கிருஷ்ணசாமி ஐயங்கார் தலைமை. கும்பகோணத்தில் வருணா சிரம தரும சங்கம் ஒன்று மேற்படி வைதிகப் பிராமணர்கள் முயற்சியால் நடந்து வருகிறது. கும்பகோணம் வைதிகர்கள் இள மணத்தினால் பெண்கள் இளமையில் விதவையாதல், இள வயதிலேயே பலவீனமான பிள்ளைகளைப் பெறுதல் முதலிய கேடுகள் நம் நாட்டில் உண்டாதலை ஈர நெஞ்சுடன் உணர்ந்து நினைப்பார்களானால் இள மண ஒழிப்பு மசோதா சட்டம் ஆதல் கூடாது என்று கூட்டம் கூடி ஒரு தீர்மானம் செய்ய மாட்டார்கள். அவர்களால் அழிவு வேலை தவிர ஆக்க வேலை செய்த லில்லை. அவர்கள் கூடி எந்த ஆக்க வேலை இதுவரை நமது நாட்டுக்குச் செய்திருக்கிறார்கள்? நான் அறிய ஒன்றுமில்லை. தெரிந்தவர்கள் அப்படியிருந்தால் கூறட்டும் என்று நாட்டு நலம் விரும்புவோன் எழுதுகிறார்.'

'சாதிக்கொடுமை' எனும் தலைப்பில் மா.வே. நெல்லையப்ப பிள்ளை எழுதி வந்த தொடர் கட்டுரையும் குறிப்பிடத் தக்கது.

தமிழ் வளர்ச்சிப் பணி

புதுச்சேரியில் இருந்து 1915 சூலை 19இல் நெல்லையப் பருக்கு எழுதிய நீண்ட கடிதத்தில் பாரதியார் ஓரிடத்தில் 'தம்பி - நான் ஏது செய்வேனடா? தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப் பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகியது' என்று

குறிப்பிட்டுள்ளார். குருநாதரின் வருத்தம் தீரத்தமிழை வளர்த்து அது 'சுகமாக' இருக்கப் பல வகைகளில் பாடுபட்டவர் நெல்லையப்பர். அவற்றுள் ஒன்று தான் லோகோபகாரியின் பத்திரிகைத் தமிழ். புகழ் பூத்த தமிழறிஞர்கள் கட்டுரைகள் பலவற்றை லோகோபகாரியில் வெளியிட்டுத் தமிழ் வளர்ச்சிப் பணிக்கு ஆக்கமளித்தார் நெல்லையப்பர்.

பேரறிஞர் கோ. வடிவேலு செட்டியாரின் 'திருக்குறள் வினா-விடை', நெல்லையப்பரின் லோகோபகாரியில் தொடர்ச்சியாக வெளி வந்தது. பேரறிஞர் எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை பி.ஏ. எல்.டி. அவர்களின் 'கம்பராமாயணக் கொய்மலர்', என்னும் கம்பரின் இன் கவித்திரட்டு லோகோபகாரியில் தொடர்ந்து வந்தது. 1928 ஏப்ரல் 12இல் வெளிவந்த இவருடைய 'தமிழர் திருமணம்' எனும் கட்டுரை யும் குறிப்பிடத்தக்கது. மாகறல் கார்த்திகேய முதலியார் எனும் மற்றொரு தமிழ்ப் பேரறிஞர் எழுதிய 'பழந்தமிழ்' அரிய தொடராக விளங்கியது. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையின் 'தரை யார்' எனும் கட்டுரையும் வெளியிடப் பட்டுள்ளது. புரட்சி வீரர் வ.வே.சு. ஐயரின் உலக இலக்கியச் சுடரான 'காவிய உத்தியானம்' எனும் கட்டுரை லோகோபகாரியில் 1928 சூன் 14இல் வெளி வந்தது. வ.வே.சு. ஐயரின் 'வைரங்கள்' எனும் கட்டுரையும் 1928 சூன் 14இல் வெளிவந்தது. தமிழின் 'மறுமலர்ச்சி' பற்றி ஆய்வு செய்த வ.வே.சு. ஐயரின், 'பொழுது போக்கு', 'பெண்கல்வி' எனும் கட்டுரைகளும் வெளிவந்தன.

கவியோகி சுத்தானந்த பாரதியாரின் எழுத்தோவியங்கள் லோகோபகாரியை அழகு செய்தன. 'முகமது ரசூல் சரிதை' எனும் கவிதை நீண்ட தொடராக வந்தது. கவியோகியின் சிறந்த பங்களிப் புகளில் இதுவும் ஒன்று. இவருடைய 'கிராம வேலையின் வெற்றி' எனும் கட்டுரையும் வெளிவந்துள்ளது (1927 சனவரி 27, ப.9).

1927 ஆகஸ்ட் 11இல் வெளிவந்த கவியோகியின் 'தமிழ் நாடு' எனும் கட்டுரை மொழிவழி நாட்டுக் கோரிக்கையை வலி யுறுத்திய அற்புதமான கட்டுரையாகும். பின்வருவது இக்கட்டுரை யின் ஒரு பகுதி:

> திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சை, சேலம், கோவை, வடார்க்காடு, தென்னார்க்காடு, சென்னை, செங்கற்பட்டு முதலியன தமிழ் வழங்கும் ஜில்லாக்கள். இவைகளையெல் லாம் ஒன்று சேர்த்துத் தமிழ்நாடு ஏற்படுத்துதல் வேண்டும். அத்தமிழ் நாட்டிற்குத் தனியாட்சி வேண்டும். அவ்வாட்சி தமிழர்களால் தமிழருக்காகத் தமிழரால் தேர்ந்தெடுக்கப்பட்ட

தமிழவையால் நடத்தப்படவேண்டும். தமிழ் உணர்ச்சிக் கனலாக விளங்கிய கவியோகி மேலும் எழுதியதில் தமிழ்மொழி, இலக் கியம், பண்பாடு முதலானவற்றின் பன்முக வளர்ச்சி 'தமிழ்நாடு' தோன்றிய பிறகு செழித்தோங்கும் என்றும் குறிப்பிட்டார். இவ் வாறே இந்திய மொழிகள் பலவற்றின் மாநிலங்கள் தோன்ற வேண்டும் எனும் கருத்தையும் குறிப்பிட்டுள்ளார் கவியோகி.

தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் லோகோபகாரியின் கட்டுரை களுள் ஒன்று தமிழ்க்காவலர் கா. சுப்பரமணிய பிள்ளையின் 'தமிழின் பெருமை' எனும் கட்டுரையாகும்.

மேற்கூறப்பட்டன எல்லாம் 1927, 1928ஆம் ஆண்டுகளில் வெளிவந்த லோகோபகாரியில் திரட்டப் பெற்றவை. இதழ்கள் அனைத்தும் கிடைக்கப் பெற்றால் அவையெல்லாம் லோகோபகாரி யின் தமிழ் வளர்ச்சிப் பணியை முழங்கிடச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

சமயப் பிரச்சாரம்

கோ. வடிவேலு செட்டியாரின் லோகோபகாரி வேதாந்தப் பிரசாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. நெல்லையப்பரின் லோகோபகாரி சைவ சமயத்திற்கு முக்கியத்தும் தந்தது என்று கூறலாம். நெல்லையப்பர் திருவாசகத்தை 2 அணா விலையில் மலிவுப் பதிப்பாக வெளியிட்டுப் பரப்பியவர். பி.ஸ்ரீ. ஆச்சார்யா, நெல்லையப்பர் சிதம்பரனார் மீது கொண்ட பக்தி, சிவபக்திக்கு அடுத்தபடியானது என்று குறிப்பிட்டுள்ளார்.[31]

லோகோபகாரியின் இதழ்கள் பலவற்றில் முகப்புக் கவிதை வரிகளாகத் தாயுமானவரின் 'பராபரக்கண்ணி', சைவசமயத் தேவாரப் பாடல் வரிகளை அமைத்து வந்தார் நெல்லையப்பர். சான்றாக 1928 சூன் 28 லோகோபகாரியில் பின்வரும் தேவார வரிகள் முகப்பில் பொறிக்கப்பட்டன.

வையக மின்புற நின்ற மருமலி பொற்பதம் போற்றி
கையமரு நிலை போற்றி கருணைமுக மலர் போற்றி
மெய் யிலகு மொளி போற்றி விரவியெனை யெடுத்தான்

இந்து சமயப் பிரசாரக் கட்டுரைகள் பல லோகோபகாரியில் வெளி வந்துள்ளன. 1926 டிசம்பர் 30ஆம் தேதி வங்க நாட்டறிஞர் அசுவின் குமார் தத்தரின் பக்தியோகம் அக்காலப் பிரபல தமிழ் எழுத்தாளர் மகேசகுமார் சர்மாவால் மொழிபெயர்க்கப் பெற்று வெளிவந்துள்ளது.

ரிக்வேதத்தின் ஒரு பகுதியைத் தமிழில் கவிதையாக மொழிபெயர்த்த 'ஸ்ரீமத் சிவத்தியானானந்த மகரிஷிகள்' எழுதிய 'நித்திய வல்லபம்' எனும் தத்துவ ஞானக் கட்டுரை தொடர்ந்து வெளிவந்துள்ளது.

எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையின் 'திருமால் தோற்றம் பத்து', ஸ்ரீலஸ்ரீ வேதாசல சுவாமிகளின் 'சைவசாரம்', சைவப் பேரறிஞர் ச. சச்சிதானந்தம்பிள்ளையின் 'சமய உணர்ச்சி', சே.வெ. ஜம்புலிங்கம் பிள்ளையின் 'தேவார ஆராய்ச்சி', சுவாமிசித்பவானந்தரின் 'அருள் நெறி', ஸ்ரீமதி ம. கனகரத்னம் அவர்களின் 'மதமும் மாதரும்', கல்கத்தா 'மாடர்ன் ரெவ்யூ'வில் வந்த தூய அன்னை சாரதா மணி தேவியார் வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம், மணி திருநாவுக்கரசு முதலியாரின் 'இராமலிங்க சுவாமிகள்' முதலான கட்டுரைகள் லோகோபகாரியில் வெளியிடப்பட்டுள்ளன.

1928 நவம்பர் 20இல் வெளிவந்த 'சைவ சமயிகளுக்கு' எனும் தலையங்கத்தில் சைவசமய சந்தானச்சாரியர்கள் சமாதிகளைப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. 'சிரத்தையின் வீழ்ச்சியே நமது நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று விவேகானந்த சுவாமிகள் அடிக்கடி கூறியிருக்கின்றார்' என்று தொடங்கி, 'இனியேனும் சைவமடாதிபதிகளும், சமயாபிமானிகளும், செல்வர்களும் பிறரும் தங்கள் கடமைகளைச் செய்து, சைவம் புத்துயிர் பெறுவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுவார்கள் என்று நம்புகிறோம்' என்று முடிக்கப்பட்டுள்ளது தலையங்கத்தில்.

பாரதி புகழ் பரப்பிய பணி

முதல் பக்கங்களில் பல இதழ்களில் பாரதியார் கவிதைகளை வெளியிட்டு வந்தது லோகோபகாரி. "எட்டயபுரம் மன்னருக்கு பாரதி அனுப்பிய ஓலைத் தூக்கும் சீட்டுக் கவிகளும் முதன் முதலாக லோகோபகாரியில் அச்சேறின" என்று பாரதி ஆய்வாளர் ரா.அ. பத்மநாபன் குறிப்பிட்டுள்ளார். பாரதியாரின் கட்டுரைகள், கதைகள் சிலவற்றையும் லோகோபகாரி வெளியிட்டது. 1928 சூலை 5இல் பாரதியாரின் 'ஆறில் ஒரு பங்கு' நெடுங்கதையைப் பின்வரும் குறிப்புடன் லோகோபகாரி வெளியிட்டது:

> 'ஆறில் ஒரு பங்கு' என்ற இச்சிறுகதை காலஞ் சென்ற தமிழ்க் கவி சுப்பிரமணி பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. இது அக்காலத்தில் புத்தக வடிவில் அச்சிடப் பெற்று இப்பொழுது ஒரு பிரதி கூடக் கிடையாது. கிடைத்த ஒரே பிரதியிலிருந்து இதனை வெளியிடுகிறோம்.

1928 செப்டம்பரில் சென்னை அரசாங்கம், பர்மா அரசாங்கத்தின் விருப்பப்படி பாரதியார் பாடல் புத்தகங்களைத் தடை செய்த பொழுது அதனைக் கண்டித்தும் அதன் தொடர்பாகவும் 1928 செப்டம்பர் 27, 1928 அக்டோபர் 18, 1928 நவம்பர் 8, 1928 அக்டோபர் 11 தேதிகளில் தலையங்கங்கள் எழுதப்பட்டன.

இந்திமொழிக்கு ஆதரவு

லோகோபகாரி பெயரை ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் அல்லாது சில இதழ்களில் இந்தியிலும் 1932 சூலை14இல் வெளிவந்த இதழில் அச்சிடப்பட்டுள்ளதை அறிகின்றோம். 1928 சூலை 12இல் 'தென்னாட்டில் ஹிந்தி' எனும் தலையங்கத்தில் சென்னை இந்தி பிரசார சபையின் இந்திப் பள்ளிக்கூடங்களின் தொண்டுகளைப் பாராட்டியும், சபையின் நிருவாகச் செலவிற்குத் தென்னாட்டாரும் நன்கொடையளிக்க வேண்டியது 'முக்கியமான விஷயம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உருவம், உள்ளடக்கம் பற்றிய பொதுவான குறிப்புகள்

1927ஆம் ஆண்டில் வெளிவந்த லோகோபகாரியின் உயரம் 44 செ.மீ. அகலம் 28 செ.மீ. அளவாக உள்ளது; பக்கங்கள் 12; ஒவ்வொரு பக்கமும் நான்கு பத்திகளைக் கொண்டது. 1935இல் வெளிவந்த இதழின் அளவு 32 x 25 செ.மீ.; பக்கங்கள் 8 என்றும் ஒரு குறிப்பு கூறுகின்றது.[32] "அரைகிரவுன் (10 x 18 அங்.) அளவில் கோக்கப்படாத தாள்களாக" வந்த லோகோபகாரியைப் பற்றி ரா.அ. பத்மநாபன் குறிப்பிட்டுள்ளார்.[33]

லோகோபகாரியின் உருவம், உள்ளடக்கம் பற்றிய விவரத்தைப் பருந்துப்பார்வையில் 1932 சூலை 14இல் வெளிவந்த இதழைக் கொண்டு அறியலாம்.

இதழின் பெயர் ஆங்கிலம், தமிழ், இந்தி மொழிகளில் அச்சிடப் பெற்றுள்ளது. 'அன்பே மதம், அன்பே சிவம்' எனும் சொற்றொடர்கள் உள்ளன. இதழின் வெளியீட்டுத் தொடர் எண்களாக '4-38, இ.28' என்று குறிப்பிடப்பட்டுள்ளன. வியாழன் தோறும் வெளிவருவதாகவும் அச்சிடப்பட்டுள்ளது. பக்கங்கள் 16.

பச்சை நிறத்தில் உள்ள மேலட்டையின் நடுப் பக்கத்தில் நான்கு சீடர்களுடன் அமர்ந்துள்ள ஆதிசங்கரரின் படம் அமைந்துள்ளது. இதன்கீழ் 'நஞ்சன்கூடு பல்பொடி'யின் விளம்பரம் உள்ளது.

இரண்டாம் பக்கம் முழுவதும் விளம்பரங்கள். பக்கங்கள் ஒவ்வொன்றும் நான்கு பத்திகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. மூன்றாம் பக்கத்தில் இடப்புறத்தில் திருக்கோயில் படமும் நடுவில் நடராசப் பெருமானின் படமும் வலப்புறத்தில் திருக்கோயில் மண்டபமும் அமைந்துள்ளன. இதன்கீழ் '4.38 சென்னை, சிந்தாதிரிப் பேட்டை - ஆங்கீரச வருஷம் ஆனி மாதம் 31, 1932 ஜுலை (இ.28)' என்று அச்சிடப்பட்டுள்ளது. முதல் இரு பத்திகளில் 'உபதேசமாலை - சுவாமி சிவானந்தர் எழுதுகிறார்' எனும் தலைப்பில் பல உபதேசங்கள் கூறப்பட்டுள்ளன. 3, 4ஆவது பத்திகள் முழுவதிலும் விளம்பரங்கள்.

நான்காவது பக்கம் முழுவதிலும் மணி திருநாவுக்கரசு முதலியார் எழுதிய 'இராமலிங்க சுவாமிகள்' எனும் கட்டுரை வெளிவந்துள்ளது. ஐந்தாம் பக்கத்தில் முதல் பத்தியில் 'மலாய் நாட்டில் இந்தியர்கள்' எனும் கட்டுரை (எழுதியவர் பெயர் இல்லாமல்) வெளியிடப்பட்டுள்ளது. 2,3,4 பத்திகள் முழுவதிலும் பெரிய விளம்பரம் ஒன்று உள்ளது. ஆறாவது பக்கத்தில் ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் எழுதியது - திருக்குறள் வினா - விடை - இல்லறம் - வெளிவந்துள்ளது. இத்துடன் விளம்பரங்களும் அச்சிடப் பெற்றுள்ளன. ஏழாவது பக்கத்தில் ஜேம்ஸ் W. வில்சன் எழுதிய 'புதிய சுகாதார விளக்கம்' எனும் தொடர் கட்டுரை (எண் 7)யும், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு (தமிழ்நாடு ஆசிரியர்) வெளியிட்ட "வ.உ. சிதம்பரம்பிள்ளை அறுபதாண்டு விழா" எனும் விண்ணப்பமும் வெளிவந்துள்ளன.

எட்டாவது பக்கம், தலையங்கப் பக்கமாகும். 'மிதவாதிகள் தெளிவு' எனும் தலையங்கத்தின் ஒரு பகுதி பின்வருவது:

> ஆதி முதலே மிதவாதிகள் அரசாங்கத்திற்கு ஆதரவாயிருந்து நாட்டின் முன்னேற்றத்தை ஒரு வகையில் கெடுத்து வருகிறார்கள். அவர் காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக நின்றால் அரசாங்கத்தார் பிரித்தாள முடியாது. இனியேனும் மிதவாதிகள் உண்மை தெளிந்து காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து உறுதியாக நின்றால் விடுதலை விரைவில் ஏற்பட்டுவிடும்.

இரண்டாவது துணைத்தலையங்கமான 'ஸ்காட்லாந்திற்கு சுயராஜ்ஜியம்' என்பதிலும் ஆசிரியர் இந்திய விடுதலை வேட்கையைப் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்:

> ஸ்காட்லாந்து, வேல்ஸ் இரண்டும் தென்னாட்டில் இரண்டு மூன்று ஜில்லாக்களுக்கு நிகராகக் கூறலாம். இங்கிலாந்துடன் ஒட்டியிருக்கும் இந்த நாடுகளே சுயராஜ்யத்தை விரும்பும் பொழுது ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள இந்தியா அதனை விரும்புவது வியப்பாகாது.

'தற்காலப் பெண் கல்வி' என்னும் மூன்றாவது துணைத் தலையங்கமும், 'வேதமூர்த்தி மறைந்தார்' என்னும் நான்காவது துணைத் தலையங்கமும் எட்டாவது பக்கத்தை நிறைவு செய்தன.

ஒன்பதாவது பக்கம் முழுவதும் 'நாட்டு நடப்பு' எனும் தலைப்பில் வெளிவந்த செய்திகளைக் கொண்டது. பத்தாவது பக்கம் காந்தி தாஸன் எழுதிய 'பர்மாவில் இந்தியர் நிலை' எனும் கட்டுரையையும், சில விளம்பரங்களையும், சில செய்திகளையும் கொண்டதாகும். பதினோராவது பக்கத்தில், 'புலால் உணவும் போர் வீரத்தன்மையும்' எனும் கட்டுரையும், சில செய்திகளும் வெளிவந்துள்ளன. பன்னிரண்டாவது பக்கத்தில் 'பறங்கிமலை மறைமலை அடிகள் கல்விக்கழக வளாகம்' எனும் கட்டுரையும் மற்றும் சில விளம்பரங்களும், சில செய்திகளும் உள்ளன. பதின்மூன்றாவது பக்கம் முழுவதிலும் கல்கத்தா 'மாடர்ன் ரெவ்யூ' இதழில் வெளியான கட்டுரையொன்று 'கவிராயர் ரவீந்திரநாத் தாகூர் பாரசீக யாத்திரை போன விவரம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. பதினான்காம் பக்கத்திலும் முற்கூறிய தாகூர் கட்டுரையும் சில விளம்பரங்களும் உள்ளன.

பக்கங்கள் 15, 16 முழுவதிலும் விளம்பரங்கள் உள்ளன. இறுதிப்பக்க அட்டை பச்சை நிறத்தில் உள்ளது. இதன் அடியில் ஆசிரியர், அச்சிட்டவர், வெளியிடுவோர் - பி.எஸ். நெல்லையப்பர் என்று ஆங்கிலத்தில் அச்சிடப் பெற்றுள்ளது.

லோகோபகாரியில் பெரும்பாலும் வாரந்தோறும் 'இலங்கைச் செய்தி'களுக்காக முழுப் பக்கம் அல்லது அரைப்பக்கம் ஒதுக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. நூல் மதிப்புரை அவ்வப் பொழுது வெளிவந்துள்ளது. நெல்லையப்பரின் கவிதைகளும் அவ்வப்பொழுது வெளிவந்துள்ளன.

லோகோபகாரியின் மறைவு

நெல்லையப்பர் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். பத்திரிகை அலுவலகத்திற்கு நீண்ட காலமாக வாடகைப் பணம் தர இயலாத நிலைமை; அச்சிடும் செலவிற்கு ஈடுகட்ட முடியாத வருமானம்; தபால் தலை ஒட்டுவதற்குக் கூட வேலையாளை வைத்துக்கொள்ள முடியாத பணநெருக்கடிச் சூழல். இவை யாவும் சேர்ந்து பத்திரிகை 'மூடுவிழா'வை நிகழ்த்தி விட்டது.[34]

1941இல் காந்தியடிகள் தொடங்கிய தனிநபர் சத்யாக் கிரகத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைத் தண்டனை பெற்றார்

நெல்லையப்பர். இந்த நிகழ்வு பத்திரிகை மூடுவிழாவை நிறைவு செய்து விட்டது.

நெல்லையப்பரின் லோகோபகாரி – 2

1943-1949 வரையிலான காலகட்டம் நெல்லையப்பர் லோகோபகாரியின் இரண்டாவது காலகட்டமாகும். இக்கால கட்டத்தின் இதழ்களில் 1947-49 வரையிலான இதழ்கள் அனைத்தும் கிடைக்கவில்லையென்றாலும் பெரும்பான்மையானவை கிடைக்கின்றன.

இக்காலகட்டத்தில் லோகோபகாரியின் அளவு உயரம் 24 செ.மீ.; அகலம் 18.4 செ.மீ. மொத்த பக்கங்கள் 28. சென்னை கிடங்கு தெருவில் இருந்த மாடல் பிரஸ்ஸில் பத்திரிகை அச்சிடப் பெற்றது. பத்திரிகையின் பெயர் ஆங்கிலம், தமிழ், இந்தி மொழிகளில் அச்சிடப்பட்டது. முந்தைய காலகட்டத்தைக் காட்டிலும் ஜன ரஞ்சகமாக பத்திரிகை நடத்தப்பட்டது. 'பழமையும் புதுமையும் பொருந்திய வாரப் பத்திரிகை' என்றும் அறிவித்துக் கொண்டது. இந்தியாவில் ஆண்டு சந்தா 6 ரூ. தனிப்பிரதி விலை 2 அணா. பத்திரிகை வெளியீட்டுத் தொடர் எண் முந்தைய லோகோபகாரியின் தொடர்ச்சியாகவே தரப்பட்டுள்ளது.

முதல் காலகட்டத்தில் காணப்பெறாத சிறுகதை வெளியீடு, சினிமா விநோதம் முதலானவை இரண்டாம் காலகட்ட இதழ்களிலே காணப்படுகின்றன.

17.5.1947இல் சனிக்கிழமை வெளிவந்த 'லோகோபகாரி'யின் உள்ளடக்கம் பற்றிய விவரம் வருமாறு:

மயூரன் எழுதிய 'இன்றைய சமூக அமைப்பு', டால்ஸ்டாயின் 'நல்லவன் கெட்ட கதை', 'அரியும் சிவனும் ஒன்றே', 'நாட்டு நடப்பு' முதலானவை முதல் ஒன்பது பக்கங்களில் வெளிவந்துள்ளன.

பக்கங்கள் 10, 11களில் தலையங்கம். தலையங்கத்தின் மேற்பகுதியில் 'கீதோபதேசம்' படம்; தென்னாட்டில் கப்பற்கம்பெனி, டில்லி மாநாடு, இருதலைவர்கள் (ராஜாஜி - ராஜேந்திர பிரசாத்); வேலை நிறுத்தம் நீடிக்கிறது முதலானவை வெளிவந்துள்ளன.

பக்கங்கள் 12 முதல் 20 வரையில் வெளிவந்தவை பின்வருவன:

பெங்களூரில் வைஷ்ணவ மாநாடு - மோர்லியஸ் யாத்திரை முடிந்தது. ரா. விநாயகம் எழுதிய சிறுகதை 'சோமுவின் அதிர்ஷ்டம்',

பொழுதுபோக்கு, சிலப்பதிகார நாடகம் (வஞ்சிக் காண்டம்), வி.கே. கிருஷ்ணமூர்த்தி எழுதிய 'நெட்டாலில் இந்தியர்கள்', டர்பன் ச.மு. பிள்ளை - மு. வடிவேலன் செய்த தமிழாக்கத் தொடர், 'ஸ்ரீமதி மேயில் பாடநிலை'.

பக்கங்கள் 21 முதல் 28 வரையில் வெளிவந்தவை பின் வருவன:

இந்தியா - முன்னேறுகிறது, எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை யின் 'திருமால் பத்து', 'சினிமா விநோதம்', 'ஸினி - ஸ்பை', பா.சு. மணி எழுதிய 'பொருளின் தியாகம்'.

மூவண்ணக் கைராட்டினக் கொடி ஏந்திய நிலையில் ப்ரத மாதா படம் முதல் பக்கத்தில் அச்சிடப்பட்டு வந்தது.

பாரதி அன்பர் கழகம்

பாரதியார் வாக்குகள், கட்டுரைகள் அவ்வப்பொழுது வெளி யிடப்பட்டு வந்தன. 18.9.1948இல் வெளிவந்த இதழில் 'பாரதியை விடுதலை செய்யுங்கள்' எனும் கட்டுரையில் (பெயர் போடாத தினால் ஆசிரியர் எழுதியதாகவே கொள்ள வேண்டும்) பாரதி நூல் களைப் பதிப்பித்துப் பரவச் செய்ய 'பாரதி அன்பர் கழகம்' எனும் ஓர் அமைப்பை நிறுவ வேண்டும் என்று பின்வருமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

'பாரதியாரின் பெயரில் ஒரு பொதுவான கழகம் ஏற்பட்டு, இந்தப் பணிகளை மேற்கொண்டால் மிகவும் நல்லது. பெர்னாட்ஷா வுக்கும், ரவீந்திரநாத் தாகூருக்கும் இப்படிக் கழகங்கள் இருக் கின்றன. இவர்களது நூல்களை உலக முழுதும் பரப்பும் சீரிய தொண் டினை இவர்கள் ஏற்று, திறம்பட நிர்வகிக்கிறார்கள். 'பாரதி அன்பர் கள் கழகம்' ஒன்று தமிழ் நாடு முழுமைக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும் படியான விதத்தில் நிறுவப்படவேண்டும். பாரதியாரின் சிறந்த சிருஷ்டிகளை முக்கியமான அன்னிய பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதையும் தமிழிலேயே சிறந்த முறைகளில் அவரது நூல்கள் வெளிவரச் செய்வதையும் இந்தக் கழகம் மேற் பார்வை செய்யலாம்.'

பார்க்கக் கூடாத ஜாதியன்

25.6.1949இல் 'பார்க்கக்கூடாத ஜாதியன்' எனும் தலைப்பில் நெல்லையப்பர் எழுதிய கட்டுரை மிகவும் முக்கியமானது. ஏன் எனில்

வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் என்னும் புகழ் பூத்த பேரறிஞரும், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் சந்தித்ததைப் பற்றிய அரிய செய்தி இக்கட்டுரையில் வெளிப்பட்டுள்ளது. இதை விளக்குவது கட்டுரையின் பின்வரும் பகுதி:

> 1919ஆம் ஆண்டின் முற்பகுதியில் நானும் காலஞ்சென்ற கவிஞர் பெருமான் சுப்பிரமணிய பாரதியாரும் திருநெல்வேலி ஜில்லாவில் பேர் பெற்ற சுகவாசஸ்தலமான திருக்குற்றாலத்தில் இரண்டு நாள் தங்கியிருந்தோம்.
>
> பின்னர் ஒருநாள் மாலையில் திருக்குற்றாலத்தினின்று புறப்பட்டுத் தென்காசியில் ரயில் ஏறிக் கடையத்திற்குப் போய்க் கொண்டிருந்தோம். இடையில் (ஆழ்வார்க்குறிச்சி அல்லது மாவூர்ச்சத்திரம் என்று நினைக்கிறேன்) ஒரு ஸ்டேஷனில் தமிழ்ப் பெருங்கிழவரான காலஞ் சென்ற வெள்ளக்கால் சுப்பிர மண்ய முதலியார் நாங்கள் இருந்த வண்டியில் ஏறினார்.
>
> அப்போது முதலியாருக்கு வயது அறுபதுக்கும் மேல் இருக்கும்... முதலியார், பாரதியாருடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்.
>
> "மகாத்மா தீண்டாமை ஒழிய வேண்டுமென்று தேசமெங்கும் பிரசாரம் செய்து வருகிறார். ஆனால் நமது ஜில்லாவில் தீண்டப் படாத ஜாதியார் மட்டுமல்ல பார்க்கக்கூடாத ஜாதியாரும் இருக் கிறார்கள். இவர்களுக்கெல்லாம் எப்பொழுது விமோசனம்" என்றார்.

நெல்லையப்பர் இந்தச் சந்திப்பின் விவரமனைத்தையும் - பாரதியாருடன் பல விடயங்களைப் பற்றியும் பேசினார் என்பதின் முழு விவரத்தையும் - எழுதியிருந்தால் இரு பெரும் தமிழர்களிடையே நிகழ்ந்த உரையாடலின் சாரம்சத்தை மேலும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

தேசிய மாவீரர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைப் பற்றி லோகோபகாரியில் நெல்லையப்பர் எழுதி வந்தார். ஜி. சுப்பிரமணிய ஐயர், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., 'வீர முரசு' சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. நண்பர் குருநாதய்யர், ஷண்முகசுந்தரம் பிள்ளை, வ.வே.சு. ஐயர் முதலானோரைப் பற்றி எழுதியுள்ளார்.

வ.வே.சு. ஐயர்

'வீரவிளக்கு' வ.வே.சு. ஐயரைப் பற்றி நெல்லையப்பர் பின் வருமாறு போற்றிப் புகழ்ந்துள்ளார்:

கம்பன் மீது தமிழ்நாட்டில் சென்ற சில ஆண்டுகளாக தோன்றி வளர்ந்து வரும் புதிய காதலுக்கு ஐயரும் ஒரு காரணமாவார். மேல் நாட்டு இலக்கியங்களை ஆழ்ந்து பயின்று சுவை கண்ட ஐயர் அவற்றின் புதுமையையும், வன்மையையும் தமிழ் மொழியில் ஏற்ற விரும்பினார். அந்த நோக்கம் நிறைவேறும் முன்னரே அவர் மறைந்துவிட்டார். தமிழ் நாட்டின் புதுவாழ்வே அவரது பெருங் கனவாயிருந்தது. அவரைப் பற்றி நினைக்கும்போது உலகத்தில் உயர்ந்த இமய மலையும், உலகத்தில் பெரிய கங்கை நதியும் எண்ணுதற்கரிய எல்லையற்ற வானமுமே எனது சிந்தையில் தோன்றுகின்றன. ஐயருக்கு நேராகச் சொலக்கூடிய பெருந்தமிழர் தமிழ்நாட்டில் இனிதான் தோன்ற வேண்டும்.[35]

நெல்லையப்பரின் இரண்டாவது காலகட்ட லோகோபகாரியின் கடைசி இதழ் எப்பொழுது வந்தது என்பதை அறிய முடியவில்லை.

சாமி சிதம்பரனாரின் லோகோபகாரி

கிடைத்துள்ள லோகோபகாரி இதழ்களிலிருந்து 3.12.49 இல் வெளிவந்த இதழின் ஆசிரியர் சாமி சிதம்பரனார் என்று அறிய முடிகின்றது. இந்த இதழின் அளவு முந்தைய இதழின் அளவேயாகும். இதழின் தொடர் எண்ணும் முந்தைய நெல்லையப்பரின் இதழின் தொடர்ச்சியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. லோகோபகாரி பெயருடன் சுற்றிலும் பல புத்தகங்களும் நடுவில் உலகக் கோளப்படமும் அச்சாகியுள்ளது. மொத்தப் பக்கங்கள் அட்டைப் பக்கங்களைச் சேர்த்து 28.

'தலைநகரத் திண்டாட்டம்' எனும் தலையங்கம் ஆந்திர மாநிலப் பிரிவினையையொட்டி எழுதப்பட்டது. 'சென்னை நகரம் ஆந்திரர்களுக்கு இல்லையென்பது உறுதியாகிவிட்டது' என்று குறிப்பிட்டு எல்லாப் பிரச்சினையையும் விவாதித்து, தற்காலிகமாகக் கூட சென்னை நகரம், ஆந்திரமாகாணத் தலைநகராக இருக்கக்கூடாது என்னும் கருத்தும் தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்காவில் சமுதாயப் புரட்சி, ஜனநாயகம் நிலைக்கவேண்டுமானால், தகுதி வேண்டியது அவசியம், போலீஸ்காரிகள், அமெரிக்காவின் ஆசை, மதராஜ்யக் கனவு, இந்தியாவிலே அந்நியர் மூலதனம், சீறுவோர்க்குப் பதில், நேருஜியின் உரை, பிடிக்காததைப் பேச மாட்டேன், நல்ல அமைப்பு முதலான கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

'இணைந்த மலர்கள்' எனும் தொடர் நாவலும் 'ஜோதி' எழுதியது, ஜெ. அருணாசலத்தின் சிறுகதை 'இல்லாவிட்டால்' என்பதும் வெளியிடப்பட்டுள்ளன. இறுதிப் பக்கத்தில் ஆசிரியர் வி. நந்தகோபாலனின் 'ஹிந்திப் பயிற்சி' வெளிவந்துள்ளது.

15.7.1950இல் பத்திரிகையின் அளவு மாறியுள்ளதை அறிய முடிகின்றது. அளவு 21 x 31½ செ.மீ. பக்கங்கள் 72; ஆண்டுக் கையொப்பம் ரூபாய் 6; தனிபிரதி விலை அணா நான்கு. இந்த இதழில் சிறுகதைகளும், இலக்கியக் கட்டுரைகளும் கூடியுள்ளன. சாமி சிதம்பரனாரின் பொறுப்பில் லோகோபகாரி எவ்வளவு காலம் வெளிவந்தது என்பது மேலும் ஆய்விற்குரியதாகிவிட்டது.

இருவேறு செய்திகள்

இறுதியாக பி.ஸ்ரீ. ஆச்சார்யாவின் ஒரு குறிப்பைப் பற்றியும் கண்டறிந்து ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. 'நான் கண்ட தமிழ் மணி கள்' எனும் நூலில் நெல்லையப்பரைப் பற்றி எழுதிய கட்டுரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது ஆய்ந்தறிய வேண்டியதாகும்.

'நெல்லையப்பரே முதலாளியாகவும், ஆசிரியராகவும் அப் பத்திரிகையை நடத்தி வந்தார். வருமானத்தால் பத்திரிகையை அச்சிடும் செலவுக்கு ஈடு செய்ய முடியவில்லை. திணறித் திண்டாடி அச்சக முதலாளிக்கே நெல்லையப்பர் தம் பத்திரிகையையே விற்க நேரிட்டது. அந்த அச்சக முதலாளிதான் ஆசிரியப் பொறுப்பை மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் என் மீது சுமத்தியவர்.'

மேற்காணும் 'பி.ஸ்ரீ.'யின் கூற்றில் எப்பொழுது அவர் ஆசிரிய ரானார், எவ்வளவு காலம் ஆசிரியராகவிருந்தார்? என்பனவெல்லாம் அறியப்பட வேண்டியவனவாகும்.

'விடுதலைப் போராட்ட வீரர் தேசபக்தர் நெல்லையப்பர்' எனும் கட்டுரையில் தியாகி கே.எஸ். ஏகாம்பரம் எழுதியுள்ள பின்வரும் செய்தியும் ஆய்விற்குரியதாகும்.

'சிறையில் இருந்து வந்த பிறகு தாம் நடத்தி வந்த லோகோ பகாரி பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் மாடல் அச்சக உரிமையாளர் திரு. கோபால்சாமி அவர்களுக்குப் பத்திரிகை உரிமை யைக் கொடுத்து அப்பத்திரிகையின் ஆசிரியராக மட்டும் இருந்து நடத்தி வந்தார். உதவி ஆசிரியராக இருந்தவர்கள் ரா.பி.சேதுப் பிள்ளை, சாமி சிதம்பரனார், ஆற்காடு பூங்காவனம் ஆகியோராவர்.'[36]

ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் லோகோபகாரியின் ஆசிரியராக இருந்து தமிழ் இதழியல் துறை வளர்ச்சிக்கு அவர் ஆற்றியுள்ளப் பணி, அவருடைய பாரதி பணிக்கு அடுத்த முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை.

குறிப்புகள்

1. அமிர்தகுணபோதினி, தமிழ் இதழ், மே, சூன் 1926, ஆசிரியர் திரிசிரபுரம் எஸ்.ஜி. இராமாநுஜலுநாயுடு, மறு வெளியீடு, குமரி மலர், மாத இதழ், பிப்ரவரி 1971, ப.48
2. ஞானத்திரட்டு, முதல்பாகம், 1898, ப.101
3. மறுவெளியீடு, குமரிமலர், பிப்ரவரி 1971, ப.49
4. ஞானதரிசினி, முதற்பதிப்பு, 1898, ப.24
5. G.O.No.666 (Public, 16, August 1907) Tamil Nadu Archieves, Chennai
6. Native Newspaper Report, 1908, Madras, Tamilnadu Archieves, Chennai
7. சிவஞானபோத மூலமும் தெளிபொருள் விளக்கவுரையும், முகவுரை,1929, கோ. வடிவேலு செட்டியார், பக்.7-8
8. தர்க்காமிர்தமும் பிரஸ்தான பேதமும், கடைசிப்பக்க விளம்பரம், 1913, ஸ்ரீ சுப்பைய சுவாமிகள், பதிப்பாளர்கள்: கோ. வடிவேலு செட்டியார், மங்கலம் - சண்முக முதலியார், ப.12
9. மேற்படி நூல், மேலட்டையின் இறுதிப் பக்கம்
10. நாநாஜீவவாதக் கட்டளை, 1925, கோ. வடிவேலு செட்டியார், புத்தக விளம்பரம், மேலட்டையின் உட்புறப்பக்கம்
11. வீரமுரசு சுப்பிரமணிய சிவா, 1984, பெ.சு. மணி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, ப.328
12. Native Newspaper Report, 1917
13. பாரதியாரும் சமூக சீர்திருத்தமும், 1980, பெ.சு. மணி, திருமகள் நிலையம், சென்னை, ப.106
14. Native Newspaper Report, 1917
15. மறுவெளியீடு, குமரி மலர், மாத இதழ், மே, 1972
16. என் தந்தை, சகுந்தலா பாரதி, ப.82
17. சிவஞான போத மூலமும் தெளிபொருள் விளக்கவுரையும், முகவுரை, 1929, கோ. வடிவேலு செட்டியார், ப.13

18. 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா, 1984, பெ.சு. மணி, ப.331
19. Native Newspaper Report, 1917
20. 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா, 1984, பெ.சு. மணி, ப.340
21. மேற்படி நூல், ப.337
22. G.O. No: 603, 14.5.1917, Judicial and Confidential, Tamilnadu Archives, Chennai
23. பத்திரிகையாளர் பாரதியார், 1989, பெ.சு. மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை - 4, ப.63
24. சித்திர பாரதி, முதல் பதிப்பு, 1957, ஆசிரியர் ரா.அ. பத்மநாபன், அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை 18, ப.92
25. நான் கண்ட தமிழ் மணிகள், பி.ஸ்ரீ. ஆச்சார்யா, ப.145, இரண்டாம் பகுதி, 1988, வானதி பதிப்பகம், சென்னை
26. 'எனது குரு நெல்லையப்பர்', கட்டுரை, கலைமாமணி நாரண துரைக்கண்ணன், அமரர். தியாகி பரலி சு. நெல்லையப்பர் சிலை திறப்புவிழா நினைவு மலர், 1992
27. சித்திரபாரதி, ப.96
28. பி.ஸ்ரீ. ஆச்சார்யாவின் முற்கூறிய நூல், ப.143
29. 'வாழைப்பழம் கொடுத்த நெல்லையப்பர்', கட்டுரை பெ. தூரன், முற்கூறிய நெல்லையப்பர் மலர்
30. லோகோபகாரி, 1928, செப்டம்பர் 18, ப.8
31. பி.ஸ்ரீ. ஆச்சார்யாவின் முற்கூறிய நூல், ப.142
32. நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை, 1961, சு.அ. இராமசாமிப் புலவர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ப.11
33. மூன்று கடிதங்கள், கட்டுரை, ரா.அ. பத்மநாபன், முற்கூறிய நெல்லையப்பர் விழா மலர்
34. பெ. தூரனின் முற்கூறிய கட்டுரை
35. லோகோபகாரி நெல்லையப்பர், கட்டுரை, பெ.சு.மணி, முற்கூறிய நெல்லையப்பர் விழா மலர்
36. முற்கூறிய நெல்லையப்பர் விழாமலர்

தமிழர் நேசன்

1917

‘தமிழ்ப் பத்திரிகைகள் புஸ்தகங்கள் பிரசங்கங்கள் முதலிய வற்றின் மூலமாய் இங்கிலீஷ் தெரியாத தமிழ் நாட்டாருக்குள் தற்காலத்து நவீன அறிவைப் பரவச் செய்வதுதான் நமது முக்கிய நோக்கம்.’

— ‘நமது சங்கம்’
தமிழர் நேசன்
(தொகுதி 1, பகுதி 1)

தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை.)

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."—திருக்குறள்.

தொகுதி 1. } பிங்கள௵ மார்கழிமீ { பகுதி 3.

இரசாயன சாஸ்திரம்.

[திருநெல்வேலி ஹிந்து கலாசாலையின் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ
க. சு. வீரராகவையரவர்கள். M. A., F. C. S., எழுதியது]

(92-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

VI. வஸ்துக்களின் அமைப்பு.

பலகொள்கைகள்:—மிகப் பழைய காலங்களில் நாகரிகம் மலிந்த நன்னாடுகளாகிய சைனா, இந்தியா, பெர்ஷியா, கிரீஸ், ரோம் முதலிய இடங்களிலுள்ள மதவாதிகளும் தத்துவ சாஸ்திரிகளும், வஸ்துக்களின் அமைப்பு, அவைகளின் நித்தியாநித்தியங்கள் முதலியவற்றைப்பற்றி, ஆகமம் அநுமானம் பிரத்தியக்ஷமாகிய மூன்றனைவகைகளையும்பிரயோகித்து,பலவாறாய் ஆராய்ந்தறியமுயன்றனர். அவர்களில் ஒரு சாரார், 'வஸ்துக்கள் நுண்ணிய பொருளாகிய பல அணுக் கூட்டங்களாய்த் திகழ்கின்றன' என்றும், மற்றொரு சாரார் 'அணுவென்பதில்லை; பல அணுக்கள் கூட்டமாய்ச் சேர்ந்து வஸ்துக்கள் உண்டாவதில்லை; ஒரு வஸ்துவானது ஏதோ ஒன்றின் ஒரே நீட்டமாய்ப் பலவென்று பிரிக்க முடியாத தாயுள்ளது' என்றும், இன்னும் ஒரு சாரார், 'பொருள்களெல்லாம் மாயை, அநித்தியங்கள்; அவைகளுக்கென்று ஒரு விசேஷமும் கிடையாது' என்றும் வெளியிட்டிருக்கின்றனர்.

அணுவாதம்:—இம்மூன்று கொள்கைகளில் முதலாவதே மேல்நாட்டுச் சாஸ்திர விற்பன்னர்களால் முழுதும் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர், கிரீஸ்

தமிழர் நேசன்

இராம. குருநாதன்

இந்தியா விடுதலை அடைவதற்கு முன் வெளிவந்து கொண்டிருந்த தமிழ் இதழ்கள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தம் கருத்துகளைத் தமிழ் நாட்டினர்க்கும் தமிழ் மொழிக்கும் வழங்கியுள்ளன. ஆங்கில ஆட்சியின் அடக்கு முறையும், பத்திரிகைச் சட்டங்களும் இதழ் உலகை அச்சுறுத்திய காலம் அன்றைய காலமாகும். அத்தகு கால கட்டத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் விடுதலை வேட்கையைத் தமிழரிடம் ஊட்டி வளர்த்தன. இதற்கிடையே சில இதழ்கள் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும், மொழியின் வளர்ச்சிக்கும் பாடுபட்டன. இத்தகைய நிலையில், தமிழ் மக்களுக்கு அறிவியலில் விழிப்புணர்ச்சி வேண்டும் என்று கருதி வெளியிடப் பெற்ற இதழ் 'தமிழர் நேசன்' என்னும் மாத இதழாகும்.

ஆங்கிலக் கல்வி மீது அளவிலாத பற்றுக் கொண்ட தமிழர் சிலர், ஆங்கில மொழியில் ஈடுபாடு காட்டியதோடு அம்மொழியில் எழுதினாலும், பேசினாலுமே பெருமை என்று எண்ணிய கால கட்டத்தில் வெளிவந்தது இந்த இதழ். இந்தக் கால கட்டத்தில் ஆங்கிலம் நன்கறிந்த சிலர், தமிழர் மீது மிகுந்த அக்கறை கொண்டு, அவர்கள் மேன்மை அடையப் பரந்த கல்வியறிவு வேண்டும் என நினைத்தனர். தமிழர் மேனாட்டாரைப்போல் சிறக்க வேண்டுமானால் பல துறைகளிலும் அறிவு பெற்றவராய்த் திகழவேண்டும் என்ற தீவிர சிந்தனை அரும்பியது. 'நவீன அறிவு என்பது மேல் நாட்டு அறிவையே குறிப்பதாயிருந்தது. இச் சிந்தனையின் விளைவாகத் 'தமிழர் கல்விச் சங்கம்' என்ற சங்கம் உருவானது. மேனாட்டு அறிவியல் துறைகள்

பலவற்றையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அக்கறையோடு தொடங்கப்பட்டது இச்சங்கம்.

இச் சங்கத்தில் தீவிரம் காட்டியோருள் அ. மாதவய்யாவும், ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இச் சங்கத்தின் தலைவராக சதாசிவ அய்யர் இருந்தார். இச் சங்கத்தினின்றும் வெளிவந்த இதழே தமிழர் நேசன் ஆகும். தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை என்ற முத்திரையுடன் 1917ஆம் ஆண்டு இந்த இதழ் தொடங்கப்பெற்றது. அ. மாதவய்யா இதழ் ஆசிரியராய் இருந்தார்.

அறிவு வேட்கையும் தேடலுமே இப்பத்திரிகையின் ஊடு பொருள். தமிழர் அறிவுத் தாகம் பெறவேண்டும் என்ற எண்ணத்தைக் காட்டுவதற்கொப்ப இவ்விதழ், 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு', என்ற குறளை முகப்பில் வெளியிட்டது. முகப்பின் முகவரியான இக்குறள் இவ்விதழின் நோக்கை இனங்காட்டவல்லது.

தமிழர் நேசன், தமிழர் கல்விச் சங்கத்தின் கூட்டு முயற்சியாகும்; சங்க உறுப்பினர் சிலரின் பங்குத் தொகையில் வெளி வந்ததாகும். முதல் இதழின் முன்னுரையில் பத்திரிகையின் நோக்கம் வெளியிடப்பெற்றுள்ளது:

> தமிழ்ப்பத்திரிகைகள் புஸ்தகங்கள் பிரசங்கங்கள் முதலியவற்றின் மூலமாய் இங்கிலீஸ் தெரியாத தமிழ் நாட்டாருக்குத் தற்காலத்து நவீன அறிவைப் பரவச் செய்வதுதான் நமது சங்கத்தின் நோக்கம்.

என்ற கருத்து, மேனாட்டில் வளர்ந்து வந்த அறிவியல் தொடர்பான சிந்தனைகளை ஆங்கிலம் அறியாதோரும் ஓரளவே அறிந்தோரும் பெறவேண்டும் என்பதையே தெரிவிக்கிறது.

இப் பத்திரிகையின் ஆசிரியரான அ. மாதவய்யா தமிழர் நேசனைத் தொடங்குவதற்கு முன்னரே, சில பத்திரிகைகளில் எழுதி வந்தவர். தமிழ் மக்களின் மீது சமூக அக்கறை கொண்டவர். சீர் திருத்தம் விரும்பியவர். தமிழர் மேல்நாட்டுக் கலை, இலக்கியம், அறிவியல், தத்துவம் முதலானவற்றைக் கற்றுச் சிறக்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவர். வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் தமிழருக்கு மொழி பெயர்ப்புப் படைப்புகளைத் தந்து மகிழ்ந்தவர்.

'மெத்த கலைகள் வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை', என்ற பாரதியின் கூற்றை ஏற்று அக்கவலையை மாற்ற எண்ணியவர். மேனாட்டுக் கலைகளைத் தமிழில் தருவதோடு, மற்றவரையும் அப்பணியில் ஊக்கியவர் என்பதனைத் தமிழர் நேசனால் உணர்ந்து கொள்ளலாம்.

1902இல் மாதவய்யா தாம் தமிழில் மொழி பெயர்த்த ஒத்தெல்லோ நாடகத்தின் ஆங்கில முன்னுரையில் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கது. அதன் தமிழாக்கம் வருமாறு:

> மிகச்சிறந்த கவிஞரின் இச் சீரிய நாடகம் ஒவ்வொரு தமிழர் இல்லங்களைச் சென்றடையும். எளியேனின் இத்தகு முயற்சி இதுபோன்ற துறைகளில் முன்னோடியாக விளங்கும். பிற சான்றோரும் இதில் ஈடுபட வழிவகுக்கும். இது தமிழ் இலக்கியத்தை உயர்த்துவதோடு தமிழர் இல்லங்களையும் தழைப்பிக்கச் செய்வதாகும்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளமை அவர் தமிழ் மொழி மீதும், தமிழர் மீதும் கொண்டிருந்த அக்கறையைக் காட்டுகிறது. இத்தகைய சூழ்நிலையில்தான் தமிழர் நேசன் பற்றிய சிந்தனை அவரிடம் மிளிர்ந்தது. இதற்கான அடையாளங்களை அப் பத்திரிகையில் இருந்து உணர முடிகிறது.

மாதவய்யாவின் மற்றொரு பணியையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். எழுத்தின் வழியே சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்றெண்ணிய அவர், புதினங்களைப் படைத்தார். 1892இல் விவேக சிந்தாமணி என்ற இதழைச் சி.வி. சாமிநாதய்யர் நடத்தி வந்தார். அந்த இதழில் 'சாவித்திரியின் சரிதை அல்லது ஒரு பிராமணப் பெண்ணின் சுயசரிதை', என்ற கதையை மாதவய்யா தொடர்கதையாக எழுதிவந்தார். அது பிராமண விதவைப் பெண் ஒருத்தியின் கதை. அதில் சீர்திருத்தக் கருத்தை அவள் வழியாக உணர்த்தினார். அதன் காரணமாகச் சாமிநாத அய்யருக்கும் மாதவய்யாவிற்கும் கருத்து முரண் தோன்றவே மாதவய்யா அப்பத்திரிகையில் எழுதி வந்ததை நிறுத்திக் கொண்டார். இதற்குப் பிறகுதான் தமிழர் நேசனைத் தொடங்கினார்.

மாதவய்யா பிறப்பால் அந்தணராயினும் சமூகப் புரட்சியை விரும்பியவர். குழந்தை மணத்தை எதிர்த்தும், விதவை மறு மணத்தை ஆதரித்தும் குரல் கொடுத்தவர். முத்துமீனாட்சி என்ற

இவரது புதினம் (விவேக சிந்தாமணியில் வெளிவந்த சாவித்திரி கதை பெயர் மாற்றம் பெற்று 1903இல் நூலாக வந்தது) விதவை மறுமணம் பற்றிய சிந்தனையில் எழுந்ததாகும். விதவையர் சிக்கலைக் கருப் பொருளாக்கி விதவை மறுமணம் சிக்கலுக்குத் தீர்வாகும் என்ற கண்ணோட்டத்தில் எழுதப்பெற்ற இப்புதினத்தை, இந்திய மொழிகளிலேயே இந்த மையக்கருத்துக் கொண்ட முதல் நாவல் இதுதான் என்று சுட்டிக்காட்டுகிறார் இரா. தண்டாயுதம். இத் தகைய சமூகப்பார்வையை எண்ணியே நா. வானமாமலை, 'புரட்சி கரமான மனிதநேயக் கொள்கையின் தந்தை' என மாதவய்யாவை உணர்ச்சிபடப் பாராட்டியுள்ளார்.

சமுதாய அக்கறை கொண்டவர் மாதவய்யா என்பதனைத் தமிழ் நேசனில் சில பகுதிகளிலிருந்து காணமுடிகிறது. குழந்தை மணத் தால் விளையும் விதவையர் நிலையைப் புள்ளி விவரங்களோடு முதல் இதழிலேயே எடுத்துக்காட்டியுள்ளார்.

> ஒருவயது நிறையாத பெண் சிசுக்களுக்குள் முப்பத்தோரு விதவைகளும், ஒன்றுக்குமேல் இரண்டு வயதுக்குள் முப்பத்து நான்கு விதவைகளும், மூன்றுக்குமேல் நான்கு வயதுக்குள் நூற்று நாற்பது விதவைகளும், நான்குக்கு மேல் ஐந்து வயதுக்குள் முந்நூற்று எண்பத்து மூன்று விதவைகளும், பிற வயதுகளில் உள்ளோருமாகச் சேர்த்து மொத்தம் 23,068 விதவைகளும் 1911 ஜன சங்கைப்படி நம்முள் இருக்கின்றனர்... இது எவ்வளவு பிரஜா நஷ்டம்? (தமிழர் நேசன் தொகுதி 1 பகுதி 1 ப.7)

பெண்கள் பலரும் இளமை மணத்தினால் விதவை அடைய நேர்ந்த தெண்ணித் தன் வருத்தத்தையும் இரக்கத்தையும் இவ்வாறு புலப் படுத்தியுள்ளார். மாதவய்யா இதேபோல் சமூக நலன் பற்றிய சிந்தனையில் பண்பாட்டுக் கவலையையும் தெரிவிக்கிறார். சாதிக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவராக விளங்கினார் அவர்.

> நமது சென்னை மாகாணத்தில் மட்டும் 479 வெவ்வேறு சாதிகள் இருக்கின்றனவாம். மொத்தமுள்ள 160 லட்சம் தமிழ் மக்களுக் குக் கால் பாகத்தாரைத் தீண்டாச் சாதிகளாக நாம் விலக்கிவைத்து அவர்களை மிருகங்களிலும் தாழ்வாக நடத்திவர - அது காரண மாய் - அவர்கள் அந்நியரிடம் அடைக்கலம் புகுந்தும், அந்நிய மதங்களையும் ஆசாரங்களையும் தழுவியும் ஊரை விட்டோடியும் படுவது கஷ்ட நிஷ்டூரங்கள் (1,1, ப.6)

எனத் தெரிவித்திருப்பது, அன்று நிலவியிருந்த சாதிப் பிரிவினைக் கொடுமையைப் பற்றிய கவலையாகும். இவ்வாறு ஆசிரியர் சுட்டி யிருப்பது அவருடைய உள்ளத்தைப் புரிய வைப்பதோடு, தமிழர் நலனில் கொண்ட அக்கறையையும் உணர்த்தி நிற்கிறது. மாதவய்யா வின் இத்தகு சமுதாய அக்கறையைக் காட்டுதற்குரிய களமாகத் தமிழர் நேசனைக் கருதமுடியவில்லை காரணம் அதன் அடிப்படை நோக்கம் வேறு. எளிய தமிழில் மேல் நாட்டாரின் பலதுறைக் கட்டுரை களை மொழிபெயர்த்துத் தருவதையே சங்கத்தினர் விரும்பி யுள்ளனர்.

> மேல்நாட்டாரின் நவீன அறிவைத் தமிழ் மக்களுக்கு ஊட்டும் பொருட்டு மனித வாழ்க்கைக்கு எவ்வாறேனும் பயன்படக்கூடிய பல்வேறு சாஸ்திரங்களின் உண்மைகளையும் துணிவுகளையும் விவரணங்களையும் பற்றி அந்தந்தக் கலைகளைக் கற்றுத் தேர்ந்த மேதாவியார் யாவருக்கும் தெளிவாய்ப் பொருள் படும்படி அறிய எளிய நடையில் எழுதும் வியாசங்கள் நமது சங்க முயற்சி யால் இப்பத்திரிகையில் எழுதப்படும்.

என்ற கருத்தை முன்வைத்து இப்பத்திரிகை வெளிவந்ததால் சமூகம் தொடர்பான கட்டுரைகளை மிகுதியும் வெளியிட அதில் வாய்ப் பில்லை. கதைகள் வழிச் சமூகச் சிந்தனைகளை அவ்வப்போது வெளிப்படுத்தியதையும் இங்கு நினைவுகூரலாம். இப்பத்திரிகை யின் அடிப்படை நோக்கங்களைக் கீழ்க்கண்ட பகுதி உணர்த்துகிறது.

> அறியாமையை நீக்கிப் போலிக் கொள்கைகளையும் எண்ணங் களையும் சீர்திருத்த இதுகாறும் பெரியோர்களால் சித்தாந்தம் செய்யப்பட்டுள்ள தெள்ளறிவை நமது நாட்டுப் பொது ஜனங் களுக்குப் புகட்டி உழைப்பதுடனும் அன்றி, பல வழிகளாலும் அவர்கள் புத்தியைக் கூரியதாக்கி, மனத்தையும் சித்த விருத்தி யைக் கூட்டியும் விசாலப்படுத்த முயலும். இதுவுமன்றித் தேசா பிமானத்தை வளர்த்துத் தமிழறிவைப் பெருக்கி அம்மொழியில் ருசியை உண்டாக்கி மனத்தை நல்ல வழியில் செலுத்தி மகிழச் செய்யத்தக்க பெரியோர்களின் சரித்திரங்களையும் தமிழிலும் இதர பாஷைகளிலும் உள்ள அருமை பெருமை விஷயங்களை எடுத்தோதும் உரைகளும் கதைகளும் பாடல்களும் அப்போ தைக்கப்போது இதில் வெளிவரும் (தமிழர் நேசன் I,1, ப.8)

என்ற கருத்து இப்பத்திரிகையின் நோக்கத்தைத் தெளிவு படுத்துவ தாய் உள்ளது.

மேற்கூறிய அடிப்படை நோக்கங்களை அணுகும்போது தமிழர் நேசனின் கொள்கையை இரண்டாகப் பகுக்க முடிகிறது.

1. மேனாட்டாரின் அறிவியல் மற்றும் கலை இலக்கியம் வரலாறு தொடர்பான செய்திகளை அறிமுகப்படுத்துதல்

2. தமிழ், தமிழர் ஆக்கங்களுக்கு அவற்றை உளப்படுத்துதல்

என்ற வகைகளில் வரையறுக்கலாம்.

இப்பத்திரிகையின் அகக் கட்டமைப்பை நோக்க இப்பகுப்பு வலிமைபெறுகிறது. அறிவியலோடு சார்ந்த இயைபியல், வேதியல், உயிரியல், பயிரியல், நிலவியல், புவியியல் முதலானவை பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் கட்டுரைகள் இதில் வெளியிடப் பெற்றுள்ளன. அறிவியல் கட்டுரைகளைத் தாங்கிவந்த இதழ்களுக்கு இதுவே முன்னோடியாகும்.

முதல் ஐந்து தொகுதிகளில் இடம்பெற்ற கட்டுரைகளில் மிகுதியும் அறிவியல் தொடர்பானவையே. தமிழர், அறிவியல் கல்வி பெற வேண்டும் என்ற ஆழமான சிந்தனையையும் அதற்கேற்ற முனைப்பையும் எல்லாக் கட்டுரைகளிலும் காணமுடிகிறது.

இதழின் புறக்கட்டமைப்புப் படிக்கக் கூடியதாய் உள்ளது. இவ்விதழின் அளவு 10.5 x 16.5 சி.எம். என்ற வகையில் அமைந்துள்ளது. எழுத்துக்கள் 10 புள்ளிகளில் படிப்பதற்கு ஏற்ற வகையில் அச்சிடப் பெற்றுள்ளன. அட்டைப்படங்கள் கிடையா. விளம்பரங்கள் பெரும்பான்மையும் இடம்பெறவில்லை. தொகுதி முழுவதற்கும் பக்க எண்கள் தொடர் எண்களாக இடப்பெற்றுள்ளன. தொகுதி 1 பகுதி 1 என்றளவில் இதழ் கணக்கிடப்பெற்றுள்ளது.

பொருளடக்கம் என்ற பகுதியில் கட்டுரைகள் வகைப்படுத்தப் பெறவில்லை. மூன்றாம் தொகுதியிலிருந்து வகைப்படுத்தப்பெற்ற இயல்களில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஒலிநூல், உயிர் நூல், தாவர நூல், தகவல் நூல், வான சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், ஜீவ சரிதை, வரலாற்று நூல் முதலிய தனித்தனி இயல்களில் அவ்வியல் தொடர்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இப்பத்திரிகைக்குத் தலையங்கம் கிடையாது. சில இதழ்களில் மட்டும் முகப்புப் பக்கத்தில் தமிழர் கல்விச் சங்கச் செய்திகளோ பிறவோ இடம்பெற்றதுண்டு.

பத்திரிகை அலுவலகம், இரண்டாம் ஆண்டிலிருந்து புதிய முகவரியில் இயங்கி வந்தது. 3 சித்திரைக் குளத் தெரு, மயிலை என்ற முகவரியிலிருந்து இதழ் வெளிவரத் தொடங்கியது. இதன் தனிப்பிரதி அப்போது 8.0 அணா. சந்தா உறுப்பினர்க்கு 2.00 ரூபாய். மற்றவர்க்கு 3.00 ரூபாய். அயல்நாட்டார்க்கு 3.12.0 என அதன் சந்தா விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்படிச் சந்தா தொகை இருந்தும் பத்திரிகை நடத்துதற்குக் கடினமாயிருந் துள்ளது. நல்ல தரமான பத்திரிகை நடத்துவது என்பது கையையும் கடிக்கும், கழுத்தையும் நெறிக்கும். இதனை நன்குணர்ந்த மாதவய்யா இரண்டாம் தொகுதியில் இதுபற்றி 'நமது பத்திரிகை' என்ற தலைப் பில் இப்பத்திரிகைக்காகப் பண உதவி செய்து வந்த நண்பர்களைப் போற்றி எழுதியுள்ளார். அதேசமயம்,

யாமோ முதலில் எதிர்பார்த்த
அளவு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிலேம்

என்று வருந்திக் கூறியிருப்பதும் எண்ணுதற்குரியது. பத்திரிகை வெளிவந்த இரண்டாம் ஆண்டு சங்கத் தலைவர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் தலைமையில் 21.3.1918 அன்று இப்பத்திரிகை வளர்ச்சி குறித்து ஒரு கூட்டம் நிகழ்ந்தது. உ.வே.சா., பவானந்தம் பிள்ளை, கஸ்தூரி ரங்கன், சீனிவாச ஐயங்கார், ஏ.வி. சுப்பிரமணிய ஐயர் முதலியோர் இப்பத்திரிகையின் எதிர்காலம் குறித்து விவாதித் துள்ளனர். அக்கூட்ட முடிவில் திரு.வி.க இப்பத்திரிகையின் தொண் டினைப் பாராட்டிப் பேசியுள்ளார். இதற்கிடையே 'விவாகதோயம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பாலாம்பாள் தமிழர் நேசனுக்கான பங்குத் தொகை பற்றிக் குறிப்பிட்டுப் பேசவும், ஒரு பங்குத் தொகை ரூ.பத்து எனக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. சர். சி.பி. இராமசாமி ஐயர் ரூ. நூறு கொடுத்துப் பத்துப் பங்குகள் வாங்கிய தாகத் தெரிகிறது.

இத்தகைய கூட்டு முயற்சியால், தமிழர் நேசன் செயல்படத் தொடங்கியது. பத்திரிகை நடத்துவதில் இச்சங்கம் இலாபம் பார்க்கவில்லை. பயனை மட்டுமே கருதிப் பணி செய்தது. தரமான அறிவியல் தகவல்களை மக்கள் அறிய வேண்டி விசாரிப்புக்குழு ஒன்றை நடத்தியிருக்கிறது. எம்.சி.டி.எம் முத்தையா செட்டியார் போன்றோர் இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர நிதி உதவி அளித்துள்ளனர்.

ஆங்கிலம் நன்கு அறிந்தோர் இப்பத்திரிகையில் கட்டுரை எழுதி வந்துள்ளனர். அவர்களில் ஏகாம்பரநாதய்யர், ஏ. சி. வீர ராகவ ஐயங்கார், டி.ஒய். நாராயண அய்யர், அநந்தபத்மராவ், வி. ஏ. சுப்பிரமணிய முதலியார், டி. எஸ். சுப்பிரமணிய ஐயர், டி. எஸ். இராசகோபால ஐயர், பெ.நா. அப்புசாமி, பவானந்தம்பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

இப்பத்திரிகைக்கே உரிய பெருமையாக அறிவியல் கட்டுரை கள் இடம் பெற்றதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அத்தகைய கட்டுரைகள் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப் பெற்றுள்ளன. எல்லோரும் விளங்கிக் கொள்வதற்குரிய நடையை மிகுந்த முயற்சி யோடு மேற்கொண்டுள்ளமை புலனாகிறது.

'பிரகிருதியில் மனிதனுடைய ஸ்தானம்' (ஏகாம்பரநாத ஐயர்) என்ற கட்டுரை புவியியலையும் பரிணாம வளர்ச்சியையும் விளக்கு கிறது. இது தொடர்கட்டுரையாக வெளிவந்துள்ளது. 'பதார்த்த குணாதிசய குறிப்புகள்' (எம்.சி.எல். அநந்தபத்மநாப ராவ்) என்ற இயற்பியல் தொடர்பான தொடர் கட்டுரை விளக்கப்படங்கள் உட்னும், விரிவான செய்திகளோடும் இடம் பெற்றிருந்தது. 'வானம் உறங்கும்', 'கடலின் களஞ்சியம்' (பெ.நா. அப்புசாமி) முறையே கோளியல், கடலியல் பற்றிய கட்டுரைகளாகும்.

உடல்தூய்மை, சுற்றுப்புறத் தூய்மை ஆகியன குறித்து அவ்வப் போது கட்டுரைகள் சில வெளிவந்தன. இவ்வகையில், எழுந்திருத் தல், தந்த சுத்தி, அழுக்கும் அதனால் வரும் கேடுகளும் ஆகிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன. 'இருதய இயந்திரம்', என்ற கட்டுரை, இதயம் செயல்படும் முறையை நன்கு விளக்கும் மருத் துவக் கட்டுரையாகும். நோய்கள் குறித்த சில அடிப்படையான செய்திகளை மக்கள் அறிதல் இன்றியமையாதது என்ற கண்ணோட் டத்தில் எழுதப்பெற்றவை வைசூரி, மஞ்சள் காமாலை போன்ற கட்டுரைகளாகும்.

உயிரியல் கட்டுரைகளான தேனீ, வண்டு, தத்துக்கிளி போன் றவை அறிவியல் சிந்தனைகளோடு வெளிவந்தன.

உலோகங்கள் குறித்து அ. மாதவய்யா எழுதிய கட்டுரை தனித்தன்மையுடையது. இது ஆங்கிலத்திலிருந்து தழுவி எழுதப் பெற்றதாகும்.

'ஆதி ஆயுர்வேத சாஸ்திரமும் நுண்ணுயிர் உலகமும்', என்ற கட்டுரை பண்டைக் காலத்தில், ஆயுர்வேதம் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதைப் பற்றியதாகும்.

சில அறிவியல் கட்டுரைகளின் தலைப்பே புதுமையாக இருந்துள்ளது. இஃது இப்பத்திரிகையின் உத்திகளில் ஒன்று. ஆலம் பூ விதை பற்றிய கட்டுரை படிக்கத் தூண்டுவதற்கு ஏற்ப அமைந்துள்ளது. அதன் தலைப்பு, 'அத்தி பூத்தாற்போல' என்பதாகும். பயிரியல் பற்றிய கட்டுரையாகும் இது.

'குறிப்புகள்' என்ற பகுதியில் இடம் பெறும் அறிவியல் வினா விடைகள் ஈர்ப்புடைய வகைகளில் அமைந்துள்ளன. கேள்விகள் ஆவலைத் தூண்டுமாறு உள்ளன. இதுவும் இப்பத்திரிகையின் அழகியதோர் உத்தி. 'நெருப்பிலிடப்பட்ட இரும்பு ஏன் சாம்பலாகப் போவதில்லை?' 'ஆகாயம் நீலமாய்க் காணும்போது மேகங்கள் எங்கே போகின்றன'? 'உறிஞ்சினால் ஜலம் எப்படி மேலே எழுகின்றது?' என்பன போல் வரும் கேள்விகள் பொது அறிவை இளஞ் சிறாரிடம் வளர்க்க உதவின. அதற்கேற்ற வகையில் கேள்விகள் படிக்கத் தூண்டுவதாய் விளங்கின. அறிவியல் வினா-விடைகளைச் சிறுவரிடம் மேலோங்கச் செய்ய வேண்டும் எனக் கருதிய பெ. திரிகூடசுந்தரம் முப்பதாண்டுகளுக்குப் பின் அப்பாவும் மகனும், அறிவுக் கனிகள் போன்ற நூல்களை எழுதுதற்கு இவ்வுத்தி முறை முன்னோடியாக இருந்துள்ளது.

'விஞ்ஞானப் பத்திரிகை' என்று பலராலும் கருதப்பட்டு வந்த இப்பத்திரிகை, அத்தகைய அறிவைத் தமிழர் பெறத் தூண்டுகோலாக இருந்துள்ளது. தொண்ணூற்று நான்கு வயதுவரை வாழ்ந்த பெ. நா. அப்புசாமி தமிழில் சிறந்த அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ்பெறுதற்குக் காரணமாயிருந்தது இவ்விதழ்.

தமிழர் நேசன், இவ்வாறு அறிவியல் செய்திகளுக்கே முதன்மை அளித்து வந்ததால், அறிவு சார்ந்தவர்களின் பத்திரிகையாகத் திகழ்ந்தது. தமிழ் இதழ் வழியே தமிழ்மக்களைப் புதிய அறிவியலில் தடம் பதிக்கச் செய்த பெருமை இப்பத்திரிகைக்கு உண்டு. இதுவே தமிழில் வெளிவந்த முதல் அறிவியல் பத்திரிகையாகும்.

இதழை எவ்வெவ்வகையில் நடத்திச் செல்வது என்ற கலை அ. மாதவய்யாவிற்கு நன்கு தெரிந்திருக்கிறது. அறிவியலுக்கான

இதழாக இருந்தும், பல்வேறு துறைகளில் செய்திகள் இடம் பெறு வதையும் பின்னர் இணைத்துக் கொண்டார்.

அறிவியல் மட்டுமன்றித் தமிழ்மொழிக்கும் தமிழர் நேசன் அருங்கொடை நல்கியுள்ளது. தமிழில் அறிவியல் கலைச் சொற் களைத் தொகுத்து வெளியிட்டுள்ளமை பாராட்டுக்கு உரியது. உயிரியல், வேதியல், இயற்பியல் முதலான அறிவியல் துறை சார்ந்த ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை வழங்கியுள்ளது. அவற்றில் தூய தமிழ்ச் சொற்களைக் காணமுடியா விட்டாலும், அக்கால கட்டத்தில் ஆங்கிலம் கற்றோர் அவற்றை அறிந்து கொள்ள உதவியது. இராசாசி போன்றோரின் ஒத்துழைப் பால் சேலத்தில் தமிழ் அறிவு நூல் சொற்சங்கம் (Tamil Scientific Term Society) இயங்கி வந்ததனைத் தமிழர் கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்த ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் இப்பத்திரிகையில் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழர் கல்விச் சங்கத்தின் சார்வில் வெளிவந்த இப்பத்திரிகையில், தம் சங்கத்தின் நோக்கத்தைத் தொகுதி ஐந்து - முன்னுரையில் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது கவனிக் கத்தக்கது.

> தமிழின் மேன்மையையும் தமிழ்மக்களின் நலத்தையும் நாமும், அறிவாளர் பலரும் நல் அறிவைத் தமிழ் வழியே புகட்ட முன்வரும்போது, அவர் புகட்டும் அறிவைத் தமிழ்மக்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறும் செய்வது சங்கத்தின் நோக்கம் (தமிழர் நேசன் தொகுதி V,I)

அறிவு நூல்களை அறியச் செய்தலும், தமிழருக்கு மேனாட்டுச் சாத்திரங்களை அறிமுகப்படுத்தி அவற்றின் வழித் தமிழரின் கல்வி அறிவை மேம்படுத்தச் செய்வதும் இன்றியமையாத கடமைகளா கும் என்பதை அவரது கூற்று உணர்த்துகிறது. சேலத்தில் நடந்து வந்த தமிழ் அறிவுநூல் சொற்சங்கத்திற்கும், தமிழர் கல்விக் கழகத்திற்கும் நெருக்கமான உறவு இருந்திருக்க வாய்ப்புண்டு. தமிழர் நேசனின் பத்திரிகைப் பொறுப்பாளர்களும் பிறரும், சேலத் தில் இயங்கி வந்த அச்சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்ததை யும், அச்சங்கப் பணியின் செயற்பாடுகளையும் பற்றிய யாதொரு தகவலையும் விளக்கமாக அறியமுடியவில்லை.

தமிழர் நேசன், தமிழ் மொழி பற்றிய சிந்தனைகளுக்கு ஓரளவு முன்னுரிமை கொடுத்துள்ளது. இதனை அவ்வப்போது வெளிவந்த

ஓரிரு கட்டுரைகளினின்றும் அறிய முடிகிறது. தமிழ்மொழி குறித்தும், தமிழ்ச் சொற்களஞ்சியம் குறித்தும் ஜே.எஸ். சாண்ட்லர் எழுதிய கட்டுரைகள் சுட்டிக்காட்டத்தக்கன. தமிழ்ச் சொற் களஞ்சிய ஆக்கத்தின் குழுத்தலைவராக இருந்த அவர், கருத்தாழம் மிக்க மொழி தொடர்பான சிந்தனைகளை முன்வைத்துள்ளார்.

> யுத்த காலத்தில் ஆட்களைச் சோதிக்கிறது போல், அகராதி செய்யும் விஷயத்தில் பதங்களைச் சோதிக்கும் வேலை பிரதான மாகவுள்ளது. (தமிழர் நேசன் III; 4)

என்று சொற்களைக் கண்டறிந்து அகர முதலியில் வெளியிடுவது பற்றிச் சுவைபடக் குறிப்பிடும் அவர், பிற சொற்களை ஏற்கும் விதத்தை நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார்.

1. பூர்வத் தமிழில் பதங்கள் - ஆதியிலிருந்து வழங்குபவை; அவை தமிழாக இருப்பவை

2. துணைத் தமிழில் பதங்கள் - வேறு மொழியிலிருந்து நல்ல கருத்துகளைக் கொண்டுவந்து தமிழ்ப் பதங்களோடு ஐக்கியப்படுத்துதல்

3. நடுநிலையான தமிழில் பதங்கள் - தமிழ் இலக்கணத்திற்கு மாறுபாடு இல்லாமல் இனிமேல் புதுக்கருத்துகளைக் கொண்டுவரக் கூடிய இசைவான பதங்களே. அவையெல் லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. இசைந்து வராத பதங்களுக்குத் தமிழில் இடமில்லை.

4. பகையான தமிழில் பதங்கள் சம்பந்தமில்லாமல் தாறு மாறாக உண்டாக்கக் கூடிய பதங்கள். இவை தமிழ்ப் பாஷைக்குப் பகையாய் உள்ளவை.

என இவ்வாறு வகைப்படுத்திக் கூறியுள்ளமை சான்ட்லர் மேற் கொண்ட பணியில், அவரிடம் இருந்த கடமையுணர்ச்சி, ஈடுபாடு, பொறுப்பு ஆகியவற்றைக் காட்டுவதாகவுள்ளது.

இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை முதல் ஐந்து தொகுதி களில் காண்பதரிது. ஐந்தாம் தொகுதியில் கா. சுப்பிரமணிய பிள்ளை திருஞான சம்பந்தரின் தேவாரம் குறித்து எழுதிய கட்டுரை குறிப் பிடத்தக்கது.

இப்பத்திரிகையில், பொழுது போக்கிற்குரிய செய்திகள் பெரும்பான்மையும் இல. மொழிபெயர்ப்புக் கவிதை, கதை, நாடகம் போன்றவை ஓரளவு இடம் பெற்றுள்ளன. 'தமிழர் செல்வம்' என்ற பகுதி ஒவ்வோர் இதழிலும் வெளிவந்துள்ளது. பண்டைய தமிழ் இலக்கியத்திலிருந்து குறிப்பாக, பத்துப்பாட்டு, சிலம்பு, மேகலை, குறள், நாலடியார், கம்பராமாயணம், வில்லி பாரதம், தனிப்பாடல்கள் முதலானவை ஒருபக்கம் அல்லது இருபக்கங்களில் இடம்பெற் றுள்ளன. பாடலிலிருந்து சில பகுதிகளையும், அவற்றிற்கான குறிப் புரையோடு கூடிய விளக்கங்களையும் 'தமிழர் செல்வம்' என்ற இலக்கியப் பகுதி புலப்படுத்திக் காட்டியுள்ளது.

மொழிபெயர்ப்புக் கவிதைகள் முதல் தொகுதியில் வெளியிடப் பெற்றுள்ளன. அவற்றை அ. மாதவய்யா மொழி பெயர்த்துள்ளார். சார்லஸ் லாம்ன் எனது பழைய தோழர் (The old Familiar Faces), தாமஸ் முரின் பழைய நனைவு (The light of the otherday), இராபர்ட் சதேயின் எனது புத்தகங்களின் மத்தியில் (Among the books), பாகோரின் நீ மனம் ஏங்கிடாதே (Despair not), பார்பால்ட்டின் உயிர் (Life) போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. மற்றும் ஆல்டஸ் ஹக்லியின் கவிதை ஒன்றைத் தழுவி எழுதப்பெற்ற 'இந்தியா என் அன்னையே' என்ற கவிதையும், சேக்ஸ்பியரின் சானெட் ஒன்றும் முதல் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இவை தவிரக் கடவுள் அருள், உலகம், சிறந்த தொண்டு, மரணம் முதலிய மொழி பெயர்ப்புக் கவிதைகளும் அதில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய கவிதைகளில் சில உயிரோட்டமாக உள்ளன.

சிறுகதை, புதினம், நாடகம் ஆகியன ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பக்கிம் சந்திரர் எழுதிய 'விருஹல்லங் கல வ்யாக்கிர சாரியார்' என்ற வங்காளச் சிறுகதை இராமசாமி ஐயரால் 'வால்நீண்ட வரிப்புலியார்' என்ற தலைப்பில் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது. எள்ளல் சுவையுடன் கூடிய சிறுகதை இது.

எட்வின் ஆர்னால்ட் இயற்றிய ஆசிய ஜோதி, உ.வே.சா எழுதிய புத்த சரித்திரம் ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'மூப் பினை அறிதல்' என்ற நாவலைப் படைத்துள்ளார் அ. மாதவய்யா. இது சித்தார்த்தரின் வரலாற்றைப் பற்றியது.

> வடமொழி கலப்பில்லாத தனித்தமிழில் சித்தார்த்தன் பற்றிய நாவல் இது

என்று அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. தனித்தமிழ் என்பதை விட அவரது காலத்திய நடை என்றே கருதும்படியாக அக்கதையின் நடை அமைந்துள்ளது. அ. மாதவய்யாவின் தில்லை கோவிந்தன் என்ற தொடர்கதை இப்பத்திரிகையில் இடம்பெற்றிருக்கிறது. இது வும் ஒரு மொழிபெயர்ப்பு நாவலாகும்.

சிறுவர் பகுதிகள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இவை பால விநோதக் கதைகள் என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளன. சிறுவர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் பெரிய எழுத்துக்களில் (12 புள்ளிகள்) வெளிவந்துள்ளன இக்கதைகள். மொகலாயக் கதைகள் என்பதும் தொடர்ந்து வெளிவந்தது. பொழுதுபோக்குத் தொடர்பானவையாய் இவை விளங்கின.

இப்பத்திரிகையில் நாடகம் எப்போதாவது இடம் பெற்றுள்ளது. பவானந்தம் பிள்ளை சீதாபரகணம் என்ற நாடகத்தை இதில் எழுதி யுள்ளார்.

இராம நாடக மஞ்சரி இப்பத்திரிகையில் இணைச் சேர்க்கை யாக (அநுபந்தமாக) வெளிவந்துள்ளது.

வரலாற்றுத் தொடர்பான கட்டுரைகள் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர் நேசனில் இடம்பெற்றுள்ளன. 'ஐரோப்பியர் ஆதி சரித்திரம்' என்ற தொடர்கட்டுரை சில பகுதிகளாக வெளிவந்தது. வரலாற்றில் புகழ்பெற்றவர்களின் வாழ்க்கை தொடர்ந்து இடம் பெற்றது. முதல் தொகுதியில், 'ஆன்றோர் ஆற்றுப்படை', என்னும் பகுதியில் தாதாபாய் நௌரோஜி, சி. சுப்பிரமணிய அய்யர், இராஜா ராம் மோகன்ராய், ஸர் வில்லியம் வெடர்பன் முதலியோர் வாழ்க்கை பற்றி அ. மாதவய்யா எழுதியுள்ளார். பிற தொகுதிகளில் டி.ஆர். இராஜகோபாலய்யர் என்பவர் மாஜினி, நெல்சன், நெப்போலியன், டால்ஸ்டாய், வாஷிங்டன், மார்ட்டின் லூதர், லிங்கன், கூடன்பர்க், கரிபால்டி முதலியோர் பற்றி நீண்ட கட்டுரை அளித்து வந்தார்.

மதிப்புரைப் பகுதியில் அரிச்சந்திரா, கம்பராமாயணச் சுருக்கம், சிவாஜி மகராஜா, பட்டபாணர் சரித்திரம் முதலான நூல்கள் இடம் பெற்றுள்ளன.

விடுதலைக்கு முன்னுள்ள கால கட்டத்தில் வெளிவந்த இத ழாதலால் விடுதலை பற்றிய சிந்தனையில் இது கொண்டிருந்த கருத்துப் புலனாகுமாறு இல்லை. முதல் ஐந்து தொகுதிகளைக்

காணுகின்றபோது, இப்பத்திரிகையின் பொறுப்பாளர்கள் தேசிய விடுதலையில் பங்கு ஆற்றியதற்கான குறிப்புகள் கிடைத்தில. எனினும், தமிழர் கல்விச் சங்கத்தில் பொறுப்பு வகித்தவர்களில் சிலர், தேசிய விடுதலை உணர்வு மிக்கவர்களாய் இருந்துள்ளனர். தமிழர் நேசனில் இது குறித்து அறிய வாய்ப்பில்லை.

விடுதலை பெறுதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன் வெளிவந்த பத்திரிகைகளில் தமிழர் நேசனுக்குக் குறிப்பிடத்தகுந்த இடம் உண்டு என்பதில் ஐயம் இல்லை. அறிவியல் பத்திரிகை என்றழைக்கப்பட்ட இதில் அறிவியல் கட்டுரைகள் மிகக் கவனமாக எழுதப் பெற்றிருப்பதைப் போற்ற வேண்டும்.

பின்னர் சுத்தானந்த பாரதியார் போன்றவர்கள் பத்திரிகை நடத்தியபோது, இப்பத்திரிகையின் அறிவியல் கட்டுரைகள் முன்னோடியாக இருந்துள்ளன. தமிழர் நேசனில் வெளிவந்த கட்டுரைகள் ஒவ்வொன்றும் அவற்றை எழுதியோரின் கடின உழைப்பையும், விடா முயற்சியையும் காட்டவல்லன.

இதழாசிரியர் அ. மாதவய்யாவின் முயற்சியும் தன்னம்பிக்கையும் உழைப்பும் தமிழர் நேசனுக்கு உற்ற துணையாய் விளங்கின. இலக்கிய மொழிபெயர்ப்புகளோடு, அறிவியல் தொடர்பான செய்திகளையும் அவர் அவ்வப்போது மொழிபெயர்த்து வந்தார்.

அன்றைய நாளில் பி.ஏ. தேர்வில் முதல் மாணவராகத் திகழ்ந்த மாதவய்யாவிற்கு, இலக்கியத்தாகம் இருந்ததற்கான அடையாளங்களைத் தமிழர் நேசனில் காணமுடிகின்றது. எனினும் அறிவியல் பார்வையே அதில் ஓங்கியுள்ளது.

1917 முதல் 1927 வரை சுமார் பத்தாண்டுகள் தமிழர் நேசன் வெளிவந்து கொண்டிருந்தது. இறுதியில் சில ஆண்டுகள் இவ்விதழின் ஆசிரியர் பணியைப் பெ.நா. அப்புசாமி ஏற்றுக் கொண்டார். இவர்க்கு மாதவய்யா சிறிய தந்தை ஆவார். மாதவய்யாவிற்குப் பின் இப்பத்திரிகை மிகவும் மெலிந்து போயிற்று. குறைவான பக்கங்களே வெளிவந்தன.

பெ. நா. அப்புசாமி ஆசிரியராக இருந்து நடத்தி வந்தபோது அப் பத்திரிகையின் நிலைமை குறித்துப் பின்னாளில் 'ராணி' ஆசிரியர் அ.மா. சாமியிடம் அவர் தெரிவித்த கருத்தாவது:

> தமிழர் நேசன் பத்து ஆண்டு நடந்தது. 32 பக்கமும் நானே எழுதி நிரப்பினேன். படங்களும் வரைந்தேன். பலபேரிடம் கட்டுரை கேட்டுக் கடிதம் எழுதுவேன். இதை (விஞ்ஞானம்) தமிழில் எழுதினால் படிப்பவர்களுக்கு அர்த்தம் ஆகாது என்று சொல்லி விடுவார்கள். படிப்பவர்களும் கிடையாது. எழுதுகிறவர்களும் இல்லாமல், படிப்பவர்களும் இல்லாமல் தமிழர் நேசன் நின்று போனது (தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி ப.193)

என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்கவைப்பதாகும்.

தொடக்கத்தில் அறிவியல் செய்திகளுக்கு முதன்மை அளித்துவந்த ஓர் இதழ் நின்று போனது வருத்தத்திற்கு உரியதாகும். முன்னர் எழுதிவந்தோரே திரும்பவும் எழுத முயன்றிருக்கலாம் அல்லவா? பெ.நா. அப்புசாமி கூறியிருப்பது போன்று அறிவியல் கட்டுரை எழுதினால் படிப்பவர்களுக்குப் பொருள் விளங்காது என்ற கூற்று சற்றே மிகையானது. தமிழர் கல்விச் சங்கத்தின் அடிப்படை நோக்கத்தையே சிதைப்பது போல் உள்ளது. படிப்போரிடம் வரவேற்பு குறைந்துபோக வாய்ப்பு உண்டு. அஃதியல்பானது. அதைக் காட்டிலும் விற்பனையைக் கவனத்தில் கொண்டால் அது நின்று போனதற்குரிய காரணம் புரியும்.

அதேசமயம் 1924 இல் 'பஞ்சாமிர்தம்' என்ற பத்திரிகைக்கு அ. மாதவய்யா ஆசிரியராகப் பொறுப்பேற்றதையும் இங்குக் கவனத்தில் கொள்ளவேண்டி யிருக்கிறது.

தமிழர் நேசன் என்ற இதழ் நின்று போனாலும், தமிழில் முதல் முயற்சியான அறிவியல் பத்திரிகை என்ற சிறப்பை மட்டும் அது இழக்கவில்லை; இழக்கவும் இயலாது.

தொகுப்புரை

1. 1917இல் தமிழர் கல்விச்சங்கம் என்ற அமைப்புத் தொடங்கப்பெற்று, அதன் வழி வெளிவந்தது தமிழர் நேசன் என்ற மாத இதழ்.
2. பலரின் கூட்டுமுயற்சியால் வெளிவந்த இவ்விதழுக்கு அ. மாதவய்யா ஆசிரியராய் இருந்துள்ளார்.
3. தமிழரின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடுவதை நோக்கமாகக் கொண்டது. இவ்வடிப்படையில் தமிழில்

வெளிவந்த அறிவியல் இதழ்களுக்கு முன்னோடியாக இவ் விதழ் விளங்கியது.

4. அறிவியல் கட்டுரைகள் அரிய உழைப்போடும், மிகுந்த கவனத்தோடும் எழுதப்பெற்றுள்ளன. அறிவியல் பாடநூல் என்று கருதுமாறு பல்வேறுபட்ட அறிவியல் கட்டுரைகளை அளித்து வந்துள்ளது.

5. அறிவியல், கலை, வரலாறு ஆகியவை தொடர்பான செய்தி களை அறிமுகப்படுத்தலும், அவற்றைத் தமிழ், தமிழர் வளர்ச்சிக்கு உளப்படுத்தலுமாகிய இரண்டு அடிப்படைப் பகுப்புகளைக் கொண்டுள்ளது இவ்விதழ்.

6. மொழிபெயர்ப்புப் படைப்புகள், கலைச் சொல் உருவாக்கங் கள் ஆகியவற்றை வெளியிட்டு மொழி பெயர்ப்புப் பணியில் செவ்வனே தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

தமிழ் நாடு

1919

தமிழ் நாடு

சா. வளவன்

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ பத்தாயிரம் கிராமங்களில் ஏழாயிரம் கிராமங்களைச் சார்ந்த மக்கள் பத்திரிகை என்றால் என்னவென்றே தெரியாத நிலையிலிருந்த காலத்தையும் சூழலையும் நினைத்துக் கொள்ளவேண்டும். எஞ்சியிருக்கும் மூவாயிரம் கிராமங்களிலும் படித்தவர்களாகக் கருதப்படுவோர் எண்ணிக்கை நாலாயிரம் இருக்கும். அவர்களுள் ஒவ்வொரு கிராமத்திலும் யாராவது ஒரு பணக்காரர் வீட்டில் ஏதாவது ஒரு நாளிதழ் வரும். அதை ஒன்பது பேர் படிக்கக் கூடும். இந்த நிலையில் பார்த்தால் ஒவ்வோர் ஊரிலும் பொதுச் செய்திகளைத் தெரிந்து கொள்பவர் பத்துப் பேர் இருந்தால் அதிகம். இப்படிப்பட்ட கால கட்டத்தில் நாளிதழ் நடத்துவதில் எவ்வளவு பேர் ஆர்வம் காட்டுவர்கள் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்நியர் ஆட்சி, அதன் கெடு பிடிகள், மொழியறியாத அவர்களிடத்தில் அவர்களைப் பற்றிக் குறை சொல்லியிருப்பதாக யாரேனும் கூறிவிட்டால் எல்லாப் படிகளையும் பறிமுதல் செய்தல் முதலியவற்றால் பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் இழப்பும் தண்டனையும் அக்காலத்தில் தாங்கிக் கொள்ள முடியாத அளவிலிருந்தன.

தலைநகரங்களில் அல்லது பெருநகரங்களில் பத்திரிகையை நடத்தினால் செய்திகளை எளிதில் பெறலாம். படித்தவர் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கும். வாங்குவோர் பொருளாதாரமும் சற்று உயர்ந்ததாக இருக்கும். அதேவேளையில் பத்திரிகைகளிடையே

'பண்டிதர்கள் கூடினால் விளங்காத தமிழ்; இங்கிலீஷ் படித்த தமிழர்கள் கூடினால் விளங்காத இங்கிலீஷ். இந்தக் கட்டுப் பாடான குறும்புத்தனத்தைத் தவிடு பொடியாக்கிய ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும். பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு என்பதை நிலைநாட்டிய புண்ணியத்தை எவரும் நாயுடு அவர்களுடன் பங்குபோட்டுக் கொள்ள முடியாது.'

— வ. ரா.

Regd. No. M. 4423 [illegible] "TAMIL NADU"

தமிழ்நாடு

(வாரப்பதிப்பு—ஸ்தாபிதம் 1919)

ஆசிரியர்: டாக்டர் P. வரதராஜுலு நாயுடு.

மலர் 22 | சேலம்:— விஷு ஆண்டு கார்த்திகை-மீ 1-உ ஞாயிற்றுக்கிழமை (16—11—1941) | இதழ் 5

மசூதிமுன் மேளம்

ஒரு சமரச யோசனை

(மாஜி ஜில்லா நீதிபதி ஸ்ரீ. ஆர். எஸ். சங்கரய்யர் எழுதியது.)

மசூதிகளில் 24-மணி நேரத்தில் ஐந்துமுறை தொழுகை நடக்கும். ஆனால் இப்போதைய நிலைமையில் ஒரு பொது தொழுகைக்குக் குந்தகம் இல்லாமையைச் சட்டம் அனுமதியளிக்கிறது. சில மசூதிகளின் அருகில் கோயிலும் பள்ளிக்கூடமும் சேர்ந்திருக்கும். ஆனால் அவை சாதாரணமாகக் கோயில்களையும் பள்ளிக்கூடங்களையும் போன்றவைகளே! அவைகளுக்கு தனி புனிதத்தன்மை கிடையாது. தொழுகைக்கு வேண்டுமென்று குழப்பம் பண்ணுவதையே இஸ்லாமியச் சட்டம் கண்டிக்கிறது. அந்தக் குழப்பம் தொழுகை நடத்துவோராலோ வெளியிலுள்ளவர்களாலோ உண்டாகலாம். தொழுகை நடத்துவோர் உண்டு பண்ணும் கலவரங்களைப் பற்றிக் கோர்ட்டுத் தீர்ப்புகளும் பிறந்திருக்கின்றன. ஐ. எல். ஆர். அலகாபாத் வெளியீடு லா ரிப்போர்ட்டுகளில் [illegible] தீர்ப்புகள் இருக்கின்றன. ஒரு தீர்ப்பில் நீதிபதி முகமது கூறியிருப்பதாவது:- தொழுகைக்கு பாதகமுண்டு பண்ணக்கூடியது எது என்று சட்டம் வரையறுத்துக் கூறவில்லை. ஒவ்வொரு வழக்குக்கும் சாட்சியங்களைப் பார்த்தே தீர்ப்புக்கூறவேண்டும். மசூதிக்குள் நடக்கும் கலவரமாயிருந்தாலும் அது வேண்டுமென்றே உண்டு பண்ணப்பட்ட கலவரமா அல்லவா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். மற்றும் அக்கலவரம் தொழுகை நடக்கும்போது உண்டாயிற்று என்றும் கவனிக்கவேண்டும். அன்றியும் இந்தியன் பினல்கோட்டின்படி ஒரு மதச் சடங்குக்குத் தடையுண்டுபண்ணக்கூடிய குற்றமா என்பதையும் கவனிக்கவேண்டும்.

பிரிட்டிஷ் நீதிபதி தீர்ப்பு

இங்கிலாந்தில் வில்லியம்ஸ்—[illegible] வழக்கில் ஒரு [illegible] தீர்ப்பு பிறந்திருக்கிறது. மதகுரு [illegible] குரு பீடத்திலிருந்து அப்பொழுது [illegible] செய்து கொண்டிருந்த போது எதிரி ஒரு நோட்டீஸை பிரசங்க பீடத்தில் நின்று வாசித்தான். அவ்வாறு செய்யக்கூடாதென்று குரு தடுத்தார். அவன் கேட்கவில்லை. வழக்கு தொடரப்பட்டபோது எதிரி நோட்டீஸை வாசிக்கும்போது மதச் சடங்கும் நடக்கவில்லை [illegible] ஒப்பு நேரத்தில் [illegible] வாசிக்க உரிமையுண்டென்று எதிரி வாதித்தான் என்றும், அது குற்றமென்றும் நீதிபதி தீர்ப்புக் கூறினர். இதனால் இ.பி.கோ. 296வது செக்ஷனுக்கு எவ்வளவு எல்லையுண்டென்று தெளிவாகிறது.

பொதுவாக ஜன நெருக்கமில்லாத இடத்தில், மைதானத்திலோ குளத்தின் பக்கமோ மசூதி கட்டுவதுதான் இஸ்லாமிய வழக்கம். தெரு சந்தடியினால் தொழுகைக்குத் தடை ஏற்படக்கூடாதென்றே அவ்வாறு கட்டப்படுகிறது. ஆனால் தொழுகை நேரத்தில் மசூதிப் பக்கம் சாதாரண வண்டிப் போக்குவரத்து கூடாதென்று ஏற்பட்டுவிடாது. மோட்டார் லாரியும், [illegible] அதிக சப்தம் உண்டுபண்ணுகின்றன. வாத்தியங்கள் அவைகளைவிட அதிக சப்தம் உண்டுபண்ணுவதில்லை. இ. பி. கோ. 79-வது செக்ஷன், தெருவில் பண்டம் விற்போர், [illegible], பாதசாரிகள் உண்டுபண்ணும் சத்தத்தையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. தம்பட்டம் போன்ற பெரிய கருவிகள் உண்டுபண்ணும் சத்தமே ஆட்சேபகரமானது.

சமரச யோசனை

இப்பொழுது ஒரு மோட்டார் லாரியைவிட ஒரு ரேடியோ அதிக சத்தம் உண்டுபண்ணுகிறது. ஆகவே மசூதி பக்கமுள்ளவர்கள் ரேடியோ உபயோகப்படுத்தக்கூடாதென்று சொல்வது வேடிக்கையாகவே இருக்கும். மசூதிப் பக்கத்தில் எப்பொழுதும் மௌனத்தை நிறுத்துவதற்கு ஆதாரமே இல்லை. தொழுகை நேரத்தில் மேளங்களுடன் ஊர்வலங்கள் செல்லக்கூடாதென்று கூறுவது நியாயமாக இருக்கலாம். இரு கட்சியாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு சமரச யோசனை எனக்குத் தோன்றுகிறது. கலியாண ஊர்வலங்கள், சமூக ஊர்வலங்கள், அரசியல் சம்பந்தமான ஊர்வலங்கள் ஆகியவை யெல்லாம் கட்டுப்படுத்தக் கூடியவைகளே. ஒரு மசூதியைக் கடந்துசெல்லும்போது சுமார் 50-அடி தூரம்வரை மௌனத்தை நிறுத்துவதற்கு பலமான ஆட்சேபனை இருக்கமுடியாது. ஆனால் மத ஊர்வலங்கள் சாஸ்திர விதிகளுக்கும் ரூடிகளுக்கும் கட்டுப்பட்டவை. இஸ்லாமிய சம்பிரதாயங்கள் [illegible] போலவே அவைகளும் மதிக்கத் தக்கவைகளே.

திருவிழா ஊர்வலங்களில் நாகஸ்வரக் கச்சேரி பொதுவாக நடைபெறுகிறது, சில சமயங்களில் பாண்டு வாத்தியங்களும் வாசிக்கப்படுகின்றன. [illegible] தம் பஜனைக் கோஷ்டிகளும் [illegible] தம் பிராமண கோஷ்டிகளும் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

சூயஸ் கால்வாய்

போரின் ரகசியம்

(ஸ்ரீ. தர்ம [illegible] தேவ் எழுதியது)

சூயஸ் கால்வாய் கம்பெனி பிரெஞ்சு பங்குகளை பிரான்ஸில் உள்ள [illegible] விற்று வாங்குவதாக செய்தி வெளியானது முதல் பத்திரிகை உலகத்திலே சூயஸ் விஷயம் முதலிடம் பெற்றிருக்கிறது. ராணுவச் சார்பாகப் பார்த்தால் சூயஸ் மிகவும் முக்கியமானது. மத்தியதரைக் கடலின் மேற்குப்பகுதியைக் காப்பதற்கு ஜிப்ரால்டர் எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு கிழக்குப் பகுதியைக் காப்பதற்கு சூயஸ் கால்வாய் முக்கியம்.

எகிப்து கெடிவுக்குச் சொந்தமாயிருந்த சூயஸ்கால்வாய் கம்பெனிப் பங்குகளை [illegible] 1875-ல் [illegible] பிரிட்டிஷ் சர்க்காருக்கு [illegible] பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் [illegible] வேறுவிதமாகவே இருந்திருக்கும். சூயஸ்கால்வாய் [illegible] பிரிட்டனுக்கு [illegible] பிரதேசங்களில் செல்வாக்கும் சக்தியும் கிடைத்தது. [illegible] பிரிட்டன் இந்தியாவுக்கு அருகாமையிலிருந்தால் [illegible] பெருமையும் சக்தியும் பிரிட்டனுக்கு உண்டாகியிருக்காது. இந்த [illegible] போலவே எதிர்காலத்தும் பிரிட்டனின் பாதுகாப்பு சூயஸ் கால்வாயையே பொருத்திருக்கிறது.

[illegible] அடைந்து வருகிறது. [illegible] ஜெர்மன் துருப்புகள் [illegible] லிபியா, சிரியா, பாரசீகம் முதலிய பிரதேசங்களுக்கும் [illegible] தற்காலப் போரில் [illegible] ஜெர்மன் [illegible] என்று தோன்றுகிறது.

நாசிகள் வெற்றி பெற்றால்

ரஷ்யாவில் நாசிகள் வெற்றிபெற்றால் அவர்களின் அடுத்த [illegible] யாதாயிருக்கக்கூடும்? தென்ருஷ்யாவின் [illegible], அரேபியா, [illegible] பிரதேசங்கள் [illegible] நாசிகளின் கைவசமாக இருக்கக்கூடுமென்று தோன்றுகிறது.

சாம்ராஜ்யத் துருப்புகள் இந்தப் பிரதேசங்களில் [illegible] [illegible] இந்தப் பிரதேசங்களிலே [illegible] கொண்டிருக்கின்றன. ஆனால் இப்பொழுது நெருக்கடி [illegible] இருந்தது. [illegible] இலேசாக [illegible] அவ்வளவுதான். அடுத்த [illegible] களில் இந்தப் பிரதேசங்களில் [illegible] போர் நடைபெறக்கூடும். [illegible] போரில் சூயஸைக் காப்பாற்ற [illegible] பயங்கரப் போராக இருக்கும் [illegible] மத்தியதரைக் கடலையும் [illegible] யும் இணைக்கும் 104 மைல் [illegible] பிரதேசம் தயவு தாட்சண்யமின்றி தாக்கப்படக்கூடும்.

[illegible]

எகிப்தியர் தீர்க்க தரிசனம்.

[illegible]

1854-ல் [illegible] 1866-ல் [illegible] 1869-ல் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாடு

சா. வளவன்

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ பத்தாயிரம் கிராமங்களில் ஏழாயிரம் கிராமங்களைச் சார்ந்த மக்கள் பத்திரிகை என்றால் என்னவென்றே தெரியாத நிலையிலிருந்த காலத்தையும் சூழலையும் நினைத்துக் கொள்ளவேண்டும். எஞ்சியிருக்கும் மூவாயிரம் கிராமங்களிலும் படித்தவர்களாகக் கருதப்படுவோர் எண்ணிக்கை நாலாயிரம் இருக்கும். அவர்களுள் ஒவ்வொரு கிராமத்திலும் யாராவது ஒரு பணக்காரர் வீட்டில் ஏதாவது ஒரு நாளிதழ் வரும். அதை ஒன்பது பேர் படிக்கக் கூடும். இந்த நிலையில் பார்த்தால் ஒவ்வோர் ஊரிலும் பொதுச் செய்திகளைத் தெரிந்து கொள்பவர் பத்துப் பேர் இருந்தால் அதிகம். இப்படிப்பட்ட கால கட்டத்தில் நாளிதழ் நடத்துவதில் எவ்வளவு பேர் ஆர்வம் காட்டுவார்கள் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்நியர் ஆட்சி, அதன் கெடு பிடிகள், மொழியறியாத அவர்களிடத்தில் அவர்களைப் பற்றிக் குறை சொல்லியிருப்பதாக யாரேனும் கூறிவிட்டால் எல்லாப் படிகளையும் பறிமுதல் செய்தல் முதலியவற்றால் பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் இழப்பும் தண்டனையும் அக்காலத்தில் தாங்கிக் கொள்ள முடியாத அளவிலிருந்தன.

தலைநகரங்களில் அல்லது பெருநகரங்களில் பத்திரிகையை நடத்தினால் செய்திகளை எளிதில் பெறலாம். படித்தவர் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கும். வாங்குவோர் பொருளாதாரமும் சற்று உயர்ந்ததாக இருக்கும். அதேவேளையில் பத்திரிகைகளிடையே

போட்டியும் இருக்கும். இவற்றுக்கும் ஈடு கொடுத்தாக வேண்டும். தொலைதூர நகரங்களில் பத்திரிகையைத் தொடங்கினால் விற்பனை குறைவாக இருக்கும். செய்திதிரட்டுவதும் எளிதாக இராது. வெளி யூர்களுக்குப் பத்திரிகை போய்ச் சேர சில நாளாகும். இவ்வளவு தொல்லைகளுக்குமிடையே பத்திரிகை நடத்துவது என்பது பெருஞ் சாதனைதான்.

கொண்ட கொள்கையில் பிடிப்பும் உறுதி தளரா உள்ளமும் இழப்பினுக்கும் அச்சுறுத்தலுக்கும் சோர்ந்து விடாத முயற்சியும் இருக்குமானால் பத்திரிகை நடத்த முன்வரலாம். ஒரு சாராரே படித் தவர்களாக இருந்த காலகட்டத்தில் அவரினத்தாரே பத்திரிகை நடத்தினால் வாங்குவர். பிறர் நடத்தும் பத்திரிகை அந்தச் சூழலை யும் கடந்தாக வேண்டும்.

நாட்டுப்பற்றை ஊட்டியாக வேண்டும் விடுதலை வேட்கையை வளர்த்தாக வேண்டும் என்ற சூழலில் தமிழகத்தில் காங்கிரசு இயக் கம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது. காங்கிர சின் தூண்களாக மூவரைக் குறிப்பிடுவர். நாயக்கர், நாயுடு, முதலி யார் என அம்மூவரையும் குறிப்பிட்டே பழக்கம். முறையே பெரியார், டாக்டர் பி.வரதராசலு, திரு.வி.க. ஆகியோரைக் குறிக்கும். காங்கிரசு இயக்கத்தை வளர்க்க அயராமல் பாடுபட்ட இம் மூவரையும் ஒரு சேர எண்ணிப் பார்ப்பர். மூவரும் காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றனர். தங்கள் நலனை மறந்து நாட்டு நலனே பெரிதெனக் கொண்டனர்.

டாக்டர் வரதராசலு சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் 4.6. 1887இல் பிறந்தார். இராசிபுரத்தின் பெருமாள் கோவில் அறங் காவலராக அவருடைய தந்தை இருந்தார். தொடக்கக் கல்வியை இராசிபுரத்திலும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைக் கோவையிலும் கற்றார். பர்மா மருத்துவப் பள்ளியிலும் கல்கத்தா தேசிய மருத் துவப் பள்ளியிலும் பயின்று மருத்துவரானார். திருப்பூரில் மருத் துவத் தொழிலைத் தொடங்கினார்.

எளிய குடும்பத்தில் தோன்றினாலும் படிப்பதோடு புறச்சூழல் களை அறிந்து கொள்வதில் ஆர்வங் காட்டியவர் வரதராசலு. மாண வப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டார். தம் வாழ்க்கையின் முற்பகுதியைச் சேலத்திலும் பிற்பகுதியைச் சென்னையிலும் கழித் தார். எழுத்திலும் பேச்சிலும் மிகச் சிறந்து விளங்கினார். உணர்ச்சி மிக்க பேச்சால் இளைஞரிடையே எழுச்சியை ஊட்டினார். ஆள்காட்டி விரலை நீட்டி நீட்டிப் பேசுவது அவரது பழக்கமாயிருந்தது.

காற்றையும் தண்ணீரையும் போல அன்றைக்குத் தமிழ் நாட்டிற்குத் தேவையாயிருந்தவை நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும். தமிழ்நாட்டிற்கு இவ்விரண்டு பெரிய நன்மைகளைச் செய்தார் வரத ராசலு என டி.எஸ். சொக்கலிங்கம் பாராட்டியிருக்கிறார். பத்திரிகைப் பணியைச் செவ்வனே செய்தவர் வரதராசலு. தம் பத்திரிகைப் பாசறை யில் பண்பட்ட எழுத்தாளர் பலரைப் பக்குவப்படுத்தினார். தமிழ் மொழியை எளிமைப்படுத்தினார்.

அன்றைய சூழலில் ஆங்கில வழியே படித்தவர்கள் இருந் தனர். ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்தே பேசும் படித்த கூட்ட மாக அது இருந்தது. அக்கூட்டத்திற்கு இசைவாகச் சுதேசமித்திரன் பத்திரிகை இருந்தது. அப்பத்திரிகையில் தொடக்கத்தில் மிகப்பல ஆங்கிலச் சொற்கள் கலந்து எழுதும் நிலை இருந்தது. பின்னர் வரை யறை இல்லாமல் வடமொழிச் சொற் களையும் கலந்து எழுதினர். சுதேசமித்திரனின் தலையங்கத்தில் காணும் தமிழ்நடையைக் கல்கி அவர்கள் எள்ளல் சுவையுடன் எழுதிக் காட்டினார்.

> பெங்கால் புரொவின்ஷில் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகாசரன் மஜூம்தாரின் பிரஸிடென்ஸியல் அட்ரெஸில் இந்தியப் பிரஜை களின் தேசிய அபிலாஷைகளை அடக்க இந்திய புயராக்ரஸி கையாண்டு வரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றி கரதலாமலகமாய் கூறி இருப்பது ஹிஸ் எக்ஸெலன்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமென்று நம்புகிறோம்

இங்ஙனம் பத்திரிகை நடை இருந்தாலும் சுதேசமித்திரனை அதிக அளவில் மக்கள் படித்தனர். காங்கிரசு இயக்கத்தைச் சார்ந்து இருந்ததும் அரசியல் கலைச் சொற்களை உருவாக்கியதும் செய்தி களையும் தலையங்கங்களையும் விரும்பிப் படிக்குமாறு தலைப் பிட்டு அமைத்ததும் விற்பனைப் பெருக்கத்திற்குக் காரணங்களாகும்.

1882இல் சுதேசமித்திரன் வாரப் பதிப்பாகவும் 1893இல் வாரமிரு முறையாகவும் 1897இல் வாரம் மும்முறையாகவும் வெளிவந்தது. 1899இல் நாளேடாக மலர்ந்தது.[2] பதினேழ் ஆண்டு களுக்குப் பின்னர் டாக்டர் வரதராசலு பிரபஞ்ச மித்திரன் எனும் பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். ஏற்கெனவே இயக்கம் காரண மாகவும் நாளேடாக வெளிவந்ததாலும் சுதேசமித்திரன் மக்கள் மனங்களில் இடம் பெற்றது. இந்த நிலையில் 1916ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரபஞ்சமித்திரனை நடத்தத் தொடங்கினார் வரதராசலு.

அவரே,

> சென்னையில் கஷ்ட திசையிலிருந்த 'பிரபஞ்சமித்திரன்' என்ற பத்திரிகையை 1916ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் வாங்கி அதைத் தேசிய முறையில் நடத்தி வந்தேன்

என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பிரபஞ்சமித்திரனுக்கு எதிர்ப்பு மூன்று நிலைகளில் இருந்தது.

> தேசபக்தியற்ற பிராமணரல்லாதவர்கள், வர்ணாச்ரம தர்மத்தை உயிர்ப்பிக்க முயற்சி செய்யும் பிராமணர்கள், பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் என்று மூன்று பக்கங்களில் இருந்தும் பிரபஞ்சமித்திரன்[8] தாக்கப்பட்டது. அச்சூழலில் வாங்கி விற்பனையைப் பெருக்கி யவர் வரதராசலு.

ஹோம்ரூல் இயக்கத்தையும் காந்தியுக காங்கிரசையும் பிரபஞ்ச மித்திரன் ஆதரித்தது. ஹோம் ரூல் இயக்கத்தில் எல்லா இன மக் களும் அதிகளவில் சேர்ந்தால் பிராமணர் ஆதிக்கம் இராது எனும் கருத்தையும் 19.11.1917 இதழ் வெளியிட்டுள்ளது. வரதராசலுவின் எழுத்து மக்களிடையே உணர்ச்சியைத் தட்டி எழுப்பியதோடு சிந்திக் கவும் வைத்தது. வலிமையான பிரச்சாரக் கருவியாகவும் அமைந் தது. அரசியல் நடப்புகளைச் சூடாகவும் சுவையாகவும் விமர்சனம் செய்தது. 1918இல் மதுரை மாநகரில் ஹார்வி மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது தமிழகத்தின் பல பகுதி களில் இருந்தும் பேச்சாளர் திரண்டனர். ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பு அனல் தெறிக்க வெளிப்பட்டது. மதுரை நகரே போர்க் கள மாயிற்று. காவலர்கள் சுட்டதால் சிலர் மாண்டனர். நாளும் கொந் தளிப்பு பெருகிக் கொண்டிருந்தது. இவற்றுக்கெல்லாம் வரதராசலு வின் பேச்சே காரணம் என அரசு கருதியது. அவரைப் பிடித்து (29.8.1918) வழக்கும் தொடுத்தது. திரு.வி.க. தாம் நடத்திய தேசபக்தனில் அவருக்காகத் தலையங்கமே எழுதினார். இராஜாஜி வாதாடினார்.

ஆனாலும் இராஜாஜிக்குப் புகழ் சேர்த்த இந்த வழக்கு வரத ராசலுவிற்குப் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்றுத் தந்தது. பின்னர் உயர்நீதிமன்றத்தில் அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர் வாதாடி வரதராசலுவிற்கு விடுதலை வாங்கித் தந்தார்.

பேச்சாலும் எழுத்தாலும் மக்கள் பெருமளவில் வரதராசலுவை ஆதரித்தனர். ஆங்கிலேயர், பேச்சைத் தடுக்க முற்பட்டது போலவே

எழுத்தையும் முடக்க முனைந்தனர். பிரபஞ்சமித்திரன் இதழுக்கு 1000 ரூபாய் ஈடுகாணம் (ஜாமீன்) கட்ட வேண்டும் என ஆணை யிட்டனர். அதனால் பிரபஞ்சமித்திரன் நிறுத்தப்பட்டது.

18.6.1923இல் கல்லிடைக் குறிச்சியில் வரதராசலு அவர்கள் பேசும்போது நரகம் இன்னதென்று அறிய வேண்டுமானால் ஆங்கில ஆட்சியின் கீழ் சிறையை அனுபவித்தால்தான் முடியும் என விளக்கினார். சிறைக் கொடுமை என்னவென்று தெரிந்தும் தொடர்ந்து உறுதியோடு பேசினார்; எழுதினார். அவருடைய பேச்சிலும் எழுத்திலும் பொருத்தமான உவமைகள் வெளிப்படும்.

> சிவில் சர்வீஸ் அமைப்பு எஃகு அமைப்பு என்று கூறுகிறார் லாயட் ஜார்ஜ். இந்த இரும்புத் தூண் மணலில் எழுப்பப்பட்டுள்ளது என்பதையும் தண்ணீர் பெருக்கெடுத்தால், தரையில் தகர்ந்து விழும் என்பதையும் பாபம் அவர் அறியவில்லை[4]

எனப் பொருத்தமான உவமையைக் கொண்டு விளக்கினார்.

> அரசியல், சமுதாய வாழ்வு, வர்த்தகம், சமயம் ஆகிய எத்துறைகளிலாயினும் சரி, ஒவ்வோர் இந்தியனும் முதலில் போர் வீரனாகவும் அதற்குப் பின்பே குடிமகனாகவும் விளங்க வேண்டும்

என்று கோவையில் நடந்த அனைத்திந்திய தொழில், வேளாண்மைக் கண்காட்சியில் 11.4.1933இல் வீரமுழக்கம் செய்தார்.[5]

> இந்த மனிதர் ஒரு விஷப் பூச்சி. இவர்மீது வழக்கு தொடுக்க வேண்டும் என்று அன்றைய ஆட்சியாளரில் ஒருவர் ஆத்திரப் பட்டுக் கோப்பில் குறித்தாராம்.

இங்ஙனம் பேச்சில் தொனித்த வீரமும் உறுதியும் எழுத்திலும் அவர்தம் பத்திரிகையிலும் வெளிப்பட்டது. அழகிய உவமையை எழுத்திலும் கூடப் பொருத்திக் காட்டி விளக்கினார்.

> ஒத்துழையாமை இயக்கத்துக்கு அணைபோட, மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரை, அன்னிய ஏகாதிபத்தியம் தந்திரமாகப் பயன்படுத்தி வந்ததைக் கண்டு வருந்தி, அவர் ஜின்டான் சாஸ்திரி என்ற தலைப்பில் எழுதிய குறிப்பில், குத்தல் மட்டுமல்ல, கொள்கைப் பிடிப்பும் காணப்பட்டது. வயிற்றில் ஏற்பட்ட கோளாறு வாயில் நாற்றத்தை உண்டாக்குவதை மாற்ற, ஜின்டான் மாத்திரையை உட்கொள்வது போல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன் வயிற்றுக் கோளாற்றை மறைத்து, வெளிப் பகட்டைக் காத்துக் கொள்வதற்கு, சாஸ்திரியைப் பயன்படுத்துகிறது.[7]

வேகமான விறுவிறுப்பான தமிழ் நடையை வரதராசலு 'தமிழ் நாடு' இதழில் அமைத்தார். திருப்பூரில் மருத்துவராகப் பணியாற்றிய போதே பிரபஞ்சமித்திரனை மங்கலம் சண்முக முதலியாரிடம் இருந்து வாங்கி விறுவிறுப்பான தமிழ்நடையை அப்பத்திரிகையில் வரச்செய்தார். மங்கலம் சண்முகம் அவர்களிடம் 'காரியஸ்தர்' என்ற முறையில் சுப்பிரமணிய சிவா சேர்ந்திருந்தாலும் ஆசிரியராகவே பணியாற்றினார். வெள்ளி தோறும் வார இதழாகப் பிரபஞ்சமித்திரன் வந்தது. செய்திகளை விமர்சனப் பாங்குடன் 'நாரதர்' என்ற புனை பெயரில் சுப்பிரமணியசிவா எழுதி வந்தார். ஆனால் அப்பத்திரிகை சென்னையில் மிகுந்த பொருளிழப்போடு தடுமாறியது. திருப்பூரில் இருந்த வரதராசலு பிரபஞ்சமித்திரனை வாங்கி ஓராண்டு நடத்தினார்.

மதுரை வழக்கின் காரணமாகச் சிறையில் தள்ளப்பட்டார் வரதராசலு. முதல் சிறைவாசத்துக்குப்பின் 1919ஆம் ஆண்டின் இறுதியில் 'தமிழ்நாடு' பத்திரிகையை வார இதழாகத் தொடங்கினார் வரதராசலு. சேலத்திலிருந்து வரதராசலு அப்பத்திரிகையை நடத்தி வந்தார். 1925இலிருந்து சென்னையில் இருந்து தமிழ் நாடு இதழை வார இதழாகவே வெளிவரச் செய்தார். 14.4.1926 முதல் தமிழ்நாடு நாளிதழாக வெளிவரலாயிற்று. ஆனால் டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் 1927 தமிழ்ப்புத்தாண்டிலிருந்து வெளி வந்தது என்கிறார்.[8] செல்வாக்குப் பெற்ற பத்திரிகையான சுதேச மித்திரனுக்குப் போட்டியாக அமைந்த தமிழ் நாடு ஓரணாவிற்கு விற்கப்பட்டது. சுதேசமித்திரனின் விலை ஒன்றரை அணாவாகும்.

1921இல் இரு கட்டுரைகள் வரதராசலுவால் வெளியிடப் பட்டன. அவை அரசு எதிர்ப்புக் குற்றமுடையன என அந்நியர் வழக்கினைத் தொடுத்து வரதராசலுவிற்கு ஒன்பது மாதக் கடுங் காவல் தண்டனையை விதித்தனர். 'சுதந்திரப் போராட்டம்' 'இந்தியா விடுதலை பெற ஆயுதம் ஏந்த வேண்டும்' எனும் இரு கட்டுரை களும் அவருக்கு மீண்டும் சிறை வாசத்தைத் தந்தன.[9]

1925இல் 'குடி அரசு' பத்திரிகையை ஈ.வெ.ரா. தொடங் கினார். திரு.வி.க. 'தேசபக்தன்' இதழை 1917லேயே தொடங்கி யிருந்தார்.

(லாலாலஜபதிராய், விபின் சந்திரபால், பால கங்காதர திலகர்) ஆகிய மூவரையும் வடநாட்டில் லால்-பால்-பால் (Lal-pal-Bal) எனச் சேர்த்து சொல்வது போல ஈ.வெ.ரா, வரதராசுலு, திரு.வி.க. ஆகிய மூவரையும் கூறுவர்.

பெரியாரைக் காங்கிரசில் சேர்க்கப் பெரிதும் முயன்றவர்களுள் வரதராசுலுவும் ஒருவர். காங்கிரசு இயக்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்குப் பல கிராமங்களுக்கும் சென்று பேசியவர் வரத ராசுலு. காங்கிரசுக் கோரிக்கைக்கு ஆதரவு தராமல் இருந்த கட்சிகளைக் கண்டித்து மக்களிடையே சொற்பொழிவாற்றி நாட்டுப் பற்றை வளர்த்தவர் வரதராசுலு[10]

காங்கிரசுக்காரர்களின் கூட்டங்கள் படித்த வகுப்பினர் மட்டுமே கூடியிருக்கிற சிறிய மண்டபங்களில் நடந்து வந்ததை மாற்றித் திறந்த வெளிகளில் எல்லார் முன்னிலையிலும் நடத்திக் காட்டியவர் வரதராசுலு. எல்லா ஊர்களிலும் வரதராசுலுவின் புகழ் பரவியதால் அவர் நடத்திய பத்திரிகையும் புகழ் பெறத் தொடங்கியது. 1500 படிகள் விற்கும் இதழே அதாவது சுதேசமித்திரனே மிகப்பெரும் பத்திரிகை என்று போற்றப் பெற்ற காலத்தில் தமிழ்நாடு இதழும் 1500 படிகள் விற்பனையாயிற்று. அது படிப்படியே உயர்ந்து 1930 இல் 10,000 ஆயிற்று.[11]

1932இல் வரதராசுலு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கில இதழையும் நடத்தி வந்திருக்கிறார். தமிழ்நாடு இதழ் நீதிக் கட்சியை வன்மையாகக் கண்டித்தது. 1912 செப்டம்பர் 20இல் சென்னையில் காங்கிரசு இயக்கத்தின் பிராமணரல்லாதவர்கள் 'சென்னை மாகாண சங்கம்' என்னும் ஓர் அமைப்பினை நிறுவினர். ஏற்கனவே தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என நீதிக்கட்சி இயங்கிக் கொண்டிருந்தது. அது பிராமணரல்லாதார் அரசியல் சமூக உரிமைகளைப் பெறத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துவந்தது. காங்கிரசிற்கு வலுவான போட்டியாக நீதிக்கட்சி இருந்தது. அதனால் பிராமணரல்லாத காங்கிரசுக்காரர்கள் பிராமணரல்லாதார் நலன்களைப் பாதுகாக்கக் காங்கிரசின் நோக்கத்திற்கு முரண்படாதவாறு சென்னை மாகாண சங்கத்தை நிறுவினர் எனத் திரு.வி.க. அவர்கள் குறித்துள்ளார்.[12]

தமிழகத்தின் அரசியல் வாழ்விலும் இதழியியல் வளர்ச்சியிலும் 1917 முதல் 1930 வரை வரதராசுலு அவர்கள் மிகச் சிறந்த சேவை செய்தவராவார். அவரது தொண்டால் தமிழகத்தைப் பெருமைப்படுத்தினார். இந்த அடிப்படைப் பணியைத் தமிழகம் என்றென்றும் மறவாது, மறவாது! என 1923ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் 1931ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை தமிழ்நாடு இதழில் பணியாற்றிய 'பேனா மன்னர்' டி.எஸ். சொக்கலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.[13]

வரதராசுலு அவர்கள் தம் தமிழ்நாடு இதழ் மூலம் பல போராட்டங்களை நடத்தினார். இந்து மதப் பரிபாலன போர்ட் என்னும் அறநிலையத் துறை கோவில் நிர்வாகங்களைச் சரியாய் நடத்த தேவையானதாகும். ஆனால் அறநிலையத் துறைக்குச் சட்டம் ஏற்படுத்தியபோது சில நாளிதழ்கள் அதனை எதிர்த்தன. வரதராசுலு அவர்கள் தீவிரமான ஆதரவை வெளிப்படுத்தினார். கோவிலில் தேவதாசிகள் பொட்டுக் கட்டும் பழக்கத்தை ஒழிக்கச் சட்டம் பிறப்பித்தபோது அதனையும் இதழ்களும் சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களும் வன்மையாய் எதிர்த்தனர். அச்சட்டத்தையும் தீவிரமாய் ஆதரித்தது தமிழ்நாடு இதழ்.

தமிழ்நாடு பத்திரிகை 1925ஆம் ஆண்டு பொங்கல் மலரில் பாரதியார் பாட்டுக்கள் சிலவற்றை வெளியிட்டதோடு அவற்றிற்கு ஓவியங்களும் தீட்டப்பட்டன. டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களின் இந்த முயற்சி பின்னர் பல பத்திரிகைகளிலும் வேகமாய்ப் பரவியது எனக் குறித்துள்ளார்.[14]

தமிழ்நாடு இதழ் சேலத்திலிருந்து வந்து கொண்டிருந்த போது வரதராசுலு அவர்கள் வாரந்தோறும் எழுதும் தலையங்கங்களைத் தந்தியில் வரவழைத்து இந்துப் பத்திரிகை வெளியிட்டு வந்தது. இது வரதராசுலு அவர்களின் எழுத்து வன்மையைப் புலப்படுத்தும். சுதேசமித்திரன் இதழும் தமிழ்நாடு இதழில் வெளிவந்த கட்டுரைகளை அச்சிடும். கருத்துக்களை வரதராசுலு விளக்குவதற்குக் கதைகளின் உதாரணங்களையும் எப்போதாவது எடுத்துக் காட்டுவார் என்கிறார் டி.எஸ். சொக்கலிங்கம்.[15]

வரதராசுலு அவர்களின் தமிழ்நடை மிகச் சிறப்பானதாகும். கட்டுரைகளிலும் மொழி பெயர்ப்புகளிலும் தமிழ் மரபே இருக்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தார். Water falls என்பதனை 'நீர் வீழ்ச்சி' என மொழி பெயர்ப்பதை அவர் விரும்பவில்லை. 'அருவி' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்றார். அதுபோன்றே எழுத்துக்களைத் தேவையில்லாமல் கூட்டி எழுதுவதை அவர் தவிர்த்தார். 'மகாத்மாவின் பிரசங்கம்' என்பதை 'மகாத்மா பிரசங்கம்' என்று போட்டாலே போதும் என்றார். 'போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம்' என்பதைப் 'போலீசார் சுட்டனர்' என்று போட்டாலே போதும். ஆங்கிலத்தில் உள்ளதைப் படித்து உள்ளத்தில் இருத்திக் கொண்டு தமிழில் பிறர்க்கு எப்படிச் சொல்லுவோமோ அதுபோல் எழுத வேண்டும் என்றார். இங்ஙனம் பத்திரிகைத் தமிழில் அவர் மிகப்பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

நேராக மனத்தில் எழுத வேண்டும் என்பதே அவருடைய கொள்கை. மனத்தில் பதியுமாறு பேசியதைப் போலவே மனத்தில் பதிய எழுதியவர் வரதராசுலு.[16]

தமிழ்நாடு இதழுக்கு வரதராசுலு அவர்கள் தேர்ந்தெடுத்த இலச்சினை அவருடைய கொள்கைப் பிடிப்பைக் காட்டும். மூவண்ணக் கொடியின் நடுவே கலப்பை ஏந்திய ஓர் உழவன் நின்று கொண்டிருப்பான். இரு பக்கங்களிலும் இரண்டு வாள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கும். கீழே 'சுயராஜ்ய வாழ்வே சுக வாழ்வு' எனும் தொடர் இருக்கும். இது தமிழ்நாடு இதழின் இலச்சினையாகும். அவருடைய நாட்டுப்பற்றும் அடித்தள மக்களை உயர்த்தும் நோக்கமும் விடுதலை வாழ்வே இனிய வாழ்வு என்ற கருத்தும் சிந்திக்கத்தக்கவை. பாரதி நடத்திய 'விஜயா', 'சூரியோதயம்' போன்ற பத்திரிகைகளில் கூட ஆங்கிலத் தொடரும் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் பெயரும் இருந்தன. ஆனால் வரதராசுலு அவர்கள் இதழின் முகப்பில் தமிழ்ச் சொற்களையே கையாண்டிருந்தார். ஆங்கிலத்திலும் பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்பதால் வலது பக்கத்தின் மேல் பகுதியில் மிகச் சிறிய எழுத்தில் ஆங்கிலத்தில் குறித்துள்ளார். வாரப் பதிப்பு, நிறுவிய ஆண்டு (வாரப் பதிப்பு - ஸ்தாபிதம்) 1919 எனக் குறித்துள்ளார். 1941ஆம் ஆண்டில் இதன் விலை அரையணாவாக இருந்திருக்கிறது.[17]

காங்கிரசு இயக்கத்தை வளர்த்ததைப் போலவே காங்கிரசுக்குள்ளிருந்து தவறு செய்தவர்களையும் கண்டித்து எழுதியிருக்கிறார் வரதராசுலு. 'சேரமா தேவி குருகுல போராட்டம்' மிகச் சிறப்பானதாகும். வ.வே.சு. ஐயர் நடத்தி வந்த சேரமா தேவி குருகுலத்தில் பிராமண மாணவர்களுக்குத் தனியாகவும் பிறருக்குத் தனியாகவும் உணவு பரிமாறிய வழக்கத்தைச் சாடினார். சமத்துவத்தை நிலை நாட்டச் சமபந்தி வேண்டுமென வலியுறுத்தினார். திரு. வி.க., பெரியார் ஆகியோரும் இவ்வியக்கத்தில் பெரிதும் ஈடுபட்டனர்.

குருகுலம் தொடங்கப்பட்டதன் நோக்கமும் அதற்குப் பொருள் தந்தோர் உணர்வும் எத்தகையன என்பதை முதலில் விளக்கி வெளிநாடு சென்று திரும்பிய வ.வே.சு.விடம் தமக்கு இருக்கும் நம்பிக்கையைக் காட்டி அவர் தம்மை மாற்றிக்கொள்ள ஒரு மாத காலம் கொடுத்தும் மிக நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்:

> தேசிய வேலை செய்யக் கூடியவர்களைத் தயாரிப்பதற்காகக் குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா வகுப்புகளையும்

கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அதற்கு உதவி செய்தார்கள். மொத்தம் வசூலான 50,000 ரூபாயில் 96% பிராமணரல்லாதாரால் கொடுக்கப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 5000 ரூபாய் கொடுத்தது. என்னுடைய கிளர்ச்சியின் பயனாகவே இவ் விவாதம் தீரும் வரையில் வாக்களித்த ரூ.22000 கொடுபடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சிறுவர்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்களென்று நம்பித் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் பிராமணரல்லாதாரும் பணம் கொடுத்தனர். எது எப்படியிருந்த போதிலும் பிராமண, பிராமணரல்லாத சிறுவர்கள், ஆகாரம், கல்வி இரண்டிலும் வித்தியாசமின்றி நடத்தப்படுவார்கள் என்ற நிச்சய ஏற்பாட்டின் பேரில்தான் நான் பணம் கொடுத்தேன். ஸ்ரீமான் வ.வெ.சு. ஐயர் இங்கிலாந்து சென்று திரும்பியவராயும் தேசீயவாதியாகவும் இருப்பதால் அவர் ஜாதி வித்தியாசம் பாராட்டமாட்டார் என்று நம்பினேன்; ஆனால் அவ்விதம் நடக்கவில்லை. எல்லாச் சிறுவர்களையும் சமத்துவமான முறையில் நடத்த வேண்டுமென்றே நான் கேட்கிறேன். எவ்வித வித்தியாசமும் இருக்கக்கூடாது; அல்லது பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். தேசீய ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்குச் சமத்துவமான நடத்தை ஏற்படாத வரையில், முடிவு என்ன ஆனபோதிலும் நான் எனது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மாதக் கெடு கொடுத்திருக்கிறோம். அதற்குள் அவர் குருகுலத்தைச் சீர்திருத்த வேண்டும். அல்லது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அவர் இப்பொழுது போலவே நடந்து கொண்டிருந்தால் நேரடியான வேலை ஆரம்பிக்குமுன் தேசத்தில் பலமான பிரசாரம் செய்யப் போகிறேன்[18]

எழுதியது போலவே தீவிரமாகப் போராடினார் வரதராசுலு. விடுதலை பற்றியும் மிக நல்ல விளக்கத்தை 'ஓர் எச்சரிக்கை' எனும் தலைப்பில் 20.12.1925 இதழின் தலையங்கத்தில் எழுதியுள்ளார்.

சுதந்திரம் மனிதவர்க்கத்தின் பிறப்புரிமையாகும். சுதந்தரமென்பது ராஜீய சுதந்தரத்தை மட்டும் குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். அது தவறான எண்ணமாகும். சமய சுதந்தரம், சமூக சுதந்தரம், சிறு கூட்டத்தார் தம்முடைய நயவஞ்சகத்தால் பெரும்பான்மை யோரை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்துவது போன்ற மோசங்களில் இருந்து குடிமக்கள் விடுதலை பெறும் சுதந்தரம் ஆகிய பல சுதந்தரங்களும் உண்டு. நாம் கோருவது பரிபூரண சுதந்தரமாகும். ராஜீய சமய சமூக விடுதலையே, நாம் வேண்டுகிறோம். வெள்ளைக்காரனுக்குக் குறிப்பிட்ட விசேஷ சுதந்தரமும் அந்தஸ்தும் இருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. சமய -

> சமூக உயர்வும் மற்றவர்களுக்கில்லாத 'பிறப்புரிமை' என்னப் பட்ட பாத்தியதைகளும் பிராமணருக்குக் கொடுக்கப்படுவதை யும் நாம் ஆட்சேபிக்கிறோம்[19]

ஆங்கிலேய அரசுக்கு வரிகள் செலுத்தக் கூடாது என்று வரத ராசுலு அறை கூவல் விடுத்தபோது அரசு அவருக்கு அபராதம் விதித்து. அவர் செலுத்த மறுத்தார். அதனால் அவருடைய காரைப் பறிமுதல் செய்தது. ஆனால் அக் காரை ஓட்டிச் செல்ல இந்தியர் எவரும் முன் வரவில்லை. ஆங்கிலேய உயர் அதிகாரியே அதனை ஓட்டிச் சென்றார். அந்த அளவுக்கு மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தவர் வரதராசுலு. அவருடைய உறுதியையும் வீரத்தையும் கண்டு 'தென்னாட்டுத் திலகர்' என வாயார வாழ்த்தினர் வ.உ.சி.[20]

பத்திரிகையின் கடமையாக நல்ல கருத்தொன்றை வரதராசுலு அவர்கள் தம் இதழில் வெளியிட்டார். அக் கொள்கையை அவர் இறுதி வரை பின்பற்றினார்.

> பத்திராதிபரின் பொறுப்பு வெகு கஷ்டமானது. பத்திராதிபர் களுக்கு அளவற்ற ஆண்மை வேண்டும். அதற்குத் தக்க அடக்கமும் வேண்டும். உண்மையைச் சொல்ல வேண்டும். உற்றார் உறவினர் தாட்சண்யங்களைப் பொருட்படுத்தலாகாது. ஜனங்களின் தவறுகளை ஆணித்தரமாக எடுத்துக் காட்டவேண் டும். அவர்களுடைய ஆத்திரத்தைக் கண்டு அஞ்சலாகாது. ஈசுவர சேவையைவிடத் தேச சேவை உயர்ந்தது என்பது நமது அபிப் பிராயம்.
>
> நெஞ்சில் பேதபுத்தியும் கையில் தேசியக் கொடியும் பிடித்த பத்திராதிபர்களின் சேவை, கக்கத்தில் கன்னக் கோலும் கையில் ஜபமாலையும் வைத்தவர் செய்யும் பக்தியைப் போன்றதாகும்.[21]

கொள்கை வீரரான வரதராசுலு காங்கிரசு இயக்கத்தில் தொடர்ந்து போராடி வந்தார். 1925இல் பெரியாரும் (1927இல்) திரு.வி.க.வும் காங்கிரசு இயக்கத்திலிருந்து விலகிய பின்னும் தொடர்ந்து போராடியவர் வரதராசுலு.

> அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு அஞ்சிப் பணிந்து சிலரும், சர்க் காரின் சலுகைகளில் மயங்கித் தாசர்களாகச் சிலரும், நமக்கேன் வம்பு என்று நாட்டு நடப்பில் நாட்டம் கொள்ளாமல் சிலரும், மனித உணர்வுஇல்லாது மரத்துப் போய் சிலரும் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் எழுத்தின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தையே உருவாக்கி, பாரத நாட்டின் விடுதலைப் படைக்கலனாகப் பத்திரிகையைப் பயன்படுத்தி, துன்பத்தைத்

துச்சமாகக் கருதித் தியாகத்தையே பரிசாக ஏற்றுத் தமிழுக்கும் தாய் நாட்டுக்கும் தளராத தொண்டாற்றியவர் டாக்டர் வரதராசுலு.[22]

தியாகமும் உறுதியோடு எதிர்த்த தன்மையும் அவருக்குப் பின்னாளில் வெற்றியைத் தரவில்லை. 1926இல் நாளிதழாகத் தம் வார இதழான தமிழ்நாடு இதழை வெளியிட்டு, வீச்சான அதே நேரத்தில் பேச்சு வழக்கிலான நடையைக் கொண்டு மிகப்பல வாசகர்களை ஈர்த்து சுதேசமித்திரனுக்கு மிக வலிவான போட்டியாக அமைத்தவர் வரதராசுலு. ஆனால் 1930இல் மகாத்மா காந்தியின் சட்டமறுப்பு இயக்கத்தைத் தமிழ்நாடு இதழ் ஆதரிக்காததால் சில காங்கிரசார் 'இந்தியா' எனும் நாளிதழை வெளியிட எண்ணினார்.[21]

1930இல் இருந்தே தமிழ்நாடு இதழின் விற்பனை குறையத் தொடங்கியிருக்கும். 1931இல் டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் விலகியதும் விற்பனையைப் பாதித்திருக்கும். 1936 செப்டம்பர் 26ஆம் நாள் வரதராசுலு எழுதிய தலையங்கத்தில்,

தீவிரமான சமய, சமூக, அரசியல் துறைகளில் கழிக்க வேண்டுமென்ற எண்ணம்[22]

காரணமாகத் தமிழ்நாடு இதழை நிறுத்தப் போவதாக அறிவித்தார்.

1936இல் வாரப் பதிப்பும் நாளிதழும் நின்றன. நான்கு ஆண்டுகள் கழித்து வார இதழை, சேலத்திலிருந்து அரையணா விலையில் மீண்டும் நடத்தினார். அதுவும் சில ஆண்டுகளே வெளிவந்தது. பின்னர் கருமுத்து தியாகராசர் அப்பத்திரிகையை வாங்கிச் சிலகாலம் நடத்தினார். 1930 -32களில் காந்தியடிகள் நடத்திய உப்புச்சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம் முதலியவற்றை வரதராசுலு எதிர்த்ததால் தமிழ்நாடு இதழ் தேசபக்தர்களின் ஆதரவை இழந்தது. 1934இல் இந்தியச் சட்டசபை தேர்தல் நடந்தது. காங்கிரசில் இருந்து விலகியிருந்ததால் தேர்தலில் சுயேச்சையாக நின்றார் வரதராசுலு. அவரைக் காங்கிரசில் நிறுத்துவதற்குத் திரு.வி.க. பெரிதும் முயன்றார்.[25] ஆனால் வரதராசுலு இணங்கவில்லை. தேர்தலில் தோற்றுப் போனார்.

சரிவும் தோல்வியும் இருந்தாலும் அவருடைய பத்திரிகைப் பணியும் பேச்சும் தொண்டும் அவருடைய பெயரை இந்திய விடுதலை வரலாற்றில் நிலைத்திருக்கச் செய்யும். 1957இல் அவர் மறைந்தார்.

குறிப்புகள்

1. கா.திரவியம், தேசியம் வளர்த்த தமிழ், 1982, ப.120

2. தினமணி, சுதந்திரப் பொன்விழா மலர், ஆகஸ்ட் 97, பெ.சு. மணி, சுதந்திரத்துக்குப் பாடுபட்ட பேனாக்கள், ப. 142

3. மேலது ப. 145

4. கா. திரவியம், மு.கு.நூ. ப. 144

5. மேலது ப. 145

6. மேலது ப. 145

7. மேலது ப. 100-101

8. மா.சு. சம்பந்தன், மு.கு. நூ., ப.139

9. தினமணி, மு.கு.நூ.. பெ.சு. மணி, மு.கு.க., ப. 147

10. தினம்ணி, மேலது, ஏ.என். சிவராமன், வணக்கமும் நன்றியும், ப. 62

11. மா.சு. சம்பந்தன், மு.கு.நூல், ப. 139 (டி.எஸ். சொக்கலிங்கம், எனது ராஜி நாமா, ப. 63)

12. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.260

13. டி.எஸ். சொக்கலிங்கம், மேலது, மா.சு. சம்பந்தன், மு.கு. நூ., ப. 138

14. மா.சு. சம்பந்தன், மு.கு. நூல், பக். 142-143. (டி.எஸ். சொக்கலிங்கம், மு.கு.நூல், ப. 42)

15. மேலது (ப. 62) ப. 138

16. மா.சு. சம்பந்தன், தமிழ் இதழியல் சுவடுகள், பக் 136 -137 (டி.எஸ். சொக்கலிங்கத்தின் எனது இராஜினாமா)

17. தினமணி, மு.கு. நூ., பெ.சு. மணி, மு.கு.க. ப. 147இல் வெளியிட்டுள்ள இதழின் நகல் -அறிமுகம்

18. குடிஅரசு, 10.5.1925, வார இதழில் மீண்டும் அச்சிடப் பெற்ற அறிக்கை

19. குடிஅரசு, 27.12.1925 இதழில் அச்சிடப் பெற்ற பகுதி

20. கா.திரவியம், மு.கு.நூ., ப.145

21. மா.சு.சம்பந்தன், மு.கு.நூ., பக் 127-128

22. கா. திரவியம், மு.கு.நூ., ப. 102.

21. Roland E. Wolseley (Editor), Journalism in Modern India, 1962, A.N.Sivaraman, The Vernacular Language News Paper, P.25.

22. தினமணி, மு.கு.நூ., பெ.சு.மணி, மு.கு.நூ., ப. 147

25. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப. 432.

ஆய்வுக்குப் பயன்பட்டவை

1. சம்பந்தன், மா.சு., தமிழ் இதழியல் சுவடுகள், தமிழர் பதிப்பகம், சென்னை, 1990

2. திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பூம்புகார் பிரசுரம் சென்னை, மாணவர் தனிப்பதிப்பு, 1982.

3. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்

4. Wolseley, E. Roland, (Edited By), Asia Publishing House, Madras, IInd Revised Edition, 1962.

5. குடிஅரசு, வாரஇதழ், 10.5.1925, 27.12.1925 இதழ்கள்

6. தினமணி, சுதந்திரப் பொன் விழா மலர் (சும்மா வரவில்லை சுதந்திரம்) ஆகஸ்டு 1997.

நவசக்தி

1920

'திரு. வி. க. வின் இதழ்களைப் பார்க்கப் பார்க்க என்ன துணிச்சல்! என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்! எவ்வளவு தீவிர தேசபக்தி! என்ன தமிழ்! என்று நாடே வியந்து கொண்டிருந்தது. எல்லாவற்றிலும் அதிக வியப்பு, என்ன தமிழ்! என்பதற்காகத்தான்.'

— **கல்கி**

வந்தே மாதரம்

நவசக்தி

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

சிலம்பு கஉ ஆங்கீரஸ ௵ சித்திரை ௴ உகஅ (11—5—32) புதன்கிழமை பரல் உஉ

தினசரி வாழ்வில் பௌதிக அறிவு

ஸ்ரீமான் - ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உடம்பிலும் உணவிலும் உப்பு பகுதி:—இனி நமது உடம்புக்கும் நேருக்கு முள்ள தொடர்பைப்பற்றிச் சிந்திப்போம். சாதாரணமான கல்ல பிராயமுள்ள ஒரு மனிதனைப் பற்றிய சில விவரங்கள் கீழ் வருவது:—

எடை 154 பவுன் (அல்லது ராத்தல்) ஒரு மனைக்குக்கு 25 பவுன்.

இதில் நீர்ப்பகுதி 88 பவுன்
கனப் பகுதி 66 பவுன்
அதாவது சுதில் மூன்று பங்கு நீர்
" மூன்று " கனம்.

இம்மனிதன் தினசரி உணவில்,

நீர்ப்பகுதி	8000 கிரெயின் (5760 கிரெயின் ஒரு ராத்தல் அல்லது பவுன்.)	
தண்ணீர்ப்பகுதி	20500	"
பிராணவாயு	10000	"
	54500	"

இம்மனிதன் தினசரிக் கழிவில்,

தண்ணீர்ப்பகுதி	40000	கிரெயின்
மற்ற பகுதிகள்	14500	"
	54500	"

இந்தக் கணக்கில் உப்பகுதிகளைச் சுத்தமே புள்ளி விவரங்கள் உள்ளன. அவைகளை விவரிக்க தேவையில்லை. இவ்வாறே தாவரங்களின் உடலிலும் (சோண்ட் ஆஞ்சு In plant tissue.)

தண்ணீர் 100க்கு	75	பங்கு உள்ளது.	
கரி	"	11	"
பிராணவாயு	"	10	"
நீர்வாயு	"	2	"
சில உப்புகள்	"	2	"

நோய் தொற்றுக்குக் காரணம்:—மற்றொரு மிகமுக்கியமான விஷயமுண்டு. அதாவது ஒவ்வொரு மனிதனுடைய குணாதிசயத்துக்கும் காரணமாகவுள்ளது நீர்ப் பகுதியே. இதைத்தான் பழைய கிரேக்க ஆசிரியர்கள் ஹியூமர் (Humours) என்று கூறினார்கள். கி. பி. 1900 வரையில் இது ஒரு குருட்டு நம்பிக்கை யெனப்பட்டது. ஆனால் சமீபகாலத்தில் என்டோக்ரைன் கிளாண்டுகள் (Endocrine Glands) என்ற குழாய்களின் வழியாக ஹார்மோன்ஸ் (Harmones) என்ற ஒருவகையான நீர்த்துளிகள் இரத்தத்தில் கலப்பதால்தான் ஒவ்வொரு தேசத்து மக்களுடைய பொது நாகரிகம் உடலமைப்பு முதலியனவும் ஒவ்வொரு மனிதனுடைய குணங்களும் குண வேறுபாடுகளும் உண்டாகின்றன என்று மேல்நாட்டுத் தத்துவ ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள். இந்த என்டோக்ரைன் கிளாண்டுகளில் முக்கியமானவை தைராய்ட் (Thyroid இது கழுத்திலிருக்கிறது), பிட்யூடரி (Pituitary இது மண்டையின் அடிப் பாகத்தி லிருக்கிறது), சுப்ராரினல் (Supra Renal இது Kidney என்ற குண்டிக்காயின் மேலிருக்கிறது) எனப் படுகின்றன. இவைகளுள் மிக முக்கியமானது தைராய்ட் என்பது. இதிலிருந்து வரும் சத்துக்கு தைராக்ஸின் என்று பெயர். இதில் ஐயோடின் (Iodine) ஆர்ஸனிக் (Arsenic) என்ற இரண்டும் உள்ளன. இந்த தைராக்ஸின் சத்து குறைவாயிருந்தால், நெற்றி பெருத்து கண்ணும் மூக்கும் முகமும் சப்பையாகிவிடும். சைனா ஜப்பான் தேசத்திலுள்ளவர்களுக்கே தைராக்ஸின் குறைவு. ஆகையால்தான் அவர்கள் எல்லோரும் அப்படி யிருக்கிறார்கள். இவ்வாறே சுப்ராரினல் குழாயின் வரும் சத்து குறைந்தால் மயிரில்லாத முகமும் உடம்பும், குறுகிய அளவும் ஏற்படும். இதனாலேயே ஆப்பிரிக்கா கண்டத்துக் காப்பிரிகள் அவ்வாறிருக்கிறார்கள்.

கோப மூர்க்கம் விளைப்பது:—சாதாரணமாக ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் இந்தக் குழாய்களில் வரும் சத்து பேதப்படுவதால் குணமாறுபாடுகளும் செயல்மாறுபாடுகளும் உண்டாகின்றன. உதாரணமாக சுப்ராரினல் கிளாண்டு வழியாக அட்ரீனலின் (Adrenalin) என்ற சத்து இரத்தத்தில் கலந்தால் கண் சிவத்தல், உடம்பு அடிஅடித்தல், மயிர்கள் நேராக நிற்றல், பல்லைக்கடித்தல் முதலிய கோபக் குறிகளும் செயல்களும் நிகழும். குடலிலிருந்து இரத்தத்தில் சர்க்கரை அதிகமாக நுழையவும், உடம்பு கொதிக்கும், மற்ற இடங்களிலுள்ள இரத்த மெல்லாம் நரம்புகளுக்கு ஓடும்.

நீதும் மக்கட் பிரிவும்:—தேசத்து மக்களுக்குப் பொதுவாக இந்தச் சத்துக்கள் ஒரு வகையாக இருப்பது போலவே குடும்பங்களிலும் இருக்கும். பொதுவாக மக்களை தைராய்ட் மிகுதியுடையோர், பிட்யூடரி மிகுதியுடையோர், அட்ரீனலின் மிகுதியுடையோர் என்று கூறசெய்யலாம்.

சீர்மை:—இத்தகைய அதிசயங்கள் வெள்ளையர் நீரினிடத்தில் இருப்பதால்,

நவசக்தி

அ. நாகலிங்கம்

முன்னுரை

15.08.1947இல் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இந்திய நாடு விடுதலை பெற்றது. அதற்கு முந்தைய ஆண்டுகளில் தமிழ் நாட்டில் நாள், வார, மாத இதழ்கள் பல வெளிவந்தன. அவற்றால் எழுச்சியுற்ற தமிழ் மக்கள் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து வீறுகொண்டு எழுந்தனர்; ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போராடினர்; மறியல் செய்தனர்; அன்னிய நாட்டுத் துணிகளை விலக்கினர்; தடியடி பட்டனர்; சிறை சென்றனர்; கல் உடைத்தனர்; செக்கிழுத்தனர்; துன்பத்தில் உழன்றனர்; உயிரிழந்தனர். இந்தச் சூழலில் தமிழ்நாட்டில் என்னென்ன பத்திரிகைகள் தோன்றின? அவற்றின் ஆசிரியர்கள் விடுதலைக்கும் நாட்டு முன்னேற்றத்துக்கும் எவ்வெவ் வழிகளில் உழைத்தனர்? இவற்றை ஒவ்வொரு குடிமக னும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவ்வகையில் 'நவசக்தி' என்னும் இதழின் பணியைக் காண்போம்.

தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனாரே நவசக்தி என்னும் வார இதழின் ஆசிரியர். நவசக்தியில் இவர் ஆற்றிய பணி களை அறிவதற்கு முன்னர் (i) இவரது வாழ்க்கை (ii) இவருடைய பேச்சாற்றல், எழுத்தாற்றல் (iii) இவரை வளர்த்த பத்திரிகைகள் (iv) இவர் நடத்திய தேச பக்தன் நாளிதழ் ஆகியன பற்றியும், இறுதியாக (v) 'நவசக்தி'யின் பணிகள் குறித்தும் தெரிந்து கொள்வோம்:[1]

i. வாழ்க்கை

திரு. வி. கலியாணசுந்தரனார் 26.08.1883இல் சென்னைக்கு அருகில் உள்ள துள்ளம் (துண்டலம்) என்னும் ஊரில் பிறந்தார். (போரூர் இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியின் பின்புறம்.) இவருடைய பெற்றோர் விருத்தாசலம் - சின்னம்மை ஆவர். நடுத் தரக் குடும்பத்தில் பிறந்த திரு.வி.க. சென்னை, இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் மெட்ரிகுலேஷன் வரை படித்தார். பள்ளியில் தமிழாசிரியர் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையின் கூட்டுற வினால், பள்ளிப்படிப்பை நிறுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. பிற் காலத்தில் திரு.வி.க. நாவன்மை பெறவும், எழுத்தாளர் ஆகவும், வாழ்க்கையில் சமரச சன்மார்க்க உணர்வு பெறவும் இத்தமிழாசிரி யர் தொடர்பே காரணம் ஆகும்.

ஆசிரியரின் மறைவுக்குப் பின்னர், இவர் பல அறிஞர்களிடம் இலக்கியம், தத்துவம், சமயம் தொடர்பான நூல்கள் பலவற்றைப் படித்துத் தெளிந்தார். சென்னை ஸ்பென்சர் கம்பெனியில் நூலகராக ஒருசில ஆண்டுகளே பணிபுரிந்தார். சென்னை 'ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளி'யிலும் 'வெஸ்லியன் டெக்னிகல் இன்ஸ் டிடியூட்'டிலும் பல ஆண்டுகள் ஆசிரியராகச் செயல்பட்டார். பின்னர் தாம் பயின்ற வெஸ்லி கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகச் சில மாதங்கள் பணிபுரிந்தார். அதிலிருந்து விலகி அரசியலில் - பத்திரிகைத்துறையில் 1917 டிசம்பரில் நுழைந்தார்.

திரு.வி.க. 'தேசபக்தன்' என்னும் நாளிதழ் ஆசிரியர் ஆனார்; அனல் பறக்கும் தம் எழுத்துகள் மூலம் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பினார். பின்னர் 'நவசக்தி' என்னும் வார இதழைத் தோற்று வித்தார். பல்லாண்டுகள் நடத்தியபின் அதை மாத இதழாக்கி, இறுதியில் இராதாமணி அம்மையாரும் சக்திதாஸ் சுப்பிரமணியமும் ஒருமித்து நடத்தும் முறையில் ஒப்படைத்துப்[2] பத்திரிகை உலகில் இருந்து ஓய்வுபெற்றார். முதுமை இவரை வருத்தவும், கண்ணொளி மங்கவும், நீரிழிவுநோய் துன்புறுத்தவும் இவர், 71ஆம் அகவை யில் 17.09.1953இல் தம் பூத உடலை விடுத்துப் புகழுடம்பு எய்தினார்.

13.09.1912இல் கமலாம்பிகை என்னும் நங்கையைத் திரு மணம் செய்துகொண்ட இவர், தம் தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்தார்; ஓர் ஆண், ஒரு

பெண் குழந்தைகளைப் பெற்று ஓராண்டிலேயே இழந்தார். பின்னர் இவர் துணைவியாரும் எலும்புருக்கி நோயால் துன்புற்று 1918 இல் இறந்தார். இவரது இல்வாழ்க்கை ஆறு ஆண்டுகளே அமைந் தது என்றாலும், பல்லாண்டு இணைந்து வாழ்ந்த அனுபவம் பெற்றவர் போல் திகழ்ந்தார். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தெய் வப்பற்றும் நிறைந்த தன்னிகரற்ற தமிழராக - இந்தியராக - உலக ராக உயர்ந்து தமிழ் நெஞ்சங்களில் என்றும் இனிய நினைவாக வாழ்ந்து வருகிறார்.

எழுத்தாற்றலும் பேச்சுத் திறனும்

திரு.வி.க. பிற்காலத்தில் 'தேசபக்தன்', 'நவசக்தி' என்னும் இரண்டு இதழ்களை ஏறத்தாழ இருபதாண்டுக்காலம் நடத்தினார்; இதழியல் முன்னோடி என்னும் சிறப்பைப் பெற்றார். பத்திரிகை ஆசிரியர் ஆவதற்கு இவருடைய இளமை நிகழ்ச்சிகள் மூல காரணம் அல்லவோ? அக்காரணங்கள் எவை என நோக்குவோம்.

தமிழுலகு செய்த தவத்தின் காரணமாகத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.தம் வாழ்க்கை வரலாற்றை எழுதி, 'திரு.வி.க. வாழ்க் கைக் குறிப்புக்கள்' என்னும் பெயரில் 1944இல் வெளியிட்டார். "தமிழ்மொழி, சைவ வைணவ கிறிஸ்தவ சமண பௌத்த சமயங் கள், அரசியல், தொழிலாளர் இயக்கம், கலப்புமணம், விதவை மறுமணம், உடனுண்ணல், தீண்டாமை விலக்கு முதலிய சீர்திருத் தத் தொண்டு ஆகிய பலவற்றிலும் ஈடுபட்டு ஒவ்வொரு பகுதி யிலும் தோட்டி முதல் தொண்டைமான்வரை எல்லா நிலைகளிலு முள்ள மக்களுடன் கலந்து, சுமார் 40 ஆண்டுகள் தொண்டுபுரியும் வாய்ப்பும் நல்வினையும் கோடியில் ஒருவருக்கே கிடைக்கும்"[3] எனப் பாராட்டுகின்றார் சைவவைணவச் செம்மல் ம. பாலசுப்பிர மணிய முதலியார் தம் அணிந்துரையில். அத்துடன் இத் தன்வர லாற்று நூலை, 'தமிழ் நாட்டின் 40 ஆண்டு வரலாறும் இஃதாம்'[4] என்று சிறப்பிக்கின்றார்.

இத்தகு சீரிய நூலைப் புரட்டிப் பார்க்கின்ற போது செய்திகள் பல புதைந்து கிடக்கின்றன. அவற்றுள் இரண்டைமட்டும் அகழ்ந்து உரைப்பாம். முதலாவதாகத் திரு.வி.க., இராயப் பேட்டை 'ஆரியன் பிரைமெரி பாடசாலை'யில் மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது பராங்குச நாயுடு என்பவர் அடிக்கடி பள்ளிக்கு வந்து வகுப்புவாரியாகப் பரீட்சை செய்து சிறந்த மாணவர்களுக்குப் பரிசளிப்பார். ஒருமுறை மூன்று,

i. வாழ்க்கை

திரு. வி. கலியாணசுந்தரனார் 26.08.1883இல் சென்னைக்கு அருகில் உள்ள துள்ளம் (துண்டலம்) என்னும் ஊரில் பிறந்தார். (போரூர் இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியின் பின்புறம்.) இவருடைய பெற்றோர் விருத்தாசலம் - சின்னம்மை ஆவர். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த திரு.வி.க. சென்னை, இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் மெட்ரிகுலேஷன் வரை படித்தார். பள்ளியில் தமிழாசிரியர் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையின் கூட்டுறவினால், பள்ளிப்படிப்பை நிறுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. பிற்காலத்தில் திரு.வி.க. நாவன்மை பெறவும், எழுத்தாளர் ஆகவும், வாழ்க்கையில் சமரச சன்மார்க்க உணர்வு பெறவும் இத்தமிழாசிரியர் தொடர்பே காரணம் ஆகும்.

ஆசிரியரின் மறைவுக்குப் பின்னர், இவர் பல அறிஞர்களிடம் இலக்கியம், தத்துவம், சமயம் தொடர்பான நூல்கள் பலவற்றைப் படித்துத் தெளிந்தார். சென்னை ஸ்பென்சர் கம்பெனியில் நூலகராக ஒருசில ஆண்டுகளே பணிபுரிந்தார். சென்னை 'ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளி'யிலும் 'வெஸ்லியன் டெக்னிகல் இன்ஸ்டிடியூட்'டிலும் பல ஆண்டுகள் ஆசிரியராகச் செயல்பட்டார். பின்னர் தாம் பயின்ற வெஸ்லி கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகச் சில மாதங்கள் பணிபுரிந்தார். அதிலிருந்து விலகி அரசியலில் - பத்திரிகைத்துறையில் 1917 டிசம்பரில் நுழைந்தார்.

திரு.வி.க. 'தேசபக்தன்' என்னும் நாளிதழ் ஆசிரியர் ஆனார்; அனல் பறக்கும் தம் எழுத்துகள் மூலம் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பினார். பின்னர் 'நவசக்தி' என்னும் வார இதழைத் தோற்றுவித்தார். பல்லாண்டுகள் நடத்தியபின் அதை மாத இதழாக்கி, இறுதியில் இராதாமணி அம்மையாரும் சக்திதாஸ் சுப்பிரமணியமும் ஒருமித்து நடத்தும் முறையில் ஒப்படைத்துப்[2] பத்திரிகை உலகில் இருந்து ஓய்வுபெற்றார். முதுமை இவரை வருத்தவும், கண்ணொளி மங்கவும், நீரிழிவுநோய் துன்புறுத்தவும் இவர், 71ஆம் அகவையில் 17.09.1953இல் தம் பூத உடலை விடுத்துப் புகழுடம்பு எய்தினார்.

13.09.1912இல் கமலாம்பிகை என்னும் நங்கையைத் திருமணம் செய்துகொண்ட இவர், தம் தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்தார்; ஓர் ஆண், ஒரு

பெண் குழந்தைகளைப் பெற்று ஓராண்டிலேயே இழந்தார். பின்னர் இவர் துணைவியாரும் எலும்புருக்கி நோயால் துன்புற்று 1918 இல் இறந்தார். இவரது இல்வாழ்க்கை ஆறு ஆண்டுகளே அமைந்தது என்றாலும், பல்லாண்டு இணைந்து வாழ்ந்த அனுபவம் பெற்றவர் போல் திகழ்ந்தார். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தெய்வப்பற்றும் நிறைந்த தன்னிகரற்ற தமிழராக - இந்தியராக - உலகராக உயர்ந்து தமிழ் நெஞ்சங்களில் என்றும் இனிய நினைவாக வாழ்ந்து வருகிறார்.

எழுத்தாற்றலும் பேச்சுத் திறனும்

திரு.வி.க. பிற்காலத்தில் 'தேசபக்தன்', 'நவசக்தி' என்னும் இரண்டு இதழ்களை ஏறத்தாழ இருபதாண்டுக்காலம் நடத்தினார்; இதழியல் முன்னோடி என்னும் சிறப்பைப் பெற்றார். பத்திரிகை ஆசிரியர் ஆவதற்கு இவருடைய இளமை நிகழ்ச்சிகள் மூல காரணம் அல்லவோ? அக்காரணங்கள் எவை என நோக்குவோம்.

தமிழுலகு செய்த தவத்தின் காரணமாகத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.தம் வாழ்க்கை வரலாற்றை எழுதி, 'திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்னும் பெயரில் 1944இல் வெளியிட்டார். "தமிழ்மொழி, சைவ வைணவ கிறிஸ்தவ சமண பௌத்த சமயங்கள், அரசியல், தொழிலாளர் இயக்கம், கலப்புமணம், விதவை மறுமணம், உடனுண்ணல், தீண்டாமை விலக்கு முதலிய சீர்திருத்தத் தொண்டு ஆகிய பலவற்றிலும் ஈடுபட்டு ஒவ்வொரு பகுதியிலும் தோட்டி முதல் தெண்டைமான்வரை எல்லா நிலைகளிலுமுள்ள மக்களுடன் கலந்து, சுமார் 40 ஆண்டுகள் தொண்டுபுரியும் வாய்ப்பும் நல்வினையும் கோடியில் ஒருவருக்கே கிடைக்கும்"[3] எனப் பாராட்டுகின்றார் சைவவைணவச் செம்மல் ம. பாலசுப்பிரமணிய முதலியார் தம் அணிந்துரையில். அத்துடன் இத் தன்வரலாற்று நூலை, 'தமிழ் நாட்டின் 40 ஆண்டு வரலாறும் இஃதாம்'[4] என்று சிறப்பிக்கின்றார்.

இத்தகு சீரிய நூலைப் புரட்டிப் பார்க்கின்ற போது செய்திகள் பல புதைந்து கிடக்கின்றன. அவற்றுள் இரண்டைமட்டும் அகழ்ந்து உரைப்பாம். முதலாவதாகத் திரு.வி.க., இராயப்பேட்டை 'ஆரியன் பிரைமெரி பாடசாலை'யில் மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது பராங்குச நாயுடு என்பவர் அடிக்கடி பள்ளிக்கு வந்து வகுப்புவாரியாகப் பரீட்சை செய்து சிறந்த மாணவர்களுக்குப் பரிசளிப்பார். ஒருமுறை மூன்று,

நான்காம் வகுப்புகளை இணைத்துக் கட்டுரைப் போட்டி வைத்தார். போட்டிக்குரிய தலைப்பு, தென்னை, வாழை, பசு, நாய் ஆகிய வற்றுள் ஏதேனும் ஒன்று. திரு.வி.க., தம் உள்ளம் கவர்ந்த 'வாழை' யைப் பற்றி எழுதினார். போட்டியில் இவர் கட்டுரையே பரிசு பெற்றது. இராயப்பேட்டை முழுவதும் இச்செய்தி பரவியது. இவர் தந்தையாருக்கு வாழ்த்துக் கூறப்பட்டது.[5]

இத்தகைய கலைபயில் தெளிவும் கட்டுரைவன்மையும் திரு. வி.க.விடம் நீறுபூத்த நெருப்புப் போல் மறைந்திருந்து பின்னர் ஆசிரியர் கதிரைவேற் பிள்ளையின் தூண்டுதலால் 'பெரியபுராணக் குறிப்புரையும் வசன'முமாக வெளிப்பட்டது. தொடர்ந்து சென்னை, தியோசாபிகல் சங்கத் தலைவி டாக்டர் அன்னிபெசன்ட் கேண்மை யால், தமிழ்நாட்டில் வகுப்புணர்வை வளர்த்த 'ஜஸ்டிஸ்' கட்சித் தலைவரிடம் கேள்விகளும் துண்டு அறிக்கைகளும் எழுதித் தருவதன்மூலம் புலப்பட்டது. அடுத்து, 'தேச பக்தன்' நாளிதழ் ஆசிரியரானபோது பத்திரிகைத் துறைக்கென ஒரு நடையை உருவாக்கியது. அந்நடை 'நவசக்தி' இதழ் வாயிலாகப் பொலிவு பெற்றுப் பல நூல்களாக உருப்பெற்றன. இங்கு ஒன்று நினையத் தக்கது. இதழாசிரியராகத் திரு. வி.க. சிறப்பாகச் செயல்பட்ட தனால்தான், நாடு போற்றும் நல்ல பல நூல்களை - ஒரு தமிழ் நடையை- சமரச சன்மார்க்கரை - தொழிலாளர் இயக்கத் தலைவரை - பண்பட்ட அரசியல்வாதியை - பெண்ணுரிமைக் காவலரை - இளை ஞர்க்கு ஒரு வழிகாட்டியைத் தமிழுலகு பெற்றது எனலாம்.

இரண்டாவதாக, திரு.வி.க.வின் பேச்சுத்திறனுக்குக் காரணம் ஆசிரியர் கதிரைவேற்பிள்ளையே ஆகும். ஆசிரியரின் நாவன்மை திரு.வி.க.வின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவர் பேசும் இடங்கள், "வெறும் புராணப் பிரசங்க மேடைகளாய் இரா. அவை கலைக்கழகங்களாகத் திகழும். கதிரைவேலரின் சொன்மாரி வெள் ளத்தில் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், சாத்திரம் முதலியன தேங்கும். அத்தேக்கம் மாணாக்கர்க்குக் கலை விருந்தாகும்"[6] என்று ஆசிரியரின் சொல்வன்மையை நினைவு கூர்கிறார் திரு.வி.க.

தம் ஆசிரியரையும் சைவசமய நூல்களையும் கோ. வடிவேல் செட்டியார் உள்ளிட்ட வேதாந்திகள் சிலர் தாக்கிப் பேசுவர். அவர் களை எதிர்த்துத் திரு.வி.க., ச. சச்சிதானந்தம்பிள்ளை முதலியோர் முழங்குவர். கதிரைவேலர் இம்மாணவர்களைத் தூசிப்படை என்பர். 'பெரும் பீரங்கிகளை எதிர்க்கும் ஆற்றல்பெறுதல் பொருட்டு யான்

பல நூல்களை ஆய்வதில் பெரும்பொழுது போக்குவேன்; ஞாயிற்றுக்கிழமை சில மணி நேரம் பேசுவதற்கு ஏறக்குறைய வாரம் முழுவதும் நூல்களைப் படித்தவண்ணமிருப்பேன். வாதம், பலதிறக் கல்வி கேள்விகட்குத் துணைபுரிவதாயிற்று"[7] என்று தாம் பேச்சாற்றல் வளர்த்த தன்மையையும் அதனால் பெற்ற பயனையும் தம் வரலாற்றில் குறிப்பிடுகிறார் திரு.வி.க. பின்னர் அன்னி பெசன்ட் முதலியோரின் சொற்பொழிவுகளைப் பருகி அவற்றில் திளைத்தார். எனவே, சிறந்த பேச்சாளராக வேண்டும் என்னும் வெறி இவரைக் காலப்போக்கில் இதழியல் துறையில் ஈடுபடச் செய்தது என்று கூறலாம்.

இவரை வளர்த்த இதழ்கள்

இன்று நகரங்களில் பெரும்பாலும் வீட்டுக்கு வீடு ஏதேனும் ஓர் இதழை வாங்கிப் படிக்கும் வழக்கம் உள்ளது. என்றாலும் நாளிதழை வாங்குவோர் எண்ணிக்கை அறிவுத்துறையில் உழைக்கும் மக்களிடமே காணப்படுகிறது. கிராமங்களில் வசதி படைத்த சிலஇல்லங்களில் மட்டுமே நாளிதழ் மற்றும் சில பத்திரிகைகள் வாங்கும் வழக்கத்தைக் காணமுடிகிறது. இன்றைய இளைஞர் ஓரளவுக்கு நாளிதழைப் படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். மேலும், அவர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், கலை மற்றும் விளையாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளவும், வேலை வாய்ப்பைப் பெறவும் இதழ்களைப் படித்து வருகின்றனர்.

திரு.வி.க.வின்இல்லத்தில் பத்திரிகைகள் வாங்கும் வழக்கம் இல்லை எனத் தெரிய வருகிறது. பொதுமக்கள் பலரும் இதழ்களைப் படிக்கும் அளவுக்குப் பத்திரிகைப் பெருக்கமும்இல்லை; பொருளாதார வசதியும்இல்லை. அரசாங்கத் துறையில் பணி புரியும் அதிகாரிகளில் பெரும்பாலோர் பத்திரிகையை வாங்கிப் படித்தனர் என எண்ணலாம். இந்நிலையில், திரு.வி.க. பள்ளிப் படிப்பை விடுத்த பின்னர்தான் இதழ்களைப் படித்தார். குறிப்பாக, மயிலை பாலசுந்தர முதலியார் நட்பு கிடைத்தபோது அவர், திரு.வி.க.வுக்குத் தம் ஆசிரியர் சபாபதி நாவலர் நடத்திய 'ஞானாமிர்தம்' என்னும் இதழையும் நாவலருடைய நூல்களையும் படிக்கக் கொடுத்தார். அவற்றால் தாம் பெற்ற பயன் அதிகம் என்றும், நாவலருடைய நூல்கள் முறையாகத் தமிழ் படிக்கவேண்டும் என்னும் காதலை தம்மிடம் எழுப்பின என்றும் தமிழ்த்தென்றல் திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப்புக்களில் கூறியுள்ளார்.[8]

அடுத்து, 'மதறாஸ் டைம்ஸ்' என்ற ஓர் ஆங்கிலஇதழ் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது என்றும் அது 43 அல்லது 44இல் 'மதறாஸ் மெயி'லுடன் இணைந்தது என்றும், தம் கால இதழ் களின் தன்மைகளை எடுத்துரைக்கிறார் திரு.வி.க. மேலும், 'மதறாஸ் டைம்ஸ்' ஆசிரியராகத் திகழ்ந்த கிளின் பார்லோ என்னும் ஆங்கில இலக்கியப் பேரறிஞர் 'ஷேக்ஸ்பியர் கிளப்'பைத் தோற்று வித்தார். அதில் ஆங்கில, இந்திய அறிஞர்கள் ஆங்கிலக் கவிஞர் களின் கவிநயங்களைத் திறம்பட எடுத்துரைப்பர். அப்பேச்சு களைத் திரு.வி.க. இயன்றவரை பருகுவார். அஃது 'ஊனுக்கு உர மூட்டும்; உயிருக்கு இன்பூட்டும்' என்கிறார்.[9] (இங்கே இதழ்கள் இரண்டின் பெயர்களை மட்டும் திரு.வி.க. குறிப்பிடுகிறாரே அன்றி, அவற்றால் தாம் பெற்ற பயன்களைச் சொல்லவில்லை என்பது நோக்கத்தக்கது.)

இவர் சென்னை ஸ்பென்ஸர் கம்பெனியில் 1907இல் நூலகர் என்னும் முறையில் பணியாற்றினார். இவருக்கு ஓய்வு நிறைய இருந்தது. அப்போது வங்காளப் பிரிவினையை ஒட்டி எழுந்த சுதேசிய இயக்கம் நாடு முழுவதும் பரவியது. தேசத் தலைவர் விபின சந்திர பாலர் சென்னை வந்து கடற்கரையில் ஆற்றிய சொற்பெருக்கு மாகாணத்தைத் தட்டி எழுப்பியது; திரு. வி.க.வை விழிக்கச் செய்தது. லாலா லஜபதி ராய் நாடு கடத்தப் பட்டார். பத்திரிகை உலகம் ஆக்கம் பெற்றது.

இந்நிலையில், அரவிந்தர் நடத்திய 'வந்தே மாதரம்' இதழை வரவழைத்தார். அதே நேரத்தில் இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிற்கட்சித் தலைவரும் ஆகிய கீர் ஹார்டியை ஸ்பென்ஸரில் கண்டார். அவரது காட்சியும், பத்திரிகையில் வந்த வரலாறும் திரு.வி.க.வின் உள்ளத்தில் கிளர்ச்சியை ஊட்டின. இஃது ஒரு பாலாக, நாள் தோறும் முக்கால் மணிநேரம் முன்ன தாகவே திரு.வி.க. கம்பெனிக்கு வந்து அங்குள்ள மக்களுக்குப் பத்திரிகைச் செய்திகளை எடுத்துரைப்பார். இவரது இச்செயல் ஐரோப்பியரை மருளச் செய்தது. என்றாலும், எவ்வித அச்சமும் இன்றித் திரு.வி.க. தொடர்ந்து தம் கடனைச் செவ்வனே ஆற்றி வந்தார். இச்செயல் கம்பெனி மானேஜிங் டைரக்டருக்கு எட்டியது. ஒரு நாள் காலை அவர் இவரை அழைத்து எச்சரிக்கை செய்தார். இது திரு.வி.க.வின் உள்ளத்தைப் புண்படுத்தியது. அன்றே தமையனாரைக் கண்டு தம் உள்ளக்கிடக்கையை அறிவித்து கம்பெனி வேலையைவிட்டு விலகினார் (1908).[10]

தம் வாழ்க்கைக் குறிப்புக்களில் 'அரசியல்' பகுதியில் திரு. வி.க. கூறுவது அறியத்தக்கது. அரவிந்த கோஷரால் நடத்தப் பெற்ற 'வந்தே மாதரம்' என்ற வீரஞ்செறிந்த பத்திரிகையைப் படிக்கப்படிக்க ஊக்கம் பிறக்கும். நாட்டு விடுதலையில் வேட்கை எழும். அந்நாளில் தமிழில் 'இந்தியா' என்றொரு பத்திரிகை ஸ்ரீநிவாஸாச்சாரியார், சுப்பிரமணிய பாரதியார் முதலியோரால் நடத்தப்பெற்றது. தென்னாட்டைத் தட்டியெழுப்பிய பெருமை அப் பத்திரிகைக்கு உண்டு.'[11] மேலும் 'வந்தே மாதரப் பத்திரிகையும் பாலர் பேச்சும் திலகர் சிறையும் இன்ன பிறவும் எனக்கு அரசியல் பித்தை உண்டாக்கின; ஸ்பென்ஸர் வேலையை விடச்செய்தன'[12] என்றும் அந்நூலிலேயே கூறுகிறார் திரு.வி.க.

ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் நட்பால் திரு.வி.க. வுக்கு டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் நண்பரானார். பெசன்ட் 'நியூ இந்தியா' என்ற ஆங்கில இதழை நடத்திவந்தார். அவருடைய பேச்சும் எழுத்தும் தம் அறிவு விளக்கத்துக்குப் பெருந்துணை செய்தன என்பர் திரு.வி.க.

தேசபக்தன் நாளிதழ்

தமிழ் நாட்டில் 1917இல் 'பிராமணர் அல்லாதார் நல உரிமைச் சங்க'த்தின் சார்பாக மூன்று தினப்பதிப்புகள் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளிவந்தன. ஆங்கில 'ஜஸ்டிஸை'யும் தமிழ் 'திராவிட'னையும் திரு.வி.க. படிப்பதுண்டு. அவை இரண்டும் ஆங்கிலேய ஆட்சிக்குத் துணையாக நின்று, வகுப்பு உணர்வைத் தூண்டி இந்திய தேசியக்காங்கிரஸ் இயக்கத் துக்கு எதிராகச் செயல்பட்டன. இப்போக்கு, திரு.வி.க.வுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக வகுப்பு வாதத்தை எதிர்க்கவேண்டு வது தன்கடன் என உணர்ந்தார் திரு.வி.க. அதற்குப் பத்திரிகை அவசியம் என்ற எண்ணம் அவரைப் பிடர் பிடித்து உந்தியது. பத்திரிகையைப் பற்றி டாக்டர் அன்னி பெசன்டின் 'நியூ இந்தியா' இதழின் உதவி ஆசிரியர்களுள் ஒருவரும் சென்னை தியோசாபிகல் சங்கத்தைச் சார்ந்தவரும் பல அமைப்புகளை நடத்தி வருபவரு மான சுப்பராய காமத் என்பவரோடு திரு.வி.க. பன்முறை சிந்தித் தார். அதன் விளைவாக வெஸ்லி கல்லூரியில் தாம் வகித்த தமிழ்ப் பேராசிரியர் பதவியினின்றும் 5.12.1917இல் விலகினார். 7.12. 1917இல் 'தேசபக்தன்' என்னும் நாளிதழின் ஆசிரியர் பதவியை ஏற்றார்.[13] 22.07.1920இல் அந்த இதழை விட்டு விலகினார்.

இரண்டு ஆண்டுகளும் 7½ மாதங்களும் அவ் இதழின் ஆசிரிய ராகப் பணி புரிந்தார்.

உதவி ஆசிரியர்

தேசபக்தன் நாளிதழ் தொடங்கியதிலிருந்து அதன் உதவி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தோர் வெ. சாமிநாதசர்மா, சேஷாத்திரி சர்மா, வேங்கடாச்சாரியார், பழனிவேல், சம்பத் ஆகியோராவர். இவர்களுள் பழனிவேல், சம்பத் இருவரும் மீண்டும் பள்ளிக்குச் சென்றனர். குலாமே ஹமீத், பரலி சு. நெல்லையப்பர், இராஜ கோபால், நடேசன் ஆகியோர் பிற்காலத்தில் உதவி ஆசிரியர் களாகச் சேர்ந்தனர். இந்த உதவி ஆசிரியர்களுள் சிலர் தனியே பிற்காலத்தில் பத்திரிகைகள் நடத்தினர்.[14] இடைக் காலத்தில் தேசபக்தன் இதழுக்கு லிமிடெட் போர்வை கிடைத்தது. சக்கர வர்த்தி இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, ஈ.வே. ராமசாமி நாயக்கர், ஆதி நாராயண செட்டியார், ஜார்ஜ் ஜோசப், லார்ட் கோவிந்ததாஸ் முதலியோர் டைரக்டர் ஆயினர்; அமைச்சர் சுப்பராய காமத் லிமிடெட் கம்பெனி காமத். வழியே செயல்பட்டது. இத்தகைய அமைப்பு முறை திரு.வி.க.வுக்கு பிடிக்கவில்லை என்றாலும் அதன் டைரக்டர்கள் தேசபக்தர்களாக இருந்தமை அவருக்கு ஆறுதலளித்தது.[15]

பத்திரிகையில் கூறப்படும் செய்திகள்

தம் பத்திரிகையாகிய தேசபக்தன் பற்றி இவர் கூறும் கருத்துகள் ஊன்றிக் கவனிக்கற்பாலன.

> தேசபக்தன் அரசியல் தினப்பதிப்புப் பத்திரிகையாகலான், அதில் எழுதப்படும் விடயங்கள் பல்வேறு எழுவாயைக் கொண்டிருப்பினும், அவையாவும் அரசியல் பொருளென்னும் ஓர் இறுவாயைக் கொண்டுநிற்றல் கவனிக்கற்பாலது. அரசியல் தினப்பதிப்புப் பத்திரிகையில் எழுதப்படுந் தலையங்கங்களும், பிற ஆசிரியக் குறிப்புக்களும் ஒன்றோடொன்று இயைபுபடா. அரசியல் தினப்பதிப்புப் பத்திரிகைகளில் இன்றொரு விடயம் எழுதப்படும்; நாளை மற்றொரு விடயம் எழுதப்படும்; நாளை அன்றைக்கு வேறொரு விடயம் எழுதப்படும். ஒன்றே பன் முறையும் எழுதப்படுவது உண்டு. வேளைக்கேற்ற பொருள்கள் எழுதப்படுதலால், அவை யொன்றோடொன்று தொடர்புடையன வாதல் அருமை[16]

என்று நாளிதழின் அன்றாடச் செய்திப் போக்குகளைப்பற்றித் திரு.வி.க. கூறும் இக்கருத்துகள் உளங்கொளத் தக்கவையன்றோ?

நடை

தமிழாசிரியராகப் பணிபுரிந்த திரு.வி.க. இதழாசிரியர் ஆனதால் தம் நடையை அதற்கேற்ப மாற்றிக்கொள்வது இன்றியமையாததாயிற்று. இதுபற்றி இவர் கூறும் கருத்துகள் நாம் அறிய வேண்டியவை ஆகும்: பிறமொழிக் கலப்பின்றித் தமிழ் பேசல்வேண்டும், எழுதல் வேண்டும் என்னும் ஆர்வமும் எனக்குண்டு. அப் பற்றும் அவ்வார்வமும் என்னளவில் கட்டுப்பட்டுக் கிடப்பதை நோக்குழி வீட்டின்பத்தில் வெறுப்பும், தமிழ் நாட்டில் பலமுறை பிறவி தாங்கித் தொண்டு புரிவதில் விருப்பும் எனக்கு நிகழ்கின்றன[17] என்றும்,

"செவ்விய தமிழ் நடை, தமிழ் நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படா'தென்று கருதித் 'தேசபக்த'னுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரைநடையைக் கொண்டுள்ளேன். இது காலைத் தமிழ்நாட்டு வழக்கிலுள்ள பிறமொழிக் குறியீடுகளையும், இக்கால வழக்குச் சொற்களையும், ஆன்றோராட்சி பெறாத சில முறைகளையும் பண்டைத் தமிழ்மக்கள் கோலிய வரம்பிற்குப் பெரிதும் முரணாதவாறு ஆண்டுவருகின்றேன்"[18] என்றும் கூறுவதால் திரு.வி.க. நடைமுறைக்கேற்பத் தம்மை மாற்றிக்கொள்பவர் என்பது புலனாகிறது. இவர் தமிழ்நடையில் பின்பற்றிய போக்கு, தமிழ் உரைநடை இலக்கியத்திற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். இவருடைய தமிழ்நடையைப் புரிந்துகொள்ள-மாட்சியை அறிந்துகொள்ள இவருடன் பழகியவரும் முதுபெரும் தமிழறிஞரும் ஆகிய பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் கூறும் கருத்து எண்ணத்தக்கது.

கடந்த நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் வாழ்ந்த தமிழறிஞர்களை இருவகை எழுத்தாளர் எனக் குறிப்பிட்டுக் கூறும் அக்கருத்து வருமாறு:

> பிறருக்குப் புரியாத முறையில் பேசுவதும் எழுதுவதுமே சிறந்த தமிழ்நடை என்று கருதிய காலம் அது. பிறருக்குப் புரியக் கூடாது என்ற கருத்துடன் எழுதியவர்களல்லர் அக்காலத் தமிழறிஞர்கள். அவர்கள் எண்ணத்தின்படி, கடினமான சொற்களைப் பயன்படுத்துவதே சிறந்த தமிழ்நடை என்பதாம். உதாரணமாக மிகச்சிறந்த அறிஞராகிய வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்

(பரிதிமாற் கலைஞர்) கைக்கொண்ட நடையையும், மறை மலையடிகளார் கைக்கொண்ட நடையையும் கூறலாம். இத் தகைய நடையை அப்பெரியார்கள் மேற்கொள்வதற்கு வட மொழிக் கலப்பை நீக்கித் தூய தமிழில் எழுத வேண்டும் என்பதும் ஒரு காரணமாகும். அவ்வாறு தூய தமிழில் எழுதும்பொழுதும் எளிய சொற்களை விட்டுக் கடினமான சொற்களையே அவர்கள் பயன்படுத்தினர். எளிய சொற்கள் பல்லோராலும் பயன்படுத்தப் பெற்றமையின் சிறந்த கருத்து களை வெளியிட அவை பயன்பட மாட்டா என்று அவர்கள் கருதினார் போலும்.

இதன் எதிராக மற்றொரு கூட்டமும் இயங்கி வந்தது. முன்சீப் வேதநாயகம் பிள்ளை, மாதவையா போன்றவர்கள் இக் கூட்டத் தின் முன்னோடிகள் எனலாம். இவர்கள் நடை மிக எளிமையான தாய் யாவருங் கற்றுப் பயனடையக் கூடியதாய் அமைந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால், இவர்கள் நடையில் வடசொற் கள் அளவுமீறிக் கலந்திருந்தன என்பதையும் மறுத்தல் இயலாது.'[19]

இவ் இருவகை எழுத்தாளர்களையும் இணைக்கும் பால மாகத் திரு.வி.க.வின் நடை அமைந்துள்ளது. இத்தகு நடையை இவருடைய தேசபக்தன் நாளிதழ் ஒன்றின் தலையங்கம் வாயி லாகக் காண்போம்:

பண்டைக் காலத்தில் தெய்வபக்தியை வளர்த்தவர் பெரும்பாலும் முனிவரரேயாவர். அவர்கள் லௌகிக காரியங்களில் பெரிதும் தலையிடுவதேயில்லை; வைதிக காரியங்களிலேயே தங்கள் காலத்தைக் கழித்துவந்தார்கள். அவர்களை இல்லறத்தார்கள் போஷித்து வந்தார்கள். அதுபோல இப்பொழுது தேசபக்தியை வளர்க்க ஒரு கூட்டத்தார் புறப்படவேண்டும்; அக்கூட்டத் தாருக்கு எவ்வகைப் பற்றும் இருத்தல் கூடாது. அவர்கள் தேசபக்தியை வளர்க்கும் ஒரு பற்றிலேயே பற்றுடையவர் களாயிருத்தல் வேண்டும். அவர்கள் ஒன்றுகூடித் தேசபக்தியை வளர்க்க வேண்டிய முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்களை ஊரவரே போஷிக்க வேண்டும்.

முதல் முதல் இக்கூட்டம் தலைநகராகிய சென்னையில் சேர வேண்டும். அக்கூட்டம் 'தேசபக்த சமாஜம்' என்னும் பெயரால் அழைக்கப்பட வேண்டும். அச் சமாஜம் ஜன நெருக்கமில்லாத ஓரிடத்தில் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். ஆங்கே பாரததேவி திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும்; தேசபக்தி யூட்டக்கூடிய உற்சவங்கள், பிரசங்கங்கள், பஜனைகள் முதலி யன நடைபெறல் வேண்டும். ஜனங்களுக்குத் தேசபக்தியில்

ஆவேசம் உண்டாக்கக்கூடிய மற்றும் பல செயல்களையுஞ் செய்தல் வேண்டும். அச் சமாஜத்தில் சேர்வோர் கூட்டங் கூட்ட மாகக் கிராமங்கட்குச் சென்று வந்தே மாதர முழக்கத்தோடு தேச பக்தி ஊட்டக்கூடிய பாடல்களை இன்னிசைக் கருவிகளுடன் பாடிக்கொண்டு உபந்நியாசங்கள் செய்ய வேண்டும். இவ்வழி யொன்றே தமிழ்நாட்டில் தேச பக்தியை வளர்க்கத் தக்கதாகும். 'தேசபக்த சமாஜம்' ஏற்படின் அதிற் சேர்ந்து வேலைசெய்ய எண்ணிறந்தோர் சித்தமாக இருக்கின்றனர். அவரைப் போஷிக்க முன்வருவோர் யாவர்? போஷிப்போர் ஏற்படின் தேச ஊழியஞ் செய்ய எண்ணிறந்தோர் ஏற்படுவர். நமது தமிழ் நாட்டில் செல்வர்களில்லையோ? மிராசுதாரர்களில்லையோ? ஜமீன்தார் களில்லையோ? பலர் இருக்கின்றனர். அவரது செல்வம் கூத் துக்கும், குடிக்கும், பிறவிளையாடல்களுக்கும் செலவாகிறது. சென்னையில் ஜனத் தலைவர்களென்று பெயர் வைத்துக் கொண்டு மோட்டார் வண்டியில் ஏறித்திரிவோர் பலர் இருக்கின் றனர். அவர்களிடத்தில் ஏராளமான பொருட்செல்வமிருக்கிறது. அவர்களாயினும் முன் வந்து நாம் குறிப்பிடும் வழிநின்று தேசபக்தியை வளர்க்க முன் வருதலாகாதோ?

தமிழ் நாட்டிலுள்ள டாக்டர் வரதராஜலு நாயுடு போன்ற உண்மைத் தேசபக்தர்கள் ஏழைகள் உதவியைக் கொண்டே 'தேச பக்த சமாஜ'த்தை ஏற்படுத்த முயலல் வேண்டும்.

இன்று இத்தலையங்கத்தை வாசிப்போர் 'தேசபக்த சமாஜ'த் தின் அவசியத்தை நோக்கி ஒல்லும்வகை முயற்சி செய்வாரென நம்புகிறோம்.

ஒரு நாட்டுக் கோட்டைச் செட்டியார் மனம் வைத்தால் நாளைக்கே 'தேசபக்த சமாஜம்' தோன்றிவிடும் என்பதிற் சந்தேகமில்லை.

இன்று காலை பாரத தேவியின் திருவடியைச் சிந்தித்துக் கொண்டே எழுதிய இத்தலையங்கத்தால் தமிழ்நாட்டில் ஒரு வகை உணர்ச்சி பிறக்குமென நம்புகிறோம்.

'தேசபக்தனை' வளர்க்க முன்வந்த யாம் 'தேசபக்த சமாஜ'த் துக்கும் கடமைப்பட்டு அடித்தொண்டு செய்ய முன்னிற்கின் றோம். வந்தேமாதரம்.'[20]

இத் தலையங்கத்தைப் படிப்போர், எழுத்தாளர் சோமலெயின் பின்வரும் கருத்துகளுக்கு உடன்படுவர் என்பது உறுதி:

ஓரளவு படித்தவர்களுக்கும் புரியும்படியும், படித்தபின் அவர்கள் உள்ளத்தில் தைக்கும்படியும் கனலைக் கக்கும் நடையில் அவர் எழுதினார்.

கருத்துக்களைத் தொகுத்து ஒரு கவர்ச்சியான தலைப்பிட்டு, அவற்றை வகைசெய்து பல உட்பிரிவுகள் ஏற்படுத்தி, ஒவ்வோர் உட்பிரிவையும் பின்பு விளக்கி எழுதுகின்ற அவரது முறை சிறப்பானது. சிறுசிறு சொற்றொடர்கள், அலசி விளக்கும் பாங்கு, அருந்தமிழ்ச் சொற்கள் இவற்றையும் திரு.வி.க. நடத்திய இதழ்களில் காணலாம்.[21]

இருமொழித் தலைப்பு : இருமொழித் தலைப்புப் பற்றிச் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் கூறுவது தேசபக்தனின் சாதனையை வெளிப்படுத்துவதால் அதனை இங்குக் காண்போம். "அந்நாளில், நாளிதழ்களில் வரும் செய்திகளுக்கான தலைப்புக்கள் ஆங்கிலத்தில் பொறிக்கப்படும். அதன்கீழ் தமிழிலும் மொழிபெயர்த்துப் போடப்படும். ஆம். ஒரு செய்திக்கான தலைப்பு இருமொழிகளில் தரப்படும். இந்த இருமொழித் தொல்லையை சுப்பிரமணிய பாரதியார் போன்ற நெஞ்சுரமிக்க தேசபக்தர்கள் வெறுத்துக் கூறியுள்ளனர்' என்று கூறும் ம.பொ.சி. பாரதியாரின் வெறுப்புணர்வையும் வெளிப்படுத்துகின்ற அப்பகுதி வருமாறு'... மேலும் அதே பத்திரிகையில் (சுதேசமித்திரன்) ஒவ்வொரு வியாசத்துக்கும் தமிழ் மகுடத்துக்கு மேலே இங்கிலீஷ் மகுடமொன்று சூட்டியிருக்கிறது. 'ருஷ்யாவின் நிலைமை' 'The Situation in Russia', 'தாய்ப் பாஷையின் மூலமாகக் கல்விபயிற்றல்', 'The Vernaculars as Medium of Instructions'. ஆஹா நான் மாற்றி எழுதுகிறேன். தமிழை முதலாவது போட்டு இங்கிலீஷைப் பின்னே போட்டேன். அந்தப் பத்திரிகையில் அப்படியில்லை. இங்கிலீஷை முன்னே போட்டுத் தமிழைக் கீழே போட்டிருக்கிறது. 'அமெரிக்க ஸ்திரி' பார்த்தாயா? என்னைத் தெரியாமலே என் கை முதலாவது தமிழ் வார்த்தை எழுதுகிறது. 'American Woman' 'அமெரிக்க ஸ்திரி' 'Our Matadhipathies' 'நமது மடாதிபதிகள்' என்று எழுதியிருக்கிறது. காமிதப் பஞ்சமான காலம்! என்ன அநாவசியம் பார்த்தீர்களா?"[23]

புரட்சி

இங்ஙனம் இருமொழித் தலைப்புப் பயன்படுத்தப்பட்ட அக்காலத்தில் திரு.வி.க. அம்முறையை மாற்றித் தமிழ் மொழியிலேயே தலைப்பை அமைத்து ஒரு மாற்றத்தை உண்டு பண்ணினார்; புரட்சி செய்தார். இதுபற்றி இவர் கூறுவது வருமாறு: 'அந்நாளில் நாட்டுமொழிப் பத்திரிகைகளில் அயல்மொழி நாற்றம் வீசும். அரசியல் குறியீடுகள் அந்நியத்தில் அப்படியே பொறிக்கப்படும். தேசபக்தன், பத்திரிகையுலகில் புரட்சிசெய்தான். எப்படிச் செய்தான்?

படிப்படியே செய்தான். புரட்சி நிகழ்ந்ததென்று பத்திரிகை உலகுக்கே தெரியாது. புரட்சிகளைத் தேசபக்தனில் காணலாம். தேசபக்தன், தமிழாக்கிய அரசியல் சொற்களும், சொற்றொடர்களும், குறியீடு களும் இப்பொழுது பத்திரிகைகளிலும், மேடைகளிலும், பிறவிடங் களிலும் ஏற்றமுற்று அரசுபுரிதல் வெள்ளிடைமலை.

தமிழ்நாட்டில் பல குறைபாடுகள் உண்டு. அவைகளில் ஒன்று பெருந் தலைவர்கள் தமிழ் தெரியாதென்று ஆங்கிலத்தில் நாவன்மை காட்டி வந்தமை. அதுபற்றித் தேசபக்தன் எழுப்பிய கிளர்ச்சி தலை வர்களைத் தமிழ்பேசச் செய்தது. இந்நாளில் தென்னாட்டு மகா நாடுகளின் நிகழ்ச்சி முறைகளும், காரியக்கூட்டங்களின் நிகழ்ச்சி முறைகளும் தாய்மொழியில் நடைபெற்று வருவது கண்கூடு. மேடைகளிற் பேசுதற் பொருட்டுத் தலைவர்கள் தேச பக்தனைப் படித்ததும், தமிழாய்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் தேசபக்தன் சந்தாதாரராயதும் ஈண்டுக் குறிக்கத்தக்கன. தேசபக்தன் தமிழரை அந்நிய மோகத்தினின்றும் விடுவித்தான் என்று சொல்வது மிகையாகாது.'[24]

அதிகார உலகம் : அதிகார உலகம்பற்றித் திரு.வி.க. சொற் களாலேயே காண்போம்: "அதிகார உலகின்மீதும் தேசபக்தன் கருத் துச் செலுத்தி வந்தான். தேசபக்தன் அதிகாரிகளின் நற்செயல் களைப் போற்ற விரைவன்; மற்றச் செயல்களை மறுக்க முனை வன்; அஞ்சா நெஞ்சுடன் முனைவன். அதனால் அதிகாரிகளின் தவறுதல்கள் தேசபக்தனில் வெளிவரலாயின. அக்கடிதங்கள் 'பக்த'னில் நிரம்பிவரும். யாண்டாயினும் தவறுதல் நடந்தால் 'தேசபக்தனுக்கு எழுதுவோம்' என்று சொல்வது பொதுவர் வாக்காயிற்று. அத்துறையில் தேசபக்தன் நிகழ்த்திய கிளர்ச்சி அதி கார உலகுக்கு இடியாயிற்று. 'தேசபக்தனில் என்ன வந்திருக் கிறது; என்ன வந்திருக்கிறது' என்று தெரிந்து கொள்ள அதிகாரி கள் அலைவார்கள்."[25]

வீரர் வழிபாடு : தேசபக்தன் இதழ் நாட்டுப்பற்றைப் பலவாறு வளர்த்து வந்தது.அவற்றுள் ஒன்று தேசியத் தலைவரிடத்தில் பக்தியை வாசகர்களிடத்தில் வளர்த்தமை. இதுபற்றித் திரு.வி.க. என்ன கூறுகிறார்? தலைவர்களிடத்துப் பக்தியை வளர்ப்பது, தேசத்தினிடத்துப் பக்தியை வளர்ப்பதாகும். தலைமையேற்று ஒரு தேசத்தை நடத்துவோர், அந்நிலையில் அவர் தேசமேயாவர்; தேசம் அவரேயாகும். தலைமையாவது தேசத்தின் உணர்வும் சக்தியும் திரண்டு தேங்குமிடம். அத்தலைமையிடத்தில் பக்தி பூண்பது

தேசத்தினிடத்துப் பக்தி பூண்பதாகும். தலைவரிடத்துச் செலுத்தும் பக்தி வீரர் வழிபாட்டின் பாலதாகும்.'[26] இம்முறையில் தேசபக்தன், தேசியத் தலைவர்களான பாலகங்காதர திலகர், பெசன்ட் அம்மை யார், காந்தி அடிகள் முதலியோரின் புகழ்களை ஓதி வழிபாடு செய்தே வந்தான்.

தொழிலாளர்

திரு.வி.க.வைச் சென்னைச் சூளைப் பட்டாளத்திலுள்ள வேங்கடேச குணாமிர்தவர்ஷணி சபையின் காரியதரிசியும் பின்னா ளில் சென்னைத்தொழிலாளர் சங்கத்தைத் தோற்றுவித்த தலைவர் களுள் ஒருவராகிய ஜி.செல்வபதி செட்டியார், தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் திரு.வி.க. தேசபக்தன் ஆசிரியரான போது மில் தொழிலாளர் குறைபாடுகளைத் தம் பத்திரிகையில் வெளியிட்டு வந்தார். பி.பி. வாடியா, திவான் பகதூர் கேசவப் பிள்ளை, இராமானுஜ நாயுடு ஆகியோரோடு சேர்ந்து 1918இல் சென்னைத் தொழிலாளர் சங்கத்தைத் தோற்றுவித்தார்.[27] இச்சங் கம் தென் கிழக்காசியாவிலேயே தொழிலாளர்களுக்கென அமைந்த முதல் சங்கமாகும்.

திரு.வி.க. வெளியூர்களுக்குக் காங்கிரஸ் பிரசாரத்திற்குச் சென்ற போதெல்லாம் தொழிற்சாலை உள்ள இடங்களில் தொழி லாளர் இயக்கத்தைப்பற்றிப் பேசி, ஆங்காங்கே தொழிற் சங்கங் கள் காணுமாறு வேண்டுதல் செய்வதை ஒரு விரதமாகக் கொள்ள லானார். அத்துடன் தாம் ஆசிரியப்பொறுப்பு வகித்த தேசபக்தன் இதழில் பின்வரும் கட்டுரைகள் உள்ளிட்ட பலவற்றை எழுதித் தொழிலாளர் சங்கம் உருவாகத் துணைநின்றார்: 1. தொழிலாளர் சங்கத்தின் அவசியம் 2. சென்னையுந் தொழிலாளரும் 3. தொழி லாளர் கூட்ட அமைப்பு 4. தொழிலாளரும் ஜனத்தலைவரும் 5. தொழிலாளர் இயக்கம் 6. முதலாளிகளும் தொழிலாளிகளும் 7. தொழிற்சாலைகள் அமைப்பு 8. அச்சுவேலை.[28]

இவ்வகையில் தம் பேச்சாலும் எழுத்தாலும் சென்னையிலும் வெளியூர்களிலும் பல தொழிற்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவைகளுள் குறிக்கத்தக்கன வருமாறு:

1. எம்.அண்ட் எஸ்.எம். தொழிலாளர் சங்கம்
2. டிராம்வே தொழிலாளர் சங்கம்
3. மின்சாரத் தொழிலாளர் சங்கம்

4. மண்ணெண்ணெய்த் தொழிலாளர் சங்கம்
5. அச்சுத் தொழிலாளர் சங்கம்
6. அலுமினியம் தொழிலாளர் சங்கம்
7. ஐரோப்பிய வீட்டுத் தொழிலாளர் சங்கம்
8. நாவிதர் சங்கம்
9. தோட்டிகள் சங்கம்
10. ரிக்ஷா ஓட்டிகள் சங்கம்
11. போலீஸார் சங்கம்
12. தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம் - நாகை
13. நெசவுத் தொழிலாளர் சங்கம் - கோவை
14. நெசவுத் தொழிலாளர் சங்கம் - மதுரை
15. சுதேசமித்திரன் தொழிலாளர் சங்கம்
16. பெரம்பூர் வொர்க்ஷாப் சங்கம்
17. மத்தியத் தொழிலாளர் சங்கம்[29]

இங்ஙனம் சென்னையிலும் தமிழ்நாட்டிலும் தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவிக்க முனைந்த தேசபக்தன் இதழுடன் அன்னி பெசன்டின் நியூ இந்தியா இதழையும் குறிப்பிடுகிறார் திரு.வி.க. தேசபக்தனில் வாரந்தோறும் 'தொழிலாளர் அநுபந்தம்' என்ற நான்கு பக்கம் கொண்ட இணைப்பு ஒனறு வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.[30]

அந்நாளில் திரு.வி.க.வுடன் கலந்தும், சங்கங்களில் ஈடுபட்டும் சேவைசெய்தோருள் குறிப்பிடத் தக்கவர்கள்: 'சக்கரைச் செட்டியார், இ.எல். ஐயர், என். தண்டபாணி பிள்ளை, ஹரிசர் வோத்தமராவ், இராஜகோபாலாச்சாரியார், ஆதி நாராயண செட்டியார், எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், வி.ஓ. சிதம்பரம் பிள்ளை, ஏ.எஸ். ராமுலு, எம்.ஸி. ராஜா, டாக்டர் நடேச முதலியார், கஸ்தூரி ரங்க ஐயங்கார், வி.பி. பக்கிரிசாமிப் பிள்ளை (நாகை), என்.எஸ், இராமசாமி ஐயங்கார் (கோவை), ஜார்ஜ் ஜோசப் (மதுரை) முதலியோர். தென்னிந்தியாவில் எழுந்த தொழில் கிளர்ச்சி காட்டுத் தீப்போல் நாடு முழுவதும் பரவலாயிற்று. பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி முதலிய இடங்களிலும் தொழிற் சங்கங்கள் காணப்பட்டன'[31] என்று தம் வரலாற்றில் குறிக்கிறார் தமிழ்த் தென்றலார்.

தலையங்கம்

நாளிதழ் ஒன்றில் அதன் ஆசிரியரால் எழுதப்படுவது தலை ங்கம் அல்லது ஆசிரியக்கட்டுரை என்று அழைக்கப்படும். இதழாசிரியர் ஒருவர், ஆழ்ந்த அறிவுள்ளவராகவும், உலகியல் அறிவு வாய்க்கப் பெற்றவராகவும், பரந்த கண்ணோட்டம் உடைய வராகவும் குறுகிய சாதி மத இன வேறுபாடு அற்றவராகவும், மக்கள் நலனையே தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளோராகவும், மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தெய்வப்பற்றும் உடையோராக வும் இருத்தல் அவசியம். இத்தகைய ஒருவர் உள்ளூர், வெளியூர், உலகச் செய்திகளை அன்றாடம் அறிந்துகொள்ள வேண்டும். அவற்றுள் அந்த நாளுக்கு எது தேவையோ அதைப்பற்றித் தெளிந்த அறிவுடனும் கடந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலம் ஆகிய முக்காலக் கண்ணோட்டத்துடனும் ஆராய்ந்தெழுத வேண்டும். தவறு செய்வோர் எவராயினும் அவரைக் கண்டித்துத் திருத்த வேண்டும். அறிவு மயக்கம் கொண்டிருப்போரைத் தெளிவுபடுத்த வேண்டும். அறியாமையில் உழல்பவருக்கு அறிவுகொளுத்த வேண்டும். இவை போன்ற பல நல்லியல்புகளைப் பெற்றவராக இதழாசிரியர் திகழ வேண்டும். அத்தகையோர் எழுதும் தலையங் கங்கள், தனி மனிதனுக்கும், நிறுவனங்களுக்கும், சமுதாயத்துக் கும், அரசியலார்க்கும், நாட்டுக்கும், உலகத்துக்கும் பயன் படுவனவாய் இருத்தல் வேண்டும்.

இம்முறையில் திரு.வி.க. தேசபக்தன் இதழில் தலையங்கம் எழுதி வந்தார். இதனைப் பற்றி இவரை அடுத்துத் தேசபக்தன் நாளிதழுக்கு ஆசிரியப் பொறுப்பேற்ற தேசபக்தர் வ.வே.சு. ஐயர் கூறுவது கவனிக்கத் தக்கது:

> ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசியர் ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபட்சமின்மையும், அவசியம் நேர்ந்த போது காட்டிய நிர்த்தாக்ஷணியமும் பத்திராசிரியத் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின.[32]

தேசபக்தன் வழிவந்த நூல்கள்

தமிழ்த்தென்றல் திரு.வி.க. இப்பத்திரிகையின் ஆசிரியராவதற்கு முன்பே, தம் ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை சரித்திரம், திருமந்திரப்

பதிப்பு, பெரியபுராணக் குறிப்புரையும் வசனமும், அருணாசல புராணச் சேர்க்கைகள், குசேலோபாக்கியானக் குறிப்புரை ஆகியவற்றை வெளியிட்டிருந்தார். தேசபக்தன் இதழாசிரியர் ஆன பின்பு இதன் 1918ஆம் ஆண்டு மலரில் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' எனும் கட்டுரை எழுதினார். அதை 1921இல் ஒரு சிறிய நூலாகச் சாது அச்சுக் கூடத்தின்வழி வெளியிட்டார். 51 பக்கங்கள் கொண்ட அதனை விரிவாக எழுதி ஏறத்தாழ 500 பக்க நூலாக வெளியிட்டார். அடுத்து தேசபக்தன், 1919ஆம் ஆண்டு மலரில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் திருநாவுக் கரசரின் பாடலடியைத் தலைப்பாக வைத்துக் கட்டுரை ஒன்றை எழுதினார். அதனைப் பின்னர் 1921இல் சாது அச்சுக்கூடத்தின் வழி வெளியிட்டார்.[33]

ஆண்டு மலர்களில் திரு.வி.க. தாம் எழுதிய கட்டுரைகளை நூல்களாக வெளியிட்டதோடு அமையவில்லை. தேசபக்தனில் எழுதிய கட்டுரைகளில் சிலவற்றைத் திரட்டிப் புத்தக வடிவ மாக்கி, அதைத் தமிழ் நாட்டில் உலவச் செய்ய வேண்டுமென்று சில நண்பர்கள் இவரை நேரில் கேட்டுக் கொண்டார்கள்; சிலர் இவருக்குக் கடிதம் விடுத்தனர்.[34] நண்பர்கள் விரும்பியவாறே இவர், கட்டுரைகள் சிலவற்றைத் திரட்டிப் பகுதி பகுதியாக வெளி யிட எண்ணினார்.[35] அதன் ஒரு பகுதியைத் 'தேசபக்ததாமிர்தம்' என்னும் பெயரில் சமயம், கல்வி, தாழ்ந்த வகுப்பார் –பரோபகாரம் - - ஒழுக்கம், பெண்மக்கள், தொழிலாளர் என்னும் ஐந்து உட்தலைப் புகளுள் 58 கட்டுரைகளை 1.5.1919இல் பிரிட்டிஷ் இந்தியா அச்சுக் கூடத்தின் வழி வெளியிட்டார். நூல் இறுதியில் அரசியற் பாக்கள் என்னும் தலைப்பில் பாரத மக்களைப் பற்றிய பாடல் களும், திலகர், காந்தியடிகள் பற்றிய பாடல்களும் சேர்க்கப் பட்டுள்ளன.[36] (கிரௌன் அளவில் 256 பக்கம் கொண்ட இந்நூல் விலை ரூபா ஒன்று)

இன்றைய நிலையில் தனியார் நிறுவனங்கள் பணப் பற்றாக் குறை ஏற்படும் சமயங்களில் பொதுமக்களைத் தங்கள் நிறுவனத் தில் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்வதைக் காணுகின்றோம். அவ்வகையில் தேசபக்தன் இதழை நடத்தி வந்தோரும் பணமுடை யால் பொதுமக்களைத் தங்கள் பத்திரிகை நிறுவனத்தில் பங்கு தாரர்களாக வருமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இது தேசபக்தன் நாளிதழ்களில் அடுத்தடுத்துத் தனியே கட்டச் செய்தி யாக வெளிவந்தது வருமாறு:[37]

தேசாபிமானிகளுக்கு ஒரு விண்ணப்பம்

இப்பொழுது 'தேசபக்தன்' செய்யும் வேலைகளால் நீங்கள் சந்தோஷமடைகின்றீர்களா? அப்படியானால் நீங்கள் என்ன உதவி செய்தீர்கள்? அதற்கு இதோ இரண்டு வழிகள் இருக் கின்றன:

1. தாங்களும் தமது நண்பர்களும் சந்தாரர்களாய்ச் சேருங்கள். சந்தா மாதம் ஒன்றுக்கு உள்ளூருக்கு ரூபா 1.4.0; வெளியூருக்கு ரூ 1.8.0. ஆகும்.

2. தேசபக்தன் லிமிடெட்டில் பங்குகள் எடுங்கள். ஒரு பங்கின் விலை ரூபா 10.00 அதற்கு பிரவேசக் கட்டணம் அணா 4. பங்கு ஒன்றுக்கு ரூபா 2, பங்கு எடுக்கும் மனு பாரத்துடன் அனுப்ப வேண்டும். பின்பு கம்பெனியார் தெரிவித்த பிறகு ரூபா.2 செலுத்தவேண்டும். பங்கு ஒன்றுக்கு ஒரே தடவை யில் ரூபா. 4.4 அனுப்பினால் தங்களுக்கும் எமக்கும் யாதொரு கஷ்டமும் ஏற்படாது. பங்கு ஒன்றுக்கு பாக்கி தொகை ரூபா 6ம் மூன்று தவணையாகத் தவணை ஒன்றுக்கு ரூபா 2 ஆக கம்பெனியார் கோரும்போது செலுத்த வேண்டியது.

தேசபக்தன் நமது தாய் நாட்டிற்குச் செய்கிற வேலைகளால் சந்தோஷமடைகிறீர்களானால் அதனைச் செய்கையில் காட்டு வதற்கு இதுவே சமயம். நீங்கள் முந்துவீர்களாக !

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள் மானேஜர், தேசபக்தன் லிமிடெட், இராயப்பேட்டை, சென்னை.

இங்ஙனம் தேசபக்தன் செல்வாக்கிலும், தமிழ் மக்கள் ஆதர விலும் குறைவின்றி வளர்ந்து வந்தது. இவ்விதழின் ஆசிரியக் கூட்டம் இவரை இன்பூட்டியே வந்தது; காரியக் கூடம் கவலை விளைத்தது. பின்னதன் செயல்கள் திரு.வி.க.வின் இயல்புக்கு மாறுபட்டிருந்தன. அதனால் 22.7.1920இல் தேசபக்தன் தலை யங்கத்தில் தம் நிலையைத் தமிழுலகுக்கு விளக்கி இதழாசிரியப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார். இவருக்குப்பின் அதன் ஆசிரியராகச் சிறுகதை முன்னோடி வ.வே. சுப்பிரமணிய ஐயர் 31.7.1920 முதல் 9 மாதங்கள் தொண்டாற்றினார். பின்னர் தேச பக்தன் என்னும் பெயரில் இலங்கை நடேச ஐயர் என்பவர் ஓரிதழை வெளியிட்டார். மீண்டும் தேசபக்தன் வார இதழாகச் சிலகாலம் அதன் பழைய நேயர் சிதம்பரம் நா. தண்டபாணிப் பிள்ளையால் நடத்தப்பட்டது.[38]

திரு.வி.க.வின் 2½ ஆண்டுக்கால இதழ் ஆசிரியப்பணி பற்றி, இவரிடம் தேசபக்தனிலும், நவசக்தியிலும் துணை ஆசிரிய ராகப் பணியாற்றியவரும், 'ஜோதி' எனும் மாத இதழ் ஆசிரியரும் கார்ல் மார்க்ஸ் போன்ற மேனாட்டறிஞர்களின் வாழ்க்கைகளையும் கருத்துகளையும் நூல்களாக வெளியிட்டுத் தமிழுக்கு அறிமுகம் செய்தவரும் ஆகிய எழுத்தாளர் வெ.சாமிநாத சர்மா கூறும் கருத்து கள் உளம்கொளத்தக்கவை:

> முதலியாரை நான் முதன் முதலாகப் பார்த்தது 1917ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள், நாள் கிழமை எதுவும் நினைவில்லை. அவரைப் பார்த்தது எந்த நாளோ அந்த நாளே நான் எழுத்தாள னாகப் பிறந்த நாள். அதற்கு முந்தி நான் எழுதியிருக்கிறேன்; ஓரிரண்டு நூல்களும் வெளியிட்டுயிருக்கின்றேன். ஆனால் எழுதுவதையே என் வாழ்நாள் பணியாக மேற்கொண்டது அன் றைய தினத்திலிருந்து தான். எனவே அந்த முதல் சந்திப்பு, என் வாழ்க்கையிலே ஒரு திருப்பத்தைக் காட்டிக்கொடுத்தது.[39]

> முதலியார், தேசபக்தன் பத்திரிகையின் ஆசிரியப்பதவி ஏற்றுக் கொண்ட காலத்தில் தமிழ்நாட்டின் அரசியல் துறை ஆங்கில மயமாக இருந்தது. அதனைத் தமிழ்மயமாக்கினார்; தமது பேச்சாலும் எழுத்தாலும் எந்த ஒரு நுண்ணிய கருத்தினையும் தமிழில் தெளிவாகக் கூறமுடியும் என்று நிரூபித்தார். தமிழகத் தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டு பண்ணினார்; தமிழருக்குத் தனி வாழ்வு உண்டு என்பதை உணர்த்தினார். திலகரின் சங்க நாதத்திற்குத் தமிழ்நாட்டில் எதிரொலி கொடுத்தவர் முதலியார். காந்தியடிகளின் அஹிம்சா இயக்கத்திற்குத் தமிழ்நாட்டில் உரமூட்டியவர் முதலியார்.[40]

நவசக்தி

நவசக்தி வார இதழின் தோற்றம்

தேசபக்தன் இதழின் நிர்வாகக் குழுவின் செயல்முறை திரு.வி.க.வின் இயல்புக்கு மாறுபட்டிருந்தது. இதைக் கண்ட திரு.வி.க அதிலிருந்து 22.7.1920இல் விலகினார் என்பதை முன்னரே கண்டோம். இச்செய்தி தென்னாடெங்கும் பரவியது. புதிய நாளிதழ் ஒன்றைத் தொடங்கவேண்டும் என்று தந்திகளும் கடிதங்களும் இவருக்கு வந்து குவிந்தன. நேரிலும் வந்து சிலர் இவருக்கு ஊக்கமூட்டினர். தேவகோட்டை நண்பர் சிலர் ஒரு தினப் பதிப்புக் கென்று லிமிடெட் கம்பெனி காண விழைந்தனர். நாகை பக்கிரிசாமிப் பிள்ளை பிராமணர் அல்லாதார் நலனுக்கெனில் ஒரு தினப்பதிப்புத் தம் பொறுப்பில் தொடங்கச் சித்தமாயிருப்பதை

அறிவித்தார். காரைக்குடித் தோழர் சிலர், மகளிர் கல்லூரி ஒன்றைத் தொடங்கி, அதைத் திரு.வி.க. பொறுப்பில்விட விரும்பினர். இதற்கு மட்டும் திரு.வி.க. மறுப்புத் தெரிவிக்கவில்லை.

இராமாஞ்சலு நாயுடு, வேதம் வரதராஜ நாயகர், நடேச நாயகர், நடேச முதலியார் உள்ளிட்ட தோழர் சிலர், திரு.வி.க. காரைக் குடிக்குச் சென்று விடுவாரோ என்று ஐயம் கொண்டு, இவரைச் சந்தித்துப் பேசினர். எக்காரணம் கொண்டும் சென்னையை விட்டுத் திரு.வி.க. செல்லக்கூடாது என்றும், சென்றால் முளைவிட்டுள்ள தொழிலாளர் இயக்கம் பட்டுப்போகும் என்றும் ஒரு மாதம் ஓய்வுபெறுதல் நலம் என்றும் கூறிச்சென்றனர்.

சென்ற அவர்கள், சென்னைத் தொழிலாளர் சங்கச் சார்புக் கூட்டத்தில், திரு.வி.க.வின் நிலைமையை எடுத்துரைத்து வயதான தொழிலாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரூபா கொடுத்தல் சிறப்பு என்றும், கட்டாயம்இல்லை என்றும் விருப்பம் உள்ளோரே உதவி செய்ய முன் வரலாம் என்றும் விண்ணப்பம் செய்தனர். அதனால் திரண்ட ஐயாயிரம் ரூபாய் முடிப்பாகத் திரு.வி.க.விடம் கொடுக்கப்பட்டது. வேறு சில நண்பர்கள் சுமார் இரண்டாயிரம் ரூபாயைத் திரட்டித் திரு.வி.க.விடம் அனுப்பினர்.

இரு தொகைகளையும் கொண்டு ஓர் அச்சுக் கூடம் வாங்கப்பட்டது; வார இதழ் ஒன்று தொடங்கப்பட்டது. அச்சகம் 'சாது அச்சுக்கூடம்' எனப் பெயர் இடப்பட்டது. வார இதழுக்கு, 'நவசக்தி' என்று பெயரிட்டார் திரு.வி.க. அப்பொழுது அச்சுச் சட்டம் ஒரு சிறு சீர்திருத்தம் பெற்றதால், ஈடுகாணம் (ஜாமீன்) கேட்கப் படவில்லை. அச்சகப் பெயரைக் கேட்ட சிலர் மருண்டு, 'முதலியார் இனிச் சாது ஆவர் போலும்' என எண்ணினர். 'சாது முதலியார்' என அழைத்தனர். இதழ்களிலும் எழுதினர்.[41] 22.10.1920 முதல் 10 ஆண்டுகளாக வாரந்தோறும் தவறாமல் நவசக்தி இதழ் வெளி வந்தது.

மும்முறைப் பதிப்பு

1922ஆம் ஆண்டில் கயையில் கூடிய காங்கிரஸில் சுயராஜ்யக் கட்சி தோன்றியது. அது மூல அமைப்பாகிய காங்கிரஸையே எரித்துவிடுமென்று சிலர் ஐயம் கொண்டனர். அவருள் சிலர் கொண்ட கூட்டம் தென்னாட்டிலும் கூடியது. தனக்கென ஒரு தமிழ்த் தினப்பதிப்புத் தேவை என்று கருதியது. அதே சமயத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூட்டம் மதுரையில் நடந்தது. அதில்

காங்கிரஸ் சார்பில் ஒரு தமிழ்த் தினப்பதிப்பு வெளியிடுவதென் றும் அதற்கென்று பதினாயிரம் ரூபாய் அளிப்பதென்றும் ஒரு தீர்மானம் நிறைவேறியது. அத்தொகையைக் கொண்டு 'நவசக்தி' யைத் தினப்பதிப்பாக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. ஆனால் அதற்குத் திரு.வி.க. இணங்கவில்லை. மதுரையிலிருந்து ஈரோடு திரும்பிய இராமசாமி நாயக்கர் சென்னை வந்தார். அவர் தினப் பதிப்பைப் பற்றித் திரு.வி.க.விடம் பேசித் தாம் ஒரு தொகை யைத் தருவதாக உறுதி கூறினார். அத்தொகை தினப் பதிப்புக்குப் போதாதென்றும் தற்போது மும்முறை தொடங்கலாமென்றும் பின்னே தினப்பதிப்பின் மீது சிந்தை செலுத்தலாமென்றும் திரு. வி.க.தம்கருத்தை வெளியிட்டார். நாயக்கரும் ஈரோடு திரும்பிய தும் குறிப்பிட்ட தொகையை அனுப்பினார். நவசக்தியில் நாயக்க ரும் தாமும் கலந்து பேசிக்கண்ட முடிவை விளக்கி அவர் அனுப் பிய தொகையையும் குறிப்பிட்டார் திரு.வி.க. நவசக்தி வாரப் பதிப்புடன் மும்முறைப் பதிப்பாகவும் (20.10.1923) வெளி வந்தது. இடையே நாயக்கர் வைக்கம் சென்று தீண்டாமை ஒழிப்பில் கலந்துகொண்டு சிறைசென்றார். நவசக்தி மும்முறைப் பதிப்பு கலக்கம் கண்டது. மும்முறை, வாரத்தை விழுங்கும் நிலைமை ஏற்பட்டது. வாரப்பதிப்பைப் பாழாக்கத் திரு.வி.க.வின் மனம் எழாமல் அதைக் காப்பதற்காக மும்முறைப்பதிப்பை நிறுத்தி விட்டார்.[42] (31.5.1924)

நிறுத்தமும் பதிப்பு மாற்றமும்

1930ஆம் ஆண்டில் காங்கிரஸ் சார்பில் உப்புச் சத்தியாக் கிரகம் தொடங்கப்பட்டது. அப்போது திரு.வி.க. காங்கிரஸ் உறுப் பினராக இல்லை. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் கே. பாஷ்யமும் திரு.வி.க.வைக் கண்டு சத்தியாக்கிரக அறிக்கை யிலே கையொப்பம் வாங்கிச் சென்றனர். இவர் கையொப்பம் இட்டதால், சாது அச்சுக்கூடத்துக்கு ஈடுகாணம் செலுத்தவேண்டி வரும் என்று அறிந்தார் திரு.வி.க. அதனால் தன்பெயரில் இருந்த அச்சக உரிமையைத் தமையனார் உலகநாத முதலியாருக்கு மாற்றிவிட்டார். அந்நேரத்தில் அவசரச் சட்டமும் பிறந்தது. வேறு ஒரு சிறிய அச்சகம் அமைக்க மாஜிஸ்டிரேட்டுக்கு விண்ணப்பித் தார் திரு.வி.க. அதற்கு ஈடுகாணம் கேட்கப்பட்டது. எனவே ஈடு காணம் செலுத்தி, நவசக்தியை நடத்திப் பின்னர் இவ்விதழுக்கு நிரந்தர கேடு விளைக்கத் திரு.வி.க. விரும்பவில்லை. கால நிலை யும் அவசரச் சட்ட வேகமும் நவசக்தியை நிறுத்தத் தூண்டின.

பத்தாண்டு இடையீடின்றி ஒலித்துவந்த நவசக்தியின் சிலம்பு ஓய்வுபெற்றது. அவசரச் சட்டத்தின் ஆறுமாத காலம் முற்றுப் பெற்றதும் நவசக்தி இதழ் மீண்டும் வெளிவந்தது.[43]

இவ்விதழ் வாரப் பதிப்பிலிருந்து திங்கள் (மாதம்) பதிப்பாக மாறியது குறித்துத் திரு.வி.க. தெரிவிப்பது வருமாறு:

திங்கள் வெளியீடு

'முன்னர்க் குறிப்பிட்டவாறு இத்திங்கள் முதல் 'நவசக்தி' திங்கள் பதிப்பாக வெளிவருவாள் என்பதை நேயர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காலதேச வர்த்தமான நிலையும், 'நவசக்தி' நிருவாக நிலையும், எனது உடல் நிலையும், இன்ன பிறவும் ஒன்றுடன் ஒன்று துணைநின்று, 'நவசக்தி'யை மாதப் பதிப்பாக்கின. இது பற்றிப் பன்முறை 'நவசக்தி'யில் எழுதியுள்ளேன்.

வாரப்பதிப்பு, மாதப்பதிப்பாக மாறியதைக் குறித்து நேயர்கள் வருந்த வேண்டுவதில்லை. திங்கள் வெளியீட்டு வாயிலாக நாட்டுக்கு இன்றியமையாத நற்றொண்டுகள் பல செய்தல் கூடும் என்னும் எண்ணம் பன்னெடுநாள் என் கருத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது. தக்க வாய்ப்பு இப்பொழுது நேர்ந்தமை குறித்து மகிழ்வெய்துகிறேன்.

இப்பொழுது நாட்டிற்கு வேண்டற்பாலது உரிமையுணர்வு. அவ்வுணர்வு, சமரசம், சகோதர நேயம், இயற்கை வாழ்வு, காவிய ஓவியங்களில் கருத்து, தாய்மொழிப்பற்று, பிறர்க்கின்னா செய்யாமை முதலியவற்றினின்றும் அரும்புதல் சாலச் சிறப்புடையதாகும். இவைகளை ஓம்புதற்குத் திங்கள் வெளியீடு மிகச் சிறந்த கருவி என்பதை விளக்க வேண்டுவதில்லை.

தினப்பதிப்பு 'தேசபக்தன்' வாயிலாகவும், வாரப்பதிப்பு 'நவசக்தி' வாயிலாகவும் செய்து வந்த சேவையைப் பார்க்கினும் 'நவசக்தி' மாதப்பதிப்பு வாயிலாகச் சிறந்த சேவை செய்யலாமென்று எண்ணுகிறேன். அவ்வெண்ணம் ஈடேறுதற்கு மெய்யன்பர்கள் கூட்டுறவு வேண்டற்பாலது. அதனை ஆண்டவன் அருள் செய்வானாக.'[44]

நவசக்தி சிலம்பு 13, பரல் 1 ஆங்கீரச ஆண்டு கார்த்திகை மாத இதழின் 'இடியேறு' பகுதியில் 13ஆம் ஆண்டு என்று தலைப்பிட்டுத் திரு.வி.க. கூறும் கருத்து அவருடைய உள்ளத்தைக் காட்டுவதாம். 'நவசக்தி' தனது பன்னிரண்டாம் ஆண்டைக் கடந்து

பதின்மூன்றாம் ஆண்டை எய்தியிருக்கிறாள். கடந்த பத்தாண்டு களாக 'நவசக்தி' வாரந்தோறும் தவறாது வெளிப்போந்து உலாவிய திருக்கோலப் பெற்றியை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். பதினோராம் ஆண்டில் அரசாங்கத்தார் ஈடுகாணங் கேட்ட நாள் முதல் 'நவசக்தி' ஏறக்குறைய ஆறுதிங்கள் வெளிவராது நின்றது நேயர்கட்குத் தெரியும். அவ்வாறு திங்கள் நிறுத்தத்தால் 'நவசக்தி' நிலையத்துக்கு நேர்ந்த கட்டமும் நட்டமும் 'நவசக்தி' வாழ்வையே குலைத்துவிட்டன என்று கூறல் மிகையாகாது. 'எல்லாம் ஆண்ட வன் செயல்' என்று நெஞ்சில் நிறைவு கொள்வது எமது வழக்கம். இப்பொழுது 'நவசக்தி' திங்கள் வெளியீடாக மாறியது பற்றி நாம் சிறிதுங் கவல்கின்றேமில்லை. சந்தாதாரர்களிலும் பலர் மனங் கவலாதிருப்பது 'நவசக்தி'யின் அதிர்ஷ்டமேயாகும். திங்கள் வெளியீடு இனிச் செய்யப்போகும் ஆக்க வேலைகள், நாட்டிற்கு இன்றியமையாதன என்பது நாளடைவில் விளங்கும். அவ்வாக்கத் துக்கு ஊக்கமூட்ட வேண்டிய பொறுப்பு, சந்தாதாரர்களுடைய தென்று சொல்ல வேண்டுவதில்லை. ஏழை 'நவசக்தி'க்கு ஆதரவு நல்குமாறு பொதுவாகத் தமிழ் மக்களையுஞ் சிறப்பாகச் சந்தா தாரர்களையுங் கேட்டுக் கொள்கிறோம்.'[45]

நவசக்தி 13ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் வாரப்பதிப் பாகும் சிந்தனையும் தேசபக்தர்களின் நிலையையும் பெரியபுராணக் குறிப்புரை முயற்சியும் பற்றிச் சிலம்பு 13இல் 'இடியேறு' பகுதி யில் 'நவசக்தி'யின் நிலை என்னும் தலைப்பின்கீழ் எழுதியுள்ள செய்திகள் அறியற்பாலன... 'நவசக்தி'பத்து வயது வரை பிறை என வளர்ந்துவந்தாள். 'நவசக்தி'யின் பதினோராம் ஆண்டிலும், பன்னிரண்டாம் ஆண்டிலும் குழப்பம் ஏற்பட்டது. அக்குழப்பம் இன்னும் நீங்கவில்லை என்றே கூறலாம். இப்பொழுது பழையபடி 'நவசக்தி'யை வாரப்பதிப்பாக்குமாறு நண்பர் சிலர் முடங்கல் தீட்டியுள்ளனர்.

'நவசக்தி'யின் நலன் கருதி உழைத்துவந்த தேசபக்தர் பலர் சிறைபுக நேர்ந்த காரணத்தால் அவரவர் தத்தம் கடமைகளை நேரிய முறையில் ஆற்ற இயலாமை குறித்து வருந்திக் கொண் டிருக்கிறார். அவர்களில் சிலர் ஏஜண்டாக இருந்தவர். அவர வரிடம் சிக்குண்டு தேங்கிக் கிடக்கும் தொகையில் ஒரு பகுதி வரினும் 'நவசக்தி'யைப் பழையபடி வாரப் பதிப்பாக நடத்தல் கூடும். 'நவசக்தி'யின் நலன் கருதி மனமார உழைத்து வந்த அவ்வன்பர்கள் நிலை செம்மையுறும் வரை அவர்களை நெருக்கி

வலியுறுத்த மனம் எழவில்லை. அவர்கள் அனைவரும் சிறந்த தேச பக்தர் என்பதை யான் அறிவேன்.

'நவசக்தி' நின்றிருந்த காலத்தில், பொழுதுபோக்கின் பொருட்டுப் பெரிய புராணத்துக்கு அரும்பத விசேடக்குறிப்புரை வரையும் முயற்சியில் தலைப்படலானேன். அவ்வுரையோடு கூடிய பெரிய புராணம் மாதச் சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. பெரிய புராணவேலை இன்னும் இரண்டொரு திங்களில் முற்றுப் பெறும். இவ்வேலை முற்றுப் பெற்றதும் 'நவசக்தி'யைப் பழைய படி நடாத்த முயலுதற்கு வாய்ப்பு ஏற்படலாமென்று கருதுகிறேன். பிற, அடுத்த 'நவசக்தி' பரலில் விளக்கப்படும்.'[46]

நவசக்தி 14ஆம் ஆண்டின் இடையில் 'இடியேறு' பகுதியில் "எனது நிலையும் நவசக்தியும்" எனும் தலைப்பில் இதழை நிறுத்துவதற்கான சூழ்நிலையைப் பின்வருமாறு விவரிக்கின்றார்:

> ...... பெரியபுராணவேலை ஏறக்குறைய முற்றுப்பெற்று வருகிறது. இச்சமயத்தில் - 'நவசக்தி'யைப் பழையபடி நடாத்த எண்ணிக் கொண்டிருந்த வேளையில் - எனது உடலின் மெலிவும் நலிவும் என்னைத் திடீரெனப் படுக்கையில் கிடத்திவிட்டன.
>
> ஏறக்குறைய ஐந்தாண்டுகளாக எனது உடல் நலன் குலைந்து கொண்டே வந்தது நண்பர்கட்குத் தெரியும். 'பெருங் கூட்டங்களில் பேசுவதை முற்றிலும் நிறுத்திக் கொள்ள வேண்டும்' என்று மருத்துவ நிபுணர்கள் கூறினார்கள். அவர்கள் கட்டளைப் படி பிரசாரத்தொண்டை நிறுத்திக்கொள்ள யான் முயன்றதுண்டு. அம்முயற்சிக்கு, அன்பர் திருக்கூட்டங்களால் - பெரிதும் சமயச் சபைகளால் - இடையூறு நிகழ்ந்தே வந்தது. படுக்கையிலுள்ள இவ்வேளையிலும் அழைப்புக் கடிதங்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன.
>
> இப்பொழுது யான் மானத உலகில் வாழும் நிலையில் இருக்கிறேன். உடல்நலனுற இன்னுஞ் சில காலமாகும். 'பின்னரும் சிலகாலம் ஓய்வுபெற்று அமைதியில் இருப்பதே நல்லது' என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.
>
> இந்நிலையில் 'நவசக்தி'யைப் பழையபடி தொடங்கி நடாத்த முனைதல் நலமா என்னுஞ் சிந்தனை தோன்றியிருக்கிறது. 'நவசக்தி'யின் தற்கால நடைமுறையும் எனக்குப்பிடிக்கவில்லை. தமிழ்நாட்டைப் புதியமுறையில் தட்டி எழுப்பவேண்டுமென்றே எனது உள்ளங் கிளர்ந்தெழுகிறது. அவ்வுள்ளக் கிளர்ச்சிக்கு ஏற்ற உடல்வளந் தேவை. 'உடல் வளமுறும்; சேவை செய்யலாம்'

என்னும் நம்பிக்கை மட்டும் இன்னும் என்னை விட்டகல வில்லை. சில காலம் அமைதி மிகுந்த ஓரிடத்தில் தங்கிக் காடு மலைகளுடன் உறவு கொண்டால், எனது உடல்நிலை செம்மை யுறும் என்னும் உறுதி எனக்கு உண்டு...'

'நவசக்தி'யின் எதிர்கால நிலையைப்பற்றி இப்பொழுது ஒன் றுஞ் சொல்வதற்கில்லை. இரண்டொரு மாதம் 'நவசக்தி' வெளி யீட்டை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பின்னை நிலைமையை யொட்டி, எவ்வழியிலாதல் ஒருவித முடிவுசெய்யத் துணிவு கொண் டுள்ளேன். சந்தா நேயர்கள் மன்னிப்பார்களாக'.[47]

மீண்டும் வாரப்பதிப்பு

1934ஆம் ஆண்டில் வடார்க்காடு ஜில்லாவில் காவேரிப் பாக்க வட்டத்தில் ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸுக்குள்ளாகவே ஓர் அநியாயம் நடந்தது. அஃது எப்படியோ திரு.வி.க.வை ஈர்த்துத் தேர்தலில் புகுத்தியது. அவ்வேளையில் பத்திரிகை உலகம் புரிந்த திருவிளையாடலால் 'நவசக்தி' வாரவெளியீட்டைக் கொண்டுவர திரு.வி.க.வை உந்தியது. அப்போது வெளிவந்த 'நவசக்தி' வாரப் பதிப்புப் பணியில் காங்கிரஸ் மந்திரி சபை அமைந்த சமயத்தில் நல்ல தொண்டு செய்தது என்கிறார் திரு.வி.க. 1939ஆம் ஆண்டு ஐரோப்பாவில் எழுந்த யுத்தம் உலகெங்கும் முழங்கும் குறி தோன் றியது. பிரஸ் அட்வைஸர் நியமனமும், பத்திரிகாசிரியன்மாரைப் பார்க்க மாட்சிமைதங்கிய கவர்னர் விரும்புகிறார் என அழைப்புக் களும் விதவிதமான சட்டங்களும், காயித நெருக்கும் இன்ன பிறவும் பத்திரிகை உலகைப் பலவழியிலும் அலைக்கும் என்பது திரு.வி.க.வுக்கு நன்கு விளங்கியது. மேலும் இவருக்குத் தினப் பதிப்பு இரண்டொன்று தவிர மற்றப் பத்திரிகைகளை நிறுத்தி விடுவது நல்லதென்றே தோன்றியது.

நவசக்தியைப் பற்றித் திரு.வி.க. பலபல எண்ணினார். நவ சக்தியில் இசைக்கட்டுரை எழுதிவந்த இராதாமணி அம்மையார் விருப்பப்படி அவரும் சக்திதாஸ் சுப்பிரமணியமும் ஒருமித்து நடத்தும் முறையில் 1941 ஜனவரியில் அவர்களிடம் ஒப்புவிக்கப் பட்டது. 1944 வரை இருவரும் அதனை அன்புடன் வளர்த்து வந்தனர். பின்னர் நிறுத்தப்பட்டு விட்டது.[48]

துணை ஆசிரியர்

முதலில் 'நவசக்தி' துணை ஆசிரியராக அமைந்தவர் வேங்கட கிருஷ்ண முதலியார். பின்னே தேசபக்தனினின்றும் சாமிநாத சர்மா

நண்ணினார். இவ்விதழ் வாரப்பதிப்புடன் மும்முறைப் பதிப்பாகவும் (20.10.1923) வெளிவந்த சமயத்தில் ரா. கிருஷ்ணமூர்த்தியும், கே. சுப்பிரமணியமும் ஆசிரியக்கூட்டத்தில் சேர்ந்தனர். மீண்டும் நவசக்தி வாரப்பதிப்பானபோது (1934) 'நவசக்தி' ஆசிரியக் கூடத்தில் சக்திதாஸ் சுப்பிரமணியமும் நேமம் கிருஷ்ணசாமி முதலியாரும் சேர்ந்தனர். முதலியார் மீண்டும் பள்ளிக்குச்செல்ல விலகினர். இராமநாதனும் அரங்கசாமியும் வந்தனர். இளைஞரின் தொண்டும் போக்கும் திரு.வி.க.வுக்கு உள்ள நிறைவூட்டியது. இராமநாதன் சமதர்ம தொண்டுக்கென்று இலங்கை நோக்கினர். திரு.வி.க. 1941இல் இராதாமணி, சுப்பிரமணியம் இருவரிடமும் ஒப்படைத்த பின்னர் கே. இராமநாதனும் நவசக்தியை நண்ணினார்.[49]

நவசக்தியின் குறிக்கோள்

திரு.வி.க. தேசபக்தனை விட்டு விலகிச் (22.7.1920) சரியாக மூன்று மாதத்திற்குப் பிறகு (22.10.1920) நவசக்தியைத் தொடங்கினார். ஆண்டைச் சிலம்பாகவும், வாரத்தைப் பரலாகவும் கொண்டு நவசக்தியை வெளியிடலானார். இதன் முதல் சிலம்பு முதல் பரலில் நவசக்தியின் குறிக்கோள்களை எடுத்துரைக்கின்ற பகுதி வருமாறு:

நவசக்தி என்பதற்குச் சாத்திரம் படித்தவர்கள் ஒன்பது சக்தி என்று பொருள் கூறுவார்கள். அவ்வொன்பது சக்திமார்களும் ஒன்பதுவழியாக உலகத்தில் தொழில் புரிந்து வருவதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவ்வழியே நின்று நமது நவசக்தியும் தமிழ் நாட்டில் தொண்டு செய்து வருவாள் என்று உறுதி கூறுகிறோம். அவ்வொன்பது வழிகள் வருமாறு:

1. மக்கள் சுதந்திரத்துக்கு அடிப்படையாக உள்ளது ஜன நாயக முறையாதலால், அதை நாடி உழைத்தல்.
2. ஜனநாயக முறைக்கு அடிகோல வேண்டுவது தொழிலாளர் இயக்கமாதலால், அவ்வியக்கத்தை வளர்க்க முயலல்.
3. தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தவும், அவர்கள் குறைகளை நிவர்த்திக்கவும், அவர்கள்வழி ஆட்சிமுறையைத் திருப்பவும், அவர்கட்கெனத் தனியாக உழைக்கவும் தொழிற்கட்சியை வகுத்தல்.
4. இந்தியாவில் விவசாயம் கைத்தொழில் முதலியவற்றை ஓம்பலும், விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்க முயலலும், தொழிற்சாலைகளைப் பெருக்குதலும்.

5. பெண்மக்கள் நலத்துக்குப் பாடுபடுதல்.

6. தமிழ் மொழியையும், தமிழ் நாட்டுப் பழைய வழக்க ஒழுக்கங்கள் முதலியவற்றையும் செப்பஞ் செய்தல்.

7. தமிழ்நாட்டில் தோன்றியுள்ள சாதிப்பகை, வகுப்புத் துவேஷம் முதலியவற்றை ஒழித்துச் சகோதர நேயத்தை வளர்த்தல்.

8. தேசத்துக்குத் தீங்கிழைக்குங் கட்சிகளைக் கண்டித்து, அக்கட்சித் தலைவர்களை நேசித்துத் தேச வளர்ச்சியை நாடும் கட்சியில் அவர்களைத் திருப்பமுயலல்.

9. இந்தியாவில் பிறந்த அனைவரையும் இந்தியராகக் கருதி, அவரை ஓரினமாக்கி, அவர் நலத்துக்காக தியாகஞ் செய்தல்.

இவ்வொன்பது கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு, அவைகளினின்றும் காலத்துக்கேற்றவாறு பிரியும் பலவேறு கோட்பாடுகளை அநுவதித்து, உண்மைத் தலைவர்கள் ஆணைவழி நின்று, நவசக்தி தன் தொண்டைச் செய்து வருவாள்.[50]

திரு.வி.க.வின் இதழ்ப்பணிகளை அறிய விழையும் படிப்பாளருக்கு அனைத்து இதழ்களையும் இங்கே எடுத்துக் காட்டிவிட இயலாது. எனவே, ஒருபானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதுபோல 18.11.1921 நவசக்தி வார இதழை இங்கு எடுத்துரைப்போம்:

நவசக்தி வார இதழ் ஒன்று

நவசக்தி வார இதழின் பதிவு எண் எம் 1500. இரு மருங்கும் சந்தா விவரம், விளம்பர விகிதம், (கட்டத்துக்கிடையே). நவசக்தி என்னும் பெயர் தடித்த எழுத்தில் தமிழில்மட்டுமே அமைந்துள்ளது. வலது ஓரத்தில் ஆங்கிலத்தில் நவசக்தி என்பது தடித்த எழுத்திலும் அடைப்புக் குறியுள் தமிழ்வாரப் பதிப்பு என்பதும், வெள்ளிக்கிழமை தோறும் வருவது என்பதும் மாற்றானுக்கிடங்கொடேல் (இரட்டை மேற்கோள் குறியுடன்) என்பதும் ஒன்றன்கீழ் ஒன்றாக அச்சாகி உள்ளன. அடுத்து ஒரே வரியில், மேலும் கீழுமான இருகோடுகளுக்கிடையே 'சிலம்பு இரண்டு துன்மதி ஆண்டு கார்த்திகை மாதம் 3 தேதி (18.11.21) பரல் நான்கு' என்று அமைந்துள்ளது. இவ்விதழ் 10 பக்கங்களைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு பக்கமும் நான்கு காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 3,5 எனும் ஒற்றைப்படை எண்ணுள்ள பக்கங்களின் மேலே 1921 ஆண்டு நவம்பர்மாதம் 18 தேதி நவசக்தி - 3 (பக்) என்றும், 2,4 எண்ணுள்ள பக்கங்களின் மேலே 4(பக்) - நவசக்தி - துன்மதி ஆண்டு கார்த்திகை 3 தேதி என்றும் அமைந்துள்ளன. 4ஆம் பக்கத்தில் அரைவட்டக் கட்டத்தில் 'மாற்றானுக்கிடங் கொடேல்', 'ஏற்பதிகழ்ச்சி' என்றும் நடுவில் இந்தியத்தாய் நின்ற நிலையில் இருக்குமாறும் கீழே கால்வட்ட வடிவில் 'வீடுபெற நில்' ஆகிய ஔவையார் மொழிகள் அணிசெய்கின்றன. கீழே நவசக்தி பெரிய எழுத்தில் உள்ளது. இவை அடங்கிய பகுதியே நவசக்தி வார இதழின் சின்னமாகும். இதன்கீழ் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தொடங்கும் அப்பர் பாடல் அவர் பெயருடன் முழுமையாக எடுத்தாளப்பட்டுள்ளது. இவற்றின்கீழ் சென்னை, 1921 ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி என்பதன்கீழ்ச் 'சமாதானம் நிலவுமோ' என்ற தலைப்பில் ஒரே காலமாக(Column)த் தலையங்கம் சிறிது பெரிய எழுத்தில் வெளியாகி உள்ளது.

இப்பக்க முழுதும் தலையங்கப் பக்கம் என்னும் முறையில் மூன்றாவது காலத்தில் (Column) 'பலர் வேண்டும்' என்பதும் நான்காவது காலத்தில் 'இராஜப் பிரதிநிதியின் கருணை' என்பதும் அமைந்துள்ளன.

ஐந்தாம் பக்கத்தின் முதற்காலம் 'இடியேறு' என்பது பெருந் தலைப்பாக அமைந்து, எது முன்னேறுகிறது? லாரன்ஸ் உருவச் சிலை, பம்பாய் அரசாங்கத்தாரும் காந்தி குல்லாய்களும், காந்தி அடிகளும் நகர பரிபாலன சபைகளும், அரசியற் குற்றவாளிகளும் கைவிலங்கும், தொழிலாளரும் காங்கிரஸூம், சென்னையில் செலவு (இளவரசர் பயணம்) உண்மையான கிறிஸ்துவர்கள், தொழிற்சங்கங்கள், ஐர்லாந்தின் நிலைமை, கோபங்கொண்டார் (லாயட் ஜார்ஜ்) அடக்குமுறையின் வியாபகம், ஸ்ரீமான் அப்துல் மஜீத் ஷரார், ஒட்டன்சத்திரம் காங்கிரஸ் சபை, ஸ்ரீ எஸ். மூர்த்தி & ஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீமான் சேஷாத்திரி அய்யர் என்னும் தலைப்புகளின்கீழ்ச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய பக்கங்களில் கதாகாலட்சேபம், நூல், லெட்டர் பேட், சுதேச ஜவுளி, சோப், இரண வைத்தியம், மூக்குத்தூள், கடிகாரம், தைலம், மூலிகை, தாயத்து, பற்பொடி முதலிய விளம்பரங்கள் ஆங்காங்கே வெளியிடப்பட்டுள்ளன. அரசு அலுவலர் நியமனம், வெளி நாட்டுச்செய்தி, நூல் மதிப்புரை, நவசக்தி முதலான இதழ்

வெளியீடுகள், சிறுகதை முதலியன காணப்படுகின்றன.[51] இவை களுள் இன்றியமையாத சிலவற்றை அகழ்ந்து அவ்வாறே காண்போம்.

1. சந்தா விவரம்[52]

வருட சந்தா	ரூ. 5.0
அறுமாத சந்தா	ரூ. 3.0
மூன்றுமாத சந்தா	ரூ. 1.8
வெளிநாடு - வருட சந்தா	ரூ. 6.0

2. நூல்கள் விளம்பரம்[53]

மகாத்மா காந்தி	1.8.0
ஒத்துழையாமை ஏன்?	0.8.0
காந்தியின் சிறைக்கால அனுபவங்கள்	0.8.0
பாரத நாட்டின் நிலைமை	1.0.0
இந்தியாவும் சுய ஆட்சியும்	1.8.0

- யம். ராதா அண்டு கம்பெனி
மண்ணடி, சென்னை.

சட்டங்களை மீறி நடப்போர் செய்ய வேண்டிய பிரமாணம்[54]

வட தேசத்தில் சட்டங்களை மீறி நடக்கும் இயக்கம் தீவிர மாய்ப் பரவி வருகிறது. சட்டங்களை மீறி நடப்போர் கீழ்க்கூறும் பிரமாணத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று புரோச் தலைவர் கள் கூறியிருக்கிறார்கள்:

கீழே கைச்சாத்து இட்டு இருப்போனாகிய யான், கடவுளை யும் தீர்க்கதரிசியையும் சாட்சியாக வைத்துக் கொண்டு களங்க மற்ற இருதயத்துடனும் பரிசுத்தமான மனச்சாட்சியுடனும், சட்டங் களை மீறி நடக்கும் இயக்கத்திற்கு உட்பட்டு, ஒத்துழையா மதக் கடமையை நான் எங்கும் எந்நேரத்திலும் செய்யக் கடமைப்பட்டுள் ளேன். நான் எடுத்துக்கொண்ட முயற்சியில் எனக்குப் பொறுமையை யும் கஷ்டங்களையெல்லாம் சகித்துக் கொண்டிருக்கும் மன திடத் தையும், இத்தூய சச்சரவில் என் உயிர் போய்விட்டால் எனக்கு

நற்கதியையும் அளிக்கவேண்டுமென்று எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றேன். என்னைச் சரியான வழியில் திருப் புவது கடவுளின் கடமையாகும். நாம் கடவுளிடத்தில் நம்பிக்கை கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்.

கீழ்க்கூறும் நிபந்தனைகளுக்கு நான் என் மனோவாக்குக் காயங்களால் உட்படுகிறேன்.

1. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையில் எனக்கு நம்பிக்கை இருக் கிறது.
2. நான் கையால் எடுக்கப்பட்ட நூலைக் கொண்டு கையால் நெய்யப்பட்ட துணியையே உடுத்திக் கொள்வேன்; அந்நிய நாட்டுத் துணிகளை உடுத்திக் கொள்ள மாட்டேன்.
3. என் சாவகாச வேளைகளில் பஞ்சிலிருந்து நூல் எடுத்து கைராட்டினத்தில் நெசவுத் தொழில் செய்வேன்.
4. எனக்குப் பிறர் ஏதாவது கெடுதல் செய்தாலும் நான் பொறுத்துக் கொண்டு இருப்பேன். காங்கிரஸ் கமிட்டியி லாகிலும் கிலாபத் கமிட்டியிலாகிலும் இருக்கும் என் எதிரியை நான் எந்த வழியாலும் எதிர்க்க மாட்டேன்.
5. நான் என் சாப்பாட்டிற்காகக் காங்கிரஸ் கமிட்டியையும் கிலா பத் கமிட்டியையும் எதிர்பார்த்து இருக்க மாட்டேன்.
6. இஸ்லாமிய மத சட்டங்களையும் காருண்யத்தையும் என் னுடைய கொள்கையாகக் கொண்டிருப்பேன்.

ஆனந்த போதினி இதழ் விளம்பரம்[55]

7ஆம் வருட ஆரம்பம்

'ஆனந்த போதினி' என்னும் மாத சஞ்சிகைக்கு ஏழாவது வருஷம் (ஆடி மாதம்) பிறக்கப் போகிறது. தமிழ்நாட்டில் தலை மைபெற்று விளங்குவதும் அதிக சந்தாதாரரையுடையதும் இதுதான்.

வருஷ சந்தா ரூ.1. வெளிநாடுகளுக்கு ரூபா. 1.4.0.

மாதிரி சஞ்சிகை இனாம்.

-'ஆனந்த போதினி' ஆபீஸ், மதராஸ்.

அரசியற் குற்றவாளிகளும் கைவிலங்கும்[56]

ஸ்ரீ மான் வ.வெ.ஸு ஐயரை பல்லாரி சிறைக்கு அழைத்துச் சென்றபோது சென்ட்ரல் ஸ்டேஷனில் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றது உண்மைதானாவென்றும் அரசியல் குற்றவாளிகளும் சாதாரணக் குற்றவாளிகளும் வித்தியாசமாக நடத்தப்படுவார்களா யென்றும் சட்ட சபையில் ஸ்ரீமான் சி.வி. வேங்கடரமண ஐயங்கார் ஒரு கேள்வி கேட்டார். இச்சம்பவத்தைப் பற்றித் தங்களுக்கு ஒன்றுந் தெரியாதென்றும் ஆதலின் விசாரிப்பதாகவும் அரசியல் குற்றவாளிகளையும் சாதாரணக் குற்றவாளிகளையும் வேறு வித மாக நடத்த வேண்டுமென்ற விதியில்லை யென்றும் அரசாங்கத் தார் பதிலளித்து விட்டனர்..

கடிதக்கட்டு (Letter Pad)[57]

மகாத்மா காந்தி திருவுருவமைந்த எழுதும் கடிதத் தாள்கட்டு, எக்காலத்தும் மஹாத்மா தரிசனம்.

அழகான கலரினால் ரூபாய் அளவில் மஹாத்மாவின் திருவுரு வமும் வந்தே மாதரம் எனும் திருமந்திரமும் பெயர், இடம், தேதி குறிக்க வசதியாகவும் அச்சடித்து 100 தாட்களைச் சேர்த்து பின் புறம் அட்டை பைண்டு செய்து தயாரித்த கட்டு 1க்கு அணா 10. கட்டு 12-க்கு ரூ.6.

(வி.பி. பிரத்யேகம்)

காந்தி படத்துடன் உமது பெயர் விலாசம் அச்சடித்து 1000, 10 பேட்களாக பைண்ட் செய்து தர ரூ.8.8.0 அனுப்பினால் 1 வாரத்தில் யாதொரு செலவுமின்றி அனுப்புவோம்.

- Pearl Press
41, Broad way, Madras.

அடக்குமுறையின் வியாபகம்[58]

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு

இந்தியன் பீனல்கோட் 124 ஏ 153 ஏ பிரிவுகளின்படி ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவின் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கு முன்னர் கூறியபடி இம் மாதம் 12ந் தேதியில் மறுபடியும் 15ந் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது. 15ந் தேதியன்று மாஜிஸ்டிரேட்டு ஸ்ரீமான் நாயுடுவுக்கு 124ஏ 153ஏ பிரிவுகளின்படி 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளை

ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளை வழக்கில் தீர்ப்பு சொல்லப் பட்டது. தீர்ப்பின் சாராம்சம்: ஸ்ரீமான் பிள்ளையவர்கள் ரூபா. 3000க்கு முச்சிலிக்கையும் 1500 ரூபா வீதம் இரண்டு ஜாமீன் களும் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு வருடம் வரை நன் னடக்கை யுடனிருத்தற் பொருட்டே இந்த ஜாமீன்கள் வேண்டு மென்றும் மாஜிஸ்டிரேட் கூறினார். ஜாமீன் கட்டப்பட்டது.

இந்து மதத்தினருக்கு ஓர் எச்சரிக்கை[59]

195 லக்ஷம் புரொட்டஸ்டண்டு பாதிரிகள் அமெரிக்காவில் இருந்து 63 கோடி டாலர் பண்டுடன் இந்து மதத்தைத் தமது மதத் திற்கு மாற்ற வரப்போகிறார்கள். அதில் மயங்கி விடாதீர்கள். தந்திரத் தினால் மத ஸ்தாபனஞ் செய்ய வருகிறவர்களைப் பின்பற்றா தீர்கள். ஹிந்துக்கள் - இஸ்லாமியர் என்ற உள்வெளிப்பேதங்களின்றி அகண்டமான நோக்கத்துடன் அந்தரங்க பகிரங்க ஒற்றுமையுடன் இருங்கள். ஹிந்து வகுப்பார்களில் மேல்கீழ் பார்க்காமல் சம புத்தியுடனிருந்து விடுங்கள். மோக்ஷ சாதனமான மதத்திற்குச் சாதனமான இராஜாங்கமே இந்தியாவிற்கு வேண்டுமென்றதை நிச்சயமாயெண்ணுங்கள். ஒவ்வொரு ஹிந்துவும் அவனவன் கடமைகளை மத விஷயத்திலும், அதன் ஆதார விஷயத்திலும் செய்ய முன்வாருங்கள். உண்மையான ஹிந்துவாயிருக்க முயலுங் கள். சுதந்தர மதம், சுதந்தர நாடு, சுதந்தர எண்ணம் இவைகளை உள்ளவாறே பெற முயலுங்கள். தேச மத முன்னேற்றத்தை முன்னிட்டு இடைவிடாது கடவுளையே ஸ்தோத்திரம் செய்யுங்கள்.

- விலக்ஷணானந்த ஸ்வாமி

நூல் விளக்க விளம்பரம்[60]

புதிய புத்தகம்! வெளிவந்து விட்டது!!
ஔவை அருந்தமிழ்

இது பாலவிநோதனி ஆசிரியரும் பரதன், சாவித்திரி, மதாலஸா, ஜடா வல்லவர் முதலிய பல நூல்களெழுதி உலகுக்கு உபகரித்து வருகிறவருமாகிய வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியால் எழுதப் பட்டது.

தெய்வப் புலமை வாய்ந்த ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி முதலிய நூல்கள் மிகவும் பிரசித்தமானவை எனினும்

ஔவையார் பற்பல சந்தர்ப்பங்களில் பாடிய தனிப்பாடல்கள் அநேகம். இவைகள் அநேக நீதிகளுணர்த்தும் இனிமையான கவி கள். அந்தத் தனிப்பாடல்கள் யாவும் ஒருங்கு திரட்டப்பட்டு வெளி வருவது இதுவே முதன் முறையாகும். இப்பாடல்களில் தெய்வம், தமிழ்ப் புலவர்களின் பெருமை, தமிழ் அரசர்களின் தாளாண்மை, விருந்தோம்பல், ஈதல், புகழ், தவம், தருமம், வீரம், ஒழுக்கம், குலப் பெண்டிரின் குணம், விலை மகளிரின் இழிவு, வேளாண்மை யின் மாண்பு, சேவகாவிர்த்தியின் இழிவு, கவியரசர்க்கும் புவி யரசர்க்கும் உள்ள வித்தியாசம், உண்ணாமலும் உடாமலும் கொடா மலும் பொருள் சேர்த்து வைப்பவரின் கதி, அறிவுடையோர் பெருமை முதலிய அரும்பெரும் நீதிகள் பொதிந்து கிடக்கின்றன. இத்துடன் ஔவையார் இச்செய்யுட்களை இன்ன சமயத்தில் இன்ன காரணத்திற்காகக் கூறினரென்பதும், அவை ஒவ்வொன் றும் இன்ன கருத்தினை வெளியிடுகிற தென்பதும் மிகத் தெளி வாயும் விரிவாயும் நூலின் அபிப்பிராயத்தைத் தழுவியே விளக்கப் பட்டிருக்கின்றன. இதர நூல்களின் மேற்கோள்களுடன் இனிய தமிழில் ஆடவரும் பெண்பாலரும் விரும்பிப் படித்துப் பயன்பெறும் படி எழுதப்பட்டு இருக்கிறது. இந்த ஒரு நூலைப் படித்தால் பல நீதி நூல்களைப் படித்த பயனை அடையலாம். இதுவே நீதிக் களஞ்சியம் எனினும் பொருந்தும். உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் வெகு அழகாய் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

விலாஸம்: கே. பழநியாண்டி பிள்ளை அண்டுகோ,
புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.

இதுகாறும் 18.11.1921 நவசக்தி வார இதழ் ஒன்றில் காணப்படும் செய்திகளைக் கண்டோம். இனி, நவசக்தி, மாத இதழ்களில் உள்ள செய்திகள் சிலவற்றுள், சுதேசமித்திரன் பொன் விழா, ஞாயிறு, சிவநேசன் இதழ் வரவு, அரங்கசாமி ஐயங்கார் பிரிவு, தமிழ்வகுப்பு, நன்கொடை ஆகியவற்றைப் படியுங்கள்.

சுதேசமித்திரன் பொன்விழா [61]

தமிழ்நாட்டிலுள்ள பல பத்திரிகைகளுள் வயதிலும் செல்வாக் கிலும் பிற பேறுகளிலும் சுதேசமித்திரன் சிறந்த பத்திரிகை என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள். சுதேசமித்திரன் பத்திரிகை தோன்றிய நாள் முதல் இன்றுவரை அதற்கு ஏற்பட்ட பல திற இன்னல்களைக் கடந்து இப்பொழுது பொன் விழாவைக் காணும் பேற்றைப் பெற்றதொன்றான அதன் மாண்பு நனி விளங்கும். தமிழ்

நற்கதியையும் அளிக்கவேண்டுமென்று எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றேன். என்னைச் சரியான வழியில் திருப்புவது கடவுளின் கடமையாகும். நாம் கடவுளிடத்தில் நம்பிக்கை கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்.

கீழ்க்கூறும் நிபந்தனைகளுக்கு நான் என் மனோவாக்குக் காயங்களால் உட்படுகிறேன்.

1. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.
2. நான் கையால் எடுக்கப்பட்ட நூலைக் கொண்டு கையால் நெய்யப்பட்ட துணியையே உடுத்திக் கொள்வேன்; அந்நிய நாட்டுத் துணிகளை உடுத்திக் கொள்ள மாட்டேன்.
3. என் சாவகாச வேளைகளில் பஞ்சிலிருந்து நூல் எடுத்து கைராட்டினத்தில் நெசவுத் தொழில் செய்வேன்.
4. எனக்குப் பிறர் ஏதாவது கெடுதல் செய்தாலும் நான் பொறுத்துக் கொண்டு இருப்பேன். காங்கிரஸ் கமிட்டியிலாகிலும் கிலாபத் கமிட்டியிலாகிலும் இருக்கும் என் எதிரியை நான் எந்த வழியாலும் எதிர்க்க மாட்டேன்.
5. நான் என் சாப்பாட்டிற்காகக் காங்கிரஸ் கமிட்டியையும் கிலாபத் கமிட்டியையும் எதிர்பார்த்து இருக்க மாட்டேன்.
6. இஸ்லாமிய மத சட்டங்களையும் காருண்யத்தையும் என்னுடைய கொள்கையாகக் கொண்டிருப்பேன்.

ஆனந்த போதினி இதழ் விளம்பரம்[55]

7ஆம் வருட ஆரம்பம்

'ஆனந்த போதினி' என்னும் மாத சஞ்சிகைக்கு ஏழாவது வருஷம் (ஆடி மாதம்) பிறக்கப் போகிறது. தமிழ்நாட்டில் தலைமைபெற்று விளங்குவதும் அதிக சந்தாதாரரையுடையதும் இதுதான்.

வருஷ சந்தா ரூ.1. வெளிநாடுகளுக்கு ரூபா. 1.4.0.

மாதிரி சஞ்சிகை இனாம்.

'ஆனந்த போதினி' ஆபீஸ், மதராஸ்.

அரசியற் குற்றவாளிகளும் கைவிலங்கும்[56]

ஸ்ரீ மான் வ.வெ.ஸு ஐயரை பல்லாரி சிறைக்கு அழைத்துச் சென்றபோது சென்ட்ரல் ஸ்டேஷனில் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றது உண்மைதானாவென்றும் அரசியல் குற்றவாளிகளும் சாதாரணக் குற்றவாளிகளும் வித்தியாசமாக நடத்தப்படுவார்களா யென்றும் சட்ட சபையில் ஸ்ரீமான் சி.வி. வேங்கடரமண ஐயங்கார் ஒரு கேள்வி கேட்டார். இச்சம்பவத்தைப் பற்றித் தங்களுக்கு ஒன்றுந் தெரியாதென்றும் ஆதலின் விசாரிப்பதாகவும் அரசியல் குற்றவாளிகளையும் சாதாரணக் குற்றவாளிகளையும் வேறு வித மாக நடத்த வேண்டுமென்ற விதியில்லை யென்றும் அரசாங்கத் தார் பதிலளித்து விட்டனர்..

கடிதக்கட்டு (Letter Pad)[57]

மகாத்மா காந்தி திருவுருவமைந்த எழுதும் கடிதத் தாள்கட்டு, எக்காலத்தும் மஹாத்மா தரிசனம்.

அழகான கலரினால் ரூபாய் அளவில் மஹாத்மாவின் திருவுரு வமும் வந்தே மாதரம் எனும் திருமந்திரமும் பெயர், இடம், தேதி குறிக்க வசதியாகவும் அச்சடித்து 100 தாட்களைச் சேர்த்து பின் புறம் அட்டை பைண்டு செய்து தயாரித்த கட்டு 1க்கு அணா 10. கட்டு 12-க்கு ரூ.6.

(வி.பி. பிரத்யேகம்)

காந்தி படத்துடன் உமது பெயர் விலாசம் அச்சடித்து 1000, 10 பேட்களாக பைண்ட் செய்து தர ரூ.8.8.0 அனுப்பினால் 1 வாரத்தில் யாதொரு செலவுமின்றி அனுப்புவோம்.

- Pearl Press
41, Broad way, Madras.

அடக்குமுறையின் வியாபகம்[58]

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு

இந்தியன் பீனல்கோட் 124 ஏ 153 ஏ பிரிவுகளின்படி ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவின் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கு முன்னர் கூறியபடி இம் மாதம் 12ந் தேதியில் மறுபடியும் 15ந் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது. 15ந் தேதியன்று மாஜிஸ்டிரேட்டு ஸ்ரீமான் நாயுடுவுக்கு 124ஏ 153ஏ பிரிவுகளின்படி 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளை

ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளை வழக்கில் தீர்ப்பு சொல்லப் பட்டது. தீர்ப்பின் சாராம்சம்: ஸ்ரீமான் பிள்ளையவர்கள் ரூபா. 3000க்கு முச்சிலிக்கையும் 1500 ரூபா வீதம் இரண்டு ஜாமீன் களும் கொடுக்க வேண்டுமென்றும் ஒரு வருடம் வரை நன் னடக்கை யுடனிருத்தற் பொருட்டே இந்த ஜாமீன்கள் வேண்டு மென்றும் மாஜிஸ்டிரேட் கூறினார். ஜாமீன் கட்டப்பட்டது.

இந்து மதத்தினருக்கு ஓர் எச்சரிக்கை[59]

195 லக்ஷம் புரொட்டஸ்டண்டு பாதிரிகள் அமெரிக்காவில் இருந்து 63 கோடி டாலர் பண்டுடன் இந்து மதத்தைத் தமது மதத் திற்கு மாற்ற வரப்போகிறார்கள். அதில் மயங்கி விடாதீர்கள். தந்திரத் தினால் மத ஸ்தாபனஞ் செய்ய வருகிறவர்களைப் பின்பற்றா தீர்கள். ஹிந்துக்கள் - இஸ்லாமியர் என்ற உள்வெளிப்பேதங்களின்றி அகண்டமான நோக்கத்துடன் அந்தரங்க பகிரங்க ஒற்றுமையுடன் இருங்கள். ஹிந்து வகுப்பார்களில் மேல்கீழ் பார்க்காமல் சம புத்தியுடனிருந்து விடுங்கள். மோக்ஷ சாதனமான மதத்திற்குச் சாதனமான இராஜாங்கமே இந்தியாவிற்கு வேண்டுமென்றதை நிச்சயமாயெண்ணுங்கள். ஒவ்வொரு ஹிந்துவும் அவனவன் கடமைகளை மத விஷயத்திலும், அதன் ஆதார விஷயத்திலும் செய்ய முன்வாருங்கள். உண்மையான ஹிந்துவாயிருக்க முயலுங் கள். சுதந்தர மதம், சுதந்தர நாடு, சுதந்தர எண்ணம் இவைகளை உள்ளவாறே பெற முயலுங்கள். தேச மத முன்னேற்றத்தை முன்னிட்டு இடைவிடாது கடவுளையே ஸ்தோத்திரம் செய்யுங்கள்.

- விலக்ஷணானந்த ஸ்வாமி

நூல் விளக்க விளம்பரம்[60]

புதிய புத்தகம்! வெளிவந்து விட்டது!!
ஔவை அருந்தமிழ்

இது பாலவிநோதனி ஆசிரியரும் பரதன், சாவித்திரி, மதாலஸா, ஜடா வல்லவர் முதலிய பல நூல்களெழுதி உலகுக்கு உபகரித்து வருகிறவருமாகிய வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியால் எழுதப் பட்டது.

தெய்வப் புலமை வாய்ந்த ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி முதலிய நூல்கள் மிகவும் பிரசித்தமானவை எனினும்

ஔவையார் பற்பல சந்தர்ப்பங்களில் பாடிய தனிப்பாடல்கள் அநேகம். இவைகள் அநேக நீதிகளுணர்த்தும் இனிமையான கவிகள். அந்தத் தனிப்பாடல்கள் யாவும் ஒருங்கு திரட்டப்பட்டு வெளிவருவது இதுவே முதன் முறையாகும். இப்பாடல்களில் தெய்வம், தமிழ்ப் புலவர்களின் பெருமை, தமிழ் அரசர்களின் தாளாண்மை, விருந்தோம்பல், ஈதல், புகழ், தவம், தருமம், வீரம், ஒழுக்கம், குலப் பெண்டிரின் குணம், விலை மகளிரின் இழிவு, வேளாண்மையின் மாண்பு, சேவகாவிர்த்தியின் இழிவு, கவியரசர்க்கும் புவியரசர்க்கும் உள்ள வித்தியாசம், உண்ணாமலும் உடாமலும் கொடாமலும் பொருள் சேர்த்து வைப்பவரின் கதி, அறிவுடையோர் பெருமை முதலிய அரும்பெரும் நீதிகள் பொதிந்து கிடக்கின்றன. இத்துடன் ஔவையார் இச்செய்யுட்களை இன்ன சமயத்தில் இன்ன காரணத்திற்காகக் கூறினரென்பதும், அவை ஒவ்வொன்றும் இன்ன கருத்தினை வெளியிடுகிற தென்பதும் மிகத் தெளிவாயும் விரிவாயும் நூலின் அபிப்பிராயத்தைத் தழுவியே விளக்கப்பட்டிருக்கின்றன. இதர நூல்களின் மேற்கோள்களுடன் இனிய தமிழில் ஆடவரும் பெண்பாலரும் விரும்பிப் படித்துப் பயன்பெறும்படி எழுதப்பட்டு இருக்கிறது. இந்த ஒரு நூலைப் படித்தால் பல நீதி நூல்களைப் படித்த பயனை அடையலாம். இதுவே நீதிக் களஞ்சியம் எனினும் பொருந்தும். உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் வெகு அழகாய் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

விலாஸம்: கே. பழநியாண்டி பிள்ளை அண்டுகோ,
புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.

இதுகாறும் 18.11.1921 நவசக்தி வார இதழ் ஒன்றில் காணப்படும் செய்திகளைக் கண்டோம். இனி, நவசக்தி, மாத இதழ்களில் உள்ள செய்திகள் சிலவற்றுள், சுதேசமித்திரன் பொன் விழா, ஞாயிறு, சிவநேசன் இதழ் வரவு, அரங்கசாமி ஐயங்கார் பிரிவு, தமிழ்வகுப்பு, நன்கொடை ஆகியவற்றைப் படியுங்கள்.

சுதேசமித்திரன் பொன்விழா [61]

தமிழ்நாட்டிலுள்ள பல பத்திரிகைகளுள் வயதிலும் செல்வாக்கிலும் பிற பேறுகளிலும் சுதேசமித்திரன் சிறந்த பத்திரிகை என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள். சுதேசமித்திரன் பத்திரிகை தோன்றிய நாள் முதல் இன்றுவரை அதற்கு ஏற்பட்ட பல திற இன்னல்களைக் கடந்து இப்பொழுது பொன் விழாவைக் காணும் பேற்றைப் பெற்றதொன்றான அதன் மாண்பு நனி விளங்கும். தமிழ்

நாட்டின் பத்திரிகை யுலகிற்குச் சுதேசமித்திரன் தந்தையென்று கூறுதல் மிகையாகாது. அப்பத்திரிகையின் பொன் விழாவைக் கொண்டாடத் தமிழுலகம் முனைந்து நிற்பது கண்டு மகிழ்வெய்து கிறோம். தமிழ் மக்கள் குடியேறியுள்ள வெளிநாடுகளிலும் அவ் விழா கொண்டாடப் பெறுதல் சிறப்பாகும். அப்பொன் விழாவில் சுதேசமித்திரனை ஈன்ற தாயாகிய ஸ்ரீமான் ஜி.சுப்பிரமணிய ஐயரவர் களுக்கும், அப்பத்திரிகையை வளர்த்த செவிலித் தாயாகிய ஸ்ரீமான் அரங்கசாமி ஐயங்காரவர்களுக்கும் தக்க முறையில் நினைவுக் குறிகள் அமைக்க வேண்டுவது தமிழ் மக்கள் கடமை என்று சொல்ல வேண்டுவதில்லை. சுதேசமித்திரன் பொன் விழா நாடெங்கும் இனிது நடைபெறுவதாக. சுதேசமித்திரன் வாழ்க.

ஞாயிறு[62]

'ஞாயிறு' என்னும் பெயரால் ஒரு தமிழ்த்தாள் ஈழத்தினின்றும் எழுதல் கேட்டு மகிழ்வெய்துகிறேன். தற்காலத் தமிழ் அகத்துக்கு 'ஞாயிறு' வேண்டற்பாலதே. பல கலைக் கதிர்களுடன் ஈழத்தமிழ் ஆழியினின்றும் தோன்றும் 'ஞாயிறு' உலக முவப்பப் பலர் புகழ்வ தாகும் என்பதில் ஐயமில்லை. ஈழ 'ஞாயிறு' தமிழ்த்தாயின் இருளைக் கடிவதாக. தமிழ் 'ஞாயிற்'றின் ஒளி தமிழ் நிலையந்தோறும் காலு மாறு தமிழ் உலகம் முயல்வதாக. 'ஞாயிறு' வாழ்க. தமிழ்த் தெய் வத்தின் திருவருள் ஓங்குக.

அரங்கசாமி ஐயங்கார் பிரிவு[63]

ஹிந்து ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார் அகால மரண மடைந்தமை குறித்து வருந்துகிறோம். தமிழ் நாட்டில் பிறந்து, பொதுவாக உலகிலும், சிறப்பாக இந்தியாவிலும் மணிவிளக்காக ஒளி செய்தவருள் திரு. ஐயங்காரும் ஒருவர். அவர், ஹிந்து, சுதேசமித்திரன் என்னும் இரண்டு பத்திரிகைகளின் செவிலித் தாயென விளங்கியவர். ஏ. அரங்கசாமி ஐயங்கார் பத்திரிகா சிரியருலகில் மணியெனத் திகழ்ந்தவர்; சிறந்த அரசியல் ஞானி; தேசபக்தர். திரு. ஐயங்கார் நியாய வரம்புக் கிளர்ச்சியிலேயே பற்றுக்கொண்டவர். இதனால் அவர் அடிக்கடி ஒத்துழையா இயக்கத்துடன் மாறுபட்டதுண்டு. இதற்குக் காரணமாக நின்றது அவர்தம் சிறந்த அரசியல் ஞானமேயாகும். திரு. ஐயங்கார், தேசபந்து தாசருக்கும் பண்டித மோதிலால் நேருவுக்கும் தக்க சமயத்தில் ஆலோசனை கூறும் அமைச்சரராகவும் இருந்தார். அவர், இந்திய சட்ட சபையில் அரசியல் ஞானிகள் வியக்கு

முறையில் வாதஞ் செய்தவர். பல திற ஆற்றல் வாய்க்கப் பெற்ற ஒருவர் அகால மரணமடைந்ததால், உலகுக்கும் நாட்டுக்கும் பெரு நஷ்டம் விளைந்துவிட்டது. உலகம் ஒரு பத்திரிகாசிரியரை இழந்தது; இந்தியா ஓர் அரசியல் ஞானியை இழந்தது. தமிழ்த்தாய் ஓர் இனிய தேசபக்தரை இழந்தாள். பல திற வாய்ப்புக்கள் நிரம்பப் பெற்ற அரங்கசாமி ஐயங்கார் போன்றாரைத் தமிழ்நாடு எளிதில் பெறுதல் அரிது; அரிது. இத்தகைய ஒருவரை இழந்து துயருறும் அவர்தங் குடும்பத்தார்க்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அரங்கசாமி ஐயங்காரின் ஆருயிர் ஆண்டவன் அருளொளியில் முழ்கி அமைதியுறுவதாக.

தமிழ் வகுப்பு[64]

தமிழ் மொழியை ஓம்புதற்கு இந்நாளில் ஆங்காங்கே சிறு சிறு முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன. அம்முயற்சிகளிற் சில போற்றற்குரியன. 'தாய்மொழியை வளர்ப்பதில் தமிழர்கள், ஊக்கஞ் செலுத்துவதில்லை' என்னும் பழி தமிழர்களுக்குண்டு. அப் பழியைப் போக்கத் தமிழர்கள் பாடுபடுதல் வேண்டும்.

பண்டை நாளில் சேரன் அவையிலும், பாண்டியன் சங்கத்திலும், சோழன் கழகத்திலும் அரசு வீற்றிருந்த நந்தமிழன்னை, இப்போது எங்கேயிருக்கிறாள்? எந்நிலையிலிருக்கிறாள்? தமிழன்னையைப் பழைய நிலைக்குக் கொண்டுவரச் செய்யத் தக்க முயற்சிகள் பல திறத்தன. அவைகளுள் ஒன்று - சிறந்த ஒன்று - ஆங்காங்கே தமிழ் வகுப்பு வைத்து நடாத்துவதாகும்.

சென்னையில் ஸ்ரீமான் சேஷாசல ஐயரவர்கள் தமிழ்க்காதல் ஒன்றே கொண்டு, தமிழ் வகுப்புக்கள் நடாத்தித், தமிழ்த் தாய்க்கு விழுத்தொண்டு செய்து வருவதை ஈண்டுக் கழிபேருவகையுடன் குறிக்கிறோம். ஸ்ரீமான் ஐயரவர்கள் தொண்டால் ஏழை மக்கள் சிலர் பெரும்புலவராகித் தமிழன்னைக்குச் சேவை செய்து அவள்தன் ஆசிபெற்று வருகிறார். இப்பொழுது நண்பர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்க் காதலால், தமிழ் வகுப்பு நடாத்த முன்வந்திருப்பதை மகிழ்ச்சியுடன் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை இராயப்பேட்டையிலும், சிந்தாதிரிப்பேட்டையிலும் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தொடங்கியுள்ள தமிழ் வகுப்புக்களுக்கு முறையே திறப்பு விழா நிகழ்த்திய டாக்டர் சாமிநாத ஐயரவர்களும் மறைமலையடிகளும் தமிழ் வகுப்பின்

அவசியத்தையும், அதனால் விளையும் நலன்களையும் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டினார்கள். பல்கலைக் கழகங்களாலும், மகாநாடுகளாலும் விளையும் நலன்களைப் பார்க்கிலும், இவ்வகுப்புக்களால் பெரும்பெரும் நலன்கள் விளையும் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

இப்பெருந்தொண்டில் தலைப்பட்டுள்ள ஸ்ரீமான்கள் சேஷாசல ஐயருக்கும், மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கும் நமது வாழ்த்து உரியதாக. தமிழ் நாட்டின் நானாபக்கங்களிலும் இத்தகை வகுப்புக்களை நடாத்த ஆங்காங்குள்ள தமிழ் நேயர்கள் உறுதியும் ஊக்கமுங் கொண்டு உழைப்பார்களாக.

திரு.வி.க.வின் 'சோதி' இதழ்

1919ஆம் ஆண்டு திரு.வி.க. தேசபக்தன் இதழ்க் கட்டுரைகளைத் தொகுத்து அதன் ஒரு பகுதியாகத் 'தேச பக்தாமிர்தம்' என்னும் ஒரு நூலை வெளியிட்டார். அதன் முன்னுரையில் "தமிழ் மொழி வளர்ச்சிக்கென ஒரு மாதப்பத்திரிகையும், சமயத்துக்கென ஒரு மாதப்பத்திரிகையும் நடாத்த வேண்டும் என்னும் பேரவா நாடோறும் என் பிடரைப்பிடித்து உந்திக் கொண்டேயிருக்கிறது. பொருட்செல்வப் பேறு பெறாத யான் என்செய்ய வல்லேன்"[65] என்று மாதப்பத்திரிகை ஒன்றை வெளியிடும் ஏக்கத்தை - மன வாட்டத்தைத் தெரிவிக்கிறார்.

இவர் நவசக்தி வாரஇதழை 1920 முதல் நடத்தி வந்தார். அப்போது 20.5.1921 நவசக்தி பக்கம் 7இல் இவரை ஆசிரியராகக்கொண்டு ஓர் இதழ் வருவதாக விளம்பரம் காணப்படுகிறது. அதை அப்படியே தருகிறோம்.

'சோதி'

சன்மார்க்கத்தை வளர்ப்பது
ஒரு மாதாந்த சமயப் பத்திரிகை
ஆசிரியர்
திரு.வி. கலியாணசுந்தர முதலியார்
('நவசக்தி' பத்திரிகாசிரியர்)

சமய ஞானத்தைப்பற்றிய பல விஷயங்களும் சிறந்த தமிழ்க் கட்டுரைகளும் இதில் வெளியாகும் ஜுலை மாதம் முதலிதழ் வெளிவரும் வருட சந்தா ரூபா 3-8-0.

முன்பணம் மணியார்டர் வாயிலாகச் செலுத்தப்படவேண்டும்.
மானேஜர் 'சோதி'
44, பஜார் ரோட், இராயப்பேட்டை, சென்னை.

ஆனால், நவசக்தி 12.8.1921ஆம் நாள் இதழில் 'இடியேறு' பகுதியில் 'சோதி' எனும் தலைப்பிட்டு எழுதப்பட்ட ஒரு செய்தி மிகுந்த ஏமாற்றத்தையே உண்டுபண்ணுகிறது (திரு.வி.க.வுக்கும் தான்). இதோ அந்தச் செய்தி:

"இப்பெயர்கொண்ட ஒரு மாதாந்தப் பத்திரிகை ஸ்ரீமான் திரு. வி.கலியாணசுந்தர முதலியாரை ஆசிரியராகக் கொண்டு வெளி வரும் என்று முன்னர் 'நவசக்தி'யில் ஒரு விளம்பரம் வெளிவந் திருந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். தொழிலாளர் தொல்லை ஸ்ரீமான் முதலியாருடைய கவனமனைத்தையும் ஈர்த்துக் கொண்டிருப்பதால் மேற்கூறப்பட்ட சமயப் பத்திரிகை வெளிவர முடியாமல் இருக்கிறது. இதற்காக நேயர்கள் மன்னிக்க வேண்டு கிறோம். தென்னாட்டில் சமயச் சீர்திருத்தத்தின் அவசியத்தை நன் குணர்ந்த ஸ்ரீமான் முதலியாரால் இப்பத்திரிகை தொடங்கப்படுங் காலத்து முன்னாடியே விளம்பரம் மூலமாகத் தெரிவிக்கப்படும்.'

இதழ்வழி உருவான நூல்கள்

சாது முதலியார் தம் நவசக்தி வார, மாத இதழ்களில் அவ்வப் போது கட்டுரைகள் பல எழுதிவந்தார். வெளியிடங்களில் பேசும் சொற்பொழிவுகளையும் பாடல்களையும் இவ்விதழ்களின் உள்ளும் புறமும் வெளியிட்டு வந்தார். நவசக்தி இதழ்த் தலையங்கம், கட்டுரைகள் பலவற்றையும் தொகுத்து இரு பகுதிகளாகத் 'தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு' என்னும் தலைப்பில் 1935 இல் வெளியிட்டார். இது 'தேசபக்தாமிர்தம்' போன்று ஒரு தனிச் சிறப்புவாய்ந்த நூலாகும். இவருடைய நூல்கள் 56இல்[66] பின் வரும் நூல்கள்-மேலே சொன்னவை தவிர நவசக்தி இதழ் வழிவந்த நூல்களாகும்.

1. இன்ப வாழ்வு - 1925
2. தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு - 1928
3. இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் - 1929
4. இமயமலை அல்லது தியானம் - 1931
5. சமரச சன்மார்க்க போதம் - 1933

6. சமரச சன்மார்க்க திறவு - 1934
7. சித்த மார்க்கம் - 1935
8. முடியா? காதலா? சீர்திருத்தமா? - 1938
9. திருமால் அருள்வேட்டல் - 1939
10. திருக்குறள் விரிவுரை - 1939, 41 (இருபகுதிகள்)
11. பொதுமை வேட்டல் - 1942[67]

இவை தவிர, பிற இதழ்களுக்கு எழுதிய கட்டுரைகளும் நூல்களாக வந்துள்ளன:

1.	சுதேசமித்திரன் (ஆண்டுமலர்)	நாயன்மார் திறம் 1922
2.	சுதேசமித்திரன் (ஆண்டுமலர்)	தமிழ்நாடும் நம்மாழ்வாரும் - 1923
3.	குமரன் (காரைக்குடி)	முருகன் அல்லது அழகு 1925
4.	குமரன்	கடவுட் காட்சியும் தாயுமானாரும் - 1928[68]

இங்ஙனம் திருவிகவின் நூல்களில் ஏறத்தாழ 20 நூல்கள் இதழ் வழிவந்தவை ஆகும். இவை யாவும் படிப்பதற்கு இனிமையும் வாழ்க்கைக்கு உறுதுணையும் செய்பவை ஆகும். நவசக்தி இதழில் முழுப்பக்கம் இவருடைய நூல்களின் மாண்பை வெளிப் படுத்தி விளம்பரமாக வெளியிடப்பட்டுள்ளது. அதில் உள்ள வாசகங்கள்:

> தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா, பெண்ணுரிமை வேண்டுமா, தீண்டாமையொழிதல் வேண்டுமா, சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா, இயற்கையின்பம் வேண்டுமா, வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா, வேண்டுமானால், திரு.வி. கலியாண சுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள்[69]

என்பதாகும். இஃதொன்றே திரு.வி.க. நூல்களின் மாண்பை எடுத்துரைப்பதாம்.

'பக்தன்' – 'சக்தி'

'யான் 'தேசபக்தன்' ஆசிரியனாயிருந்தபோதும், 'நவசக்தி' ஆசிரியனாயிருந்தபோதும் ஒருவித நோக்கத்தைக் குறிக்கொண்டே

தொண்டாற்றினேன். வேறுபாடு நோக்கத்தில் விளையவே இல்லை; வளர்ப்பு முறையில் விளைந்தது. ஏன்? 'தேசபக்தன்' தினப்பதிப்பு; 'நவசக்தி' வாரப்பதிப்பு. ஆதலின் வளர்ப்பு முறையை வேறுபடுத்தும் நிலை நேர்ந்தது.

'தேசபக்தன்' மகன்; 'நவசக்தி' மகள். 'தேசபக்தன்' லிமிடெட்டுள் புகுந்தவன்; 'நவசக்தி' அதில் புகாதவள். 'தேசபக்தனில் பெரிதும் ஆக்கவேலை நடந்தது. ஆவேசமும் பரபரப்பும் 'தேசபக்தனில் அலைந்தன; அன்பும் அமைதியும் 'நவசக்தி'யில் தவழ்ந்தன. 'தேசபக்தன்' அதிதேவதை ருத்ரன் - எழுதுகோல் பாசுபதம்; 'நவசக்தி'யின் அதிதேவதை சிவம் - எழுதுகோல் குழல். 'தேசபக்தன்' நடையில் காளி; 'நவசக்தி' நடையில் உமை.

'நவசக்தி' என்னிடம் வளர்ந்த கால முழுவதும் 'நவசக்தி'யில் அரசியல் பூத்த வண்ணமிருக்கும். அவ்வப்போது அக்கொடியினிடம் சமூக சீர்திருத்தம், பெண் நலன், மொழிச்சிறப்பு, கலையாக்கம் முதலியனவும் முகிழ்க்கும். இறுதியில் 'நவசக்தி' மலர்களில் பெரிதும் சமதர்ம சன்மார்க்கமே கமழ்ந்தது.

'தேசபக்தனை'ப் போலவே 'நவசக்தி'யும் தமிழுலகில் செல்வாக்குப் பெற்றாள். 'நவசக்தி' அரசியலுடன் வேறு பல துறைகளிலும் இறங்கிப் பணி செய்தமையால்,அரசியலில் மாறுபட்ட கருத்துடையாரையும் அவள் வயப்படுத்தினள். 'நவசக்தி'யின் தமிழ்நடம் வெளிநாடுகளிலும் புகுந்தது. இலங்கை, பர்மா, சையாம், மலேயா, மொரிஷியஸ், நெட்டால், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மெனி முதலிய நாடுகளிலும் 'நவசக்தி'யின் கலை வீசியது. தமிழ் நாட்டினின்றும் தத்தம் தாய் நாடு நோக்கும் ஐரோப்பியப் பாதிரிமார் பலர் 'நவசக்தி'யை மறப்பதில்லை'[70] என்று திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப்புக்களில் தம் இதழ்கள் பற்றிய கருத்துகளை எடுத்துரைக்கின்றார்.

எழுத்தாளர் கல்கி, சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 1951இல் வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரத்தில்:

> தமிழுக்கும் தமிழருக்கும் தாங்கள் செய்துள்ள சேவை சொல்லில் அடங்காது. தமிழ்ப் பத்திரிகை உலகில் அன்னிய மொழி அமிதமாகப் பெருகி, தமிழோசை மலினப்பட்டிருந்த காலத்தில், தாங்கள் தமிழை வளம்பெறச் செய்தீர்கள். தங்கள் தமிழ்மொழி வளமும் வலுவும் பெற்று வளர்ந்தது. அதனால் நாங்களும் வளர்ந்தோம்.

தாங்கள் தமிழை மட்டும் வளர்க்கவில்லை. தமிழர்களின் நெஞ்சில் தேசிய உணர்ச்சியையும் வளர்த்தீர்கள். தங்கள் எழுத்துக்கள் தமிழ் நாடெங்கும் தமிழோசையையும் சுதந்திர கோஷத்தையும் ஒலிக்கச்செய்தன. தாங்களும் தமிழ் நாடெங்கும் சென்று தமிழோசையைப் பரப்பினீர்கள். தங்கள் தமிழோசையின் எதிரொலியாக எண்ணற்ற தேச பக்தர்களும் தமிழ்த் தொண்டர்களும் நம் நாட்டில் உருவானார்கள்.[71]

என்று புகழ்கின்றார்.

தமிழறி விலாதார் செய்தித் தாள்எழு திடுவ தற்கும்,
தமிழுளார் எழுது தற்கும், வேற்றுமை இருந்த தன்மை
தமிழ்நாடு கண்ட தந்நாள்; தமிழ்காணார் மீன்க டைக்குள்
தமிழறி கலியா ணத்தார் தமிழேடு முல்லைக் காடே[72]

என்று திரு.வி.க.வின் பத்திரிகைப் பணியைப் பாரதிதாசன் பாராட்டுகின்றார்.

ஏறத்தாழ 20 ஆண்டுக்கால வார, மும்முறை, மாத இதழ்களை ஆராய்ந்து திரு.வி.க.வின் இந்த இதழ்ப்பணிகளை சொல்வதென்பது ஓர் அரிய செயலாகும். காரணம் அரை நூற்றாண்டுக்கு முன்னர் தமிழுலகில் உலவிவந்த இதழ்களை இன்று ஒருசேரக் காணக்கிடப்பது அரிதாகும். ஆங்காங்கே சிற்சிலரிடம் தொடர்ச்சியற்ற இதழ்கள் காணப்படுவதாலும் அவையும் நலிந்துகிடப்பதாலும் இந்த இதழ்பற்றிய ஆராய்ச்சிசெய்யும் முயற்சியும் ஆர்வலரும் இன்மையாலும் இவ்விதழைப்பற்றி அறிய இயலுவதில்லை.

திரு.வி.க. நடத்திய இதழ்கள் இரண்டனுள் முன்னதாகிய தேசபக்தன் நாளிதழ் பற்றிப் பேராசிரியர் மா.ரா. இளங்கோவன் 'முதல் நாளிதழ்கள் மூன்று' என்னும் நூலில் ஆராய்ந்துள்ளார். எனவே நவசக்தி இதழ்ப்பணிபற்றிமட்டுமே எனக்கு உரைக்கும்படி சொல்லப்பட்டது. என்றாலும், முறையான ஆய்வுக்கோணத்தில் முதலில் நவசக்தி ஆசிரியர் திரு.வி.க.வின் வாழ்க்கைச் சுருக்கம் சொல்லப்பட்டது. இவர் இதழ்ப்பணிக்கு வருவதற்குக் காரணமாய் அமைந்த எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் சுட்டிக்காட்டப்பட்டது. இவரை வளர்த்த இதழ்கள் பற்றிச் சுருங்கச் சொல்லப்பட்டது. பின்னர் தேசபக்தன் இதழ்ப்பணியைப்பற்றிச் சொல்லாமல் நவசக்தி பத்திரிகைப்பணி நிறைவடையாது என்பதால் அது கூறப்பட்டது. அதன் பின்னரே எடுத்துக்கொண்ட தலைப்பு கூடுமான வரையில் விளக்கப்பட்டது. இதழ்ப்பணி விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும் ஆகையால் சுருங்கச் சொல்லப்பட்டது.

குறிப்புகள்

1. இக்கட்டுரை எழுதுவதற்கு முதன்மை ஆதாரமாய் இருந்தது திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புக்கள் என்னும் நூலே. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், மறுபதிப்பு, 1969, சென்னை.
2. திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.296
3. மேற்படி நூல், அணிந்துரை
4. மேற்படி நூல், அணிந்துரை
5. மேற்படி நூல், ப.46
6. மேற்படி நூல், ப.96
7. மேற்படி நூல், ப.591
8. மேற்படி நூல், ப.98
9. மேற்படி நூல், ப.106
10. மேற்படி நூல், ப.227
11. மேற்படி நூல், பக்.251-253
12. மேற்படி நூல், பக்.251-253
13. மேற்படி நூல், ப.264
14. மேற்படி நூல், ப.266
15. மேற்படி நூல், ப.267

16-18. திரு.வி.கலியாணசுந்தரனார், தேசபக்தாமிர்தம், பிரிட்டீஷ் இந்தியா அச்சுக்கூடம், சென்னை, முன்னுரை

19. அ.ச. ஞானசம்பந்தன், திரு.வி.க., பாரி நிலையம், சென்னை, 1968, பக்.7-8

20. தேசபக்தாமிர்தம், பக்.12-14

21. சோமலெ, தமிழ் இதழ்கள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1975, ப.18

22,23. ம. பொ.சிவஞானம், விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, இன்ப நிலையம், சென்னை, 1970, பக்.227-228

24. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.268

25,26. மேற்படி நூல், ப.271

27. மேற்படி நூல், ப.459

28. தேசபக்தாமிர்தம், ப.viii

29. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.459
அ. நாகலிங்கம், திரு.வி.க. வாழ்க்கையும் தொண்டும் ஒரு கை விளக்கு, பர்வதவர்த்தனி பதிப்பகம், சென்னை, 1981

30. மா.ரா. இளங்கோவன், முதல் நாளிதழ்கள் மூன்று, சேகர் பதிப்பகம், சென்னை, 1982, ப.118

31. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பக்.459-460

32. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.287

33. திரு.வி.க. வாழ்க்கையும் தொண்டும் ஒரு கைவிளக்கு, ப.16

34. தேசபக்தாமிர்தம், முன்னுரை

35. திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.274

36. தேசபக்தாமிர்தம் (21.06.1919, ப.5)

37. தேசபக்தன் (21.06.1919, ப.5)

38. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பக்.287-288

39. நான் கண்ட நால்வர், வெ.சாமிநாத சர்மா, பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், சென்னை, 1959, ப.18

40. மேற்படி நூல், பக்.76-77

41. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பக்.288-289

42. மேற்படி நூல், பக்.291-292

43. மேற்படி நூல், ப.293

44. நவசக்தி, சிலம்பு 12, பரல் 26 , ப.3

45. நவசக்தி, சிலம்பு 13, பரல்.1

46. நவசக்தி, சிலம்பு 13

47. நவசக்தி, சிலம்பு 14, பரல் 4, ப. 136

48. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப. 296

49. மேற்படி, பக். 289, 292,296

50. தமிழ்ச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு,' அரசி புக் டிப்போ, 1969, பக். 2,3

51. நவசக்தி, 18.11.21

52. மேற்படி, ப.1

53. மேற்படி, ப.9

54. மேற்படி, ப.3

55. மேற்படி, ப.10

56. மேற்படி, ப.5

57. மேற்படி, ப.2

58. மேற்படி, ப.5

59. மேற்படி, ப.1

60. மேற்படி, ப.3

61. நவசக்தி, சிலம்பு 12, பரல் 27, ப.77

62. மேற்படி, சிலம்பு 13, பரல் 6, ப.330

63. மேற்படி, சிலம்பு 14, பரல் 4, ப.134

64. மேற்படி, சிலம்பு 14, பரல் 1, பக்.34-35

65. தேசபக்தாமிர்த முன்னுரை

66. திரு.வி.க. வாழ்க்கையும் தொண்டும் ஒரு கைவிளக்கு, பக். 12-15

67. மேற்படி பக். 16,17

68. மேற்படி

69. நவசக்தி பக். 2,15

70. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், பக். 290,291

71. சோமலெ, தமிழ் இதழ்கள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1975, ப. 17

72. தமிழ்ப் பெரியார் திரு.வி.க., மணிவாசகர் அச்சகம், சென்னை, 1981, ப. 37

(டாக்டர் சாலை இளந்திரையனின் 'புதுத் தமிழ் முன்னோடிகள்', எழுத்தாளர் மா. சு. சம்பந்தனின் 'தமிழ் இதழியல் வரலாறு', 'தமிழ் இதழியல் சுவடுகள்', திருமதி சி. மோ. புனிதவதியின் 'திரு.வி.க.வும் நவசக்தியும்' எனும் எம்.பில். ஆய்வேடு முதலியனவும் இக்கட்டுரை தயாரிக்கப் பயன்பட்டன.)

செந்தமிழ்ச் செல்வி

1923

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது.

சிலம்பு உ.	மெய்கண்டான் ஆண்டு-௭ாக பங்குனித் திங்கள் 1924௵ மார்ச்சு—ஏப்ரல்௴	பரல் ௬

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

சைவ சித்தாந்த வரலாறு

(சிவநெறி வரலாறு)

(௬௫-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரியருள் போர் புரிவோர் அரசராகவும், சமயத் தலைவர் பிராமணராகவு மிருந்தனர். ஆரிய அரசர் தத்துவ ஞானம் உணர்ந்திருப்பின் அவர் தமது கொள்கையை பிராமணர்க்கு அறிவித்து அன்னோர் வழிபாடும் தமது குடிகள் வழிபாடும் அக்கொள்கைக்கு ஏற்புடைத்தாக நிலவும் வண்ணம் ஒழுங்கு

‘செந்தமிழ்ச்செல்வி அரசியலைக் குறித்து யாதும் புகலாது மோன விரதம்பூண்டு நிற்கும்; பொருட்பேறுடைய உலகச் செய்தித்திரட்டை அடிக்கடி வெளியிடும்; ஆசார சீர்திருத்தம் பற்றி வாய்த்தபோதெல்லாம் தனக்குத் தோன்றியதை அஞ்சாது எடுத்துரைக்கும்.’

‘நமது பத்திரிகை’
செந்தமிழ்ச் செல்வி
(சிலம்பு – க, பரல் – க)

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது.

சிலம்பு ௨.	மெய்கண்டான் ஆண்டு-எாக பங்குனித் திங்கள் 1924ஸூ மார்ச்சு—ஏப்ரல்மூ	பரல் ௯.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

சைவ சித்தாந்த வரலாறு

(சிவநெறி வரலாறு)

(௯௫-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரியருள் போர் புரிவோர் அரசராகவும், சமயத் தலைவர் பிராமணராகவு மிருந்தனர். ஆரிய அரசர் தத்துவ ஞானம் உணர்ந்திருப்பின் அவர் தமது கொள்கையை பிராமணர்க்கு அறிவித்து அன்னோர் வழிபாடும் தமது குடிகள் வழிபாடும் அக்கொள்கைக்கு ஏற்புடைத்தாக நிலவும் வண்ணம் ஒழுங்கு

செந்தமிழ்ச் செல்வி

திருமதி வெ. கனகசுந்தரம்

முன்னுரை

உலகம் சுருங்கிக் கொண்டே வருகின்றது. ஆம்! அறிவியல் வளரவளர நாளுக்கு நாள் உலகம் சுருங்கிக் கொண்டே வருகின்றது. உலகம் சுருங்குவதற்கு இதழியல் இன்றியமையாத பணி செய்கின்றது. இதழியல் சமுதாயத் தகவல் தொடர்புச் சாதனங்களில் ஒன்றாக அமைகின்றது. ஆக்கப் பணிகளை விளைவிக்க உதவும் சக்திவாய்ந்த கருவியே இதழியல் எனலாம்.

மக்கள் தொடர்புக் கருவிகளில் இதழ்களின் பணி குறிப்பிடத் தக்கதாகும். வளர்முக நாடுகளில் மக்களுக்கு அறிவுவளர்ச்சி ஏற்படுத்துவதில் முக்கிய இடத்தை இதழ்கள் பெறுகின்றன. வானொலி, தொலைக் காட்சியின் பரவல் விரிவுபடுத்தப்படாத காலகட்டத்தில், மக்களின் கருத்துப் பரப்பு ஊடகத்தில் இதழ்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன.[1]

பழந்தமிழ் நாட்டிலே பல்லறிஞர் குழுமிப் பயனுரை வழங்கல் பெருவழக்கம். இங்ஙனம் வல்லுநர் கூடி நல்லுரை நிகழ்த்தற்குரிய பேரற நிலையங்கள் ஆங்காங்கே அமைக்கப் பெற்றிருந்தன. சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் நூல்களாலே இவற்றை அறிகின்றோம். இத்தகைய பேருரைக் கூட்டங்களுக்குப் 'பெரிய நாடு' என்று பெயர் வழங்கியிருத்தலை இந்திரனோலக்கம் போல் இருந்தது பெரிய நாடு என்ற கம்பர் கவின் மொழியும் சான்றாகும்.[2]

இக்காலத்தே மேனாட்டினர் வாயிலாக நாம் பெற்ற நலங் களிலே பெருநலம் பயக்கும் அச்சுப் பொறியும் ஒன்று. இவ்வச்சுப் பொறி நமக்குக் கிடைத்த பின்னர், மிக அரிதின் முயன்று ஏட்டில் எழுதிப் படித்துவந்த கல்வியை மிக எளிதிற் பெறும் பயன் பெற் றோம். எண்ணிறந்த நூல்கள் இறந்தொழியாமை பேணினோம். இதுபோன்றே அவர்கள் கண்ட வெளியீடு (Journal) முறையினை யும் கால வளவில் மேற்கொண்டோம். கல்விச் செல்வத்தைப் பெறு தற்கு நூல்கள் நமக்கு எத்துணைத் துணையாமோ அத்துணையும் செவிச் செல்வத்தைப் பெறுதற்கு வெளியீடுகளே மிக இன்றி யமையாத துணை போதரும்.[3]

இதழியல் சிறு ஆல விதையைப் போல் தோன்றி இன்று பல விழுதுகளைக் கொண்ட பெரும் ஆலமரமாக வளர்ந்துள்ளது. அறி வியல் நுட்பங்களையும் தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக மக்களோடு தொடர்பு கொள்கின்ற பல்வேறு வழிமுறைகளையும் சாதனங்களையும் உள்ளடக்கிய பரந்து விரிந்த துறையாக இதழியல் இன்று திகழ்கின்றது.[4]

வரலாறு, தோற்றம், சூழல்

இதழியல் வரலாறும் இந்திய விடுதலை வரலாறும் பின்னிப் பிணைந்த ஒன்றாகும். இந்திய விடுதலைக்கு உறுதுணை புரிந்த ஒப்பற்ற கருவிகளுள் ஒன்று இதழியல். இந்திய சுதந்திர உணர் வால் இதழ்களும் இதழ்களின் வளர்ச்சியால் சுதந்திர உணர்வும் வளர்ந்த நிலையினை இந்தியாவில் காண முடிகின்றது. இதழ் களை 'ஜனநாயகம் பரப்பும் தூதுவன்' என்பர்.[5]

தென்னிந்தியாவில் புதிய போக்குகள் உருவாகத் தொடங்கிய காலம் அது. தம் இனமக்கள் கல்வி, வேலை வாய்ப்பு, பண்பாடு போன்றவற்றில் பின்னடைந்ததை மாற்றும் விதமாக இயக்கம் கண்ட நேரம் அது; இன உணர்வின் எழுச்சி தோற்றம் கொண்ட வேளை அது. இரட்டை ஆட்சி, மாகாணசுயாட்சி முறை புகுத்திய காலகட்டம், 1920ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசால் பிறப் பிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டமானது இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. இந்திய சுதேச மன்னர்களை இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளச் செய்தும் மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைப் புகுத்தியதும் சிறப்புக்கூறாகும்.

'மாகாண சுயாட்சி' என்பதுதான் மாண்ட்போர் சீர்திருத்தத்தின் முக்கிய சீர்திருத்தமாகும். அதன் அடிப்படையில் ஒரு கூறாக

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட மந்திரிகளால் நிர்வாகம் நடத்தப்படுமெனவும், பிறிதொரு கூறாக நிர்வாகச் சபையில் கவர்னர் பொறுப்பில் நடத்தப்படும் எனவும் இரு கூறாகப் பிரிக்கப்பட்டு, இதுவே 'இரட்டை ஆட்சி' என்று வழங்கப்பட்டது.

அவ்வகையில் மாகாண ஆட்சியானது ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Department) என்றும், மாற்றப்பட்ட துறைகள் (Transfered Department) என்றும் பிரிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறையில் தான் பத்திரிகை இடம்பெற்றது.[6]

இப்புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி சென்னை மாகாணத்தில் 1920 நவம்பர் 30இல் பொதுத் தேர்தல் நடை பெற்றது.

இத்தேர்தலில் காங்கிரசு இரட்டை ஆட்சி முறையை எதிர்த்துப் பங்கேற்பதைத் தவிர்த்தது. இன உணர்வின் எழுச்சி காரணமாக ஆங்கிலேயர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டால் ஒரு குறிப்பிட்ட அரசு ஏற்பட்டுவிடும் என்ற அச்ச மிகுந்த எண்ணம் மக்களிடையே ஆழமாகப் பதிந்திருந்தது. இந்த எண்ணத்தினாலும், இன உணர்வின் எழுச்சி காரணமாகவும் 'நீதிக் கட்சி' மக்களிடம் பெருஞ் செல்வாக்குப் பெற்று வளரமுடிந்தது.[7] முதல் தேர்தலில் நீதிக்கட்சி, ஹோம்ரூல் இயக்கம், முஸ்லீம்லீக், சென்னை மாகாணச் சங்கம் ஆகியவை தேர்தலில் போட்டியிட்டன. 98 இடங்களில் 63 இடங்களை நீதிக்கட்சி பெற்றது.

1923இல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி வெற்றி பெற்றது. மக்கள் இன உணர்ச்சி கொண்டு அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றனர். நீதிக் கட்சி சமய மறு மலர்ச்சிக்கும் சமய சீர்திருத்தத்திற்கும் வழிகாண முயன்றது. இத்தகைய சூழலில் தான் மொழியையும் சமயத்தையும் இருகண்களாகக் கொண்டு 'செந்தமிழ்ச் செல்வி' திங்கள் இதழ் 1923ஆம் ஆண்டுத் தைத் திங்களில் தோற்றம் பெற்றது.

இதழ் அறிமுகம்

'செல்வி' பெண்பாற்பெயர்!
'செந்தமிழ்' பெண்பாற்பெயர்!
'செந்தமிழ்ச் செல்வி'யும் பெண்பாற்பெயர்!

அன்னை மொழிக் காவலுக்கும் வளர்ப்புக்கும் அமைந்த பெயரும் அன்னையின் பெயரே![8]

1923ஆம் ஆண்டு (துந்துபி ஆண்டு, தை) ஜனவரி -பிப் பிரவரி மாதத்திலிருந்து திங்கள் தோறும் வெளிவந்த செந்தமிழ்ச் செல்வி தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதையாகத் தோற்றம் கொண்ட செந்தமிழ்ச்செல்வி 1997ஆம் ஆண்டு செப்டம்பர்த் (ஆவணி) திங்களில் சிலம்பு 'க' பரல் 'க' என்னும் தோற்ற நிலை யிலிருந்து சிலம்பு 72, பரல் 1 என்னும் வளர்ச்சி நிலையை எட்டியுள்ளாள்.

தமிழ் மொழியில் வெளிவரும் தலைசிறந்த இலக்கிய இதழ் களில் ஒன்றாகச் செந்தமிழ்ச் செல்வி விளங்குகின்றது. திருநெல் வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின் றும் திங்கள் தோறும் வெளி வருகின்றது. (The South India Saiva Siddhanta works publishing society, Tinnevelly Ltd., Tinnevelly & Madras)

Published by V. Subbiah pillai for the S.I.S.S.W.P.Society, Tinnevelly, Ltd.,& printed by sivakami Vilasam press, Madras[9]

சிலம்பு 72 பரல் -1 செப்டம்பர் 1997 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி - தென்னிந்திய தமிழ்ச்சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை 108, அப்பர் அச்சகத்தில் திரு.இரா. முத்துக் குமாரசாமி அவர்களால் அச்சிடப் பெற்றது.

ஆசிரியர் இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்[10]

தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை பதிப்பாசிரியராக இருந்து தாமும் மணிவிழாவும், முத்து விழாவும் வயிரவிழாவும் கண்டு, தம் வளர்ப்புச் செல்விக்கும் மணிவிழாக் காண வளர்த்தவர். தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை இதன் நிறுவனர் ஆவர். தற்பொழுது இதன் ஆசிரியராக இரா. முத்துக்குமாரசாமி விளங்கு கின்றார்.

இதழ் தோன்றக் காரணம்

1. பிறமொழிகள் முளைப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றி முடியுடை வேந்தர் பலரால் வளர்க்கப் பட்டுச் சொல்வளத்தானும், பெருட்பெருக்கானும், ஓசை யொழுக்கானும் ஒப்புயர்வின்றி ஒளிர்ந்த தமிழரசி அன் றிருந்த நிலையை எண்ணிப் பார்த்தமை காரணமாகத் தோற்றம் பெற்றது.

2. நம் அரும்பெறல் அன்னை, திருவள்ளுவர், நக்கீரர், நால்வர், ஆழ்வார், சேக்கிழார், கம்பர், மெய்கண்டார், சிவஞான முனிவர் முதலிய அறிவறிந்த மக்களைப் பெற் றும், இங்ஙனம் தனது வீறு குன்றியிருத்தலைக் கண்ணா ரக் கண்டும் வாய்வாளாமை மேற்கொண்டிருத்தல் நன்றோ? இவையிற்றைப் பல்லாற்றானும் எண்ணி எண்ணி ஏக்கமுற் றிருந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் குறை களை ஒருவாறு ஒழிக்கத் துணிந்து செந்தமிழ்ச் செல்வி என்னும் பெயரான் ஒரு மாதப் பத்திரிகையைத் தமது கழகத்தினின்று வெளியிட முற்போந்தனர்.

3. செந்தமிழ்ப் பாவையைத் தொழத்தகு தெய்வமாகச் செய்த சைவப் பெருமக்கள், தமிழ்ச் செல்வியைத் தமது கண்ணே போல் ஓம்பிப் பலப்பல அரிய நூல்களையும் உரைகளை யும் இயற்றிப் பண்டைக் காலத்தே வளர்த்தது போல இன்றும் சீராட்டிப் பாதுகாத்தலைத் தமது தலைமைக் கடனாகக் கொண்டனர். எனவே, செந்தமிழ்ச் செல்விக்குத் தமிழ் ஒரு கண்ணும் சைவம் மற்றொரு கண்ணுமாகத் துலங்கும் என்பது சொல்லாமலே அமையும்.[11]

இதழின் நுவற்பொருள் : அணுகுமுறை

ஒரோவொரு பொருள் பற்றி மட்டும் பத்திரிகை நடத்துதல் மேதக்க தேனும், அன்றைய நாட்டின் நிலைமையை நோக்கின் அது நடைபெறுதல் அரிதெனத் தோன்றியது. ஆதலின் மொழி, சமயம் என்னும் இரண்டு பொருள்களையும் தலைமைப் பொருள் களாக ஒருங்கு கோடல் இன்றியமையாததாயிற்று.

1. தமிழ் வகையில் பழஞ்சங்கச் செய்யுட்கள், புராணம், இதிகாசம், பிற்காலத்துச் சான்றோர் நூல்கள் முதலிய வற்றிலுள்ள அரும்பொருட்டிறங்களைப் புத்தம் புதிய முறையில் ஆராய்தல்.

2. தமிழ் வரலாறு, தமிழ்ப் புலவர் வரலாறு, தமிழ் மன்னர் வரலாறு முதலியனவும் அவ்வப்போது எடுத்துரைத்தல்.

3. இதன்கண் தமிழ் நன் மக்களுக்குப் பெரும் பயன்தரும் பொருள்கள் பிறமொழிகளினின்று மொழி பெயர்த்து வெளியிடுதல்.

4. சொல் ஆராய்ச்சி, புதுக் கருத்துக்கட்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாக்கல் முதலியனவும் இதில் பேரறிஞரால் எழுதுதல்.

5. தமிழ் மொழியின் தனித்தன்மையை இனிது விளங்கச் செந்தமிழ்ச் சொற்களே இதனுள் பெரிதும் பெய்துரைத்தல்.

6. தமிழின் சீரிய நிலையை அரசியலாரும் கல்வித் துறையினரும் அறிந்து உரியன புரியுமாறு இது கிளர்ச்சி செய்தல்.

7. இது சமயத்திறத்தில் எம்மதமும் சம்மதமாகக் கொண்டு சைவ சமய நூற் பொருள்களைத் தெள்ளத் தெளிய எவரும் உணருமாறு நன்கெடுத்து விளக்குதல்.

8. புறச் சமயங்களிலுள்ள உண்மைகளையும் சமயம் நேர்ந்துழிக் கோட்டமின்றி நடுநிலையில் நின்றுகூறல்.

9. பொருட்பேறுடைய உலகச் செய்தித் திரட்டையும் அடிக்கடி வெளியிடுதல்.

10. ஒழுகன்முறைச் (ஆசார) சீர்திருத்தம் பற்றி வாய்த்த போதெல்லாம் தனக்குத் தோன்றியதை அஞ்சாது எடுத்துரைத்தல்.

11. படிப்போர் உள்ளத்தை மகிழ்வித்து, உணர்ச்சியை ஊட்டி, அறிவைப் பெருக்கும் கூற்றுக்களில் முனைந்து நிற்றல்; கண்ணுக்கு விருந்தாகக் காட்சிப் படம் பல கொண்டு திகழ்தல்.

12. எல்லாவற்றிற்கும் மேலாக, இஃது அரசியலைக் குறித்து யாதும் புகலாது மோன விரதம் பூண்டு நிற்றலை உறுதியாக இறுதிவரை கடைப்பிடித்தல்.

இந்தவகைப் பொருட்பார்வையினின்றும் அணுகுமுறையினின்றும் எந்தக் காரணங் கொண்டும் சற்றும் விடாது, விடாப் பிடியாக ஓர் இலக்கிய ஏடு என்னும் வரையறைக்கு உட்பட்டுச் செந்தமிழ்ச் செல்வி செயலாற்றி வருவது பாராட்டத்தக்கதேயாகும்.

முன்னதாக நாட்டு நிலையும், அரசியல் சூழலும் ஒருவாறு சுட்டிக் காட்டப் பெற்றது. சூறாவளிச் சுழற்காற்று திக்கெட்டும்

வீசவும் செந்தமிழ்ச் செல்வி ஒருகோடு போட்டுக் கொண்டு கருமமே கண்ணாக, முன் வைத்த செயற்பாடுகளே சிந்தையாக, செயலாகத் துலங்கி வருவதை நோக்க வேண்டும்.

மக்கள் வளர்ச்சிக்கு - மறுமலர்ச்சிக்கு எத்தனையோ வகையில் இதழ்கள் உதவுகின்றன. கலை வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என்று துறைதோறும் வளர்ச்சிக்கான உரமாக இருப்பவை இதழ்களே என்பர் அ.மா.சாமி.[12]

செந்தமிழ்ச் செல்வி செய்திகளைத்தரும் களமாக இராமல் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இதழ்கள் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வூட்டல் என்ற மூன்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன என்பது உண்மை. உள்ளத்தை மகிழ்வித்து உணர்ச்சியை ஊட்டி அறிவைப் பெருக்கும் கூற்றுகளில் இவ்விதழ் முனைந்து நிற்பதை நோக்கலாம்.

இதழமைப்பு

இதழ்களின் நோக்கங்களுள் ஒன்று பொதுமக்கள் உணர்வைப் புரிந்து அதற்குச் செயல் வடிவம் கொடுப்பது. செந்தமிழ்ச் செல்வி - தமிழர் திருநாளாம் தைத்திங்களிலே நிறைமலையாம் மறைமலையடிகளார் வள்ளுவர் திருநாளென வகுத்துத் தந்த நாளிலே பிறந்தாள். அவ்வாண்டு மெய் கண்டான் ஆண்டு 700 கிறித்தவ ஆண்டு 1923.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது

சிலம்பு க. மெய்கண்டான் ஆண்டு எள, தைத்திங்கள், பரல் க.

1923 ளு ஜனவரி-பிப்ரவரி மீஉ

பொதுவாக அமைப்பில் அட்டைப் படங்களுக்கு முதன்மை அளிக்கப்படுகின்றது. இதழ்களின் நுழைவு வாயிலாக அட்டைப் படம் இருக்கின்றது.

செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள் (Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A.,M.L., அட்வகேட், நியாயகலா சாலைப் பேராசிரியர், சென்னை.

2. திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T., பாடசாலை டிப்டி இன்ஸ்பெக்டர், சைதாப்பேட்டைப்பிரிவு.

3. திருவாளர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், தலைமைத் தமிழாசிரியர், ஹீபர் கலாசாலை, திருச்சிராப்பள்ளி.

4. திருவாளர் துடிசைக்கிழார் அ.சிதம்பரனாரவர்கள் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், பல்மனேரி.

5. திருவாளர் M.V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B.A. பென்ஷன் தாசில்தார், சிந்து பூந்துறை.

6. திருவாளர் வித்துவான் மு. கதிரேசச் செட்டியாரவர்கள், மகிபாலன் பட்டி.

தமிழ்ப் பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார், அறிஞர் கா.சுப்பிரமணிய பிள்ளை, அறிஞர் பா.வே. மாணிக்க நாயகர், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார், அறிஞர் காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பெருஞ்சொல் விளக்கனார் அ.மு. சரவண முதலியார், அறிஞர் மா.வே. நெல்லையப்ப பிள்ளை, வழக்கறிஞர் தூ.சு. கந்தசாமி முதலியார், சைவப் பெரியார் க.சச்சிதானந்தம் பிள்ளை, துடிசைக்கிழார் அ.சிதம்பரனார், பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார், சைவப் புலவர் ப. இராமநாத பிள்ளை முதலாய பெருமக்களை இதழாசிரியர் குழுவில் கொண்டு இலங்கியது.

செந்தமிழ்ச் செல்வி
சிலம்பு -72 ; பரல் 1
செப்டம்பர் 1997
வள்ளுவர் ஆண்டு 2028
ஆவணி

நிறுவனர் : தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு:

முனைவர் பொன் கோதண்டராமன்

முனைவர் தமிழண்ணல்

முனைவர் க.ப. அறவாணன்

முனைவர் கு. சுந்தரமூர்த்தி

பேராசிரியர் கே.எஸ். சிவராமலிங்கம்

கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்

முனைவர் வீ.ப.கா. சுந்தரம் கவிமாமணி

வேலூர் ம.நாராயணன், எம். ஏ.,

ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்,

நூற்றாண்டு விழா, கழக ஆட்சியர், தாமரைத்திரு வ. சுப்பையா பிள்ளை, 1897 -1983 அவர்களின் திருவுருவப் புகைப் படம் அண்மையில் வெளிவந்த இந்த இதழின் முகப்புப் பக்கத்தை அலங்கரிக்கின்றது. பக்க எண்கள்: ஆண்டு முழுவதற்கும் தொடர்ச் சியாகக் குறிக்கப்படுகின்றன. முதல் இதழ் முப்பத்திரண்டு பக் கங்களில் முடிந்துள்ளது.

முதல் இதழின் முடிவில் 'இந்துமத அற நிலையப் பாதுகாப்பு மசோதா' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை ('செந்தமிழ்ச் செல்வி' அநுபந்தம் துந்துபியாண்டு தைத்திங்கள்) இணைக்கப்பட்டுள் ளது. முதல் முப்பத்திரண்டு பக்கங்கள் க,உ,ங,ந. என்று தமிழ் எண்களாக இருக்கின்றன. அநுபந்தம் 1,2,3 எனத் தொடங்கி 14-16 பக்கங்கள் தனியாக எண்ணிடப்பட்டுள்ளது.

அடுத்த இதழ் 33 ஆம் பக்கத்துடன் தொடங்கியுள்ளது. ஓராண்டு முடிந்த பின்புதான் மீண்டும் முதல் பக்கத்தில் இருந்து பக்க எண்கள் தொடங்கும். அந்நாளில் ஆண்டு முடிந்ததும்,

அத்தனை இதழ்களையும் மொத்தமாகக் கட்டடம் செய்து விற்கும் வழக்கம் இருந்தது. அதற்கு வசதியாக இவ்வாறு தொடர் எண் கொடுத்தார்கள். ஓர் இதழின் விலை ரூ. 3 8 0 ஆக இருந்திருக்கின்றது. அந்நாளில் தனி இதழ் விற்பனை மிகவும் குறைவு. கையொப்பக்காரர்களே அதிகம். அவர்களை நம்பித்தான் இதழ்கள் நடந்தன. சந்தாதாரர்கள் கையொப்பக்காரர்களென்றும், ஆசிரியர், பத்திராசிரியர், பத்திராதிபர் என்றும் நல்ல தமிழ்ச் சொற்கள் அந்நாளில் பயன்படுத்தப் பெற்றன.

முதல் இதழில் பத்திராசிரியரின் வேண்டுகோளாக அமையும் பகுதியை நோக்கலாம்.

'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னினான் முடியும்' என்னுந் தித்திக்குந் திருவாசக முளதாகலின், பொருட்பால் சுரந்தூட்டும் செவிலித்தாயர் பலர் வேண்டும். 'செல்வி' பாலுண்டு உடலுரம் பெற்று வளரத் தமிழரசரும், தமிழ்ச் செல்வரும், தமிழ் மடாதிபதிகளும் ஏனைய தமிழ்ப் பெருமக்களும் முன்வருவராயின் அரும் பெரும் புலவர் பலர் அவட்குப் புத்தாடை புனைவர்; அணி பல அணிகுவர். கண்டோர் கண்ணும் நெஞ்சும் கட்டுண்ணுமாறு நமது 'செல்வி' கவின் கனிந்து இலங்குவள்' (பக் ச,ரு)

தொடக்ககாலத்து இதழ்கள் எல்லாம் 'வாழ்க அந்தணர்' என்னும் திருஞான சம்பந்த சுவாமிகளின் திருப்பாசுரத்தை இதழ் முகப்பில் தாங்கி வந்தன.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

'பழைய சிலம்பு இதழ்களைக் கையில் எடுக்கும் பொழுது மனத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றுவதை உணரலாம். இதற்குக் காரணம் இதழின் தொடக்கத்தில் காணப்படும் கடவுள் வணக்கப் பாடல்களும் அவற்றுக்குரிய சிறிய - தெளிவான விளக்கக் குறிப்புக்களுமேயாம்... செல்வியின் இதழைப் பயிலும் ஒருவர் திங்கள் தோறும் ஒன்றிரண்டு திருமுறைப் பாடல்களைப் பொருளுடன் உணர்ந்து கொள்வதற்கு இம்முறையினால் வாய்ப்பிருந்தது. இது நாளடைவில் அவர்களுக்குத் திருமுறைகளை முறையாகப் பயில

வேண்டும் என்னும் அவாவினைத் தோற்றுவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை'[13] என்பர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

உள்ளுறை

ஓராண்டுக் கட்டமைப்பில் முதலிலேயே 'உள்ளுறை' ஆண்டு முழுவதும் வெளிவந்த இதழ்களின் கட்டுரைத்தலைப்புகள் அகர வரிசையில் அமைந்திருப்பது சிறப்பாகும். அதிலும் (* இக்குறி யிடப்பட்டவைகள் இத் தொகுதியில் முடிவுபெறாது தொடர்வன) என்றெழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உள்ளுறையின் இறுதியில் 'மதிப்புரை'ப் பகுதி அமைந்திருப்பதும் கவனிக்கத்தக் கது. சான்று: சிலம்பு 2: மதிப்புரை:- 52(ருஉ) எ ச அ, எ அ அ, உ ங உ, ங உ ய, ச எ கூ

குறிப்புக்கள்

'உள்ளுறை'யை யடுத்து இஃதமையும். ஒரு நன்கொடை, ஆண்டு விழாக்கள், அறிஞர்களின் மறைவு, மகா நாடுகள், சிவன டியார் திருக்கூட்டம், சைவ சித்தாந்த சங்கத் தேர்வுகள் (பரீட்சை கள்), பேரறிஞர்களின் மாட்சிமை, வாழ்நாள் கையொப்பம், விழா வாழ்த்துகள் போன்றவை குறிப்புக்களில் பக்க எண்களோடு அமையும்.

திருவுருவப் புகைப்படங்கள்

5, 6 புகைப் படங்களோடு தொடங்கிய இதழ் வளர வளரப் படங்களின் எண்ணிக்கை மிக்கு அமையுமாறு வளர்ந்தது. சான்று: சிலம்பு 2 1. திருநெல்வேலி, ஸ்ரீ காந்திமதியம்மை கோவில் பொற் றாமரைக் குளம் 2. திருநெல்வேலி தத்துவப்பிரகாச மண்டபம், 3. திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் அறுகாற் பீடம் 4. திருநெல்வேலி விஷ்ணு நந்தி 5. சீகாழிக் கோயிற்றிருக்குளம் (2 தோற்றம்) 6. திருநெல்வேலி, ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் சந்நிதி.

பத்தாண்டு வளர்ச்சி

முதல் பத்தாண்டுகளின் தொகுதிகளையே என்னால் முறை யாகப் பார்க்க இயன்றது. திங்களுக்குத் திங்கள், ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி கூடுமாற்றைக் கண்ணுற முடிகின்றது.

இதழ் முளைக்கும்போதே நோக்கும் போக்கும் மிகச்சிறப்பாக வரையறுக்கப் பெற்றன. அந்நோக்கும் போக்கும் அரண்களாக

அமைந்து, ஆற்றொழுக்காக அன்னைத் தமிழுக்கும் ஆக்கம் அளித்துள்ளமையைக் காண முடிகின்றது. ஆண்டுதோறும் உயர் வடைந்து வந்தமையை உணரலாம். 32 பக்கங்களுடன் முதல் மூன்றாண்டுகள் முகிழ்த்த செல்வி நான்காம் ஆண்டில் 48 பக்கங் கள் கொண்டது. ஐந்தாம் ஆண்டில் திடீரென்று மேலொரு 16 பக்கங்கள் கூடப்பெற்று 64 பக்கங்களாக மேலோங்கிற்று.

அதுமட்டுமன்றி, பழந்தமிழ் மக்களின் சீரிய பழக்க வழக்கங் களின் விளக்கங்களை விளக்கப்படங்களுடன் ஒவ்வோரிதழின் இறுதியிலும் மேற்கொண்டு மிளிர்ந்தது.

ஆறாம் ஆண்டில், கடவுள் வணக்கத் தேவாரப் பாட்டுத் திங் கள் தோறும் வெவ்வேறு தேவாரங்களாய்ப் பலவானதோடு அவற் றிற்கெல்லாம் தெளிவான உரைகளும் எழுதப்பெற்றது. அவ்வுரை கள் தாமும் உரையிலக்கியத்திற்கு ஓர் ஆக்கமாகப் பல்வேறு முறைகளிலும் எழுதி எடுத்துக்காட்டிற்று. அவ்வாண்டில் மற்றுமோர் அரும் பெருஞ்சிறப்பினால் செந்தமிழ்ச்செல்வி உயர் வடைந்தது. முன் ஆண்டில் ஏற்று வந்த வரி விளக்கப் படங்களெல் லாம் (Line Blocks) ஆறாம் ஆண்டில் பூச்சுவிளக்கப் படங்களாக (Half-Tone-Blocks) அழகியதாய் ஏற்றுவந்தது.[14]

அதுவரை விளக்கக் கட்டுரைகள் முன்பின் தொடர்பின்றித் தனிப்பகுப்பு முறையில்லாமல் இருந்தன. அந்த அமைப்பு முறை யிலும் வளர்ச்சி - தொடர்பின்றித் தனித் தனிப் பொருள்கள் பற்றி முன்னிருந்தது போலல்லாமல், தமிழ் மக்களின் பழக்க வழக்கங் களில் முதன்மையானதும் நுட்பமானதுமான அகப்பொருட் பழக்கத் தையெடுத்து அதனைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் ஒவ்வோரிதழிலும் எளிய செழுந்தமிழ் நடையிற் கொண்டு பெரும்பயன் காட்டி விளங்கும் வகையில் அமைத்தது.

வேறு பல அருந்தமிழ்க் கட்டுரைகளும் பலப்பல தலைப்பு களின் கீழ்ப் பகுதிபகுதியாக இதழ்தோறும் அறிஞர்கள் பால் திரட்டி வந்ததை ஒரு வளர்ச்சி முறையாகக் குறிக்கலாம்.

செந்தமிழ்ச்செல்வி பெரும்பாலும் பிறமொழிக் கலப்பில்லாத தனிச் செந்தமிழ் நடையிலேயே பயின்று திகழ்ந்தமையைக் குறிப் பிட்டே ஆகவேண்டும்.

அடுத்த நிலையில் ஏழாம் சிலம்பில் கடவுள் வணக்கத் தேவா ரப்பாடல் ஒன்றேயாயில்லாமல் ஒவ்வோர் இதழிலும் ஒன்றுக்கு

மேற்பட்ட பல பாடல்கள் உரையுடன் விளங்குகின்றன. ஆறாம் ஆண்டில் வெளிவந்த அகப்பொருட் கருத்துக்களுக்கு இனமான புறப்பொருட் கருத்துக்கள் அவ்வாண்டில் அவை தம்மின் 12 விளக்கப் படங்களோடும் (Half - Tone) பன்னிரண்டு ஆரய்ச்சிக் கட்டுரைகளாக இதழ்தோறும் வெளிவந்துள்ளன.

சமயத்தொடர்பாகவும் மொழித் தொடர்பாகவும் பிற உண்மைத் தொடர்பாகவும் மேனாட்டு மக்கள் காணும் அரிய புதுக் கருத்துக் களிலும் ஓராசிரியன் கருத்தெடுத்துப் பன்னிரண்டு பகுதிகளாக்கிப் பன்னீரிதழ்களிலும் ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்த்து வெளி யிடப் பெற்றுள்ளது. அவ்வாண்டில் (1929-1930) புதுக்கதை (Novel) என்னும் புதினம், கதையிலக்கியத்துக்குக் காட்டான முறை யில் வெளிவந்துள்ளது. இந்தச்சிலம்பிலே குறியீட்டுச் சொற்கள் நீங் கலாக ஏனைப் பிறமொழிச் சொற்கள் தமிழில் விரவாதவாறு கருத் தூன்றப் பெற்றமையை வளர்ச்சிப்படி நிலையாகவே கொள்ளலாம்.

பத்தாண்டுத் தொகுதிகளைக் காணும் போது, அதன்கண் அரும் பெருந்தமிழ்ப் புலவர்களால் எழுதப்பட்ட தமிழ் இலக் கணம், இலக்கியம், மொழியாராய்ச்சி, சைவசமயம், திருமுறை, பிறசமயங்கள், புராணம், இதிகாசம், நுண்ணூல் எனப்படும் அறி வியல்களின் சாரம், வியப்பு மொழிகள் (Wits Humours), உவகை மொழிகள், சீர்திருத்த அறிவுரைகள், அறவுரைகள் முதலியன வளர்ச்சி நிலைகளாக, பொருளமைதியாகக் காணக்கிடைக்கின்றன.

1977ஆம் ஆண்டுப் பொன்விழாக் கண்டாள் செந்தமிழ்ச் செல்வி; 1987ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்கள் இவ்விதழ் மணிவிழா மலராக வெளிவந்தது. அறுபதாண்டு நிறைவைக் குறிக் கும் வகையில் செந்தமிழ்ச் செல்வியின் அறுபது தொகுதிகளும் விழாவிற்கு வலிமை சேர்க்கும் வகையில் பொலிவுடன் அடுக்கி வைக்கப்பட்டன. அமெரிக்க நாட்டிலுள்ள சிகாகோ ·பல்கலைக் கழகம் செந்தமிழ்ச் செல்வி இதழ்கள் முழுவதையும் தொடக்கம் முதல் நுண்படச் சுருளில் (Microfilm) பதிந்து வைத்துள்ளது. மணி விழா மலரில் புலவர் இரா. இளங்குமரனின் 'சேற்றிலே செந் தாமரை' பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியத்தின் 'பக்திநெறிப் பண்பாடு', டாக்டர் சொ. சிங்காரவேலனின் 'நக்கீரர் காட்டும் நன்னெறி', தி. இராசமாணிக்கத்தின் 'மகாசதாசிவத்திருவுரு', கு.சு. இராமகிருட்டினனின் 'அடிகளாரும் ஒரு பல் பொருட்பெயரும்', டாக்டர் இரா. கலைக்கோவனின் 'கரணக் குழப்பங்கள்' ஆகிய

ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்று மலநனி மலர்ந்துள்ளமை சிறப்பாகும்.[15]

தமிழ் இதழ்களின் தொடக்க காலமான1831 முதல் 1925 வரை தோன்றிய தமிழ் இதழ்களில் இன்றுவரை நீடித்து நிற்ப வற்றை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

இடையறவு

இரண்டாம் உலகப் போரினால் 1943இல் தாள் கட்டுப் பாட்டுச் சட்டம் வந்தது. அதனால், வெள்ளைத்தாள்களில் (அச்சுத் தாள்கள்) செய்தித்தாள்களை அச்சிடக் கூடாத நெருக்கடி ஏற் பட்டது. அப்போது செய்தி அச்சுத்தாளில் செந்தமிழ்ச் செல்வியை அச்சிட்டு வெளியிட விரும்பாமல் 1944 மேத்திங்கள் முதல் 1947 ஆகஸ்டுத் திங்கள் முடிய நிறுத்திவைக்கப் பெற்றது. 1947 செப்டம்பர்த் திங்கள் முதல் மீண்டும் மறுமலர்ச்சி நடை யிட்டது. இவ்வோர் இடையறவு அன்றிச் செல்வி இடையறவு பட்டதில்லை.

நோக்கையும் போக்கையும் வரையறுத்து விட்டுப் புனல் சாயப் புல் சாயுமாறு போலவோ, சுழற்காற்றில் அலை சருகு போலவோ தான்தோன்றிப் போக்கில் செல்வி சென்றது இல்லை. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்பதோ, காலையிலே ஒரு நோக்கம், கடும்பகலில் ஒரு நோக்கம், மாலையிலே ஒரு நோக்கம், மறுநாளில் ஒரு நோக்கம் எனப் பல திறங்காட்டிப் பறையறைதலையோ செல்வி என்றும் அறியாள். 'வாரேன் என்னான் அவர்வரையன்னே' என்ற சங்கச் சான்றோர் வாய்மொழி (புறம். 108) வரையறை கடவாப் பாரிக்குப் பொருந்துமாறு போலவே பைந்தமிழ்ச் செந்தமிழ்ச் செல்விக்குப் பொருந்துவதாம். அரசியல் நன்மை கருதி ஆரவாரம் காட்டாமல் அமைந்த கொள்கைப் பணி யால் சிறந்து விளங்குதல் செல்விக்கு என்றும் இயல்பாம் என்பர் புலவர் இரா. இளங்குமரன்.[16]

அவள் சிலம்பில் 'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய மாமலை வயந்த காமரு மணியும்' (புறம்.218) உள்ளிடு பரல்களாகக் கிடந்து இசையொலி எழுப்பி இன்புறுத்துகின்றன. அவ்விசையின் சீர்மையும் செம்மையும் செறிவும் நிறைவும் திங்கள் அளவில் வாழ்வு தராமல், போற்றுவார் போற்றும் காலமெல்லாம் பொலியும் பொன்னென நிலைத்த வாழ்வு அவளுக்குத் தருகின்றன. கலைக் களஞ்சியம் எனக் காலமெல்லாம் காத்துக் கற்கவும் செய்கின்றன.

ஆராய்ச்சியாளர்க்கு வித்தாய், அரும்பெரும் புதையலாய் விளங்கு கின்றன. கூற்றையும் ஆடல் கொண்ட ஆற்றல் இது! காலவெள் ளத்தையும் கடந்த கவின் இது! ஊழி ஊழி வாழும் உயர்வு இது! "கூற்றம் குதித்தலும் கைகூடும் தோற்றலின், ஆற்றலும் தலைப் பட்டவர்க்கு" என்பதை மெய்ப்பிக்கும் மெய்ம்மையும் இது!... அகவை முதிரமுதிர அணிநலஞ் சிறந்து விளங்குகின்றாள் செந் தமிழ்ச் செல்வி![17]

செந்தமிழ்ச் செல்வியின் பங்களிப்பு

செல்வியின் எழுபத்தோராண்டு காலத் தொண்டுகளைக் கணக்கெடுக்கும்போது பல்துறைப் பங்களிப்புகளும் பளிங்கெனத் தோற்றம் தருகின்றன. சமயப்பணி, இலக்கியப்பணி, வரலாற்றுப் பணி, சொல்லாராய்ச்சி, நாடகப் பணி, இசைப்பணி, மொழி பெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம், தமிழ் முழக்கம், அறிவியல் ஆய்வு முதலானவற்றை எடுத்துக்காட்டலாம்.

சமயத்திற்குப் பங்களிப்பு

தமிழகத்தில் தமிழ்ப்பணிக்கும், சமயப் பணிக்கும் எனத் தொடங்கப்பட்ட இதழ்களுள் தொடர்ந்து நடைபெறுவதும் தொடக்க காலம் முதல் ஆண்டுதோறும் வளர்ச்சியும், எழுச்சியும் பெற்றுச் சிறந்து விளங்குவதும் செந்தமிழ்ச் செல்வியின் சிறப்புக்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். தொடக்கம் முதல் இன்றளவும் அமைந்த இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள் இதற்குக் காரணமான வர்கள் எனலாம். தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம், சைவசித்தாந்த சங்கம் என்னும் இரண்டு அறநிலையங்களின் பணியினை மக்க ளிடையே பரப்புவதும், மக்களை இவ்வற நிலையங்களுக்கு ஈர்ப் பதும், ஈடுபடுத்துவதும் ஆகிய தலையாய தூதுவனாகச் செயல் பட்டதும் காரணமெனலாம்.

செல்வி சைவ மக்களுக்கு ஒரு விளக்க அறிவிப்பினைத் தந் தது. சைவ மக்கள்இல்லந்தோறும் சமயச் செய்திகளை எடுத்துச் சென்று அறிவித்தது (சிலம்பு 3). அரிய நூல்கள் சிலவற்றை வெளியிட்டது. ஒன்று, காழிக் கண்ணுடைய வள்ளலார் இயற்றிய 'மாயா பிரலாபம்' (சிலம்பு 11) இரண்டாவதாக, திருவாசகம் திருப்படையாட்சி முதற்பாடலுக்குத் திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் எழுதிய அழகிய உரையினைச் செந்தமிழ்ச் செல்வியே கண்டு வெளியிட்டுச் (சிலம்பு 4) சைவ உலகிற்கு

அறிமுகப்படுத்தியதைக் கூறலாம். திலகவதியார் (சிலம்பு 4 - பரல் 5) கட்டுரை, பிரதோஷ விதி (தா. முத்துக்கருப்பபிள்ளை, சிலம்பு 4, பக்.224-232) திருவள்ளுவர் சித்தாந்த சைவர் (ஸ்ரீலஸ்ரீ வாலையானந்த சுவாமிகள், சிலம்பு 4, பக்.449-507) போன்ற கட்டுரைகளையும் சிறப்பு நிலைப் பொருளமைதிக்குச் சான்றாக்கலாம்.

ஞானநூலினை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் ஆகிய ஐந்தினையும் சிறந்த ஞான பூசையெனச் சாத்திரம் கூறும். இத்தகைய ஞான பூசை தமிழகம் எங்ஙனும் தமிழ் நெறியில் நடைபெறுவதற்கு ஓவாது பணிபுரிந்து வருகின்றது செந்தமிழ்ச் செல்வி.[18]

தமிழ்ப்பணி

தமிழ் வளர்ச்சி என்பது இருவகைப்படும். ஒன்று, அவரவரும் தமிழ் மொழியை நன்கு பயின்று நுகர்ந்து இன்புறுதல்; இரண்டு அங்ஙனம் இன்புறுவோர் தொகை வரவரப் பெருகுதற்கு ஆவன வெல்லாம் செய்தல். கல்வி அவ்வறச் செயற்கேற்ற கருவியாகும். அது தமிழ்மொழி வாயிலாக நடைபெற வேண்டுமென்று, அதற்காவனவெல்லாம் 'செல்வி' செய்து வருகின்றனள்.

'தமிழை வளர்ப்பதெப்படி?' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை, மூன்று பரல்களில் மூன்று நிலைகளில் ஒன்பதாஞ் சிலம்பில் D.N. ஆறுமுகம்பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டுமென அன்றே குரலெழுப்பியவள் செல்வி. 'தமிழ் மக்கள் நெஞ்சப் பாங்கும் இலக்கியப் போக்கும்' என்னுந் தலைப்பில் கா.சு. பிள்ளையவர்கள் சிலம்பு ஆறாம் தொகுதி 2, 3 ஆம் பரல்களில் சிறந்ததொரு கட்டுரை யாத்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றின் பிழிவாக அது விளங்குகின்றது.[19]

'பொது மக்களுக்கு இலக்கியத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கொள்கை நிலபெற்ற காலம் 19ஆவது நூற்றாண்டிலே தானென்று தோன்றுகிறது. செயற்கைச் சொன்னயத்தைப் பொருட்படுத்தாது இயற்கைப் பொருணயங் கருதிப் பண்டைச் சங்க நூல்களுக்குச் செல்லும் ஆர்வமும் பொய்புனைந்த கதைகளைத் தொலைத்து மெய்யுணரக் கருதி வரலாற்றாராய்ச்சியினை மேற்கொள்ளும் ஊக்கமும், விழுமிய விரிந்த பண்டைத் தமிழ் நாகரிக முறைக்கேற்பத் தமிழர் குடிவாழ்க்கையைச் சீர் திருத்திச் செம்மை செய்யும் நோக்கமும் எம்மொழிப் பொருளையும் தனித் தமிழிலே

வெளிப்படுத்திப் பயன்றுய்க்க வேண்டுமென்ற உறுதியும் இற்றை ஞான்றின் 20ஆம் நூற்றாண்டின் சிறப்பியல்புகளாம்' என்று அவர் தம் ஆராய்ச்சிக் கட்டுரையினை முடித்திருப்பதை நோக்கலாம்.

இந்திய நாட்டு நாணயத்தில் தமிழ்மொழி எழுத்தும் இடம் பெற வேண்டுமென விடுதலை பெறுவதற்குக் கால் நூற்றாண்டின் முன்னமே வலியுறுத்தியவள் செல்வி. தமிழர் மணவினைச் சடங்கு கள் - வழிபாடுகள் - இறுதிக்கடன் முறைகள் ஆயனவெல்லாம் தமி ழாகவே இருக்க வேண்டுமெனத் தொடர்ந்து உணர்த்தியவள் செல்வி. தமிழ் நூல்களைக் கற்றுத் தெளியும் வகையில் நூன்முறை வகுத்துக் காட்டியவள் அவள். 'தமிழ் நாட்டின் ஊர்ப் பெயர்கள்' என்னும் ஒரு கட்டுரையே சான்றுக்குப் போதுமானது (சிலம்பு 22, ப.113).

தமிழ் இலக்கியத்திற்கு ஓவிய உருக்கொடுக்க முற்பட்டவள் செல்வி. இலக்கிய ஓவியக்கலைகளை இணைத்தலில் ஈடற்ற பெருமை பெற்றவள். செல்வியால் அன்றிப் பிறவகையால் அறி யப் பெறாத பெருமக்கள் ஓவியங்கள் பலப்பல உண்மை செல்விக்கு வாய்த்த தனிச்சிறப்பாகும்.

மாகறல் கார்த்திகேய முதலியார், மறைமலையடிகளார், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆகியோர் படைப்புக்கள் சொல் லாராய்ச்சி எல்லையை விரித்துக் காட்டிய விழுமிய சொத்தாகும். 'தமிழ்ப் புலவர் வரிசை' என முப்பது நூல்கள் செல்வியில் வெளி வந்த கட்டுரைத் தாங்கல்களாகும். அவற்றுள் 770 புலவர்களின் வரலாறுகள் செறிந்துள்ளன. பொருநை நாட்டுப் புலவரென இருபத்தெண்மர் வரலாறு தனியாகக் குறிப்பிடத்தக்கது. பல்வேறு நாட்டுப் புலவர்கள் வரலாற்று வரிசை வெளிவர வித்தாயிற்று அது. செல்வியில் அடங்கும் நாட்டு வரலாறு, மொழி வரலாறு கட்டுரைகள் செம்மையானவை. முதல் சிலம்பின் முதற் கட்டுரையே 'தமிழகம்' பற்றிப் பண்டிதர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய கட்டுரைதான். அடுத்த நிலையில் 'திருநான்மறை விளக்கம்' என்னுந் தலைப்பில் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வரைந் தது. இவை மொழியும், சமயமும் இருகண்கள் என வரையறுத்துக் கொண்ட கொள்கையின் தடங்களாம்.

மொழிபெயர்ப்புப் பணி குறிக்கத்தக்கது. அப்பணி ஆத்தி சூடியில் தொடங்கியது. அறிஞர் டி.பி. கிருட்டிணசாமி ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, இனியவை

நாற்பது, இன்னாநாற்பது எனத் தொடர்ந்து தமிழ் நூல்களை உலக மொழியாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதேபோல, ஆங்கில மொழிக் கருத்துக்களைத் தமிழ் வளர்ச்சிக்குத் துணையாகும் வகையில் அறிஞர் பேக்கன், ஜேம்சு ஆலன், கோல்டுஸ்மித் ஆகியோர் கட்டுரைகளைக் கவினுறப் பெயர்த்துத் தந்தாள் செல்வி. தாகூர் பாடல்கள், கிரேக்க மெய்ப்பொருள்கள் தமிழாக்கம் செய்யப் பெற்றன. கலைச் சொல்லாக்கப் பணியும் அருமையான பங்களிப் பாகும்.

செல்வி தந்த 'அறிவியல் ஆய்வு' ஆழங்காறப்பட்டது. 'திருவள்ளுவர் ஒரு மர நூல் பேராசிரியர்' என்னும் ஆராய்ச்சி சிறப்புடையது. சங்க இலக்கியத்தில் செடி, கொடி விளக்கம், விலங்கின விளக்கம், புள்ளின விளக்கம் வரை ஒளிகான்றது. பொருளியல் கட்டுரைகள் பொன்போற் போற்றத்தக்கவை.

செந்தமிழ்ச் செல்வியின் இலக்கணத் தொண்டு ஈடு இணையற்றது.[20]

முடிவுரை

இதழ்களின் நோக்கங்கள் பல. அவற்றுள் ஒன்று பொது மக்கள் உணர்வைப் புரிந்து அதற்குச் செய்தி வடிவம் கொடுப்பது, மற்றொரு நோக்கம் சில விரும்பத்தக்க உணர்வுகளை மக்களிடையே தோன்றச் செய்வது. மூன்றாவது பொதுமக்கள் குறைகளை அச்சமின்றி வெளியிடுவது.[21] இந்த மூன்று முத்தான கருத்துக்களையும் செல்வி, திங்கள் இதழின் வழிகாட்டும் ஒளிவிளக்காகக் கொண்டாள் என்பதைப் படித்துணரலாம். அவ்வகையில் 'மாணாக்கர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள்' என்னுந் தலைப்பில் (The Ideal of a Students life) சிந்து பூந்துறை மா.வே. நெல்லையப்பபிள்ளை எழுதிய கட்டுரை மாணாக்கரின் உடற் பயிற்சி, மனப்பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி, சமயப்பயிற்சி ஒவ்வொன்றிலும் மாணவர் அறிய வேண்டிய சில பொருள்களைத் தெளிவிப்பது இன்றைக்கும் பொருந்தும்.[22]

செந்தமிழ்ச் செல்வியின் கடந்தகால எழுபத்தொரு சிலம்புத் தொகுப்புக்களையும் ஒரு சேரப் படித்தறியும் வாய்ப்புப் பெற்றோர் பல்துறைப் பேரறிஞராகலாம்; வரலாற்றை - தமிழக, தமிழிலக்கிய வரலாற்றை நுண்ணித்தறியலாம். தமிழர்கள் வரலாற்றைத் தெளிவாக உணரமுடியும்.

காலங்காட்டும் இயல்பிற்கேற்பப் பரந்த நோக்கோடு நன்னெறி நின்றுழைத்தல் ஒன்றே நமது கடமை. அவ்வுழைப்பின் பயனைக் குறித்தாராய்தலும் சாலும். செல்வியினாற் பெறும் பயன் பெரிது, நிறைகள் நிறையவுள; குறைகள் சிலவே, அதைக் குறித்துப் பேசும் அளவிற்கு அந்த ஆழ்கடலில் மூச்சுப்பிடித்து முத்தெடுக்கவில்லை. கடலின் பரப்பைக் கண்டு களிக்கவே இயன்றது. 'கருமஞ் செய்தல் நம் கடமை, அதன் பயனைக் கோரும் பேரவாவன்று' (Only actions are our duty, not the greed there of) என்னும் ரவீந்திரநாத தாகூரின் கருத்தினையும் சைவ சமயக் கருத்தின் தற்கால முடிவாக நினைவுபடுத்தியதும் செல்விவதான்.[23]

சமுதாய வளர்ச்சிக்கு, மாற்றத்திற்கு இதழியல் துணை புரிந்து வருகின்றது.

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே

எனப் பாவேந்தர் பாடியிருப்பது செந்தமிழ்ச் செல்விக்கும் பொருந்துகின்றதைத் தொட்டுக்காட்டி நிறைவு செய்யலாம்.

குறிப்புகள்

1. டாக்டர் பொதிகைத் தமிழரசன், தமிழக மறுமலர்ச்சி, சரயு பப்ளிகேஷன்ஸ், தென்காசி, 1996, பக்.322-323
2. செந்தமிழ்ச்செல்வி, 'வெளியீடுகளும் பயனும்', சிலம்பு 5, பரல் 1, பக்.3-8
3. மேலது
4. சோ. கலைவாணி, பத்திரிகைக் கலை, சாரதா வெளியீடு, வேலூர், 1988, ப.3
5. டாக்டர் கு. முத்துராசன், இதழியல் ஓர் அறிமுகம், வசந்தசெல்வி பதிப்பகம், தர்மபுரி, 1988, பக்.158-159

6. டாக்டர் பொதிகைத் தமிழரசன், முற்கூறிய நூல், ப.60
7. Eugene F. Irsechick, Politics and Sociology Confitee South India, University of California Press Ltd, 1969
8. செந்தமிழ்ச்செல்வி, 'செல்வியின் செவிலியர்', சிலம்பு 72, பரல் 1, செப்டம்பர் 1997
9. 1923ஆம் ஆண்டு வெளியீட்டு இறுதியில் காண்பது
10. 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் வெளியீட்டு இதழில் காண்பது
11. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 'க', பரல் 'க', பத்திராசிரியர் கூற்று
12. அ.மா. சாமி, தமிழ் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும், நவமணிப் பதிப்பகம், சென்னை , 1987, ப.98
13. செந்தமிழ்ச் செல்வி பொன்விழா மலர், 1977, சென்னை, 'கட்டுரைகள்', ப.1
14. செந்தமிழ்ச் செல்வி, ஆறாம் சிலம்பு, 1928-1929, முன்னுரை
15. டாக்டர் கு. முத்துராசன், முற்கூறிய நூல், பக்.78-79
16. புலவர் இரா. இளங்குமரன், 'செந்தமிழ்ச் செல்வி', செந்தமிழ்ச் செல்வி பொன்விழா மலர், பக்.20-22
17. மேலது
18. தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பொன்விழா மலர், ப.6
19. கா. சுப்பிரமணிய பிள்ளை, சிலம்பு தொகுதி ஆறு, பக்.99-103, 130-136
20. காண்க: செந்தமிழ்ச் செல்வி பொன்விழா மலர், பக்.22-26; இலக்கியத் தொண்டு, பக்.89-103
21. தினமலர், அக்டோபர் நாளிதழில் (1997) 'டி.வி. ஆர்: இதழியல் துறையில் ஓர் இமயம்' என்னும் கட்டுரையின் கருத்து
22. சிலம்பு 4, பக்கம் 138
23. மேற்படி, பக்.161

தமிழ்ப் பொழில்

1925

'தமிழ்ப்பொழில் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு என்னும் தகுதிக்கேற்ப, தமிழ் வளர்ச்சியும் தமிழர் மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்னகத்துக் கொண்டு வரும். தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ் நூல் ஆராய்ச்சி, பழந்தமிழ் நூல் வெளியீடு, தமிழ் நூல் மதிப்புரை, தமிழ்ச்சங்கச் செய்திகள் முதலிய எண்ணில் பல் வகையானமையும் சிறந்த கட்டுரைகள், ஆங்கிலம் ஆரியம் தமிழ் மொழிகளில் வல்லார் பலரால் கற்றாரேயன்றிக் கற் போர்க்கும் பயனுறத்தக்க நெறியில் தெள்ளிய தீந்தமிழ் நடையில் எழுதப் பெறும்.'

– இரா. வேங்கடாசலம் பிள்ளை

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ரு.	சுக்கில—வைகாசி.	மலர் உ.

ஓம்

தமிழரும் ஆடையும்.

திருவாளர், வீ. உலகவூழியரவர்கள், தமிழ்ப்பண்டிதர்,

பூளைமேடு.

வட வேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட நாட்டில் உறையும் மக்கள் தமிழர் எனப் பெயர் பெறுவர்.* முற்காலத்துத் தமிழர் நெசவுத்தொழிலில் எந்நிலையில் இருந்தனர்; இக்காலத்து எந்நிலையில் இருக்கின்றனர் என்பனவற்றை ஆராய்வதற்கெழுந்தது இக்கட்டுரை.

மிக்க பழங்காலத்தில் மக்கள் ஆடை அணிகலம் முதலியவின்றி வதிந்து வந்தனர்; பின்னர், இயற்கையாகக் கிடைப்பன சிலவற்றை உடுத்திவந்தனர் என்று ஆராய்ச்சிக்காரர் கூறுவர்.

---

* பிறநாட்டுக்குடியேறி இருக்கும் தமிழரும் உளர். இந்நாட்டுக்குடி வந்திருக்கும் பிற மொழியாளருமுளர். எனவே தமிழ் மொழியில் மொழிவோர் தமிழர் என்றபடி.

தமிழ்ப் பொழில்

க. பூரணச்சந்திரன்

1

'இதழ்கள்' என்பது தமிழில் ஒரு பொதுச்சொல்லாக இருக்கிறது. தினசரிப் பத்திரிகைகள், குமுதம் போன்ற வாரப் பத்திரிகைகள், இன்னும் பல்வேறுவித கால அவகாசங்களில் வெளிவரக் கூடிய வெளியீடுகள், 'ஜர்னல்' (Journal) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் அறிவார்த்தமான ஏடுகள் - இவை அனைத்தையும் 'இதழ்கள்' (அல்லது 'பத்திரிகைகள்') என்ற ஒரே சொல்லால் குறிப்பது நியாயமாகாது என்று உணர்கிறேன். மேற்கூறிய வகைகளுள் தமிழ்ப்பொழில் என்பது 'ஜர்னல்' எனப்படும் வகையைச் சேர்ந்தது.

இதனை இங்கே குறிப்பிட முக்கியக் காரணம், இம்மாதிரி வகைகளுக்குள்ளாகப் பெரும் வேறுபாடுகள் உண்டு. இவற்றை ஆராயும் முறைகளும் வேறுவேறு. ஒரு 'செய்தித்தா'ளை ஆராய்வது போன்ற முறையில் ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கிவரும் ஒரு அறிவியல்இதழை மதிப்பிட, ஆராய முடியாது. ஒன்றில் இதழியல் கூறுகளான செய்தியமைப்புமுறை, தலையங்கம் வரைதல், பக்க அமைப்பும் பொதுப்புனைவும் போன்றவை முக்கியத்துவம் பெறலாம்; மற்றதிலோ இவை கவனிக்கப்படவே தேவையற்ற அம்சங்களாக இருக்கலாம். ஒன்றில் வெளிவரும் கட்டுரைகள் போற்றிப் பாதுகாத்துச் சேமித்து வைக்க வேண்டியவையாகப்படலாம்; மற்றொன்றில் படித்துவிட்டு எறிந்துவிடும் முறையில் இருக்கலாம்.

ஆகவே பொதுவாக 'இதழ்கள்' என்று கூறாமல் வேறுபடுத்திக் காண்பது இம்மாதிரி ஆய்வரங்குகளில் அடிப்படைத் தேவையாகும்.

2

'தமிழ்ப்பொழில்' என்னும் இதழ், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஒரு வாய்க்கருவியாக (Mouth Piece) அமைந்த இதழ். ஆகவே தமிழ்ப்பொழிலைப் பற்றிக் காணும்முன்னர், கரந்தைத் தமிழ்ச் சங்கம் பற்றிய ஒரு சிறு பார்வை பயனுடையதாகும்.

ஆங்கில ஆட்சியும் கல்வியும் பொதுவாக இந்திய மொழிகளிலும் மறுமலர்ச்சியை உண்டாக்கியது என்பது வரலாற்றாசிரியர் கருத்து. தமிழைப் பொறுத்தவரை, நிறுவன அமைப்பு என நோக்கும்போது, மறுமலர்ச்சி இயக்கம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றத்துடன் ஒன்றுபடுகிறது என்று நம்பி ஆரூரன் குறித்துள்ளார். இச்சங்கம், 'நான்காம் தமிழ்ச் சங்கம்' என்னும் உணர்வோடு பாண்டித்துரைத் தேவரால் 1901ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினான்காம் நாளன்று தொடங்கப்பட்டது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உடன்விளைவே கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

இதன் தொடக்க விழா 14-5-1911 அன்று ந.மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் நிகழ்ந்தது. இச்சங்கத்தின் குறிக்கோள் தொடர் 'தொண்டு-தமிழ்-முன்னேற்றம்' என்பது.

"இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் ஆரிய மொழியின் ஆதிக்கத்தாலும், ஆங்கிலேயர் ஆட்சியாலும் பெருமை குன்றி நின்றது. உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள், தமக்குத் தமிழ் தெரியாது என்று பெருமையோடு சொல்லிக்கொண்ட காலம் அது. தூய தமிழைப் பேசவோ எழுதவோ தெரியாத நிலையில் பெரும்பான்மைத் தமிழர் இருந்தனர். இந்நிலையில்தான் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்வளர்க்கத் தோன்றியது" என்று விளக்கும் த.வே. உமாமகேசுவரன், இச்சங்கத்தின் குறிக்கோள், 'உலக மக்களிடையே தமிழரின் பெருமையைப் பரப்புவது' என்றும் சொல்கிறார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள்களைச் சங்கத் தலைவராக இருந்த செ. தனக்கோடி என்பார் பின்வருமாறு தொகுத்துரைக்கிறார்:

1. வேற்றுமொழி விரவாத தூயதமிழில் மக்கள் பிழையின்றிப் பேசுமாறும் எழுதுமாறும் செய்தல்;

2. தமிழ்ப் பெரும்புலவர்களை ஒன்றுகூடச் செய்தலும், வெளி யுலகிற்கு அறிமுகப்படுத்தலும்

3. தமிழ் இலக்கியங்களைப் பரப்புதல்

4. தமிழின் இசைநாடகப் பகுதிகளைத் தக்காங்கு வளர்த்தல்

5. தமிழ்மொழி பயில்வோர்க்கு ஊக்கமளித்து, மக்களிடையே தமிழ்ப்பற்றை வளர்த்தல்

'கரந்தைத் தமிழ்ச்சங்கம்' என்னும் தொடரிலுள்ள 'கரந்தை' என்பது தஞ்சாவூரைச் சேர்ந்த கருந்தட்டாங்குடி அல்லது கருந் திட்டைக்குடி என்பதன் மரூஉவாக நிற்கிறது. ஆனாலும் அதன் இலக்கணச் சார்புப் பொருள் தெளிவு. புறத்திணைகளில் 'வெட்சி' என்னும் ஆநிரை கவரும் போருக்குப் பதிலடி தரும் தற்காப்புப் போர்த் திணைதான் 'கரந்தை' என்பது யாவரும் அறிந்ததே. இதி லுள்ள 'தற்காப்பு' (Defence) என்னும் உட்குறிப்பு நோக்கத்தக்கது.

தமிழ்ச்சங்கத்தின் பணிகளாகச் சிலவற்றை இங்கே குறிக் கலாம்:

1. சங்க ஆண்டுவிழா, சங்கம் தொடங்கி ஏறத்தாழ இருபத் தைந்து ஆண்டுகள் சிறப்புறக் கொண்டாடப்பட்டு வந்தது. இவ்விழா, பெரும்புலவர்களின் சந்திப்புக்கூடமாய் அமைந் தது. பேரறிஞர்கள் இவ்விழாக்களுக்குத் தலைமை தாங் குமாறு அழைக்கப்பட்டனர். கா. நமசிவாயர், தி. செல்வக் கேசவராயர், ச. சோமசுந்தர பாரதியார், பா.வே. மாணிக்க நாயக்கர், கா. சுப்பிரமணிய பிள்ளை, இரா. இராகவை யங்கார், மு. இராகவையங்கார், உ.வே. சாமிநாதையர், மு. கதிரேசஞ்செட்டியார், மறைமலையடிகள், விபுலாநந்தர், ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் ஆண்டுவிழாக் களில் தலைவர்களாக அமர்ந்து சிறப்பித்தவர்களில் ஒரு சிலர். இவர்களது ஆண்டுவிழாத் தலைமையுரைகள், பல புத்தம்புதுக் கருத்துகளை மக்களுக்குத் தெரிவிப்பனவாக வும் தமிழுணர்ச்சியைத் தூண்டுவனவாகவும் அமைந்தன.

2. தமிழ்ப்பல்கலைக் கழகம் ஒன்று நிறுவவேண்டும் என் பதற்காகக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருமுயற்சி செய்தது (1925).

3. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இழிவுற்றிருந்த தமிழ் ஆசிரியர்களின் நிலையை உயர்த்தப் போராடியது. பிற

துறை ஆசிரியர்களுக்குச் சமமாக, தமிழாசிரியர்கள் மதிப் புப் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்தது.

4. இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குத் துணை நின்றது. 1938 ஆம் ஆண்டு தஞ்சையிலிருந்து சென்னை சென்ற எதிர்ப் புப் பேரணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரான ஐ. குமாரசாமிப் பிள்ளை தலைமைதாங்கிச் சென்றார்.

5. தமிழிசை இயக்கத்திற்குத் துணை செய்தது; தமிழிசை ஆராய்ச்சிக்கு ஆதரவு தந்தது; சுவாமி விபுலாநந்தரின் 'யாழ்நூல்' கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரின் தூண்டுதலி னாலேயே இயற்றப்பட்டு,சங்கத்தினாலேயே வெளியீடு செய்யப்பட்டது.

6. கலைச் சொல்லாக்கத்திற்குத் தூண்டுகோல் அளித்தது. தமிழ்ப்பொழில் இதழ் வாயிலாக நல்ல கலைச்சொல்லாக் கங்களை வெளியிட்டது; கலைச்சொல்லாக்கம் செய்ய ஆலோசனைகள் வழங்கியது. கலைச்சொல்லாக்கக் குழுக் கள் சரிவர இயங்காத போதும், வடமொழிச்சொற்கள் வரம் பின்றிக் கலைச்சொற்களாகப் புகுத்தப்பட்டபோதும் எதிர்த்தது.

7. தமிழகம்,தமிழினம், தமிழ்மொழி சார்பான எந்தச் சிக்கல் நேரிடும் போதும் அவற்றை வாசகர்களுக்கு எடுத்து விளக்க முயற்சிசெய்தது.

8. இவற்றிற்கெல்லாம் ஒரு கருவியாகத்தான் தமிழ்ப்பொழில் என்னும் திங்களிதழை 1925ஆம் ஆண்டு ஏப்ரல் (குரோதன ஆண்டு - சித்திரைத் தொடக்கம்) முதல் நடத்தி வருகிறது.

இப்பணிகள் தமிழில் படைப்பாற்றலை-புதிய முயற்சிகளைத் தூண்டுவன என்பது தெளிவு. இவை ' தற்காப்பு' முயற்சிகளே என் பதும் தெளிவு.ஆகவே 'கரந்தை' என்னும் அடைமொழிக்குப் பொருத்தமாகவே இதன் பணிகள் அமைந்ததும் தெளிவு.

3

நமது தமிழ்ப்பொழிலின் நறுமண நுகர்வினை நமது சங்க அன்பர்கள் பலர் பன்னெடுநாட்களாக அவாவி வந்தனர். எனினும் 'அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி ஆகா' வாகலின் திரு வருட்பேற்றிற்கு இலக்காகிய இந்நாளே, இப்பொழிற்றிறப்பு

> விழாவினைக் கூட்டி அன்பர்கட்குப் பொழிலின் நுகர்ச்சியை இயலுவேமாயினம்.

என்று தமிழ்ப்பொழில் என்னும் இதழைத் தொடங்கப் பல நாட்களாகச் சங்கத்தினர் முயன்றுவந்ததைக் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை கூறுகின்றார். மேலும் 'தமிழ்ப் பொழில்' எனப் பெயரிட்டமைக்கான காரணத்தையும் குறிப்பிடுகிறார்:

> தனது பசுநிறத்தால், வண்டொலியால், தீங்கனியால், மலர் மணத்தால், பைம்புற்றரையால், கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பேரன்பினைத் தன்பால் எய்தும் எத்திறத்தோர்க்கும் எஞ்ஞான்றும் தரவல்லது பொழில் ஒன்றேயன்றோ! எனவே இங்ஙனம் ஒப்பும் உயர்வுமில்லாத சிறப்பினதாகிய தொழிலின் பொற்பினை -- யுணர்ந்தே இந்தத் திங்களிதழிற்குத் 'தமிழ்ப்பொழில்' எனப் பெயரிட்டனம்.

'பொழில்' என்னும் உருவகமும், பசுமை பற்றிய படிமமும் இங்கே கவனிக்கத் தக்கவை. மேலும், முதற்பகுதியில் காணப் படும் சைவமணம் கமழும் நடையும் கவனிக்கவேண்டுவது. மதுரைத் தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்பாகக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் உருவானதுபோலவே, 'செந்தமிழ் போன்றே தமிழ்ப்பொழில் அமைய வேண்டும்' என்றும் எண்ணி உருவாக்கப்பட்டது. 1923ஆம் ஆண்டு திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் வெளி யீடாக செந்தமிழ்ச்செல்வி புறப்பட்டது. பலநாளாய் இதழ் ஒன்றைத் தொடங்க எண்ணியிருந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கு இது உந்துசக்தியாயிற்று. மேலும் கூறுகின்றார் ஆர்.வேங்கடாசலம் பிள்ளை:

> இவ்விதழ் ஓர் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு என்னும் தகுதிக் கேற்ப, தமிழ்வளர்ச்சியும் தமிழர்மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்னகத்துக் கொண்டு வரும். தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ் நூல் ஆராய்ச்சி, பழந்தமிழ் நூல் வெளியீடு, தமிழ்நூல் மதிப்புரை, தமிழ்ச்சங்கச் செய்திகள் முதலிய எண்ணில் பல்வகையானமையும் சிறந்த கட்டுரைகள், ஆங்கிலம் ஆரியம் தமிழ்மொழிகளில் வல்லார் பலரால் கற்றாரேயன்றிக் கற்போர்க்கும் பயனுறத்தக்க நெறியில் தெள்ளிய (இனிய) தீந்தமிழ் நடையில் எழுதப் பெறும்

என்று இதில் இடம்பெற வேண்டிய பொருட்களை வரையறுக் கிறார். மேலும்,

1. கட்டுரைகள் தெள்ளத் தெளிந்த தீந்தமிழ் நடையில் விழுமிய பொருளை விளக்கமுற எழுதப் பெற்றனவாதல் வேண்டும்.

2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்குமேல் தொடராது கட்டுரை முடிவு பெற்றிருக்க வேண்டும். நீண்ட பொருளாயிருக்கு மானால் இக்கூறிய அளவில் முடியும் வண்ணம் சிறு பிரிவுகளாக எடுத்து எழுதப்பெறுதல் வேண்டும்.

என வரையறை விதிக்கப்பட்டது. ஆனால் இந்த வரையறை பின் னாட்களில் அவ்வளவாகக் கவனிக்கப்பெறவில்லை.

'பொழில்' என்று பெயரிட்டதற்கேற்ப, தமிழ்ப் பொழில் ஆசிரியர், 'பொழிற்றொண்டர்' எனப்பட்டார். முதலில் பணியாற்றிய பொழிற்றொண்டர்கள், ஆர். வேங்கடாசலம் பிள்ளை, நீ.கந்தசாமிப் பிள்ளை, எல். உலகநாதபிள்ளை, த.வே. உமாமகேசுவரன் போன் றோர் தமிழ்மீது பற்றுக்கொண்டிருந்தோர் என்பதேயன்றி, ஓரள வேனும் படைப்புத்திறனும் கைவரப்பெற்றவர்கள். பின்னர் கோ.சி. பெரியசாமிப்புலவர், அ.கணபதிப் பிள்ளை, ச.சுயம்பிரகாசம், செ. தனக்கோடி போன்றவர்கள் பொழிற் றொண்டர்கள் ஆயினர். இவர்களுக்குப் பின்னணியில் புலவர் க.வெள்ளைவாரணன் இருந்து பொழிற்றொண்டராகப் பணியாற்றவேண்டி வந்தது. 1947 முதல் இம்மாதிரி மாற்றம் ஏற்பட்டது. வெள்ளைவாரணனுக்குப் பின் ச. பாலசுந்தரம் இப்பணியைத் தொடர்ந்தார். ஆனால் இவர் கள் பெயர்கள் (குறிப்பாக, வெள்ளைவாரணன் பெயர் பொழிற் றொண்டர் என) வெளிவந்ததேயில்லை.

'பொழிற்றொண்டர் என்ற பெயரில் சிறந்த ஆராய்ச்சியாளரும், ஞானியார் அடிகளின் மாணவருமான க. வெள்ளைவாரணன் எழுதும் இலக்கியக் கட்டுரைகளையும் வேறுபலர் எழுதும் சொல் லாராய்ச்சிக் கட்டுரைகளையும் நல்ல தமிழில் வெளியிட்டு வருகிறது"

என்று 'தமிழ் இதழ்கள்' என்னும் நூலில் சோமலெ குறிப்பிடு கிறார். மேற்கூற்றை அவர் எழுதிய சமயத்தில் 'பொழிற்றொண்டர்' என இதழ் அட்டையில் இடம்பெற்றிருந்தவர் அரங்க. வே. சுப்பிர மணியன்.

சுருங்கச் சொன்னால் த.வே. உமாமகேசுவரன் காலம் வரை தமிழ்ப்பொழில் பின்னாளிலிருந்ததை விட மேலதிகமான தகுதி

பெற்றிருந்தது என்பதுதான் விஷயம். பின்னாளில், ஐம்பதாம் துணர் முதற்கொண்டு ஓர் ஆசிரியர் குழு அமைக்கப் பெற்று விட்டது.

4

தமிழ்ப்பொழில் பலசமயங்களில் பொருளாதார இடர்ப்பாட்டி னூடும் இயங்கி வந்துள்ளது. அதன் அமைப்பு, பக்கப்புனைவு போன்றவை பற்றி அதிகமாக அதன் 'தொண்டர்கள்' எவரும் கவலைகொண்டதில்லை. இதுவரை ஐந்தாறுவகையாக அட்டை அமைப்பு மாறியிருப்பினும் அளவும் அச்சமைப்பும் ஏறத்தாழ ஒரே தன்மைத்தாகத்தான் அமைந்துள்ளன. கட்டுரைகளையும் செய்தி களையும் தொகுத்துப் பிழையின்றி வெளியிடுதல் என்பதற்குமேல் பொழிற்றொண்டர்களின் இதழமைப்பு ஆர்வம் செல்லவில்லை.

தமிழ்ப்பொழிலில் இடம் பெற்ற மொத்தப் படைப்புகளையும் பின்வருமாறு பகுத்துக்காணலாம்: (1) தமிழ்ச்செய்திகள் (2) புதுப்படைப்புகள் (3) தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளும் என்பவை இவை. இவற்றைப் பற்றிச் சற்றே விரிவாகக் காணலாம். இவற்றைக் காண்பது தமிழ்ப் பொழிலின் கட்டமைப்பை விளங்கிக் கொள்ள உதவும்.

1. தமிழ்ச்செய்திகள்

இவை நான்கு வகை:

அ. கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புள்ளவை

ஆ. பிற செய்திகள்

இ. பொழிற்றொண்டர் கருத்துரைகள்

ஈ. பொழிற்றொண்டர் நூன்மதிப்புரைகள்

(அ) கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புள்ள செய்திகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடத்தப்பெறும் இராதா கிருட்டினத் தொடக்கப் பள்ளி, உமாமகேசுவர மேல்நிலைப் பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவர்இல்லம் போன்ற நிறுவனங்கள் பற்றிய செய்திகள், விளம்பரங்கள் ஆகியன தமிழ்ப் பொழிலில் இடம்பெற்றுள்ளன. மேலும் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாக்கள், கலைமகள் விழாக்கள், இளங்கோவடிகள் தமிழ்க் கழக விழாக்கள் பற்றிய செய்திகளும் அடங்கியுள்ளன.

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாக்களில் அறிஞர்கள் சொற்பொழிவாற்ற வரும்போது அவர்களுக்களித்த வரவேற்புரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக்கள் ஆகியனவும் வெளியிடப் பெற்றுள்ளன. கரந்தைத் தமிழ்ச்சங்கம் தொடர்புடையோர் உயர் பதவிகள், பட்டங்கள், சிறப்புகள் முதலியன பெறும்போது 'மகிழ்ச்சி' என்னும் தலைப்பில் செய்திகள் இடம் பெறுவது வழக்கம். சங்கத் தொடர்புடையோர் எவரேனும் மறைந்தால் 'துயரம்' அல்லது 'கையறவு' என்னும் தலைப்பில் செய்திகள் இடம்பெறும். கையறுநிலைப்பாக்களும் இடம்பெறுவது வழக்கம்.

சிறப்புப்பெற்ற சமயங்களில் தமிழறிஞர்கள், புரவலர்கள் ஆகியோர்தம் நிழற்படங்களும் இடம்பெறுவதுண்டு. கரந்தைத் தமிழ்ச்சங்க விழாக்களில் பங்கேற்ற அறிஞர்கள்தம் சொற்பொழிவுச் சுருக்கங்களையும், பொழிற்றொண்டர் குறிப்புகளாக வெளியிடுவதுண்டு.

(ஆ) பிற செய்திகள்

ஏனைத் தமிழ்ச் சங்கங்கள், தமிழ் வளர்ச்சி அமைப்புகள், தமிழாசிரியர் கழகங்கள் போன்ற அமைப்புகள் தரும் செய்திகள் இதில் அடங்கும். இவை ஆற்றும் தமிழ்ப்பணிகள், இவற்றின் அறிவிப்புகள், விளம்பரங்கள் போன்றவையும் இதன்கண் அடங்கும்.

(இ) பொழிற்றொண்டர் கருத்துரைகள்

தமிழ் ஆக்கம் தொடர்பான செய்திகள், தமிழகம் பற்றிய செய்திகள், இந்தியா உலக நடப்புப் பற்றிய குறிப்புகள் என எவை பற்றியும் பொழிற்றொண்டர் வரையும் கருத்துரைகள் (பிற இதழ்களின் 'தலையங்கம்' போல) இதன்கண் அடங்கும்.

(ஈ) பொழிற்றொண்டர் நூன்மதிப்புரைகள்

தமிழ்ப்பொழிலில் வெளிவந்த நூல் மதிப்புரைகள் இரு வகைப்படும். பொழிலாசிரியர், தாமே நூல் மதிப்புரை வரைவதுண்டு. பிறர் எவராயினும் அப்போது வெளிவந்த சிறந்த நூலுக்கு மதிப்புரைகள் வரைந்து, கட்டுரைகள் அல்லது குறிப்புரைகள் அனுப்புவதும் உண்டு. பொழிற்றொண்டர் தரும் நூன்மதிப்புரைகள், இரண்டு மூன்று வரிகள் முதலாகப் பெரும்பாலும் ஓரிரு பத்திகள் வரை செல்லும். இவற்றில் நூல் மதிப்பீடு இடம் பெறுவதில்லை.

நூலினை வெளியிட்டோர் பற்றிய குறிப்பு, ஆசிரியர், விலை, நூல் நுவலும்பொருள் ஆகியவை மட்டுமே இடம்பெறும் ('வரப்பெற்றோம்' என்னும் பகுதிபோல)

2. புதுப்படைப்புகள்

தமிழ்ப்பொழிலில் இடம் பெற்ற கவிதைகள், நாடகங்கள், படைப்புக்கட்டுரைகள், அறவுரைக் கட்டுரைகள், வாழ்வியற் கட்டுரைகள், தமிழ்நேயக் கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள் ஆகியன அனைத்தும் 'புதுப்படைப்புகள்' எனலாம்.

தமிழ்ப்பொழிலில் கவிதைகள் (சராசரியாக ஓரிதழுக்கு நான்கு எனக்கொள்ளலாம்) இடம்பெற்றன. குறிப்பாக பாவலர் ச. பாலசுந்தரத்தின் 'கரந்தைக்கோவை' என்னும் கவிதைப் படைப்பையும், 'புலவர் உள்ளம்', 'புரவலர் உள்ளம்' , 'பாரி', 'வஞ்சப் போர்' முதலிய செய்யுள் நாடகங்களையும் சொல்லலாம்.

ஈரோடு தமிழன்பனின் (ந.செகதீசன் என்னும் பெயரில் எழுதிய) தொடக்ககாலக் கவிதைகள் சிலவற்றையும் காணலாம். தொடக்க காலத்தில் க. வெள்ளைவாரணன் எழுதிய 'காக்கைவிடு தூது' என்னும் அங்கதச் செய்யுளும், சுவாமி விபுலாநந்தரின் எளிய இனிய (ஈசனுவக்கும் இன்மலர்கள் போன்ற) பாடல்களும் சிறப் பானவை.

பெரும்பாலான கவிதைகள் தமிழ் தமிழ் என்று, திரும்பத் திரும்பக் கூறியது கூறலாகப், போற்றுதற்பாணியிலுள்ளன. இவற்றைக் கவிதைகள் என்று சொல்வது, ஆழ்ந்த இலக்கிய மதிப்பீட்டு நோக்கில் கண்டால், வெறும் உபசார வழக்கே.

உரைநடையிலும் கதை, கட்டுரை, நாடகம் எனப் பல்வேறு வகைகள் இடம் பெற்றுள்ளன. இலக்கியத் தன்மை இவற்றில் குறைவு.

நமது கவனத்தில் முக்கிய இடம் பெற வேண்டுவன தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளுமே. இவை மூன்றாவது வகை.

3. தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளும்

தமிழ்ப்பொழிலில் வெளிவந்த தமிழியற் கட்டுரைகளை ஐந்து வகைகளாகப் பகுக்கலாம் : (1) இலக்கியக் கட்டுரை கள் (2) இலக்கணக் கட்டுரைகள் (3) தமிழக வரலாற்றுக்

கட்டுரைகள் (4) தமிழ்ப் பண்பாட்டுக்கட்டுரைகள் (5) கலைச் சொல்லாக்கக் கட்டுரைகள். பதிப்புகளை (அ) பழைய நூல், பாடற் பதிப்புகள் (ஆ) கல்வெட்டு வெளியீடுகள் என இரண்டாகப் பகுக்கலாம்.

பொதுவாக, தமிழ்ப் பொழிலில் வெளிவந்துள்ள கட்டுரை கள், ஆழ்ந்த தேடலின்றி, மேம்போக்காக, ஆசிரியர் கருதிய கருதுகோளையே ஒரு சிறு கட்டுரையாகத் தருவனவாக உள்ளன; இன்னும் சில சமயங்களில், கருதுகோளை நிறுவுகின்ற சான்று களும் போதிய அளவின்றி, ஓரிரு சான்றுகளோடு கருத்தை முன் வைத்துச் சென்றுவிடுவதுண்டு. பெரும் பாலும் தமிழ்ப்பொழில் ஆய்வுக் கட்டுரைகள் நான்கு பக்க அளவின. இன்னும் குறைந்த பக்க அளவிலும் அமைவதுண்டு. எனவே பொதுவாகத் தமிழ்ப் பொழில் இதழின் ஆய்வுகள் ஆழமின்றியே உள்ளன. மேலும்,

> சித்தாந்த தீபிகை, தமிழ்ப்பழமை, தமிழ்ப்பண்பாடு முதலிய வற்றிலும், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், ஞாயிறு,கலாநிதி ஆகியவற்றிலும் வெளி வந்த கட்டுரைகளைப் படிப்போர்க்கு இனவாதம் நம்மவரை எவ்வளவுதூரம் ஆட்டிப் படைத்துள்ளது என்பது தெரியவரும்

என்று க. கைலாசபதி மதிப்பிடுகின்றார். இம்மதிப்பீடு ஓரளவு சரி யாகவே உள்ளது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியோரும், இதிலிருந்த தமிழறிஞர்களும், இதன் புரவலர்களும் அக்காலத்தே நீதிக்கட்சியில் பெரும் செல்வாக்குப் பெற்றவர்களாகவே இருந் தனர். சங்கத் தலைவர் த.வே.உமாமகேசுவரன், தஞ்சைப் பகுதி நீதிக்கட்சியின் தூணாக விளங்கியவர்; புரவலர் ஏ.டி. பன்னீர் செல்வம், மாநில நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவர். பல அரசு உயர் பதவிகளை வகித்தவர். இவர்களுடைய பாதுகாப்பில் இருந்த கரந்தைத் தமிழ்ச்சங்கம், பார்ப்பனரல்லாதார் இயக்கம், தனித் தமிழ் இயக்கம் ஆகியவற்றுடன் சார்புகொண்டே விளங்கியது. தமிழ்ப் பொழில் இதழும் நீதிக்கட்சி, திராவிடர் இயக்கம், தனித் தமிழ் இயக்கம், இந்தி எதிர்ப்பு, கலைச்சொல்லாக்கம், தமிழிசை இயக்கம் போன்ற பல இயக்கத் தொடர்புகள் கொண்டது. இச் சார்புகளின்றித் தமிழ்ப்பொழிலின் ஆய்வுக் கட்டுரைகளைப் பிரிக்க முடியாது. இச்சமூக நிகழ்வுகள், தமிழ்ப்பொழிலின் 'ஆய்வு' கட்டுரைகள் வாயிலாகவும் வெளிப்பாடு பெற்றுள்ளன. ஆகவே இம்மாதிரி இதழ்களை ஆராய்வதன் ஒரு முக்கியப் பயன், இச்

சமூக நிகழ்வுகள், இவ்விதழின் வழி-இலக்கிய, இலக்கண, வரலாற்று, பண்பாட்டுக் கட்டுரைகள் வழி-ஆய்வுப் போக்கினை எவ்விதம் ஆட்சிசெய்கின்றன என்று காண்பதுதான். தமிழ்ப்பொழில் வெறும் இதழன்று; இது ஓர் சமூக நிகழ்வு. இதன்வழி தமிழ்ச் சமூகம், எழுபதாண்டுகளில் இலக்கிய --சமூக நிலைகளில், கருத்தியலில் அடைந்த மாற்றங்களைக் காண்பது தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய நமது அறிவை மேம்படுத்த உதவும். செந்தமிழ் இதழின் தொடக்ககாலத் தொகுப்புகளை அடைவுபடுத்திய பா.ரா. சுப்பிரமணியன் கூறுகின்றார்:

> செந்தமிழ் இதழின் தொடக்ககாலத் தொகுப்புகளை அடைவு படுத்துவது என்பது ஒருவகையில் ஒரு மாயப்பெட்டியைத் திறப்பது போன்றது! இந்தத் தொகுப்புகளில் அடங்கியுள்ள பொருட்கள் படிப்போரை மெய்சிலிர்க்கச் செய்யும்; எழுச்சியூட்டும்; 'போலச்' செய்தலாக அமைந்திருக்கும்; ஏமாற்றவும் செய்யும். இவற்றை அடைவுபடுத்துவதே பெரிது. மதிப்பீடு என்பது பின்னால் வருவது'

தமிழ்ப்பொழிலின் துணர்களை (ஆண்டுத்தொகுப்புகளை)ப் பார்க்கும் ஒருவருக்கும் இதேமாதிரியான உணர்ச்சிகள்தாம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

5

தமிழ்ப்பொழிலின் ஆய்வுப் பணி பற்றிச் சற்றே விரிவாகப் பார்ப்போம்:

இலக்கிய வரலாற்றாய்வு

தமிழ்ப்பொழில் தொடங்கிய 1925ஆம் ஆண்டளவிலேயே சங்க இலக்கியங்களின் காலம், சிலப்பதிகார காலம், திருக்குறளின் காலம், மணிமேகலையின் காலம்,பக்தி இலக்கியங்களின் காலம், கம்பர்காலம்; சேக்கிழார் காலம் போன்ற முதன்மையான காலப் பகுதிகள் அனைத்தும் ஆராயப்பட்டிருந்தன. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் காலமுதலாகவே இவ்வகைக் கால ஆராய்ச்சியே தமிழில் முதன்மை பெற்றது. செந்தமிழ் தொடக்க கால இதழ்களிலும் இவ்வகை ஆய்வே முதன்மை பெற்றிருந்தது. இது தமிழ்ப் பொழிலிலும் தொடர்ந்தது.

வரலாற்றுச் சான்றுகள் அருகியுள்ள பழமையான ஒரு மொழியில், ஒரு நூலின் மேல் எல்லை கீழ் எல்லை நிறுவுதலே

போதுமானது என்பார் கமில் சுவலபில். மிகச் சரியாக இன்ன நூல் இத்தனையாம் ஆண்டில் எழுந்தது என நிறுவ மிக நுட்பமான சான்றுகள் தேவை.

> பல தமிழ்நூல்கள் வரலாற்று நோக்கில் எழுதப்பட்டவை அல்ல என்பதனால், மேலைநாட்டு நூல்களின் தோற்றக் காலத்தை ஆராய்தல் போன்ற நுட்பமான ஆராய்ச்சி இங்குத் தேவை யில்லை

எனக் கருதுகின்றார் கமில் சுவலபில். தமிழிலக்கியங்களின் காலம் ஓரளவு ஆராயப்பட்டுப் பல்வேறு கருத்துகளும் முன்வைக்கப் பட்டுவிட்ட நிலையில்தான் தமிழ்ப்பொழில் எழுந்தது. எனவே பழந்தமிழ் இலக்கியங்களில் கால ஆய்வில், இது விவாதங்களில் பங்கு பெற்றதே அன்றி, முதன்மை கொள்ளவில்லை. வடமொழி எதிர்ப்பு, தமிழ்ப் பொழிலின் அடிப்படைக் கொள்கையாதலின் இந்த விவாதங்களின் வாயிலாக, தமிழ் நூல்களின் காலத்தை முற்படுத்திக்கூறல் என்னும் சார்புப் போக்கிலேயே அது இயங்கி யுள்ளது. கல்வெட்டுகளின் வாயிலாகப் பல புலவர்களை அறிய தமிழ்ப்பொழில் உதவியது.

தமிழ்ப்பொழிலின் உண்மையான இலக்கிய வரலாற்றுப்பணி, பிற்பட்ட சான்றோர்களைப் பற்றி அறிய உதவியதே எனலாம். குமரகுருபரர், படிக்காசுப் புலவர், சர்க்கரைப் புலவர் வழியினர், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், சரவணப் பெருமாளையர், கால்டுவெல், பண்டிதர் சவரிராயர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, திரு. வி.க., விபுலாநந்தர், மாகறல் கார்த்திகேய முதலியார், பேரா சிரியர் நமசிவாயர், வ.உ.சி., நாடகக் கலை முன்னோடி இராமசாமி ராஜூ போன்ற பலர் வரலாற்றுக் குறிப்புகளை அறிய தமிழ்ப் பொழில் துணை செய்துள்ளது. சாலை இளந்திரையனின் 'புதுத் தமிழ் முன்னோடிகள்', 'புதுத்தமிழ் முதல்வர்கள்' நூற்கட்டுரை கள் தமிழ்ப்பொழிலில் வெளியானவையே. சமூக மாற்றத்திற் கேற்பப் புதிய இலக்கிய வகைகள் எப்படி உருவாகின்றன, அவற் றின் தோற்றத்திற்குத் துணை செய்யும் காரணிகள் எவை, இப் புதிய இலக்கியங்கள் சமூகத்தில் எவ்வித விளைவுகளை ஏற் படுத்தின என்பன போன்றவை இலக்கிய வரலாற்றாய்வின் அடிப் படை வினாக்கள். இம்மாதிரி ஆராய்வது தமிழ்ப் பொழிலில் இல் லாத ஒன்று.

இலக்கியக் கொள்கை ஆய்வுகள்

தமிழ்ப்பொழிலின் கொள்கையைப் பின்வருமாறு சுருங்கச் சொல்லலாம்: 'முதலில் தமிழில் அடிப்படை இலக்கியங்கள் அமைந்தன; பின்னர் ஆரியர் கொள்கைகள் கலப்புற்றபின் மாறுதல்கள் உண்டாயின. ஆரியர் கலப்பு ஒரு திருப்புமுனை. தமிழிலக்கியங்களும் தமிழ்மொழியும் வடமொழியால் (சமஸ்கிருதத்தால்) சீரழிந்தே வந்துள்ளன. எனவே மொழிக் கலப்பை விலக்க வேண்டும்'. இக்கருத்துகளை ஏற்போர் தமிழ்ப்பொழிலைச் சிறந்த ஆய்விதழ் என்று பாராட்டியுள்ளனர். இக்கோட்பாடுகளை ஏற்காதோர், தமிழ்ப்பொழிலை இனவாத இதழ் என்றும் மதிப்பிட்டுள்ளனர்.

தமிழ்ப்பொழில் இதழில் இலக்கியக் கொள்கைகள் ஆய்வு சிறப்பாக அமையவில்லை. சிலப்பதிகாரத்தின் இலக்கியக் கொள்கை, பாரதிதாசனின் இலக்கியக்கொள்கை ஆகிய இரண்டுமட்டுமே ஆராயப் பெற்றன.

இலக்கியத் திறனாய்வு

தமிழ்ப்பொழில் தோன்றிய முதல் பத்துப் பதினைந்து ஆண்டுகளில், தனித்தனிப் பாடல்களின் பொருள் மாறுபாடுகள், பொருள் விளக்கங்கள் ஆகியவற்றைக் காண்பதே இலக்கிய ஆய்வாக இருந்துள்ளது. பிறகு இந்தமரபு மாறி, நலம் பாராட்டலுக்கு இடமளித்தது. பாடற்பொருள் காணல், பாடவேறுபாடு காணல், நலம் பாராட்டல் ஆகியவற்றைச் செய்வதில் தவறில்லை. இவை யாவும் திறனாய்வுக்கான அடிப்படைகளே அன்றி, இவைமட்டுமே திறனாய்வு ஆகா; மேலும் இவற்றுடன் அழகியல் சமூகவியல் நோக்குகள் இணையும்போதே அவை உண்மையான ஆய்வாகின்றன. தனிப் பாடல் பொருள்நோக்கு நிலையைத் தாண்டி சங்க இலக்கிய ஆய்வு செல்லவில்லை. திருக்குறள் கட்டுரைகளோ, சொல்லாய்வுகள், அல்லது சொற்பொருள் ஆய்வுகளே. இம்மாதிரி ஆய்வுகள் இலக்கியத் திறனாய்வு உருவாக வழியமைக்க மாட்டாதவை.

சிலப்பதிகாரத்தைப் பொறுத்தவரை, வையாபுரிப்பிள்ளையின் சிலப்பதிகாரக்கால ஆய்வுக் கருத்துகளுக்கு மறுப்புவரைதல் முதன்மையான முயற்சியாயிற்று. எனினும் அண்மைக்காலங்களில் சிலப்பதிகாரக் கட்டமைப்புப் பற்றிய கேள்விகள் எழுப்பப் பெற்றுள்ளன; சிலப்பதிகாரத்தைப் பொறுத்தவரை, அது வரலாற்றுக் காப்பியமே என நம்பி, அதில் கண்ணகி பயணம் செய்த வழி கூறப் பெற்றுள்ளது

என நினைத்து, கண்ணகி கோட்டம் எது எனக் காணச் செய்த முயற்சி; கம்பம் பகுதியைச் சேர்ந்த மங்கலாதேவிக் கோட்டமே முதன்முதலாக எழுப்பப்பெற்ற கண்ணகிக் கோட்டம் என்பது இந்த முயற்சியில் கண்டறிந்த முடிபு. 'இக்கருத்து, இன்னும் ஆணித் தரமாக நிறுவப்பெறவேண்டும், இருக்கும் சான்றுகள் வலுவற் றவை' என்பர் மயிலை. சீனி.வேங்கடசாமி.

காப்பியங்களில் சில பாத்திரப்படைப்புகள் பற்றிய குறிப்பு களோடு ஆய்வு முடிந்துவிட்டது. பக்திப் பனுவல்கள் ஆய்வும், பாடற்பொருள் காணல், பாடவேறுபாடு காணல், நலம் பாராட்டல் என்னும் இவற்றோடு நின்றுவிட்டது. பிற்காலப் புராணங்களோ, தனிப்பாடல்களோ, சிற்றிலக்கிய வகைகளோ தொடப்படவே இல்லை. தற்கால இலக்கியங்களில் பார்வைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டவை, மனோன்மணீயம், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் ஆகியவை மட்டுமே. ஓரளவு இலக்கியப்பொருண்மை பற்றிய ஆய்வு நிகழ்ந்துள்ளது. 'தமிழ்ப் புலவருக்கு நிலவியல் அறிவுண்டா? 'என்பதுமுதல் 'இலக்கியத்தில் மகளிர் விளையாட் டுக்கள்' என்பதுவரை இவ்வகையின. இவை ஒருவகையில், வரலாற் றாய்வின் வேறு தோற்றங்களே.

ஒரு நூலை இலக்கியம் என்றோ இலக்கியம் அன்று என்றோ கொள்ளவோ தள்ளவோ தேவையான அடிப்படைகள் எதுவுமே தமிழ்ப் பொழிலில் பேசப்பட்டது கிடையாது. பல்கலைக்கழகங் களிலும், இலக்கியம் சார்ந்த சிற்றிதழ்களிலும் விவாதிக்கப்பட்டு, ஒருவரை நல்ல படைப்பாளி என்று பிறர் ஏற்றபிறகு, பத்திருபது ஆண்டுகள் கழித்து அவரைப் பற்றிய கட்டுரை ஏதேனும் தமிழ்ப் பொழிலில் இடம்பெறல் இயலும். அவ்வளவு பாதுகாப்பு உணர்ச்சி (அல்லது மரபுணர்ச்சி!).

தொடக்க கால இலக்கண ஆய்வுகள்

மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு தொடர்கட்டுரை, இத்துறை யில் ம.நா.சோம சுந்தரம் பிள்ளை என்பாரால் எழுதப்பட்டது. 1930 ஆம் ஆண்டு, 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்னும் நூல் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியாரால் எழுதி வெளியிடப் பட்டது. இந்நூலுக்கு ம.நா. சோமசுந்தரம்பிள்ளை, ஏழாம் துணரில் (ஆண்டுப் பகுதியில்) தொடங்கி, பதின்மூன்றாம் துணர்வரை (ஆறு ஆண்டுகள்!) ஒரு மறுப்புரை எழுதினார். (மொத்தம் 285 பக்கங்கள்). இக்கட்டுரையின் முதற் பகுதி ஏழாம் துணரில்

வெளியானபோதே, இதற்கு மறுப்பாக பி.எஸ். வேதாசலய்யர் என்பவர் 'சொல்லதிகார ஆராய்ச்சி மறுப்பின் மறுப்பு' என்னும் ஓர் கட்டுரையினைத் தொடராக எழுத முற்பட்டார். உடனே ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பாராய்ச்சி' என்னும் தலைப்பில் இரு கட்டுரைகள் வரைந்த தோடு, 'ம.நா. சோமசுந்தரம் பிள்ளையின் மறுப்புக்குப் பிறர் வரையும் மறுப்புகளை வெளியிடலாகாது' என்று பொழிற்றொண் டருக்கு ஒரு கடிதமும் வரைந்தார். வேதாசலய்யரின் கட்டுரைக்கு மறுப்பு ஒன்றினை ம.நா.சோம சுந்தரம்பிள்ளை 'வித்துவான் வேதா சலய்யர் என்பாரின் போலி மறுப்பு ' என்னும் தலைப்பில் இருபது பக்க அளவினதாக வரைந்தார்.

'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' செந்தமிழ் இதழில் வெளியிடப் பெற்ற கட்டுரைத்தொடர் ஆதலின், அஃது பார்ப்பனச் சார்புடையது என்றும், தமிழ்ப்பொழிலில் இதற்கு மறுப்பு வரை வது கடமை என்றும் அக்காலத்தே கருதப்பட்டது. வடமொழிச் சார்பினரான நூலாசிரியரது கருத்துகளை மறுக்கவே அக் கட்டுரை யைத் தாம் வரைவதாக ம.நா. சோமசுந்தரம் பிள்ளை தெளிவு படுத்தினார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கியே இக்கட்டுரை வரையப்பட்டது. இதில் மொத்தம் 38 மறுப்புகள் வரையப்பட்டன. முதல் பதினான்கு மறுப்புகளை இன்று நோக்கின், நமக்கு வியப்பைத்தான் ஊட்டும். 'பி.சா. சுப்பிரமணிய சாத்திரியின் நடை ஆங்கில வழிப்பட்ட நடை, போப்பையர் இலக் கணத்தைப் பின்பற்றும் நடை' என்று குறைகூறப்படுகிறது. தொல் காப்பிய உரைகளை ஆராய்வோர், இளம்பூரணர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்களின் நடையிலேயே எழுத வேண்டும் என்பது சோமசுந்தரம் பிள்ளையின் கருத்து. மேலும் புராணக் கதைகளைக் குறிப்பாகச் சைவத் தொன்மங்களை நம்பாமையைத், தமிழுக்கு எதிரான போக்காகச் சோமசுந்தரம் பிள்ளை முன்வைக்கிறார்.

இவ்வாறு 285 பக்கங்கள், 38 மறுப்புகள் எழுதினாலும், இந்த மறுப்புரை பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் நூலில் முதல் ஐம்பது பக்கங்களை மட்டுமே மறுக்க முடிந்தது. நூற்கருத்துகள் முழுமைக்குமாக மறுப்புகள் அமையவில்லை. இந்த ஆய்வின் விளைவால் சில நல்ல கருத்துகள் கிடைத்தாலும், இந்த மறுப்புரை, அறிவியலுக்கு மாறான இயல்புகளையும், அதே சமயம், ஆழ்ந்து நுணுகி நோக்கும் தன்மையையும் ஆகிய இருவேறு

தன்மைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதுவும் அக்கால ஆராய்ச்சியின் இயல்புகளை நன்கு எடுத்துக்காட்டும்.

ஏறத்தாழ 1935 முதல் 1955 வரை சொல்லாய்வுகள் (வேர்ச் சொல்ஆய்வுகள்) சொற்பொருள் ஆய்வுகள் தவிர வேறுவித இலக் கண ஆய்வுகளிற் கவனம் செலுத்தப்படவில்லை. 1955க்குப் பின் னர் சிறிது சிறிதாக மொழியியல் நோக்குகள் இடம்பெறலாயின. அப்போதும் தமிழ்ப்பொழில் இலக்கிய மொழியின் அமைப்பை ஆராய்வதில்தான் கவனம் செலுத்தியுள்ளதே தவிர, பேச்சுமொழி ஆராயப்படவேயில்லை. இம்மாதிரி ஆய்வுகளின் பலனும் தமிழ்ப் பொழிலின் நோக்கிற்கு உகந்ததாகவே அமைந்தது. தொல்காப் பியத்தின் அறிவியல் அடிப்படை நிறுவப்பெற்றது. தொல்காப் பியர் உலகின் சிறந்த மொழியியல் அறிஞர்களுள் ஒருவர் என்பது கொஞ்சம் கொஞ்சமாக நிலைபெறலாயிற்று. இதனை வேர்ச் சொல்லாய்வினாலோ சொற்பொருளாய்வினாலோ செய்திருக்கவே இயலாது. மொழியியல் ஆய்வில், இலக்கணவடிவங்களின் உருப னியற் கூறுகள் ஆராயப்படும்போதே, அவற்றின் சொல்லியல் தொடரியல் அமைப்புகளும் பண்புகளும் ஆராயப்பட்டதனால் இது சாத்தியமாயிற்று.

இப்படி ஆரம்பகாலத்தில் ஓரளவு தருக்கநெறி ஒன்றையே நம்பி வந்த இலக்கண ஆராய்ச்சி, பிற்காலத்தில் மொழியியல் சார்ந்த ஆய்வாக மலர்ந்தது.

வரலாற்றாய்வு

தமிழ்நாடு என்பது இந்தியாவின் ஒரு பகுதியேயாயினும், தன்னளவில் ஒரு தனி நாட்டுக்குரிய இயல்புகளைக் கொண்டது. இந்தியா ஆங்கில ஆட்சியால் ஒன்றிணைக்கப்படும் முன்னர் குறைந்தது கலாச்சார அடிப்படையிலேனும் ஒரே நாடாகவே தமிழகம் இருந்து வந்தது. மேலும், இந்தியாவிலேயே வடமொழி (சமஸ்கிருத)ச் செல்வாக்கினின்றும் தன்னைப் பாதுகாத்துக் கொண்ட ஒரே மொழி தமிழே. இந்தியாவில் ஆரியர் வருவதற்கு முன்னர் இருந்துவந்த திராவிடர் என்னும் இனத்தாரின் எச்சங் களாக இன்று இருப்பவரும் தமிழரே என்பர். எனவே தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு என்பன தனித்தன்மைகள் கொண்டனவாகவே இருந்து வந்துள்ளன. ஆயினும் இன்றுவரை, தமிழகத்தின் வரலாற்றுக்கும் பண்பாட்டிற்கும் இந்திய வரலாற்றில்

போதிய இடமளிக்கப்படவில்லை. இதற்காகத் தமிழறிஞர் வருந்தினர். ஆகவே இந்த நூற்றாண்டு முதலாகத் தமிழ் நாட்டின் வரலாற்றை ஆராய்ந்து வரைவதில் ஆர்வம் தோன்றியது. செந்தமிழ், தமிழ்ப்பொழில் போன்ற இதழ்கள் இவ்வார்வத்தினை வெளிக்காட்டுகின்றன.

தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிப்பட்ட வரலாற்றாய்வாளர் என்று தி.வை. சதாசிவப்பண்டாரத்தாரை மட்டுமே கூற இயலும். சதாசிவப் பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு, முதற்குலோத்துங்க சோழன் போன்ற நூல்கள் தமிழ்ப் பொழிலில் தொடர் கட்டுரைகளாக எழுதப் பெற்றவை. வை. சுந்தரேச வாண்டையாரும் கல்வெட்டுகள் பற்றியும், ஊர்களின், தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றியும் மிகுதியாக எழுதியிருக்கிறார் என்றாலும், அவரது சைவப்பற்று நடுநிலை ஆய்வுக்குக் குறுக்கே நின்றது. தமிழ்ப்பொழிலினின்றும் வேறெவரும் தனித்தன்மை கொண்ட வரலாற்று ஆய்வாளராக உருவாகவில்லை.

பண்பாட்டாய்வு

தமிழ்ப்பொழில் தந்த பண்பாட்டுக் கட்டுரைகளில் ஓரளவேனும் சிறப்பு வாய்ந்தவை தமிழிசை பற்றிய ஆய்வுகளே எனலாம். சுவாமி விபுலாநந்தரின் ஈடுபாட்டினால் இசைத்தமிழ் ஆய்வு தமிழ்ப்பொழிலில் இடம்பெற்றுவந்தது. இக்கட்டுரைகளே பின்னர் தொகுக்கப் பெற்று யாழ் நூலாக உருப்பெற்றன. அந்த நூலும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாகவே வெளியிடப்பெற்றது. தமிழிசை இயக்கம் தொடங்கப்பெற்ற அக்காலத்தில், அந்த இயக்கத்திற்கு அறிவுக்களம் அமைத்துத் தந்தவை விபுலானந்தரின் கட்டுரைகளேயாம். பழந்தமிழிசையின் சிறப்பு, யாழ் என்னும் இசைக் கருவியின் மீட்டுருவாக்கம், பழந்தமிழிசைக்கும் இன்றைய கருநாடக இசைக்குமான ஒப்பீடு ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டது அவரது ஆய்வு. ஒருவகையில் இதுவும், மீட்புவாதமே. பழம் பெருமைக்காக பேசப்பட்ட செய்திகளாகவே இவை அமைந்தனவே அன்றி, பெருமளவு தாக்கத்தினை இவை சமுகத்தில் உருவாக்கவில்லை என்பது தெளிவு.

விபுலாநந்தர் மறைந்தபின், குடந்தை ப. சுந்தரேசன், இசை பற்றிய கட்டுரைகளைத் தமிழ்ப்பொழிலில் தொடர்ந்தார். ஆனால் அவரது கட்டுரைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக அமைய

வில்லை. முன்னரே ஆபிரகாம் பண்டிதரும்,பிறகு விபுலாநந்தரும் கூறியவற்றைத் திரும்பக்கூறலாகவே ஆயின அவரது கட்டுரைகள்.

தஞ்சைப் பகுதியிலுள்ள கோயில்களின் கல்வெட்டுகளை ஆராய்ந்து அக்கோயில்கள் பற்றிய செய்திகள் பலவற்றைத் தொகுத்து வெளியிட்டவர்கள் சதாசிவப் பண்டாரத்தாரும், சுந்தரேச வாண்டையாரும். ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளையின் கட்டுரைகள் குறைவேயாயினும் சோழர்காலக் கலைச் சிறப்புகளை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

பண்பாட்டாய்வில் சுவைநிறைந்த பகுதிகள் பல உண்டு. தமிழர் அரக்கரா, ஆரியர் அரக்கரா போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டு ஆராயப்பட்டன. பொதுவாக இன்றுவரை தமிழர் பண்பாடு, ஆரியப் பண்பாட்டுக்கு முரண்நிலையில் வைத்தே நோக்கப்பட்டு வந்துள்ளது.

பதிப்புப் பணிகள்

தமிழ்ப்பொழிலின் பதிப்புப் பணி இருவகை என்று முன்னரே சொல்லப்பெற்றது. ஒன்று, நூல்பதிப்பு; மற்றது, கல்வெட்டுகள் பதிப்பு. நூல் பதிப்புகள் 1947 வரை மிகுதியாக உள்ளன. பின்னர் அருகிவிட்டன. பதின்மூன்றாம் ஆண்டுவரை, எல். உலகநாத பிள்ளை என்பவரது முயற்சியால் நெல்லை வருக்கக் கோவை, தில்லையுலா, தியாகராசர் கழிநெடில், தியாகராசர் பள்ளேசல், சித்தரந்தாதி என்னும் நூல்கள் பதிப்பிக்கப்பெற்றன. பதிபசுபாசம், பதிபசுபாசப் பனுவல் போன்ற சைவசித்தாந்த நூல்களையும் இவரே பதிப்பித்தார். இலக்கணத்துறையில், சுவாமிநாதம், இலக்கண தீபம் ஆகியவை பதிப்பிக்கப்பெற்றன. இவற்றுள், சுவாமிநாதத்தை, செ.வை. சண்முகம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வாயிலாகத் திருந்திய பதிப்பாகக் கொணர்ந்தார். பதிப்பிக்கப்பட்ட பிற நூல்கள், பட்டமதன வித்தார மாலை, சேலம் செழியதரையன் மஞ்சரி, ஆறைநாட்டுலா ஆகியவற்றின் சில பகுதிகள். சிராமலை அந்தாதி, திருமலை வெண்பா என்னும் நூல்களும் அறிமுக நோக்கிலேயே ஒருசில பாடல்கள் மட்டும் வெளியிடப்பட்டன. வெள்ளைவாரணர், அரபத்த நாவலரின் 'பாரத சாத்திர'த்தை உரையோடு வெளியிட்டார்.

தமிழ்ப்பொழில் வாயிலாக முக்கியநூல் - பெருநூல் எதுவும் பதிப்பிக்கப் பெறவில்லை. இவை செம்மையான பதிப்புகளும் அல்ல. மூலபாடத் திறனாய்வுக் கோட்பாடுகளை அறிந்து பதிப்

பிக்கப்பட்டவை அல்ல இவை. அந்த ஆசிரியர்களின் ஆர்வத்தால் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டவை.

கல்வெட்டுக்களைக் கண்டறிந்து வெளியிடுவதிலும் தமிழ்ப் பொழில் ஓரளவு துணைபுரிந்தது. 1947வரை இருபத்துநான்கு புதிய கல்வெட்டுகள் கண்டறிந்து வெளியிடப்பட்டன. ஆனால் இதுவரை வரலாற்றில் அறியவராத புதிய செய்திகள் எதனையும் இவை தரவில்லை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் - தமிழ்ப் பொழிலின் - முக்கியமான பணி, முதல் இராசேந்திரசோழனின் கரந்தைச் செப்பேடுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியதே ஆகும். சதாசிவப் பண்டாரத்தார் இதற்குக் குறிப்புரை அளித்தார். இச்செப்பேடுகள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. ஆகவே மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தால் அண்மையில் வெளியிடப் பெற்றுள்ளன.

அறிவூட்டற் பணி

தமிழ்ப்பொழில் வெளியிட்ட இலக்கண இலக்கியக் கட்டுரைகள் பெருமளவு ஆய்வு என்று சொல்லப்பட முடியாவிட்டாலும், உள்ளன சிலவும் ஆழமான ஆய்வுகள் என்னும் தகுதியைப் பெற முடியாவிட்டாலும், அவை புதிதாக இலக்கிய இலக்கணம் பயில்வோர்க்குப் பயனுடையனவாக இருந்தன என்பது அவற்றின் சிறப்பு. தமிழ்நேயக் கட்டுரைகள், அல்லது தமிழுணர்வுக் கட்டுரைகள் என ஒரு தனிவகையே உண்டு. இவை பயில்வோர்க்குத் தமிழ் உணர்வினை ஊட்ட எழுதப்பட்டவை.

இலக்கியமே அன்றி,கல்வி, மருத்துவம், இயற்பியல், வேதியியல், உடல்நலவியல், உளவியல், சமூகவியல் என்னும் பல துறைகள் சார்ந்த சில கட்டுரைகளைத் தமிழ்ப்பொழிலிற் காணலாம். இவையன்றிப் புலவர் வரலாறுகள், அறிவியலார் வரலாறுகள், பிற மொழி இலக்கியக் கதைகள் எனப் பலவும் உண்டு. இவை அரிய செய்திகளையும், கலைச்சொல்லாக்கங்களையும் தம்மகத்தே கொண்டவை.

தமிழ்ப்பொழிலின் கலைச்சொல்லாக்கப் பகுதிகளிலும், அறிவியற் கட்டுரைகளிலும் ஆளப்பட்ட கலைச்சொற்கள் சிறப்பானவை. இவற்றில் ஆளப்பட்ட பல கலைச்சொற்கள், இன்று ஏற்கப்பட்டு, தமிழகத்தில் வழங்குகின்றன.

கலைச்சொல்லாக்கம் பற்றிய கட்டுரைகள், 1940இல் அமைக்கப்பட்ட சீனிவாச சாத்திரியார் குழுவின் செயல்பாட்டை எதிர்த்தும்,

பின்னர் 1947இல் சென்னை அரசு அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுவை எதிர்த்தும் பெரும்பாலும் எழுதப்பட்டவை.

சீனிவாச சாத்திரியார் குழுவினர் மிகுதியாக வடமொழியாக்கமே செய்திருந்தனர். சான்றுக்கு இவர்கள் வெளியிட்ட கலைச் சொற்களுக்குள் சில:

Insecticide	-	பூதிநாசினி
Similar	-	ஸஜாதீய
Triangle	-	திரிபுஜை
Basic	-	க்ஷாரமான
Electralysis	-	வித்யுத் வியோகம்

இம்முறையில் அமைந்த கலைச்சொற்கள், தமிழ்ப்பற்றுடையவர்களுக்கு எரிச்சல் ஊட்டின. 1940-50 காலப்பகுதியில் தமிழ்ப் பொழில் மிகுதியாககலைச்சொல்லாக்கக் கட்டுரைகளை வெளியிட்டது; சரியான கலைச்சொற்களை அமைக்கும் முறை, தவறாக அமைக்கப்பட்ட கலைச்சொற்களை மதிப்பிடல், கண்டித்தல் ஆகிய பணிகளில் தமிழ்ப் பொழில் ஈடுபட்டது. கணித ஆசிரியராக விளங்கிய சாமி. வேலாயுதம் பிள்ளை என்பார், அறிவியற் கலைச்சொற்களைத் தொடர்ந்து ஆக்கி வெளியிட்டுவந்தார். சாமி. வேலாயுதம் பிள்ளையின் மொழியாக்கத்திற்குச் சான்றாகச் சில:

Liquid	-	நீர்மம்
Column	-	பிழம்பு
Electralysis	-	மின் பகுப்பு
Fluid	-	பாய்மம்
Solid	-	திண்மம்
Triangle	-	முக்கோணம்
Dynamics	-	இயக்கவியல்

இப்படி அருமையான சொற்கள் ஆக்கப்படினும், 1947ஆம் ஆண்டு சென்னை அரசு அமைத்த குழு பழையபடியே, அல்ல, இன்னும் மோசமான முறையில் சமஸ்கிருதச் சொற்களைத் தொகுத்துக் கலைச்சொற்கள் என வெளியிட்டது.

Hydrogen	-	அப்ஜனகம்
Indeterminate	-	அநிஷ்கர்ஷ்த
Census	-	கலஸ்திரீ பாலபுருஷ விருத்த ஆய்வ்யய பரிமாணம்

protein	-	ஓஜஸ் திரவியம்
Revolution	-	சக்ராக்ருதி
Spinal chord	-	கசேரு லதை
Carpel	-	கர்ப்ப பத்ரம்

இக்குழுவின் கலைச்சொல்லாக்கப் பாங்கினைக் காட்ட மேற்கண்ட உதாரணங்கள் போதுமானவை. இதனைத் தமிழ்ப்பொழில் வன்மை யாகக் கண்டித்தது. தமிழ்ப்பொழிலின் முயற்சிகளின் விளைவாக, 1948இல் இரா.பி.சேதுப்பிள்ளை, இ.மு.சுப்பிரமணிய பிள்ளை, சேலம் அ.முத்தையா ஆகியோர் அடங்கிய கலைச் சொல்லாக்கக் குழு உருவாகியது. 1938-52 காலப்பகுதிதான் தமிழ்ப்பொழிலில் கலைச்சொல்லாக்க முறைகளும், கலைச் சொற்களும் ஆராயப் பட்ட காலம்.

தமிழ்நேயப்பணி

தமிழ்ப்பொழிலின் தமிழ்நேயப் பணிகள் பலதிறத்தவை. முன்பே சுட்டிக் காட்டியவாறு, முதன்முதல் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்ற ஓர் எழுச்சி தமிழகத்தில் 1925இல் தோன்றியபோது, தமிழ்ப் பொழில் தனது தலையங்கங்கள், செய்திக் குறிப்புகள் வழி அதனை ஆதரித்தது.

அவ்வியக்கம் மறைந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோற்றம் பெற்றது. அது அக்காலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக மாகவே கருதப்பட்டது. அது, தமிழ் சார்பான பல்கலைக் கழகம் என்பதை நிலைநிறுத்த, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர் ஒருவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர் ஒருவரும் அதன் ஆட்சிக்குழுவில் இடம்பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர்கள் பேருதவி புரிந்தனர். சான்றாகத் தமிழிசை, அண்ணா மலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரியில் முதன்மை பெற்றது இவர்களாலேயே. இதுபற்றிய குறிப்புகள் தமிழ்ப் பொழிலில் இடம்பெற்றுள்ளன. இப்பல்கலைக் கழக ஆட்சிக்குழு தனது நடை முறைகளைத் தமிழ்வாயிலாகவே நடத்தவேண்டும் என்பதற்காகக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் போராடி வெற்றிபெற்றது. வித்துவான் என்னும் பட்டம், புலவர் பட்டமாக மாறியது.

தமிழக எல்லைச் சிக்கல், இந்தித்திணிப்பு ஆகியவற்றில் தமிழ் மக்கள் சார்பாக நின்று அவர்களது உணர்ச்சிகளை வெளிப்

படுத்தியது. கலைச்சொல்லாக்கம், இந்தி எதிர்ப்பு, தமிழிசை இயக்கம் ஆகியவற்றைத் தடைசெய்ய முயன்றோரையும் எதிர்த்தோரையும் சாடியது. தமிழ்ப்பொழிலின் 'தமிழ்ச் செய்திகள்', தமிழ் தலைமைக்கு வர முயன்ற போராட்டங்களை நன்கு வெளிப்படுத்தும் கருவூலம். இவ்வாறே தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களில் அறிஞர்கள் பேசிய உணர்வூட்டும் உரைகள், தமிழ்ப் பொழில் வாயிலாக வெளிப்பட்டன. இவை சிறந்த தமிழ்நேயக் கட்டுரைகளாகும். இவற்றில், வரலாற்றுச் செய்திகள், சமகாலச் செய்திகள், அக்காலத்தில் தமிழின் நிலை, பிற மொழியினருடன் ஒப்பீடு, தமிழின் தனித்தன்மை, தமிழர் பண்பாடு, ஆரியர் பண்பாடும் இந்தியும் எதிர்க்கப்படவேண்டியவை என்பதற்கான காரணங்கள் போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன.

தமிழ்ப்பொழில் வெளியிட்ட கவிதைகள் யாவுமே தமிழ்நேய வெளிப்பாடுகளே. குறிப்பாக, ' தமிழரசி குறவஞ்சி ' என்னும் வரத நஞ்சைய பிள்ளையின் நூலும், 'கரந்தைக்கோவை' என்னும் ச. பாலசுந்தரத்தின் நூலும் மிகுதியாகத் தமிழ் நேயக் கருத்துகளைக் கொண்டுள்ளன.

'பொழிற்றொண்டர் கருத்துரைகள்' பகுதியும் மிக முக்கியமான தமிழ்நேயப் பகுதியாகும். 'இந்தியை ஏன் எதிர்க்க வேண்டும்?' 'தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?' 'தமிழ்க் கல்லூரிகளின் எதிர்காலம் என்ன?' 'சமயங்கள் இன்று தேவை தானா?' போன்ற பல கேள்விகள் பொழிற்றொண்டர் கருத்துரைகளில் ஆராயப்படுகின்றன.

தமிழ்நேயக் கட்டுரைகள் பல, தமிழ்ப்பொழில் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. 'திருவள்ளுவர் திருநாளை எந்த நாளன்று கொண்டாடுவது?' என்று ஆராய்வதிலிருந்து 'வாதாபி கொண்ட நாளை தமிழர்கள் தேசியத் திருநாளாகக் கொண்டாட வேண்டும்' என்பது வரை, 'தமிழ்க்கொடி எவ்வாறிருக்கவேண்டும்' என்பதிலிருந்து, 'பல் கலைக்கழகங்களில் தமிழ் செம்மையாகக் கற்பிக்கப்பட என்ன செய்ய வேண்டும்' என்பதுவரை தமிழ் உணர்வூட்டுகின்ற கட்டுரைகள் பல.

தமிழ்நேயக் கட்டுரைகளும், பொழிற்றொண்டர் குறிப்புரைகளும் தமிழ் உணர்வூட்டுகின்ற பணியைச் சிறப்பாக ஆற்றிய போதும், பெரும்பாலும் அவை பழமைவாத - மீட்புவாத நோக்கிலேயே அமைந்துள்ளன.

சைவம் சார்ந்த பணிகள்

தமிழ்ப்பொழிலின் சைவசமயச் சார்புப் பணிகள் மிகக் குறைவே. முதற்காலப் பகுதியில் - 1925 முதலாக 1940 வரைதான் சமயச் சார்பான கட்டுரைகள் மிகுதியாக வெளிவந்துள்ளன. பதிபசுபாசம், பதிபசுபாசப் பனுவல் போன்ற சைவசித்தாந்த நூல்களும் பதிப்பிக் கப் பெற்றன. ஆய்வாளர்களும் சைவச் சார்புள்ளவர்களாகவே இருந் தனர். இது 1947க்குப் பிறகு அறவேஇல்லாமற் போயிற்று.

பொதுவாக, செந்தமிழ் செய்த ஆய்வுகள், தமிழ்ப்பொழிலின் ஆய்வுகளைவிடத் தரமானவையாகவும், புறநோக்குடனும் இருந்தன. ஆனால், தமிழ்ப்பொழில் சார்ந்தோரால் செந்தமிழ் பார்ப்பனச் சார் புடைய இதழ் என்றே மதிக்கப்பெற்றது. அதேசமயம், செந்தமிழ்ச் செல்வி அளவுக்குத் தமிழ்ப்பொழில் ஒருபோதும் சைவசமயச் சார்பான ஆய்வுகளில் அக்கறை காட்டியதில்லை. தமிழ்நேயப் பணி, பிற இரண்டையும்விடத் தமிழ்ப்பொழிலில் முனைப்பாக இருந்தது.

சைவச்சார்பு நேரடியாகத் தமிழ்ப்பொழிலில் இடம்பெறவில்லை எனினும், சைவ இலக்கியங்களை - சைவப் பாட்டுகளை மட்டுமே தேர்ந்தெடுத்து ஆராய்வதிலும், பிற சமய இலக்கியங்களை ஆரா யாது புறக்கணிப்பதிலும், மறைமுகமாகத் தமிழ்ப்பொழிலின் சைவச் சார்பு வெளிப்பட்டது. ஆயினும் 1950க்கு பின்னர், ஒரு சமயச் சார் பற்ற இதழாகவே தமிழ்ப்பொழில் மாறிவிட்டது எனலாம்.

ஞானியாரடிகளின் பொன்விழாவைப் பாராட்டித் தமிழ்ப் பொழில் சார்ந்த அறிஞர்கள் பேசிய உரைகள் தமிழ்ப்பொழிலில் வெளியாகியுள்ளன. தமிழ்ப்பொழில் ஆசிரியராகப் பணிபுரிந்த வெள்ளை வாரணர், ஞானியாரடிகளின் மாணவர். இப்பண்புகள்தாம் தமிழ்ப்பொழிலை மிகுதியாகத் தொடக்க காலப்பகுதியில் ஒரு சைவ சமயச் சார்புடைய இதழாகக் காட்டின.

6

இனி, கட்டுரையின் முடிவுப் பகுதிக்கு வரும்போது தமிழ்ப் பொழிலின் அனைத்து அம்சங்களையும் தொகுத்து நோக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த அம்சங்களைக் கவனிக் கும் போது சில ஈரடித் தன்மைகள் புலனாகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி போன்ற பெயர்களிலுள்ள செம்மை பற்றியும்

தமிழ்ப்பொழிலின் பசுமை என்ற படிமம் பற்றியும் முன்னரே குறிப் பிடப்பட்டது. செம்மை என்பது ஒரு குறிப்பிட்ட விதித் தொகுதி களின்படி இயங்கும் தன்மையைக் காட்டுவது. பசுமை, வளம், படைப்பாற்றல் சார்ந்தது. முரணான இப்படிமம், ஒரு காலத்திலே தமிழ்ப்பொழில், தமிழ் வளத்துக்குப் பாடுபட வேண்டிய இதழாக மலரவேண்டும் என்ற ஆசிரியர்களின் விருப்பத்தைக் காட்டுவதா கிறது. அவ்வாறுஇல்லாமற்போனது வேறு செய்தி.

இயலாமற் போனமைக்குரிய காரணங்களை ஆராயும்போது முதன்முதலில் கண்ணிற்படுவன தமிழ்ப்பொழிலின் அடிப்படைத் தன்மைகளான மீட்பு வாதம், பழமை வாதம், தமிழ் நேயம் ஆகியன. இவற்றை அக்காலத் தமிழ்த்தேசியம் என்று சுருக்கமாகக் குறிக்கலாம்.

இந்தத் தமிழ்த் தேசியத்திலிருந்து செந்தமிழ் ஆரம்பக் காலத் தில் விலகியே நின்றது. செந்தமிழ் இதழின் உரு மாதிரியிலேயே அமைந்த ஒரு பத்திரிகை - தமிழ்ப்பொழில் - செந்தமிழ் இதழின் ஒவ்வொரு கட்டுரையையும் தேர்ந்தெடுத்து மறுக்க நின்றது இன்னொரு ஈரடித் தன்மை; அக்கால வரலாற்று இயங்கியல் என்று கணிப்பதிலும் தவறில்லை.

தமிழ்ப்பொழில் பத்திரிகை, இன்று சாரமிழந்து பயனின்றிப், பின் தங்கும் நிலை எய்திவிட்டது. அதாவது வரலாற்றில் அதன் பயன்பாட்டை முடித்துக் கொண்டுவிட்டது. அப்படியானால் அது கடைப் பிடித்த கொள்கைகளின் வன்மைமென்மைகள் யாவை?

ஒன்று, தமிழ்ப்பொழில் முன்வைத்த தமிழ் நேயம், இது படைப்புச் சார்ந்தது என்பதைவிடக் கூச்சல் சார்ந்தது என்றே சொல்ல முடியும். 'எமது வாழ்க்கை முறையும் நாம் வாழும் சமுதாயமும் தொடர்ந்து விருத்தி பெற்றுப் பரிணாம ரீதியில் வளர்ச்சி அடை யும்போதுதான் எமது மொழியும் வளர்ச்சி அடைவது தெளிவு. அது மட்டுமல்ல, மொழியின் அழகியல் வெளிப்பாடுகளான இலக் கியம், கவிதை, புனைகதை, மற்றும் நாடகம், திரைப் படம் என்பன வும் வளர்ச்சிபெற்று உலகக் கலை வடிவங்களுடன் ஒப்பிடத்தக்க நிலையினை அடையமுடியும்.

ஆய்வு என்பதுபற்றிய நோக்கு இரண்டாவது. இலக்கிய இலக் கண ஆய்வும் வரலாற்றாய்வும் எவையுமே மானிடத்துவ நோக்குக் குப் புறம்பானவையல்ல. ஆராய்ச்சி என்பது மானிடத்துவ நோக் கில், விஞ்ஞான ரீதியில் நடத்தப்பட வேண்டியது. இன்றைய

இலக்கிய ஆய்வு, நமது பண்பாட்டு வளர்ச்சியின் படிநிலைகளை நன்கு புரியவைக்கவும், எதிர்காலத்தை ஆக்கபூர்வமாகக் கட்டமைக்கவும் ஏற்றதோர் நிகழ்காலத் திறனாய்வாக அமைய வேண்டும்.

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள், திருக்குறள் போன்ற அற நூல்கள் - இவற்றையெல்லாம் தமிழ்ப்பொழில் ஆராய்ந்துள்ளது. வட மொழியும் வடமொழி இலக்கியங்களுமே இந்திய மண்ணில் சிறந்தவையாகக் கருதப்பட்ட ஒரு காலத்தில், அதனை எதிர்கொள்ள, தமிழறிஞர்கள் தமது பண்டை இலக்கியங்களின் காலத்தை மிக முன்னதாகக் காட்ட வேண்டிய அவசியம் இருந்தது. அவற்றின் சிறப்புகளை மட்டுமே விரித்துரைக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு. இன்று தமிழிலக்கியங்களைப் பற்றிப் பேசும்போது உணர்ச்சி வசப்பட்ட பூரிப்பு தேவையில்லை.

பண்டை இலக்கியங்களைத் தக்க சான்றுகளின்றி அவற்றின் காலத்தை முன்னதாகக் கணிப்பதற்கும், அந்த இலக்கியங்கள் காட்டும் வாழ்க்கையை இழந்து போனதொரு பொற்காலத்துக்கு உரியது எனக்காட்ட முனைவதற்கும் காரணம், ஆதிக்கத்தின் மீதுள்ள ஆசையே. ஆதிக்கம் செலுத்த முற்படும் ஒருவன், பிறிதொருவனின் ஆதிக்கத்துக்கு உட்படவும் நேரிடுகிறது.

தேசியம் என்பது அரசியல் நியாயப்பாட்டிற்கான ஒரு கோட்பாடுதான். அகில இந்திய தேசியம் என்பது சுதந்திரத்திற்கு முன், சுதந்திரப் போராட்ட காலத்தில், 'வேற்றுமையில் ஒற்றுமை' காண்பதாகவும், இந்துமதச் சார்பு கொண்டதாகவும், இந்தி மொழி அடிப்படை கொண்டதாகவும் முன்வைக்கப்பட்டது. ஆகவே இவ்வகை 'அகில இந்திய தேசியம்' தமிழ்ப் பொழிலில் உள்ளார்ந்து எதிர்க்கப்பட்டே வந்தது. அதன் முனைப்பான வெளிப்பாடுதான் இந்தி எதிர்ப்பு.

தமிழ் மீட்பு வாதம் - அதன் அரசியல் வடிவமான தமிழ்த் தேசியம் என்பனவற்றின் அடிப்படையில் நோக்கும்போது, தமிழ்ப் பொழில் -

தமிழிசை முயற்சி -
தமிழ்க் கலைச் சொல்லாக்கம் -
தமிழ் நாட்டு வரலாற்றுக்கு (அரசர் வரலாற்றுக்கு) முக்கியத்துவம் அளித்தல் -

தமிழ் இலக்கிய இலக்கணங்களின் தொன்மையைப்
பரப்புதல் -

ஆகியவற்றிற்குப் பங்களித்துள்ளது.

இன்று செந்தமிழ், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்த தீபிகை போன்ற இதழ்களும் இவற்றை முன்னிறுத்திய சங்கங்களும் முன்வைத்த பாணியிலான தமிழ்த் தேசியம் காலாவதியாகிவிட்டது. ஆகவே இவ்விதழ்களின் சரித்திர ரீதியான பணியும் முடிந்துபோய்விட்டது.

இன்று தமிழ்ப்பொழில் இதழ், ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்த பிராணிகளின் உடலமைப்பு எச்சங்கள் இன்று தென்படுவது போல, கடந்த காலக் கருத்தியல்கள் சிலவற்றின் எச்சமாக (Fossil) இருந்து வருகிறது.

குடி அரசு

1925

'பெரியார் சாதிக் கொடுமை, மூட பக்தி, தீண்டாமை, வலி யார் மெலியாரைத் துன்புறுத்தல், கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணைத் தத்துவம் போன்ற பொருள்களைப் பற்றிச் சீர் திருத்தக் கட்டுரைகள் எழுதினார். இவருடைய நடை லாவக மானது, பச்சையானது, நேரடியானது. கேட்பவர், படிப்பவர் மனங்களில் ஆழமாய்ப் பதியக்கூடியது.'

— சோமலெ

Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 } சனிவாரம், 14-4-1945 சித்திரை-மீ 1உ { இதழ் 27

மதப் போட்டி

(சித்திரபுத்திரன்)

யாரைப் பார்த்து யார் காப்பியடித்தார்?

மதங்கள் என்பவைகளுக்கெல்லாம் ஒரு கடவுள் இருந்தாக வேண்டும்; மோட்சம், நரகம் இருந்தாக வேண்டும்; கடவுள் தன்மை பொருந்திய அவதார புருஷர்கள், குருமார்கள் இருந்தாக வேண்டும்.

இவை இல்லாமல் உலகில் எந்த மதமும் இருக்க முடியாது. இந்த மதத்திலோ இவைகள் மாத்திரம் போதாது, அதாவது பல கடவுள்கள் வேண்டும்; பலவிதமான மோக்ஷங்கள், பலவிதமான நரகங்கள் வேண்டும்; மற்றும் பலவிதமான பிறப்புகள், முன்ஜன்மங்கள் வேண்டும்; பலவிதமான அவதாரங்கள், பலவிதமான குருமார்கள் வேண்டும்; இவ்வளவும் போதாமல் கடவுளை நேரில் கண்டு மோக்ஷத்திற்கும் போன பலவிதமான பக்தர்கள் வேண்டும்.

இந்தக் காரியங்கள் சிறப்பாக இந்த மதத்தின் உட்பிரிவு மதங்களான சைவ மதம், வைணவ மதம் என்ற சொல்லப்படும் இரண்டு உட்பிரிவு மதங்களுக்குள்ளும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருந்து வருகின்றன.

பெயர்களைப் பொருத்த வரையில் சில மாறுதல்கள் இருக்கலாமே ஒழிய காரியங்களைப் பொருத்த வரையில் ஏறக்குறைய ஒருவரைப் பார்த்து ஒருவர் காப்பி அடித்தது போலவே தான் இருக்கிறது.

உதாரணமாக வைணவத்தில் ராமாயணம் ஏற்பட்டதற்குக் காரணம் விஷ்ணுவின் அவதாரமான [illegible] செய்த [illegible] என்றால் சைவத்தில் கந்தபுராணம் ஏற்பட்டதற்குக் காரணம் [illegible] ஏற்பட்டது.

[illegible]

அதுபோலவே பரமசிவன் பார்வதியோடு பல நாள் [illegible] விடாமல் கலவி செய்து கொண்டு இருந்ததாகவும் அதனால் [illegible] பயந்து [illegible] கள் முறையிட [illegible] பெறுவதற்கு முன்னாலேயே கலவியை நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று [illegible] இந்திரியம் [illegible] வழியாக ஆகாசமாய் ஓடியதால் சுப்பிரமணியர் தோன்றி கந்த புராணம் ஏற்படவேண்டியதாயிற்று என்றுமே கதைகள் இருக்கின்றன.

அன்றியும் பூபாரம் தீர்க்கவும், ராக்ஷதர்களை அழிக்கவும் விஷ்ணு ராமராகத் தோன்றினார்.

அதுபோலவே பூபாரம் தீர்க்கவும் அசுரர்களை அழிக்கவும் சிவன் சுப்பிரமணியனாகத் தோன்றினார்.

ராமன் பிறப்பதற்காக தேவர்கள் விஷ்ணுவை வேண்டினார்கள்.

சுப்பிரமணியன் பிறப்பதற்காகவும் தேவர்கள் சிவனை வேண்டினார்கள்.

ராமன் ராக்ஷதர்கள் என்பவர்களைக் கொன்றான்.

சுப்பிரமணியன் அசுரர்கள் என் [illegible]

[illegible] ராக்ஷதர்களைக் கொல் [illegible] கொன் [illegible]

[illegible] அசுரர்களைக் [illegible] கொல்லக் கொல்ல [illegible] முளைத்த [illegible]

[illegible] சமுத்திரத்தை [illegible]

சுப்பிரமணியனுக்குப் பெண்டாட்டியும் ஒரு [illegible] பெண். வள்ளி [illegible] யில் கண்டெடுக்கப்பட்டாள்.

சைவத்திற்கும் வைணவத்திற்கும் [illegible] பற்றிய கதைப் பொருத்தங்கள் காணலாம்.

[illegible] சைவ சமய ஆச்சாரியர்களும், [illegible] நாயன்மார்களை [illegible] ஆழ்வாரி [illegible]

குடி அரசு

நா. செயப்பிரகாசு

சமகாலத்துச் சமுதாய மக்களைத் தொடர்புபடுத்தித் தோழமை கொள்ளச் செய்வன இதழ்கள். அவை கருத்துத் தெளிவுக்கும், ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கும் உதவியாயிருந்து உறுதுணை யாவன. ஒற்றுமையைச் சிதைக்கும் - சீரழிக்கும் அறியாமையை அகற்ற அரும்பாடுபடுவன. முன்னேற்றப் பாதையின் முட்டுக் கட்டை களான, சாதி, சமய, சாத்திரச் சடங்குகளையும் சங்கடங்களையும் தவிர்த்து விலக்கவும் - தகர்த்து எறியவும் தக்க கருவிகளாவன. இதமான அணுகுமுறைகளால் இறுக்கமான சூழ்நிலைகளையும், இணங்கிவரச் செய்வன; இரங்கி இளகி வரச் செய்வன. இலக்கிய நலன்களுக்கும் நயங்களுக்கும் மேலும் இனிமை செய்வன; சேர்ப்பன. புதிய புதிய உத்திகளையும் உயர் திறங்களையும் அறி முகப்படுத்தி இலக்கிய ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் நிறைவூட்டுவன. புதியபுதிய படைப்பாளர்களையும், பகுத்தறி வாளர்களையும் பயன் விளைக்கச்செய்வன. இத்தகு இதழ்ப் பணிகளில், இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு ஒரு புனிதப் போரையே நடத்திக் கொண்டிருந்தன. அதிலும் அன்று நாட்டிலிருந்த அன்னிய (மோகம்) ஆர்வம் - பெண்ணடிமை - சாதி சமய சாத்திரப் பிணக்குகள்; பிளவுகள் - நாடு மொழி இன உணர்வுகளில்லா நயவஞ்சகப் போக் குகள் - கள்வெறி - போலிக் கல்வி - உரிமைப் பறிப்பு - உரிமைப் பகிர் வில் உண்மையில்லாமை - தேர்தல் என்ற பெயரில் நடந்த தில்லு முல்லுகள் - மொழி, கலை இலக்கியச் சிதைவுகள் - புராண இதி காசப் பொய்க் கதைகளின் பொய்ம்மைத் தத்துவங்கள் - போலி

வழிகாட்டுதல்கள் - என அனைத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. திசைமாறிச் செல்லும் மக்களை, திசை மாற்றிச் செலுத்தும் மாக்களிடமிருந்து மீட்டுக் காத்து - நெறிப்படுத்தவும் சரிப்படுத்தவும் வேண்டியிருந்தது. உண்மை வாழ்வுக்கும் உயர்ந்த வாழ்வுக்கும் வேண்டிய நல்லறிவு நன்முயற்சிகளைச் செய்யவேண்டியிருந்தது.

தமிழ் - தமிழினம் - தமிழ்நாடு - என்ற மூன்று நிலைகளிலும் உண்மை, உரிமை, சமத்துவம் என்ற மூன்று நெறிகளுக்காகப் பாடுபட்ட - இன்றியமையாத இதழ்களில் - குறிப்பிட வேண்டியது 'குடி அரசு'ம் ஆகும்.

அமைப்பும் அறிமுகமும்

ஈ.வே. இராமசாமி நாயக்கரையும், வா.மு. தங்கப் பெருமாள் பிள்ளையையும் ஆசிரியராகக் கொண்ட 'குடியரசு' வாரப்பதிப்பாக - குரோதன ஆண்டு சித்திரை முதல் (2.5.25) ஞாயிறு தோறும் ஈரோட்டிலிருந்து வெளிவரும் இதழாகத் தோன்றியது. பதிவு எண்.2041. மொத்தப் பக்கங்கள் 8. தனிப்பிரதி விலை அணா ஒன்று. பின்னாளில் பதிவு எண்.4900இல் மொத்தம் 16 பக்கங்களைக் கொண்டதாகக் குடியரசு வளர்ந்தது. பதிப்புகள் மாலை என்றும் மலர் என்றும் பகுக்கப்பட்டுப் பக்க எண்கள் தமிழ் எண்களிலேயே குறிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடப்பட வேண்டிய தனிச் சிறப்பாகும். வருட சந்தா மூன்று ரூபாய்.

குடி அரசு இதழின் தொடக்க கால இதழ்களில் அமைந்திருந்த தலைப்புப் பகுதியும் படமும் கருத்துக் களஞ்சியமாக விளங்குகிறது. மேற்பகுதியில் 'எல்லோரும் ஓர் குலம் - ஓர் இனம்...' 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் பாரதியின் பாடல் வரிகள் அமைந்துள்ளன. இடதுபுறம் அருவியும் ஆற்றங்கரையும் மாடுகள் மேயும் காட்சியும் இயற்கைச்சூழல் தியானம் செய்யும் திருவுருவும் காட்சியளிக்கின்றன. வலதுபுறம் ஊர்கூடித் தேர் இழுக்கும் காட்சியும், சிலுவைக் குறியிட்ட ஆலயமும், பிறையும், கோயிலும் காட்சியளிக்கின்றன.

மையப்பதியில் ஒரு வட்டத்திற்குள் பாரத தேவியும், வலதுபுற வட்டத்திற்குள் நெசவாளியின் படமும் உள்ளன. இவ்விரண்டு வட்டங்களையும் இணைக்கும் அரைவட்ட வானவில் வளைவுக்குள் 'குடி அரசு' எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பகுதி நான்காகப் பகுக்கப்பட்டுள்ளது. பகுப்புக் கோடுகளாக, கம்பு,

கரும்பு, கேழ்வரகுப் பயிர்கள் அமைந்திருப்பது அருமை. முதற் பகுப்பில் உழவு செய்வானும், இரண்டாம் பகுதியில் நூல் நூற்பாரும், மூன்றாம் பகுப்பில் தச்சு வேலை செய்வாரும், நான்காம் பகுப்பில் மூட்டை தூக்கும் உழைப்பாளியும் - தொழிலாளியும் இடம் பெற்றுள்ளனர்.

அடுத்துவரும் அடிப்பகுதியில் இதழின் மாலை, மலர் வரிசை எண்கள், தமிழ் ஆங்கில ஆண்டு - மாத - நாள் - கிழமைக் குறியீடுகளும் குறிப்புகளும் உள்ளன.

பின்னர் வந்த ஏடுகளில், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்...; ஒழுக்கமுடைமை குடிமை...; வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலதூஉங் கோடா தெனின்' என்னும் குறட்பாக்கள் குறிக்கப்பட்டுள்ளன.

முதலில் வந்த ஏடுகளின் முன்பக்கத்தில், 'தமிழ் மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய உழைக்கும் பத்திரிகை இது. ஆகையால் இதனை ஆதரிக்க வேண்டுவது உங்கள் முதற் கடன் ஆகும். உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்' - காரியஸ்தர்; குடி அரசு காரியாலயம் - என்ற அறிவிப்பும் அழைப்பும் இடம் பெற்றுள்ளது. காலப் போக்கில் முன்பக்கத்தில் விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. பிற்காலத்தில் காலத்தின் இயல்புக்கும் எதிர்பார்ப்புக்கும் - தேவைக்கும் தெளிவுக்குமான கருத்துகள் இடம் பெற்றுள்ள கவிதைகள் எழில் சேர்க்கின்றன; எழுச்சியூட்டுகின்றன.

குடி அரசு இதழின் குறிக்கோளை அதன் ஆசிரியர் ஈ.வே.ரா. மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு கூறியுள்ளார். மற்றவர்கள் வாயிலாகவும், சொற்பொழிவிலும் வாழ்த்துரையிலும் அது விளக்கப் பெற்றுள்ளமையும் காணலாம்.

குடியரசு இதழ் அலுவலகத் திறப்புவிழாவில் வரவேற்புரையாற்றும்போது ஈ.வே.ரா., 'இப்பத்திரிகையை ஆரம்பிக்கும் நோக்கம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் இன்னும் மற்ற விஷயங்களையும் ஜனங்களிடையுணர்த்துதற்கேயாம். ஏனைய பத்திரிகைகள் பல இருந்தும் அவைகள் தங்களது மனச்சாட்சிக்குத் தோன்றிய உண்மையான அபிப்பிராயங்களை வெளியிட அஞ்சுகின்றன. அவைகளைப் போலல்லாமல், பொது ஜனங்களுக்கு விஷயங்களை உள்ளவற்றை உள்ளபடி தைரியமாகத் தெரிவிக்க வேண்டுமென்பதே எமது நோக்கம். இப்பத்திரிகாலயத்தைத் திறப்பதற்கு ஈசன் அருளால் ஸ்ரீ சுவாமிகள் போன்ற (திருப்பாதிரிப்

புலியூர் ஞானியார் மடம் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவா சாரிய சுவாமிகள்) பெரியார் கிடைத்தது அரிதேயாகும். இறைவன் அருளானும், சுவாமிகளது அருளானும் பத்திரிகை என்றும் நிலை பெற்று மற்றப் பத்திரிகைகளிடமுள்ள குறை யாதுமின்றிச் செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசீர் வதிக்கும்படி சுவாமிகளை வேண்டு கிறேன்' எனக் கூறுவதிலிருந்து அவரது இதழ் நோக்கமும் தொடக்க கால இயல்பும் தெரிய வருகின்றன (2.5.25, ப.10).

'...உயர்வு தாழ்வு என்ற ஆணவம் மிகுந்து கிடக்கின்றது. பணக்காரராக இருப்பனும், அன்பு என்பது ஒருவருக்கொருவர் மிகுந்திருக்க வேண்டும். சுதந்தரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவ வேண்டும். குடி அரசின் கருத்தும் இதுவே என நான் அறிந்து கொண்டேன்' (ப.10) என்னும் சுவாமி களின் சொற்பொழிவுப் பகுதியும் குடி அரசில் இடம் பெற்றுள்ளது இங்கு குறிக்கத்தக்கது.

1.11.25 குடி அரசு இதழ் பக்கம் 6, 7 பகுதிகளில், 'நமது பத்திரிகை' என்ற பாடலிலும், முதல் இதழ் தலையங்கச் செய்தி மேற்கோளிலும் 'குடி அரசு' இதழின் குறிக்கோள்கள் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

நமது பத்திரிகை

அனைத்துயிர் ஒன் றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப் பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும் தானே

என்பதும், குடியரசு...

நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய மகாத்மாவின் நிர்மாண திட் டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும், தமிழர்களாகிய தீண்டா தார் முதலியோருடைய முன்னேற்றத்துக்கென்று உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது... சிறிதும் கள்ளங் கபடமின்றி யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாது தனது ஆத்மாவையே

> படம் பிடித்தாற் போல் தைரியமாய் வெளிப்படுத்தித் தொண்டு செய்து வந்திருக்கிறது - வரவும் உத்தேசித்திருக்கிறது.
>
> உண்மையில் குடி அரசுக்கு எந்த பிராமணனிடத்தினும் குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதையும் உறுதியாகச் சொல்லுவோம். ஆனால் பிராமணன் உயர்ந்தவனென எண்ணிக் கொண்டிருப்பதிலும், மற்றவர்கள் தீண்டாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள், இழிவான மிருக உரிமைக்கும் பாத்திர மில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்திடத்தினும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியிலிருக்க வேண்டும் - மேன்மையுடன் பிழைக்க வேண்டும் - மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாகவேயிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும் செய்யும் கொடுமையான சூழ்ச்சிகளிடத்தினுந்தான் குடி அரசுக்கு வெறுப்பு இருப்பதுடன், அதை அடியோடே களைந்தெறிய வேண்டு மென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது

என்பதும்,

> மக்களுக்குள் தனிமதிப்பும், சமத்வமும், சகோதரத்துவமும், ஓங்கி வளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும். உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணும் உண்மையறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும் - சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும் - ஆனது பற்றியே 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு' எனும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கைக் கடைப்பிடித்து, நண்பரேயாயினு மாகுக, அவர் தம் சொல்லும் செயலும் தேச விடுதலைக்குக் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும் என நமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாக

- குடியரசின் முதலாவது இதழ் தலையங்கத்திலும், (1.11.25 - ப.7) பின்னரும் குறிப்பிட்டுள்ளதும் குடி அரசு இதழின் குறிக்கோளையும் கோட்பாடுகளையும் மிக மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

இக் குறிக்கோள்களை எட்டும் வகையினும், கோட்பாடுகளைக் கொண்டதாயும் குடி அரசு தொடர்ந்து தொய்வில்லாமல் தொண்டாற்றியதையும், வெற்றி கண்டதையும் - கொண்டதையும்

அதற்குக் கிடைத்த வாழ்த்துக்களின் வழி உணரப்படுகின்றன. குறிப்பாக 1.5.32 குடி அரசு இதழில், 'எட்டாவது ஆண்டிற் குடியரசு' என்னும் தலைப்பில் - விருத்தப்பாவில் - ஆக்கியோன் புதுவை பாரதிதாசன் என்ற குறிப்புகளுடன் வெளிவந்துள்ள வாழ்த்துப்பா இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்

ஏழாண்டி னின்றுநீ எட்டாம் ஆண்டின்
எழிற்பீடம் ஏறிவிட்டாய் வெல்க வெல்க!
பாழாண்ட படிவிட்டே அறிவியக்கப்
படியேற்றிப் படியேற்றி நாங்கள் கொண்ட
வாழாத நிலை நீக்கி வாழ்நிலைக்கு
வரச்செய்யப் பணியாற்றும் நன்மை தன்னில்
சூழ்கின்ற குடி அரசே! வெல்க உன்றன்
எட்டாண்டின் எழிற்பீடம் வெற்றி கொள்க!
ஏறிநின்ற உனதுநிலை ஏற்றம் கொள்க.
வெட்டாத கத்தியை வீசாக் கையால்
வெடுக்கென்று தூக்கினமை வீழ்த்தப்பார்க்கும்
முட்டாள்கள் வைதிகர்கள் குருக்கள் சூழ்ச்சி
முளையழிய நடமாடி நாட்டு மக்கள்
கட்டோடு சமத்துவத்தைத் தாவும் இன்பக்
கருத்தளிப்பாய் குடி அரசே வெல்க நன்றே,
ஏழ் ஆண்டும் உன்நிலையும் உறையும் வாளும்
எட்டாவதாண்டு தான் உனது வீச்சு
கூழ் ஆண்டே கூழ் ஆண்டே என்று கூவும்
கொடும் ஏழ்மைத் தன்மையினை நீக்க வேண்டும்
வீழ்நிலையில் நாட்டினரை வீழ்த்தும் தீய
வெம்பணக்காரத் தன்மை தொலைய வேண்டும்
சூழ்கின்ற பகுத்தறிவின் இயக்கங் கண்ட
தூய குடி அரசே என்றும் வாழி!

இதேபோன்று 1932 சித்திரை இதழில் ப.12இல் இடம் பெற்றுள்ள தமிழ்மகளின் 'குடியரசு வாழ்க' என்ற பகுதியிலும் குடி அரசு இதழின் நோக்கம், தொண்டு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. 'கடந்த ஏழாண்டு காலமாக நமது குடி அரசு ஆற்றியிருக்கும் பணிகள் அநந்தம் என்பதை எதிரிகளும் ஒப்புக்கொண்டே தீர

வேண்டும். சொல்கிறபடி நடத்திக் காட்டுவதில் குடிஅரசுக்கு இணையான மேலான பத்திரிகைகள் நாமறிந்த பத்திரிகைகள் எதுவுமில்லை. சுயமரியாதைக்கும், உண்மையான உலக விடுதலைக்கும், பெண்கள் நலத்திற்கும் இளைஞர்களுக்கும் நமது குடியரசு ஆற்றி வந்திருப்பது போன்று வேறெந்தப் பத்திரிகையும் நடந்து கொள்ளவில்லை. தனக்கு உண்மை எனத் தோன்றியதை எவர் தயவுக்கும் - தாட்சண்யத்திற்கும் பயப்படாமல் வீரமாகக் கூறி வந்திருப்பதில் குடியரசே முதன்மை ஸ்தாபனம் வகுக்கிறது. மதம், மூடப் பழக்கவழக்கங்கள், தீண்டாமை, சாதி, தேர்த் திருவிழா முதலியவற்றை ஒழிக்கவும் குடியரசு செய்திருக்கும் தொண்டு அளப்பரியனவாகும்.'

மேற்சொன்ன செய்திகளால் குடி அரசு இதழின் நோக்கங்கள் மட்டுமல்லாமல், அக்காலத் தமிழ் நடை, சமுதாயச் சூழல், மற்ற இதழ்களின் நிலை போன்ற பல செய்திகள் அறியப் பெறுகின்றன.

தலையங்கம்

ஒரு இதழின் உள்ளத்துடிப்பின் - உயிர்த்துடிப்பின் உண்மைக் குரலாக அமைவது அதன் தலையங்கப் பகுதியாகும். நடந்தன பற்றிய கருத்துக்களும், நடக்க வேண்டியன பற்றிய கருத்துக்களும் வெளிப்படுவன இப்பகுதியின் வாயிலாகத்தான். ஒரு இதழின் தனித்தன்மை தலையங்கத்தின் வழியாகத் தான் முடிவு செய்யப்படும். தன் கருத்தாகவும், பிற சொற்பொழிவுகளின் மேற்கோள்களாகவும், திறனாய்வுகளாகவும், மொழியாக்கங்களாகவும், பல நிலைகளில் குடி அரசுவின் தலையங்கங்கள் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. சமுதாய அக்கறையும், அஞ்சாத நடுவு நிலையும், முறையாக ஆற்றுப்படுத்தும் போக்கும் அவற்றில் வெளிப்படுகின்றன.

1. நமது அரசியல் நிலை (17.5.25)
2. உடுமலைப் பேட்டை தாலூகா அரசியல் மாநாடு. கல்யாண சுந்தர முதலியார் சொற்பொழிவு (18.5.25)
3. இந்துக்களின் கொடிய வழக்கம் (7.6.25)
4. தமிழ்நாடு (14.6.25)
5. நிர்மாண திட்டம் (5.7.25)

6. சத்தியாகிரகம் (28.6.25)
7. சென்னைத் தேர்தல் (19.7.25)
8. சுதேசமித்திரனின் மதுவிலக்குப் பிரசாரம் (26.7.25)
9. ஒரு கோடி ரூபாயும் இருபத்தோரு நாள் உண்ணா விரதமும் முப்பதினாயிரம் பேர் சிறைவாசமும் (9.8.25)
10. சீர்திருத்தத்தின் முக்கியம் (இந்தியன் சோஷியல் ரிபார்மர்)
11. மதுபானம்
12. தமிழர் மகாநாடு - தீண்டாமை
13. போர்
14. சுயராஜ்யம் (15.11.25)
15. எது தேசத்துரோகம்
16. இது தானா சுயராஜ்யம் (13.7.46)
17. CR
18. மதமும் மனித சமதர்மமும் (பெரியார் பேச்சு) (27.7.46)
19. வங்காளக் கலவரம் (24.8.46)
20. திராவிடா இன்னுமா தீபாவளி (1946 அக்.12)
21. நமக்கு வேண்டியது சுயராஜ்யமா - சமதர்ம ராஜ்யமா (31.8.46); ஆலயப் பிரவேசம் (1946 நவ)
22. எல்லோர்க்கும் கல்வி (28.9.46)

என்பன குடியரசு இதழில் வெளியான சில தலையங்கத் தலைப்புகள்.

கவிதைகள்

சொல்லவரும் செய்திகளைச் சுவையான முறைகளிலும், வலியுறுத்த விரும்பும் கருத்துக்களை வனப்புமிகு வடிவங்களிலும் வெளிப்படுத்தும் முறைகளால் குடிஅரசு இதழின் இலக்கிய நெஞ்சமும் புலப்படுகிறது. தொடக்க கால இதழ்களில் தோன்றாத கவிதைப்படைப்புகள் - பாடல் மேற்கோள்கள் சுட்டப்பட்டவை தவிர - காலப் போக்கில், படிப்படியாக இடம் பெற்று விளங்குதலைக் காண முடிகிறது.

குடி அரசுவுக்குப் பாவேந்தர் அளித்த வாழ்த்துப் பாடல் 'நமது பத்திரிகை' என்ற தலைப்பிலமைந்த பாடல் - என முன்னர் குறிப் பிட்ட பாடல்கள் மட்டுமல்லாமல், பல கொள்கைப் பாடல்களும், இரங்கற் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

ஸ்ரீ வ.வெ.சு. ஐயர் மீது சரம கவிகள் என்ற தலைப்பில் (21.6.25) இதழில் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் பாடல் இடம் பெற்றுள்ளது.

தமிழ் மொழியின் பெருமை தன்னை
உலகறிய எடுத் தறைந்த தனிப்பறையின்
பேரோசை தணிந்ததையோ
....
அமிழ்ந்து றங்கும் தமிழர்களை
அடிமையிருள் அகன்றதென அழைத் தெழுப்பும்
கோழிக்குரல் அடைந்ததேயோ –
தேனாட்டும் தென்மொழியும் தெருளோட்டும்
வடமொழியும் தெளியத் தேர்ந்து
மேனாட்டின் பலமொழியும் மிகக் காட்டிக்
கடைந்தறிந்த ஞானமெல்லாம்
தாய்நாட்டின் விடுதலைக்கே தனிநாட்டித்
தவம் புரிந்த தகைமையாளர்
வானாட்டின் சிறந்ததென்பாய் தமிழ்நாட்டைத்
துறந்து நீ போய் வாழ்வாக யெங்கே (பக்.5)

இதைப் போலவே, தேசபந்துவுக்கான, தூத்துக்குடி ஏ. மாசிலா மணிப் பிள்ளையின் இரங்கற் பாவும் இடம் பெற்றுள்ளது. (5.7.25, பக்.11)

ஆர். வரதப்பனின், (31.1.26, ப.11),

தீட்டுத் தீட்டென்று சொல்லித் தூரவிலக்கி எங்களை
ஆட்டிவைத்த காலமெல்லாம் அடியோ டழிந்து
நாட்டின் சுதந்தரத்தை நாங்கள் அடைவோம் நீ
நாடிவர வேண்டாம் நீ ஓடு பேயே

என்னும்,

'தீண்டாமைப் பேயை ஓட்டும் பாட்டு' இடம் பெற்றுள்ளது.

16.10.48 இதழில் வெளிவந்துள்ள, இரா. வ. பார்த்தசாரதியின் பாடல் இங்கு நினைக்கத்தக்கது.

ஓதிய வேதங்கள் போதும் – அவை
நீதிக் கதையெனச் சாற்றிய தெல்லாம்
காதுக்கினிய தென்றாலும் – நம்மைச்
சாதிக் குழியினில் தள்ளியே தீரும்.

....

வள்ளுவன் காட்டிய வாழ்வு – அந்த
வள்ளற் பெருந்தகை வாழ்த்திய பாதை
துள்ளுகிழவர் பெரியார் – மூன்றும்
மெள்ளமெள்ள நம்மை மீட்டியே தீரும்.

20.10.48 இதழில், 'ஒன்று கூடுவோம்' என்ற தலைப்பில்,

தமிழ்நாடு செழிக்க நல்ல திட்டம் போடணும்
தரணியில் சிறந்த நாடெனப் புகழ்பெறவேணும்
கொஞ்ச நேரங்கூடச் சும்மா குந்தியிராமல்
கொல்புலி போல் தமிழ்காக்க ஒன்று கூடணும்

என்னும் கி. இராவணன் பாடல் முழங்குகிறது.

மொழி நலங் காக்கும் முயற்சிகள் குறித்த பாடல்கள் பல உள்ளன. 'பெருமாள் மாடு' என்ற தலைப்பில் அமைந்த புலவர் வாணிதாசனின் பாடல்: (25.9.48 சனி)

புரும்... புரும்... டும்...
தமிழ் கெடும் எங்கள் தமிழ் கெடு மெண்ணு
உன் இனத்தவங்க ஊர் ஊராய்ச் சொன்னா
சட்டம் போடணும் தடியடி செய்யணும்
புரும்... புரும்... டும்...
இல்லா விட்டா பதவியை விட்டு
இழிச்சி விடுவேன் இழிச்சி விடுவேன்
நல்லதோ கெட்டதோ நான் சொல்லறதே
எல்லாம் செய்யணும் எல்லாம் செய்யணும்
புரும்... புரும்... டும்..
இந்தப் பெருமா மாடுக ளெல்லாம்

இனத்தையும் பாரா இழிவையும் பாரா;
பதவிக் காகத் தன்மானம் விற்று
செய்யும் எதையும்... எண்ணிச் செய்யாதே!
ஆனால் பெருமா மாடோ
தலையை ஆட்டும் தப்பு செய்யாதே!...

'விரைந்து வாரீர்' என்னும் தலைப்பில் சாமி. பழனியப்பன்,

செந்தமிழைக் காத்திடுவோம்! நீவிரெல்லாம்
சேர்ந்தொன்றாய்க் களநோக்கி விரைந்து வாரீர்

குடி அரசு இதழின் பல பாடல்கள், தமிழ் மொழியின் நலன் காணும் முயற்சியாகவும் - காட்டும் முயற்சியாகவும் - காக்கும் முயற்சியாகவும் விளங்குதல் வெளிப்படை.

கட்டுரைகள்

குடிஅரசு இதழில் வெளியாகியுள்ள கட்டுரைகள் பெரும் பாலும் சமுதாய சீர்திருத்தக் கட்டுரைகளாகவும், சமுதாய விழிப் புணர்வுக் கட்டுரைகளாகவும், சமுதாய மேம்பாட்டுக்கான கட்டுரை களாகவும் விளங்குகின்றன. பெண்ணடிமை - புராண இதிகாசப் பொய்ம்மைகள் - தீண்டாமை - மூட நம்பிக்கைகள் - கள்ளுண்ணாமை தொடர்பான கட்டுரைகளாக அவை அமைந்துள்ளன. சொற்பொழி வுகளும், பிற ஏடுகளின் மொழியாக்கங்களும், இதற்கெனவே எழுதப்பட்டவைகளும் இதில் கட்டுரைகளாக வெளியாகியுள்ளன. மொழி - கலை - இலக்கியம் தொடர்பான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இயந்திரமும் கை இராட்டினமும் (ஈ.வே.ரா.), அன்பு (சிவாச்சாரிய சுவாமிகள் சொற்பொழிவு), தமிழ் மொழி வளர்ச்சி (டி.என். சிவஞானம் பிள்ளை சொற்பொழிவு) - பெண்கள் அறம் (சிவாச்சாரிய சுவாமிகள் சொற்பொழிவு) - நெஞ்சு பொறுக்குதில் லையே (சி. ராஜகோபாலாச்சாரியார்) - இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள் (கி. ஆ. பெ. விஸ்வநாதன் பிள்ளை) - துர்ப் பாக்கியமான சோதரிகள் (காந்தியடிகள்) - செயற்கை மழையின் உபயோகம் (வீ. சுப்பிரமணிய ஐயர்) - காப்பிக்குடியும் மது மான மும், வாலிபர் கடன், தமிழரசர்கள் - பொற்கைப் பாண்டியன் (சே. எஸ். ஆறுமுக பிள்ளை) - பால்ய விவாகம் (கோ. இராம சாமி)

- தீண்டாமை (ஈ.வே.ரா. - சொற்பொழிவு) - இந்தியத் தொழிலாளர் (ஒரு தொழிலாளர் எழுதுவது) - எல்லோருமோர் குலம் (இளங்கோ) - கிராமப் பிரவேசம் (ராமதாசன்) - குருகுலம் (ஈ.வே.ரா.) - உண்மையான கல்வி எது (சுத்தானந்த பாரதியார்) - லஞ்சம் (ஈ.வே.ரா.) - திருவள்ளுவரும் மருந்தும் (N. சிவசுப்பிர மணியம்) - தீண்டாமை இந்து மதத்திற்குச் சாபக் கேடா? உயிரா? - தைரியம் (சுப்பிரமணிய பாரதியார்) - நாட்டுப் புறங்களின் நிலைமை - தமிழ் மக்கள் உயர்வு (தி.க. உலகநாத பிள்ளை) - பெண்கல்வி (திருப்பூர் கே.வி. வேங்கடாசலம் பிள்ளை) - தமிழ் மொழி (தி.க. உலகநாத பிள்ளை) - தமிழ்மொழி (மு. கோவிந்த ராஜ நாட்டார்... தமிழ்ப் பொழில்) - பாஷாபிமானம் - இந்திய வறுமை - உண்மையான தீபாவளி (ஈ.வே.ரா.) - இந்து மதத்தில் நமது பெண்களின் நிலைமை (வேப்பிரமாணம்) - பிறமதம் புகு தலும் தீண்டாமையும் (ப. வீரப்பபிள்ளை) - சிசுமரணம் - கிரம சுகாதாரம் (காசியர் மொழிபெயர்ப்பு) - பெண்கள் விடுதலை (மணமகள்) - தற்காலப் பெண்டிர் - தேவதாசிகள் முன்னேற்றம் - தற்காலக் கல்வியிலுள்ள குறைகள் (எம்.ஏ. ஆண்டமுத்து கவுண்டர்) - குறள் - தமிழிற்கு துரோகமும் ஹிந்தி பாஷையின் இரகசியமும் (சித்திரபுத்திரன்) - தொழிலாளர் இயக்கம் - தற்கால நிலமை - போலீஸ் நிர்வாகம் - காந்தியின்றிக் கதிமோட்சம் இல்லை - சமத்துவம் (கொழும்பு சமத்தவ ஊழியனில் பெ.பெரி. சுப்பிரமணிய செட்டியார் எழுதியது) - நூலறிவும் உணர்வும் - சுய மரியாதை உணர்வின் காரியம் (புதுவை பாரதிதாசன்) - தமிழைப் பிடித்த சனியன் (சாமி. சிதம்பரனார்) - கல்வி நீரோடை - எனப்பல - பல்துறைத் தலைப்புகளிலும் கட்டுரைகள் அமைந்துள்ளன.

கே. ஆண்டாள் அம்மாள் (நமக்கு இன்னும் சாதிவேண்டுமா) எஸ். நீலாவதி 1. பெண்மக்களே எழுங்கள் - வைதீகக் கோட்டை யைத் தகர்த்தெறிவோம், 2. (அடிமை உலக விடுதலை) வைதீகர் கொடுமையும் தீண்டாதார் துயரமும், செல்வி. சிவகாமி சிதம் பரனார், ஆர். நாகலட்சுமி, காஞ்சிபுரம் சுவர்ணாம்பாள் (கவிதை - தமிழகம் தழைக்கத் தாய்மார் வருவீர்) - ஆர். அன்னபூரணி அம் மாள் (இந்த ஆபாஸம் எந்த நாட்டிலுள்ளது?... வேத புராணங்களா வெகு கூடிவரக் குப்பைகளா - பதிலிறுக்கும் பண்டிதர் வெளிவருக - இந்திய சகோதரிகளே இன்னும் உறக்கமா? விழிமின்... எழு மின்!... 1932, ஆனி 27, ப.6) எனப் பெண் எழுத்தாளர்களும்

தமது பங்களிப்பைக் குடி அரசு வழி தந்துள்ளனர். மூவலூர் ராமா மிர்தம்மாள் (தேவதாசிகளுக்கு ஓர் எச்சரிக்கை)

குடிஅரசு இதழின் நடையியல்பு - சமூகக் கண்ணோட்டம் - சமுதாயப் பொறுப்புணர்வு ஆகியனவற்றை வெளிப்படுத்தி விளக் கும் வகையில் அமைந்த சில பகுதிகளைப் பார்ப்போம்:

ஈரோடு பெண் பாடசாலையில் ஆங்கிலக் கூத்து

இம்மாதம் 1-2 வெள்ளிக்கிழமையன்று ஈரோடு உயர்தர ஆரம் பப் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவினைக் காணச் சென்றிருந்தோம். அங்குக் கண்ட காட்சியால் எமது மனம் பதைபதைத்ததை ஒரு சிறிதும் விவரித்துக் கூறுதல் இயலாது. ஒரு மேடையின் மேல் இளம் சிறுமிகள் சிலர் ஆங்கில உடைதரித்து... மேனாட்டு முறையில் நடனஞ் செய்து கொண் டிருந்தனர்... இக் கொடுங் காட்சி எமக்களித்த துயரம் ஒரு புறமிருக்க மற்றொரு விஷயமும் எமக்குப் பெருந்துன்பத்தை யளித்தது... இன்னொரு காட்சி. சிறுமியர் இருவர் அருவருக் கத்தக்க ஆடைகளாலும் அலங்காரப் பொருள்களாலும், விதூ ஷக வேடம் புனைந்து மேடைமீது கத்திக் கொண்டும் குதித்துக் கொண்டும் நின்ற நிலை எமது மனத்தைத் துளைத்தது. என்னே நமது வீழ்ச்சி; எண்ணி எண்ணி நாம் பெருந்துயர் உழந்தோம். நமது சிறுமிகள் - தமிழ்நாட்டுத் தவப் புதல்விகள் - கற்புத் திறம் பூண்ட கண்ணகி வழித் தோன்றிய கன்னியர், அறம் வளர்த்த அம்மை மணிமேகலை வழித் தோன்றிய மழலை மொழி மாணவி கள் - சிறுமை வழிகளில் வலியப் புகுத்தப்படுவதைக் காண மனம் ஆற்றாது உடனே திரும்பிவிட்டோம்.

நாட்டிற்கே அவமானம்

தேசிய உணர்ச்சி நாடெங்கும் பரவிவரும் இக்காலத்தில் நகர சபையாரால் பரிபாலிக்கப்படும் ஒரு பள்ளிக்கூடத்தில் பெண் குழந்தைகள் ஆங்கில நடனம் பழகக் கற்பிக்கப்படுதல் ஒரு பெரிய அழியாத அவமானமாகும்... தற்காலக் கல்வி முறையே இத்தகைய சீர்கேடுகளுக்கு முக்கிய காரணம்.

பெண்மை அழியவா?... ஒரு கேள்வி?... (பாடசாலை நிறு வுதல்)... பிறந்த நாட்டு நாகரிகத்தில் வெறுப்பும் வெளிநாட்டு நாகரிக நடையுடை பாவனைகளில் விருப்பும் ஏற்படும் வண் ணம் பயிலுவித்து வருங்காலத்தில் அவர்களின் குடும்ப

வாழ்க்கையைப் பாழாக்குவதற்கா?... - பண்பாட்டுப் பாது காவலனாகக் குடி அரசு குரல் கொடுப்பதும் உணரப்பட வேண் டியதாகும்.

(7.6.25) இந்துக்களின் கொடிய வழக்கம் என அமைந்த தலையங்க நடை:

ஆ! கொடுமை!... கொடுமை!... இக்கொடூரமான கொலையை - பாதகச் செயலைக் கேள்வியுற்ற இந்திய மக்கள் அனைவரும் மனம் பதைபதைப்பர். உள்ளமுருகுவர்; உடலம் நைவர்; கண்ணீரை ஆறாய்ப் பெருக்குவர். கரை காணாத் துன்பக் கடலில் வீழ்வர். இளஞ் செல்வச் சிறுமியர்களாக இருப்பின் நெருப்பில் வீழ்ந்த புழுப் போல் துடிதுடிப்பர். பெண் மக்கள் எனுஞ் செல்வம் படைத்த தாயரும் தந்தையரும் மனங்கலங்கி, மாழ்ந்து, வெய்துயிர்த்து நிற்பர்; விம்மி விம்மி அழுவர் (ப.6).

இதைப் போன்றே, 7.6.25 இதழ் பக்.7இல் ஐயர் பிரிந்தார் என்ற தலைப்பில், '...பாபநாச அருவியில் நீராடி, விளையாடி, களி யாட்டயர்ந்து, இயற்கை தேவியின் இன்பம் நுகர்ந்து - இன்ப வாரி தியில் திளைத்து நின்ற திருவாளர் வ.வெ.ஸு. ஐயர் திடீரென மறைந்து விட்டார். தெய்வத் தமிழ்நாட்டையும் தீஞ்சுவைத் தமிழ் மொழியையும் விட்டு அகன்றார். எமதருமைத் தாய்நாடு எழில் மிக்கு மாண்பமை மாநிலத்தரசியாய் விளங்கும் காட்சியைக் கண் குளிரக் கண்டு களிபெய்தி நிற்கும் பெரும்பேற்றின் மீதுள்ள பேர வாவினைத் துறந்து செல்லவும் ஒருப்பட்டனர்' என அமைந்த தமிழ் நடையின் தன்மையும் தகைமையும் உணரப்பட வேண்டியவை.

அன்றைய கல்வி பற்றிய கருத்தும் கணிப்பும் பற்றிக் குடி யரசு கொடுத்தல் குரல்: (30.8.25, ப.3)

சென்னையில் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா.

இவ்வருடம் சென்னை மாகாணத்தில் 84 ஸ்திரிகளுள்பட 1744 பேருக்கு அடிமை முத்திரை வைக்கப்பட்டது.

மணிகளாகவும் மாணிக்கங்களாகவும் உள்ள பல வாலிபர்களும் ஸ்திரீ ரத்னங்களும் அடிமை முத்திரையைப் பெற்றுக் கொண்டு விட்டார்கள்; அதாவது இவ்வருடம் சர்வகலாசாலைப் பட்டம் வழங்கிய விழாவில்... அரசாங்கத்தார் அவர்களது கல்வியான அடிமைத் தன்மையைப் போதித்து... அடிமை முத்திரையைத் தலையிலடித்து, அடிமைச் சின்னத்தையும் கையில் கொடுத்து,

அடிமைக்குத்தக்கவன் என்ற நற்சாட்சிப் பத்திரமும் அளித்து வெளியிலனுப்பி விடுகிறார்கள். இவ் அடிகைமளால் உலகும், உலகிலுள்ள ஜீவன்களும், சத்தியம், கர்மம், நீதி, அன்பு, பரோபகாரம், தேசபக்தி இன்னோரன்ன பிறவும் கடவுள் ஒருவள் இருக்கிறாரா என்றும் சந்தேகப்படத்தக்க வண்ணம் நாச மடைந்து வருகிறது...

இதில் ஆங்கிலேயக் கல்வி முறைகளால் நேர்ந்த அழிவு களையும் - தவறான வழிகாட்டுதல்களையுமே குடி அரசு குறிப் பிட்டுக் கூற முற்பட்டுள்ளமை எண்ணப்பட வேண்டியதாகும்.

பல்கலைக்கழக நியமனங்கள் குறித்தும், தமிழ் மொழியின் நிலை குறித்தும் குடி அரசு கொண்டிருந்த அக்கறையும் வெளிப் படுகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தி எதிர்ப்புக் காலத்தில், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் பாடுபட்ட தோழர் டி.பி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை... அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நியமிக்கப்பட்ட போழ்து வெறுப்பிற்றிருந்த பல தமிழ்மக்கள் அறிஞர். அ. சிதம்பர நாதனார் பேராசிரியராக வந்த செய்தி கேட்டு மிகவும் மகிழ் வெய்துகின்றனர்.

அறிஞர் அ. சிதம்பரநாதனார் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ் ஆசிரியர்களின் உயர்வுக்கும் தமிழ்நாட்டின் விடுதலைக்கும் பாடுபடுவதையே குறிக்கோளாகக் கொண்டவர். எனவே, அன்னார் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்றமையான் தமிழ் மக்கள் பெரிதும் பயனடைவர் என்பது உறுதி.
- (ஆர்.) (27.7.46, ப.2)

சமுதாயப் பொறுப்புணர்வும் விழிப்புணர்வும் வேண்டும் பகுதி யில் அமைந்த நடை:

திராவிடர்கள் பலர் தங்கள் அறிவையும் மானத்தையும் இழந்து இப்பண்டிகையைக் (கார்த்திகைப் பண்டிகை) கொண்டாடு கின்றனர்.

இப்போழ்து காலம் மிக நெருக்கடியானது. எங்கும் பஞ்சம் தலை விரித்தாடுகின்றது. உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை என்ற பேச்சே மக்களின் அன்றாடப் பேச்சாக வுள்ளது. இந்நிலையில் நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள விறகுகள் வீணாகக் கொளுத்தப்படப் போகின்றன.

அளவில்லாத எண்ணெய்யும் நெய்யும் பாழ்படுத்தப்படப் போகின்றன. இரயில் வசதி போதிய அளவுக்கு இல்லாத இக் காலத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் பல வகையினும் தொல் லைப்படத்தான் போகின்றார்கள்.

இவர்களுக்கு என்றுதான் அறிவுக் கண் திறக்கப்படுமோ (20.11.46, ப.7)

இதழியல் கூறுகள்

இதழ்களின் இன்றியமையாக் கூறுகளாக விளங்கும், துணுக் குகளாகவும் துண்டுகளாகவும் அமைந்த உரையாடல்கள் - விளம் பரங்கள், செய்தித்திரட்டு - மதிப்புரை - கருத்துப்படம் - பிழை திருத்தம் - (சிறுகதைப்) போட்டி அறிவிப்புகள் - கேள்வி பதில் கள் (சித்திர குப்தன்) - ஆகிய பல பகுதிகளைக் கொண்டதாகவும் குடிஅரசு விளங்குகிறது.

1. உரைத்துண்டுகள்; துணுக்குகள்

நயமான நையாண்டித் தனத்துடன் தன் கருத்துக்களையும் தெளிவையும் பாமர மக்களுக்கு நாடகப் பாங்கில் வெளியிடும் உத்தி குடி அரசில் சிறப்பாக அமைந்துள்ளது.

சான்று 1: 'பிராயச்சித்தம்' 16.8.25, ப.3.

ஒரு பெரிய மனிதர்: வாருங்கள் சாஸ்திரிகளே! உங்களை வர வழைக்க வேண்டுமென்றிருந்தேன்... நீங்களே வந்து விட்டீர்கள் !...

சாஸ்திரி: அப்படியா... என்ன விசேஷம்!...

பெரியமனிதர்: ஒரு பையன் தத்துக்கிளியின் கழுத்தில் கயிற் றைக் கட்டி இறுக்கிக் கொன்றுவிட்டான். இதற்கேதாவது பிராயச் சித்தம் உண்டா?

சாஸ்திரி: ஆஹா... உண்டு. அவன் பெற்றோர் 108 தங்கத் தத்துக்கிளிகள் செய்து 108 பிராமணர்களுக்குத் தந்தால் பாவம் தீர்ந்து போகும்...இல்லாவிட்டால் அந்தப் பையனைப் பார்க்கவே கூடாது.

பெரியமனிதர்: ...பையன் உங்க பையன்தான்!

சாஸ்திரி: ...இனி அப்படிச் செய்யாதே எனச் சொன்னால் போதும்!

சான்று 2:

கள்ளுக்கும் விஷத்திற்கும் வாக்குவாதம்

(16.8.25, ப.5)

விஷம்: ஓ கள்ளே! நீ என்ன மகா கெட்டிக்காரன் மாதிரி பேசு கிறாய்! ஒரு கடுகளவு ஒரு மனிதனுக்குள் பிரவேசித்தேனேயா னால் அவன் உயிரை வாங்கிப் பிணமாக்கி விடுவேன்... நீ.. பீப் பாயளவு உள்ளே போனாலும் ஒன்றும் செய்வதில்லை.

கள்ளு: அப்படியா!... உன்னால் என்ன செய்யமுடியும்?... ஒரு மனிதன் உயிரை மாத்திரம்தான் வாங்க முடியும் - இது யாரும் செய்து விடுவார்கள்... என் சங்கதியைக் கேள்! நான் ஒரு மனிதனுக் குள் சென்றேனேயானால் அவன் புத்தி - மானம் - சொத்து இவ் வளவையும் பிடுங்கிக் கொள்வதோடு உயிர் இருக்கவே பிண மாக்கி விடுவேன்... இது உன்னாலாகுமா?...

இவ்வாறு பல பகுதிகள் சுவையாகவும், சுருக்கமாகவும் அமைந்துள்ளன.

விளம்பரங்கள்

விளம்பர விகிதம் பற்றிய விளம்பரமும், (பக்கம் ஒன்றுக்கு மாதம் ரூ.35, அரைப்பக்கத்திற்கு ரூ.20, கால் பக்கத்திற்கு ரூ.12, அரைக்கால் பக்கத்திற்கு ரூ.7 - தடவை ஒன்றுக்கு அங் குலம் ஒன்றுக்கு அணா 6) சுவையான சொற்களிலிலமைந்த விளம்பரங்களும் குடிஅரசில் இடம் பெற்றிருந்தன.

சான்று 1:

வந்தே மாதரம்!

இதுகாறும் ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாத

அபூர்வமான மருந்து இதுவே!

அதுதான் மூட்டைப்பூச்சி எமன்!

உங்கள் வீடுகளில் எவ்வித சந்துகளில் அபாரக் கணக்கான மூட்டைப் பூச்சிகளிருந்தாலும் பஞ்சில் ஒரு சொட்டு மருந்தை எடுத்து அங்கு விட்டால் அந்த க்ஷணமே சாகுமென்பது திண்ணம். சந்தேகமிருந்தால் ஒரு மூட்டைப் பூச்சியைப் பிடித்து எமன் பார்வைக்கு விட்டால் சாகும்விதம் அறிவீர்கள்.

2 அவுன்ஸ் பாட்டில் ரூ.1.0.0

1 அவனஸ் பாட்டில் ரூ.0.8.0

மயிலர் திருமாளிகை

காங்கயம் (வழி) திருப்பூர்.

சான்று 2:

கதர்!

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்தக் கதர்

கற்பக விநாயகர் கதர் நிலையம்

மண்டி வீதி - ஈரோடு

குடி அரசு இதழ் க. அப்பையாவால் ஈரோடு சுயராஜ்யா அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது என்பதற்கான குறிப்பும் இதில் இடம் பெற்றுள்ளது.

* பாரீஸ் லேடிகளின் லீலா வினோத போட்டோ மோதிரம் -

* சுகந்த பரிமள ஸ்நானப் பொடி - திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள் - சரீர மர்ம சாஸ்திரம் - ஓர் மானிட மர்ம நூல் - அமிர் தார்ணவ லேகியம் - முந்துங்கள்! 10 ரூபாய் மதிப்பிடக் கூடிய 220 சாமான்கள் இனாம்.

கோல்ட் பிளேடட் நிப் பவுண்டன் பேனா

* வந்தாலும் போனாலும் சரி என்ற

லாட்டரிஇல்லை!

கைமேல் பலன் கிடைக்கும்

இது ஹம்பக்மில்லை!

பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது.

ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32 ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் பெறலாம்.

* இம்ப்ரூவ்ட் லீவா பாக்கெட் கெடியாரங்கள்

குடிஅரசு வழி அறியப்படும் நூல் வெளியீடுகள் - நூல் மதிப் புரைகள்

1. பஞ்சாமிர்தம் - சஞ்சிகை
2. சிந்தாமணி - (ஆசி.) பாலம்மாள்
3. ஜாரதுஷ்டிரன் - சுத்தானந்த பாரதி
4. அறநூல் - சுத்தானந்த பாரதி
5. இந்திர குலபோதினி (மாதசஞ்சிகை) எஸ்.ஜி. சீனிவாசகம் பிள்ளை
6. அகில பானு - வாரப் பத்திரிகை
7. குகானந்த கீர்த்தனம் - உலகு சுந்தரம்
8. இன்ப வாழ்வு - திரு.வி.க.
9. தர்மசங்கடம் - நாடகம்
10. முருகன் - திரு.வி.க.
11. தேசோபகாரி - தமிழ் வாரப்பதிப்பு
12. தட்சிணசரித்திர வீரன் - நூல் (ஆ.) மாதவையர்.
13. அன்பானந்தன் - மாதசஞ்சிகை (ஆ.) ஏ. பெருமாள்
தமிழ் முரசு (ஆ) ம.பொ.சி.
பூந்தோட்டம் - சேலம் - மாத வெளியீடு -
வை. திருநாவுக்கரசு
தென்நாடு - ஈ. சுப்பிரமணியம், ஆம்பூர்
திராவிடமணி - திருச்சி
14. சத்தியார்த்தப் பிரகாசம் - தயானந்த சரஸ்வதி
15. தெய்வீகன் - மாதாந்திரம்
16. ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது வரலாறு - கி.கு. நாராயணசாமி முதலியார்
17. வீரசிங்க தாணாஜி அல்லது ஒரு மகாராஷ்டிர வீரன் சோழவந்தான்
மு. சுப்பிரமணிய முதலியார்
18. தஞ்சைமித்திரன் - (ஆ.) சேஷாத்திரி
19. தேசபந்து - தூத்துக்குடி
20. வைத்திய சந்திரா - கரூர்
21. ஜம்புலிங்க நாடார் ஜீவிய சரித்திரம் - (ஆ.) முத்து நாடார்

2 அவுன்ஸ் பாட்டில் ரூ.1.0.0

1 அவனஸ் பாட்டில் ரூ.0.8.0

மயிலர் திருமாளிகை

காங்கயம் (வழி) திருப்பூர்.

சான்று 2:

கதர்!

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்தக் கதர்

கற்பக விநாயகர் கதர் நிலையம்

மண்டி வீதி - ஈரோடு

குடி அரசு இதழ் க. அப்பையாவால் ஈரோடு சுயராஜ்யா அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது என்பதற்கான குறிப்பும் இதில் இடம் பெற்றுள்ளது.

* பாரீஸ் லேடிகளின் லீலா விநோத போட்டோ மோதிரம் -

* சுகந்த பரிமள ஸ்நானப் பொடி - திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள் - சரீர மர்ம சாஸ்திரம் - ஓர் மானிட மர்ம நூல் - அமிர் தார்ணவ லேகியம் - முந்துங்கள்! 10 ரூபாய் மதிப்பிடக் கூடிய 220 சாமான்கள் இனாம்.

கோல்ட் பிளேடட் நிப் பவுண்டன் பேனா

* வந்தாலும் போனாலும் சரி என்ற

லாட்டரிஇல்லை!

கைமேல் பலன் கிடைக்கும்

இது ஹம்பக்மில்லை!

பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது.

ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32 ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் பெறலாம்.

* இம்ப்ரூவ்ட் லீவா பாக்கெட் கெடியாரங்கள்

குடிஅரசு வழி அறியப்படும் நூல் வெளியீடுகள் - நூல் மதிப் புரைகள்

1. பஞ்சாமிர்தம் - சஞ்சிகை
2. சிந்தாமணி - (ஆசி.) பாலம்மாள்
3. ஜாரதுஷ்டிரன் - சுத்தானந்த பாரதி
4. அறநூல் - சுத்தானந்த பாரதி
5. இந்திர குலபோதினி (மாதசஞ்சிகை) எஸ்.ஜி. சீனிவாசகம் பிள்ளை
6. அகில பானு - வாரப் பத்திரிகை
7. குகானந்த கீர்த்தனம் - உலகு சுந்தரம்
8. இன்ப வாழ்வு - திரு.வி.க.
9. தர்மசங்கடம் - நாடகம்
10. முருகன் - திரு.வி.க.
11. தேசோபகாரி - தமிழ் வாரப்பதிப்பு
12. தட்சிணசரித்திர வீரன் - நூல் (ஆ.) மாதவையர்.
13. அன்பானந்தன் - மாதசஞ்சிகை (ஆ.) ஏ. பெருமாள்
தமிழ் முரசு (ஆ) ம.பொ.சி.
பூந்தோட்டம் - சேலம் - மாத வெளியீடு -
வை. திருநாவுக்கரசு
தென்நாடு - ஈ. சுப்பிரமணியம், ஆம்பூர்
திராவிடமணி - திருச்சி
14. சத்தியார்த்தப் பிரகாசம் - தயானந்த சரஸ்வதி
15. தெய்வீகன் - மாதாந்திரம்
16. ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது வரலாறு - கி.கு. நாராயணசாமி முதலியார்
17. வீரசிங்க தாணாஜி அல்லது ஒரு மகாராஷ்டிர வீரன் சோழவந்தான்
மு. சுப்பிரமணிய முதலியார்
18. தஞ்சைமித்திரன் - (ஆ.) சேஷாத்திரி
19. தேசபந்து - தூத்துக்குடி
20. வைத்திய சந்திரா - கரூர்
21. ஐம்புலிங்க நாடார் ஜீவிய சரித்திரம் - (ஆ.) முத்து நாடார்

22. தனித்தமிழ்க் கட்டுரைகள் - நாகை நீலாம்பிகை
23. நாமக்கல் கவிஞரின் நாவன்மை - மா. தேவராசன்
24. புரட்சிக்கவி தந்த புதையல் - திருவத்திபுரம் தேவராசன்
25. கடவுளும் பிரபஞ்சமும் - சிங்காரவேலு
26. மங்கள நாதன் அல்லது மாயமங்கை (புதுக்கதை) - திருச்சி, பெ. பரிமணப்பல்லவராயர்.

குடியரசுப் பதிப்பக வெளியீடுகள்

கைவல்யம் அல்லது கலைக்கியானம் - இராமாயண ஆராய்ச்சி - ஞான சூரியன் - மநுநீதி மருமம் - இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு - சுயமரியாதைத் தாலாட்டு - சோதிடப் புரட்டு - தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம் - சுயமரியாதைப் பாடல் - ஈ.வே. இராமசாமியின் சீர்திருத்த மாநாட்டுச் சொற்பொழிவு - பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை (நாடகம்) - அகத்தியர் ஆராய்ச்சி - கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?... (சுயமரியாதைக்காரர்கள் அல்ல; பிராமண மரியாதைக்காரர்கள்தான்) - கதர்.

செய்தித்திரட்டு

நாடெங்கினும் - உலகில் நடந்த இன்றியமையாத செய்திகளின் சுருக்கங்கள் ஒவ்வொரு இதழிலும் இடம் பெற்றுள்ளன. ஜப்பான் பூகம்பம் - ஜார்ஜ் மன்னரின் பிறந்த நாளை முன்னிட்டுப் பலருக்குப் பட்டங்கள் கிடைத்தமை - இரத்தக் கொடி ஊர்வலம் (வடமேற்குப் புகைத்தொடரில் (லாகூர்) தொழிலாளர் வேலை நிறுத்தம் - புயல் - லோகமானிய திலகரின் தகனஸ்தலத்தைச் சுற்றிலும் வேலி - வெள்ளப்பாழ் - காந்தியடிகள் பயணம் - மாநாடுகள் - எனப் பல்வேறு வகையான செய்திகளும் தொகுக்கப்பட்ட பொது அறிவு ஏடாகவும் குடிஅரசு தொண்டு செய்துள்ளது.

பிழைதிருத்தம் - வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள் - இயக்கத் தோழர்கள் தொண்டர்கள் மறைவுச் செய்தி - கருத்துப்படம் - கவிஞர்கள் படைப்பாளர்களின் படங்கள் - கேள்வி பதில் (சித்திர குப்தன்) ஆகிய பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

குடி அரசு சிறுகதைப் போட்டி (11.9.48) அறிவிப்பு - விடுகவி - வினா - விடைகள் (ஜோடிக் குதிரையின் மேல் ஒருவனே ராஜா - பாதரட்சையணிந்தவர்... உயிரில்லை பேசும் ஊசி போட்டால்

ஓசை மிகும் - கிராமபோன்... ந.ல.மு. தொகுத்தது) பிற பத்திரிகை களின் கருத்து - (வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பற்றிக் காஞ்சி புரம் மாநாட்டுத் தலைவர் (திரு.வி.க.) நடத்தை பற்றிய கருத்துத் தொகுப்பு)

தமிழ்நாடு 29.11.25	லோகோபகாரி 26.11.25
சுதேசமித்ரன் 26.11.25	தீனபந்து 1.2.25
ஊழியன் 1.12.25	ஸ்வராஜ்யா 24.11.25

சான்றாதாரங்கள் (மாணவர் சேர்க்கை, சென்னை மாகாணக் கல்லூரி, லயோலா கல்லூரி, கிறிஸ்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, விவேகானந்தர் கல்லூரி - எண்ணிக்கைப் பட்டியல் விவரம் - 23.3.46, ப.3) - பிழைதிருத்தம் என்னும் பல பகுதிகளும் குடி அரசில் குறிப்பிடத்தக்கன.

இரட்டைச் சங்கம், நூற்போர் சங்கம் இருந்ததையும், தேசீய பிராமணரல்லாதார் சங்கமும், பிராமணரல்லாதாரின் பத்திரிகைகள் சங்கமும் அவசியம் வேண்டுமென்பதையும் குடியரசு குறிப்பிடுகிறது.

இயற்கை மதம் - சிதம்பர ரகசியம் - சுதந்தரப் போர் அல்லது உப்பள முற்றுகை - பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா - மாதர் சுதந்திரம் அல்லது பெண்மக்கள் பெருமை(சாமி சிதம்பர னார்), குடியரசு ரிவோல் மாலைகள் - ஆராய்ச்சி அணிகலம் - சுய ராஜ்யம் யாருக்கு - சாமிகளின் அடிமைகள் எனச் சமகால - இதர பதிப்புப் புத்தகங்கள் இருந்ததையும் குடியரசு வழி அறிய முடிகிறது.

ஊழியன் - பொது ஜனப்பிரியன் - சித்திர புத்திரன் - காலி மணிபர்ஸ் - அனுபவ வைத்தியன் - செய்யுள் பித்தன் - எனப் பல புனை பெயர்களும் காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் நன்மையைக் கருதித் தமிழ் நாட்டிற்குத் தனிப் பல்கலைக்கழகம் வேண்டுமென (1925 ஆகஸ்ட் 23 தஞ்சை) முடிவு செய்யப்பட்டது... இந்தியாவில் இந்து பெண்பிள்ளை களுக்கு குடும்பச் சொத்தில் பாகம் கொடுக்க வேண்டும் - வாணியம்பாடி இந்து மாதர்களின் வேண்டுகோள் (13.9.25, ப.9)... போன்ற எதிர்காலத் திட்டங்களை எடுத்துரைக்கும் முயற்சி யிலும் குடி அரசு ஈடுபட்டமை உணரப்படுகிறது.

சமகால இதழ்களின் கருத்துக்களைத் தம் தலையங்கத்தில் குறிப்பிடுதல் - கருத்து விளக்கங்கள் - முரண்பட்டனவற்றுக்கு மறுப்புரைகள் - (பத்திரிகை பகிஷ்காரம்) புறக்கணிப்புகள் - எனப் பல நிலைகளிலும் குடிஅரசு செய்திகளை வெளியிட்டுச் செயல் பட்டுள்ளது.

தமிழகத்தின் பல நகரங்களிலும், ஈப்போ, சிங்கப்பூர் போன்ற பிற நாட்டு நகரங்களிலும் குடி அரசு தன் பணியைச் செய்தது.

மிக விரிவான ஆய்வுக்குத் தேவையான பல களங்களைக் கொண்டதாக விளங்கும் 'குடி அரசு' ஒரு பல்துறைப் பயன்பாட்டுச் சமுதாய - சமத்துவ - ஏடு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழக வரலாற்றிலும் - தமிழ் வளர்ச்சியிலும் - தமிழர் வாழ்விலும் குடி அரசு என்றும் நினைவை அள்ளும்; நிலைபேறு கொள்ளும்.

விமோசனம்

1929

‘விமோசனம் குறிப்பிட்ட ஒரு கொள்கைக்காகவே, முற்றிலும் மது விலக்குப் பிரசாரத்துக்காகவே வெளிவந்தது. மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் எளிய நடை; வியாபார விளம்பரம் கிடையாது; அச்சுப் பிழையே இல்லாதது; பத்திரிகை தர்மம் வழுவாத பத்திரிகை; தரமான கட்டுரை களும் கதைகளும் கொண்டது.’

— ஏ. கே. செட்டியார்

விமோசனம்

தொகுதி 1	சுக்ல ௵ ஐப்பசி ௴	பகுதி 3



நீ கள்ளுக்கடைக்குப் போகிறாயா? போகும்போது மனைவி மக்களை நினைத்துக்கொள். அவர்கள் உன்னை வேண்டாம்! வேண்டாம்! என்று பின்னுக்கு இழுக்கிறார்கள். கடையில் செலவு செய்யும் காசை அவர்களிடம் கொடுத்தால் எவ்வளவு சுகம் உண்டாகும், யோசித்துப் பார். அவர்களை ஏமாற்றாதே.

——

‘விமோசனம் குறிப்பிட்ட ஒரு கொள்கைக்காகவே, முற்றிலும் மது விலக்குப் பிரசாரத்துக்காகவே வெளிவந்தது. மக்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் எளிய நடை; வியாபார விளம்பரம் கிடையாது; அச்சுப் பிழையே இல்லாதது; பத்திரிகை தர்மம் வழுவாத பத்திரிகை; தரமான கட்டுரை களும் கதைகளும் கொண்டது.’

– **ஏ. கே. செட்டியார்**

விமோசனம்

மா.ரா. அரசு

'விமோசனம்' இராஜாஜி நடத்திய திங்கள் இதழாகும். இமைப்பொழுதும் தம் நெஞ்சின் நீங்காத மதுவிலக்கை ஓர் இயக்கமாக்கிச் செயல்பட அந்நாளில் இராஜாஜிக்குப் பயன்பட்ட படைக்கருவியே விமோசனம் ஆகும். இன்புறுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல் அறிவுறுத்துவதையே இலட்சியமாகக் கொண்டு அறிவுறுத்தி, நெறிப்படுத்தி, நலவாழ்வை நோக்கி ஆற்றுப்படுத்தும் பணியைத் திறம்படச் செய்தது விமோசனம்.

விமோசனம் – வரலாறும் அமைப்பும்

இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெற்றதைப் போலவே தமிழ் இதழியல் வரலாற்றிலும் தடம் பதித்தவர் இராஜாஜி. இந்திய அரசியலிலோ தமிழ் இலக்கிய உலகிலோ அதிகம் அறியப் படா தவராக இருந்த நாட்களிலேயே தமிழ் வளர்ச்சி பற்றிச்சிந்தித் தவர் இவர்.

கலைச் சொல்லாக்க இதழ்

விமோசனத்திற்கு முன்பே இதழ் நடத்திய அனுபவம் பெற்ற வர் இராஜாஜி. சேலத்தில் புகழ் மிக்க வழக்கறிஞராக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்திலேயே தம் நண்பர்கள் சிலரோடு சேர்ந்து, 'விஞ்ஞானத்தமிழ்ப் பதங்கள் சங்கம்' என்ற ஒன்றை 1916 அக்டோபரில் இவர் தோற்றுவித்தார். அதுவே தமிழைப் பொறுத்தவரையில், கலைச் சொல்லாக்கத்திற்கென முதன் முதலில்

அமைக்கப்பட்ட சங்கமாகும்.[1] அச்சங்கத்தின் சார்பில் அக்டோபர்த் திங்களிலேயே தமிழ்சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை (Journal of the Tamil Scientific Terms Society) என்ற பெயரில் கலைச்சொல்லாக்கத் திங்கள் இதழ் ஒன்று தொடங்கப்பட்டது. ராஜாஜியும் வேங்கடசுப்பையர் என்பவரும் ஆசிரியர் பொறுப்பில் இருந்தனர். கலைச் சொல்லாக்கத்திற்கு எனத் தமிழில் தொடங்கப் பட்ட முதல் இதழ் இதுவேயாகும்.[2]

"தாய்மொழியில் நூல்கள் வெளியிட விரும்புகிறவர்களை எதிர்நோக்கும் மிகப் பெரிய துன்பம் அறிவியல் கருத்துகளைக் கூறப்போதிய அளவில் சரியான கலைச் சொற்கள் இல்லாதது தான்" என்று முதல் இதழ் கூறியது.[3] இந்தப் பத்திரிகையால் தமிழ்நாட்டாருக்கு மிகப்பெரிய பயன் விளையும் என்பதில் சந்தேகம் இல்லை என்று பாரதியார் பாராட்டியுள்ளார்.[4]

"தற்காலசாஸ்திரிய பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தை களை ஆராய்ந்து கண்டுபிடிக்கவோ அல்லது நூதனமாக சிருஷ் டிக்கவோ என்ற ஒரே நோக்கத்துடன் இப்பத்திரிகை வெளிப் போந்திருக்கிறது. இது மிகவும் உயர்ந்த நோக்கமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை" என்று சுப்பிரமணிய சிவம் கருத் துத் தெரிவித்துள்ளார்.[5]

"வெளிவந்துள்ள நான்கு சஞ்சிகைகளில் அப்பத்திரிகை நல்ல வேலை செய்துள்ளது" என்று அ. மாதவையா குறித்துள்ளார்.[6]

பயிரியல், உயிரியல், வேதியியல், இயற்பியல், வானியல், கணிதம் ஆகிய பிரிவுகளில் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணை யாக இன்னின்ன தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்று ராஜாஜியின் கலைச் சொல்லாக்க இதழ் அறிவுறுத்தியது. உயர்ந்த நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இவ்விதழ் நான்கு திங்கள்களே வெளிவந்தது.[7]

1916 அக்டோபர் முதல் 1917 சனவரி வரை வெளிவந்த இவ் விதழ் பின்னர், 1917 செப்டம்பரில் சென்னையில் தொடங்கப்பட்ட 'தமிழர் நேசன்' என்ற இதழுடன் இணைக்கப்பட்டது.[8]

விமோசனம் பிறந்தது

விமோசனம் இதழைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் நீண்டகாலமாகவே இராஜாஜியின் மனத்தில் இருந்துவந்தது. 1923

அக்டோபரில் கல்கி, 'நவசக்தி'யில் சேருவதற்காகச் சென்னைக் குப் பயணமானார். அதே வண்டியில் பயணம் செய்த இராஜாஜியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அப்போது இருவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் இங்குக் குறிக்கத்தக்கது:

> "மதுவிலக்குப் பிரசாரத்துக்காக நானே ஒரு பத்திரிகை நடத்த லாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். உங்களைக் கூட அதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.
>
> நான் அதை ஆரம்பிக்கச் சில மாதங்களோ வருஷங்களோ கூட ஆகலாம்; பெயரைமட்டும்தான் இப்போதைக்கு யோசித்து வைத்திருக்கிறேன்."
>
> "என்ன பெயரோ?"
>
> "விமோசனம். மதுவை அறவே ஒழித்தால்தான் நாட்டுக்கு விமோசனம் உண்டு என்று தொனிக்கும்படியாய் அப்படி வைத்திருக்கிறேன்"[9]

நடைமுறையில் விமோசனம் ஆகஸ்டு 1929இல் தான் வெளி வந்தது. ஆனால், அதற்கு ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு முன்பே அதைத் தொடங்கும் எண்ணம் ராஜாஜியின் மனத்தில் வேரூன்றி இருந்தது என்பதையே மேற்கண்ட உரையாடல் உணர்த்துகின்றது.

நவசக்தியில் சேருவதற்காகச் சென்னைக்குச் செல்லும் போது (1923) புகைவண்டியில் இராஜாஜியைச் சந்தித்த கல்கி, நவசக்தியில் இருந்து விலகியபோதும் (1928) எதிர்பாராமல் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. அப்போது இராஜாஜி கல்கியிடம்,

> முன்னொரு தடவை சொன்னேனே நினைவிருக்கிறதா? மது விலக்குப் பத்திரிகை ஒன்று ஆசிரமத்தில் தொடங்கப் போகி றேன். மூன்று மாதத்துக்குள் வரமுடியுமா?[10]

என்று கேட்டார்.

1928 - இராஜாஜி அரசியலில் வெகுதூரம் சென்றுவிட்ட நேரம். காந்தியடிகளின் வலக்கரமாகிக் காங்கிரசுப் பேரியக்கத்திலும், விடுதலைப்போரிலும் பல பெரும்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம். அந்தப் பணிச்சுமை மிகுந்த கால கட்டத் திலும்கூட, ராஜாஜி விமோசனத்தை மறக்கவில்லை என்பது வியப்புக்குரிய செய்தியாகும். எந்த அளவு மதுவிலக்குச் சிந்தனை

இராஜாஜியின் நினைவுகளில் ஆழப் பதிந்திருந்தது என்பதை இது உணர்த்தவல்லது.

"ஆசிரமத்துக்கு நான் போய்ச் சேர்ந்த சில மாத காலத்துக்குப் பிறகு[11] இராஜாஜி ஒருநாள் என்னை அழைத்து, 'மதுவிலக்கு வேலையைத் தீவிரமாக ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன். மதுவிலக்குப் பத்திரிகையையும் உடனே ஆரம்பித்துவிட வேண்டியதுதான்' என்றார். அந்த வேலைக்காகவே நான் ஆசிரமத்துக்குச் சென்றேனாதலால், கணக்கு எழுதும் வேலையை இன்னொருவரிடம் ஒப்படைத்து விட்டு, ஆசிரமக் காரியாலயத்தில் இருந்து இராஜாஜியின் சொந்தக் காரியாலயத்திற்கு வேலை பார்ப்பதற்காகச் சென்றேன்."[12]

ஆண்டு பலவாக இராஜாஜியின் கனவிலும் கற்பனையிலும் வளர்ந்து செழித்திருந்த விமோசனம், இதழ் உருவம் பெறுவதற்கான காலம் கனிந்தது.

விமோசனத்தைத் தொடங்குவதற்கு முன்னால் கல்கிக்குச் சில ஐயங்கள் தோன்றின. இராஜாஜி அவற்றை எப்படித் தீர்த்து வைத்து இதழின் வெற்றிக்கு வழிவகுத்தார் என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு 'பாங்கர் விநாயகராவ்' என்ற நூலின் முகவுரையில் கல்கி விவரித்துள்ளார்:

"பத்திரிகையின் பக்கங்கள் எத்தனை?"

"நாற்பது பக்கங்கள்."

"நாற்பது பக்கங்களும் மதுவிலக்கு விஷயமேயா?"

"ஆமாம்."

"நாற்பது பக்கங்களுக்கு மதுவிலக்கு விஷயம் எப்படித் திரட்டுவது? அப்படித் திரட்டிப் பத்திரிகை கொண்டு வந்தாலும் ஜனங்கள் வாங்குவார்களா?"

"ஏன் வாங்க மாட்டார்கள்? வாங்காவிட்டால் வாங்கச் செய்ய வேண்டும்."

"எப்படி வாங்கச் செய்வது? அடிபிடிகட்டாயம் செய்ய முடியுமா? படிக்கச் சுவாரஸ்யமாய் இருந்தால் தானே பத்திரிகையை வாங்குவார்கள்?"

"படிக்கச் சுவாரஸ்யமாய் இருக்கும்படி செய்யலாம். நீ பார்த்துக் கொண்டே இரு. முதல் இதழை நான் தனியாகவே தயாரித்துக் காட்டுகிறேன்."[13]

இவ்வாறு கல்கியின் அவநம்பிக்கையிலும், இராஜாஜியின் நம்பிக்கையிலுமாக விமோசனம் முதல் இதழ் உருவானது. ஒரு வாரத்தில் இராஜாஜி முதல் இதழின் தயாரிப்பு வேலைகளை முடித்து விட்டதாகக் கல்கி தெரிவிக்கிறார்.[14]

முதல் இதழ் ஆயிரம் படிகள் அச்சிடப்பட்டது. சந்தாதாரர்களுக்கு அனுப்பியவை போக, எஞ்சியவை காதி பவன்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்டன. ஆயிரம் படிகளும் விற்றுத் தீர்ந்தன. விற்பனை இதழுக்கு இதழ் கூடியது. ஒன்பதாவது, பத்தாவது இதழ்கள் நான்காயிரம் படிகள் அச்சிடப்பட்டன. அக்காலச் சூழலில் ஒரு தனிப்பட்ட செய்தியைப் பற்றிய இதழ் அத்தனை படிகள் விற்பனையானது மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது.[15]

விமோசனம் வெளிவந்துகொண்டிருந்த நாட்களில் சென்னை அரசாங்கம், மாநிலத்தில் மதுவின் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் குழுக்களையும் பரப்புநர்களையும் ஏற்படுத்தியது. 'டெம்பரன்ஸ் கமிட்டி' என்று அழைக்கப்பட்ட அந்தக் குழுக்கள் பல்வேறு இடங்களில் திறம்படச் செயலாற்றின. அந்தக் குழுக்களின் பணிகளுக்கு, விமோசனம் பெரிதும் பயன்பட்டது. அக்குழுக்களில் சில பத்துப்படிகள், பதினைந்துபடிகள் என்று வாங்கி மதுவிலக்குப் பரப்புநர்களுக்குக் கொடுத்தன.[16] இந்த வகையிலும் விமோசனத்தின் விற்பனை வளர்ந்தது.

எத்தனை மகத்தான சாதனை புரிந்த இதழாக இருந்தாலும் ஏதாவது ஒரு காரணத்தால் நிற்க வேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க இயலாத இயற்கை. விமோசனமும் ஒரு கட்டத்தில் தன் இயக்கத்தை நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

விமோசனம் ஒன்பதாவது இதழ் ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது காந்தியடிகளின் புதியதொரு போராட்ட அறிவிப்பு வெளியாகியது. அதுதான் உப்புப்போர். தண்டியில் காந்தியடிகளும், திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) இராஜாஜியும் சட்டத்தை மீறியமையால் கைதானார்கள். போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்பிய கல்கி, விமோசனத்தை அத்துடன் நிறுத்திவிட முடிவு செய்தார். ஆனால், கல்கி போராட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்றும், விமோசனத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் இராஜாஜி வற்புறுத்தினார். அப்படி இருந்தும் இராஜாஜி சிறை புகுந்த பிறகு ஒரே ஒரு விமோசனம் இதழ் மட்டுமே வெளிவந்தது.

அந்த இதழ் அச்சாகிக் கொண்டிருந்த போதே, கல்கி இராஜாஜிக்குப் பல கடிதங்கள் எழுதினார்; அவையாவும் விமோசனத்தைப் பத்தாவது இதழோடு நிறுத்திக் கொள்ள அனுமதிவேண்டி எழுதப் பட்ட கடிதங்கள். ஒருவாறு அனுமதி கிடைத்தது. பத்தாவது இதழோடு விமோசனம் நிறுத்தப்பட்டது.[17]

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இராஜாஜி மதுவிலக்கைப் பற்றிச் சிந்தித்ததைப்போல, சென்ற நூற்றாண்டின் இறுதியில், தி. மானியல் என்பவர் மதுவின் கொடுமைகளை எண்ணிக் கவலை கொண்டார். விளைவு, 'மதுவிலக்குத் தூதன்' என்னும் திங்கள் இதழ் பிறந்தது. தமிழில் தோன்றிய முதல் மதுவிலக்கு இதழாகக் கருதப்படும் இவ்விதழ் 1899இல் பிறந்தது. இவ்விதழின் படிகள் 1900 ஏப்பிரலில் (அரசாங்க அறிக்கையின்படி) ஐந்நூறும், 1901 ஏப்பிரலில் (அரசாங்க அறிக்கையின்படி) முந்நூறும் விற்பனையாகியுள்ளன.[18] இதழின் விற்பனை காலஓட்டத்தில் குறையத் தொடங்கியதை அரசாங்க அறிக்கைகள் சுட்டுகின்றன. 1905ஆம் ஆண்டிலும் இவ்விதழ் வெளிவந்ததை அறிய முடிகிறது.[19] இதைப் பற்றிய பிற விவரங்கள் எதுவும் அறியுமாறில்லை.

உருவமும் உள்ளடக்கமும்

விமோசனத்தின் அளவு 20.5x13.5 செ.மீ; பக்கங்கள் நாற்பது; ஆண்டுச் சந்தா, தபாற்கூலி உட்பட ரூபாய் ஒன்று. தனிப் பிரதி அணா ஒன்று; தபால் கூலி தனி. அயல்நாட்டுக்குத் தபால் கூலி 0-2-0 சேர்த்து அனுப்ப வேண்டும். இதழின் முகவரி: புதுப் பாளையம், காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுக்ல ஆண்டு ஆவணியில் (ஆகஸ்டு 1929) முதல் இதழ் வெளிவந்தது. கடைசி இதழ் பிரமோதூத ஆண்டு வைகாசியில் (மே 1930) வந்தது. தொகுதி, பகுதி என்று பகுக்கப்பட்டுள்ளது. முதல் தொகுதியே முழுமையாக வரவாய்ப்பில்லாமல் போனது. பத்து இதழ்களே வெளிவந்தன.

பூரண மதுவிலக்குச் சட்டமே இன்றைய தேவை என்பதை 'மதுவிலக்கு ஏன்?' என்னும் தலைப்பிலான முதல் இதழின் தலையங்கம் வற்புறுத்துகிறது; இதன் மூலம் இதழின் நோக்கமும் உணர்த்தப்படுகிறது.

> பாடுபட்டு வயிறு வளர்க்கும் ஜனங்களின் பொருளை நாசமாக்குவன கள்ளும், சாராயமும். தேகத்திற்குக் கள்ளு, சாராயம் ஒரு

> நன்மையும் செய்யாது. மயக்கத்தை மருந்தென்றும், போதையைப் பரிகாரமென்றும், குடிவெறியைப் பலமென்றும் தைரியமென்றும் நினைப்பது அறியாமை. மதுபானத்தினால் சிரம பரிகாரம் அடையலாம் என்று எண்ணுவது, கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பது போலாகும்

என்று தொடங்கும் தலையங்கத்தை எழுதியவர் இராஜாஜி. எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்தத் தலையங்கம் மூன்று பக்கங்களில் அமைந்துள்ளது. (பக்.2-4)

'கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பது போல' என்னும் அருமையான உவமையைக் கையாண்டுள்ள இராஜாஜி பல் வேறு புள்ளி விவரங்களையும் சான்றுகளையும் எடுத்தாண்டு, மது விலக்கின் தேவையைத் தெளிவாக - மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இதழின் முதல் பக்கம் பாரதியாரின், 'ஜய பேரிகை கொட்டடா' பாடல் மாற்றம் பெற்று மதுவிலக்குப் பின்னணியில் தரப்பட்டுள்ளது; ஒருவன் மலர்ந்தமுகத்துடன் முரசு அறைவது போன்றதொரு படம் வரையப்பட்டுள்ளது. விமோசனத்தின் வருகை தீய கள் அரக்கனை அழிக்கும்; கள்ளினை ஒழிப்பதே விமோசனத்தின் இலட்சியம் என்பதையெல்லாம் உணர்த்தும் விதத்தில் முதல் இதழின் முதல் பக்கத்தில் படமும் பாடலும் அமைந்துள்ளன.

பத்து இதழ்களிலும் முதல் பக்கம் படமும் விளக்கமுமாகவே அமைந்துள்ளது. இரண்டாம் பக்கம் தலையங்கப் பக்கமாகும். ஏதாவது ஒரு தலைப்பில் செய்தி ஒன்றினைப் பற்றிய கருத்துக் கோவை எல்லா இதழ்களிலும் இடம் பெற்றுள்ளது. தலையங்கத்தை அடுத்து, பெரும்பாலும் கதை தரப்பட்டுள்ளது. ஆறு இதழ்களில் கதையும், இரண்டு இதழ்களில் நாடகமும், ஒன்றில் கட்டுரையும் மற்றொன்றில் படமும் பாடலும் இடம் பெற்றுள்ளன.[20] அடுத்து பலவகைப்பட்ட செய்திகள் தொடர்கின்றன. இது விமோசனத்தின் பொதுவான அமைப்பு.

கருத்துப்படங்கள் (Cartoons)

கருத்துப்படம் விமோசனம் இதழின் தனிச் சிறப்பு வாய்ந்த பகுதி; தனித்த - விரிவான ஆய்வுக்கு உரிய ஒன்று. தன் தனித் தன்மையால் தமிழ் இதழியலின் கருத்துப்பட வரலாற்றில் நிலைத்த புகழுக்கு உரியது.

தகுதி கருதியும் தன்மை நோக்கியும் பயன்பாட்டு நிலையிலும் கருத்துப்படம் இக்கட்டுரையில் விரிந்த அளவிலான ஆய்விற்கு உரியதாகிறது. அதனால், அதுபற்றிய செய்திகள் முதன்மையாகவும், இதழின் பிற செய்திகள் சுருங்கிய அளவில் அடுத்த நிலையிலுமாகத் தரப்பட்டுள்ளன.

தமிழ் இதழ்களில் கருத்துப்படம் – தொடக்ககாலம்

விமோசனத்தில் வெளிவந்த கருத்துப் படங்களைப்பற்றி அறியும் முன், தமிழ் இதழியலில் கருத்துப் படங்களின் தோற்றம் பற்றி அறிவது அவசியமாகும்.

தமிழ் இதழியலைப் பொறுத்தவரையில், கருத்துப் படங்கள் வெளியிடும் வழக்கம் பாரதியில் இருந்தே தொடங்குகிறது.

பாரதி, தாம் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்த 'இந்தியா' இதழில் முதன்முதலில் கருத்துப் படங்களை அறிமுகம் செய்தார். சென்னையில் இருந்து 'இந்தியா'வைப் புதுச்சேரிக்கு மாற்றிய பிறகு, அதை விரிவாக்க எண்ணியபோது பாரதி எழுதிய குறிப்பு ஒன்று இங்குக் குறிக்கத் தக்கது:

> தமிழ் நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அடுத்த வாரம் முதல் இன்னுமொரு புதிய அலங்காரம் நமது பத்திரிகைக்குச் செய்ய கருதியிருக்கிறோம். அதாவது தலைப்பக்கத்திலுள்ள ஒரு சித்திரம் மட்டுமேயன்றி, பக்கத்துக்குப் பக்கமுள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு அங்கங்கே சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம். தென்னிந்தியாவிலேயே இம்மாதிரி ஏற்பாடு தமிழ், இங்கிலிஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய எந்த பாஷைப் பத்திரிகைகளிலும் இதுவரை கிடையாது. நாம் நூதனமாகச் செய்யப் போகிறோம்.[21]

மேற்கண்ட குறிப்பு, தமிழ் இதழியலின் கருத்துப்பட வரலாற்றில் பாரதியின் இடத்தைப் புலப்படுத்தும்.

தேசபக்தன் – விநோதினி

திரு.வி.க. விற்குப் பிறகு 'தேசபக்த'னின் ஆசிரியராக வ.வே. சு. ஐயர் பொறுப்பேற்றார். ஏறக்குறைய பதின்மூன்று திங்கள்கள் (31.7.1920-28.8.1921)[22] அதன் ஆசிரியராக இருந்த அவர்,

வாரம் ஒருமுறை கருத்துப்படம் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.[23]

அந்நாளில் பெரும் புகழோடு விளங்கிய கருத்துப்பட ஓவியர் (Cartoonist) கே.ஆர். சர்மா, 'விநோதினி' என்ற பெயரில் இதழொன்றை நடத்தினார். டி.என். நடராசப் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த அந்த இதழில் கருத்துப் படங்கள் மிகுதியாக இடம் பெற்றன.[24]

தமிழ்நாடு

டாக்டர் பா. வரதராசுலு நாயுடு, தம்முடைய தமிழ்நாடு வார, நாள் இதழ்களில் கருத்துப்படங்களைத் தொடர்ந்து வெளியிட்டு இதழின் ஓர் அங்கமாக அதனைப் பிறர் கருதும் நிலையை உருவாக்கினார்.[25]

பலரையும் கவரும் விதத்தில் கருத்துப்படங்கள் வெளியிட்டவரான பா. வரதராசுலு கருத்துப்படங்களின் காதலராகக் குறிக்கப் படுகிறார்.[26]

பிற இதழ்கள்

எஸ்.எஸ். வாசன் பொறுப்பில் ஆனந்தவிகடன் பிப்பிரவரி 1928 முதல் வெளிவந்தது. ஆனந்தவிகடன் மூலமாகத் தமிழ் இதழியலில் கருத்துப்படம் புத்தெழுச்சி பெற்றது. என்றாலும் 1928, 1929 ஆகிய ஆண்டுகளில் அதில் கருத்துப்படங்கள் இடம் பெறவில்லை.[27]

சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடர்ந்து வெளியான சுதந்திரச் சங்கு (சனவரி 1930) என்ற வாரம் மும்முறைக் காலணா இதழும் கருத்துப்படங்களை வெளியிடுவதில் பேரார்வம் கொண்டு செயல் பட்டது. இடைவெளிகளுக்கு இடையே நான்கு கால கட்டங்களில் வெளிவந்தது சுதந்திரச்சங்கு. முதல் காலகட்டத்து (26.1.1930 - 12.5.1930) இதழ்களில் கருத்துப்படங்கள் இடம் பெற வில்லை. இரண்டாவது கட்ட (11.4.1931 - 8.1.1932) இதழ் களிலேயே கருத்துப்படங்களைக் காண முடிகிறது.[28]

ராஜாஜியின் விமோசனம் இதழ் நடைபெற்ற காலத்தும் (1929-1930) அதற்கு முன்னும் தமிழ் இதழியலில் கருத்துப் படங்கள் இடம்பெற்ற வரலாற்றை மேற்குறித்த செய்திகளிலிருந்து அறியலாம். இதைத் தொகுப்பின், பின்வருமாறு அமையும்:

தமிழ் இதழியலில், கருத்துப்படம் என்னும் பகுதியைத் தொடங்கி வைத்தவர் பாரதி. பாரதியின் இந்தியா, விஜயா, சூரியோதயம் ஆகிய இதழ்களைத் தவிர, பாரதியின் சமகாலத்தும் அதைத் தொடர்ந்தும் எந்த இதழும் கருத்துப்படங்களில் ஆர்வம் காட்டவில்லை.

ஏறக்குறையப் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வ.வே.சு. ஐயர் தேசபக்தனிலும், கே.ஆர். சர்மா விநோதினியிலும், பா. வரதராசுலு தமிழ்நாடு இதழிலும் கருத்துப் படங்களுக்கு முதன்மை தந்தனர். அவர்களுக்குப் பிறகு இராஜாஜியின் பார்வையில் கருத்துப்படம் புத்துருப் பெற்றது.

இராஜாஜியின் கருத்துப்படங்கள்

இராஜாஜிக்கு முன் கருத்துப் படங்கள் அரசியல் நிகழ்வுகளைச் சுட்டுவதற்கே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. இராஜாஜியின் பார்வை வேறு விதமாக அமைந்தது. சமுதாயத்தை அழித்துக் கொண்டிருக்கும் மதுவை அறவே ஒழிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இதழானதால், விமோசனம் வெளியிட்ட கருத்துப் படங்களும் அந்த நோக்கிலேயே அமைந்தன. மதுவின் பிடியில் இருந்து ஏழைமக்களை விடுவிக்க ஒரு சமுதாயப் புரட்சியை மௌனமாக நிகழ்த்திக் கொண்டிருந்த இராஜாஜி தம் மனம், மொழி, மெய்களால் ஒரு முகப்பட்டு உருவாக்கிய இதழ் விமோசனம். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொரு செய்தியையும் எண்ணி எண்ணி, பார்த்துப் பார்த்து உருவாக்கிய இராஜாஜி கருத்துப் படங்களிலும் அதே அளவு ஈடுபாட்டைக் காட்டினார்.

இன்ன படம், இன்ன கருத்தை, இன்னவாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் இராஜாஜியே முடிவு செய்வார். விமோசனத்தின் கருத்துப்பட ஓவியர், இராஜாஜியின் கருத்துகளுக்கு வடிவம் தருவார்.[29] நலக்குறைவினால் இளம் வயதிலேயே அவர் காலமானார்.[30] ஐந்தாம் இதழ் வரையில் அவர் கைவண்ணத்தைக் காணமுடிகிறது. எஞ்சிய ஐந்து இதழ்களில் உள்ள படங்களை வரைந்து கொடுத்தவர் யார் என்பதை அறிய முடியவில்லை. ஆனால், இரு படங்களின் கீழ் (இதழ் ஆறு, பக்.231-232; இதழ் பத்து, ப.389) 'சர்மா பிரதர்ஸ்' என்ற குறிப்பு உள்ளது.[31] அந்த இரண்டு படங்கள் மட்டும் அவரால் வரையப்பட்டனவா அல்லது பின் ஐந்து இதழ்களின் கருத்துப்படங்களும் பிறபடங்களும் முழுமையாக அவரால் தீட்டப்பட்டனவா என்பது அறியுமாறு இல்லை.

விமோசனம் பத்து இதழ்களிலும் மொத்தம் பதினேழு கருத்துப் படங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தகுந்தவை ஐந்து, 'பார்த்தாயா தம்பி' (இதழ் ஒன்று, ப.27), 'மிதமாகக் குடிப்பவன் கதி' (இதழ் இரண்டு, ப.64), 'வேண்டாம்' (இதழ் மூன்று, ப.81), 'யானை(யின்) வளர்ச்சி' (இதழ் ஆறு, பக்.231-232), 'மிதக்குடி' (இதழ் பத்து, ப.389).

கருத்துப்படம் – ஒன்று

'பார்த்தாயா தம்பி' என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கருத்துப்படம் விமோசனத்தில் வெளிவந்துள்ள கருத்துப் படங்களில் முதன்மையானதாகக் கொள்ளத் தக்கது.

நாகரிகமான ஒருவன் சாராய புட்டியைக் குதிரையிடம் நீட்டி, 'குடித்துப்பார்' என்கிறான்; குதிரையோ 'வேண்டாம் அண்ணே' என்கிறது. பசுவிடம் 'குடித்துப்பார், நன்றாயிருக்கும்' என்று வற்புறுத்துகிறான். 'கொண்டுபோ, கொண்டுபோ' என்று பசு ஓடுகிறது. 'நக்கிப்பார்' என்று நாயிடம் காட்டுகிறான். 'எனக்கு வேண்டாமப்பா' என்கிறது நாய்.

பன்றியிடம் 'இந்தா, குடி' என்கிறான். 'தூ! தூ! ஓடிவாருங்கோ குழந்தைகளே' என்று சாராயம் விற்பவன் அருகில் நிற்பது கூடப் பாவம் என்பதுபோல், பன்றி குட்டிகளுடன் ஓடுகிறது. இறுதியில் சாராயம் விற்பவன் மனிதனிடம் செல்கிறான்; அவன் பணம் கொடுத்து அதை வாங்கிக் குடிக்கிறான்.

"பகுத்தறிவில்லாத மிருகங்கள் வேண்டாத கள்ளை மனிதன் பணம் கொடுத்து வாங்கிக் குடித்துக் கெட்டுப் போகிறான்" என்று படவிளக்கம் கூறுகின்றது. கள்ளின் தீமை பாமரர்களுக்கும் புரியும் விதத்தில், மிகவும் எளிமையாக அதே நேரத்தில் ரசிக்கும்படியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கருத்துப்படம் – இரண்டு

'மிதமாகக் குடிப்பவன் கதி' என்ற தலைப்போடு அமைந்த இந்தக் கருத்துப்படம், இராஜாஜியின் சிந்தனை ஆற்றலையும் எதையும் கலை உணர்வோடு வெளிப்படுத்தும் இயல்பையும் உணர்த்துகிறது. 'நான் அளவாகத்தானே குடிக்கிறேன்; அதனால் எனக்குத் தீமை ஒன்றும் வாராது' என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்பவர் எண்ணிக்கை அதிகம். அத்தகையவர் இந்தக் கருத்துப்

படத்தைப் பார்த்தால் மிதமாக ஆரம்பிப்பது எதில் போய் முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். படம் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

முதல் வருடம், இரண்டாம் வருடம், மூன்றாம் வருடம், நான் காம் வருடம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் குடி, முதலையாக உருவகிக்கப்பட்டுள்ளது. முதலைக் குட்டியின் வளர்ச்சியைப் போல், மிதக் குடியும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, பெருங் குடியாகி, குடிப்பவனை விழுங்கும் நிலையைக் கருத்துப்படம் நயம்படத் தெரிவிக்கின்றது.

கருத்துப்படம் – மூன்று

மிகவும் உணர்வுப்பூர்வமாக உருவாக்கப்பட்டுள்ளது இது. ஒரு மனிதனின் முன்னே கள் நிரப்பப்பட்ட சீசா நீட்டப்படுகிறது. அந்த மனிதன் அதைநோக்கி முன்னேறுகிறான். மனைவியும் சின்னஞ்சிறு குழந்தைகளும் அவனைப்பின்நோக்கி இழுக்கின் றனர். வருமானம் முழுவதையும் குடியில் தொலைத்துவிட்டு, மனைவி மக்களை நடுத்தெருவில் நிறுத்தும் ஆண்களைத்தடுத்து நிறுத்தி, சிந்திக்கத்தூண்டும் வகையில் அமைந்துள்ள இந்தக் கருத்துப் படமும் தனித்தன்மை வாய்ந்தது.

படத்தின்கீழ் இடம்பெற்றுள்ள விளக்கம் இதுதான். "நீ கள் ளுக்கடைக்குப் போகிறாயா? போகும்போது மனைவி மக்களை நினைத்துக் கொள். அவர்கள் உன்னை வேண்டாம், வேண்டாம் என்று பின்னுக்கு இழுக்கிறார்கள். கடையில் செலவு செய்யும் காசை அவர்களிடம் கொடுத்தால் எவ்வளவு சுகம் உண்டாகும்; யோசித்துப் பார்; அவர்களை ஏமாற்றாதே."

கருத்துப்படம் – நான்கு

'யானை வளர்ச்சி' என்னும் தலைப்பில் அமைந்த கருத்துப் படம் அடுத்து குறிக்கத்தக்கது. மூன்று நிலைகளாக யானையின் வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின கலால் வருமானம் எப்படி வளர்ந்து கொண்டே போகிறது என்பதையும், அதன் அசுர வளர்ச்சியின் விளைவாகக் குடிப்பழக்கம் உள்ளவர்கள் கதி என்னவாகிறது என்பதையும் இது விளக்குகிறது. ஒவ்வொரு பகுதியின் கீழும் இராஜாஜியால் தரப்பட்டுள்ள வாசகம் அறியத் தக்கது.

பகுதி – 1

சின்னஞ்சிறு யானைக்குட்டி, குழந்தைகள்கூடத் தொட்டு விளையாடலாம். (1860 ஆம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தின் கலால் வருமானம் ஒரு கோடி ரூபாய்தான்.)

பகுதி – 2

குட்டி வளர்ந்து இளம் யானையாயிற்று. ஆனாலும் பாகனை மீறி இது என்ன செய்துவிடும்? கையில் அங்குசம் இருக்க அச்சம் என்ன? (1900ஆம் வருஷத்தில் கலால் வருமானம் ஆறு கோடியாயிற்று. ஆனாலும், ஏழை இந்தியர்கள் தாங்க முடியாத சுமையன்று)

பகுதி – 3

ஐயோ! இளம் யானை இராட்சத யானையாய் வளர்ந்து கட்டுமீறிப் போய்விட்டது. யானைப்பாகன் பிழைத்தல் கடவுள் புண்ணியந்தான். (1929ஆம் ஆண்டில் கலால் வருமானம் இருபத்து நான்கு கோடி ஏழைக் குடியானவர்கள் பாரந்தாங்காது நசுக்கப்படுகிறார்கள்.)

அங்கதப் போக்கில் கருத்துப்படம் அமைக்கப் பட்டுள்ளது. தொடக்கத்திலேயே தடுக்கப்படாவிட்டால் விளைவு கடுமையானதாக இருக்கும் என்பதைப் படிப்படியாகச் சுட்டி எளிதாக விளங்கிக் கொள்ள வகை செய்கிறது படம்.

கருத்துப்படம் – ஐந்து

இந்தப்படத்தில் ஒரு மனிதன் படகில் மகிழ்ச்சியாகச் செல்லுகிறான். அவன் மிதமாகக் குடிப்பவன். குறைந்த அளவுதானே என்ற அலட்சியம், 'பெருங்குடி' என்னும் நீர்வீழ்ச்சியில் தள்ளி, 'நாசம்' என்னும் முடிவை நோக்கி அவனை இட்டுச் செல்கிறது. கருத்துப் படத்தின்கீழே தரப்பட்டுள்ள விளக்கம், மிதக் குடியனின் வீழ்ச்சியைப் பின்வருமாறு புலப்படுத்துகிறது.

"இதோ படகில் அமர்ந்து கவலை இன்றிச்செல்லும் மனிதனைப் பாருங்கள். அடுத்த கணத்திலே அவன் இந்தப் பெரிய நீர்வீழ்ச்சியில் அகப்பட்டு அதலபாதாளத்தில் வீழ்ந்து நாசமடையப் போகிறான். எனினும், அவன் அப்பேரபாயத்தை உணரவில்லை. மிதமாகக் குடிக்க ஆரம்பிக்கிறவர்கள் கதி இதுவேயாகும்."

விமோசனக்கருத்துப் படங்கள் – தனித்தன்மைகள்

பொதுவாக, கருத்துப்படங்கள் உயர்ந்த முறையில் அமைந் திருந்தால் படிப்பவர்களால் ரசிக்கப்பட்டு, பாராட்டப்படுவது வழக் கம். மிகச் சிறப்பானவை என்று கருதப்படும் சில, பிற இதழ் களில் எடுத்தாளப்படுவதும் உண்டு. இதுவே பொதுவான நிலை. விமோசனத்தில் வெளிவந்த கருத்துப்படங்கள் முற்றிலும் வேறான தன்மையன. அவை, குடியின் தீமையைப் பாமரரும் உணர வேண் டும்; உணர்ந்து தெளிய வேண்டும்; தெளிந்து திருந்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வரையப்பட்டவை. அதனால், அந்தக் கருத்துப் படங்கள் பன்முக நோக்கில் பயன்பாடுடையன வாக அமைந்தன.

விமோசனக் கருத்துப் படங்களின் பயன்பாட்டின் ஒரு கோணத்தை, 'பாங்கர் விநாயகராவ்' என்னும் நூலின் முகவுரையில் விரிவாகக் கூறிச் செல்லுகிறார் கல்கி. அதில் குறிப்பிடத்தக்க சில பகுதிகள் இங்கு அறியத்தக்கன.[32]

> காந்தி ஆசிரமத் தொண்டர்கள் தீவிரமான மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்கள். விமோசனத்தில் வெளியான படங்கள் பிரசாரத் துக்கு மிக்க உதவியாயிருந்தன. மேற்படி படங்களைப் பெரிதாக எழுதச் செய்து துணியில் ஒட்டி வைத்திருந்தோம். இந்தப் படங் களையும் பெட்ரோமாக்ஸ் விளக்கையும் எடுத்துக் கொண்டு ஆசிரமத்தின் பெரிய கட்டை வண்டியில் ஏறி வாரத்துக்கு இரண்டு நாள் கிராமப் பிரசாரத்துக்குப் போவோம்.
>
> மதுவிலக்குப் பிரசாரப் படங்களை ஒவ்வொன்றாக விரித்து விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் காட்ட, இன்னொருவர் அதைச் சுட்டிக் காட்டி விளக்கிப் பேசியது கிராமவாசிகளின் மனதில் மிகவும் நன்றாகப் பதிந்தது.
>
> விமோசனத்தில் வெளியான படத்தொகுதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் கிராம வாசிகள் - முக்கியமாகப் பெண்கள் - மிகவும் ரசித்துச் சிரிப்பார்கள். அந்தப் படத்தொகுதியில் சட்டை போட்ட மனிதன் ஒருவன் ஒரு சாராயப்புட்டியை முதலில் ஒரு குதிரையிடம் நீட்டுகிறான். குதிரை குடிக்க மாட்டேன் என்கிறது. பிறகு மாட்டிடம் போகிறான். மாடும் வேண்டாம் என்கிறது. பிறகு நாய் குடிக்க மறுக்கிறது. பன்றிகூட வேண்டாம் என்று மறுதளிக்கிறது. கடைசியில் அந்தச் சட்டைக்காரன் ஒரு கிராமத் துக் குடியானவனிடம் கொண்டுபோய் புட்டியை நீட்டுகிறான். அவன் அதை வாங்கிக் குடிக்கிறான்.

"நாயும் பன்றியும்கூட விஷம் என்று குடிக்க மறுக்கும் மதுவை மனிதன் குடிக்கிறான், பார்த்தீர்களா?" என்று படத்தைச் சுட்டிக் காட்டிப் பிரசங்கி சொன்னதும் கூட்டத்தில் உள்ள ஸ்திரிகள் எல்லாரும் சிரிப்பார்கள். ஆண்களில் சிலர் சிரிப்பார்கள்; இன் னும் சிலர் "ஆமாம்; அது வாஸ்தவம் தானே?" என்பார்கள்.

இப்படியெல்லாம் கிராமவாசிகளின் மனதில்படும்படி பிரசாரம் செய்யும் முறை இராஜாஜியின் மனதிலேதான் முதன் முதலாக உதித்தது; மேற்படி மது விலக்குப் படங்கள் பின்னால் அச்சிடப் பட்டு, தொகுதி தொகுதியாகப் பல இடங்களுக்குப் பிரசாரங் களுக்காக அனுப்பப்பட்டன.

உப்புப்போரில் கருத்துப்படங்கள்

இராஜாஜியின் தலைமையில் 13-4-1930இல் திருச்சியில் இருந்து திருமறைக்காட்டிற்கு (வேதாரண்யம்) உப்பு எடுக்கப் புறப்பட்ட அறப்போர்க்குழு வழி நடைப்பயணத்தில் மதுவிலக்குப் பணியிலும் ஈடுபட்டது.

ஸ்ரீமான் ஆச்சாரியார் அவர்களுக்குப் பிராணன் போலுள்ள மது விலக்குப் பிரசாரம் எல்லாவற்றிலும் முதன்மையாகச் செய்யப் பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் போய்த் தங்கியவுடன் காந்தி ஆசிரமத்தார் வெளியிட்டிருக்கும் மதுவிலக்குப் படங்களை வரிசையாகக் கட்டித் தொங்கவிடுவது வழக்கம். படங்களைக் கட்டினவுடனே ஜனங்கள் கூடி அதிக ஆவலுடன் அவைகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கவனித்துப்பார்ப்பார்கள். அவர்களுக்கு அப்படங்களை விளக்கி மதுபானத் தீமைகளைத் தொண்டர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

கிராமத்தில் எல்லோரும் இந்தப் பிரசங்கங்களைக் கேட்கவும் மதுவிலக்குப் படங்களைப் பார்க்கவும் மிக்க ஆவலுடனும் உற் சாகத்துடனும் காத்திருந்தார்கள். முக்கியமாக ஆதி திராவிடச் சகோதரிகளும் குழந்தைகளும் திரள்திரளாகச் சித்திரை மாதத்து வெயிலையும் கவனியாது இக்கூட்டங்களுக்கு வந்தார்கள். பிரசங்கத்தின் முடிவில் அனேகமாய் எல்லா இடங்களிலும் ஒரு சிலராவது, 'இன்று முதல் கள், சாராயம் முதலிய லாகிரி வஸ் துக்களைத் தொடுவதில்லை' என்று ஆண்டவன் சாட்சியாகச் சத்தியம் செய்து கொடுத்து வந்தனர்.'[33]

குடித்துக் கெட்டவன் குடும்பத்தின் அவலட்சணமான காட்சியும் யோக்கியமாய் இருந்த குடும்பத்தின் சந்தோஷமும் தேஜசும் விளக்கிக் காட்டும் படங்களென்ன? மதுபான வகைகள்

அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கணக்கைத் தெரிவிக்கும் படங்களென்ன! இன்னும் மதுவிலக்கு சம்பந்தமாகப் பொதுஜனங்கள் மனத்தில் என்னென்ன விஷயங்கள் பதிய வேண்டுமோ அவற்றைச் சுலபமாக மனத்தில் பதியும்படி புகட்டக் கூடிய முறையில் படங்கள் வரையப்பட்டிருந்தன.

தலைவர் ராஜாஜி படங்கள் கட்டியிருந்த இடத்திற்கு வந்து ஒவ்வொரு படத்திலும் உள்ள தாத்பரியங்களை எடுத்து விளக்கி வந்தார்.[34]

மதுவிலக்குப் படங்கள்

விமோசனத்தில் வெளியிடப்பட்ட கருத்துப்படங்களின் நடைமுறைப் பயன்பாடு இன்னொரு விதத்திலும் அமைந்தது. அந்தக் கருத்துப்படங்கள் விற்பனைக்கு உரியவையாகவும் ஆக்கப்பட்டன; மதுவிலக்குப் பிரசாரத்திற்கு அவை ஊன்றுகோலாயின. கருத்துப் படங்கள் (மதுவிலக்குப்படங்கள்) பற்றி விமோசனத்தில் (இதழ் 8, இதழின் பின் அட்டை) வந்த அறிவிப்பு அறிய வேண்டிய ஒன்றாகும்.

மதுவிலக்குப் படங்கள்

கல்வியறிவு அதிகமில்லாத நாட்டில் எவ்விதப் பிரசாரமும் செய்வது மிகவும் கஷ்டமான காரியம். புத்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும் சொற்ப அளவேதான் நமது நாட்டில் பயன்படக் கூடும். ஆனால், சித்திரப் படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதில் நல்ல பயன் உண்டாவது அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறது.

விளக்குப் படங்கள் காட்டிப் பிரசாரம் சில இடங்களில் நடைபெறுகின்றது. மங்கலாய்த் தோன்றும் இவ்விளக்குப் படங்கள் கிராமவாசிகளுக்குத் தெளிவாய் விளங்குவதில்லை. கருவிகள் நடுவில் கெட்டுப் போனாலோ எல்லாம் நிறுத்த வேண்டியது தான்.

நமது கிராமங்களில் நல்ல பயன் தரக்கூடிய முறை, பெரிய படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதேயாகும். இதற்கு உபயோகமான மதுவிலக்கு வர்ணப்படங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. சீக்கிரத்தில் அவை விற்பனைக்குத்தயாராகும். சுமார் 30 படங்கள் கொண்ட ஒரு தொகுதியின் விலை ரூ 15-0-0 படங்களைத் துணியில் ஒட்டி, அவைகளை மாட்டுவதற்குரிய சட்டம், கம்பி முதலியவைகளுடன் சேர்ந்து வேண்டுமானால்,

விலை ரூ 30-0-0
விலாசம்
காந்தி ஆசிரமம்
திருச்செங்கோடு

விமோசனம் இதழ் வெளிவந்து இன்று ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் ஆகின்றன. இன்றளவும் மதுவிலக்குப் பிரசாரம் என்பது தவிர்க்க இயலாததொரு சமுதாயத் தேவையாகவே இருந்து வருகிறது. கடந்த காலத்தில் ராஜாஜியின் சிந்தனையில் முகிழ்த்து விமோசனத்தில் மலர்ந்த கருத்துப் படங்கள் நிகழ்காலப் பயன்பாட்டிற்கும் உரியனவாகி விற்பனைக்குக் கிடைக்கின்றன.[35]

எங்கெல்லாம், எப்போதெல்லாம் 'குடி' சமுதாயத்தில் ஊடுருவுகிறதோ அங்கெல்லாம், அப்போதெல்லாம் விமோசனக் கருத்துப் படங்கள் உயிர்த்தெழும் என்பதையே அவற்றின் இன்றைய விற்பனை உணர்த்துகிறது.

மதுவின் பிடியில் சிக்குண்டு சிதைந்து கொண்டிருந்த ஏழை மக்களின் வாழ்க்கையை மீட்க, ஒல்லும் வகையெல்லாம் செயல்பட்ட இராஜாஜி, இதழின் ஒரு பகுதியாக விளங்கும் கருத்துப் படங்களைப் பல புதிய கோணங்களில் அணுகியுள்ளமை வியப்பையும் மலைப்பையும் ஏற்படுத்துகிறது.

விமோசனம் இதழை நடத்திக்கொண்டிருந்தபோதே சிறுசிறு வெளியீடுகளைத் தயாரித்து அவற்றை, விற்பனைக்கு உரியனவாக்கினார். 'பார்த்தாயா தம்பி!', 'குடிப்பது கள்ளல்ல!' என்னும் தலைப்புகளில் அமைந்த இரு வெளியீடுகள் இங்குக் குறிக்கத் தக்கன. இரண்டுமே விமோசனத்தில் வெளிவந்த இரு கருத்துப் படங்களின் தலைப்புகள் (இதழ் ஒன்று, ப.27; இதழ் மூன்று, ப. 92)

"சித்திரப்படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள் ஓரளவிற்குட்பட்டு மதுவிலக்குத் தொண்டர்களுக்கு இலவசமாய் அனுப்பப் பெறும்" என்னும் அறிவிப்பில் உள்ள 'சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப்பிரசுரங்கள்' என்னும் பகுதி கருதத்தக்கது. இந்த அறிவிப்பு இதழ்கள் எட்டு, ஒன்பது, பத்து ஆகியவற்றில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

ஒன்று முதல் ஏழு வரையிலான இதழ்களில் வெளிவந்த கருத்துப்படங்களின் தொகுப்பாகவே இவ்விரு வெளியீடுகளும்

அமைந்திருக்க வேண்டும். இந்தக் கணிப்புப் பொருந்துமாயின், இதழில் வெளிவந்த கருத்துப் படங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்ட முதல் இதழாளர் (தமிழ் இதழ்களைப் பொறுத்தவரை யில்) என்ற பெருமைக்கு உரியவராவார் இராஜாஜி.

கருத்துப்படம் என்பது இராஜாஜியைப் பொறுத்தவரையில் ஒரு தொடர் சிந்தனையாகவே இருந்து வந்தது. விமோசனம் நின்ற பிறகும், கால ஓட்டத்தில் பல்வேறு சூழல்களில் பல்வேறு பணிப் பொறுப்புகளில் இருந்தபோதும் மதுவிலக்கு என்பது அவர் நினைவில் நிலைத்திருந்தது. மதுவிலக்குத் தொடர்பான கட்டுரை களும் நூல்களும் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அவரால் எழுதப் பட்டுவந்தன. வாய்ப்பு அமைந்த போதெல்லாம் விமோசனம் வெளி யிட்ட கருத்துப் படங்களை அவற்றில் பயன்படுத்திக் கொண்டார். இதழ் மறைந்தும், இதழ் வழிவந்த கருத்துப் படங்கள் அழியாத் தன்மைபெற்றன.

'கள் ஒழிக'[36] என்னும் நூலில், 'மதுவிலக்கு' என்னும் கட்டுரையின் தொடக்கத்தில் விமோசனத்தின் அட்டை ஓவியம் இடம் பெற்றுள்ளது (ப.1). 'பொருள் நஷ்டம்' என்னும் கட்டுரை யில் 'இது சீசா, அல்ல; மனைவி மக்களைச் சாகடிக்கும் யமன்' என்ற கருத்துப்படம் இடம் பெற்றுள்ளது (பக் 15). இது விமோசனம் இரண்டாவது இதழில் (ப.41) உள்ளது. 'மிதக் குடிப் பேச்சு' - இந்தக் கட்டுரையில், இதழ் இரண்டில் (ப.64) 'மிதமா கக் குடிப்பவன் கதி' என்னும் தலைப்போடு அமைந்த கருத்துப் படம் பயன்படுத்தப்பட்டுள்ளது (ப.33). விமோசனம் இதழ் மூன்றில் வந்துள்ள 'வீட்டுக்குப்புட்டி வருவதற்கு முன்', 'புட்டி வந்த பின்' என்ற கருத்துப்படம் (ப.108), 'அபினி, கஞ்சா' என்ற கட்டுரையில் எடுத்தாளப் பட்டுள்ளது (ப.45), 'திருட்டுக்கள்ளும் பகிரங்கக் கள்ளும்' என்னும் கருத்துப் படம் (இதழ் நான்கு, ப.141), 'விதண்டா வாதங்கள்' கட்டுரையில் (ப.60) சேர்க்கப் பட்டுள்ளது.

'PROHIBITION' - மது விலக்குப் பற்றிய ஆங்கில நூல்; இராஜாஜி எழுதியது,[37] இதன் அட்டைப்படம், விமோசனத்தின் கருத்துப் படமாகும் (இதழ் மூன்று ப.81). மதுப்புட்டியை நோக்கி ஓடும் குடும்பத் தலைவனை அவன் மனைவியும் குழந்தைகளும் பின்னோக்கி இழுப்பதாக அமைந்த கருத்துப்படம் அது.

விமோசனத்தின் கருத்துப் படங்கள் இதழின் ஒரு பகுதியாக அமைந்து படிப்பவர் கவனத்தை ஈர்த்தன; அளவில் பெரியனவாக

வரையப்பட்டுக் கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லப்பட்டு நேரடியாகக் குடியின் தீமையை விளக்குவதற்குப் பயன்பட்டுச் சிறந்தன; நாடு தழுவிய நிலையில் மதுவிலக்கு ஆர்வலர்களுக்குப் பயன்படும் நோக்கில் விற்பனைக்கு உரியனவாக்கப்பட்டு கருத்துப் படங்களை இவ்வாறெல்லாம் கூடப் பயன்படுத்த முடியும் என்று உலகிற்கு உணர்த்தி நின்றன; விமோசனம் வெறும் இதழாக இல்லாமல் இயக்கமாகச் செயல்படுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தன; அதனால் வரலாறு படைத்தன; கருத்துப்பட வரலாற்றில் தனித்துவத்தோடு நிலைத்தன.

சிறு கதைகள்

விமோசனத்தின் பத்து இதழ்களிலும் மொத்தம் இருபத்தியொரு கதைகள் வெளிவந்துள்ளன. இவற்றில் ஆறு கதைகளில் எழுதியவர் பெயர் இல்லை. என்றாலும், ஆறில் மூன்று ராஜாஜி எழுதியவை என்று வேறு புறச்சான்றுகளின் மூலம் அறிய முடிகின்றது. எஞ்சிய பதினைந்து கதைகளை ஒன்பதுபேர் எழுதியுள்ளனர். இவர்களில் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியும், தி.ஜ.ர.வும் குறிப்பிடத்தக்கவர்கள். கல்கி ஆறுகதைகளும் தி.ஜ.ர. ஒன்றும் எழுதியுள்ளனர்.

விமோசனம் வெளிவந்த காலம் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். இதில் சிறுகதை படைத்தவர்களில் ராஜாஜி, கல்கி, தி.ஜ.ர. மூவரும் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் தடம் பதித்தவர்கள். ஏறக்குறைய சமகாலத்தில் எழுதத் தொடங்கியவர்கள்; பின்னாட்களில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள்.

இருபதுகளில் எழுதத் தொடங்கியவர்கள் இவர்கள். அது தமிழ்ச்சிறுகதையின் ஆரம்பகாலம். வ.வே.சு.ஐயர், மாதவையா, பாரதியார் போன்றவர்கள் தமிழுக்குப் புதிய இலக்கிய வடிவமாகிய சிறு கதையை அறிமுகம் செய்தகாலம். சிறுகதை இலக்கிய வடிவம் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாத தொடக்க காலத்திலேயே சிறுகதை எழுதியவர்கள் இவர்கள் என்பது நினைவில் இருத்த வேண்டிய செய்தியாகும். அந்தக்காலகட்டத்து உணர்வோடு பார்க்கப்பட வேண்டியவை இவர்கள் விமோசனத்தில் எழுதிய சிறுகதைகள்.

பத்து இதழ்களாக நானூறு பக்கங்களில் வெளிவந்த விமோசனத்தில் சிறுகதைக்கு ஒதுக்கப்பட்ட பக்கங்கள் 106 (102+4;

சிறுகதை 102, புத்த ஜாதகத்கதை 4). பத்து ஆசிரியர்களின் படைப்புகளாக 18 கதைகள் இடம் பெற்றுள்ளன. 3 கதைகளில் படைப்பாளர் பெயர் இல்லை. புத்த ஜாதகக் கதை ஒன்றும் வெளியாகியுள்ளது. விமோசனம் இதழின் அடிப்படை நோக்கமான மது விலக்கின் பின்னணியிலேயே கதைகள் அனைத்தும் உருப்பெற்றுள்ளன.

விமோசனத்தில் வெளிவந்துள்ள இருபத்தியொரு கதைகளில் நல்ல கதைகள் பல உண்டு. அவற்றுள்ளும் 'ஜெயராமன் பள்ளிக்கூடம் போன கதை' (இராஜாஜி), 'தெய்வ யானை' (கல்கி), 'குப்பனின் பணி' (தி.ஜ.ரா) ஆகிய மூன்றும் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் இடம்பெற்றவை. கதைப் பொருளாலும் உத்திகளாலும் காலம் கடந்து நிற்பவை. இந்த மூன்று கதைகளையும் வெளியிட்டதன் மூலம் விமோசனம் இதழ், சிறுகதை இலக்கியத்திற்கும் தொண்டாற்றியுள்ளது என்று பெருமை கொள்ளலாம்.[38]

கவிதைகள்

இந்த நூற்றாண்டின் எல்லா இலக்கிய வகைகளிலும் வடிவங்களிலும் ஏதாவது ஒரு வகையில் அறத்தின் - நீதி போதனையின் ஆட்சியை உணரமுடியும். குடியால் நலிந்த குடும்பங்களுக்கு விமோசனம் உண்டு என்ற இனிய செய்தியை ஒலிக்கப் புறப்பட்ட விமோசனம் இதழும் இதற்கு விதிவிலக்கு அன்று. கவிதைகள் மூலமாகவும் குடிவேண்டாம் என்னும் நீதியை உணர்த்தும் பணியைச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டது விமோசனம்.

விமோசனம் கவிதைக்கு ஒதுக்கிய பக்கங்கள் பதினைந்து மட்டுமே. அதில் ஆறுபக்கங்களில் பழைய இலக்கியப் பகுதிகளும் குர்ஆன் முதலியனவும் இடம் பெற்றுள்ளன. எஞ்சியவை புதிய கவிதைப் பக்கங்களாகும்.[39]

நாடகங்கள்

விமோசனத்தில் ஐந்து நாடகங்கள் வெளிவந்துள்ளன. இராஜாஜி ஒன்றும், கல்கி ஒன்றும், க. சந்தானம் இரண்டுமாக எழுதியுள்ளனர். ஒரு நாடகத்தில் எழுதியவர் பெயர் இல்லை.[40]

இராஜாஜியும், கல்கி, சந்தானம் போன்றவர்களும் காந்தி ஆசிரமத்தில் வாழ்ந்தபோது, ஆசிரமம் அமைந்திருந்த 'புதுப்பாளையத்திலும் அதை ஒட்டிய கிராமப் பகுதிகளிலும் வாழ்ந்த கல்வி அறிவு அற்ற பாமர மக்களின் அல்லல்கள் நிறைந்த

வாழ்க்கையை நேரில் கண்டவர்கள்; ஆசிரமத்திலும் அதற்கு வெளி யேயும் வாழ்ந்த மக்களோடு கலந்து பழகியவர்கள்; உள்ளும் புறமு மாக அவர்களை உணர்ந்தவர்கள். அந்த ஏழை எளிய அப்பாவி மக்களின் வாழ்க்கையை அலைக்கழித்துக் கொண்டிருந்த குடியின் பிடியிலிருந்து மீண்டால் அன்றி அவர்கள் வாழ்க்கையில் இன்பம் மலராது என்ற உண்மையை நன்கு அறிந்தவர்கள்; இவர்கள் கள், சாராயம் தொடர்பான தொழில் ரீதியான தகவல்கள் பலவற்றைத் தெரிந்து வைத்திருந்தனர். இவர்களுடைய இந்த அனுபவங்களும் அனுதாபங்களுமே விமோசனத்தில் பல்வேறு கலை வடிவங்களாக உருவெடுத்தன. கதைகளிலும், கவிதைகளிலும், நாடகங்களிலும் இவர்கள் கருத்துகள் வெளிப்பட்டன. கருத்துக்கே முதலிடம் தந்து எழுதப்பட்டவை என்றாலும், எழுதியவர்களின் ஆற்றலால் அவற் றில் சில கலை நயத்தோடும் அமைந்தன; இலக்கிய வரலாற் றிலும் இடம்பெற்றன.

தலையங்கம்

தலையங்கம் என்பது செய்தி ஒன்றினைப் பற்றி எழுதப்படும் கருத்துக்கோவை; வாசகர்களுக்கு அதுபற்றித் தெளிவான நோக்கு ஏற்படும்படி எழுதப்படுவது; அது உண்மைகளை ஒட்டி ஆசிரிய ரின் கருத்தைக் கொண்டு அமைவது; ஆசிரியரின் கருத்து சில நாட்களிலோ அல்லது சிறிது காலம் கழித்தோ நடைமுறைக்கு உகந்ததாக இருப்பதை வாசகர்கள் உணரச் செய்வது; நாட்டினை ஆள்வோர் அல்லது நிறுவனங்களோடு தொடர்புடையவர் பத்திரி கையின் கருத்து என்ன என்று ஆர்வத்தோடும் கவலையோடும் எதிர்பார்க்கும் பகுதி.[41]

விமோசனத்தின் பத்து இதழ்களிலும் தலையங்கம் இடம் பெற்றுள்ளது. மதுவிலக்கோடு தொடர்புடைய செய்திகள் தலை யங்கப் பொருளாயின. 'மதுவிலக்கு ஏன்?' என்ற முதல் தலையங் கம் மதுவிலக்கின் தேவையை மிகத்தெளிவாக எடுத்துரைக் கின்றது.

> ஆகையால் பூரண மதுவிலக்குச் சட்டம் அமெரிக்காவில் போல் நம்முடைய நாட்டிலும் நிறைவேற வேண்டுமென்று விடா முயற்சியுடன் பெருங்கிளர்ச்சி செய்ய வேண்டும்.

மதுவை ஒழிக்க விடா முயற்சியும் பெருங் கிளர்ச்சியும் தேவை என்று வற்புறுத்துகின்றது தலையங்கம். தொடர்ந்து போராடி மதுவை எப்படியும் ஒழித்தே தீரவேண்டும் என்று நீண்ட

உறக்கத்தில் - மது உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவர்களையும் அதைப் பற்றிய கவலை இல்லாமல் ஒதுங்கிக் கிடந்தவர்களையும் தட்டி யெழுப்பும் வகையில் அமைந்துள்ள இத்தலையங்கம் ராஜாஜியின் தீவிரத்தைப் புலப்படுத்தும்.[42]

ஏறக்குறைய எல்லாத் தலையங்கங்களுமே இதே தீவிரத் தன்மையோடும் நியாய உணர்வோடும் எழுதப்பட்டனவாகவே உள்ளன. அவற்றின் தலைப்புகள் சுட்டத்தக்கன; 'புட்டிச்சரக்கு', 'தாமதிக்கக்கூடாது', 'ஹிம்ஸை', 'அபிப்பிராயம் கேட்டல்', 'ஆத்மநஷ்டம்', 'தபாலைத்தடுத்தால் துக்கம்தீருமா?', 'போர் துவக்கம்', 'தக்கசமயம்', 'நமது ஆசிரியர்'. இந்தத் தலைப்புகளே அவற்றின் உள்ளடக்கத்தை விளக்கும் தன்மையன. தலையங்கங் களாலும் விமோசனம், மது விலக்கு என்னும் தன்னுடைய நோக் கத்தை நிமிர்ந்து நின்று பறை சாற்றியது. இருபத்தியொரு பக்கங்களில் தலையங்கச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

கடற்கரைக் கிளிஞ்சல்

இன்றைய இதழ்களில் 'துணுக்கு', 'பெட்டிச் செய்தி', 'செய்திக் குறிப்புகள்' என்ற தலைப்புகளில் வரும் செய்திகளைப் போன்ற பல்வேறு விவரங்களை ராஜாஜி 'கடற்கரைக் கிளிஞ்சல்' என்ற அழ கிய தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார். பத்து இதழ்களிலும் இந்தப் பகுதி இடம்பெற்றுள்ளது. எல்லா இதழ்களிலும் (முதல் இதழ் நீங்கலாக) இது கடைசி சில பக்கங்களிலேயே தரப் பட்டுள்ளது. மூன்று பக்கங்களிலிருந்து (இதழ் பத்து) ஆறு பக்கங்கள் வரையில் (இதழ்கள் ஒன்று இரண்டு) இந்தப் பகுதிக் கென ஒதுக்கப்பட்டுள்ளது. பத்து இதழ்களிலுமாக மொத்தம் நாற்பத்தேழு பக்கங்களைப் பெற்றுள்ள இந்தப் பகுதி காலத்திற்கு ஏற்ற, நோக்கத்திற்கு ஏற்ற, நெஞ்சையும் அறிவையும் ஒருங்கே தொட்டுத் துலங்கவைக்கும் கனமான செய்திகளைத் தாங்கி நிற்கிறது.[43]

இப்பகுதியில் இடம் பெற்றுள்ள செய்திகளின் தகுதி நோக்கி யும் தேவை கருதியும் ஏ.கே. செட்டியார் தம்முடைய குமரிமலர் இதழ்களில் இவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.[44]

மதுவிலக்கு வினா விடை

இதுவும் விமோசனத்தின் குறிப்பிடத்தக்க பகுதிகளில் ஒன் றாகும்.

மதுவிலக்குத் தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. மிகவும் பயனுள்ள கருத்துகள்; எளிமையான சொற்றொடர்கள்; படிப்படியாகச் செய்திகளைப் புரியவைக்கும் பாங்கு; தர்க்க ரீதியான வெளிப்பாட்டுத்திறன் - இவை மதுவிலக்கு வினாவிடையின் சிறப்பியல்புகள்.

இப்பகுதி எல்லா இதழ்களிலும் இடம்பெற வில்லை. ஐந்து இதழ்களில் (இதழ்கள் ஒன்று, நான்கு, ஐந்து, ஏழு, பத்து) மட்டுமே அமைந்துள்ளது. இருபத்துமூன்று பக்கங்களில் அமைந்துள்ள மதுவிலக்கு வினா விடையின் செய்திகள் படித்து மகிழத்தக்கன.[45]

அட்டை

முன்பக்க அட்டையின்மேல் பகுதியில் சாராயப் பீப்பாவும், கள்பானையும், சீமைச்சரக்கு அடங்கிய புட்டியும் பொதுமக்களால் விரட்டப்படுவதாகப்படம் ஒன்று வரையப்பட்டுள்ளது. ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் இடம் பெற்றுள்ள அப்படத்தில் ஆண்கள் கால்களால் எட்டி உதைக்கிறார்கள். ஒருவர் காலிலிருந்து செருப்பு ஒன்று பறந்து சென்று சாராயப் புட்டியைத் தாக்குகின்றது. ஒரு பெண்ணின் கையில் துடைப்பமும் இன்னொரு பெண்ணின் கையில் முறமும் உள்ளன. சிறுவர்களில் ஒருவன் காலால் எத்துகிறான்; ஒருவன் கையில் கோல் இருக்கின்றது. கதிரவன் வருகையும் காட்டப்பட்டுள்ளது.

அதன்கீழ் 'விமோசனம்' என்று பெரிய எழுத்துகளில் இதழின் பெயர் தரப்பட்டுள்ளது. அதை அடுத்து, 'ஒரு மாதப் பத்திரிகை' என்னும் குறிப்பும், ஆசிரியர் பெயரும் உள்ளன. அதன்கீழ் இதழ் வெளிவந்த ஆண்டும் மாதமும் (தமிழ் ஆண்டு, தமிழ் மாதம்) தரப்பட்டுள்ளன. அதனை அடுத்து இதழின் முகவரி அமைந்துள்ளது. இறுதிப் பகுதியாகச் சந்தா விவரம் தரப்பட்டுள்ளது.

முன் அட்டையின் உட்புறம் பொருளடக்கம் அமைந்துள்ளது. விமோசனம் இதழைப் பெறுவதற்கான வழி முறைகள் அதன்கீழே தரப்பட்டுள்ளன.

பின்புற அட்டையின் உள்ளேயும் வெளியேயும் பெரும்பாலும் விளம்பரங்கள் - மதுவிலக்கு விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. 'மதுவிலக்குப் பிரசுரங்கள்', 'மதுவிலக்குப் படங்கள்' பற்றிய விளம்பரங்கள் வந்துள்ளன. ஒரோவழி கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

மதுவின் வயப்பட்டு வாழ்வென்னும் போர்க்களத்தில் தோற்று நின்ற ஏழைமக்களின் புண்களுக்கு மருந்திட்டு ஆற்றும்பணியைச் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட இதழ் விமோசனம். மக்களைத் துயரத்தின் பிடியினின்றும் மீட்பதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றிய விதத்தில் தனிச்சிறப்பு பெறுவது விமோசனம்.

குறிப்புகள்

1. இராம.சுந்தரம், 'தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள்', தமிழ்க்கலை (காலாண்டு ஆய்விதழ்), ப.2
2. டாக்டர் இராதா செல்லப்பன், கலைச் சொல்லாக்கம், ப.83
3. ராஜ்மோகன் காந்தி, ராஜாஜி வாழ்க்கை வரலாறு (முதற் பகுதி), தமிழ் மொழிபெயர்ப்பு, ப.79
4. பாரதியார் கட்டுரைகள், ப.210
5. பிரபஞ்சமித்திரன், 20.10.1916, ப.7
மேற்கோள் : பெ.சு. மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப. 341
6. சாஸ்திர சம்பந்தமான தமிழ்ச் சொற்கள் (கட்டுரை), தமிழர் நேசன், தொகுதி-1, ப.233
7. மேலது ராஜ்மோகன் காந்தி, முன் குறிப்பிட்ட நூல், பக். 79-80
8. தமிழர் நேசன், தொகுதி-1, ப.233
9. வெள்ளிமணி (வார இதழ்), 12.9.47
10. கல்கி, பாங்கர் விநாயகராவ், முகவுரை, ப.XII
11. 1929 ஆம் ஆண்டின் முற்பகுதி
12. கல்கி, முன் குறிப்பிட்ட முகவுரை, ப.XXXVII
13. மேலது, பக் XL IV - XLV
14. மேலது, ப. XLV
15. மேலது, பக். XLVII - XLIX
16. மேலது, ப.XLIX

17. மேலது, பக்.LIV-LV

18. அ.மா.சாமி, 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், பக்.190, 192, 244, 286

19. இது சென்னை தேனாம்பேட்டையில் வெளிப்படும் மாதாந் தப் பத்திரிகை. நம் நாட்டில் குடியினால் விளையுந் தீங்குகள் பலவே. அதைப்பற்றி முக்கியமான வேறு பல விஷயங்களுடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப் பெறுகின்றது.

   - விவேக பாநு, வால்யூம் 4, புத்தகம் 3 (மார்ச்சு 1905) ப.140

20. ஒன்று, இரண்டு, நான்கு, ஏழு, ஒன்பது, பத்து - கதை அமைந்த இதழ்கள்; ஐந்தும் ஆறும் நாடகம்; மூன்றாவது இதழில் கட்டுரை; எட்டாவதில் படமும் பாடலும்

21. இந்தியா, 13 மார்ச்சு 1907
    மேற்கோள் : ஆ. இரா. வேங்கடாசலபதி, பாரதியின் கருத்துப்படங்கள், ப.16

22. ரா.அ. பத்மநாபன், வ.வே.சு. ஐயர், பக்.189, 197

23. மா.ரா. இளங்கோவன், இதழியல் நோக்கு, ப.63

24. மேலது

25. மேலது

26. R.A. Padmanabhan, VISHNU THE UNIQUE (Vishnu and his cartoons), No page Number

27. கட்டுரையாளர் இதழ்களைப் பார்த்து அறிந்தது

28. சுதந்திரச் சங்கு ஆய்வாளர் திருமதி சி.குமாரி நேர்காண லில் கூறியது

29. படங்களுக்கு ஒருவாறு உருவங்களையெல்லாம் குறிப் பிட்டு ராஜாஜி பிளான் போட்டுக் கொடுத்து விடுவார். அவற்றைப் பார்த்துச் சரியான படங்களைச் சென்னையில் 'செட்டி' என்பவர் செய்து கொடுத்து வந்தார். - முகவுரை, பாங்கர் விநாயகராவ், ப. XLV

30. மேலது
    விமோசனம், டிசம்பர் 1929, ப.178

31. 'சர்மா பிரதர்ஸ்' என்ற பெயரில் கருத்துப்படங்கள் வரைந்தவர் அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய கே.ஆர். சர்மா என்னும் கருத்துப்பட ஓவியர். தமிழ்நாடு (1919), சுதந்திரச் சங்கு (1930), காந்தி (1931) முதலிய வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்நாளைய இதழ்கள் பலவற்றில் கருத்துப் படங்களும் பிற படங்களும் வரைந்தவர் இவர். தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க கருத்துப்பட ஓவியர்களில் ஒருவரான இவருடைய கருத்துப்படங்கள் தனி ஆய்வுக்கு உரியன.

32. பக். XLIX - LIII

33. விமோசனம், மே 1930, ப.377

34. ஜி. ராமச்சந்திரன், டி.ஆர். பத்மநாபன், வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகச் சரித்திரம், பக். 38, 40-41

35. கட்டுரையாளர் புதுப்பாளையம் (திருச்செங்கோடு) 'காந்தி ஆசிரமம்' சென்றிருந்தபோது நேரில் கண்டறிந்தது.

36. நூலின் இரண்டாம் பதிப்பே (1985) பார்வைக்குக் கிடைத்தது. அதன் பக்க எண்களே இங்குத் தரப்பட்டுள்ளன. முதல் பதிப்பு ஆண்டு 1943 ஆகும்.

37. இதன் முதல் பதிப்பு ஆண்டு 1931. இரண்டாவது விரிவாக்கப்பட்ட பதிப்பு 1943. பார்வைக்குக் கிடைத்தது இரண்டாம் பதிப்பு.

38. அ. திரிபுர சுந்தரி, இராசாசியின் விமோசனம் இதழ் ஓர் ஆய்வு, எம்.ஃபில் பட்ட ஆய்வேடு (அச்சில் வராதது), சென்னைப் பல்கலைக்கழகம், பக்.43-44,77

39. மேல்து, பக்.87,97

40. மேலது, ப.100

41. மா.ரா. இளங்கேவன், சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம், ப.9

42. அ.திரிபுர சுந்தரி, முன் குறித்த ஆய்வேடு, ப.36

43. மேலது, ப.32

44. பிப்பிரவரி 1973 - டிசம்பர் 1973

45. அ. திரிபுர சுந்தரி, முன் குறித்த ஆய்வேடு, ப.34

பயன்படுத்திய நூல்கள்

முதன்மை நூல் விமோசனம் இதழ்கள்

துணை நூல்கள்

தமிழ் நூல்கள்

1.இராதா செல்லப்பன், கலைச் சொல்லாக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985

2.இளங்கோவன், மா.ரா., சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம், சேகர் பதிப்பகம், சென்னை, 1980

3.........., இதழியல் நோக்கு, சேகர் பதிப்பகம், சென்னை, 1981

4.கல்கி, பாங்கர் விநாயகராவ், தமிழப்பண்ணை, சென்னை, 1947

5.சாமி, அ.மா., 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், நவமணி பதிப்பகம், சென்னை, 1992

6.பத்மநாபன், ரா.அ., வ.வே.சு. ஐயர், நேஷனல் புக் டிரஸ்ட், புது டில்லி, 1981

7.பாரதியார், பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், சென்னை, 1986

8.மணி, பெ.சு., வீர முரசு சுப்பிரமணிய சிவா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984

9.ராமச் சந்திரன், ஜி., பத்மநாபன், டி.ஆர். வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகச் சரித்திரம், கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், வேதாரண்யம், 1984

10.ராஜாஜி, கள் ஒழிக, ராஜாஜி ஞாபகார்த்த அறக்கட்டளை, சென்னை, 1985

11.ராஜ்மோகன் காந்தி, ராஜாஜி வாழ்க்கை வரலாறு (முதற் பகுதி), தமிழ் மொழிபெயர்ப்பு, பாரதி பதிப்பகம், சென்னை, 1981

12.வேங்கடாசலபதி, ஆ.இரா., பாரதியின் கருத்துப் படங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை, 1994

ஆய்வேடு

அ.திரிபுரசுந்தரி, இராசாசியின் விமோசனம் இதழ் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்ற எம்.ஃபில் பட்ட ஆய்வேடு (அச்சில் வராதது), 1994

ஆங்கில நூல்கள்

1.RAJAJI, PROHIBITION, Kamala Prachuralayam, Madras, 1943

2.VAIJAYANTHI MALA, VISHNU and his Cartoons, Madras, 1977

இதழ்கள்

1.ஆனந்த விகடன், 1928, 1929

2.குமரிமலர், 1973

3.தமிழ்க்கலை, இதழ் ஒன்று, 1983

4.தமிழர் நேசன், செப்டம்பர் 1917

5.விவேகபாநு, மார்ச்சு 1905

6.வெள்ளிமணி, 12.9.1947

சுதந்திரச்சங்கு

1930

‘சென்ற யுத்தத்தில் சங்கு செய்த ஊழியத்தை வருணிக்க வார்த்தைகள் இல்லை. அதனுடைய கம்பீரமான பாஷையும் உற்சாகமூட்டும் நடையும் தமிழரைக் கர்ம வீரர்களாக்கின என்பதில் ஐயமில்லை. தைரியத்தோடும் மறைக்காமலும் விஷயங்களை வெளியிட்டு வந்த இச்சிறிய பத்திரிகைக்கு ஈடாக வேறு பத்திரிகையைக் காணவில்லை. பத்திரிகையின் தமிழ்த் தெளிவை என்னென்பது. இலக்கிய நூல்களுக்குச் சமானமாக இருந்த கட்டுரைகளை எவ்வாறு புகழ்வது!’

— ர. நாராயண ஐயங்கார்

காலணா 10 Regd. No, M. 2811

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்:
சங்கு. ஸுப்ரஹ்மண்யன்.

போன் கே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 17-6-33

நிலமகள் துயரம்



நிலமகளுக்கு இன்று வாய்த்துள்ள நிலையை எண்ண எண்ண பயமா யிருக்கிறது. எதிரே 'யுத்தம்' என்ற அரக்கன் தனது பலத்தினால் பூமா தேவியை இழுத்துச் செல்லப் பார்க்கிறான். ஆனால் தேவியின் பின்னால் நின்றிருக்கும் சித்திரக்குள்ளர்கள் ஆயுதப் பரிகரண மகா நாடு என்ற சிறு கயிற்றால் காப்பதற்குப் பார்க்கிறார்கள். உலகை 'வறுமை' என்னும் பேய் இழுத்துச் செல்லப் பார்க்கிறது. குள்ள மனிதர்கள் உலகப் பொருளாதார மகாநாடு என்ற கயிற்றினால் உலகைக் காக்க முயல்கின்றனர். உலகின் கதி இனி என்னமோ?

சுதந்திரச்சங்கு

சி. குமாரி

உலகம் முழுவதும் பரவிய பெருமையுடைய தமிழ்மொழி காலத்தால் பழமையும், வளர்ச்சி நிலையில் புதுமையும் படைக்கும் திறமுடையது. சான்றோர்கள் அதன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தும் பெருமை பெற்றது. தோன்றிய நாள் முதல் தற்காலம் வரை காலவோட்டத்திற்கு ஏற்ப இயைந்து ஒழுகும் வளமை பெற்ற செந்தமிழ் மொழி இதழியல் துறையிலும் ஏற்றம் பெற்று விளங்குகின்றது.

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு வறுமைமிஞ்சி வாழ்ந்த இந்தியா விழிப்புணர்வு பெற்று விடுதலை அடைய உறுதுணை புரிந்தவை இதழ்கள். நாடெங்கும் நாட்டு விடுதலையில் ஆர்வம் கொண்ட பலரால் நடத்தப்பெற்று வந்த இதழ்கள், மக்கள் உண்மை நிலையுணரப் பெரும்பணி புரிந்தன. அத்தகைய இதழ்களுள் வரலாற்றுச் சிறப்புமிக்க 1930ஆம் ஆண்டு தமிழகத்தில் தோன்றிய 'சுதந்திரச்சங்கு' இதழ் குறிப்பிடத்தக்கது.

சங்கு இதழ் தோன்றிய சூழல்

1929ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31ஆம் நாள் நள்ளிரவில், லாகூர் நகரில் கூடிய காங்கிரசு மாநாட்டில் 'பரிபூரண சுயராச்சியமே காங்கிரசின் இலட்சியம்' என்ற தீர்மானம் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே நிறைவேறியது. மற்றொரு தீர்மானம் அதற்குரிய போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அண்ணல் காந்திக்கு ஒப்புதல் வழங்கியது. மாநாட்டின் இறுதியில் 1930

ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26 ஆம் நாள் 'பூரண சுயராஜ்யத் திருநாள்' என அறிவிக்கப்பட்டு, அத் தினம் எவ்வாறு கொண்டாடப் பட வேண்டுமென்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. இச்சூழ லில் நாட்டுக்கு உழைக்கும் நோக்கத்துடன் சுதந்திரச்சங்கு இதழ் தோற்றம் கொண்டது.

சுதந்திரச்சங்கு

இந்திய நாடே ஆவலுடன் எதிர்நோக்கிய 1930ஆம் ஆண்டு சனவரி 26ஆம் நாள் 'சுதந்திரச்சங்கு' தமிழ் இதழியலுலகில் தன் முதலடியை எடுத்து வைத்தது. சென்னையைச் சேர்ந்த திரு. எஸ்.கணேசன் மற்றும் திரு.எஸ். சுப்ரஹ்மணியன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளியான இந்த இதழ் முதலில் 'துண்டறிக்கை' என்றே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின் றது. அகில இந்திய தேசிய மகாசபையாம் காங்கிரசின் கட்டளை களைத் தமிழ்மக்கள் பின்பற்றி நடக்க வேண்டுமென வேண்டு கோள் விடுத்தது.

> காங்கிரஸ் வெற்றியடையவும் புண்ணியத் திருப்பேறு பெறு வதற்கும் 'சுதந்திரச் சங்கு' என்ற துண்டுப் பிரசுரங்கள் வெளி யிடுவதாக உள்ளோம். அறிக்கைகள் அவசியங்களுக்கும் நிலைமைகளுக்கும் தக்கவாறு வெளியிடப்படும். சில சமயம் மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது ஒரு சமயம் பக்ஷத் துக்கோ, வாரத்துக்கோ ஒரு முறையோ அல்லது தினத்திற்கு ஒரு முறையோ, அவசியமானால் ஒரு தினத்துக்கு ஒரு முறையோ, இரு முறையோ, மும்முறையோ அன்றேல் பன் முறையோ சமயத்துக்கேற்றவாறு இம்மாதிரி அறிக்கைகள் வெளிவரும்.[1]

என்று தன்நிலையை எடுத்துரைக்கின்றது. இந்த அறிக்கை களைப் படிப்போர் தேசத் திருத்தொண்டில் ஈடுபட்டு உழைக்க வேண்டும் என்பதே வெளியிடுவோரின் கோரிக்கை எனவும் முதல் இதழ் தெளிவுபட உணர்த்துகின்றது.

'அவ்வப்போது வெளியிடப்படும்' என்ற முன்னுரையோடு தொடங்கப்பட்டபோதும் சுதந்திரச்சங்கு இதழ் மக்கள் நல்கிய ஊக்கத்தாலும், சிறந்த செய்தி வெளியீட்டு முறைகளாலும் மக்களின் போற்றுதலைப் பெற்றது. தோன்றிய சில வாரங்களுக்குள்ளேயே வாரமிருமுறை இதழாகவும், பின்பு வார மும்முறை இதழாகவும்

வளர்ச்சி பெற்றது. சில தினங்களில், நாளிதழ் போல் அடுத்தடுத்த தினங்களிலும் வெளியாயிற்று.

இதழின் பெயர்க்காரணம்: தமிழக விடுதலை வீரர்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் ஆற்றொழுக்கான நடையில் சுதந்திரச் சங்கு வெளிவந்தது. மகாகவி பாரதியின்,

> எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு – நாம்
> எல்லோரும் சமமென்ப துறுதியாச்சு
> சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே இதைத்
> தரணிக்கெல்லாமெடுத்து ஓதுவோமே

என்ற 'சுதந்திரப் பள்ளு'ப் பாடலில் உள்ள 'சுதந்திரம்', 'சங்கு' என்ற இரு சொற்களையும் இணைத்து இந்த இதழ் 'சுதந்திரச் சங்கு' என்று பெயர் சூட்டப் பெற்றது. சங்கு இதழ் காந்தியின் உபதேசங் கள் அடங்கியது. காங்கிரஸ் பத்திரிகை என்று தன்னைப் பறை சாற்றிக் கொண்டது. பாரதி பாடல்களை நெற்றியில் தாங்கி, நாட்டு நடப்புகளைச் சுட்டிக்காட்டி, எளிய பேச்சுத் தமிழில் அமைந்த பெருமையை உடையதாயிருக்கின்றது.

சங்கு முழங்கிய காலம்: சங்கு இதழ் 26-1-30 முதல் 12-5-30 வரை 25 இதழ்களாகவும், அச்சுச் சட்டக் கொடுமையில் மறைந்து பின் மீண்டும் 11-4-31 முதல் 26-12-31 வரை 108 இதழ்களாகவும், பிறிதொரு இடைவெளிக்குப் பின் 12-9-32 முதல் 3-8-33 வரை 130 இதழ்களாகவும், அடுத்து 24-11-33 முதல் 8-6-34 வரை 28 வார இதழ்களாகவும் தமிழ்நாட்டில் முழங்கியது. ஆட்சியாளர்களின் கடுமையான கண்காணிப்பில் இருந்த இந்த இதழ், கால நெருக்கடியால் ஒடுக்கப்பட்ட போதும், மறுபிறப்பு அடையும்போது முன்னிலும் அதிக விரைவுடனும், தொண்டு மனப்பான்மையுடனும் செயலாற்றிய விதம் பாராட்டத் தக்கதாகும்.

இதழாசிரியர்கள் அறிமுகம்

'சங்கு' கணேசன்

அக்காலத்து இண்டர்மீடியட் படிப்புப் படித்த திரு. கணேசன் ஆங்கில அரசுக்கு எதிராகக் கிளம்பிய விடுதலைக் கனலில் தோய்ந்து நாட்டுணர்வு நிரம்பப் பெற்றவராய் விளங்கினார். காந்தியடிகளின் 'யங் இந்தியா' இதழுக்குச் சந்தாதாரர் சேர்க்கக்

கோரி வெளிவந்தவொரு விளம்பரத்தால் உந்தப்பட்டு அதற்காகக் கடுமையாக உழைத்தார். "என் முயற்சியால் 1500 சந்தாதாரர்களைச் சேர்த்து, வசூலித்த சந்தாத் தொகையைக் காந்தியடிகளுக்கே நேரடியாக அனுப்பினேன். இச்செயலால் கவரப்பட்ட அடிகளோடு கடிதப் போக்குவரத்தும் பின்பு நெருங்கிய நட்பும் ஏற்பட்டது. அப்போதுதான் தமிழக மக்களுக்குக் காந்திய கருத்தை எடுத்துரைத்துப் பரப்புவதற்குப் பத்திரிகை நடத்த முடிவெடுத்தேன். சாதாரண கணேசன் 'சங்கு கணேசன்' ஆனேன்" என்ற ஆசிரியரின் கருத்து ஈண்டு குறிக்கத்தக்கது.

திரு. 'சங்கு' கணேசன் 'யங் இந்தியா' இதழில் வெளியான காந்தியடிகளின் கட்டுரைகளை 1919 முதல் 1924 வரை புத்தகங்களாகத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். காந்தியடிகளின் எழுத்துகளிலும், பேச்சுத்திறமையிலும் இவர் காட்டிய ஆர்வத்தையும், அக்கறையையும் உலகம் மட்டுமல்லாது அண்ணலும் நன்கு உணர்ந்திருந்தார். தம் எழுத்துக்களைப் படிக்க விரும்புவோர்க்கு அண்ணல் காந்தி, 'சங்கு' கணேசனின் புத்தக நிலையத்தைத் தான் சுட்டிக்காட்டுவாராம்.

நூறாண்டு காலம் வாழ்ந்து 1994இல் மறைந்த 'சங்கு' கணேசன் 'சுதந்திரச் சங்கு' இதழின் அச்சாளர், வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் எனப்பணிபுரிந்தவர். ஆட்சியாளர்கள் சங்கு இதழ் வளர்ச்சியால் கொதிப்புடனிருப்பதை உணர்ந்து இதழ்ப்பணியைத் தடையின்றி நிறைவேற்ற விரும்பி தம் உயிர் நண்பர் சுப்ரஹ்மணியத்தைக் கூட்டாசிரியராக இணைத்துக் கொண்டார். இவ்விருவருமே ஆசிரியப் பொறுப்பிலிருந்து இதழைச் செம்மையாக நடத்தினர்.

அரிசன மக்களிடம் பேரன்புடன் பழகும் 'சங்கு' கணேசன் விரும்பும்போது சபர்மதி ஆசிரமம் சென்று தங்கித் தொண்டு புரியும் பேறு பெற்றிருந்தார். உப்புச் சட்டத்தை மீறிச் சிறை சென்ற பெருமையுடைய இவர் தக்கர் பாபா வித்யாலயா, கோடம்பாக்கம் அரிசனப் பள்ளி ஆகியன தமிழகத்தில் உருவாக உறுதுணையாயிருந்தவர். பல தேசிய தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். தியாகி 'சங்கு' கணேசன் அவர்கள் இந்தியா விடுதலை அடைந்தவுடன் தேசத்தியாகிகளுக்கென இந்திய அரசு அளித்த தியாகிகள் நிலத்தை அரசுக்கே திருப்பித் தந்தவர். தெலுங்கில் 'ஜென்ம பூமி' என்ற இதழையும் வெளியிட்டார்.

'சங்கு' சுப்ரஹ்மணியன்

காந்தியத்தில் பெருநம்பிக்கை கொண்டிருந்த இவர் சிறந்த அறிஞர், தமிழ், இந்தி, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். அரசியல் விழிப் புணர்வும், சிறந்த இலக்கிய வேட்கையும் மிகுந்த சுப்ரஹ்மணியன் 'சுதந்திரச் சங்கு' இதழின் ஆசிரியப் பொறுப்பில் திறம்படப் பணியாற்றினார். விடுதலைப் போரில் வேகம் கொண்டு பங்கேற்ற சுப்ரஹ்மணியன் 1927இல் நீல் சிலை சத்யாக்கிரகத்திலும், பின்பு உப்புச் சத்தியாக்கிரகத்திலும், தனிநபர் சத்யாக்கிரகத்திலும் கைது செய்யப்பட்டு சென்னை மற்றும் அலிபுரம் சிறைகளில் அடைக்கப்பட்டார்.[3]

இலக்கியப் புலமையும் இசையறிவும் பெற்ற சுப்ரஹ்மணியன் திரு.வி.க.வுடன் நட்புறவு பூண்டிருந்தார். சுதந்திரச் சங்கு இதழில் 'திப்பு', 'குசேலன்' என்ற பெயர்களில் கேலிக் கட்டுரைகள், எள்ளல் சொல் சித்திரங்கள் ஆகியன படைத்திருக்கிறார். 'தலைசிறந்த தேசபக்தன், சிறுவயதிலேயே இவர் சுப்ரமணிய பாரதி, வ.வே. சுப்பிரமணிய ஐயர் இருவரின் ஆதர்சம் பெற்றவர். 'நான் இரண்டாட்டில் ஊட்டிய குட்டி' என்று ஒரு சமயம் என்னிடம் சொன்னது இன்னும் எனக்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பாரதி பாட்டுக்களைச் 'சங்கு' சுப்ரஹ்மணியன் பாடித்தான் கேட்க வேண்டும். வேறு யாரும் இதுவரை அப்படிப் பாடி நான் கேட்டதில்லை. பாரதியின் கவிதைகளை இனிமையும், உக்ரமும் இணையப் பாடிப் பாடி புகழ் பரப்பினார்'[4] எனத் திரு. சுப்ரஹ்மணியம் பற்றி முதுபெரும் எழுத்தாளர் சி.சு. செல்லப்பா நினைவு கூர்கிறார்.

சுதந்திரச் சங்கு இதழ் இலக்கியப் பத்திரிகையாக வெளிவந்தபோது அதில் பல சிறுகதைகளையும், மொழிபெயர்ப்புக் கதைகளையும் எழுதி இருக்கின்றார். மகாத்மா காந்திக்கு மிகவும் விருப்பமான 'வைஷ்ணவ ஜனதோ' பாடலைச் சங்கு சுப்ரஹ்மணியன் தமிழில் மொழிபெயர்த்து இதழில் வெளியிட்டிருக்கிறார்.

'ஹனுமான்' என்ற இதழில் திரு. ரகுராச பாரதியுடன் சங்கு சுப்ரஹ்மணியம் பணியாற்றினார். காந்தியடிகளின் ஆரோக்கிய வழி, இல்லற மகாரகசியம், அரிசன சேவை என்பன போன்ற நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். 1934ஆம் ஆண்டு வரை சுதந்திரச் சங்கு இதழில் முழுமூச்சுடன் பணியாற்றி, பின்பு 'தினமணி' இதழின் துணையாசிரியராகத் தம் இதழ்ப் பணியைத் தொடர்ந்தார்.

பின் திரைப்படத் துறையிலும் பல நிலைகளில் பணியாற்றினார். மேலும் திரு. சுப்ரஹ்மணியன் ஜெயதேவரின் அஷ்டபதியையும், கீத கோவிந்தத்தையும் சுவை கெடாமல் தமிழில் மொழிபெயர்த்து எழுதியதையும் அவர்தம் துணைவியார் கட்டுரையாளரிடம் குறிப் பிட்டார்.

சுதந்திரச் சங்கு இதழின் கட்டமைப்பு

25 x 19 செ.மீ. அள வில் எட்டுப் பக்கங்களுடன் வெளிவந்த சுதந்திரச் சங்கு விடுதலை இதழ் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு பத்தி (column) கொண்டு காணப்படுகின்றது. பெரிதும் பாரதியின் பாடல்வரிகள் தலையங்கப் பகுதிக்குப் பொருத்தமாக அமைய, முதல் பக்கத்திலேயே தலையங்கம் அமைந்திருக் கின்றது. 'நவசக்தி', 'தேசபக்தன்,' 'தமிழ்நாடு' 'பம்பாய் கிரானிக் கல்', 'யங் இந்தியா' போன்ற பல இதழ்களின் செய்திகளை எடுத்துக்காட்டும் போக்கினை உடையதாயிருக்கின்றது. பொருத் தமான தலைப்பு, ஆழமான செய்திகள், கருத்தோட்டம் மிக்க நடை, பழமொழி மற்றும் உவமை உருவக அமைப்புகளின் தேர்ந்த ஆட்சி, நாட்டுநிலையை நயம்பட எடுத்துரைத்தல், ஆட்சியாளர்களின் போக்கைச் சாடுதல், காந்தீயக் கொள்கைகளைப் பரப்புதல் எனப் பல நிலைகளில் 26-1-30 முதல் 3-8-33 வரை வெளியான விடுதலையியக்கப் போக்கை விரித்துரைக்கும் சங்கு இதழ்கள் தம் பணியைத் திறம்படச் செய்திருக்கின்றன. இந்த 263 சங்கு இதழ்களும் முழுக்க முழுக்க இந்திய நாட்டு விடுதலைப் போரின் பல்வேறு நிலைகளை எடுத்துரைக்கின்றன. கருத்துப்படங்கள் இதழுக்கு அணி சேர்க்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

தன் நான்காவது இதழில் பம்பாய் மற்றும் அக்கரைச் சீமையில் பரவி, சங்கு இதழின் பிரதி அனுப்ப வேண்டுகோள் வரு வதாகவும், தமிழகத்தில் இன்னும் ஊக்கத்தை எதிர்நோக்கி இருப்பதாகவும் கூறும் சங்கு இதழ், தன் எட்டாவது இதழில் ஆண்டுச் சந்தா விவரம் குறித்து அறிவிப்பைத் தொடர்ந்து வெளி யிட்டு வந்திருக்கின்றது. இது குறித்து ஆராய்கையில் சுதந்திரச் சங்கு இதழ் தோன்றிய சில வாரங்களுக்குள்ளேயே ஆயிரக்கணக் கான படிகள் அச்சிடும் நிலையை அடைந்ததை உணர முடிகின்றது. 'பெயருக்கேற்ப உழைத்த இதழ்களுள் ஒன்று'[5] என்று அறிஞர் போற்றும் சுதந்திரச் சங்கு இதழ், 'சங்கு' கணேசன், 'சங்கு' சுப்ரஹ்மணியன் ஆகியோருடன் ஓவியர் சர்மா, கள்ளக்குறிச்சி

சுப்ரமணியம், க. சந்தானம், சடகோபன், சேஷன் போன்ற பலரையும் தன் பாதையில் இணைத்துக் கொண்டதை உணர முடி கின்றது. மேலும் இப்பத்திரிகையில் வ.ரா. அவர்களும், பிற்காலத்தில் 'உறிந் துஸ்தான்' நாரராயண ஐயங்கார் எனக் குறிப்பிடப்பட்டவருமான ரா.நா. அவர்களும், ஆசிரியர் குழுவில் திறம்படப் பணியாற்றினர்[6] என்கிறார் சிரஞ்சீவி.

சுதந்திரச் சங்கு காலணா விலையில் விற்கப்பட்ட காரணத் தால் மக்களால் அன்புடன் 'காலணா சங்கு' என்றழைக்கப்பட்டது. அக்காலத்தில் சங்கு இதழ் பல்லாயிரக்கணக்கான மக்களால் போற்றி வளர்க்கப்பட்டது என்பதை ஏறத்தாழ 75,000க்கும் மேல் விற்பனையான அதன் எண்ணிக்கையைக் கொண்டு உய்த்துணர முடிகிறது. மதுரையில் மட்டும் பத்தாயிரம் படிகள் விற்பனை யாயிற்றெனில் சுதந்திரச் சங்கு பெற்ற மிகுந்த செல்வாக்கை அறியலாம். அப்போதைய இந்திய அரசியலில் தேசத்தலைவர் களுக்கிருந்த மதிப்பையும், காங்கிரசு அமைப்புக்கு இருந்த செல் வாக்கையும் சுதந்திரச் சங்கு ஓர் உரைகல்லாக உணர்த்தி நிற் கின்றது எனில் அது மிகையாகாது.

இலக்கியச் சங்கு 29x22 செ.மீ. அளவில் வண்ணத்தாள் அட்டைப் படத்துடன் ஓரணா விலையில் வெள்ளிதோறும் வெளி வந்த பெருமையுடையது. 'சங்கு' சுப்ரஹ்மணியன், தி.ஜ.ர. போன் றோர் முழுப் பங்கேற்று உருவாக்கிய சுதந்திரச் சங்கு இலக்கிய இதழ்கள் 28ம் முழு இலக்கிய இதழுக்குரிய பல கூறுகளைக் கொண்டு காணப்படுகின்றன. இலக்கியச் சங்கின் முகப்பு அட்டை யில் 'முக்கிய விஷயங்கள்' என்னும் தலைப்பின்கீழ் இதழ் உள்ள டக்கச் செய்திகள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இவ்விதழ் களின் அரசியல், கலை, இலக்கியம், தத்துவம், கவிதை நயம் பாராட்டல், கடிதப் பகுதி எனப் பல பகுதிகள் அமைந்துள்ளன. ஒரு பக்கத்தில் மூன்று பத்திகளாகப் (column) பிரிக்கப்பட்டு 24 பக்க அளவில் வெளிவந்த இலக்கிய இதழ் சுதந்திரச்சங்கு தமிழ் இலக்கிய உலகிற்குத் தன் பணியைச் செவ்வனே செய்திருக் கின்றது.

சுதந்திரச் சங்கு இதழின் தனிப்பெருமை

சுதந்திரச் சங்கு காலணா இதழுக்கெனத் தனித்த பெருமை யொன்றுண்டு. தமிழ் இதழியல் உலகில் முதன் முதலில் 'ஏஜென்சி முறை' எனப்படும் முகவர் அமைப்பு முறையை ஏற்படுத்தியது

சங்கு இதழ்தான். இது குறித்து, 'சூடான நடையைக் கையாண்ட தால் மக்கள் சங்கை விரும்பி வாங்கிப் படித்தனர். இதனால் பதினாயிரக் கணக்கில் சங்கு செலவாயிற்று. தமிழ் நாட்டில் முதன் முதல் அந்த அளவிற்கு விற்பனையை எட்டிய இதழ் சுதந்திரச் சங்குதான். சங்குவிற்குப் பிறகுதான் 'ஏஜென்சி முறை' என்ற ஒன்று ஏற்பட்டு நாளடைவில் அது தொழிலாகவும் வளர்ச்சி பெற்றது'[7] என்றுரைக்கிறார் மா.சு. சம்பந்தன்.

தமிழகத்தின்கண் இராசபாளையம் பகுதியில் சங்கு இதழின் முகவராக இருந்த குமாரசாமிராசா பிற்காலத்தில் சென்னை மாநில முதல்வரானார் என்பது எடுத்துக்காட்டத்தக்க செய்தியாகும்.[8]

சுதந்திரச் சங்கு இதழின் உள்ளடக்கச் செய்திகள்

தொகுதி 1

சுதந்திரச் சங்கு இதழ்கள் வெளியான வரிசை கொண்டு 26.1.30 முதல் 12.5.30 வரை வெளியான 25 இதழ்களைத் தொகுதி - 1 என்று கூறலாம். இத்தொகுதி இதழ்கள் வழி இந்தியா குறிப்பாகத் தமிழகத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாக் கிரகம் பற்றிய செய்திகள், போராட்ட விதிமுறைகள், அரசின் கொடுமைகள், காந்தியின் கட்டுரைகள், மகளிர் நிலை, வரி மறுத்தல், பர்தோலி சத்தியாக்கிரகம் பற்றிய செய்திகள், அரசின் அதிகப்படியான செலவினம் என்பன போன்ற பல செய்திகளை அறியமுடிகின்றது. அச்சுச்சட்டத்தின் கோரப்பிடியில் சிக்குண்ட இதழ்களின் நிலையும் அறியப்படுகின்றது.

முதல் இதழிலேயே படிப்போர் வீரவுணர்வு பொங்கும் வகையிலமைந்த பின்வரும் தலையங்கப் பகுதி சிறப்புடையது.

> என்னே வெக்கங்கெட்ட வாழ்வு! உலகோர் எள்ளி நகையாட, அயலார் ' அடிமை ' என்று கூவியழைக்க, 'கூலியாளே' என ஆங்கிலர் கூறி நிற்க, 'ஏவலாளனே ' என்று வெள்ளையன் விண்டு பேச, ஈனமே கொண்டு வாழ்விலாச் சங்கடத்தில் மாட்டிக்கொண்டு கிடக்கும் ஏழை இந்தியனே ! மானங்கெட்ட வாழ்வை எத்தனை நாள் பொறுப்பாய்? .... உரிமை கொண்டு வாழ வேண்டும். இன்றேல் வீரம் காட்டி வீழ வேண்டும் [9]

மேலும் அதே தலையங்கத்திலேயே இதழின் நோக்கம் இன்னதென்று சுட்டிக் காட்டப்படுகின்றது. எடுப்பும் தொடுப்பும் மிகுந்த அப்பகுதி இதோ !

> உள்ளதை உள்ளபடி உரைக்க, ஊராருக்கு உழைக்க, உயர்வையே நாட, உரிமையை நிலைநாட்ட உறுதி கொண்டுள்ளோம். ஆண்டவன் அருளினால் மானமே நமது பூஷணம், உரிமையே நமது ஆடை; உண்மையே நமது பொக்கிஷம்; வளர்ச்சியே நமது வருவாய்; வீராப்பே நமது விளைநிலம். பூரண சுயராஜ்யத்திருநாளில் சுதந்திரப் பயிர்பண்ணப் புறப்படுகின்றோம்; வந்தே மாதரம்.

மகாத்மா காந்தியடிகள் தண்டியில் உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளத் தொண்டர் படையுடன் கிளம்பியதையும், வட இந்தியப் பகுதிகளில் உப்புச் சட்டம் மீறப்படுவதையும் பல இதழ்ச் செய்திகள் வழி சங்கு சுட்டிக்காட்டுகின்றது. முப்புறமும் கடலால் சூழப்பட்ட இந்தியாவில் இயற்கையிலேயே மிகுந்த உப்பு விளைவிக்கும் சூழலிருக்க, ஆண்டுதோறும் சுமார் ஏழு கோடிரூபாய் வருவாயை ஈட்ட ஆங்கில அரசு உப்புக்கு வரி விதித்த செயலை நாடே கண்டனம் செய்தது. இயற்கை உப்பை மக்கள் பெறவும் தாமே உப்புக் காய்ச்சவும் ஒப்புதல் வழங்க மறுத்த அடக்குமுறை அரசைச் சங்கு இதழ் வன்மையாகக் கண்டித்தது. வேதாரண்ணியத்தில் உப்பு விளைவிக்க, தமிழரை ஊக்கப்படுத்தியதைத்

> தெற்கே வேதாரண்யத்தில் உரிமை உப்பைச் சேர்க்கப் போகின்றோம்... தமிழா! மானமுடைய தமிழா! வீரமுடைய தமிழா! சிறையில் வருந்தும் நூற்றுக்கணக்கானவர்களின் குரல் உன் காதில் கேட்கவில்லையா? சோம்பலைத் துடைத்து எழுந்திரு! உடனே வேதாரண்யத்திற்கு ஓடு! உப்பு செய்! இந்தச் செயலைச் செய்யாவிட்டால் நீ தமிழன் என்னும் பெயருக்கு உரியவனல்ல. பெயரை இழப்பாயா? அல்லது உரிமை பெறுவாயா? பார்க்கின்றேன்[10]

என்று முழங்கியதினின்று நன்கு உணரலாம்.

'சத்தியாக்கிரகச் செய்திகள்' எனும் தலைப்பில் அமைந்த பகுதி இந்தியா முழுவதும் உப்புச் சத்தியாக்கிரகம் செய்தோரின் பணி, அரசின் போக்கு ஆகியவற்றைச் சுட்டுகின்றது. அரசு அதிகாரிகள் சத்தியாக்கிரகிகளுக்கு உதவக்கூடாதென மக்களை மிரட்டியது, உப்பு உண்டாக்குவோரைக் கைது செய்தது, தண்டனை அளித்தது, வரைமுறையின்றி விருப்பத்திற்கேற்ப விசாரித்தது, நினைத்தவாறு தண்டனையளித்தது, உப்புக் காய்ச்சும் தொண்டர்களைத் துன்புறுத்தியது எனப் பற்பல செய்திகளை அளிக்கின்றது. திரு.பிரகாசம் தலைமையில் உப்புக்காய்ச்சும் செயல் சென்னையில்

நடைபெற்றதைச் 'சபாஷ் சென்னை' எனத் தலைப்பிட்டுப் பாராட்டு கிறது (தொகுதி 1, இதழ் 19 ப.6) இவ்விதழ்.

உப்புச் சத்தியாக்கிரகம் மக்களிடையே பெருமளவு வெற்றி பெற்றமைக்கு இதழ்களின் முழு ஒத்துழைப்பும் ஒரு காரணமென உணர்ந்த அரசு அச்சுச்சட்டத்தை அமுல்படுத்தியது. அரசின் வன்முறையோ, சட்டங்களோ நாட்டில் ஏற்பட்ட விடுதலை உணர்வை நசுக்க முடியாது என அறுதியிட்டுத் தன் உணர்வுகளை வெளிப் படுத்திய சங்கு,

> முக்கியமாக இந்தச் சட்டம் தேசீய, தேசபாஷைப் பத்திரிகை களின் வயிற்றில் அறைவதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக் கிறது...... எந்த நிமிஷமேனும் நமது சங்கு மறையலாம். அஞ் ஞாத வாசம் புரியலாம். அதற்காக வாசகர்கள் வருத்தப்பட வேண்டாம். நமது சங்குக்கு மனமார அவர்கள் நன்றிகாட்ட விரும்புவாராயின் பாரத நாட்டின் முன்னேற்ற இயக்கத்தின் முன்னணியில் நிற்க வேண்டும்.

என்று வாசகர்களின்முன் தன் கோரிக்கையை வைக்கிறது. தமிழ் மக்கள் விடுதலைப் போரில் முனைப்புடன் ஈடுபட்டதைச் சங்கு இதழ்வழி நன்கு உணர முடிகின்றது.

தொகுதி 2

அடுத்து 11-4-31 முதல் 10-1-32 வரை தொடர்ந்து வெளிவந்த 108 இதழ்கள் தொகுதி 2 என்ற பகுப்பில் அடங்கும். இவற்றுள் 17 இதழ்கள் வாரமிருமுறையாகவும், 86 இதழ்கள் வாரமும்முறையாகவும், 2-1-32,3-1-32,4-1-32,7-1-32,8-1-32, ஆகியன தின இதழ்களாகவும் விளங்குகின்றன. 26-1-31 முதல் 8-1-32 வரை வெளியான இதழ்களில் ஆசிரியர் சங்கு ஸுப்ரஹ் மணியன் என்ற குறிப்பு முதல் பக்கத்திலேயே இடம் பெற்றிருக் கின்றது.

இத்தொகுதியில் அந்நியத் துணி மறியல், காந்தி -இர்வின் ஒப்பந்தம், பொருந்தா மணம் குறித்த மறியல், தீண்டாமை யொழிப்பு, கதர் வளர்ப்பு, இந்திய ஏற்றுமதி-இறக்குமதி பற்றிய குறிப்புகள், சுயராச்சியக் கொள்கைகள், கைதான தொண்டர்களின் நிலை, தேசியக் கொடி பற்றியன, இந்தியக் கடனறிக்கைச் செய்தி கள், இரண்டாவது வட்டமேசை மாநாட்டுச் செய்திகள், இந்தியத் தொழிலாளர் நிலை, பெண் தொண்டர்கள் நிலை, அடக்குமுறை யைச் செயல்படுத்த அரசு இயற்றிய சட்டங்கள், இராணுவச்

செலவுகள், அரசு ஊழியர்ளின் அடாதபோக்கு என்பன போன்ற செய்திகள் பற்பல வகைகளில் எடுத்துக்காட்டப்படுகின்றன. காந்தியடிகளின் பல கட்டுரைகள் மொழிபெயர்த்து வெளியிடப் பட்டிருக்கின்றன.

உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது கைது செய்யப் பெற்று, இடர் மிகு சிறையில் வருந்திய தொண்டர்களின் எண்ணிக்கை இலட்சத்தையும் தாண்டிவிட்டதை 'லக்ஷம் பேர் விருந்தினர்கள்' என்று தலைப்பிட்டுச் சுதந்திரச் சங்கு இதழில் (தொகுதி 2, இதழ் 95, 12-12-31, ப.8) செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. காந்தி - இர்வின் ஒப்பந்தப்படி அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்பது மிகவும் வலியுறுத்தப்பட்டபோதும் அது நடை முறைப்படுத்தப்படவில்லை. அரசின் இச்செயலைக் கண்டித்த சுதந்திரச்சங்கு இதழாசிரியர்கள், 'எங்கள் நாட்டில் பிறந்து எங்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக, எங்களோடு சிறைப்பட்டு, அங்கு எங்களோடு வாழ்ந்திருந்த அநேகர் இன்னும் விடுவிக்கப் பட வில்லை.... ஒன்று அவர்களையாவது வெளியே கொண்டுவர வேண்டும்; அல்லது நாங்களாவது உள்ளே போக வேண்டும். அதுதான் நியாயம்'[12] என்று முழங்குகின்றனர்.

சென்னை மாகாணத்தில் மக்களின் குரலாக ஒலித்த சுதந்திரச் சங்கு, இந்தியா போன்ற இதழ்கள் மோட்டார் பேருந்துகள் வழியாகப் பல இடங்களுக்கு அனுப்பப்பட்டன. சங்கு இதழ்களின் சீரிய பணி கண்டு அஞ்சிய காவல்துறை அலுவலர் ஒருவர் ஸ்ரீவைகுண்டம் ஏரல் கிராமத்தில் செய்தி பரவலைத் தடுக்க முனைந்தார். ஏரல் கிராமத்தில் சுதந்திரச்சங்கு இதழ் நுழையக் கூடாதென்றும், சங்கு இதழை வைத்துக்கொண்டிருக்கும் பயணி களையும் தம் ஊர்தியில் ஓட்டுநர் ஏற்றிக்கொள்ளக் கூடாதென்றும் தடையிட்டார். இச்செயலைக் கண்டு சங்கு,

> இங்குப் போலீஸ் புலிக்கு நம்முடைய அனுதாபத்தைக் காட்ட விரும்புகிறோம். பாவம் தலையிழந்திருக்கிறது! இவரை இவ்வாறு அமுல் நடத்தச் சொல்லி மேலதிகாரிகள் சொன்ன தாகவும் தெரியவில்லை. அப்படியிருக்க இந்தப் புலி தாவுவ தற்குக் காரணமென்ன? மூளை தடுமாற்றம்! அதிகாரப் பித்தம்! இவைகளே காரணம் ஆகலாம். இந்தப் புலி உறுமுவதால் ஏரலுக்குப் பிரதிகள் போகாமலிக்கின்றனவா?[13]

எனக் கேலி பேசுகிறது. காவல் துறையின் அடக்குமுறைக்குச் சிறி தும் அஞ்சாத இக் காலணா இதழின் செயல் வியக்கத்தக்கது.

தான் கூறிய வழிகளிலெல்லாம் நடந்து, சட்டமறுப்பு இயக்கத் தொண்டர்களைப் பல்வகையிலும் துன்புறுத்தி, ஒத்துழைப்பு நல்கிய காவல் துறையினர் மற்றும் பிற துறை ஊழியர்களுக்கு அரசு பல பட்டங்கள் வழங்கியதையும், சென்னை அரசாங்கம் பல துறையினர்க்கும் சேர்த்து ரூ. 58,326/- 'சன்மானம்' வழங்கியதையும் சுட்டிக்காட்டி மக்களை விழிப்புறச் செய்தது சங்கு இதழ் (இதழ் 25, 27.6.31. ப.5). இந்தியருக்கு வெளிநாட்டுப் பொருட்களின் மீதுள்ள கண்மூடித்தனமான விருப்பத்தால் கோடிக் கணக்கில் இந்தியாவின் செல்வம் பல்வேறு நாடுகளுக்குச் செல்வதைப் புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்து மக்களை எச்சரித்தது இவ்விதழ்.

அந்நியத் துணிக்கடை மறியல், கள்ளுக்கடை மறியலில் ஈடுபடும் தொண்டர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், செயல்பட வேண்டிய முறைமைகள், எதிர்கொண்ட சிக்கல்கள் என்று பல செய்திகளைச் சுதந்திரச் சங்கு எடுத்துக்காட்டுகின்றது. அந்நியத் துணி, ஆலைத்துணி, கதர்த்துணி ஆகியவை பற்றிய பல நுணுக்கமான செய்திகள் சங்கு இதழில் காணப்படுகின்றன. 'தென்னாட்டில் திருக்கோயில் விக்ரகங்கள் ஆலைத் துணியையும், அன்னியத் துணியையும் அணிந்துகொண்டு ஊர்வலம் வருகின் றன. இந்தப் பாபத்துணியை அணிந்த விக்ரகங்களில் கடவுள் வசிக்கவே மாட்டார் என்பது எமது அபிப்பிராயம். இதையுணர்ந்த தஞ்சை தேவஸ்தான_கமிட்டியார் இனி கோவில்களில் கதர்த் துணியையே உபயோகிக்க வேண்டுமெனத் தீர்மானித்து விட்டார்கள். இந்தத் தீர்மானத்தை இதர ஜில்லா தேவஸ்தானங்களும் பின்பற்றினால் தெய்வ கடாக்ஷம் கிடைக்கும்.'[14] என்று கூறுகிறது. தொன்றுதொட்டு வரும் பழக்கவழக்கங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட ஆலயங்களில் மாற்றமெனில் அந்நியத்துணி மறியலின் தாக்கத்தையும், கதரின் மேன்மையையும் குறித்த இயக்கம் வெற்றி பெற்றது என உறுதியாகச் சொல்லலாம்.

கதர் வளர்ச்சியில் சங்கு இதழாசிரியர்கட்கு இருந்த ஆர்வத்தை, 'நமது 'சங்கு' சமாசாரப் பத்திரிக்கை அல்ல. அது பிரச்சாரத்திற்காகவே வாழ்ந்து வருகின்றது. இத்தனை காலமாக அது செய்து வந்திருக்கும் பிரசாரங்களில் முக்கியமானது கதர்ப் பிரசாரம். வெறும் புகழ்மொழிக்காகச் 'சங்கு' வேலை செய்து வரவில்லை. நமது வாசகர்களின் மனதை மாற்றுவதற்குக் கூடச் சங்குக்குச் சக்தி இல்லையாயின் அது இதுவரை உழைத்தது

அவ்வளவும் வீணென்றே கூற வேண்டும்...இந்த வருடம் தீபாவளி யில் தமிழகத்தில் எல்லாக் கதர்க்கடைகளும் காலியாக வேண்டும். எங்கே பார்ப்போம்! அதுதான் நீங்கள் நம்மீது வைத்துள்ள அன்பிற்கு அறிகுறியாகும்!...'[15] என்று உரிமையோடு மக்களை ஊக்க மூட்டி விற்பனை பெருக ஒத்துழைத்ததால் தெளிவாய் அறியலாம்.

அன்னை கஸ்தூரிபா அணிந்தது போன்ற கதர்ப்புடவை தமக்கும் வேண்டுமென வில்லிங்டன் சீமாட்டி வேண்டியது காசிபூர் ராணி விமலாதேவியின் கதர் ஈடுபாடு போன்ற அரிய செய்திகளைச் சுதந்திரச் சங்கு வழி உணர முடிகின்றது. கதர் உற்பத்தி தொடர்பானவற்றில் இந்தியாவில் தமிழகமே முன்னணியில் இருந்ததையும், கதர் விற்பனையிலும் அதன் சாதனை பெரியது என்பதும் சங்கு உரைக்கும் (இதழ் 45, 12-8-31, ப.3) செய்திகளாகும்.

கள்கடை மறியலில் ஏற்படும் இன்னல்கள், மரக்குத்தகைகளில் நடக்கும் மோசடிகள் விற்பனைக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு, திருட்டுக்கள் விற்பனை, கள் கடை ஏல மறியல், அன்னிய மது வகைகள் இறக்குமதி முதலிய பல செய்திகள் குறித்துச் சுதந்திரச் சங்கு வீரமுடன் தகவல் வெளியிட்டிருக்கிறது. கள் கடை மறியலால் துன்புற்று, தொழில் இழந்து வருந்திய இந்திய மக்களை வெல்லம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுமாறு மாற்று வழியுரைத்து வழி நடத்துகிறது. சங்கு (இதழ் 40, 1-8-31, ப. 3). இறைவனுக்குக் கள்ளைப் படைத்து வழிபடும் முறை மக்களிடம் பரவலாக இருப்பதைக் கண்டித்து,

> தெய்வத்திற்கும் கள் வேண்டுமா? அதற்கும் போதை உண்டாகுமா? எந்தத் தெய்வத்திற்கும் கள்ளைப் படைக்க வேண்டிய அவசியமில்லை. ...ஈயும், எறும்பும் விழுந்து செத்த, புளித்த நாற்றக் கள்ளை வைத்துக் கும்பிட வெட்கப்பட வேண்டும் அல்லவா? குலதெய்வத்திற்குக் கள்ளைப் படைத்து அதற்கு அவமானம் விளைவிக்கும் பேர்வழிகளுக்குத் தெய்வ பக்தியே இல்லையென்றும், நரகத்தில் நம்பிக்கையற்றவர்களென்றும் சொல்ல வேண்டியிருக்கிறது... கள்ளை வைத்துத் தெய்வத்தைக் கும்பிடாதே ! கள்ளை விற்றுச் சாமிக்குப் பூசை போடாதே ! இரண்டும் மகாபாவமான செயல்கள்.[16]

என்ற பகுதிவழி சுதந்திரச் சங்கு சுட்டிக்காட்டி மக்களை எச்சரிக்கின்றது.

தீண்டாமைக் கொடுமை எத்தகைய முறையில் ஆழமாகப் பரவியிருந்ததென்பதையும், தீண்டாமை உணர்வு நீங்க நடை

முறையில் பாடுபட்ட காந்தி சுப்பண்ண கவுண்டர் ஊராரால் ஒதுக் கப்பட்டதும், கிருபா ஆசிரமத்தைச் சேர்ந்த குர்ஜாலிக்கு அச்சகம் வைக்க அனுமதி மறுக்கப்பட்டதும் -இது போன்ற பல செய்திகள் படிப்போரைப் பதறச் செய்யும் வண்ணம் இருப்பதைச் சங்கு உரைக்கிறது. சங்கு தன்னைப் போலவே விடுதலை இயக்கத்துக் குத் தொண்டு புரிய வந்த 'காந்தி', 'வீரபாரதி' இதழ்களை 'நமது சகோதரர்கள்' எனக் கூறி வாழ்த்துகிறது. சென்னை மகாஜன சபை சார்பில் நடக்கவிருந்த சுதேசிக் கண்காட்சியில் விதேசிப்பொருளோ, விளம்பரமோ இடம்பெறக் கூடாதெனப் போர்க்கொடி உயர்த்தி வெற்றி கண்டது இவ்விதழின் செல்வாக்குக்குச் சான்றாய் அமை கின்றது. மேலும் இந்திய தேசியக் கொடி பற்றி நடந்த பல செய்தி களை நமக்கு உரைக்கும் சுதந்திரச் சங்கு, கொடி அமைப்பில் மாற்றம் கூடாது என்பதை,

> கொடி என்பது ஆடை ஆபரணமல்ல. கந்தைத் துணியல்ல. நம் உள்ளக்கிடக்கையின் அறிகுறி கொடி; நம்முடைய சுதந்திரப் போருக்கு உணர்ச்சி ஊட்டுவது கொடி; ஊக்கமூட்டுவது கொடி. அதை மாற்றுவதென்பது ஒத்துக்கொள்ளக் கூடாத விஷயமாகும்.

என அறுதியிட்டு (இதழ் 15, 30-5-31, ப. 1-2) உரைக்கின்றது.

சுதந்திரச்சங்கு இந்தியத் தொழிலாளர்களின் வேலை பாது காப்பின்மை நிலை குறித்துப் பல இதழ்களில் பேசுகின்றது. ஆண்டு தோறும் லட்சக்கணக்கான ரூபாய்க்கு இறக்குமதி செய்யும் காகிதத்தை உருவாக்க இந்தியாவிலேயே காகிதத் தொழிற்சாலை கள் பல நிறுவப்பட வேண்டும் என்று (இதழ் 42, 5-8-31, ப. 8) அறிவுறுத்துகிறது. ஒவ்வொரு தமிழனும் தன் வருவாயில் காலணா வையேனும் ஒதுக்கித் தானம் செய்து பெரிய கைத்தொழில் நிறு வனங்களை உருவாக்கவேண்டுமெனச் (இதழ் 39,29-7-31, ப.8) சங்கு விண்ணப்பிக்கின்றது. சிறையில் துன்புறும் நிலைதாண்டி வெளிவந்த தேசியத் தொண்டர்களுக்குக் கடை, தொழிற்சாலை போன்றவற்றில் வேலை கிடைப்பதிலிருக்கும் துன்பத்தைச் சுட்டிக் காட்டிய சங்கு செல்வச்சீமான்கள் ஒவ்வொருவரும் ஒரு தேசத் தொண் டனை யாவது காப்பாற்றுவதாய்ச் சபதமேற்று அத்தகையோர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டுமென அறிவுரை கூறு கிறது (இதழ் 5, 25-4-31, ப.1,2). அரசு அறிவிக்கும் தொடர் விடு முறைகளால் நாட்டுப் பொருளாதார நிலை பாதிக்கப்படுவதையும் (இதழ் 64) ; பாரதி இதழ் (57 ஆவது இதழ்) வெளியிட்டமையும்;

இதழில் கருத்துப் படங்கள் வெளியிடும் கருத்துப் பாங்கையும்; 2-10-31 இதழைக் காந்தி அனுபந்த இதழாய் வெளியிட்டமையை யும், லண்டன் சென்ற மகாத்மா ஜார்ஜ் மன்னர், அறிஞர் ஈன்ஸ்டின், நடிகர் சார்லி சாப்ளின், மேடம் மாண்டிசரி, பேரறிஞர் பெர்னாட்ஷா ஆகியோரைச் சந்தித்ததையும் சங்கு நன்கு விளக்குகிறது. பொதுக் கூட்டங்களைத் திறமையாகக் கலைக்கத் தீயோர் கையாளும் கல் வீசுதல், பட்டாசு வெடி வைத்தல், பொடி தூவுதல், மாடுகளைக் கூட்டத்தில் விடுதல் ஆகிய பல உத்திகளைக் கடைப் பிடிப்பதைக் கேலி செய்து, அதை அறுபத்து ஐந்தாவது கலையாகச் சங்கு வருணிக்கிறது (இதழ் 75). 'சத்யாக்கிரகச் செய்திகள்' எனும் பகுதி சட்ட மறுப்புப் போரின் செய்திகளை எல்லா இதழ்களிலும் உணர்த்துகிறது.

தொகுதி 3

இடைக்காலத்தில் ஏற்பட்ட தடைக்குப் பின் ஏறத்தாழ எட்டு மாதங்கள் கழித்து 12-9-32 முதல் 3-8-33 வரை வெளியான 130 இதழ்களும் அடுத்த கட்ட விடுதலை இயக்கச் செய்திகளை நமக்கு உரைக்கின்றன. இவற்றுள் 19 இதழ்கள் வாரமிரு முறை யாகவும், ஏனையன வார மும்முறை இதழாகவும் வெளிவந்தவை. இத்தொகுதி இதழ்கள் அனைத்திலும் முதல் பக்கத்தில் நாட்டு நடப்பைச் சித்திரிக்கும் கருத்துப்படங்கள் தக்க தலைப்புகளுடன் இடம்பெற்று மெருகூட்டுகின்றன.

மூன்றாம் தொகுதி இதழ்களில் தீண்டாமை ஒழிப்பு நீங்க மேற்கொண்ட பல முயற்சிகள், ஆலய நுழைவு மசோதா, அண்ண லின் அரிசனத் தொண்டுப் பணிகள், அவர் மேற்கொண்ட உண்ணா நோன்பு நிலைகள், இந்திய மிதவாதிகள் போக்கு, கதர் வளர்ச்சி, கள்கடை மற்றும் அந்நியத் துணிக்கடை மறியல், நாட்டின் பொரு ளாதாரச் சூழ்நிலை வெளிப்பாடுகள், தீண்டப்படா தோர் நிலை, தனித்தொகுதி எதிர்ப்புப்போர், இந்தியப் பகுதிகளில் நடைபெற்ற அரிசன ஆலய நுழைவுச் செய்திகள், புனா உடன் படிக்கை, மூன் றாவது வட்ட மேசை பற்றியன, வெள்ளையறிக்கை, காந்தியடி களின் நிர்மாணப் பணிகள் பற்றிய செய்திகள் ஆகியன மிகுதியும் இடம்பெற்றுள்ளன.

மூன்றாம் தொகுதி இதழ்களில் 'காங்கிரஸ் பத்திரிகை -காந்தி யின் உபதேசங்கள்' என்ற அடிகளில்லாமல், 'சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே- இதைத் தரணிக்கெல்லாமெடுத்து ஓது வோமே' என்ற பாரதி பாடல் வரிகள் காணப்படுகின்றன. 'பாரத

நாட்டில் காந்தியப் பற்று எங்கும் ஒரே இருளாக இருக்கிறது. எங்கும் இருள்! காரிருள்! பேரிருள்! தமிழ்த்தாயே! தமிழர்களே! இந்த இருளின் நடுவில் உங்களுக்குத் தொண்டு புரிவதற்காக உங்கள் குழந்தை 'சங்கு' ஓடி வருகின்றது. அதை வாரியணைத்து மடியிலிருத்தி ஆசி கூறுங்கள்!

துர்ப்பாக்கிய நிலையிலுள்ள இந்த நாட்டுக்குத் தொண்டு செய்வதைவிடச் சங்குக்கு முக்தியும், மோக்ஷமும் உண்டோ?' என முதல் இதழிலேயே 'மீண்டும் வந்தேன்' என்ற தலையங்கப் பகுதியில் உரைக்கின்றது.

அரிசன சேரிகளைத் தூய்மை செய்தல், அரிசனப் பிள்ளைகளுக்கு அறிவு புகட்டுதல், அவர்தம் உடல் நலம் பேணுதல், தூய வாழ்வு வாழ அறிவுறுத்தி வருதல், விழா நாட்களில் அரிசனக் குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் உடை வழங்குதல், அனைத்துத் தரப்பு மக்களுடனும் வேறுபாடின்றிப் பழக அவர்களை வற்புறுத்தல், ஆலய நுழைவுக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய பல நிலைகளில் அரிசனத் தொண்டு நடைபெற்றதைச் சங்கு இதழ்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. நகர்ப்புறங்களில் மட்டுமின்றி, கிராமப் பகுதிகளிலும் அரிசன மக்கள் துன்புறுத்தப்படாமல் பார்த்துக் கொள்ளுதல், பொதுக்கிணறு மற்றும் குளம், சாலை ஆகியவற்றைப் பயன்படுத்த உரிமை வழங்குதல் ஆகியன இத்தொண்டின் தலையாய பணியாக வலியுறுத்தப்பட்டதை இதழ்வழி உணரலாம்.

எரவாடாவில் அண்ணல் ஏற்ற உண்ணாநோன்பைச் சங்கு மிகச் சிறப்பாக வருணிக்கிறது.

> மனித ஜன்மத்தோடு பசிபிறந்தது. ஆனால் அந்தப் பசியுணர்ச்சியையும் வெறுத்து மகாத்மா இன்று தவநிலையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவரது ஆன்ம வலிமைதான் என்னே? ஆனால் அவரது தளர்ந்த உடல் எவ்வளவு நாளைக்கு அவர் உயிரோடு ஒட்டிக் கொண்டிருக்குமோ? திவிலை திவிலையாக அவர் நாடி குறைந்து, துளித்துளியாக அவரது உணர்ச்சிகுன்றி, கொஞ்சம் கொஞ்சமாக அவரது உயிர் ஊசலாடத் தொடங்குமே! நாம் என்ன செய்வது? இவ்வளவு நான் நம்மால் தாழ்த்தப்பட்டு அவதியுற்று வந்த நமது ஏழைச் சகோதரர்களைக் கை தூக்கி விடுவதற்கு நாமனைவரும் முயலவேண்டும். வேலை செய்ய வேண்டும். அதுதான் மகாத்மாஜியின் உயிருக்கு இன்பம் விளைவிப்பது.[17]

என உணர்ச்சிப்பெருக்குடன் மக்களைத் தூண்டுகிறது.

உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டையும் முதலெழுத்தாக வைத்துத் தொடங்கும் பன்னிரு அமைப்புகளைத் தாக்கும் 'திப்புவின் அகராதி'பகுதி (இதழ் 10,13-10 - 32, ப.1) நகைச்சுவையை உண்டாக்கக் கூடியதாயிருக்கிறது. எம். எஸ். எம். தொழிலாளர் நிதிக்காக மக்கள் அளித்த நிதியைச் சங்கு இதழ் விரிவாகப் பல இதழ்களில் வெளியிட்டிருக்கிறது. வட்டமேசை மாநாடுகளைக் கிண்டல் செய்து, 'வட்டமேஜைக் கோழி இட்ட முதல் முட்டை அழுகல் முட்டை; பின் இரண்டாவது முட்டையினின்று அடக்கு முறை வேதாளம் தோன்றி இந்தியத் தலைவர்களைச் சிறையில் அடைத்துப் பூட்டிற்று. 3ஆவது வட்ட மேஜையின் பயன் என்ன வாகும் ?' என 'கோழியின் மூன்றாவது முட்டை' என்ற தலைப்பில் வெளியிடுகின்றது சங்கு. சுதந்திரச் சங்கின் 24-11-32 தேதியிட்ட 23ஆவது இதழில் அரிசன மக்களைக் கோயிலில் அனுமதித்தல் பற்றிய தீர்ப்பை வாசகர் உரைக்கும் வண்ணம் படிவம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி 8-12-32 வரை வந்த படிவங்கள் மூலம் சங்கு வாசகர்களில் 11502 பேர் ஆலய நுழைவை ஆதரித்தும், 155 பேர் மறுத்தும், 292 பேர் தவறாக வாக்கிட்டும் உள்ள செய்தி வழி அண்ணல் வழியில் ஆலய நுழைவுப் போர் பெற்ற வெற்றி நன்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.[18] 'இங்கிலாந்தில் காந்தி விஜயம் ' என்ற நூல் சித்தூர் கல்வித்துறை அலுவலரால் தடை செய்யப்பட்ட செயலைக் கண்டித்துக் 'காந்தி புத்தகத்துக்குத் தடை' (இதழ் 40, 2-1-33) என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது சுதந்திரச்சங்கு.

சுதந்திரச்சங்கு அலுவலகத்திற்கு வருகை தந்த சீனப் பத்திரிகையாசிரியர் பற்றிய செய்தியை வெளியிட்டு, 'சீன நாட்டில் ஒரு காந்தி தோன்ற வேண்டும்' என்ற அவர்தம் விருப்பத்தை எடுத்துக் காட்டுகின்றது. அதே இதழிலியே தமிழகம் வந்த கஸ்தூரிபாய் காந்திக்குச் சுதந்திரச் சங்கு நிறுவனத்தினர் அளித்த வரவேற்புப் பத்திரமும் இடம்பெற்றிருக்கின்றது. 29-11-32 அன்று சங்கு காரியாலய அரிசன சேவா சங்கத்தினர்,

> தாயே தங்கள் வரவு நல் வரவாகுக!
>
> தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள காரியத்தில் பூர்ணமான வெற்றி பெறுவீர்களாக !
>
> பாரத நாட்டிலேயே தென்னாட்டில்தான் தீண்டாமை, பாராமை முதலிய கொடுமைகள் தலை விரித்தாடுகின்றன. இந்தத் தீய வழக்கங்களை ஒழித்துப்போட சமயம், அணுகி விட்டது.

மகாத்மாவின் தபோ அக்னி எரியத் தொடங்கி விட்டது. தங்க ளுடைய பாததுளியும் தமிழகத்தில் பட்டு விட்டது, நாங்களும் உழைக்கத் தயாராகி விட்டோம். தாயே! என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமென்று உத்தரவிடுகின்றீர்களோ அவ்வளவை யும் செய்ய நாங்கள் தயாரென்று தமிழர்கள் சார்பாகத் தெரிவித் துக் கொள்கிறோம். (இதழ் 26, 1-12-32)

என்று உறுதிமொழி அளித்ததையும், தம் போக்கிற்கு முழுஒத்து ழைப்பு நல்கும் பண்புடையோர் தமிழ் மக்கள் என்பதையும் உணர்த் திய தன்மை போற்றற்குரியது.

மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்த பற்றுடைய சனாதனிகளைத் தாக்கி மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், குருவாயூர் ஆலயம் போன்ற வற்றில் அனைத்து மக்களும் இறைவழிபாடு நிகழ்த்த வேண்டு மெனச் சங்கு அறிவுறுத்துகிறது.

ஒவ்வொரு மாதமும் 30ஆம் தேதி அரிசன தினம் கொண்டாட வேண்டுமென்றும், மக்கள் மனம் மாசின்றி விளங்க வேண்டுமென் றும் சுதந்திரச் சங்கு விண்ணப்பிக்கின்றது. நமது 'கிளிஞ்சல் குவி யல்', 'பொறுக்கு மணிகள்,' 'நமது குறிப்புகள்', 'பொறுக்கிய புஷ்பங்கள்' போன்ற பகுதிகள் இக்காலகட்ட அரசியல் நிலை, அரிசனத் தொண்டின் பன்முகப் பரிமாணம் ஆகியன பற்றிய துண் டுச் செய்திகளைக் கொண்டிருக்கின்றன. 'சுதேசமித்திரன்', 'தமிழ் நாடு' இதழ்களின் இடையே ஏற்பட்ட கருத்து மோதலைச் 'சுதேச மித்திரன் - தமிழ்நாடு லடாய் !' எனக்குறித்துச் (இதழ் 24, 25-3-33, ப. 3) சங்கு இதழ் விமரிசிக்கின்றது. 'சண்டைச் சொற் களைப் பொறிக்கும் பத்திகளுக்குப் பதிலாகச் சர்க்கார் பிரசாத மாகிய வெள்ளைக்கடுதாசியைப் பற்றி ஆராய்ந்து இன்னும் நீண்ட, தலையங்கங்களை இவர்கள் எழுதியிருந்தாலாவது கொஞ்சம் பிரயோசனமுண்டு' என அவ்விரு இதழ்களையும் கண்டிக்கிறது.

'நமது ஆசிரியர் சங்கு ஸுப்ரஹ்மணியம் அவர்களும், எஸ். கணேசன் அவர்களும் மகாத்மாவைத் தரிசிக்க எரவாடா சென்றனர்' என்ற குறிப்போடு வெளிவந்த 13.3.33 (20ஆவது இதழ்) இதழுக்குபின் 18.3.33 அன்று வெளிவந்த 21ஆவது இதழில் 'எரவாடா கோயிலில் ' எனும் தலைப்பில் அமைந்த வருணனைக் கட்டுரை சிறப்புடையது. இதுகுறித்து,

கண்டோம்! கலி தீர்ந்தோம்! எரவாடாவில் எழுந்தருளியிருக்கும் தெய்வீக புருஷனைக் காணும் பாக்கியமும், பேசும் பாக்கியமும்

> கிடைத்தன... காசி, மெக்கா, செருசலேம் யாவும் எங்கட்கு இப் போது எரவாடாவேயன்றோ?... மகாத்மாஜியுடனிருந்த அம் மூன்றரை மணி நேரத்துக்கு முன்பு ஸ்வர்கமும், இந்திர லோகமும் எம்மாத்திரம்!..... சரீரம் தளர்ந்திருப்பினும் மகாத்மா வின் தியாக பத்தியோ பன்மடங்கு அதிகமாகி யிருக்கிறது... 'சங்கு' காரியாலயத்தைப் பற்றி விவரமாக விசாரித்ததோடு மகாத்மாஜியின் ஆசியும் எமக்கு கிடைத்தது.

என விவரித்துரைக்கின்றனர் (இதழ் 25 ப. 3-4). இவ்வாறு அண்ணல் பற்றியும் அவர்தம் இயக்கம் குறித்த பல்வேறு செய்திக ளையும் சங்கு இதழின் மூன்றாம் தொகுதி தருகிறது.

தொகுதி 4

24.11.33. முதல் 8.6.34 வரை வெளியான 28 சங்கு வார இதழ்களும் தமிழ் இலக்கிய உலகுக்கு அரிய பணி செய்தன எனில் மிகையாகாது. இத்தொகுதியில் இலக்கிய வடிவங்கள், வகைப் பாடுகள், புத்திலக்கிய முயற்சிகளோடு விடுதலைப் போராட்டச் செய்திகளும் இடம்பெற்று இருக்கின்றன. நாட்டுக்கு உழைக்கும் தொண்டர் படையில் ஓர் ஊழியனாகப் பணிபுரிய விரும்பும் சங்கு, 'தமிழ்த் தொண்டுதான் மூச்சு. தாய்நாட்டுப் பணியே மோட்சம்' என வார இதழ் நிலைபெற்றபோது தன்னை அறிமுகப்படுத்திக் கொள் கிறது. இலக்கிய இதழான சுதந்திரச் சங்கின் தோற்றம் பற்றியும், சூழல் பற்றியும் விளக்கும் திரு. சி.சு. செல்லப்பா அவர்கள், 'தேசி யம் முழங்கிய 'சங்கு' நின்றதும் 'சங்கு மணி' பேனாவின் உக்கிரம் வெளிப்பட வாய்ப்பில்லாமல் ஒருசில மாதங்கள் கழிந்தன. அப்போது தான் 17.9.33இல் வ.ரா.வை ஆசிரியராகக் கொண்டு 'மணிக் கொடி' வாரப் பத்திரிகை வெளிவந்தது. அதன் வருகை சங்கு ஸுப்ரஹ்மணியனைப் பாதித்திருக்கக் கூடும். தேசிய எழுத்துப் பணிக்கு மாற்றாகத் தமிழிலக்கியப் பணிக்குத் தன் பேனாவைப் பயன்படுத்தும் ஒரு உத்வேகம் ஏற்பட்டிருக்கக்கூடும்'[19] எனக் கருத்துத் தெரிவிக்கிறார்.

நல்லதொரு பல்சுவை இலக்கிய இதழுக்கேற்ற பல கூறு களையும் இலக்கியச் சங்கு கொண்டிருக்கின்றது. தலையங்கம், ஆசிரியர் பேச்சு, கவிதை, சிறுகதை, கட்டுரை, பெரியோர் வாழ்க்கை வரலாறு, யாத்ரா மார்க்கம் (விடுதலை பற்றியது), பருந்துப் பார்வை, பாலர் பகுதி, கருத்துப்படம், கேலிச்சித்திரம், நகைச் சுவைத் துணுக்குகள், தமிழ்ப்பாடல் திறனாய்வு என்பன போன்ற

பகுதிகள் சிறப்புடையன. இத்தனை இலக்கியக் கூறுகளின் அடியொலியாக விடுதலையுணர்வே விளங்கியது என்பதை நன்கு உணர முடிகின்றது. 'பருந்துப் பார்வை' எனும் பகுதியிலுள்ள செய்திகள் விளம்பரங்களில் தமிழ் படும்பாட்டை உணர்த்தி நகைப்பூட்டுவன!

சான்று:

'சாப்பிடும் தட்டுகள் வேண்டுமா?' (விளம்பரம்)
'தட்டு தின்றுவிட்டால் நமக்குச் சோறேது?'
(இதழ் 1,24-11-33, ப.3)
'சிரிப்பே சிறந்த ஔஷதம்' - சினிமா விளம்பரம்
'மருந்துக்குப் பதிலாக இனி வைத்தியர்கள்
விகடப் பத்திரிகைகளை நோயாளிமீது பிரயோகிக்கலாமோ ?
(இதழ் 3,8-12-33, ப. 24)

தமிழ் இசை வளர வேண்டும்; நாடகக்கலை சிறக்க வேண்டும்; திறனாய்வு வளர வேண்டும்; சிறுகதையின் தொடக்கம், முடிவு எவ்வாறமைய வேண்டும்; சித்திரக் கலை எவ்வாறு வளர வேண்டும் என்பன போன்ற பல செய்திகள் தமிழ் வளர்ச்சி வேண்டி மக்களைச் செயல்படத் தூண்டுகின்றன. அரசியல், பொருளியல், அறிவியல், கலை எனப் பல கோணங்களில் 150க்கும் மேற்பட்ட கட்டுரைகளும், 30க்கும் மேற்பட்ட கவிதைகளும், 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், 28 இதழ்களுள் இடம் பெற்றன என அறியும் போது சங்கின் இலக்கிய நாட்டம் தெற்றென விளங்கும்.

சி.சு. செல்லப்பா, ந. பிச்ச மூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.ரா., தி.ஜ.ர., வ.ரா. போன்ற பலரின் சிறுகதைகள் இதழுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன. இசை நூல் ஒன்று எளிய தமிழில் தோன்ற வேண்டுமென்றும், வாய்ப்பாட்டுக் கலைஞர்கள் தெலுங்கு மொழிக் கீர்த்தனைகளோடு நில்லாது கோபாலகிருஷ்ண பாரதியார், சுப்பராம ஐயர், அருணாசலக் கவிராயர், மகாகவி பாரதியார் போன்றோர் பாடல்களையும் கச்சேரிகளில் பாடவேண்டுமென்றும் இலக்கிய இதழான சங்கு வலியுறுத்துகின்றது. அக்கால கட்டத்தில் புகழ் பெற்ற இசைக் கலைஞர்கள் பற்றிய விமர்சனக் கட்டுரைகள் சுதந்திரச் சங்கு இலக்கிய இதழில் இடம் பெற்றிருக்கின்றன.

இலக்கிய இதழானபோதும் அரசின் கூரிய பார்வையில் சிக்கி இடர்ப்படும் சூழலைச் சங்கு இதழ் சந்திக்க வேண்டியிருப்பதைச் சுட்டிக் காட்டிய ஆசிரியர் இதழ் நிற்கவேண்டிய நெருக்கடியை

எடுத்துக்காட்டி 'இனியும் இதழ்ப்பணி தொடரும்' என உரைக்கின் றார். 1934 ஜூன் மாத முதல் வாரத்தில் நின்ற சங்கு இதழ் 'மீண்டும் ஜூலை மாதம் மும்முறை இதழாக வெளிவரும்' என்ற எதிர்பார்ப்பை மக்களுக்குத் தந்து விட்டே நின்றிருக்கின்றது.

சங்கு இதழின் தலைப்புகள் : சுதந்திரச் சங்கில் இடம் பெற்ற செய்திகளுக்குச் சுவையான தலைப்புகள் தரப்பட்டிருக் கின்றன. 'வட்டமேசை பொம்மலாட்டம்', 'தோலிருக்கச் சுளை விழுங்கி', 'ஐயோ ! ரவுண்டே மாண்டாயோ?', 'இம்மென்றால் 6 மாதம்', 'மிக்சர்களுக்குத் தண்டனை', 'தர்பாரில் கள் நாற்றம்', 'அன்னிய மீன் தித்திக்குமா?' 'இஸ்பேட் ஜாக்கியை இழுத்துப் போடு', 'தின்று கொழுக்கும் வெள்ளை யானைகள்', 'அச்சுச்சட்டம் குட்டி போட்டதோ?', 'மலையேறி தெய்வங்கள்', 'வட்டத்தின் வால் நீட்டம்', 'பிச்சன் காசில் குப்பனுக்கு ஷோக்கு', 'புண்ணியத் திற்குப் பிராயச் சித்தமா?', 'ஸர்வம் சந்தேக மயம்', 'பிரிட்டனே! காசைக் கீழே வை', 'வில்லிங்டன் அம்மா...' என்பன அவற்றுள் குறிப்பிடத் தக்கன. எளிய நடையில் மக்கள் உணரும் வகையில் அமைந்த செய்தித்தலைப்புகள் சங்கு இதழுக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

நிறைவுரை

அவ்வப்போது மறைந்தும், மீண்டும் மறுபிறவி எடுத்தும் வெளி வந்த சுதந்திரச்சங்கு இதழ் தமிழ் இதழியல் உலகுக்கும், இலக்கிய உலகுக்கும் கணிசமான பங்களிப்பைத் தந்துள்ளது என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

விடுதலை இயக்கம் வளர சங்கு செய்த தொண்டு அளப் பரியது என்பதும் ஈண்டு குறிக்கத்தக்கது. சங்கு இதழ் முதல் தொகுதி, இதழ் 23இல் வெளிவந்த,

> சுதந்திரச் சங்கு...இந்தச் சிறு வயதிற்குள் செய்துள்ள சேவையே அதன் பெயரைத் தமிழ்மொழி உள்ளவும் நிரந்தரமாக வாழும்படி செய்யும். லட்சக்கணக்கான மாந்தருக்கு அது தேசீய உணர்ச்சியைப் புகட்டி வந்த கதை பொன்னெழுத்தால் வரைய வேண்டியதாகும்.

என்னும் கருத்து முற்றிலும் பொருத்தமானது. 'மூர்த்தி சிறிதானா லும் கீர்த்தி பெரிது' என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்கச் சுதந்திரச் சங்கு இதழ் தமிழுக்கு ஆற்றிய நற்பணி அளவிடற்கரியது.

குறிப்புகள்

1. சுதந்திரச் சங்கு, தொகுதி 1, இதழ்1, 26-1-30, ப.1
2. மறைந்த திரு. 'சங்கு'கணேசன் கட்டுரையாளரிடம் நேரடி உரையாடலின்போது 1989இல் உரைத்தது
3. Who's who of Freedom Fighters (Tamil Nadu), Vol. II, p.328
4. செல்லப்பா, சி.சு., மறுமலர்ச்சியும் சுதந்திரச் சங்கும், 'சுவை' புத்தகங்கள் இரண்டு, ப. 105
5. இராமசாமிப் புலவர், நாள் கிழமை திங்கள் இதழ் விளக்க வரிசை, 'சுதந்திரச் சங்கு', ப. 5
6. சிரஞ்சீவி, தமிழ் வளர்ந்த வரலாறு, ப. 16
7. சம்பந்தன், மா.சு., தமிழ்ப்பத்திரிகைகள், தமிழ் இதழ்கள், கல்கி அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், 1973-74, பக். 13-14
8. சாமி, அ.மா, தமிழ் இதழ்கள் - தோற்றம் வளர்ச்சி, ப. 229
9. சு.ச., தொகுதி 1, இதழ் 1, 26-1-30, ப. 2-3
10. சு.ச., தொகுதி 1, இதழ் 17, 9-4-30, ப. 2
11. சு.ச., தொகுதி 1, இதழ் 23, 30-4-30, ப. 1-2
12. சு.ச., தொகுதி 2, இதழ் 11,16-5-31, ப.8
13. சு.ச., தொகுதி 2, இதழ் 75, 24-10-31, 'சங்கு' மீது யுத்தம், ப. 2
14. சு.ச., தொகுதி 2, இதழ் 55, 5-9-31, ப. 8
15. சு.ச., தொகுதி 2, இதழ் 78, 3-10-31, ப.1-2
16. சு.ச., தொகுதி 2, இதழ் 33, 15-7-31, ப. 7
17. சு.ச., தொகுதி 3, இதழ் 4, 22-9-32, ப. 2
18. சு.ச., தொகுதி 3, இதழ் 30, 10-12-32, ப. 7
19. செல்லப்பா, சி.சு., மறுமலர்ச்சியும் சுதந்திரச்சங்கும், 'சுவை' புத்தகங்கள் 2, ப. 105

காந்தி

1931

‘உலகெலாம் புகழும் நலனெலாம் அமைந்த
காந்திமா முனிவன் ஏந்திய கொள்கையை
நிலனெலாம் பரப்புதற் கவனற் பெயரால்
பத்திரிகை யொன்றை எத்திசையும் செலுத்தும்
சொக்கலிங்கத் தூயோய்’

– வ. உ. சி.

"GANDHI"

டெலிபோன் நெ. 3663.

விலை காலணா

காந்தி


ஞாயிறு, புதன், வெள்ளி
வெளிவரும்

வருட சந்தா ரூ. 4½

ஆசிரியர் :
டி. எஸ். சொக்கலிங்கம்

மலர் 4. | சென்னை | 1932 நவம்பர் 11வ ஆங்கீரஸவருஷ ஐப்பசிமீ 26வ | வெள்ளி | இதழ் 15

சிபி ராஜன் காந்தி



தஞ்ச மடைந்த பின்
கை விடலாமோ?

தாயும் தன் குழந்தையை
தள்ளிட போமோ?—பாரதி

குருவாயூர் என்ற புறா சிபி ராஜன் காந்தியிடம் தஞ்ச மடைந்திருக்கிறது. சிபி ராஜன் தன் உயிரை கொடுத்தாவது புறாவை ரட்சிப்பாரே யொழிய விடப் போவதில்லை கழுகே, நீ முன் போல சிபி ராஜன் சதையை கேட்பாயோ?

காந்தி

பா. மதிவாணன்

உலகெலாம் புகழும் நலனெலாம் அமைந்த
காந்திமா முனிவன் ஏந்திய கொள்கையை
நிலனெலாம் பரப்புதற் கவனற் பெயரால்
பத்திரிகை யொன்றை எத்திசையும் செலுத்தும்
சொக்க லிங்கத் தூயோய்....[1]

என வ.உ. சிதம்பரனார் செய்யுள் வடிவிலான தம் சுயசரிதையின் இரண்டாம் பாகத்தை, 'காந்தி' இதழில் எழுதியபோது, அதன் ஆசிரியர் தென்காசி சங்கரலிங்கம் பிள்ளை சொக்கலிங்கத்தைப் (1899-1966) போற்றித்தொடங்கினார்.

தனிப்பெரும் சாதனை புரிந்த தமிழ் இதழியலாளருள் ஒருவர் சொக்கலிங்கம். இவர் பா. வரதராஜுலு நாயுடுவின் 'தமிழ்நாடு' இதழில் துணையாசிரியராகப் பணியிலமர்ந்து (1923-1925), 'தமிழ்நாடு' அலுவலகம் சேலத்திலிருந்து சென்னைக்கு மாற்றப் பட்ட போது (1925), அதன் ஆசிரியர் பொறுப்பேற்றார்.

வரதராஜுலு நாயுடு, 1930இல் காந்தியடிகள் தொடங்கிய உப்புச் சத்தியாக்கிரகம் எனும் சட்ட மறுப்பியக்கத்தைக் கண்டித் தார். இது குறித்துக் கருத்து வேறுபட்ட சொக்கலிங்கம் 'தமிழ் நாடு' இதழினின்றும் விலகி, 1931 ஏப்ரல் 14 ஆம் நாள் காலணா இதழாக, 'காந்தி'[2]யைத் தொடங்கினார். பின்பு 'தினமணி' (1934-1943), 'தினசரி' (1944-1952), 'ஜனயுகம்' (1953-1955), 'பாரதம்' (1959), 'நவசக்தி' (1960-1966) ஆகிய ஏடுகளில்

ஆசிரியராயிருந்தார்; இதழியலாளர் பலரை உருவாக்கி வளர்த்து விட்டார்.

அரசியலில் செல்வாக்கும், படைப்பிலக்கியவாதிகளிடையே நன்மதிப்பும் ஒருசேரப் பெற்றிருந்தவர் சொக்கலிங்கம். 'மணிக்கொடி' பற்றிச் சொல்ல முன்வருபவர்கள், அது நடப்பதற்கு உத்வேகம் தந்த சொக்கலிங்கத்தின் பங்கை இருட்டடித்து விட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளார் க.நா. சுப்ரமண்யம்.[3]

மணிக்கொடி தொடங்கவும் தொடரவும் சொக்கலிங்கத்தின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கதென்பதை உணர, காந்தி இதழ் பற்றிய அறிவும் அவசியம் என்பதை இங்குச் சுட்டிக் காட்ட வேண்டும்.

காந்தி இதழ் பற்றி இதழியல், அரசியல் தொடர்பான நூல்களில் ஆங்காங்குச் சுருக்கமாகவோ சற்று விரிவாகவோ குறிப்பிடப்பட்டிருப்பினும், பெரும்பாலானவை குழப்பம் தருவனவாகவும், தகவற்பிழை[illegible]வாகவுமே காணப்படுகின்றன. காந்தி இதழ்களின் முழுமையான தொகுப்புக் காணக்கிடைக்காததும், வெளிவந்தபோதே காலமுறை (Periodicity) மாறியும் பிறழ்ந்தும் இடையிடை நின்றும் தடுமாறியதுமே இதற்குக் காரணங்களாகும்.

காந்தி வார இதழ்களுள் 146 தனியிதழ்களும், மாதம் ஒருமுறை, இருமுறை, மும்முறை என வந்த மலர்களுள் 25 மலர்களும் என் பார்வைக்குக் கிடைத்தன. ஆங்கில அரசின் ஆளுநருக்காகக் கமுக்கமாகத் தயாரிக்கப்பட்ட சென்னை மாகாணத்துச் செய்தித்தாள் அறிக்கைகளைத் (Madras Presidency Native News Paper reports of 1931 - 1935) துணைமைச் சான்றுகளாகக் கொண்டு, காந்தி இதழ்கள் வந்துள்ள நாட்களையும், ஓரளவு அவற்றின் உள்ளடக்கத்தையும் அறிய முடிந்தது. இவை கொண்டு காந்தி இதழைச் சுருக்கமாகவும் முழுமையாகவும் அறிமுகப்படுத்த முயல்கிறது இக்கட்டுரை.

1931 ஏப்ரல் 14, செவ்வாய்க் கிழமையன்று காந்தியின் முதல் இதழ் வெளியாயிற்று; 17 ஆம் நாள் வெள்ளியன்று இரண்டாம் இதழ் வந்தது;[4] பின்பு வாரந்தோறும் திங்கள், வியாழக் கிழமைகளில் வாரமிரு முறையாகத் தொடர்ந்தது; 1931 செப்டம்பர் 12, சனிக்கிழமை முதல் வாரம் மும்முறையாகத் திங்கள், வியாழன், சனிக்கிழமைகளில் வெளிவரத் தொடங்கி, 1932

ஜனவரி 4, திங்கட்கிழமை முடியக் காலமுறை பேணியது. அன்று (4.1.1932) காந்தியடிகள் சிறைப்பட்டதால், மறுநாளே - செவ் வாயன்று - முறைமாறி ஓர் இதழும் வியாழனன்று முறைப்படி ஓர் இதழும் (7.1.1932) வெளிவந்தன. இவ்விதழில் இந்திய தேசியக் காங்கிரஸ் செயற்குழுத் தீர்மானம் இடம்பெற்றதோடு, 'உயிர் போனாலும் உடைமைகளையெல்லாம் இழந்தாலும், காரி யக் கமிட்டித் தீர்மானங்களை அப்படியே நிறைவேற்றி வைக்க வேண்டுமென்பது மகாத்மாவின் கட்டளை'[5] எனச் சட்ட மறுப்பியக் கம் தூண்டப்பட்டது.

சட்டத்திற்கு முரணான செய்தி வெளியிட்டதற்காக ஐந்நூறு ரூபாய் காப்புத் தொகையும், ஐம்பது ரூபாய் தண்டத்தொகையும் செலுத்தவேண்டுமென, காந்தி உரிமையாளர் சொக்கலிங்கத்திற்கு ஆணையிடப்பட்டது; மறுத்ததால் ஏழு மாதக் கடுங்காவல் தண் டனை விதிக்கப்பட்டது.

14.4.1931 முதல் 7.1.1932 முடியவுள்ள காலத்தை, காந்தி இதழின் முதற்கால கட்டமாகக் கொள்ளலாம்.

சொக்கலிங்கம் விடுதலையானபின் காப்புத் தொகையாக ரூ.500 செலுத்தி, மீண்டும், காந்தி இதழ் நடத்த இசைவு பெற் றார். 1932 அக்டோபர் 9 முதல் 1933 ஆகஸ்ட் 4 முடிய ஞாயிறு, புதன், வெள்ளிக் கிழமைகளில், வாரம் மும்முறையாகக் காந்தி வெளிவந்தது.

1933 ஆகஸ்ட் முதல்நாள் காந்தியடிகள் சிறைப்பட்டதால், ஆகஸ்ட் 4 ஆம் நாள் இதழுடன் காந்தி நிறுத்தப்பட்டது. ஆனால், ஆகஸ்ட் 23 ஆம் நாள் காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டதால் 27.8.1933முதல் ஞாயிறு, வியாழக்கிழமைகளில் வெளிவரத் தொட ங்கியதெனினும் ஐந்து இதழ்களோடு நிறுத்தப்பட்டு விட்டது.

> காந்தி மலரை மாதம் மும்முறையாகக் கொண்டு வர ஏற்பாடு நடப்பதாலும், 'மணிக்கொடி' பத்திரிகையையும் 'தமிழ்நாடு' அச்சாபீசிலேயே அச்சிட வேண்டியதிருப்பதாலும் 'காந்தி' வாரம் இருமுறையை அச்சிடுவது 'தமிழ்நாடு' அச்சாபீசாருக்கு சிரமமாயிருப்பதால், வாரம் இருமுறையை இந்தப் பிரதியோடு தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம். 17 வரும் 'மணிக் கொடியை' எதிர்பாருங்கள்.[6]

என்று அவ்விதழில் அறிவிக்கப்பட்டது. பின்னர் காந்தி வார இதழ் வரவேயில்லை.

1933 ஏப்ரலிலேயே காந்தி மலர் தொடங்கப்பெற்றது. தொடர்ந்து தமிழ் மாதந்தோறும் ஒரு மலர் வீதம் ஆறுமலர்கள் வெளிவந்தன. இவை தனியே விலையிடப் பெற்றிருப்பினும் 'Gandhi' (Monthly Supplement) - என வார இதழின் இணைப்பு களாகவே குறிக்கப்பட்டன. வார இதழ் நின்றபின் இக்குறிப்பு நீக்கப்பட்டது.

1933 ஆகஸ்ட் 20 முதல் அக்டோபர் 20 முடிய மாதம் இரண்டு, நவம்பர் 5 முதல் 25 வரை மூன்று, டிசம்பர் 10, 17 ஆம் நாட்களில் இரண்டு, 1934 ஜனவரியில் ஒன்று, பிப்ரவரி 12 முதல் ஜூன் 25 முடிய மாதம் இரண்டு, ஜூலைக்கும், செப்டம் பருக்குமிடையில் ஒன்றுமட்டும், அக்டோபர் அல்லது நவம்பரில் ஒன்று, டிசம்பரில் ஒன்று எனக் காலமுறை மாறியும் பிறழ்ந்தும் வந்த காந்தி மலர் பின்னர் மணிக்கொடியோடு இணைந்துவிட்டது.

இவற்றுக்கிடையில் 1933 டிசம்பர் 20 முதல் 1934 ஜனவரி 31 முடிய 43 நாட்கள் மட்டும் தனியே, காந்தி நாளேடும் நடத்தப்பட்டது.[7] நாளேடு எதுவும் பார்வைக்குக் கிட்டவில்லை.

காந்தி வாரஇதழ், மாத மலர், நாளேடு யாவற்றையும் உள் ளடக்கி 9.10.1932 முதல் 15.12.1934 முடியவுள்ள காலத்தை இரண்டாம் கால கட்டமாகக் கொள்ளலாம்.

முதற்கால கட்டத்தில் காந்தி வார இதழாக மட்டுமே வெளி வந்ததால் குறிப்பிடத்தக்க நிதிநிலைச் சிக்கல் இருந்ததாகத் தெரியவில்லை. இரண்டாம் கட்டத்தில் வார இதழுக்கும், நாளேட் டிற்கும் தனித்தனியே காப்புத் தொகை செலுத்த நேர்ந்ததாலும், காலமுறை தடுமாற்றம் முதலியவற்றால் போதிய சந்தாதாரர்கள் இன்மையாலும் நிதி நெருக்கடியோடுதான் காந்தி வெளிவந்தது.

பி.எஸ். ராமையாவின் அனுபவமொன்றை அவரே பதிவு செய் துள்ளார். அவரெழுதிய 'எனது மாஜி கணவர்' எனும் சிறுகதை பரிசு பெற்ற கதை என்ற அறிவிப்போடு காந்தி மலரில் வெளியாயிற்று.

> பரிசுத்தொகை பத்தே ரூபாய் தான். ஆனால் கதை வெளிவந்து ஒரு மாதமாகியும் எனக்குப் பரிசுப் பணம் கிடைக்கவில்லை. அதைப் பற்றிக் கேட்டுவிடுவது என்று நினைத்து நான் அந்த அலுவலகத்துக்குப் போனபோது அந்தப் பத்திரிகையின் நிதிநிலைமை பற்றி திடுக்கிடும் தகவலைத் தற்செயலாக அறிய நேர்ந்தது... சிவராமன் தனது மனைவி அணிந்திருந்த

> தங்கச் சங்கிலியில் மூன்று வடங்களைப் பிரித்து விற்றுப் பத்திரிகை வெளிவரப் பணம் கொண்டு வந்ததை நான் தற் செயலாக அறியநேர்ந்தது.[8]

என்றெழுதியுள்ளார் பி.எஸ். ராமையா. இந்த அலுவலகம் இயங் கிய வீட்டின் பின்கட்டில் ஏ.என்.சிவராமன் தம் குடும்பத்துடன் வாழ்ந்து வந்ததாகவும், மாடிப் பகுதியில் காந்தி இதழ் ஓவியர் கே. ஆர். சர்மா குடியிருந்ததாகவும் குறிப்பிடுகிறார் பி.எஸ். ராமையா.[9]

காந்தி மலரின் விலை இரண்டணாவாக இருப்பதைக் குறைக்க வேண்டுமென்று நண்பர்களும், முகவர்களும் கோரிய போது,

> தற்காலமுள்ள பணநெருக்கடியால் விலையைக் குறைக்க வேண் டியது அவசியமென்றே நாமும் நினைக்கின்றோம்... அடுத்த பத்திரிகை முதல் விலையை ஒரு அணாவாகக் குறைக்கத் தீர்மானித்திருக்கிறோம். 'காந்தி' மலர் இப்பொழுது லாபத்தில் நடந்து வரவில்லையென்பதையும், விலையைக் குறைத்தால், இன்னும் அதிக நஷ்டமாகுமென்பதையும் நண்பர்கள் அறிவார் கள். ஆனால் ஒரு வழி இருக்கிறது. தற்காலம் 'காந்தி' மலர் வாங்கிப் படிக்கும் நண்பர்கள் ஒவ்வொருவரும், இரண்டிரண்டு நண்பர்கள் வீதம் புதிதாக 'காந்தி' மலர் வாங்கும்படியோ, சந்தா தாரராகச் சேரும்படியோ செய்வார்களானால் கஷ்டமில்லாமல் நடத்திக் கொண்டு போகமுடியும்.[10]

என்று வேண்டுகோள் விடப்பட்டது. இவ்வாறு இலாப நோக்கின்றி, படிப்போரின் வாங்கும் ஆற்றலையும் கருத்தில் கொண்டு கொள் கைப் பிடிப்போடு 'காந்தி' யை நடத்த முய்னறார் சொக்கலிங்கம்.

1934 செப்டம்பர் 11ஆம் நாள் தொடங்கப் பெற்ற 'தினமணி' நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்றதால் 'காந்தி' மலர்ப் பணி களில் சொக்கலிங்கத்தால் முழுமையாக ஈடுபட இயல வில்லை. பொருள் முட்டுப்பாடு காரணமாக 1935 தொடக்கத்தில் 'மணிக் கொடி'யும் தடுமாறியது. கு. சீனிவாசன் இசைவுடன் மணிக்கொடி யைத் தொடர்ந்து நடத்த விரும்பினார், பி.எஸ். ராமையா. சொக்க லிங்கம், காந்தி சந்தாதாரர்களும் மணிக் கொடிக்குக் கிடைக்கும் வகையில் 'இத்துடன் காந்தி இணைக்கப் பட்டிருக்கிறது' எனும் குறிப்பை மணிக்கொடி இதழ்தோறும் இடம்பெறச் செய்து காந் தியை மணிக்கொடியுடன் இணைத்தார்.

1933 ஆகஸ்ட் 20 முதல் 1934 பிப்ரவரி 12 முடிய வெளி வந்த பன்னிரண்டு மலர்கள் மட்டும் அளவில் சிறியன (20 x 14

செ.மீ). பிற காந்தி வார இதழ்கள், மலர்கள் யாவும் 24 x 18 செ.மீ. அளவுடையன. ஓர் இதழ் அல்லது மலரில் முற்றுப் பெறா மல் தொகுதி தோறும் தொடர்ச்சியாகப் பக்க எண்கள் இடப் பட்டன. அடுத்த தொகுதி தொடங்கும் போது ஒன்றிலிருந்து பக்க எண்ணிடப்பட்டது.

வார இதழ்கள் பொதுவாக எட்டுப்பக்கங்களையும், பெரிய அளவிலான மலர்கள் ஐம்பத்தாறு பக்கங்களையும், சிறிய மலர்கள் எண்பது பக்கங்களையும் கொண்டிருந்தன.

வார இதழ்ச் செய்தித் தலைப்புகள் யாவும் எதுகை, மோனை, உருவகம், முரண், பழமொழிகள் முதலியவற்றோடு உணர்ச்சிமிக்க னவாகவும், விறுவிறுப்பாகவும் அமைந்தன. செய்திகளின் பின் னணிகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள் கொண்ட மாதமலரில் தலைப்புகள் உள்ளடக்கத்தை நேரடியாகவும் உணர்ச்சி சாராமலும் சுட்டுவனவாகவே பெரிதும் அமைந்தன.

பார்வைக்குக் கிடைத்த முதற்கட்ட இதழ்களில் முகப்புக் கருத்துப்படங்கள் தவிர, வேறு படங்கள்இல்லை. இரண்டாம் கட்ட வார இதழ்களில் முகப்புக் கருத்துப் படங்களோடு உள்ளே விளம்பரங்களுக்கான படங்கள் மிகுதியாகவுள்ளன. சில இதழ் களில் தொடர்ந்து பின்னட்டையிலும் கருத்துப்படங்கள் இடம் பெற்றன.

மலர்கள் 'ஏராளமான படங்களோடு வெளிவரும்'[11] என்று முன்னரே அறிவிக்கப்பட்டது. கட்டுரைகள், சிறுகதைகள், புதிர்ப் படங்கள், போட்டிகள் யாவற்றிலும் படங்கள் இடம்பெற்றன.

முதற்கட்ட இதழ்களில் வட்டமேசை மாநாட்டிற்குச் சென் றிருந்த காந்தியடிகளோடு தொடர்புடைய முழுப்பக்கப் புகைப் படங்கள் ஐந்து இடம் பெற்றிருந்தன.[12] பின்னர் எப்போதும் முழுப் பக்கப் புகைப் படங்கள் இடம்பெறவில்லை. இரண்டாம் கட்ட மலர்களில் அரசியல் தலைவர்களின் புகைப்படங்கள் எண்ணிக் கையில் முதல் இடம் பெற்றன. அடுத்து அறிவியல் செய்தி சார்ந்த புகைப்படங்கள் அச்சிடப்பெற்றன.

சொக்கலிங்கத்திற்குக் கருத்துப்படங்களில் தனி ஈடுபாடிருந் தது. அவரே 'தேவிதாசன்' எனும் புனைபெயரில் 'கார்ட்டூன் வர லாறு', 'விகடப்படம் என்றால் என்ன?' எனும் கட்டுரைகளை எழுதி யுள்ளார்.[13]

> தமிழ் பத்திரிகைகளில் கூடார்த்தப் படங்கள் அதிகமாய் பிர சுரிப்பது காலணா பத்திரிகைகள் என்றே சொல்ல வேண்டும். இந்த பத்திரிகைகளும் ஆரம்பத்தில் இந்த முறையை கைக் கொள்ளவில்லை.... முதலில் 'காந்தி' தான் கூடார்த்தப் படங்கள் பிரசுரிக்க முன்வந்தது. ஜனங்களுக்கு இப்படங்களில் கவர்ச்சி ஏற்படவே, மற்ற காலணா பத்திரிகைகளும் முதல் பக்கத்தில் ஒவ்வொரு கூடார்த்தப் படம் பிரசுரிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது.... தற்சமயம் 'காந்தி' பத்திரிகை முதல் பக்கம் ஒன்றும், கடைசிப்பக்கம் ஒன்றுமாக இரண்டு படங்கள் பிர சுரித்து வருகிறது.[14]

என, காந்தி கருத்துப்பட வெளியீட்டில் காலணா இதழ்களுக்கு முன்னோடியாயமைந்ததை அவரே விளக்கியுள்ளார். காந்தி கருத் துப் பட ஓவியர் கே.ஆர்.சர்மா ஆவார்.

காந்தி மலர்களில் சொந்தக் கருத்துப் படங்களை விட, மேனாட்டு இதழ்களிலிருந்து எடுத்தாளப் பெற்றவை மிகுதி. காந்தி மலரின் முதலிரு தொகுதிகள் கருத்துப்படக் களஞ்சியங் களாகவே விளங்கின.

> 'காந்தி'யில் முதல் பக்கத்தில் வெளியாகும் கார்ட்டூன்கள் என்ற கூடார்த்தப் படங்கள் உலகப் பிரசித்தியடைந்து வருகின்றன என்பதை நண்பர்களுக்கு சந்தோஷத்தோடு அறிவித்துக் கொள்கிறோம். லண்டனில் 'ரெவியூ ஆப் ரெவியூஸ்' என்ற ஒரு சிறந்த மாத சஞ்சிகை நடக்கிறது... அந்த பத்திரிகை போகாத இடம் உலகில் எதுவும் கிடையாது. பாரபட்ச மில்லாமல் இருதரப்பு வாதங்களையும் எடுத்துக் காட்டுவதால் அப்பத்திரி கைக்கு எங்கும் நல்ல செல்வாக்குண்டு. பூலோகத்திலுள்ள சகலநாட்டு பத்திரிகைகளிலும் வெளியாகும் கூடார்த்தப் படங்களில் சிறந்தவைகளைப் பொறுக்கி எடுத்து ஒவ்வொரு மாதமும் அது பிரசுரித்து வருகிறது. இப்பேர்ப்பட்ட 'ரெவியூ ஆப் ரெவியூஸ்' 'காந்தி'யில் பிரசுரமாகும் கூடார்த்தப் படங்களில் சிலவற்றைப் பிரசுரிக்க ஆரம்பித்திருக்கிறது.[15]

என, காந்தி கருத்துப்படங்களின் உலகளாவிய பரவல் மகிழ்ச்சி யோடு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

வ.உ. சிதம்பரனாரின் செய்யுள் வடிவிலான சுயசரிதையின் இரண்டாம் பாகம் காந்தியில் வெளிவந்தது. முதற்கட்டத்தில் பார் வைக்குக் கிடைத்த 53 இதழ்களில் 21 பாடல்,செய்யுள்களும் இரண்டாம் கட்டத்தின் 92 வார இதழ்களில் ஒரு பாடலும் இடம்

பெற்றுள்ளன. மலர்களிலும் பாடல், செய்யுள்கள் எண்ணிக்கை குறைவே.

வார இதழ்களில் சிறுகதைகள்இல்லை. பார்வைக்குக் கிடைத்த 25 மலர்களில் 62 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.

முதற்கட்ட இதழ்களில் தொடர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை. 'மின்வெட்டு', 'செய்தித்திரட்டு', 'மணித் திரள்', 'உலகப்போக்கு' ஆகிய தலைப்புகளில் செய்தித் துணுக் குகள் இடம்பெற்று வந்தன. இவையனைத்தும் ஒரே இதழில் இடம்பெறா; இடையிடை விடுபட்டுத் தொடரும்.

இரண்டாம் கட்ட வார இதழ்களில் மேற்குறித்தவற்றோடு 'கண்ணோட்டம்' எனும் செய்தித் தொகுப்பும், 'ஊர் வதந்தி' எனும் ஊகச் செய்தித் துணுக்குகளும் அவ்வப்போது வெளிவந்தன. இத் தொடர் துணுக்குப் பகுதிகளுள் மிகுதியாக வெளிவந்தது 'மின் வெட்டு' என்பதேயாகும்.

காந்தி மலரில் 'உங்களுக்குத் தெரியுமா?' (பொது அறிவுத் துணுக்குகள்), 'ஆசிரியர் பதில்' (வினா-விடைப் பகுதி), 'படார் சாமி கடிதங்கள்' (எள்ளலான வெளிப்படைக் கடிதங்கள்), 'ரிப் போர்ட்டர் டயரி' (நீதி, நிருவாகம், காவல் துறைச் செய்திகள்), 'நண்பர்கள் சிரிப்பு, (வாசகர்களின் நகைச்சுவைத் துணுக்குகள்) முதலிய தொடர் துணுக்குப் பகுதிகள் இடம் பெற்றன.

ஒரே தலைப்பில், கட்டுரையளவில், அவ்வவ் விதழில் முற்றுப் பெறும் வகையிலான தொடர்கள் சில, இரண்டாம் கட்ட வார இதழ்களில் காணப்படுகின்றன. 'ஸ்ரீமான் தொந்தி கணபதி யார்' எனும் புனைமாந்தரைக் கொண்டு அறிவியல், பன்னாட்டுத் தலைவர்கள் வரலாறு, பொது அறிவுச் செய்திகள் போன்ற வற்றைத் தந்துள்ளார் 'தேவிதாசன்' (சொக்கலிங்கம்) 'போட்டிப் பந்தயங்களும் சில இதழ்களில் இடம் பெற்றன.

காந்தி மலர்களில்தாம் இவ்வகைத் தொடர்கள் மிகுதி. 'நமது தபால்' எனும் பகுதியில் இதழாசிரியர் வாசகர்களுக்குச் சில விளக் கங்களைக் கூறிவந்தார். 'கடலூர் ஜெயில் மணிகள்' எனும் தலைப் பிலான தொடரை,

> கடலூர் ஜெயிலில் தமிழர், தெலுங்கர், கன்னடியர், குடகுக்காரர், ஒரியர், மலையாளத்தார் ஆகிய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பலபாஷை பேசுகிறவர்களும் வசித்து வந்தனர். இவர்களில்

> தமிழரை மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளுவோம். நான் கடலூரில் இருந்த காலமாகிய சென்ற வருஷம் மார்ச்சு மாதம் முதல் ஜூலை மாதம் கடைசி வரை அங்கு கூடிப்பழகிய தமிழர் களின் குணாதிசயங்களை நான்கண்டபடி எழுதப் போகிறேன்.[16]

என அறிமுகப்படுத்தினார் சொக்கலிங்கம்.

வ.ரா., இரண்டாம் தொகுதி, காந்தி மலர்தோறும் ஈ.வெ.ரா., பா. வரதராஜுலு நாயுடு, ராஜாஜி, திரு.வி.க., ஜார்ஜ் ஜோசப், வ.உ.சி., தி.சே.சௌ.ராஜன், சத்தியமூர்த்தி ஆகியோர் பற்றித் தனித்தனிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கே.சீனிவாசன், சில மலர்களில், தொடர்ந்து காமத்துப்பாலி லிருந்து ஒரு திருக்குறளைத் தேர்ந்தெடுத்து, ஆங்கில மொழி பெயர்ப்புடன், எளிய நடையில் விளக்கி வந்தார். இக் குறள் காட்சியை முழுப்பக்க ஓவியமாகத் தீட்டிவந்தார் கே.ஆர்.சர்மா.

'புதிர்ப்படங்கள்', 'மந்திரவாதியின் தந்திரம்', 'வானரம்' (சிறு வர் பகுதி), 'மகாத்மா வாழ்க்கை', 'மனித யந்திரம்' முதலியனவும் இத்தகைய தொடர் பகுதிகளாகும். வாசகர்களும் எழுத்தாளர்களும் கலந்து கொண்ட 'கண்டதும் காதல்' என்ற விவாதம் ஐந்து மலர் களில் தொடர்ந்தது.

ஓரிதழில் தொடங்கித் தொடர்ந்து பல இதழ்களில் வெளி வந்து முற்றுப் பெறும் நெடிய தொடர் கட்டுரை எதுவும் முதற்கட்ட காந்தியில் காணப்பெறவில்லை.

இரண்டாம் கட்டத்தின் முதல் இதழிலேயே காந்தி மகாத்மா எனும் மொழிபெயர்ப்புத் தொடர் கட்டுரை தொடங்கி, ஐம்பதிற்கு மேற்பட்ட இதழ்களில் தொடர்ந்தது. அடுத்துத் 'தேவிதாசன்' (சொக்கலிங்கம்), 'திருட்டு ராஸ்புட்டீன்' எனும் தொடரை,

> காலணா காவியை துணியில் நனைத்துக் கட்டிக் கொண்டு, தெருவில் கிடக்கும் சாம்பலை உடம்பு முழுவதும் பூசி, உருத் திராட்ச சரங்களை கழுத்தில் கட்டிக் கொண்டு, ஒரு நீள தாடி யையும் வளர்த்து விட்டால், உடனே அவரை சாட்சாத் கடவுளே வந்துவிட்டாரென்று நினைப்பதும் அவர் முற்றும் கடந்த முனிவ ரென்று நினைத்து அவரிடம் தங்கள் குடும்ப ரசசியங்களைச் சொல்லுவதும், நமது ஜனங்களுக்கு வெகு சகஜம். இம்மாதிரி நிலைமையே யுத்தத்திற்கு முன்பு ரஷியா தேசத்தில் இருந்து வந்தது. ரஷியர்களும் இந்தியர் மாதிரியே மூடநம்பிக்கை

கொண்டிருந்தபடியால், கபட சந்நியாசிகள் பலர் ரஷியாவில் கிளம்பியதும், திருவிளையாடல்கள் புரிந்ததும் ஆச்சரியமல்ல. இவர்களுக்கெல்லாம் தலைவனாய் விளங்கியவன் பெயர் ராஸ்புட்டீன். இவன் ரஷிய ராஜ குடும்பத்தையே தன் வசமாக்கி ஆட்டிவைத்தான். ஜார் மன்னன் வீழ்ச்சிக்கு இவன் செயல்கள் முக்கியமானவை. இவன் கதையை அடுத்த 'காந்தி'யில் ஆரம்பிப்போம்[17]

எனும் அறிமுகத்துடன் தொடங்கினார். காந்தி வார இதழில் இவ் விரு தொடர்கட்டுரைகள் மட்டுமே வெளிவந்தன.

வ.ரா., 'பழனத்தான்' எனும் புனைபெயரில் தொடர்ந்து மூன்று மலர்களில் 'சுப்ரமணிய பாரதியார்' எனும் தொடரை எழுதி வந்தார். பிறகு, பாரதியாரோடு தொடர்புடையவர்களை நேர்கண்டு திரட்டிய தகவல்களின் அடிப்படையில், சொந்த அனுபவங்களையும் சேர்த்துத் தம் பெயரிலேயே 'சுப்பிரமணிய பாரதியார்' என்ற மற்றோரு தொடரையும் எழுதினார்.

காந்தி மலரில் மட்டுமே தொடர்கதைகள் இடம்பெற்றன. தி. சதாசிவத்தின், 'தாலிகட்டினால் கல்யாணமாச்சா?', தேவிதாசனின் (சொக்கலிங்கம்) 'விமலா டைரி', ஸீயல் (சொக்கலிங்கம்) எழுதிய 'விச்வ - மேனகா', புதுமைப்பித்தனின், 'வஸந்தா' ஆகியன தொடர்கதைகளாகும். பின்னைய மூன்றும் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை.

முதற்கட்ட இதழ்களில் விளம்பரங்கள் தாமும், கொள்கைக் கிசைந்தனவாக, 'சுதேசிப் புடவைகள்', 'சுதேசிக் கதர்', 'ஆயுர்வேத பார்மஸி' முதலியன வந்தன.

இரண்டாம் கட்டத்தில், மலர்கள் வெளிவரத் தொடங்கிய போது மலர்களில் மட்டுமன்றி வார இதழ்களிலும் விளம்பரங்கள் மிகுந்தன. இவற்றுள் பல வணிக நோக்கினவாய், காந்தி இதழ்க் கொள்கைக்கு வேறானவையாய் அமைந்துள்ளன.

'காலணா விலையில் 'காந்தி' அரசியல் பத்திரிகையும், இரண்டனா விலையில் 'காந்தி' இலக்கியப் பத்திரிகையும் நடத்தினார்'[18] சொக்கலிங்கம் என்று வார இதழ், மாத மலர் உள்ளடக்க வேறு பாட்டைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் டி.எஸ். சிவக் கொழுந்து.

இந்திய தேசியக் காங்கிரசின் கொள்கைகளையும், காந்தியடிகளின் நடவடிக்கைகளையும் தமிழர்களுக்குத் தெளிவாக விளக்கி, விடுதலைப் போரில் தமிழர் பங்கை மிகுவிப்பதே காந்தி இதழின் அடிப்படை நோக்கமாகும்.[19] முதற்கட்ட இதழ்கள் முழுவதும் காந்தியடிகளின் நடவடிக்கைகளை விளக்கி, அவர் நெறியில் அரசியலைப் பிரச்சாரம் செய்தது காந்தி.

காங்கிரஸ் மிதவாதிகள், சமஸ்தானப் பிரதிநிதிகள், முஸ்லீம் வகுப்புவாதிகள், ஜஸ்டிஸ் கட்சியினர் முதலியோர் இந்திய விடுதலைக்கு முட்டுக்கட்டையிடுவோரென காந்தி விமரிசித்து வந்தது.

இந்திய தேசியக் காங்கிரசின் தமிழகப் பிரிவில் நிலவிய குழு அரசியல் சார்பும் காந்தியில் வெளிப்பட்டது. சொக்கலிங்கம் சி. ராஜகோபாலாச்சாரியாரை ஆதரித்தார். சத்தியமூர்த்தியின் போக்கு அவ்வப்போது விமரிசிக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட இதழ்களில் பிறநாட்டு அரசியல் பற்றியும் காந்தி செய்திகளையும், பார்வைகளையும் முன்வைத்தது. இவ்வகையில் அக்கால, சோவியத் நாடு முதலிடம் பெற்றது. சோவியத் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டச் சாதனை, நிறவேற்றுமையற்ற சமத்துவ நிலை, இங்கிலாந்துப் பெரு நூலகத்தைவிட வளர்ந்துள்ள லெனின் கிராட் நூலகம், உலகப் பொருளாதார மாநாட்டில் சோவியத் அமைச்சர் ஆற்றிய உரையின் தெளிவு, அதனை முழுமையாக ஒலிபரப்ப இங்கிலாந்து அஞ்சியமை முதலியன வார இதழ்களில் இடம்பெற்றன.

சோவியத் பொருளாதார வளர்ச்சி, அதற்கான கடின உழைப்பு, படை வலிமை, கல்வி முறை, சுயவிமரிசனம் செய்து கொள்ளும் முறை, ஸ்டாலின் உறுதி முதலியன மலர்களில் கட்டுரைகளாக வெளிவந்தன.

ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி பற்றியும் செய்திகளும் கட்டுரைகளும் இடம்பெற்றிருப்பினும், அதன் ஆக்கிரமிப்புப் போக்கு விமரிசிக்கப்பட்டது. சோவியத் நாட்டிற்கும் ஜப்பானுக்கும் இடையே போர் மூளும் சூழல் உருவானதைக் கூறவந்த சொக்கலிங்கம்,

> ரஷியா ஜெயித்துவிட்டால் எங்கும் போல்ஷ் விசமாயிருக்கும். ஜப்பான் ஜெயித்து விட்டால் கீழ்நாடு முழுவதிலும் ஜப்பான் ஆதிக்கமும் கொடுமையும் அதிகமாயிருக்கும். இந்த இரண்டு சனியன்களையும் நாம் தடுக்க வேண்டும்[20]

என எச்சரித்திருப்பதிலிருந்து, அவரது அடிப்படை நிலைப்பாடு புலனாகிறது. காந்தி வார இதழ் தோறும் கதர் பற்றிய செய்திகள், கட்டுரைகள், புள்ளிவிவரங்கள், வேண்டுகோள்கள், விளம்பரங் கள் ஒன்றோ சிலவோ இடம் பெற்றன. மலர்களிலும் இப்போக்குத் தொடர்ந்தது.

எந்திரங்களால் விளையும் கேடுகள், கிராமத் தொழிலின் நலன் கள் முதலியன பற்றி, காந்தி விளக்கியது; தொழிற்சங்கப் போராட் டங்களை ஆதரித்தது. உழவுத் தொழிலைப் பொறுத்தவரை, அரசின் வரிவிதிப்புக் கொள்கை, நடுத்தர, சிறு விவசாயிகளைப் பாதிப்பதாகக் குறை கூறும் போக்கே மிகுந்து காணப்படுகிறது. விவசாயக் கூலிகள் பற்றிக் காந்தியில் தகவல்இல்லை.

உலகளாவிய நிலையில் அக்காலத்தில் முதலாளியத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியையும் சோசலிசத்திற்குப் பெருகி வந்த ஆதர வையும் காந்தி வரவேற்றது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டின் முயற்சிகள் சோசலிசக் கொள்கைக்கு இசைந்து காணப்படுவதை, காந்தி சுட்டிக்காட்டியது; வன்முறையின்றி, சோசலிசம் உருவாக வழி கூறிய அமெரிக்க எழுத்தாளர் அப்டன் சின்கிளேரின் கருத்துகளுக்கு இடம் தந்தது.

இரண்டாம் கட்ட வார இதழ்களில் தீண்டாமை எதிர்ப்பு, அரி சனங்களின் ஆலய நுழைவுப் போராட்டச் செய்திகள் காந்தியில் தொடர்ந்து வெளியிடப்பட்டன. குருவாயூர்க்கோயில் நுழைவுப் போராட்டத்தில், காந்தி இதழின் பங்கு கணிசமானது. அரிசனங்கள் சமூக அடிப்படையில் மட்டுமன்றிப் பொருளாதார ரீதியாகவும் அடிமைப்பட்டிருப்பதை ஆய்ந்து வெளிப்படுத்தியது காந்தி.

நீதிக்கட்சியின் தேவையின்மை பற்றி விளக்கும் தலையங்க மொன்றில்,

> ஜஸ்டிஸ் கட்சியால் தமிழ்நாட்டுக்கு ஒரு நன்மையும் ஏற்பட வில்லையென்றோ, அது ஏற்பட்டதே அனாவசிய மென்றோ கருதுவதில் அர்த்தம் கிடையாது. ஜஸ்டிஸ் கட்சியால் சமூகத் துறையில் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல் துறையில் அதிகமான தீமையும் ஏற்பட்டிருக்கிறது... சில உயர்ந்த லக்ஷியங்களைச் சொல்லிக் கொண்டு ஆரம்பமான ஜஸ் டிஸ் கட்சி இப்பொழுது சில தனிப்பட்டவர்களின் சுய நலத்தை சம்பாதித்துக் கொள்ளும் ஓர் கருவியாக மாறிவிட்டது. இது இப்பொழுது சில பணக்காரர்களின் கட்சியாக இருந்து வரு கிறது. பிறப்பினால் ஏற்றத்தாழ்வு என்ற மனப்பான்மையை

> ஒழித்து, பிறப்பின் காரணமாக வசதியோ வசதிக்குறைவோ ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்ற உணர்ச்சியை ஊட்டும் வேலையை ஜஸ்டிஸ் கட்சியாரை விட ஸ்ரீ. ராமசாமி நாயக்கரின் கோஷ்டியார் திறமையாகச் செய்ய முடியும்.[21]

என மதிப்பிட்டார் சொக்கலிங்கம்.

காந்தி மலர் தோறும் அறிவியல் செய்திகளும், கட்டுரைகளும் இடம்பெற்றன. இவற்றுள்ளும் நாட்டுப்பற்று இழையோடியது. ம. சிங்காரவேலு, டி.என். இராமசாமி இருவரும் காந்தி மலரின் குறிப்பிடத்தக்க அறிவியற் கட்டுரையாளர்கள்.

இரண்டாம் கட்டத்தில் காந்தி இதழியல் நெறிகளை நிலைநாட்ட முனைந்தது; குறிப்பாக 'ஆனந்தவிகடன்' அக்காலத்தில் நடத்திய போட்டிப் பந்தயத்தைச் 'சூதாட்டத் தன்மை' கொண்டதெனக் கூறி, அதற்கெதிராக ஓர் இயக்கத்தையே நடத்தியது. இதற்காகவே காந்தி நாளேடு தொடங்கப்பெற்றது.

> வி.பி. வர்த்தகத்தில் மற்றொரு அப்பாவியிடம் போட்டி போடலாம் அல்லது மற்றொருவருக்குப் போட்டியாக 'சரீர மர்ம சாஸ்திரமோ', 'முத்தத்தின் மர்மமோ' வெளியிடலாம்.. தேவதாஸ் காந்தியிடம் தனது சிப்பந்திகளை விட்டு பிரச்சாரம் செய்யச் சொல்லலாம். பேச்சோடு பேச்சாக ஒரு வார்த்தையைச் சொல்லி, அவர் தன் பத்திரிகையைப் பற்றி புகழ்ந்தார் என்று எழுதிக் கொள்ளலாம். ஆங்கிலம் படிக்காதவர்கள் பிரமிக்கும் படியாக ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து விஷயங்களையோ படங்களையோ திருடலாம். பெரிய மனிதர்களுடன் பேசிக் கொண்டிருந்ததாக எழுதிக் கொள்ளலாம். போலீசாரை ஏமாற்ற காங்கிரசை விகடமாய் தூஷிக்கலாம். காங்கிரஸ்காரரை ஏமாற்றப் போலீஸ்காரரை விகடமாய் தூஷிக்கலாம். ஆயிரம் இரண்டாயிரம் என்று பரிசு கொடுப்பதாகச் சொல்லி ஒவ்வொருவரையும் நூறு இருநூறு பிரதிகள் வரை வாங்கும்படி செய்யலாம்.[22]

என உரிமையாளர் முதல் உத்திகள் வரை ஆனந்த விகடனின் அனைத்துக் கூறுகளும் கடுமையாகத் தாக்கப்பட்டன. அப்போது தமிழகத்திற்கு வரவிருந்த காந்தியடிகளின் சொற்பொழிவை, ஆனந்தவிகடன் ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி மொழிபெயர்க்க ஏற்பாடாகியிருந்தது. இதனைக் கடுமையாக விமரிசித்து, கிருஷ்ணமூர்த்தியை அப்பணியிலிருந்து விலக்குவதிலும், காந்தி இதழ் வெற்றி கண்டது. இது உடனடி வெற்றியாகும்.

வ. ரா., கு. சீனிவாசன் முதலியோர் தொடர்பால் இலக்கியத் துறையிலும், தமிழ் மறுமலர்ச்சிப் பணிகளிலும் சொக்கலிங்கத் திற்கு ஆர்வம் ஏற்பட்டது. 1932 மார்ச் முதல் ஜூலை முடிய அவர் கடலூர் சிறையிலிருந்த போது சில திட்டங்களும் உருவாயின.[23] இதன் உடனடி விளைவுகளுள் ஒன்றாகவே 1933 ஏப்ரலில் காந்தி மலர் தொடங்கப்பட்டது. காந்தி மலர் சிறுகதைகளுக்குப் போதிய இடம் தந்தது. புதுமைப்பித்தன், பி.எஸ். ராமையா போன்றோரின் கதைகள் பல வெளிவந்தன.

புதுமைப்பித்தன் இலக்கியச் சுவையின் அடிப்படையை விளக்கியும், நவீனப் படைப்பிலக்கியத்திற்கு ஏற்றது பேச்சு நடையே என வலியுறுத்தியும் எழுதிய கட்டுரைகளும், வ.ரா., தமிழின் நிலையை அலசி ஆராய்ந்து, மொழி வளர்ச்சியில் கவனம் செலுத்தத் தூண்டி எழுதிய கட்டுரையும் குறிப்பிடத்தக்கவை யாகும். நாடகம், நாட்டியம் முதலிய கலைகள் பற்றியும் காந்தி மலரில் கட்டுரைகள் வெளியாயின. 'கந்தர்வன்' எனும் புனை பெயராளர் தமிழ் நாடகம் பற்றிய கட்டுரையொன்றில் ஆண்டி. வி. சுப்பிரமணியத்தை அறிமுகப்படுத்தியிருந்தார்.[24] மொத்தத்தில் கலை இலக்கியம் பற்றிய காந்தி மலர்க் கட்டுரைகளில் மறுமலர்ச் சியை நோக்கிய துடிப்பு இழையோடுவதை உணர முடிகிறது.

'பத்திரிகையுலகில் 'மணிக்கொடி' ஒன்றுடன் மட்டுமே ஒப்பிடத் தக்க புரட்சிகரமான எழுத்தாண்மைக் கொடியாக அவரது 'காந்தி' சில காலம் தமிழகத்தில் வீறுடன் உலவிற்று'[25] என்று போற்றினார் கா. அப்பாதுரை. மணிக்கொடிக்கு இடையூறு நேராவண்ணம் காந்தி வார இதழ் நிறுத்தப்பட்டது பற்றி முன்னரே குறிப்பிடப் பெற்றது.[26] மணிக்கொடியின் முன்னோடியாகத் தொடங்கி, அத னோடு இணையாக வெளிவந்து, மணிக்கொடி தொடரும் பொருட்டு அதனோடு இணைந்தது காந்தி.

குறிப்புகள்

1. மேற்கோளாக : டி.எஸ். சொக்கலிங்கம், எனது முதல் சந்திப்பு, ப. 36
2. காந்தி (வார இதழ், 7.11.1931, ப.392)இல் ஆங் கிலம், தெலுங்கு மொழிகளிலும் காந்தி வெளிவருமென அறிவிக்கப்பெற்றது. தெலுங்கு காந்தி பற்றித் தெரிய வில்லை. 14.12.1931 முதல் கே.எஸ். சுந்தரம் என்ப

வரை ஆசிரியராகக் கொண்டு ஆங்கிலத்தில் காந்தி இதழ் வெளிவரத் தொடங்கியது. 1955 ஆம் ஆண்டில் வி.பி. கோபாலகிருஷ்ணன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு காந்தி எனும் இதழொன்று வந்ததாகத் தெரிகிறது. (மா.சு. சம்பந்தன், தமிழ் இதழியல் வரலாறு, ப.118) இவை தெ.ச. சொக்கலிங்கத்தின் காந்தி எனும் வரையறைக்குட்படாதவை

3. க.நா. சுப்ரமண்யம், இலக்கியச் சாதனையாளர்கள், ப.158

4. Madras Presidency Native Newspaper Report of 1931, pp.527 & 553

5. காந்தி (வார இதழ்), 7.1.1932, ப.202

6. காந்தி (வார இதழ்), 10.9.1933, ப.287

7. Letter from P. Varadarajulu to His Excellency, Lt.Col. the Rt. Hon. Sir George Frederick Stanley, P.C., G.C.I.E., C.M.G., Governor of Madras dt.09.01.1934. G.O.No.168 dt.23.2.34.

8. பி.எஸ். ராமையா, மணிக்கொடி காலம், ப.29

9. மேற்படி, ப.28

10. காந்தி (மலர்), 10.5.1934, ப.302

11. காந்தி (வார இதழ்), 31.5.1933, ப.82; 2.7.1933, ப.125

12. காந்தி (வார இதழ்), 8.10.1931, ப.285; 15.10. 1931, ப.309; 17.10.1931, ப.317; 22.10.1931, ப.333; 17.12.1931, ப.128

13. காந்தி (மலர்), ஏப்ரல்-மே 1933, ப.102-104; ஜுன் 1933, பக்.209-211

14. காந்தி (மலர்), ஏப்ரல்-மே, 1933, ப.103

15. காந்தி (வார இதழ்), 2.8.1933, ப.234

16. காந்தி (மலர்), மே-ஜுன் 1933, ப.142

17. காந்தி (வார இதழ்), 12.7.1933, ப.167

18. டி.எஸ். சிவக்கொழுந்து, 'இந்திய தேசியக் காவலர்', மணிமலர், (பதிப்பாசிரியர்கள்: க.நா. சுப்ரமண்யம் முதலியோர்), ப.63

19. 'Our work is to explain clearly to the Tamilians the principles of the Congress and the actions of Mr. Gandhi

at this important juncture' - `Gandhi, Madras 14th April 1931, Madras Presidency Native Newspaper report of 1931, p.527

20. காந்தி (மலர்), ஏப்ரல் - மே 1933, ப.65

21. காந்தி (மலர்), 25.6.1934, பக்.411-412

22. காந்தி (மலர்), 10.12.1933, ப.700

23. காந்தி (மலர்), 9.7.1933, ப.147; டி.எஸ். சொக்க லிங்கம், எனது முதல் சந்திப்பு, பக்76-77

24. காந்தி (மலர்), 9.7.1933, ப.147

25. கா. அப்பாதுரை, 'தென்பாண்டி நாடுதந்த திருவார் செல்வம்', மணிமலர் (பதிப்பாசிரியர்கள் : க.நா. சுப்ர மண்யம் முதலியோர்), ப.38

26. சான்றெண் விளக்கம் 6-காண்க.

முதன்மைச் சான்றாதாரங்கள்

காந்தி வார, மாத, மாத இருமுறை மலர்கள் (பார்வைக்குக் கிடைத்தவை)

துணைமைச் சான்றாதாரங்கள்

Madras Preseidency Native Newspaper report 1931 - 1934

G.O. No.168, Government of Madras, Public (General) Department, dt.23.2.1934.

நூல்கள்

சம்பந்தன், மா.சு., தமிழ் இதழியல் வரலாறு, தமிழர் பதிப்பகம், சென்னை, 1987

சுப்ரமண்யம், க.நா., ரஹீம். எஸ்.ஏ., கன்னிக்கண்ணன் (பதிப் பாசிரியர்கள்), திரு. டி.எஸ். சொக்கலிங்கம், மணிமலர், மணிவிழாக்கமிட்டி, சென்னை, 1959

சுப்ரமண்யம், க.நா., இலக்கியச் சாதனையாளர்கள், மணிவாசகர் மன்றம், சிதம்பரம், 1985.

சொக்கலிங்கம், டி.எஸ்., எனது முதல் சந்திப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956.

ராமையா, பி. எஸ்., மணிக்கொடி காலம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1980.

மணிக்கொடி

1933

'மணிக்கொடி பற்றிய ஆய்வுகளுள் மிக முக்கியமாகவும் அவசரமாகவும் வேண்டப்படுவது பத்திரிகைத் துறையில் மணிக்கொடி பெறும் முக்கியத்துவம் பற்றியதாகும். முக்கியமாக வ.ரா. காலத்தில் அது எத்தகைய ஒரு ஆக்க இலக்கிய சஞ்சிகையாகவும் அதே வேளையில் கருத்துரை சஞ்சிகையாகவும் நடத்தப் பெற்றது என்பதையும் அந்தக் கருத்துரைகள் எவ்வாறு அரசியல் முதல் கலைகள் வரை பலவற்றை உள்ளடக்கி நின்றன என்பதையும் நன்கு ஆராய்ந்து, இந்த முயற்சி ஏன் தோல்வியுற்றதென்பதையும் விளங்கிக்கொள்ள முனைதல் வேண்டும். இந்தத் தோல்வி பற்றிய ஆய்வு தமிழ்ச் சஞ்சிகைகளின் வாசிப்புப் பற்றிய சமூகவியல் உண்மைகளை வெளிக்கொணரும்.'

— கா. சிவத்தம்பி

"மணிக்கொடி"

(இத்துடன் "காந்தி" இணைக்கப்பட்டிருக்கிறது)

நிர்வாக ஆசிரியர்:
பி. எஸ். ராமையா.

ஆசிரியர்:
கே. ஸ்ரீனிவாசன்

கோடி - 4. மணி - 10. ஜனவரி, 31, 1937. மாத மிருமுறை.

எமனுடன் போட்டி 10
க. ர. சுப்ரமண்யம்

"ஜே! பவானி" 14
சு. குருசாமி பி. ஏ.

ஒரு தேர்தல் கதை 18
கி. ரா.

ஜெயிலில் 26
"கதாரவிகன்"

விஷ கன்னிகை 33
என். சிதம்பரசுப்பிரமணியன்

பொய்யா, புளுகா? 41
மீ. வி. சபரிராஜன்

பிசகு 42
சேது அம்மாள்

பேரின்பம் 46
"சிற்றம்பலம்"

காசுமாலை 49
எஸ். கமலாம்பாள்

வேதாந்தக் கதை 73
"சேட்லூர் அப்பர் ஸ்வாமிகள்"

நிழலும் அதன் கதையும் 75
"ஸஞ்சயன்"

பிசாசு சொன்ன கதை 78
"ரஸப்பிரபா"

"மணிக்கொடி" கதைகளில் வெளியாகும் பெயர்கள் பாத்திரங்கள் எல்லாம் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

"மணிக்கொடி" மாதமிருமுறை.

பிரதி மாதம் 15, 30 தேதிகளில் வெளிவரும்.

வருஷச் சந்தா: உள் நாடு ரூ. 3—0—0. வெளி நாடு ரூ. 4—8—0.

தனிப்பிரதி அணா 2.

மணிக்கொடி

பழ. அதியமான்

தமிழில் புனைகதையின், குறிப்பாக சிறுகதையின் வரலாறு எழுதப்படுவதற்கான புலமை முயற்சிகள் தொடங்கப்பட்டபோது தான் மணிக்கொடி இதழின் தேவை, பின்னாளில் முதன்முதலாக அறியப்பட்டது. இப்புலமை முயற்சியைத் தொடங்கி வைத்தவர் களாக விமர்சகர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோரைக் கருதமுடியும். 'மணிக்கொடியும் சிறுகதையும்', மீண்டும் வந்த மணிக்கொடிக் குழு என்ற தலைப்புகளுடன், கா. சிவத்தம்பி எழுதிய கட்டுரைகள், சிறுகதையின் ஆக்க பரிமாணத்தில் மணிக் கொடியின் தேவையைச் சுட்டியது. இக்கட்டுரைகளில், மணிக் கொடியின் வரலாறு சரியாகத் தரப்படவில்லை என்று கருதிய சி.சு. செல்லப்பா, தமிழ் சிறுகதை பிறக்கிறது என்ற நூலை, ஒரு வகையில் சிவத்தம்பியின் (இக்கட்டுரைகள் அடங்கிய) நூலை மறுதலிக்கும் நோக்குடனேயே எழுதி வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து, மணிக்கொடி பற்றிய வாசகர்களின் கற்பனை மேலும் பரந்து விரிந்தது.

சங்க காலம் பொற்காலம் என்பது போன்ற புதிய பிரமை, மணிக்கொடி குறித்தும் பரவத் தொடங்கிற்று. தீபத்தில், பி.எஸ். இராமையா, மணிக்கொடி காலம் என்ற தொடரையே எழுதி முடிக் கிறார். சிட்டியும் (சிவபாதசுந்தரமும்) மணிக்கொடிக்குப் பொன் விழாக் கொண்டாடி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மணிக் கொடிக்கு எதிர் நிலையில் அன்று இனம் காணப்பட்ட ஆனந்த விகடன் (கல்கி) குழுவினரின் வாரிசுகள் ஆகியோரிடம் அங்கீ காரத்தைப் பெற முயன்றார். புதுமைப்பித்தன், மணிக்கொடியில்

எழுதி விட்டதற்காகவே, அதை முற்போக்கின் மொத்த உருவம் எனக் கருதி, தேவதா விசுவாசத்தோடு வெ.மு. பொதிய வெற்பனும் மணிக்கொடி பொன்விழா மலர் ஒன்றை வெளியிடுகிறார். புதுமைப்பித்தனின் மொத்தக் கதைகளையும் வெளியிட விரும்பிய பிரசுகர்த்தர்களும், மணிக்கொடியைத் தேடி அலைந்தார்கள். நவீன இலக்கியத்தில் 'பிரக்ஞை' பூர்வமாகச் செயல்பட்டவர்கள் எவரைப் பற்றி ஆய்வு செய்தாலும், அவர்கள் மணிக்கொடியோடு ஒரு வகையில் தொடர்புடையவர்களாக இருக்க நேர்ந்ததும், மணிக்கொடி பற்றிய ஆய்வுத் தேவையை அதிகரிக்கச் செய்துவிட்டது.

மணிக்கொடியை, அது வெளிவந்த காலத்தையும் அதன் ஆசிரியர்களையும் மனத்தில் கொண்டு, வகை பிரிக்கும்போது நான்கு கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்.

முதற்கட்டம்	1933 செப்டம்பர்	1935 ஜனவரி வரை
இரண்டாவது கட்டம்	1935 மார்ச்	1938பிப்ரவரி வரை
மூன்றாவது கட்டம்	1938 .	1939
நான்காவது கட்டம் -	1950	(ஐந்து இதழ்கள்)

முதற்கட்ட மணிக்கொடி, வ.ரா. (1889-1951)வின் ஆசிரியப் பொறுப்பில் வெளிவந்தது. இக்காலகட்ட மணிக் கொடியே, புதிய மறுமலர்ச்சியின் சின்னம், கிளர்ச்சி மதிப்பீட்டின் அடையாளம் என்றெல்லாம் விமர்சகர்களால் ரகமாக புகழப் பெறுகிறது. இரண்டாவது கட்டம், வ.ரா. விலக்கப்பட்டு, பி.எஸ். இராமையாவின் ஆசிரியப் பொறுப்பில் வெளிவந்தது. புதுமைப்பித்தனும், கு.ப.ரா. வும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த கட்டம். சிறுகதை மணிக்கொடியாகச் சொல்லப்படுவது இந்த இரண்டாவது கட்ட மணிக்கொடிதான். பி.எஸ். இராமையாவும் விலக்கப்பட்டு, ப. ரா. (ப. ராமசாமி)வின் ஆசிரியர் பொறுப்பில் மிகச் சில இதழ்களே வெளிவந்த மணிக்கொடியின் காலம் மூன்றாவது கட்டமாகும். நிறைவாக, பி.எஸ். இராமையாவால் மீண்டும் 1950இல் சில காலம் மணிக்கொடி வெளியிடப்பட்டது. 5 இதழ்களே வெளிவந்ததாகத் தெரிகிறது. இதில்தான் தி.ஜா. தொடர்பு கொண்டது.

'பொது வாழ்விற்குக் கண்ணும் காதும் பத்திரிகை. இந் நாட்டின் இன்று தோன்றிப் பயன்தரும் ஒவ்வொரு பொது இயக்கத்திற்கும் பத்திரிகைகளே ஆதாரம். இத்துறையில் சேவை செய்து வருவன நமது மூத்த பத்திரிகைகள் எனலாம். அந்தக் கூட்டத்தில் மணிக்கொடியும் இன்று சேருகிறது. ஒரு சிறிது பாரத்தை இதுவும் தூக்கட்டும்' (17.9.33 மணிக்கொடி) என்று உறுதியேற்றுப் புறப்

பட்ட மணிக்கொடி, காங்கிரஸ் என்ற பொது இயக்கத்திற்கு ஆதார மான பத்திரிகைகளுள் ஒன்றானது.

பெரும் விருப்பத்துடனும், நீண்ட நெடுங்காலம் மணிக்கொடி பற்றிப் பேசுவார்கள் என்ற நம்பிக்கையுடனும், 1933ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் நாளிலிருந்து மணிக்கொடி வெளிவரத் தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமைகளில் செய்திப் பத்திரிகை இல் லாத குறையைத் தீர்த்தது, ஓரணா விலையுள்ள இந்த மணிக்கொடி.

ஞாபகத்தின் வலுவிலேயே, மணிக்கொடியின் வரலாற்றை எழுதிய பி.எஸ். இராமையாவின் ஞாபகப்படி, 'சீனிவாசன், அவ ருடைய தம்பி கே. கிருஷ்ணமூர்த்தி, வ.ரா., சொக்கலிங்கம் ஆகிய நால்வரும் சமபங்கு கூட்டாளிகளாக'ச் சேர்ந்து தொடங்கப்பட்டது மணிக்கொடி. ஆசிரியர் பெயர்களாக, கு. சீனிவாசன், வ. ராமஸ் வாமி, தெ.ச. சொக்கலிங்கம் ஆகியோரின் பெயர்கள், மணிக்கொடி ஊழியர்கள் என்ற மகுடத்தின் கீழ்த் தரப்பட்டிருந்தன.

சட்டத்தின் திருப்திக்காக, ஆசிரியர் மற்றும் வெளியிடுபவ ராக கே. சீனிவாசன் பெயரே, முதல் கட்ட மணிக்கொடி முழுவதும் சுட்டப் பெற்றிருந்தது. தெ.ச. சொக்கலிங்கம் (2வது இதழ் வெளி வந்த சமயத்திலும்) வ.ரா. (அதற்குக் கொஞ்சம் பின்னாலும்) கூட்டாளிப் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டாலும் ஆசிரிய அந்தஸ்தில் எந்த மாறுதலும் செய்யப்படவில்லை.

பத்திரிகையின் வரவு செலவு, விற்பனை போன்ற நிர்வாகப் பொறுப்புகளைச் சீனிவாசன் கவனித்து வந்தார். அவர் பம்பாய்க குச் சென்றுவிட்டபோது, இப் பொறுப்புகளை ஆ.நா. சிவராமன், சொக்க லிங்கம் ஆகியோரிடம் ஒப்படைத்திருந்தார். வ.ரா. மணிக் கொடி அலுவலகத்திலேயே இருந்து எழுத்துப் பொறுப்புகளைக் கவ னித்து வந்தார்.

> மணிக்கொடி ஆசிரியர் ஸ்ரீ வ. ராமஸ்சாமி ஐயங்கார் பல இடங் களில் பேசியதாகப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. இது தவறு. ஸ்ரீ வ. ராமஸ்சாமி ஐயங்காருக்கும், மணிக் கொடிக்கும் இம்மாதம் 1 ஆம் தேதியிலிருந்து யாதொரு சம்பந் தமும் கிடையாதென்பதை அறிவித்துக் கொள்கிறோம்.
>
> - ஆசிரியர்

என்று 21.10.34ஆம் தேதியிட்ட மணிக்கொடி இதழில் திடீரென அறிவிப்பு வரும் வரை, 13 மாதங்கள் வ.ரா., மணிக்கொடியின்

ஆசிரியராகப் பணியாற்றினார். இவ்வாறு வ.ரா., திடீரென மணிக் கொடியிலிருந்து விலக்கப்பட்டதற்கும், இவ்வாறே, வ.ரா.விற்குப் பின்னர் மணிக்கொடி ஆசிரியரான பி.எஸ். இராமையாவும் திடீரென விலக்கப்பட்டதற்கும் பின்னால் உள்ள அரசியல் இன்னும் இருட் டாகவே உள்ளது. இந்த இருட்டில் வெளிச்சம் பாய்ச்சுவார் இல்லை. 'காரியம் நடந்தேறும் தருணத்தில், அதன் நோக்கம் பிடிபடாமல், பின்னாளில்தான் ஏதோ இலேசாய்ப் புரிகிறது' என்று சொல்லும் பி.எஸ். இராமையாவின் 'மணிக்கொடி காலம்' இது விஷயத்திலும் குறைபாடுடைய சான்றாகவே இருக்கிறது. தொடர்புடையவர் களின் வாழ்க்கை வரலாறுகள் பயன்படக்கூடும். ஆனால் இது வரையில் அவையும் வெளிவரவில்லை. மணிவிழா மலர்களை நாடி னால், அவையும் கையை விரிக்கின்றன. சொக்கலிங்கத்தின் மணி மலரில், தினமணி என்ற பொருள், அழுத்தம் பெற்று மணிக்கொடி விஷயம் கவனம் பெறாமல் போயிற்று. டி.ஜி. ஏகாம்பரம் என்பவர் எழுதிய சொக்கலிங்கம் பற்றிய குறிப்புகளும், போற்றி அகவலை நினைவுபடுத்தி, வரலாற்றுக்கான தகவல் உண்மைகளைத் தரா மலே போயிற்று. வ.ரா.வின் மணிமலரில், இது பற்றிய கனத்த மவுனம் காதைக் கிழிக்கிறது. சிட்டியிடமிருந்து வரப்போகும் வ.ரா. வரலாறும் டாக்டர் வீ. அரசுவிடம் வந்து சேர்ந்துள்ள வ.ரா. வின் கடி தங்களும் வெளிவந்தால் இவ்விருட்டு வெளிச்சம் பெறக்கூடும்.

மணிக்கொடிக்குள் இயங்கிய அரசியலும், மணிக்கொடியை இயக்கிய அரசியலும் மேற்கூறிய விஷயம் தெளிவுறும்போது துலக்கம் பெறும்.

> இன்று தமிழ்நாட்டில் ராஜியம், சமூகம், மதம், பொருளாதாரம், கலை வளர்ச்சி, இலக்கியம் ஆகிய துறைகளில் மணிக்கொடி தீர்ந்த, தீவிரக்கொள்கையுடன் வழிகாட்டியும், தலைமை வகித் தும் வருகிறது.

இப்படியான வாசகத்தைத் தருகிறது மணிக்கொடியில் வெளி வந்த கட்டுரைப் போட்டி ஒன்றின் அறிக்கை. மணிக்கொடியின் முதல் ஆண்டு நிறைவையொட்டி அதன் அனுமதியோடு, சிட்டி, ராசு, அல்லி ஆகியோர் அறிவித்தது அந்தக் கட்டுரைப்போட்டி. இதில் குறிப்பிட்டுள்ள, அரசியல், சமூகம், சமயம் முதலான துறைகளில் மணிக்கொடியின் சாய்தல் எவர்பக்கம் என்றறிவது அதைப் புரிந்து கொள்ள உதவும்.

1929, டிசம்பரில் லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாடு, மிக முக்கியமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. 1930 ஜனவரி

26ஆம் தேதிக்குள், அந்நிய ஆட்சி, இந்திய அரசியல் விடு தலைக்கு இசைந்து வர மறுத்தால், நாட்டை விடுதலை செய்யும் பேரியக்கம் ஒன்றை மகாத்மா காந்தியிடம் ஒப்படைத்தது அந்தத் தீர்மானம். தீர்மானத்தின் வலுவை, வழக்கம் போல் வைஸிராய் கண்டு கொள்ளவேயில்லை. காந்தியடிகள் உப்பு சத்யாக்கிரகத் தைக் கையெடுத்தார். நாட்டின் உற்சாகமிகுந்த இளைஞர்கள் அதில் பங்கேற்றனர். தீவிரம் மிக்க வ.ரா. வேதாரண்யம் உப்புப் போரில் சிறை சென்றார். காந்தியடிகள் தண்டிக்கு புறப்படு முன்னர் அகமதாபாத் நகரில் கூட்டிய பத்திரிகையாளர் கூட்டத்தில், கு. சீனிவாசன் நிருபராகக் கலந்துகொண்டார். 1931ஆம் ஆண்டின் இறுதியில், லண்டன் வட்டமேசை மாநாட்டுக்குச் சென்ற காந்தி யடிகள் தோல்வியுடன் திரும்பி வந்தார். இந்தச் சூழலில் காந்தி யடிகள் மறுபடியும் போராட்டத்தில் இறங்குவதைத் தடுக்க, அரசாங்கம் அவரைக் கைது செய்தது. இரண்டாம் கட்டத் தலைவர் களையும், பத்திரிகைக்காரர்களையும் கூட அரசு கைது செய்தது. சீனிவாசனும் கைதானார். நாட்டின் அரசியல் நடவடிக்கைகளினால் இவ்வண்ணம் பாதிக்கப்பட்ட சீனிவாசன் சிறையில் இருந்தபோது தான், காந்தியின் கொள்கையைத் தமிழ்நாட்டில் பரப்பச் சிந்தனை பிறந்தது. காந்தியின் கொள்கையைப் பரப்பவே, அவரது சிந்தனை யை யொத்த தேசபக்தர்களான வ.ரா., சொக்கலிங்கம் துணையுடன் மணிக்கொடி தொடங்கப்பெற்றது.

நாட்டில் விடுதலை உணர்ச்சியைப் பரப்ப, தொடங்கப் பெற்ற மணிக்கொடி காங்கிரஸ் கொள்கையையே தன் கொள்கை யாகக் கொண்டது என்பதைச் சொல்லத் தேவையில்லை. காங்கிர ஸிலும் பல கருத்து வேறுபாடுகள் அன்றைக்கும் இருந்தன. அதில் யார் பக்கம் மணிக்கொடி நின்றது என்று அறிவதற்கு, மணிக்கொடி முன் நிறுத்திய கருத்துகள் பற்றி அறிவது முன் அவசியம் ஆகிறது. இதற்கு இப்பத்திரிகையின் தலையங்கங் களும், கருத்துப் படங்களும் துணை புரிகின்றன.

காங்கிரஸின் மிதவாதப் பிரிவினரைப் கிண்டல் செய்த கருத் துப் படம் இன்றும் நகைப்பினைத் தருவது.

ஆரத்தீர அமர்ந்து செய்த யோசனை - என்ற தலைப்புடன் அக் கருத்துப்படம் அமைந்தது. இந்த வாரம் சென்னையில் கூடிய மித வாத வருஷாந்திர மாநாடு 'தன் கையே தனக்குதவி' என்ற பழ மொழிக்குப் புதுப்பொருள் கொடுத்திருக்கிறார்கள் - படத்தில் காண் கவும் - என்ற குறிப்புடன் அக்கருத்துப்படம் அமைந்தது. படத்தில்

ஒன்பதுபேர் (தலைவர், பெண் அங்கத்தினர் உட்பட) வாயில் விரலை சூப்பியபடி உட்கார்ந்திருக்கின்றனர் வட்டவடிவில். காங்கிரசின் மிதவாதம் பேசுபவரைக் குழந்தைகளாகச் சித்திரித்துக் கிண்டல் செய்யும் கருத்துப் படத்தை வரைந்ததோடு, இதை யொட்டியே அன்றைய தலையங்கமும் அமைந்தது.

சட்டசபையைக் கைப்பற்றி, அடக்குமுறைச் சட்டங்களை அரசியலரார் செய்யாமல் தடுக்கலாம் என்று காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவினர் விரும்பினர். இதையும் கிண்டல் செய்து கருத்துப் படம் சிரிக்க வைத்தது. (8.4.34)

காந்தியடிகளின் கருத்து, மிதவாதிகளுக்கும், சட்டசபைக்குச் செல்ல விரும்பிய பிரிவினருக்கும் எதிராகவே இருந்தது. காந்தி யடிகளின் கருத்தையே பிரசாரம் செய்யத் தீர்மானித்து இவ்வாறு கருத்துப் படங்கள் வெளியிட்டது என்பதை உணர முடிகிறது.

பெரும்பான்மையான கருத்துப்படங்கள், தேசிய அரசியலை, டில்லி அரசியலை, இந்தியா தொடர்புடைய லண்டன் நிகழ்வுகளை வைத்தே அமைந்துள்ளன. ஓரிரண்டு கருத்துப்படங்கள் (காந்தியில் இருந்து வந்தவை மட்டும்) தமிழ்நாட்டு அரசியலைச் சுட்டுவன. அரசியல் செய்திகள் மட்டுமே, கருத்துப் படங்களின் உள்ளடக்க மாக இருந்த நிலையும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

கருத்துப்படங்களில், சுருக்கமான அளவில் தெரிவிக்கப் படும் கருத்துகள், தலையங்கங்களில் விரிவாகப் பேசப்படுகின்றன. கடுமையான கருத்துடன், வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்ற தெளிவுடன், எளிமையான நடையுடன், நடைமுறை வழக்கில் உள்ள உவமைகளுடன் (அவற்றின் இலக்கியத் தகுதி பற்றிச் சிறிதும் கவலைப்படாமல்), அப்போதைக்கப்போதைய அரசியல் நிலைப்பாட்டுடன், காந்தியடிகளின் அரசியலை ஆதரிக்கும் தலை யங்கங்களை மணிக்கொடி எழுதி வந்துள்ளது.

பல்கலைக்கழகக் கல்வி போதனை, ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது, தாய் மொழியிலேதான் இருக்க வேண்டும் என்கிறார் ஆச்சாரியார் ரே. தாயிடத்தில் அன்பில்லாதவன் பாதகன், தாய் மொழியை மதிக்காதவன் துரோகி - இது கல்விமுறை என்ற தலைப் பிட்ட தலையங்கத்தின் (17.12.33) செய்தி.

'காங்கிரஸ் பெயரால் யார் நிற்கிறார் என்று கவலையே பட வேண்டியதில்லை. சுண்டைக்காயன் ஒருவன் நின்றாலும், அவன்

காங்கிரஸ் என்ற எண்ணந்தான் இருக்கவேண்டும்' (15.7.34) என்று வேட்பாளர் தேர்வில் ஏற்பட்ட அதிருப்தியையும் மறைத்துக் கொண்டு தேர்தலின் போது காந்தியின் நிலைப்பாட்டை மணிக் கொடி ஆதரித்தது.

இதே 1934ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் டாக்டர் வரத ராஜுலு நாயுடு, சேலத்தில் சுயேச்சை வேட்பாளராக நிற்பதாக அறிவித்தார். அதோடு காங்கிரஸ் தனக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார். சொக்கலிங்கம் சமாதானத்துக்குப் போய்த் தோல்வியுடன் திரும்பினார். வரதராஜு லுலு நாயுடுவை வ.உ.சி., ஈ.வெ.ரா., திரு.வி.க. ஆகியோர் ஆதரித்தனர். இந்த ஆதரவுச் செயலை, வீபரிதச் செயல் என்று மணிக்கொடி தலையங்கம் வருணித்தது. சமூக சீர்திருத்த தளத்தில் ஈ.வெ.ரா.வை ஆதரித்த மணிக்கொடி (8.10.33), தமிழன்பர் மாநாட்டு நிகழ்வுகளில் திரு.வி.க.வை ஆதரித்த மணிக்கொடி, அரசியல் தளத்தில் காந்தியின் பெயரால் அவர்களை அடித்து நொறுக்கியது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்தை அரசாங் கத்தார், தமக்குச் சாதகமாகவே கொண்டனர் என்று ஆங்கில அரசைக் கண்டித்தது தலையங்கம். காந்தி அரசியலைத் தாண்ட முடியாமல் தத்தளித்தது நின்றது மணிக்கொடி.

அதைப் போலவே, வகுப்பு வாதத் தீர்ப்பு (24.6.34) என்ற தலையங்கத்திலேயும் 'எல்லாரும் ஒவ்வொருவரோடு சண்டை போட்டுக்கொண்டு இந்தியாவின் அடிமை வாழ்வை நீடிக்கச் செய்யப்படாது என்பதை எல்லோரும் நல்லெண்ணத்துடன் உணர வேண்டும். வகுப்புவாதத் தீர்ப்பு மூலமாக ஒவ்வொரு வகுப்பும் பிச்சை கேட்பது ரொம்ப கேவலம்' என்று எழுதியது. இதுவும் சமகால அரசியல் லாபத்தில், சமூக நீதியில் இருக்கிற நியா யத்தை உணராமல் போனதற்கு இன்னொரு சான்று.

சென்னை மாகாண காவல் துறை அறிக்கை ஒன்று, அவ் வாண்டில் குற்றங்கள் குறைந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, அரசாங் கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தது. இதுகுறித்து ஒரு தலையங்கம் எழுதப்பட்டது (26.8.34). இதுவும் காந்தியின் புகழையே பாடுகிறது. 'நாட்டில் குற்றங்களும் கொலைகளும் குறையுமாகில் அது காந்தி தத்துவத்தின் மகிமையாலே என்பதை போலீசார் உணர வேண்டும்' என்று அது பேசுகிறது. அது, தனி நபர் பெயரால் வளர்த்தெடுக்கப்படும் Myth என்பதைத் தவிர வேறென்ன?

இப்படி, முழுவதும் காந்தி அரசியலையே தமது தலையங்கப் பொருளாக்கிக் கொண்டது மணிக்கொடி (25.11.34 தேசிய தலையங்கம் தவிர).

'தப்பு கண்ட இடத்தில் நமக்கேன் இந்த வம்பு என்று இழுத்து மூடிக்கொண்டு போவது பிழை. அது சாந்தி நிலையன்று. கோழை நிலை. இது வேண்டாம். இன்று தமிழர் வாய் விட்டுப் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும். மணிக்கொடிக்கு எழுதுவதற்கு எவரும் கூசவேண்டாம். எவரும் பயப்பட வேண்டாம். மணிக்கொடியும் அஞ்சாமலே அபிப்ராயங்களை வெளியிட்டு வரும்.'

***

'பட்டம், பணம், பதவி, பெயர் இவைகளல்ல கட்டுரைகளுக்கு கட்டளைக்கல். நடை கூட இரண்டாம் பட்சம்தான். உணர்ச்சியும் இலட்சியமுமே பிரதானம்' என்று தன் வாசகர்களிடம் தன்நிலை விளக்கம் அளித்துக்கொண்ட மணிக்கொடி (4.2.34) கிளர்ச்சியூட்டும் கருத்துகளையே வெளியிட்டு வந்தது. அரசியல் தளத்தில் காந்தியடிகளைப் பின்பற்றிய மணிக்கொடி, இலக் கியம், நுண்கலைகள் தளத்தில் எவரையும் சாராமல் இயங்கியது எனலாம்.

பல்வேறு தலைப்புகளில் அது கருத்துகளை வழங்கி வந்தது. 'ஜனநடை' என்றொரு பகுதிக்குப் பெயர். உயிர் என்பது சலனம். இயக்கம் நடை ஓட்டம் அனைத்தும் உயிர். கால்நடை மட்டும் நடையல்ல. சக்கர ஓட்டம் மட்டும் ஓட்டமல்ல. பார்வையில் நடை உண்டு; சொல்லில் நடை உண்டு. உயிர் உள்ள இடங்களில் எல்லாம் நடை உண்டு. ஆகவே ஜனநடை தான் பொது வாழ்வாகும் என்று அறிமுகம் பெறும் இப்பகுதியில் மக்களின் வாழ்முறை பற்றிய விளக்கம் இடம்பெற்றது.

இதேபோல, 'ஸ்வதந்திர பண்ணை', இதில் வீரச் சொல்லும், வீரச்செயலும் எடுத்துக்காட்டப் பெற்றது. 'பழங்கணக்கு' பகுதியில் அன்னியர் வசப்பட்டு நாம் அடிமையாய் சீர்குலைந்து போனதன் வரலாறு சொல்லப்பட்டது. கடந்த வாரத்தில் நாட்டிலும், உலகிலும் நேர்ந்த முக்கிய நிகழ்ச்சிகளைக் காட்டும் வாரக் குறிப்புக்குப் பெயர் 'சதுர்முகம்'. 'சறுக்கு மலை' என்ற பகுதியில் பொது வாழ்வில் பேச்சிலும், எழுத்திலும் புகுந்து மறைந்திருக்கும் சிறுமைகள், அனர்த்தங்கள், பிதற்றல்களைச் சுருக்கமாக சுறுக்கென்று தைக்கும் பாங்கில் நறுக்குகள் இடம் பெற்றன. பாரதியின் தராசு போல 'புதுத்தராசு'ம் தடைகள் போட்டது. 'இலக்கியச்

சோலை' பகுதியில் இலக்கியம் பற்றிய விமர்சனமும், தத்துவ, இலக்கிய வாணர்களின் கருத்துகளும் இடம்பெற்றன. இது ஒரு முக்கியமான பகுதி. 'கலைக்கூடம்' இதில் இசை, நாடகம்பற்றிய கருத்துகள் இடம் பெறும். கற்பனைக் கடிதங்கள் அடங்கிய பகுதி 'டமாரக் கடிதங்கள்' என வழங்கப்பெறும். இவை தவிர, காதற் கடிதங்கள், ரிப்போர்ட் ராமாயணம், போன்ற பகுதிகளும் அவ்வப்போது வரும். இப்போது சொன்ன எல்லாப் பகுதிகளும், எல்லா வாரமும் வரும் என்ற கட்டாயம்இல்லை. முதல் இதழில் தொடங்கிய 'நவாப் படை' என்ற பகுதி பிறகு வரவேயில்லை. ஜன நடையும் அப்படித் தான். 'புதுத்தராசு' அடிக்கடி காணாமல்போய்த் திரும்பக் கிடைக்கும்.

'அவதூறுக்குப் பலி' என்ற கதையில் (10.12.33) அவ தூறுக்குப் பயந்து ஒரு பெண், ரயிலில் தலையைக் கொடுத்து இறந்து போவது சொல்லப்பட்டது. இக் கதை இப்படி முடிகிறது.

> ஆகவே ஆய்ந்து நோக்கினால், அன்று நிகழ்ந்தது தற்கொலை யன்று. செத்தது சிவகாமியன்று. அறைந்தது ரயில் அல்ல. நிகழ்ந்த இடம் ஒரு பளக்களம். கயமை என்பது தண்ட வாளம். அதில் வந்தது அவதூறு என்ற என்ஜினும், தொடர்ந்து வந்த வண்டிகளும். பலியானது கபடம் தெரியாத வாழ்க்கை. இருட் டில் சோர நாயகனைத் தழுவி இன்புறும் சாமர்த்தியம் சிவ காமிக்கு இருந்திருந்தால் இன்ஜினைச் சரணடைந்து உயிரை விட அவளுக்குக் காரணமிருந்திருக்காது.
>
> வாழ்வில் எவ்வளவுக் கெவ்வளவு பொய் ஆசாரங்கள், போலி நடத்தைகள் மலிந்துகிடக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவதூறுக்குக் கொண்டாட்டம். பெண்கள் பார்த்தால் குற்றம், பேசினால் குற்றம், விளையாடினால் குற்றம் என்றால் அவ தூறுக்குக் கொண்டாட்டம். பழிபிறப்பது சுலபம்.

இப்படி, வாழ்வில் காணும் போலிகள் மீது கட்டுக்கடங்காத கோபத்தைப் பாய்ச்சும் கதைகளும், கட்டுரைகளும், நடைச்சித் திரங்களும் மணிக்கொடியில் ஏராளம் வெளிவந்துள்ளன.

சமூகத்திற்குப் பயன்பட விரும்பும் பட்டதாரிச் சாமாவை, குடும்பச் சிறைக்குள் தள்ளிச் சங்கடப்படுத்த விரும்பும் பெற் றோரை, ஜோசியரை விளக்கிச் சித்திரிப்பது 'சாமாவின் சங்கடம்' என்ற வ.ரா.வின் நடைச் சித்திரம்.

எச்.ஜி. வெல்ஸ், பெர்னார்ட்ஷா, தாகூர் போன்றோரின் தத்து வங்களின் சுருக்கத்தை, சூட்சுமத்தைத் தொடர்ந்து எழுத விருப்பம்

தெரிவித்து கு.ப.ரா. எழுதிய கட்டுரை மணிக்கொடி (11.3.34) இதழில் வெளிவந்தது. பத்திராதிபருடைய அன்பு இருந்தால் உங்களை முன் மேல் நிற்க வைக்கிறேன். ஒவ்வொரு தீர்க்க தரிசியையும் தனியே கண்டு இச்சுருக்கு சமாசாரத்தைப் பற்றி விவரமாய்க் கேட்போம் - என்றெழுத, இடமும் அன்பும் விஸ்தார மாய் இருக்கிறது என்று பத்திராதிபர் அதிலேயே குறிப்பு காட்டி னார். இதைத் தொடர்ந்து வெல்ஸ், கார்பென்டர், ரவீந்திரர் எனப் பலரின் தத்துவக் கருத்துகளை எழுதிய கு.ப.ரா., பல சிறுகதைகளையும், 'கருவளையும் கையும்' என்ற கவிதையையும் எழுதி வெளியிட்டார். அவை புதுமாதிரியாகவும், புது உணர்ச்சிக் குவியலாகவும் வாசகர்களுக்குத் தோன்றியிருக்கும் என்பதை இப்போதும் உணரமுடிகிறது.

ஆற்றங்கரைப் பிள்ளையாரில் (22.4.34) தொடங்கிய புதுமைப்பித்தனின் மணிக்கொடி எழுத்துப்பணி, சோ.வி., சோ. விருத்தாசலம், புதுமைப்பித்தன் என்ற பெயர்களில் கதை, கட்டுரை களாகத் தொடர்ந்தன. வ.ரா.வின் (21.10.34) விலகலுக்குப் பிறகு, புதுமைப்பித்தன், கு.ப.ரா.இல்லாமல் இதழை வெளியிட முடியாத நிலைக்கு மணிக்கொடி ஆளானது.

பல கட்டுரைகளும், கதைகளும் எழுதியவர் பெயர் இன்றியே தொடக்கத்தில் வெளிவந்தன. அவற்றில் பல, கு. சீனுவாசன் எழுதியதாக பி.எஸ். ராமையா தெரிவிக்கிறார். சொக்கலிங்கம் (22.7.34) ஒரு கதை எழுதியிருக்கிறார்.

பாரதிதாசன், சுத்தானந்த பாரதியார், பிட்சு, கு.ப.ரா., ஜாதி பேதமற்றோன், மேராமி சுந்தரம், சிட்டி ஆகியோர் கவிதைகள் எழுதியிருக்கிறார்கள்.

கே.வி.எஸ். வாஸ், பொருளாதாரக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார். நா. சிவராமனும், ஈ. கிருஷ்ணய்யரும் பல பொருளாதாரக் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

தவிர, சிறுகதையை மேலே குறிப்பிட்டவர்களைத் தவிர பலரும் எழுதியுள்ளனர். எது எப்படியிருந்தாலும் வ.ரா. எழுதியது போகத்தான், இங்கே குறிப்பிட்ட எல்லோர் எழுதியதும்.

எஸ்.ஜி. கிட்டப்பா காஞ்சிவரம் நயினாப் பிள்ளை ஆகியோரின் மறைவின்போது எழுதப்பட்ட இரங்கல் உரைச் செய்திகள் மட்டு

மல்லாது, க. ராமரத்னம் தொடர்ந்து எழுதி வந்த இசை விமர்சனக் கட்டுரைகள் நல்ல வரவேற்பைப் பெற்றதாகத் தெரிகிறது. இன்னிசை என்ற பெயரில் வந்த விமர்சனங்களையடுத்து, ஆனந்த விகடனில் 'கர்நாடகம்' என்ற பெயரில் எழுதிவந்த கல்கியே, தம் விமர்சனங்களை மாற்றிக் கொண்டதாகவும் பி.எஸ். ராமையா ஓரிடத் தில் குறிப்பிடுகிறார். இவ்வாறான கர்னாடக இசை விமர்சன செய்திகள் மட்டுமல்லாது, 33 டிசம்பரில் கூடிய தமிழன்பர் மாநாட்டில் ஸ்ரீ அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் பேசிய பேச்சின் முழு விவரத்தில் தமிழ் இசை குறித்த செய்திகளும் இடம் பெற்றிருந்தன.

தமிழில் நாடகப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்ற கவலையுடன் தொடங்கும் (24.9.33) நாடகம் பற்றிய விமர்சனம், நடிப்பதெல்லாம் நாடகமல்ல, அரங்கமேடை சீர்திருத்தப்பட வேண்டும் என்ற விமர்சனங்களோடு தொடர்கின்றது. பி.எஸ். இராமையா, கே.வி. இராமச்சந்திரன், வ.ரா., கோபி மற்றும் பலர் எழுதிய நாடகம் குறித்த கட்டுரைகள், நாடகமேடை, நடிகர்கள், நாடக உள்ளடக்கம், நிகழ்த்தும் முறை குறித்த ஆழமான விவாதங்களை உள்ளடக்கியதாக உள்ளது. அ. மார்க்ஸ் குறிப்பிடுவது போல மேல்தட்டு ரசனை மனப்பான்மையிலிருந்து நாடக விமர்சனங்கள் எழுதப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டாலும், எழுதிய எல்லோரும் அதே மனநிலையில் எழுதியதாகக் கருத இடமில்லாமல் இருக்கிறது.

குறுக்கெழுத்துப் போட்டி என்னும் ஏடுகளின் மோசவலையைக் கடுமையாக எதிர்த்த மணிக்கொடி, சில சிறுகதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தியது. முதலாண்டிலேயே மொத்தம் 4 போட்டிகளை அறிவித்திருந்தது. வ.ரா.வின் சொந்த ஏற்பாட்டில் (மணிக்கொடியின் நிதிநிலை இடம் கொடுக்காத நிலையில்) வ.ரா.வின் நண்பர்கள் இதற்கு உதவினர்.

> தமிழ் மொழி வளர்ச்சியிலும் மணிக்கொடி வளர்ச்சியிலும் ஆவல் மிகுந்த நண்பர் திருவையாறு (தஞ்சாவூர் ஜில்லா) வி. சுப்ரமணிய அய்யர் அவர்கள் பி.ஏ. பி.எல்., சிறுகதை ஒன்றுக்கு ரூ. 10 (பத்து) பரிசு கொடுக்க முன் வந்திருக்கிறார். இந்த அரிய சந்தர்ப்பத்தை அன்பர்கள் கைவிடலாகாது.
>
> 1. சிறுகதை 'மணிக்கொடி' ஒன்றரைப் பக்கங்களுக்கு அதிகப்படலாகாது.
> 2. சிறுகதையில் நவீன வாழ்க்கை உணர்ச்சி நிறைந்திருக்க வேண்டும்.

3. லேசாய் எல்லோருக்கும் அர்த்தமாகும் நடையில் இருப்பது ரொம்ப அவசியம்.
4. நெருக்கடியான சந்தர்ப்பத்தில், சக்தியை வளர்க்கும் வகை - இதுதான் கதையின் அஸ்திவார நோக்கமாயிருக்க வேண்டும்.
5. அன்பர்கள் காகிதத்தில் ஒரு பக்கத்தில் எழுத வேண்டும்.
6. வருகிற ஏப்ரல் மீ 1க்குள் கதை மணிக்கொடி ஆபீசுக்கு வரும்படியாகச் செய்ய வேண்டும்.
7. கதை, தமிழ் நாட்டு வாழ்வைக் குறிப்பதாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்
மணிக்கொடி

என்ற விவரங்களை அறிவித்த அறிவிப்பு நடுவர்களைப் பின்னர் அறிவிப்போம் என்றது.

இந்தச் சிறுகதைப்போட்டி அறிவிக்கப்பட்ட (25.2.34) இரண்டாவது வாரத்தில், ந. ராமரத்னம் அளிக்கும் ரூ.10க்கான, கட்டுரைப்போட்டியின் அறிவிப்பு வந்தது - (11.3.34). கட்டுரை, ஹரிஜன முன்னேற்றத்திற்கென்று லட்ச ரூபாய் இருந்தால் அதை எப்படிச் செலவு செய்வது என்பது பற்றியதாக இருக்க வேண்டும் என்றது அறிவிப்பு. 27.5.34ஆம் தேதியிட்ட மணிக்கொடியில், சிறுகதைப் போட்டியின் முடிவு வெளிவந்தது. சோதனை என்ற கதை பரிசினைப் பெற்றது. எழுதியவர் ஆதிகுடி இ.ரா. அதற்கு ஏன் ரூ.10 பரிசளிக்கவேண்டும் என்று வ.ரா. விவரமாக ஒரு குறிப்பு எழுதியுள்ளார். இந்தச் சிறுகதைப் போட்டியைத் தொடர்ந்து, இன்னொரு சிறுகதைப் போட்டிக்கும் அறிவிப்பு வந்தது. இதற்கான ரூ.10க்கான உபயதாரர் வி. வைத்திய நாதய்யர். இவரும் வ.ரா.வின் திருவையாற்று நண்பர்தான். இக்கதைக்கான அஸ்திவாரம் 'தமிழ்நாட்டினர் வாழ்க்கையில் தோன்றியுள்ள மறுமலர்ச்சியின் வேகத்தைச் சிறுகுழந்தைகளுக்கு புகட்டி வளர்த்தல்' என்பதாகச் சொல்லப்பட்டது. இதற்கான முடிவு வெளிவந்ததாகத் தெரியவில்லை.

மணிக்கொடியின் முதலாண்டு நிறைவையொட்டி, மணிக்கொடியில் எழுதும் அன்பர்கள் சிட்டி, தாசு, அல்லி ஆகியோர், மணிக்கொடியின் அனுமதியோடு ரூ.100/- பரிசளிக்கும் கட்டுரைப் போட்டி ஒன்றை அறிவித்தனர்.

சமூக, ராஜீய, பொருளாதார, மத, இலக்கிய கலை வளர்ச்சி பற்றி இருக்க வேண்டும். எளிய தமிழ் நடையில் கட்டுரை இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்த அறிவிப்பு, பஞ்சாயத் தார்களையும் அறிவித்தது. (செயலராக ந. ராமரத்னம்) வ.ரா., தெ.ச.சொ., வா. ஸ்வாமிநாத சாஸ்திரி, எஸ். கணேசன், சங்கு சுப்பிரமணியம், கே. ஸ்ரீனிவாசன். இந்த அறிவிப்பு மீண்டும் 29.7.34 இதழிலும் வெளிவந்தது.

இராமரத்னம் அறிவித்த கட்டுரைப் போட்டிக்காவது, 'சரியான கட்டுரை வரவில்லை' என்ற எதிர்வினை வந்தது. வைத்திய நாதய்யரின் அளிக்கவிருந்த ரூ.10வும், சிட்டி குழுவினர் அளிக்க விருந்த ரூ.100வும் பற்றி எந்தத் தகவலும் இல்லை. சக பத்திரிகைகளுடன் இருக்கும் உறவு என்பது வெறும் நட்பு ரீதியிலான உறவாக மலர முடியாது. அது சார்ந்த கொள்கையின்பாற் பட்டது. அந்த வகையில் காங்கிரஸ் கொள்கையையே தானும் கொண்டிருந்தாலும் ஆனந்த விகடனுடன் மணிக்கொடியின் உறவு சுமூகமாகஇல்லை என்பதைப் பலரும் சொல்லியிருக்கிறார்கள். ஆனந்த விகடனில் பணியாற்றிக் கொண்டே, மணிக்கொடி எழுத் தாளர்களுடன் நண்பராயிருந்த ரா. அ. பத்மநாபன் இதைப் பல விடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். நல்ல இலக்கியத்திற்கும், நசிவு இலக்கியத்திற்கும் இடையே உள்ள எதிர்நிலையாக இதை முற்போக்காளர்கள் பார்க்கிறார்கள்.

ஆனந்த விகடனில் அக்காலத்தில் (33, 34) வெளிவந்த போட்டி பந்தயத்தை மணிக்கொடி நேரிடையாகத் தாக்கி எழுதியது. இது மக்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையடிக்கும் பத்திரிகை சூதாட்டம் என்று சாடியது. அதோடு விலங்கு சித்திரப்போட்டி ஒன்றைச் சான்றாகக்காட்டி, மொத்தம் 19200 மாற்றுவிடைகள் வரும் என்பதைக் கணித்து சொல்லி, சரியான விடை அனுப்ப யாருக்காவது விருப்பமிருந்தர்ல் அவர் 19200 மாற்றுவிடைகள் அனுப்பவேண்டும். பிரவேசக் கட்டணம் 9600, கூப்பனுக்காக 19200 பிரதிகள் வாங்க ரூ.2400, ஆக 12000 செலவழிக்க வேண்டும். செலவழித்தால் கிடைக்கப்போகிற பரிசு ரூ.1000/- என்று நுணுக்கபூர்வமாக, இப் பரிசு போட்டியை ஆராய்ந்து, மக்க ளிடம் எடுத்துச் சென்றது மணிக்கொடி (17.12.33). இத்தகைய எதிர்ப்பிரசாரம் காந்தியிலும் நடைபெற்றது. எனினும் ஆனந்த விகடன் அசரவேயில்லை.

இப்பிரச்சினையில் மேலும் ஒரு முறுக்கு விழுந்தது, காந்தியின் (1934ஆம் ஆண்டு) தமிழ்நாட்டு விஜயத்தின் போது. காந்தியடிகளின் பிரசங்கங்களைத் தமிழில் மொழிபெயர்க்க ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்ததும், மணிக்கொடி அதைத் தடுக்க விரும்பியது. ரா.கி., ஆனந்தவிகடனைச் சேர்ந்தவர். தமிழ் தமிழ் என்று முழங்கும் இந்த நாளில் காந்தி பிரசங்கத்தை மொழி பெயர்க்கவா ஆள் இல்லை? அன்றி ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்திதான் இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்றால் போட்டி பந்தயங்களை விட்டுத் தமது கைகளைக் கழுவிக் கொண்டு வரட்டும். இந்த ஏற்பாட்டைச் செய்த சங்கத்தார்தான் இந்தப் பிசகிற்குப் பொறுப்பாளிகள். அவர்களுக்கும், காந்திக்கும் நிலையை விளக்கி கடிதம் எழுதியிருக்கிறது... போட்டி பந்தய விளம்பரத்திற்கு காந்தி பிரயாணம் வாகனமா? என்று கோபமாய் மணிக்கொடி எழுதியது 21.1.34 இதழில்.

இதே இதழில் 11ஆம் பக்கத்தில் இன்னொரு செய்தி. காஞ்சிபுரத்திலிருந்து நண்பர் ஒருவர் போட்டிப் பந்தயங்களைக் கண்டித்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு எழுதினார். ரா.கி.யும் பதில் எழுதினார். பதில் இது என்று கல்கியின் கடிதத்தை அப்படியே பிரசுரித்திருக்கிறார்கள். அதில் ஒரு பகுதி இப்படிச் செல்கிறது.

> குற்றம் குற்றந்தான். ஆனால் வேறு வழிகளின் மூலம் அதை நிவர்த்திக்கலாமென்னும் நம்பிக்கை எனக்கிருக்கிறது. அது வரையில் பெரிய நன்மையைக்கருதி சிறிய தீமைக்கு உடந்தையாயிருக்கும் பொறுப்பை வகித்திருக்கிறேன். இது என்னுடைய மனோ பலவீனமாயும் என்னை நானே ஏமாற்றிக் கொள்வதாயும் இருக்கலாம். அப்படியானால் கர்ம பலனை அனுபவித்துத் தீர்ப்பேன்.

இதற்குப் பதிலாக மணிக்கொடி,

> அன்றே அவர் மன விளக்கு மினுமினுவென்று எரிந்து கொண்டிருந்தது. இன்று அணைந்து விட்டதா? எனது கர்ம பலனை அனுபவித்துத் தீர்ப்பேன் என்கிறார். முயன்றால் தடுத்தும் தீர்த்துக் கொள்ளலாம்

என்று எழுதியது.

விகடனுடன் உறவு நிலை மட்டும் தான் இப்படி. தினமணி, பாரதி, ஊழியன், களிராட்டை, காந்தி போன்ற மற்ற பத்திரிகைகளுடன் நேச உணர்வையே மணிக்கொடி பாராட்டி வந்துள்ளது.

ராஜிய பதிப்பாக வந்த மணிக்கொடி, செய்திப் பத்திரிகையின் அளவில், 8 பக்கங்களுடன் ஒரு அணா விலையில் வெளிவந்தது. பின்னர், ஏஜெண்டுகள், வாசகர்களின் வேண்டுகோளின்படி, தினத் தாளை இரண்டாக மடித்த அளவில், 20 பக்கங்களுடன் டிசம்பர் 10, 1933யிலிருந்து வெளிவந்தது. விலையில் மாற்றமில்லை. உள்ளூருக்கான ஆண்டு சந்தா 3 ரூபாய் 8 அணா. வெளிநாட்டுக்கு 5 ரூபாய்.

பிராட்வே, 35 செம்புதாஸ் தெருவில் இயங்கி வந்த மணிக் கொடி ஆபிஸ், 18.2.34லிலிருந்து 7, நைநியப்பன் தெருவில் இருந்து இயங்கியது (18.2.34 மணிக்கொடி).

மணிக்கொடிக்கு அனுப்பப்படும் சந்தாவோ, விளம்பரக் கட்டணமோ எதுவும் மணிக்கொடி மானேஜர் என்று விலாசமிட்டே அனுப்ப வேண்டும். ஆசிரியருக்கோ அல்லது குறிப்பிட்ட பெயருக்கோ அனுப்பக் கூடாது என்று ஒரு மணிக்கொடி அறிக்கை (28.1.34) வெளிவந்துள்ளது. இதிலிருந்து மணிக்கொடியில் தனிப்பட்ட செல்வாக்கு மிக்கவராக அல்லது அங்ஙனம் அறியப்பட்டவராக யாரோ ஒருவர் (மூவருள் ஒருவர்) இருந்திருப்பது தெரிய வருகிறது.

மறுமலர்ச்சியின் விடிவெள்ளி, தமிழ்நாட்டின் வெள்ளி முனைப்பு, தமிழ் உணர்வில் ஒரு புதிய ஊற்று என்றெல்லாம் பாராட்டுகள் குவிந்தாலும், வாசகர்களின் எண்ணிக்கைக் கூடியதாகத் தெரியவில்லை.

மணிக்கொடி பத்திரிகை பன்னிரண்டு இதழ்கள் வெளிவந்த பிறகும் தமிழ்நாட்டு மண்ணில் வலுவுடன் வேரூன்றிக் கொள்ள அதனால் இயலவில்லை. அப்போதுதான் தமிழ்நாட்டில் பத்திரிகைகள் அந்தந்த ஊரில் ஏஜண்டுகள் மூலம் விற்பனை, விநியோகம் நடத்தும் முறை தோன்றிச் சிறிது சிறிதாக வலுவடைந்து கொண்டிருந்தது. மணிக்கொடியையும் விற்க ஏஜண்டுகள் முன்வந்தார்கள். ஆனால் நாலைந்து இதழ்கள் வந்த பொழுதிலேயே குறைகளை முணுமுணுக்கவும், எழுதவும் தொடங்கிவிட்டார்கள். பன்னிரண்டு இதழ்கள் வெளிவந்த பிறகு ஒரு ஆயிரம் பேர்கள் கூட கிடைக்கவில்லை என்று பி.எஸ். இராமையா எழுதுகிறார்.

மணிக்கொடியையும் விற்க ஏஜண்டுகள் முன் வந்ததாக பி.எஸ். இராமையா சொல்வது 17இல் 6 பங்கு உண்மைதான்.

8.4.34 தேதியிட்ட மணிக்கொடியில் அதாவது 30ஆவது இதழில், ஏஜெண்டுகள் தேவை என்ற விளம்பரத்தில் 17 ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை என்று கேட்டிருந்தார்கள். அதில்

பம்பாய், மைசூர் என்ற அயல் மாநிலங்களும் உண்டு. அடுத்த இதழிலும் அதே விளம்பரம், அதில் 11 ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை என்று கேட்டிருந்தது. இவ்விளம்பரம் தொடர்ந்து 34ஆம் வருஷம் ஜூன் மாதம் வரை வந்தது. ஏஜெண்டுகள் மணிக்கொடியை ஏற்பதில் காட்டிய தயக்கம், மணிக்கொடி சாதாரண வாசகனைச் சென்று அடையாததையே காட்டுகிறது. ஞாயிறு பத்திரிகையாக வேறு செய்திப் பத்திரிகை இல்லாத நிலையிலும் மணிக்கொடிக்கு நேர்ந்த இந்நிலைமை யோசிக்கத்தக்கது. 5.8.34 இதழில் ஒரு விளம்பரம், அடுத்த வாரத்திலிருந்து மணிக்கொடி சனிக்கிழமை யன்றே வெளியூர்களுக்கு அனுப்பப்படும் என்று வசதிசெய்து தந்தது.

பம்பாய் சீனுவாசன், பம்பாய்க்குத் திரும்பிப் போனதும், காந்தி சொக்கலிங்கம், சிவராமனோடு தினமணிக்குப் போய்ச் சேர்ந்ததும், வ.ரா.வை விலக்கி வீட்டில் உட்கார வைத்ததும், கவனிப்பார் இல்லாத குழந்தையாக மணிக்கொடி மேலும் தளர்ச்சியடைந்தது. 27.1.35 மணிக்கொடியில் நிறைவாக இப்படி ஒரு அறிக்கை வந்தது.

> மணிக்கொடி நிர்வாகத்தில் ஏற்பட்ட சில மாறுதல்களினாலும், அசந்தர்ப்பங்களினாலும் பத்திரிகை வெளியீட்டில் சிறிது அயர்வு ஏற்பட்டுள்ளது. இரண்டு மூன்று வாரங்களாகக் குறித்த தேதியில் பத்திரிகை பிரிசுரிக்கப்பட முடியாமல் போய் விட்டது.
>
> புது முயற்சிகளும் ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. அடுத்த வாரம் விவரங்கள் வெளியிடப்படும்.
>
> - மானேஜர்

பம்பாய் சீனுவாசன் தம் தந்தையின் ஈமக்கடன் முடித்த (35, ஜனவரி, மூன்றாம் வாரம்) கையோடு, கடைசி இரண்டு மூன்று மாதங்களில் பத்திரிகையின் பெயரால் ஏறியிருந்த கடனைத் தீர்த்து, பத்திரிகையை நடத்துவது சாத்தியமல்ல என்று முடிவு செய்து, தம் சிந்தனைக் குழந்தைக்கும் முடிவுதேடிவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

'நான் ஒரு லட்சியக் கூடாரம் அடித்தேன். ஒரு காற்று வீசியது. அதில் முளைகள் பிய்த்துக் கொண்டு வந்து விட்டன. டேராத்துணியே காற்றோடு போய்விட்டது' என்று பின்னாளில் கு. சீனுவாசன் மணிக்கொடி பற்றிக் குறிப்பிட்டார்.

தினமணி

1934

'டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் பத்திரிகைகளின் வாயிலாக விடுதலை உணர்ச்சிக்கும் தேசிய உணர்ச்சிக்கும் உரமூட்டினார். அரசியல் நுட்பங்களையும் ராஜதந்திரங்களையும் சாதாரண மக்களுக்கும் விளங்கும் வண்ணம் தெளிவுபட எழுதுவதில் அவர் சமர்த்தர். தமிழில் அரசியல் தலையங்கங்கள் எழுதுவதில் அவர் சிறந்த முன்மாதிரியை ஏற்படுத்தினார். தமிழ் எழுத்துகள் சொக்கலிங்கத்தின் பேனாவில் இருந்து வெளிப்படும்போது ஒரு புதிய வலிமையும் ஆவேசமும் பெற்று விளங்கும்.'

– சி. சுப்பிரமணியம்

8 பக்கங்கள்

தினமணி

DHINAMANI

Tuesday 11th September 1934

காங்கிரஸ் காரியக்கமிட்டி நிராகரிப்பு

சமரசப் பேச்சுகள் விவரம்

கற்பரசியின் நிரம்

அமெரிக்க கப்பல் தீ விபத்து

பித்தாபுரம் மஹாராஜா

தினமணி

பொன். தனசேகரன்

தமிழியல் அறிஞர்களுள் ஒருவரான வெ. சாமிநாதசர்மா 56 ஆண்டுகளுக்கு முன்பே பர்மாவிலிருந்து வெளிவந்த 'ஜோதி' இதழில் அக்காலத்திய இதழியல் சூழல் குறித்துப் பின்வருமாறு குறிக்கின்றார்:

> இலக்கியக் கடலில் சிறிது பிரவேசித்துப் பார்ப்போம். அதன் முக்கிய அம்சமாயிருப்பது பத்திரிகை. தற்போது வெளியாகும் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால் நான்கு விஷயங்கள் நம் கண்ணை உறுத்துகின்றன. முதலாவது, சோதிட விளம்பரங்கள்; இரண்டாவது தாது புஷ்டியை அதிகரிக்கச் செய்யும் மருந்துகள், மானிட மர்ம சாஸ்திரங்கள் ஆகிய இவை சம்பந்தமான விளம்பரங்கள், மூன்றாவது, ஒரு ரூபாய்க்கு இருநூற்றைம்பது சாமான்கள் என்றும், முந்நூற்றிருபது சாமான்கள் என்றும் வெளியாகிற விளம்பரங்கள்; நான்காவது போட்டிப் பரிசுகள். இவை நான்கும் நமது தேசத்தின் ஈனஸ்திதியையும், ஜனங்களின் தாழ்ந்த மனப்பான்மையையும் பளிங்கு போல் காட்டுகின்றன.
>
> நரம்புகளுக்கு முறுக்கேற்றிக் கொடுக்கும் மருந்துகள், இன்ப சாஸ்திரங்கள் முதலியவை சம்பந்தமான விளம்பரங்கள் யாவும் நமது உடல் சோர்வையும், உள்ளச் சோர்வையும் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடிகளாக இருக்கின்றன. தேச மக்கள் எவ்வளவு தூரம் வலுவிழந்து காணப்படுகிறார்கள் என்பதற்கு இதைவிட அத்தாட்சி தேவையில்லை. ஒரு சிலர், தங்களுடைய சாண் வயிற்றுப் பிழைப்புக்காக, இப்படியெல்லாம் தேசத்தை அலங் கோலப்படுத்திப் பார்க்கிறார்கள். இதைப் பற்றி விஸ்தரித்துச்

சொல்ல எமது உள்ளம் நாணுகின்றது. எந்தத் தேசத்தை அடிமைத்தனமானது அரித்துக் கொண்டு வருகிறதோ அந்தத் தேசத்தில் இந்த மாதிரியான அலங்கோலங்களைப் பார்க்கலாம்.

இதுபோன்ற வியாபார நோக்கை மட்டுமே கொண்ட பத்திரி கைகளும் வந்து கொண்டிருந்த கால கட்டத்தில், போராட்டம்தான் இலட்சியம்; போரின் முடிவுகூட அவ்வளவு இல்லை என்று விடு தலைப் போரில் தங்களை இணைத்துக் கொண்ட இதழ்களும் உண்டு.

புரட்சியின் சாயல் படர்ந்துள்ளதா என்று புலன்காணப்' பூதக் கண்ணாடி வைத்துப் பரிசீலித்த சர்க்காரின் சில்லரை அதிகாரி களின் சீற்றம் இதழுக்கு இதழ் இன்னல், அடுத்தடுத்து அடக்கு முறை, எடுத்ததற்கெல்லாம் ஈடுகாணம், பரிகசித்தால் பறிமுதல், சிந்தனையைத் தூண்டினால் சிறைவாசம், வந்தேமாதரம் என்றால் வாய்ப்பூட்டு என்று தண்டனைகளும், தாக்குதல்களும், கண்டனங் களும், கணைகளும் காத்து நின்றன (தேசியம் வளர்த்த தமிழ் - கா. திரவியம்) அக்காலப் பத்திரிகைகளுக்கு. எனினும் மக்கள் மத்தி யில் எழுந்த விடுதலைப் போரின் எழுச்சியைப் பறைசாற்ற வீர முழக்கத்துடன் எழுந்த இதழ்கள் அநேகம்.

அந்த வழியில் 1934ஆம் ஆண்டில் மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் தேதி (பவ ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் தேதி செவ்வாய்க் கிழமை) பிறந்தது தினமணி. விடுதலைக்கு முன்னும் விடுதலைக்குப் பிறகும் 'தினமணி' ஆற்றிய பங்கு தமிழ் தினசரிப் பத்திரிகையுலக வரலாற்றில் குறிப் பிடத்தகுந்த இடத்தை ஈட்டித்தந்துள்ளது.

தினமணி என்ற பெயர் ஒரு போட்டியின் மூலம் கிடைத்த பெய ராகும். விரைவில் துவக்க இருக்கும் ஒரு தேசிய நாளிதழுக்கு சுருக்கமான பொருள் பொதிந்த பெயர் தெரிவிக்கும்படி 'எக்ஸ் பிரஸ்' வாசகர்களைக் கேட்டுக்கொண்டார்கள். தக்க பெயர் தெரிவிப்பவர்களுக்கு ரூ.10/- பரிசாக அறிவிக்கப்பட்டது. டி.என். அட்சயலிங்கம் என்ற மயிலாப்பூர்வாசியும் எஸ். ஸ்வாமிநாதன் என்ற தியாகராயநகர்வாசியும் ஒரே பெயரைத் தெரிவித்தார்கள். அவர்கள் இருவருமே தெரிவித்த தினமணி என்ற பெயர் ஏற்கப்பட்டுப் பரிசுத்தொகை தலைக்கு ரூ.5/- எனப் பகிர்ந்து அளிக் கப்பட்டது. தினமணி என்ற சொல் சூரியனைக் குறிக்கும். தினமும் ஒலிக்கும் மணி எனவும் பொருள்படும். "தியாகராஜ ஸ்வாமிகள்,

'தினமணி வம்ச' என்று பாடி இருப்பதும், இலங்கையில் 'தின மினா' என்ற பெயர் கொண்ட சிங்கள நாளிதழ் இருந்ததும் இப் பெயரைத் தெரிவிக்கத் தூண்டியிருக்க வேண்டும். தெருவில் கூவி விற்கும் பத்திரிகைப் பையன்கள் எளிதில் உச்சரிக்கத் தக்க பெயர் என்ற காரணமும் கவனிக்கப் பெற்றது" என்கிறார் ராம்நாத் கோயங் காவிடம் உதவியாளராக இருந்தவரும் பாரதி அன்பருமான எழுத் தாளர் ரா.அ. பத்மநாபன்.

முதன்முதலாகத் தினமணி ஆசிரியர் குழுவுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டவர் 'சுதந்திரச்சங்கு' தேசிய வார மும்முறை இதழின் ஆசிரியராக இருந்த சங்கு சுப்பிரமணியம். ஆனால் பிறகு தின மணியின் ஆசிரியராக அறிவிக்கப்பட்டவர் பேனா மன்னர் டி. எஸ். சொக்கலிங்கம்.

டி.எஸ். சொக்கலிங்கம் தினமணி ஆசிரியரானது பற்றித் தினமணியின் முன்னாள் ஆசிரியர் ஏ.என். சிவராமன் கூறுகிறார் (தினமணி சுதந்திரப் பொன்விழா மலர்):

> 1934ஆம் ஆண்டு என்பது இந்திய விடுதலைப்போரில் ஒரு முக்கியமான ஆண்டு. மத்திய சட்டசபைக்குத் தேர்தல் நடந்த ஆண்டு அது. சென்னை நகரில் திரு. சத்தியமூர்த்தி, திரு. ஏ. ராமசாமி முதலியார் போட்டி வேட்பாளர்கள்.
>
> அந்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்குப் பிரசாரம் செய் வதையே நோக்கமாகக் கொண்டு திரு. சதானந்த் தினமணியை ஆரம்பித்தார்.
>
> 1934இல் தினமணி ஆரம்பிக்க வேண்டிய ஏற்பாடுகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் சந்தானம் செய்து கொண்டிருந் தார். சிறை சென்றவர்களுள் நாலைந்து பேரைத் துணையா சிரியர்களாகவும் ஒருவரை ஆசிரியராகவும் தேர்ந்தெடுத்திருந்தார்.
>
> அந்தச் சமயம் சதானந்த், சந்தானத்துக்குக் கடிதம் எழுதி டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களை அணுகி எப்படியாவது அவரைத் தினமணிக்கு எடிட்டராகும்படி செய்யுங்கள் என்று கூறினார்.
>
> சதானந்தத்திற்கு யோசனை கூறியது யார் என்று எனக்குத் தெரியும். அதை இப்போது சொல்ல வேண்டியதில்லை. சந்தானம் சொக்கலிங்கத்தைச் சந்தித்துப் பேசினார். பேச்சின் முடிவில் சிவராமனையும் சேர்த்து அழைத்தால் வருகிறேன் என்று சொல்லி விட்டார் சொக்கலிங்கம்.

சிவராமன் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் (சந்தானமும் அடியேனும் திருச்சிச் சிறையில் உடனிருந்தவர்கள்). நான் உதவி ஆசிரியர்களைப் பொறுக்கிய போது, சிவராமனையும் அழைக்கலாம் என்றுதான் கருதியிருந்தேன். சிவராமனையும் உங்களையும் பிரிக்க முடியாது என்பதால் அவரை அழைக்கவில்லை. ஒரு எடிட்டரை அணுகி உன் பேப்பரை நிறுத்திவிட்டு என் பத்திரிகைக்கு வா என்பது உசிதமானது அல்ல என்றுதான் நான் உங்களை இதுவரை அழைக்க விரும்பவில்லை. தாராளமாக வாருங்கள்' என்று சந்தானம் கூறினார். சிவராம் வரத் தயாராக இருந்தால் நானும் வருகிறேன் என்று சொல்லிவிட்டார் சொக்கலிங்கம். இதைச் சொக்கலிங்கமே எனக்குத் தெரிவித்தார்.

அன்றிருந்த சூழ்நிலையில் 1934இல் வரப்போகும் தேர்தலில் பிரசாரம் தீவிரமாவதற்கு உங்களை ஆசிரியராகக் கொண்ட ஒரு பத்திரிகை தேவை. நீங்கள் போங்கள்; நான் ஊருக்குப் போகிறேன் என்று திரு. சொக்கலிங்கத்திடம் சொன்னேன்.

தினமணிக்குச் சொக்கலிங்கம் ஆசிரியராக இருப்பது காங்கிரஸ் வெற்றிக்கு அவசியம் என்று நான் கருதினேன். நீ வராவிட்டால் நான் போக மாட்டேன் என்று சொக்கலிங்கம் பிடிவாதம் பிடித்தார். ஆகவே அவரும் நானும் தினமணிக்கு வந்து சேர்ந்தோம்

என்கிறார் சிவராமன்.

முதல் இதழில் 'தின' 'மணி' ஆகிய இரண்டுக்கும் இடையே குறுக்காக இருக்கும் இரு மூவர்ணக் கொடிகள். அதற்குக் கீழே ஆசிரியர்கள் எஸ்.வி. ஸ்வாமி, டி.எஸ். சொக்கலிங்கம் (எஸ்.வி. ஸ்வாமி விரைவிலேயே அச்சிட்டு வெளியிடுபவராகிவிடுகிறார்) விலை அரையணா. எட்டுப் பக்கங்கள்; 'ஏழை துயர் துடைக்க எல்லோரும் களித்திருக்க எவருக்கும் அஞ்சாத 'தினமணி' என்ற முழக்கத்துடன் வெளியானது முதல் இதழ் தினமணி.

மகாகவி பாரதியின் 'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா' என்ற எழுச்சிக் கவிதை இதழின் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. உள்பக்கத்தில் 'கொட்டு முரசே' என்ற பாடல். பாரதியின் நினைவு நாளில் முதல் இதழ் வெளிவருவதால் 'வாழ்க பாரதி' என்ற துணைத் தலையங்கம். இப்படி முதல் இதழிலேயே 'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்' என்ற பாரதியின் கொள்கை முழக்கமாக தினமணி திகழ்ந்தது. தினமணியின் ஆசிரியர் சொக்கலிங்கம்,

உதவி ஆசிரியராக இருந்த ஏ.என். சிவராமன் உள்ளிட்ட பலர் சுதந்திரப் போராட்ட வீரர்கள். விடுதலைப் போராட்டத்தில் காந்தி யின் தலைமையிலான காங்கிரஸ் இயக்கத்தில் தங்களை ஈடு படுத்திக் கொண்டவர்கள். எனவே தினமணி இதழும் அவர்களது நோக்கத்துக்கு ஏற்ற வகையிலே வெளிவந்தது.

தினமணி இதழின் முதல் தலையங்கமே (11.9.1934) பத்திரிகையின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. 'அறி முகம்' என்ற தலைப்பில் வெளியான அந்தத் தலையங்கம்:

> பல மாதங்களுக்கு முன்னரே இப்பத்திரிகை வந்திருக்கவேண் டும். பல இடையூறுகளால் தாமதமாயிற்று.
>
> தமிழில் பல தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. மற்றுமோர் பத்திரிகை தோன்றுவது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அறிகுறி யென்று சிலர் நினைப்பர். பெரும்பாலோர் தினமணியின் போக் கைப் பார்த்து முடிவு செய்யலாம் என்று நடுநிலைமை வகித் திருப்பர்.
>
> போர்க்காலத்தில் யுத்த வீரர்களுக்குப் பக்கபலமாக சேவகர்கள் பலர் வேண்டும். தொத்து நோய் பரவும் பொழுது நோயாளி களுக்குச் சிகிச்சை செய்யும் ஊழியர்கள் வேண்டும். பஞ்ச காலத்தில் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கும் தொண்டர்கள் வேண்டும்.
>
> நமது நாட்டில் சென்ற பதினைந்து வருஷங்களாக ஓர் அபூர்வ சுதந்திரப்போர் நடந்து வருகின்றது. அதன் நடுவில் ஏற்படும் அற்ப வெற்றிகளால் மயங்காமலும் சிறிய தோல்விகளால் தளராமலும் பாரத தேசம் விடுதலை அடையும் வரையில் தமிழ் மக்களைப் போற்றியும் தேற்றியும் தினமணி துணைபுரியும்.
>
> எல்லா வியாதிகளிலும் மனோவியாதியே மிகக் கொடியது. நமது மக்களின் மனதில் அடிமைத்தனம் குடிகொண்டிருக்கின்றது. காந்தி அடிகளின் பெருமுயற்சியால் சிறிது காலமாகப் பாரத மக்கள் மற்ற நாட்டினரைத் தலையெடுத்துப் பார்க்கவாரம் பித்திருக்கின்றனர். ஆயினும், நமது பெரியாரிடத்தும் சிறியா ரிடத்தும் அடிமைப்புத்தி அகன்றபாடில்லை. அதை அடியோடு அழித்துத் தமிழ் மக்களை மானிகளாகச் செய்வதற்குத் தினமணி ஓயாது பாடுபடும்.
>
> இந்திய ஜனங்களில் பெரும்பாலோர் அழியாப் பஞ்சத்தில் ஆழ்ந் திருக்கின்றனர். இதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள்

முதன்மையானது முதலாளிகளும், ஜமீன்தார்களும் நமது தொழிலாளர்களின் உழைப்பினால் உண்டாகும் செல்வத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு தங்கள் ஆடம்பரங்களுக்காக அழிப்பது தான். இம்முறை மாறி நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி தொழிலாளர்களுக்குச் சேரக்கூடிய புதியதோர் சமூகம் அமைக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் தமிழ் மக்களுக்குத் தினந்தோறும் ஊட்டுவது தினமணியின் தனித்தொண்டாகும்.

இம்மூன்று வித சேவையும் தமிழ்நாட்டிற்கு இன்றியமையா தனவென்று கருதியே தினமணி இன்று உதயமாகிறது. மேற்கூறிய கொள்கைகளைச் சிறிதும் நழுவவிடாமல் பாதுகாப்பதற்குத் தேச சேவையில் தேர்ந்த ஒரு இளைஞர் கூட்டம் அதிக ஊதியத்தை எதிர்பாராமல் இவ்வேலையை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. சுதந்திர சூரியனைக் காணவிரும்பிய தெய்வீகப் பித்தரான சுப்பிரமணிய பாரதியாரின் வருஷாந்திர தினத்தன்று அவருடைய சுதந்திர தாகத்தையும் சமத்துவக் கொள்கைகளையும் தமிழ்நாட்டில் பரப்பும் நோக்கத்துடன் பிறந்திருக்கும் தினமணியைத் தமிழ் மக்கள் வரவேற்பார்கள் என்பது எமது பூர்ண நம்பிக்கை.

தினமணி வெளியான கொஞ்ச காலத்திலேயே தமிழ் மக்களிடையே முக்கியத்துவம் வாய்ந்த இதழாக அது இடம் பிடிக்கத் தொடங்கிவிட்டது. தேசிய, சர்வதேசியச் செய்திகளுடன் இந்திய விடுதலைப் போராட்டச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து காங்கிரஸ் இயக்கத்தின் பிரசார பீரங்கியாகத் திகழ்ந்தது என்றால் மிகையாகாது. 'ஒன்றைத் தாங்கியும் இன்னொன்றைத் தாக்கியும் எழுதும் பிரசார பாணியில் வல்லவரான' ஆசிரியர் சொக்கலிங்கம் இப்பத்திரிகைக்கு அடித்தளம் இட்டவர். "அவருடைய அரசியல் விமர்சனங்கள், ஆணித்தரமான கட்டுரைகள், வேகமான தலையங்கங்கள், விளக்கமான குறிப்புகள், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நடை ஆகியவை தமிழக மக்களிடையே ஆர்வப் பெருக்கை உண்டு பண்ணின. கனல் கக்கும் எழுத்து, கருத்தாழம் கொண்ட கட்டுரைகள், கவர்ச்சி மிக்க நடை ஆகியவை சொக்கலிங்கத்தின் தனிப்பாணியின் முத்திரைகளாக விளங்கின. அவர் எழுத்து படிப்பவர்களை உலுக்கியது. அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டியது. அதிர்ச்சி அளித்தது. ஆர்வத்தைப் பெருக்கியது. 'உண்ணல் ஊதல் உறிஞ்சல்' என்ற தலைப்பில் அவர் அன்றாட நிகழ்ச்சிகளை விமர்சித்து எழுதிய குறிப்புகளில் நயமும் நையாண்டியும் விளையாடின." (தேசியம் வளர்த்த தமிழ், கா. திரவியம்)

எனினும் கூட இப்பத்திரிகை நிறுவனத்துக்கு கடன் ஏற்பட்டது. அதனைத் தீர்க்க முடியாத சூழ்நிலையில் தினமணி, எக்ஸ்பிரஸ் ஆகிய இதழ்கள் ராம்நாத் கோயங்கா கைக்கு மாறின.

ஆனாலும் விடுதலைப் போராட்டப் பாதையில் எந்தவிதத் தடங்கலும் இன்றிப் பீடுநடை போட்டது தினமணி

15.10.35இல் முதல் பக்கத் தலைப்புச் செய்தி 'இந்து சமுகத்திலிருந்து வெளியேறுங்கள்', 'பம்பாய் ஹரிஜனங்கள் தீர்மானம்', 'சம அந்தஸ்தை அளிக்கும் மதத்தில் சேருவோம்', 'டாக்டர் அம்பேத்கரின் கடும் சினம்' என்பதாகும்.

அம்பேத்கரின் கோபம் நியாயமானது என அன்றைய தினமணியின் துணைத் தலையங்கம் எடுத்துரைக்கின்றது. மேலும் இந்து சமுகம் சீரழியாமல் இருக்க வேண்டும் என்றால், அவரது எச்சரிக்கையின் உட்கருத்தை ஒவ்வொரு இந்துவும் உணர்ந்து தீண்டாமையை ஒழிக்க உற்சாகத்துடன் பாடுபட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

8.9.39இல் மதுரை ஸ்ரீ மீனாட்சி ஆலயத்தில் ஹரிஜனங்கள் - மதுரையில் மாபெரும் வெற்றி - மூலஸ்தானம் வரை சென்றனர் - யாரும் எவ்வித ஆட்க்ஷேபணையும் செய்யவில்லை - மற்ற நகரங்கள் பின்பற்றத் 'திரு. நேரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் முதல் பக்கத்தில் விரிவான செய்தி வெளியாகியது.

10.7.39இல் மீனாட்சி அம்மன் தரிசனம் என்ற தலையங்கம் வெளியானது. எதிர்பாராதது நடந்து விட்டது. கனவிலும் காண முடியாதது. கண்ணெதிரே கைகூடிவிட்டது. இதுவரை கோவிலுக்குள் அநுமதிக்கப்படாத ஹரிஜனங்களும் மற்ற ஜாதியரும் மதுரை மீனாட்சியம்மனைச் சென்ற சனிக்கிழமையன்று தரிசனம் செய்யும் பேறு பெற்றார்கள். சட்டமில்லை. பலவந்தமில்லை. குழப்பமில்லை. இவ்வளவுக்கும் பதிலாக அன்பையும் விவேகத்தையும் ஆயுதங்களாகக் கொண்டு ஒரு மகத்தான புரட்சி நடந்து விட்டது - என்று அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படிச் சமூகப் பிரச்சினைகளிலும், அரசியல் பிரச்சினைகளிலும் தனது சமூகக் கடமையைத் தொடர்ந்து ஆற்றி வந்தது தினமணி. எந்தப் பிரச்சினையிலும் காங்கிரஸ் இயக்கத்துக்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது.

4.7.39 இதழில் 'காங்கிரஸ் கட்டுப்பாடு' என்ற தலையங்கத்தில் காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக நடப்பவர்கள் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தியது.

'காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமாவுக்குத் தயார்; பிரிட்டனின் அறைகூவலுக்குக் காரியக்கமிட்டியின் பதில்; பாதுகாப்பு என்ற போர்வையில் யுத்தத் தயாரிப்புகளை அனுமதியோம்' - இது 12.8.39இல் வெளியான முதல் பக்கத் தலைப்புச் செய்தி. அதே தினத்தில் 'யுத்த எதிர்ப்பு முரசு' என்று காங்கிரஸ் கொள்கைக்கு ஆதரவான தலையங்கம் வெளியாகியுள்ளது.

'காங்கிரஸ் இலட்சியத்திற்கு விரோதமில்லாமலும், காங்கிரஸ் தீர்மானங்களுக்குப் பாதக மேற்படாமலும் நடக்க வேண்டியதே காங்கிரசை ஆதரிக்கும் பத்திரிகைகளின் கடமை. காங்கிரஸ் தலைவர்கள் செய்யும் ஒவ்வொரு செய்கையையும் அவர்கள் பேசும் ஒவ்வொரு பேச்சையும் அப்படியே ஆதரித்துத் தலையாட்ட வேண்டும் என்பது அவசியமல்ல. அவற்றில் காங்கிரஸ் நன்மைக்கு விரோதமானவைகள் இருந்தால் அவற்றை எடுத்துக்காட்டிக் கண்டிப்பதே காங்கிரஸ் பத்திரிகைகளின் கடமை. அப்படியானால்தான், தலைவர்களும் ஜாக்கிரதையாக நடப்பார்கள். தனிப்பட்ட முறையில் எந்த காங்கிரஸ் தலைவரிடமும் பாரபட்சமாய் நடப்பது பத்திரிகா தர்மத்திற்கு விரோதமானது. காங்கிரஸ் இலட்சியத்திற்கும் நன்மைக்கும் விரோதமாய் யாராவது நடப்பதாய்த் தெரிய வந்தால் உடனே அதை வெளியிட வேண்டியதும் காங்கிரஸ் பத்திரிகைகளின் முதல் கடமையாகும். அக்கடமையைத் தேசீயப் பத்திரிகைகள் செய்து வந்தால்தான் காங்கிரஸ் குற்றம் குறையில்லாமல் செழிப்பாய் வளர முடியும். அம்மாதிரி குணதோஷம் கூறுவதை விரும்பாத தலைவர்கள் ஏதேச்சாதிகாரத்தை விரும்புகிறவர்களேயொழிய, ஜனநாயகத்தை விரும்புகிறவர்களல்ல. ஸ்ரீ சத்யமூர்த்தி சமீபத்தில் செய்த ரேடியோப் பிரசங்கத்தில் பத்திரிகைகளை ரொம்ப விலக்கி விடவும் கூடாது. சமீபத்தில் சேர்த்துக் கொள்ளவும் கூடாது. மத்தியில் வைக்க வேண்டும் என்று சொன்னார். இதே உபாயம்தான் இராஜீயவாதிகளுக்கும் பொருந்தும்.

பத்திரிகைகள் அவர்களை எட்ட நிறுத்தி வைக்கவும் கூடாது. சமீபத்தில் சேர்த்துக் கொள்ளவும் கூடாது. மத்தியில் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் நிதானந் தவறாமல் அவர்கள் நடப்பார்கள்.

இராஜீயவாதிகள் ஒரு விஷயத்தில் இன்று தீவிரமாக இருக்கலாம். அதே பேர்வழிகள் நாளை மிதமாக இருக்கலாம். எனவே கண்ணை மூடிக்கொண்டு அவர்களை ஆதரித்து விட முடியாது. தேசத்தின் நன்மையை மனதில் நிறுத்தி அவர்கள் செய்பவைகளைக் கவனிக்க வேண்டும்' என்கிறார் டி.எஸ். சொக்கலிங்கம் (தினமணி ஆண்டுமலர் 1936).

அக்கால கட்டத்தில் தினமணியில் வெளியான செய்திகளும், தலையங்கங்களும் காங்கிரஸ் இயக்கத்திற்குச் சார்பாகவே வெளி வந்து கொண்டிருந்தன. சுயமரியாதைக் கட்சிக்காரர்களை (சு.ம. காரர்கள் என்ற எள்ளலுடன்) இவரது பேனா தொடர்ந்து கடுமையாகத் தாக்கி எழுதியபடி இருந்தது என்பது அன்றைய இதழின் பக்கங்களைப் புரட்டுபவர்களுக்குத் தெரிய வரும். அதே போல ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைக்குப் பணியாத போக்கையும் காணலாம்.

1937ஆம் ஆண்டில் தென்காசித் தொகுதியிலிருந்து சொக்கலிங்கம் சட்டப்பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பத்திரிகை ஆசிரியராகவும் தொடர்ந்து இருந்தார். 1940ஆம் ஆண்டில் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார். அவருக்கு 9 மாதக்கடுங்காவல் சிறை தண்டனையும் 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அவர் சிறைக்குச் சென்ற காலத்தில் (25.11.1940லிருந்து 18.8.1941 வரை) ஏ.என். சிவராமன் ஆசிரியராக இருந்தார். சிறையில் இருக்கும் கால கட்டத்தில் பத்திரிகையின் ஆசிரியராக இருக்கும் ஏ.என். சிவராமன் பற்றி வாசகர்களுக்கு 25.11.1940இல் அறிமுகப்படுத்தி எழுதுகிறார்.

> நண்பர்களுக்கு,
>
> இன்று முதல் ஸ்ரீ ஏ.என். சிவராமன், 'தினமணி'க்கு ஆசிரியராக இருப்பார். தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ஸ்ரீ சிவராமனை அறிவார்கள். புத்தகம் படிக்கும் பழக்கமுள்ளவர்களும் ஸ்ரீ சிவராமனை நன்கு அறிவார்கள். ஏனெனில், அவர் எழுதிய 'மாகாண சுயாட்சி' என்ற அற்புதமான புத்தகத்தை இராஜீயத்தில் சிரத்தையுள்ள ஒவ்வொரு தமிழரும் கண்டிப்பாய்ப் படித்திருப் பார்கள். இராஜீய ஞானமும், பொருளாதார ஞானமும் அவருக்கு தனபாட விஷயங்கள். தேச பக்தியிலும் அவர் சிறந்தவர். தேச பக்தியோடு தன்னல மறுப்பையே பிரதானமாக அவர் கருதியபடியால்தான் அவருடைய பெயர் இதுவரை பிரபலமாக வில்லை. விளம்பரமில்லாமல் பின்னாலிருந்து உருப்படியாக

வேலைகளைச் செய்ய வேண்டுமென்ற உயர்ந்த கொள்கையைக் கொண்டவர்களில் அவரும் ஒருவர். இவ்வளவையும் நான் சொல்ல வந்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது 'தினமணி'யைத் திறமையாக நடத்துவதற்கு அவர் சகல குணங்களும் வாய்க்கப் பெற்றவர் என்பதுதான்.

தினமணியின் நண்பர்கள் 'தினமணி'யிடம் வைத்திருக்கும் அபிமானத்திற்கும் ஒரு காரணம் முக்கியமானது. அதுதான் நண்பர்களுக்கும் தினமணிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு. இந்தத் தொடர்புதான் பரஸ்பர நம்பிக்கையையும், அன்பையும் பெருக்கியிருக்கிறது. இந்தத் தொடர்பை ஸ்ரீ சிவராமன் பூரண மாக அறிவார். அவர் 1920இல் ஒத்துழையாமை இயக்கத் திற்காகக் கல்லூரிப் படிப்பை விட்டதிலிருந்து சுமார் 20 ஆண்டு களாக அவரும் நானும் அநேகமாக ஒன்றாகவே இராஜீயத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டு வேலை செய்து வந்திருக்கிறோம். ஆகவே, தினமணி இது வரை எந்தக் கொள்கையில் நடத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை அவர் அறிவார். அந்தக் கொள்கைக்கு அவரும் ஒரு பங்கு பொறுப் பாளியாகவே இருந்து வந்திருக்கிறார். இந்த முறையில் இது வரை தினமணி நடத்தப்பட்டு வந்திருக்கிறபடியால் தினமணிக் கும் அதன் நண்பர்களுக்கும் உள்ள தொடர்பை அவர் பூரணமாய் அறிந்திருக்கிறார் என்பதை நண்பர்கள் தெரிந்து கொள்ளலாம். எனவே, அவருடைய ஆசிரியத் தலைமையில் நடைபெறும் தின மணி இதுவரை அதன் நண்பர்களிடம் எவ்வளவு அபிமானத் தைப் பெற்று வந்ததோ அதைப் போலவே இனியும் பெற்று வரும் என்பதில் எனக்குச் சந்தேகம்இல்லை.

- டி.எஸ். சொக்கலிங்கம்

ஒரு பத்திரிகை ஆசிரியர் தன் கீழ் உள்ள உதவி ஆசிரியரின் திறமையைப் பாராட்டும் பாங்கை இன்றைக்குக் காணமுடியுமா என்பது சந்தேகமே. சொக்கலிங்கத்தால் அடித்தளமிடப்பட்ட தினமணியை அடுத்த, 40 ஆண்டு காலத்துக்கு வளர்ச்சிப் படிக்கட் டுகளில் கொண்டு சென்ற பெருமை ஏ.என். சிவராமனுக்கு உண்டு. அவருடன் கருத்து மாறுபாடு கொண்டவர்கள்கூட அவர் என்ன கூறுகிறார் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்த நிலையும் இருந்தது. உள்ளூர்ச் செய்தியிலிருந்து உலகச் செய்திவரை யிலும், விஞ்ஞான பிரச்சினைகளிலிருந்து பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் வரையிலும் உள்ள அனைத்து விஷயங்களையும் சாமானியர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று விரும் பியவர். அதற்கேற்பப் பத்திரிகைகளில் செய்திகள் வரவேண்டும்

என்று அக்கறை கொண்டவர். எழுதியதில் தவறுகண்டால், அதனை எங்காவது கண்ணில் படாத இடத்தில் திருத்தம் என்று போட்டு விட்டுக் கடமையைக் கைகழுவிவிட விரும்பாதவர். திருத்தமும் தெளிவாகக் கண்ணில் படவேண்டும் என்று விரும்பியவர்.

ஆசிரியர் ஏ.என். சிவராமன் அவர்கள் மிகச் சிக்கலான விஷயங்களைக் கூடச் சிறப்புக் கட்டுரைகள் வாயிலாக 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல விளக்கி, ஆங்கிலப் பத்திரிகைகளை விடக் கூடுதலான தரத்துடன் ஒரு தமிழ்ப் பத்திரிகையை நடத்த முடியும் என்பதை நிலைநாட்டியிருக்கிறார். அவர் எழுத்தில் நாம் முக்கியமாகக் காண்பது தெளிவு.

'அரசியல் நிர்ணயசபை, பொருளாதாரப் பிரச்சினைகள், தேர்தல் முறை, கல்விச் சீர்திருத்தம், பயிற்றுமொழி, நாணய மதிப்புக் குறைப்பு, பல நாடுகளின் அரசியல் வரலாறுகள் ஆகியவற்றையெல்லாம் அவர் பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்குப் புரிய வைத்திருக்கிறார்' என்று சோமலெ கூறுவதில் (தமிழ் இதழ்கள்) மிகையில்லை.

தினமணியில் 1942ஆம் ஆண்டு இந்திய சுதந்திரப் போராட்டத்தின் உச்சகட்டமாக வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடந்து வந்தது. ஆங்கிலே அரசு கடுமையான கெடுபிடிகளைக் கையாண்டது. பத்திரிகைகளுக்குத் தணிக்கை முறையைக் கொண்டு வந்தது. தணிக்கைக்கு மறுத்துத் தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழ்களை நிறுத்தி விடுகிறார் ராம்நாத் கோயங்கா. அரசின் அண்மைய ஆணையைப் பின்பற்றுவதாக இருந்தால் நமது நாளேடு இந்திய அரசிதழின் அழகான வெளியீடாகத் தான் இருக்கும் - நமது நாளேட்டின் வாயிலாக மக்களுக்கு நேர்மையான சேவையைச் செய்ய முடியும் என்று நம்பும்போது மீண்டும் நாளேட்டை வெளியிடுவோம் - என்று 19.8.1942ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் இதய ஒலியா? பணப்பையா? என்ற தலைப்பில் தலையங்கம் எழுதினார்.

21.11.1942இல் தினமணி மீண்டும் வெளிவரத் தொடங்கியது. அப்போது தினமணியின் நிலையை விளக்கி எழுதப்பட்ட தலையங்கத்தின் ஒரு பகுதி:

> தினமணி இன்று முதல் மீண்டும் வெளிவருகிறது. சுமார் 3 மாதங்களாகத் தினமணியை நிறுத்தி வைத்ததற்கான காரணத்தை நண்பர்கள் அறிவார்கள். எதற்காகத் தினமணி நிறுத்தி

வைக்கப்பட்டதோ, அந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டதா என்று நண்பர்கள் யோசிப்பது இயற்கையே.

அகில இந்திய பத்திரிகையாசிரியர்கள் மாநாடு பம்பாயில் நடைபெற்றது. அதில் எல்லா ஆசிரியர்களும் ஏகோபித்து ஒரு தீர்மானம் செய்தார்கள்.

பம்பாய் தீர்மானத்தின் நோக்கத்தைச் சென்னை சர்க்கார் அப்படியே ஒப்புக்கொள்ளாவிட்டாலும், எழுத்தளவில் அனேக மாய் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் பல தொந்தரவுகளும் இடையூறுகளும் நீங்கியிருக்கின்றன. ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளின் தயவுக்காக நிருபர்கள் காத்திருக்க வேண்டிய அவசியமோ, சென்னையில் சென்ஸாரின் உத்தரவை எதிர்பார்த்துப் பத்திரிகைத் தயாரிப்பைத் தாமதப்படுத்த வேண் டிய அவசியமோ தற்சமயம்இல்லை.

இயக்கம் சம்பந்தமான எல்லாச் செய்திகளையும் தங்களிடம் கேட்டுக் கொண்டுதான் பிரசுரிக்க வேண்டுமென்று சர்க்கார் முன்பு சொன்னார்கள். இப்பொழுதோ இன்னின்ன விஷயங் களில் மட்டும் தங்களிடம் கேட்டால் போதும் என்று சொல் கிறார்கள். இதுதான் வித்தியாசம். இந்தப் பலத்தின் மீதுதான் தினமணி மீண்டும் பிரசுரமாகிறது.

சர்க்கார் இப்பொழுது ஒப்புக் கொண்டிருக்கும் அளவு போதுமா என்று நண்பர்கள் கேட்கலாம். போதுமா, போதாதா என்று ஆலோ சனை செய்வதற்கே இடமில்லை. ஏனெனில், அப்படி ஆலோ சனை செய்யப் பம்பாய்த் தீர்மானம் இடம் கொடுக்க வில்லை. பம்பாய் மாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பின்பு அதை சகல ஆசிரியர்களும் ஒப்புக் கொள்வதைத் தவிர வேறுவழி யில்லை. அதுதான் ஜனநாயகம். தற்கால நிலைமையில் அதுதான் காரிய சாத்தியம்.

இந்தியாவிலுள்ள எல்லா பத்திரிகைகளும் ஒன்று சேர்ந்து பத்திரிகைகளின் உரிமைகளைப் பாதுகாக்க முன்வந்திருக்கு மானால், இந்திய பத்திரிகைகள் எல்லாம் பிரசுரத்தை நிறுத்தி விடத் தயாராய் இருந்திருக்குமானால், இந்தப் போராட்டத்தில் பத்திரிகைகள் வெற்றி பெற்றிருக்குமென்பதில் சந்தேக மில்லை. அப்படி நடைபெறாத வரையில் முழு வெற்றி எப்படி கிடைக்க முடியும்? அதை எதிர்பார்க்க என்ன உரிமை இருக் கிறது?

போனது போகட்டும் தினமணி மீண்டும் இன்று பிரசுரமாக ஆரம் பித்து விட்டது...

தமிழ்ப் பத்திரிகைகள் குறிப்பிட்ட வார்த்தைகளை மொழி பெயர்ப்பதில் உள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாமல் புதிய ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் வார்த்தையைக் கண்டு பிடித் ததில் தினமணிக்கும் பங்கு இருக்கிறது.

Dive Bombers என்ற வார்த்தைகளுக்குப் 'பருந்துப் பாய்ச்சல்' விமானங்கள் என்ற தமிழ் பெயரைக் கேட்ட பின்பு அது பொருத்த மாயிருக்கிறதென்று அநேகர் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அந்த வார்த்தை பத்திரிகை நிலையங்களில் எவ்வளவு வேலையைக் கொடுத்தது என்பது வெளியில் உள்ளவர்களுக்குத் தெரியாது. ரஷ்யாவுடன் ஜெர்மனி யுத்தம் ஆரம்பித்த உடன் Scorched Earth Policy என்ற பதம் புதிதாக உபயோகத்துக்கு வந்தது. இதற்குத் தான் 'பொசுக்கல் கொள்கை' என்ற தமிழ்ப் பதம் அமைக்கப்பட்டது. 'Successful Retreat' என்ற பதம் யுத்த செய்திகளில் தற்சமயம் தண்ணீர் பட்டபாடாய் இருக்கிறது. அதற்குத் தமிழ் வார்த்தை களாக 'வெற்றிகரமான வாபஸ்' என்ற பதத்தைத் தமிழ்ப் பத்திரி கைகள் உபயோகிக்க ஆரம்பித்தன.

'தற்காலத் தமிழ் வசன நடையின் பெருமையைப் பத்திரிகைகளே சிரமப்பட்டுத் தேடிவைத்திருக்கின்றன.' தமிழர்கள் பெருமை கொள்ளும் விதத்தில் இன்று தமிழ் நடை சிறப்படைந்திருக்கிறது. 'இன்டர்நாஷனல் சிட்வேஷனைப் பற்றி ஜவாஹர்லால் அனலைஸ் பண்ணினது ஒன்டர்புலாய் இருந்தது' என்றுசொல்ல வேண்டிய அவசியமே தற்சமயம் இல்லை. அப்படிப் பேசினால் ஆங்கிலம் தெரியாத தமிழருக்குப் புரியவே புரியாது. எல்லாத் தமிழருக்கும் புரியக்கூடிய விதத்தில் 'சர்வதேச நிலைமையைப் பற்றி ஜவாஹர்லால் ஆராய்ச்சி செய்து பேசியது அற்புதமாய் இருந்தது' என்று சுலபமாய்ச் சொல்லலாம். இவ்வளவுக்கும் காரணம் தமிழ் பத்திரிகைகள்தான்' (எனது ராஜினாமா, டி.எஸ். சொக்கலிங்கம்).

இப்படிப் பத்திரிகையைக் காலத்துக்கேற்ற வகையில் மக்க ளிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற விருப்பம் தினமணி ஆசிரியருக்கு இருந்ததைப் புரிந்து கொள்ள முடியும்.

உலகச் செய்திகளும், கட்டுரைகளும் தினமணியில் தொடக்க காலத்திலிருந்தே இடம் பெற்று வந்துள்ளன. தினமணி வெளியீடு களாகப் பல நூல்களும் மலிவு விலையில் அச்சிடப்பட்டுள்ளன. பல்வேறு விஷயங்களைத் தமிழில் வாசகர்கள் அறிந்து கொள் வதற்காக இந்நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கதைகளும் நாட கங்களும் கூட இந்நூல் வெளியீடுகளில் அடங்கும்.

தமிழ்ச் சிறுகதையுலகில் சாதனை படைத்த புதுமைப்பித்தன் தினமணியில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். சொக்கலிங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுத் தினமணியில் சேர்ந்த அவர், 1943இல் தினமணி நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகச் சொக்கலிங்கமும் ஆசிரியர் குழுவில் பலரும் வெளி யேறியபோது தாமும் தினமணியை விட்டு வெளியேறினார்.

'தினமணியில் சேரும்போது புதுமைப்பித்தனுக்குக் குறைந்த சம்பளம்; விலகும் காலத்திலும் அவரது வருமானம் அப்படி யொன்றும் அதிகமில்லை. தேவைக்குக் காணாத சம்பளம். எனவே புதுமைப்பித்தன் தினமணியில் ஸ்திரமான ஸ்தானத்தைப் பெற் றிருந்தார் என்பதைத் தவிர குறிப்பிடத்தக்க வாழ்க்கை வசதிகள் எதுவும் அவருக்குக் கிட்டவில்லை. மணிக்கொடி சேவையின் போது 'அடுத்த வேளைச் சாப்பாடு எங்கே?' என்று தெரியாத நிலையிலிருந்த புதுமைப்பித்தன் தினமணி சேவையின் போது 'குறை மாதத்தையும் எப்படிப் போக்குவது' என்ற நிலையில்தான் இருந்தார். செலவுக்குக் கட்டாத வருவாய், அசுரப்பசி கொண்ட தினசரிப் பத்திரிகையின் நித்திய கருமமான தர்ஜுமாத் தொழில் இரண்டும் புதுமைப்பித்தனின் சிருஷ்டி சக்தியைப் பேரளவில் கட்டிப் போட்டிருந்தன என்றே சொல்ல வேண்டும். மணிக்கொடிக் காலத்தில் அசுர வேகத்தில் இலக்கியம் படைத்த புதுமைப் பித்தனின் பேனா, 'அஸோஸியேட்டெட் பிரஸ்' 'ராயட்டர்' தந்தி களைத் தமிழாக்கும் காரியத்தில் சிக்கித் தவித்தது. இருந்தாலும், தினமணிப் பத்திரிகையின் ஆண்டு மலர்கள் அனைத்தும் புதுமைப் பித்தனின் மேற்பார்வையில், புதுமைப்பித்தனின் படைப்புகளையும் தாங்கி வெளிவந்தன. 'நினைவுப்பாதை' போன்ற உயர்ந்த கதைகள் அக்காலத்துப் படைப்புகள்தான்' என்கிறார் 'புதுமைப்பித்தனின் வரலாறு' என்ற நூலில் ரகுநாதன்.

புதுமைப்பித்தனின் நக்கீரப் பார்வைக்குத் தினமணியில் அவர் எழுதிய புத்தக மதிப்புரைகள் ஓர் உதாரணம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட சர். ஸி.வி. இராமன் என்னும் புத்தகத்திற்குப் புது மைப்பித்தன் 1938இல் எழுதிய மதிப்புரையின் ஒரு பகுதி.

> ...இதைப் பாடப் புத்தகமாக வைக்கலாம். ஏனென்றால் கற்றுக் கொடுப்பவர்களுக்கும், கற்றுக் கொள்கிறவர்களுக்கும் பரஸ் பரம் புரிந்து கொள்ளாமல் பேசிக்கொண்டிருப்பதற்கு ஏற்ற

தொரு சாதனமாகத்தான் பாடப்புத்தகம் உபயோகப்பட்டு வருகிறது.

'திருமுருகாற்றுப் படையை எவர் பாராயணம் செய்தாலும் அவர் வியாதி, கவலை, வறுமை, மகப்பேறின்மை முதலிய துன்பம் நீங்கி வேண்டியவை வேண்டியாங்கு எய்துவர் என்பது அத் தொண் டர்களது துணிந்த கொள்கையும், அனுபவமும் ஆகும்' என்று ந.செ. ராமச்சந்திரய்யர் என்பவர் திருமுருகாற்றுப்படைக்கு எழுதிய உரை நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார். அதற்கு புதுமைப்பித்த னின் காட்டமான விமர்சனம்:

> பக்தி எல்லையை இவ்வளவு குறுகலாக வைத்துக் கொள்ள வேண்டாம் என்பதைத் தெய்வகட்சியைச் சார்ந்தவர்கள் கூட ஒப்புக் கொள்ளுவார்கள். தெய்வ பக்தி, பிள்ளை பெறுவதற்கு உபயோகப்படும் சிட்டுக்குருவி லேகியமல்ல.

கல்கியுடன் 'ரஸமட்டம்' என்ற புனைபெயரில் நடத்திய கட்டுரைப் போர் அக்காலத்தில் வாசகர்களிடம் பெரும் பரபரப்பையே ஏற் படுத்திவிட்டது. புதுமைப்பித்தனின் தயாரிப்பில் உருவான ஆண்டு மலர்கள் இன்றும் பேசப்படும்படியாக உள்ளன.

விடுதலைப் போராட்டத்தில் காங்கிரஸ் இயக்கத்துக்காக அர்ப்பணித்துக் கொண்ட தினமணி இந்திய விடுதலை தினமான 1947 ஆகஸ்டு 15க்கு முந்தைய தினத்தில் தீட்டிய தலையங்கம் அதன் தொலை நோக்குப் பார்வைக்குச் சான்றாகும்.

> ...இதுவரை நமது சக்தி முழுவதையும் மாற்றானை வெளியேற் றுவதில் செலவிட்டோம். அந்த வேலை முடிந்துவிட்டது. இனிமேல் நமது சக்தி முழுவதையும் வறுமையை விரட்டுவதில் செலவிட வேண்டும். வறுமையைப் பங்கிடுவதை இலட்சிய மாகக் கொள்ளாமல், வறுமை நிமித்தமான துவேஷத்தை வளர்ப்பதில் செலவிடாமல், நாட்டின் செல்வம் பெருகி, ஏழை களின் வறுமை நீங்குவதில் செலவிட வேண்டும். இது ஏழைகள் நிறைந்த நாடு; ஆனால் ஏழ்மையான நாடல்ல. இயற்கை வளம் ஏராளமாக இருக்கிறது. உழைப்பின் மூலம் இங்கு செல்வத் தைப் பெருக்கி வறுமையை ஒழிக்க முடியும். இதுவே முக்கிய மான வேலை. எல்லோருக்கும் கல்வியும் நோயற்ற வாழ்வும் ஏற்பட வேண்டும். இதற்கான முயற்சியில் ஒருமனப்பட்டு உழைத்தால் பிளவில்லாத பாரத சமுதாயம் ஏற்படும். பிறப்பு சம்பந்தமான ஏற்றத் தாழ்வுகள் நீங்க வேண்டும். அவை நீங்கி வருகின்றன. இன்னும் துரிதமாக அவை மறைய வேண்டும்.

அறிவை மறைக்கும்படியான உணர்ச்சியும் துவேஷத்தைப் பெருக்கும் ஆவேசமும் சமுதாய வளர்ச்சிக்குத் துணையாக மாட்டா! வறுமையை நீக்கித் தேசத்தின் செல்வத்தையும், பலத்தையும் வளர்ப்பதாகிய பொதுத் தொண்டில் மனம் செலுத்தினால், சகிப்புத் தன்மையுடன் நாம் ஒரே சமுதாயமாக ஆக முடியும். இதற்கு உழைப்போமாக...'

இந்திய விடுதலைக்குப் பிறகும்கூட இந்திராகாந்தி பிரதமராக இருந்த காலத்தில் 'அவசரநிலை' பிரகடனத்தின்போது அதனை உறுதியாக எதிர்த்து நின்று தனது தொடக்க இலட்சியத்தை மீண்டும் உயிர்ப்பித்துக் கொண்டது தினமணி.

ஆரம்பகாலத்திய தமிழ்ப் பத்திரிகைகளைப் பற்றிய நூல் எழுதவேண்டும் என்று எழுத்தாளர்கள் க.நா. சுப்பிரமணியமும், ஷண்முகசுந்தரமும் அக்காலத்தில் சொக்கலிங்கத்திடம் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. அந்த நூலை அவர் எழுதியிருந்தால் ஓர் ஐம்பது ஆண்டுகாலச் சரித்திரத்தை நாம் விவரமாக அறிந்து கொண்டிருக்கலாம். ஆனால் அது நிறைவேறவில்லை. 'தினமணி' போன்ற அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியமிக்க இதழின் வரலாற்றை அக்காலச் சம்பவங்களையும் இதழியல் போக்குகளையும் எழுத்தில் பதிவு செய்வதற்கு இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. தினமணியின் முன்னாள் ஆசிரியர், ஏ.என். சிவராமன். நினைத்தால் இக்காரியத்தைச் செய்து முடிக்க முடியும். அத்துடன் விடுதலைக்கு முந்தைய தினமணி இதழில் வெளியான முக்கியத் தலையங்கங்கள், கட்டுரைகள், சர்ச்சைகள் போன்றவையும் தொகுக்கப்பட வேண்டும்.

பத்திரிகைகள் காலக் கண்ணாடி. நம் கடந்த கால முகங்களைப் பார்க்க உதவும் கடந்த காலச் சுவடுகள். எதிர்காலத் தலைமுறைக்கு வழிகாட்டும் பாடங்கள். வரலாற்றைக் காலக்கரையானில் செல்லரித்துப் போகவிடக் கூடாது.

ஹிந்துஸ்தான்

1938

'எம். எஸ். காமத் துவக்கிய எல்லாப் பத்திரிகைகளிலும் நாட்டுநலன் என்ற அடிப்படை சக்தி நூலிழை போல் ஊடுருவிச் சென்றது. ஹிந்துஸ்தான் தமிழ் ஏடு அவரது சேவையின் சிகரம் எனலாம்.'

– ரா. அ. ப.

ஜூலை 10, 1938



ஹிந்துஸ்தான்

ரா. அ. பத்மநாபன்

'ஹிந்துஸ்தான்' என்ற தமிழ் வார ஏடு 1938இல் தொடங்கியது. ஆறேழு ஆண்டுகள் சிறப்பாக நடந்தது. பின்னர் நிர்வாகத் திறமையின்மையினால் நலியலாயிற்று. இருந்த போதிலும், மேலும் பல ஆண்டுகள் நடந்து கடைசியில் உத்தேசமாக 1954ஆம் ஆண்டு மறைந்துபோயிற்று. இதன் முதலிரண்டு மூன்று ஆண்டுகள் அது பெற்ற புகழ், படிப்படியாகக் குறைந்து, கடைசி சில ஆண்டுகள் இருக்குமிடம் தெரியாமல் பெயரளவில் நடந்து, இருக்கிறதா மறைந்து விட்டதா என்று கூடத் தெரியாத பரிதாபகரமான நிலையில் கடைசி ஆண்டுகளைக் கழித்தது. தொடக்கத்துக்குப்பின் சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு, உத்தேசமாக 1954ஆம் ஆண்டில் முடிவாக மறைந்ததெனலாம். வியாபகமோ குறிப்பிடத்தக்க வருவாயோ இன்றி இப்படி நலிந்தும் சட்டுப்புட்டென்று அது மறையாததற்குக் காரணம் ஹிந்துஸ்தான் ஒரு லிமிடெட் கம்பெனியாக உருவானதே எனலாம். அதாவது, அதன் பங்காளிகள் முன் வந்தாலொழிய அதை மூட வழியில்லை. மேலும், அதற்கு ஒரு சில சொத்துகளும் இருந்தன; அதுவும் ஒரு காரணம்.

ஹிந்துஸ்தான் என்ற பெயருடன் இந்த வாரத் தமிழிதழைத் துவக்கியவர் எம்.எஸ்.காமத் (எம். சுப்பராய காமத்) என்ற புகழ் மிக்க சென்னைப் பத்திரிகையாளராவார். இவர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கணிதத்தில் பி.ஏ. பட்டம் பெற்றவர். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாளிலேயே, அவர், பிரபலமாகி வந்த ஹிந்து நாளிதழுக்கும் அன்னி பெஸண்ட் அம்மையார் 1914 முதல்

நடத்திய நியூ இந்தியா என்ற நாளிதழுக்கும் விஷயதானம் செய் தவர். அதுவும் அப்பத்திரிகைகளின் ஆசிரியர்களது கோரிக்கையின் பேரில். நாட்டு நடப்பு அவருக்கு அவ்வளவு அத்துபடி.

அதுமட்டுமல்ல. 'காமத், சுதந்திர இந்தியாவில் நிதி அமைச் சராகப் பதவி வகிக்கக் கூடிய அருந்திறன் பெற்றவர்' என்று பரலி. சு. நெல்லையப்பர் பாராட்டியுள்ளது காமத்தின் பலதரப்பட்ட ஆற் றலை விளக்கும்.

படிப்பு முடிந்ததும் அவர் 1915இல் நியூ இந்தியாவில் உதவியாசிரியர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காமத் துக்கு அன்னி பெஸண்டிடமும், லோகமானிய திலகரிடமும் சம மான ஈடுபாடு உண்டு. பாரத நாட்டு விடுதலைக்காகத் திலகரும் அன்னி பெஸண்டும் இணைந்து 'ஹோம் ரூல்' என்ற 'சுயாட்சி' இயக்கத்தை நடத்தியபோதுதான் பெஸண்ட் அம்மையார் நியூ இந்தியா பத்திரிகையை அந்த இயக்க நாளிதழாகத் துவக்கினார்.

அன்னி பெஸண்ட் அம்மையார் ஐர்லாந்து நாட்டுப் பெண் மணி. மதங்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட 'தியஸாபிகல் ஸொஸைட்டி' (தமிழில் - 'பிரம்ம ஞான சங்கம்') சென்னை அடையாறில் தோன்றிய சமயம் அவர் இந்தியாவுக்கு வந்து அச் சங்கத்தை நிலைநாட்டி வளர்த்தவர்களில் ஒருவரானார். பாரதியாருக்கு முதலில் பெஸண்டு அம்மையாரிடம் அவள் பிரிட்டிஷ் அரசின் வேவுகாரியோ என்ற சந்தேகம் கூட இருந்தது - 1908இல். ஆனால், பிறகு பாரதியாரே நியூ இந்தியாவில் பல அருமையான ஆங்கிலக் கட்டுரைகளையும் ஒரு சில ஆங்கிலக் கவிதைகளையும் எழுதலானார்.

அன்னிபெஸண்ட் அம்மையாரின் கை தொட்டதெல்லாம் துலங்கும் கை. இன்றளவும் அடையாறிலுள்ள தியஸாபிகல் ஸொஸைட்டியின் உள்ளே போய்ப் பார்த்தால், அங்கே இயற்கை அன்னை களிநடனம் புரிவதைக் கண்டு வியக்கலாம். ஊர் நடுவே, ஒரு பெரிய தலைநகரிலே இப்படி ஒரு சுந்தரத் தீவு. நீண்ட வயது உடைய அடையாறு ஆலமரம் தியாஸாபிகல் ஸொஸைட்டியின் உள்ளேதான் இன்றளவும் உயிருடன் இருக்கிறது. ஆலும் அரசும் தமிழகத்தின் மரங்களில் தலையாயவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆலமரம் அமைதிக்கும் அரச மரம் சலசலப்புக்கும் பெயர் போனவை. புத்தர் ஞானம் பெற்றது ஒரு வகை ஆலமரத்தின் அடியில்தான்.

நியூ இந்தியாவில் காமத் பெற்ற பயிற்சி அவருக்கு வாழ்க்கை வழிகாட்டியாக அமைந்தது.

1917இல் அன்னி பெஸண்ட் அம்மையார் தாம் தொடங்கிய 'ஹோம் ரூல்' (Home Rule) சுயாட்சி இயக்கத்துக்கு ஆதரவாகத் தமிழில் ஒரு நாளேடு வேண்டுமென விரும்பினார். அதன்படி, பெஸண்ட் அம்மையார் தந்த ரூ.3000 நன்கொடையைக் கொண்டு 'தேசபக்தன்' என்ற தமிழ் நாளிதழைச் சுப்பராய காமத் துவக்கினார். வெஸ்லி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த தமது நண்பர் திரு.வி. கல்யாணசுந்தர முதலியாரைப் பத்திரிகை உலகுக்கும் அரசியலுக்கும் இழுத்தார். திரு.வி.க. தேசபக்தன் ஆசிரியரானார்.

தேசபக்தன் தொடங்கும் போதே அரசாங்கம் 1000 ரூபாய் ஜாமீன் கட்டச் சொல்லியது. பிறகு, ஜாலியன்வாலா படுகொலையைக் கண்டித்து எழுதியதற்காக அந்த 1000 ரூபாயைப் பறிமுதல் செய்து, மீண்டும் 6000 ரூபாய் ஜாமீன் கட்ட உத்தரவிட்டது. அதையும் கட்டிப் பத்திரிகையை நடத்தி வந்தார்கள்.

திரு.வி.க. 1920இல் விலகி, 'நவசக்தி' என்ற வார ஏடு தொடங்கப் போய்விட்டார். அப்போது, புதுவை அஞ்ஞாதவாசத்திலிருந்து சென்னை வந்திருந்த வ.வே.சு. ஐயர் தேசபக்தன் ஆசிரியரானார். அவர் காலத்திலும் அரசின் இடையூறுகள் நீடித்தன. தேசபக்தன்' பண நெருக்கடியால் தத்தளித்தது. காமத் அதை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். அவரால் ஐயருக்கு நேர்ந்த தொல்லைகளும், தாம் எழுதாத ஒரு தலையங்கத்துக்காக ஐயர் 18 மாதம் சிறை வாசம் பெற்றதும் வேறு கதை.

சுப்பராய காமத்துக்கு அன்னிபெஸண்ட் அம்மையாரிடம் எவ்வளவு மரியாதை உண்டோ, அதே அளவு லோகமானிய திலகரிடமும் உண்டு. சொல்லப்போனால், திலகரிடம் அவர் நட்புரிமை பூண்டவர் என்று சொல்லலாம். 1914 முதல் 18 வரை நடந்த முதல் உலக மகாயுத்தத்தின் போது, புனாவிலிருந்த தமது நண்பர் திலகருக்குக் காமத் கடிதம் எழுதி, அரசியலுக்கு அதிக இடமில்லாத யுத்த காலத்தில் நாட்டு மக்களுக்கு என்ன சேவை செய்யலாம் என்று கேட்டார். ஒரு தனி நபர் நியாயவிலை மளிகைக் கடை நடத்தலாமே என்று பதிலளித்தார் திலகர். அவ்வாறே காமத் சென்னை ராயப்பேட்டையில் தமது இல்லத்தில் ஒரு நியாய விலை மளிகைக் கடை நடத்தினார்.

திரு.வி.கவும் காமத்தும் இணைந்து பல துறைகளில் பல பொதுநலப் பணிகளில் ஒத்துழைத்தார்கள். அதேபோல, நீதிபதி டி. சதாசிவய்யரின் உதவியுடன் 'சகோதரத்வ சங்கம்' (Brotherhood Association) என்ற ஜாதிமத பேதமற்ற சங்கத்தை நடத்தினார். இதில் திரு.வி.க.வும் பங்கு கொண்டார். தவிர, 'இந்தியத் தாயின் மக்கள்' (Sons of India) என்றொரு ஐக்கிய இயக்கமும் நடத்தினார் காமத்.

கல்வித் துறையிலும் காமத்துக்கு ஈடுபாடு உண்டு. தனி மனிதராக அவர் ஏழு இலவசப் பள்ளிகளை நடத்தினார்.

பொருளாதாரத்தில் தேர்ந்த நிபுணரான அவர் 'ராயப்பேட்டை கிரெடிட் ஸொஸைட்டி' என்ற கூட்டுறவு 'நாணய சங்கத்தை'யும் ஏற்படுத்தி, அங்கத்தினர்கள் லாபமடையுமாறு செய்தார்.

ஒரு தனி மனிதர் இவ்வாறு பல துறைகளில் ஈடுபட்டுச் சாதனை புரிந்தது வியப்பூட்டும் சாதனை எனலாம்.

திலகர் மறைவுக்குப் பின்னர், அன்னி பெஸண்ட் அம்மையாரும் அரசியலிலிருந்து விலகிவிடவே, சுப்பராய காமத், தென் ஆப்பிரிக்காவிலிருந்து பாரதம் வந்துவிட்ட காந்தியடிகளிடம் மனத்தைப் பறிகொடுத்தார். 'வாழ்க நீ எம்மான்' என்று இந்திய அரசியலின் புதிய தாரகையை வரவேற்ற பாரதியாரும் காமத்தின் தோழரே யாவார். எப்படி பாரதி, காந்தியடிகளின் அகிம்சைப் போராட்ட முறையை ஆர்வத்துடன் ஏற்றாரோ, அதே போல காமத்தும் ஏற்றார். மகாத்மாவின் தூய்மையான அரசியல் அவரைக் கவர்ந்தது. நாசவேலைகளை ஒதுக்கி, நாட்டு விடுதலைக்காகக் கத்தியின்றி ரத்தமின்றி சத்தியாக்கிரகப் போர் புரிவதுடன், நாட்டு மக்களின் வறுமையை ஒழிக்கவும், மக்களிடையே சமத்துவம் வளரவும், நாட்டு மக்களுக்கு அச்சம் போக்கி அடிமைத்தனம் நீக்கித் துணிவுடன் தியாகம் செய்யக் கற்றுக்கொடுக்கவும் காந்தியடிகள் மேற்கொண்ட எல்லா பணிகளையும் காமத் உற்சாகத்துடன் போற்றினார். முக்கியமாக, கதர், கிராமக் கைத் தொழில், ஹரிஜன (தற்சமயம் தலித் எனப்படுவோர்) முன்னேற்றம் ஆகியவற்றில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது.

காமத் தொடங்கிய எல்லாப் பத்திரிகைகளிலும் நாட்டு நலன் என்ற இந்த அடிப்படைச் சக்தி நூலிழைபோல் ஊடுருவிச் சென்றது. ஹிந்துஸ்தான் தமிழ் ஏடு அவரது சேவையின் சிகரம் எனலாம்.

முதல் மகாயுத்தம் முடிந்த சில ஆண்டுகளில், காமத் 'டு-டே' (Today; இன்று) என்ற காலணா ஆங்கில நாளிதழைத் தொடங்கினார். அன்றாடச் செய்திகளை ரத்தினச் சுருக்கமாகக் கொடுத்தது இந்த காலணா (தற்போதைய பைசாவில் 1½) 'ஃபோலியோ' அளவு (சாதாரண பத்திரிகையில் பாதி அளவு) 4 பக்க நாளிதழ். இதைப்படித்தாலே சகல செய்திகளும் கிடைத்தன. இதன் நிர்வாகப் பணிகளைத் தாம் கவனித்துக் கொண்டு, ஆசிரியப் பொறுப்பை ஐராவதம் என்ற தமது நண்பரும் சிறந்த நாளேட்டு அனுபவம் கொண்டவரிடம் ஒப்படைத்தார். காமத் தாமே சிறந்த பத்திரிகையாசிரிய ரென்றாலும், பிறரிடம் அப்பொறுப்பை ஒப்படைத்து விட்டு, பலருக்கு விளங்காத, புரியாத, பிடிபடாத பத்திரிகை நிர்வாகத்தைத் தாமே ஏற்றுக் கொண்டார். அவர் சிறந்த நிர்வாகி.

டு-டே பத்திரிகை சிறந்ததாக இருந்தாலும், எழுபது ஆண்டுகளுக்கு முந்தைய அக்காலத்தில் அதற்குப்போதிய விளம்பர ஆதரவு கிடைக்காமல் விரைவில் அது மறைந்தது. அந்நியக் கம்பெனிகளின் விளம்பரங்களே மிகுந்த அக்காலத்தில், வெள்ளையர் தேசியப் பத்திரிகைகளை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள்.

ஆபிரகாம் லிங்கன் போல, காமத், தோல்வி மேல் தோல்வி கண்டபோதிலும், சளைக்காமல் ஜோக்கர் (Joker) என்ற சிறு பிரசுரம் ஒன்றைத் தொடங்கினார். தினசரி ஏடு ஒன்றை நாலாக மடித்தபடி இருந்த அந்தச் சிறு பத்திரிகையும் அவருக்கு நிறைய புகழ் பெற்றுத் தந்தது. அதில் வந்த நகைச்சுவைத் துணுக்குகள், ஊர்வம்புகள்பற்றிப் பேசாதாரில்லை. ஆனால் அதனால் 'தம்படிக்கு லாபமில்லை'

அலுத்துப்போன காமத், 1932இல் 'தி ஸண்டே டைம்ஸ்' (The Sunday Times) என்ற ஓரணா, கிரவுண் அளவு 20 பக்கம் வம்புதும்புகள் அரசியல், வேதாந்தம், மதிப்புரை, சினிமா எல்லாக் கூறுகளும் கொண்ட வார இறுதிப் பொழுதுபோக்குப் பத்திரிகையைத் தொடங்கினார்.

கடைசி கடைசியாகக் கோலார் தங்கச் சுரங்கத்தைக் கண்டு பிடித்துவிட்டார் காமத்.

அகமும் புறமும் ஒத்தது சுகவாழ்வு என்பர். அதேபோல, தெய்விகமும் தேசியமும் கமழ, அரசியலும் நகைச்சுவையும் இழையோட, வியப்புச் செய்திகளும் காந்திய நிர்மாணத் திட்டப் பிரசாரமும் கலந்து பாய, வாழ்க்கையின் அகண்ட அனுபவங்களின்

பிரதிபலிப்பாய் ஸண்டேடைம்ஸ் விளங்கியது. அதில் மாதர் பகுதிஇல்லை. சிறுவர் பகுதிஇல்லை. ஆனால், சிறுவர் முதல் கிழவர் வரை, ஆண்களோடு பெண்களும் சரிசமமாய் ஸண்டே டைம்ஸ் இதழை விரும்பினார்கள். அதில் வந்த நகைச்சுவைப் பக்கம் அனைவரையும் மனதார, வாயாரச் சிரிக்க வைத்தது. அரசியல் புகைப்படங்கள் தேசியத் தலைவர்களை மக்களுக்குப் பழக்கப்படுத்தின. தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகள் பற்றிய சிறப்பு நிருபர் செய்திகளும், பெருந்தலைவர்கள் அவ்வப்போது அளித்த கட்டுரைகளும் காந்தி யுகத்தின் ஒப்பற்ற அம்சங்களை மக்களுக்கு எடுத்துரைத்து அரிய தேச சேவை செய்தன. ஸண்டே டைம்ஸ் சினிமாவை ஒதுக்கவில்லை. சினிமா ஒரு சாதனம்; அதை நல்வழியில் பயன்படுத்தவேண்டுமே தவிர, ஒதுக்க வேண்டிய தில்லை என்பார்.

அப்பத்திரிகையின் உதவி ஆசிரியர்களில் ஒவ்வொருவரும் மணிமணியானவர்கள். ஆளுக்கு ஒரு சமாசாரம் அத்துபடி. அரசியலோ, ஆத்மீகமோ, சினிமாவோ, காந்திய நிர்மாணத் திட்டங் களோ எதாவது ஒன்றில் ஒவ்வொருவர் தேர்ச்சி பெற்றிருப்பார்.

காமத் எல்லாவற்றையும் மேற்பார்வை பார்த்துக்கொண்டு, வருவாய், நிர்வாகம், வெளித் தொடர்புகளில் ஈடுபடுவார். அவரை அறியாத காங்கிரஸ் தலைவர்கள்இல்லை. 1938இல் காங்கிரஸ் அக்கிராசனராக இருந்த பாபு ராஜேந்திர பிரஸாத் தெற்கே வந்தார். காமத்துக்குச் சொல்லி அனுப்பி, திருவண்ணாமலையில் ரமண ரிஷிகளைக் கண்டு தரிசிக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டார். அவ்வாறே நடந்தது. இது ஸண்டே டைம்ஸ்க்கும் அதன் இளைய சகோதரி ஹிந்துஸ்தானுக்கும் எவ்வளவு பயன் பட்டிருக்கும் என்று சொல்லத்தேவையில்லை. செய்தி, படம், சிறப்பு நேர்காணல் - எல்லா வகையிலும் காமத்தின் பொதுநலச் செல்வாக்கு அவரது பத்திரிகைகளுக்கும் பயன்பட்டன.

ஸண்டே டைம்ஸ் நன்றாக விற்று, நிறைய விளம்பர வரு மானம் பெற்று, ஸ்திரமான சொந்த அச்சகம், அச்சு யந்திரங்கள், சிறந்த உதவியாசிரியர்கள் (அனைவரும் காமத்தால் பயிற்றுவிக்கப் பட்ட அனுபவசாலிகள்) - என்ற மனநிறைவு நிலை வந்த போது தான் அவர், தாம் தேசபக்தன் என்ற நாளிதழைத் தமிழில் நடத்தி, வேண்டா வெறுப்பாய் விற்க நேர்ந்ததை நினைத்து, மீண்டும் தமிழில் ஒரு பத்திரிகை முயற்சி மேற்கொள்ளத் துணிந்தார். ஆண்டு 1937.

ஹநுமான் என்ற ஒரு புதுமை வார ஏடு பக்கம் பூராவும் படங்கள் நிறைந்தது - ஆரம்பித்த சில வாரங்களில் ஆசிரியக்குழு முற்றும் விலகி, பத்திரிகையின் தன்மையே மாறி 'மாமூல் கழுதை' யாகிவிட்டதைப் பற்றி நண்பர்களிடம் அடிக்கடி சொல்வார். 1938 என்பது யுத்தம் தொடங்க ஓராண்டு இருந்த சமயம், அன்றும் விலைவாசி ஏற்றம் பயங்கரமாக இருந்தது.

ஆகையால், ஏற்கனவே ஸண்டே டைம்ஸ்க்காகச் செய்யும் புகைப்பட ப்ளாக்குகளை மீண்டும் ஒரு முறை உபயோகித்தால் வருவாய் கூடுமே, செலவுகட்டுப்படியாகுமே என்ற எண்ணத்தில் தமிழ்வாரப் பத்திரிகை தொடங்க நினைத்தார். ஐரோப்பாவில் யுத்த மேகங்கள் சூழ்ந்து வரும் இச்சமயம் புதிய பத்திரிகை தொடங்க ஏற்றதல்ல என்று பலர் கருதினார்கள். காகித விலை விஷம் போல ஏறிவரும் சமயம்; பத்திரிகைச் செலவு கட்டுபடியாகாது என்றனர். காமத் தாம் கொண்ட கருத்தில் அசையவில்லை.

புதிய பத்திரிகையின் பெயர் 'ஹிந்துஸ்தான்' என்று தீர்மான மாயிற்று. அதிலும் ஒரு எதிர்பாராத சிக்கல். காமத் அப் பெயரை தக்கபடி அரசிடம் பதிவு செய்தபின், பத்திரிகை முதல் இதழ் 1938 ஜனவரி 23 ஆம் தேதி வெளிவந்து ஓகோ என்று புகழ் பெற்ற சமயம், ஹிந்துஸ்தான் என்ற பெயரில் தாம் ஒரு தமிழ்ப் பத்திரிகையை எப்போதோ பதிவு செய்து வைத்திருப்பதாக ஒருவர் காமத்துக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார். அவரது வாதம் செல்லாது என்று தெரிந்தும், சிக்கல் கூடாது என்று காமத் அவரை அழைத்துப் பேசி சிறுதொகை கொடுத்து அவரைச் சமாளித்தார்.

அப்படித் தொடங்கிய ஹிந்துஸ்தான் அதன்பின் வீறுநடை போடலாயிற்று. வாரம் 18,000 பிரதிகள் (அக்காலத்தில் நினைக்க முடியாத ஒரு எண்ணிக்கை!) விற்றது மட்டுமல்ல, விளம்பரங்களும் வந்து குவிந்தன.

பத்திரிகையின் ஆசிரியராக முதல் ஆறு மாதத்துக்கு காமத்தின் வலக்கை போன்றவரும், ஏற்கனவே டாக்டர் வரத ராஜுலு நாயுடுவிடம் தமிழ்நாடு ஏட்டில் பயின்றவருமான ஈ.ஆர். கோவிந்தன் பொறுப்பேற்றார். ஹிந்துஸ்தான் தனது மூத்த சகோதரன் ஸண்டே டைம்ஸ் போலவே லிமிடெட் கம்பெனியாக அமைக்கப் பட்டிருந்தது. அதில் காமத்தும், புகழ் மிக்க நூல் வெளியீட்டாளர் வை. கோவிந்தனும் வேறு சில நகரத்தார் தனிகர்களும் பங்கு கொண்டிருந்தார்கள். காமத் கம்பெனியின் நிர்வாக டைரக்டரும் செயலருமாக விளங்கினார். வை. கோவிந்தன் ஒரு டைரக்டர்.

புதிய பத்திரிகை நல்ல விற்பனையுடன் வருவாயும் புகழும் பெற்றதில் அனைவருக்கும் மகிழ்ச்சி. வழக்கமாக வாரா வாரம் இருபது பக்கங்கள் தந்தது காகித விற்பனை ஏறிவந்த அக் காலத்தில் ஒரு சாதனை. அத்துடன், தேசிய நோக்கில், ராஜாஜியின் முதல் காங்கிரஸ் மந்திரிசபை ஓராண்டு காலம் பதவி வகித்துப் பல நற்சேவைகளைச் செய்ததை முன்னிட்டு 40 பக்க மலர் ஒன்று வெளிவந்தது. சேலத்தில் மதுவிலக்கு, கடன் நிவாரண சட்டம், ராமநாதபுரத்தில் 'பிர்க்கா விருத்தி திட்டம்' என்ற கிராம வளர்ச்சித் திட்டம் இவை பற்றியும், காந்தியடிகள் அறிவித்திருந்த 'வர்தா கல்வித் திட்டம்' (ஏட்டுப் படிப்புடன் கைத்தொழிலும் கற்க வசதி தரும் ஏற்பாடு) பற்றியும் அரிய கட்டுரைகள் தக்கவர்களால் எழுதப்பட்டு வெளிவந்தன.

பாரதியார் வாழ்ந்த புதுவைக்குச் சென்று இக்கட்டுரையாளர் பல கைப்பிரதிகளையும், நினைவுக் குறிப்புகளையும், பாரதி சம்பந்தமான இடங்கள், மனிதர் முதலிய புகைப்படங்களும் கொண்டு வந்து, 1938 செப்டம்பர் மாதம் 'பாரதி மலர்' வெளியிட்டார். மூத்த பாரதி அன்பர்கள் மண்டபம் ஸ்ரீநிவாஸாச்சாரியார், பரலி. சு. நெல்லையப்பர் முதலியோர் 'பாரதி வாழ்க்கைச் சுவடு'களைச் சரிவரப் பதிவு செய்து, அந்த அதிசய மனிதர் 39 வயதுக்குள் ஆற்றிய சாதனைகள் பயனுள்ள வகையில் எதிர்காலச் சந்ததிகளுக்குத் தெரிவிப்பது வரவேற்கத்தக்கது என்று ஆசி வழங்கினார்கள்.

இதே போல, வீரவிளக்கு வ.வே.ஸு. ஐயர் மலர் ஒன்றும், ரமணர் மலர் ஒன்றும் பின்னர் வெளிவந்தன. பாரதி மலர் எனது பாரதிப் பணிக்கு வித்திட்டது. என்னுடைய 'சித்திர பாரதி' என்ற விரிவான பாரதி வாழ்க்கை வரலாறு நூலின் ஆணிவேரை ஹிந்துஸ்தான் 1938, 1939, 1940, 1941 பாரதி மலர்களில் காணலாம்.

அதே போலவே, வீர விளக்கு வ.வே.ஸு. ஐயரது வாழ்க்கை வரலாறு நூல் ஆங்கிலத்திலும் தமிழிலும் மராட்டியிலும் டெல்லி நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டுள்ளதன் மூலவேர்களும் ஹிந்துஸ்தான் ஐயர் மலர்களில் துலங்குகின்றன.

ஹிந்துஸ்தான் 20 பக்கங்களில், சிறுவர் பகுதி, தொடர் கதை, சிறுகதை, அரசியல் குறிப்புகள், அரசியல் விமர்சனம், எல்லாம் வெளிவந்தன. தொடர்கதைகளில், ஸ்வாமி சுத்தானந்த பாரதி, புதுவை அரவிந்தாசிரமத்திலிருந்தும், பிறகு புதுக்கோட்டை

ராமச்சந்திர புரத்திலிருந்தும் அனுப்பி வந்த 'ஏழை படும் பாடு' குறிப்பிடத்தக்கது. இது பிரெஞ்சு ஆசிரியர் விக்தர் ஹ்யூகோவின் 'லே மிஸராப்ளே' என்ற புகழ்பெற்ற நூலின் தமிழாக்கமாகும். அது முடிந்த பின், அதே பிரெஞ்சு ஆசிரியரது மற்றொரு படைப்பான 'தி லாஃபிங் மான்' என்ற தலைப்புள்ள நகைச்சுவையும் கண்ணீரும் கலந்த நவீனத்தை 'இளிச்சவாயன்' என்று தமிழ்ப்படுத்தித் தந்தார். ஒவ்வொரு தொடரும், கிட்டத்தட்ட ஒரு வருடம் ஓடின.

சிறுகதை ஒரு பக்கம், தவறினால் நாடகம் என்று ஹிந்துஸ்தான் அக்காலத்திய முக்கிய எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு அளித்தது. 'மாதுளை மொக்கு' என்ற ஓரங்க நாடகத்தை கு.ப. ராஜகோபாலன் எழுதியுள்ளார். தஞ்சை ஆத்மநாதன், 'மனோஹர்' (ரா.அ.ப.), எஸ்.என். ஸ்ரீநிவாஸன் முதலியர்கள் சிறுகதை எழுதிப் பெயர் வாங்கினார்கள். கோவை ஆர். திருஞானம் புதிய கவிஞராக மலர்ந்தது ஹிந்துஸ்தானில் தான்.

இப்படி அடுக்கிக்கொண்டே போவதை விடச் சாதாரணமாக ஹிந்துஸ்தானில் வந்த தலைப்புகள் சிலவற்றைப் பாருங்கள்:

'சிந்தனைச் சிதர்' - எழுதுவது 'ஊசி மிளகாய்' அரசியல் விமர்சனம்.

'கண்ணோட்டம்' - அகில இந்திய அரசியல் பற்றி.

'வேடிக்கைத் தபால்' - பத்திரிகைகளில் அடிபடும் சிலருக்கு நையாண்டிக் கடிதங்கள்.

அரவிந்தாசிரமத்தைச் சேர்ந்த 'அமுதன்' என்ற முதியவர் பாரதியைப் பற்றியும், பாரதி படைத்த சில நபர்களைப் பற்றியும் நிறையவே எழுதியிருக்கிறார். இவை இன்னும் நூல் வடிவு பெறவில்லை.

அறிஞர் வ.ரா. எழுதியுள்ள ஏராளமான கட்டுரைகளும் அவ்வாறே உள்ளன. பாலர் பக்கங்களில் வந்த கதைகள், துணுக்குகள், செய்வினைப் படங்கள், தந்திரக் கணக்குகள் முதலியவை இன்றைய பாலர்களையும் ஈர்க்கும் தன்மையவை. இவற்றையும் தொகுக்கலாம். இன்னும் சிலவும் கவனத்திற் குரியவையே.

இவ்வளவு சீரும் சிறப்பும் மிக்கதாய்த் துலங்கிய ஹிந்துஸ்தான் பத்து மாதம் வாழ்வு வாழ்வதற்கு முன், அதற்கு ஒரு பேரிடி நேர்ந்தது. அதை நிறுவியவரும், அதன் வளர்ச்சியில் அளவிலாத

மகிழ்ச்சியுடன் அனைவரையும் ஊக்கி வந்தவருமான எம். சுப்பராய காமத், திடீரென்று மறைந்தார். மாரடைப்பு வரக் காரணமே இல்லாத மனிதர் என்றுதான் டாக்டர்கள் சொன்னார்கள்!

அவர் மறைந்ததுமே ஸண்டே டைம்ஸ், ஹிந்துஸ்தான் இரண்டின் ஆதிக்கத்தைப் பெற அதன் டைரக்டர்களிடையே போட்டி நடந்தது. இதில் முக்கியப் போட்டியாளர்களாக வை. கோவிந்தனும், கோட்டையூரைச் சேர்ந்த ராமன் செட்டியார் என்ற ஒரு தனிகரும் விளங்கினார்கள். வை. கோவிந்தன் பத்திரிகை உலகும் புத்தக வெளியீட்டு உலகும் போற்றிய அருந்திறன் கொண்டவர். ஆனால் நிர்வாக டைரக்டராக ராமன் செட்டியார் வென்றார். பத்திரிகைகளின் க்ஷீண தசை தொடங்கிவிட்டது.

ஏற்கெனவே கூறியபடி, ஹிந்துஸ்தானும் ஸண்டே டைம்ஸும் நலிந்து மறைந்தன. தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு தாரகை மறைந்தது. ஆங்கிலப் பத்திரிகை உலகின் அரிய வார இதழும் மறைந்தது. தமிழகம் கொடுத்துவைத்தது அவ்வளவுதான் போலும்.

ஹிந்துஸ்தான் ஆசிரியக் குழுவில் முதல் ஆறுமாதத்துக்கு ஆசிரியராக விளங்கிய ரா. நாராயணன் (பி.ஏ. பி.எல்.), கே.பி. ஹரன் (தமிழ்நாடு ஏட்டில் பயின்றவர்), கே. சடகோபன் ('சிந்தனைச் சிதர்' எழுதிய 'ஊசி மிளகாய்'), மற்றுமுள்ளவர்களும், நானும், சித்திரக்காரரும் நிறைய அரசியல் கார்ட்டூன்கள் போட்டவருமான கோபி என்பவரும், மற்றிருந்தோரும் சிறிது காலத்தில் வெவ்வேறிடம் போய்விட்டோம்.

கடைசியாக, சென்னை பீட்டர்ஸ் ரோடில் ஒருஇல்லத்தில் ஹிந்துஸ்தான் லிமிடெட்டின் கடைசி மூச்சு பிரிந்தது. வருடம், ஏற்கனவே கூறியபடி, 1954. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை. ஆயினும், பழைய சோறும் பயனுள்ளதுதானே!

இந்திய விடுதலையும் தமிழ் இதழ்களும்

ந. கடிகாசலம்

> இந்திய விடுதலைக் கிளர்ச்சியும் தமிழ்ப் பத்திரிகைத் துறையும் இணைந்தே வளர்ந்தன. ஆம்! ஏனெனில் அவை இரட்டைக் குழந்தைகள் (ம.பொ.சி.).[1]

அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த வேளையில், உறங்கிக் கிடந்த நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி, சுதந்திரக் காற்றினைச் சுவாசிக்க வைக்க வேண்டிய நிர்ப் பந்தம் உருவாயிற்று. இப்பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு, கடமையைச் செவ்வனே நிறைவேற்றும் கடப்பாடு பத்திரிகை களுக்கு நேரிடலாயிற்று. இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தமிழ் இதழ்கள் குறித்து, சுருங்க இக்கட்டுரையில் காண்போம்.

உரிமைப்போரும் கேடயமும்

பொதுவாகவே, போர் நடந்த காலம் இதழ்களின் பொற் காலம் என்று கூறப்படுவதுண்டு.

இந்தியத் திருநாட்டில் நிகழ்ந்த விடுதலை உரிமைப் போரும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

> உரிமைப்போரோ மக்களின் போர். இந்திய மக்கள் ஒவ்வொரு வருமே இந்தப் போரில் கலந்து கொண்டார்கள். இந்தப் போருக் கென்றே இதழ்கள் தோன்றின. ஒரு போர்க் கருவியாக இதழ்கள் பயன்பட்டன. போரில் ஈடுபட்டவர்களும் இதழ்களை நடத்தி னார்கள். இந்த இதழ்களின் ஆசிரியர்களாக இருந்தவர்களில் பலர் உரிமைப்போரில் சிறை புகுந்தவர்கள். இதழிலே எழுதி

அதன் காரணமாகச் சிறை சென்றவர்களும் உண்டு. இந்திய உரிமைப்போரில் வாளாகவும் கேடயமாகவும் இதழ்கள் பயன் பட்டன [2]

எனும் கூற்று சுருங்கக் கூறி விளங்க வைக்கிறது.

துதிபாடிகள்

இத்தகைய விடுதலை உணர்வு உருப்பெறுவதற்கு முன்பு கிறித்தவப் பெரியார்கள் இதழ்களை நிறுவி, தத்தம் சமயத்தைப் பிரச்சாரம் செய்யும் நிலையில் கட்டுரைகளை எழுதி வெளியிட்டனர். இந்திய விடுதலை உணர்வு அரும்பிய பின்னரும் ஆங்கிலேய ஆட்சியாளர்களைக் குளிரவைக்கும் போக்கில் அவர்களுக்கு ஆதரவாகச் சிலர் பத்திரிகை நடத்தியது மறந்துவிடக் கூடியதல்ல. ஆங்கிலேயரை ஆதரித்தால் மட்டுமே பத்திரிகை நடத்த முடியும் என்பதும் எதிர்த்தால் இன்னலுக்கு ஆளானதும் இதற்குக் காரணமாகலாம். 1870இல் தொடங்கப்பட்ட ஜன விநோதினி, 1868இல் தொடங்கப்பட்ட மெட்ராஸ் மெயில் ஆகிய இரண்டு இதழ்களும் ஆங்கிலேயர்க்கு ஆதரவாகச் செயல்பட்டன.

ஆங்கிலேயர் எதிர்ப்பும் தேசிய இதழ்களும்

இந்திய மக்களின் எண்ணங்களை வெளியே எடுத்துக் கூறுவதற்கென்று இதழ்இல்லாதது பெருங்குறையாகத் தென்பட்டது. இக் குறையைப் போக்கும் வகையில் உதயமானதுதான் கிரஸென்ட். இதனைத் தொடர்ந்து இந்து இதழ் தோற்றம் கண்டது. வார இதழாகத் தோன்றி நாளேடாகப் பரிணமித்த இவ்விதழுக்கும் இந்திய விடுதலை உணர்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பது வரலாறு. பின்னர், மெட்ராஸ் ஸ்டாண்டர்டு எனும் நாளிதழ் தோற்றம் கண்டது. 1882இல் சுதேசமித்திரன் வார இதழாகத் தொடங்கி, 1899இல் நாளிதழாக மாறியது குறிப்பிடத்தக்கது.

தாய்மொழிப் பத்திரிகைகள்

'ஈசுவர சேவையைவிட தேச சேவையே உயர்ந்தது' என்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழ்கள் தமிழகத்தில் வெளிவரத் தொடங்கின. தாய்மொழிப் பத்திரிகைகளுக்கு ஆங்கிலேயர் விதித்திருந்த கட்டுப்பாடுகள் குறித்து ஆராய்ந்த மெட்கால்ப் (Metcalfe) என்பவர் 1835இல் வழங்கிய அறிக்கையில்,

> If India could be preserved as a part of the Biritsh Empire only by keeping its inhabitants in a state of ignorance, our domination would be a curse to the country and ought to cease.

என்று தெரிவித்ததோடு, பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அடியோடு நீக்கியும் விட்டார். இதன் விளைவாக, தாய்மொழிப் பத்திரிகைகள் அச்சு வாகனம் ஏறத் தடையேதுமில்லாமல் போய் விட்டது. 1876இல் தாய்மொழிப் பத்திரிகைச் சட்டம் நிறை வேற்றப் பட்டதை அடுத்து, அவை அடக்குமுறைக் கொடுமைக்கு ஆட்பட நேரிட்டது. 'நெருப்பாற்றின் மீது மயிர்ப்பாலத்தில் நடப் பதை ஒத்திருந்தது'[4] என அக்காலத்தில் பத்திரிகை நடத்துவதை தாருல் - இஸ்லாம் பத்திரிகையின் ஆசிரியர் தாவூத் ஷா குறிப் பிடுகிறார்.

> அடக்குமுறைகளைத் தாங்கிக் கொண்டோ, எதிர்த்துக் கொண்டோ, பார்த்துக் கொண்டோ இந்திய இதழ்கள் வளர்ச்சி அடைந்தன. பூனை இருக்கும் வீட்டில் எலியும் போராட்டத்திற்கு இடையே குடும்பம் நடத்திக் குட்டிப் போடுவது போல[5]

எனும் கூற்று சிந்திக்கத்தக்கது.

முதல் இதழ்

அரசியல் அதிகார வர்க்கத்தின் கொடுமைகளை எதிர்ப்பது என்பது சுதேசி பத்திரிகையின் நோக்கமாக இருந்தது. தமிழ் மட்டுமே அறிந்தவர்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஊட்டு வதில் தமிழ் இதழ்கள் தலையாய பணியாற்றின. இனி, அவற்றில் குறிப்பிடத்தக்க இதழ்களின் பணி பற்றிக் காண்போம்.

தினவர்த்தமானி

1856இல் தொடங்கப்பட்டது. தமிழில் வெளியான முதல் வார இதழ் எனும் பெருமை இதற்குண்டு. விக்டோரியா அரசியின் பதவியேற்பின்போது வாணவேடிக்கைக்குச் செலவிடப்பட்ட தொகையை ஏழைகளுக்குச் செலவிட்டிருக்கலாம் (21.10. 1876) என்று கடுமையாக விமர்சனம் செய்ததை மறத்தல் கூடாது.

நேடிவ் பப்ளிக் ஒபினியன்

1870இல் சென்னையில் தொடங்கப்பட்டது. சர்.டி. மாதவன், திவான்பகதூர் ரெங்கநாதன் ஆகிய இருவரின் கூட்டு முயற்சியில்

விளைந்தது. சுதேச மக்கள் கருத்து எனும் பொருள்படும் இவ்விதழ், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளில் மக்களின் குரலை ஒலிக்கச் செய்திட்ட முதல் இதழ் எனும் பெருமைக்கு உரியதாகிறது.

சேலம் சுதேசபிமானி

1877இல் வெளிவரத் தொடங்கியது. மாவட்டச் செய்திகளுக்காகத் தொடங்கப்பட்ட இவ்விதழில், 'குடிகளுடைய கஷ்ட நிஷ்டூரங்களை உள்ளது உள்ளபடி' அரசுக்கு எடுத்தோதுவதில் முன்நின்றது. 1878இல் அரசு முன்வைத்த தாய்மொழி இதழ்கள் சட்டத்தை வெகுவாகச் சாடியது:

> நாட்டின் காவலனாக விளங்கும், இதுநாள் வரை இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பத்திரிகைச் சுதந்திரம், இப்பொழுது பறிக்கப்பட்டுவிட்டது. நாட்டுமொழி இதழ்களை அதிக அளவில் படித்து மக்கள் அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபடக் கூடும் என்ற காரணங்கூறி, பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்து இருக்கிறது. இச்சட்டம் நாட்டுமொழிப் பத்திரிகைக்குச் சாவு மணியாக அமையும். (1.4.1878)

சுதேசமித்திரன்

1882இல் வார இதழாகத் தொடக்கம் கண்டது. 1899இல் நாளேடாக மாறியது. ஜி. சுப்பிரமணிய ஐயர் நிறுவிய இவ்விதழ், தமிழகத்து முதல் அரசியல் இதழாகும். தலையங்கங்களின் வாயிலாக, காங்கிரசு தோற்றுவித்த அரசியல் விழிப்புணர்வினை மக்களுக்கு ஊட்டியதில் பெரும் பங்காற்றியது. இவ்விதழ் மூலமாக ராஜத்துரோகம் செய்ததாக, ஆசிரியர் ஐயர் கைது செய்யப்பட்டார். ஐயர் எழுதிய கடுமையான தலையங்கம் ஒன்று இதோ:

> நம் தேசக் கடைகளில் அரிசி, பருப்பு, காய்கறி தவ்ர, மற்றவை எல்லாம் ஆங்கிலேயர் சாமான்களேயன்றி நமது சாமான்கள் அல்லவே! அப்படிப்பட்ட சாமான்களைச் சிருஷ்டிக்க நமது தேச மக்களுக்குத் திறமையில்லையே; ஐக்கியமில்லையே; தைரியமில்லையே; ரோஷமில்லையே!; (4.5.1887)

இதைப் படிக்கும் ஆங்கில ஆட்சியாளருக்குக் கோபம் வராமலிருக்குமா?

> திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட வெள்ளையரைக் கூட விசா ரணை செய்யும் உரிமை இந்திய அதிகாரிகளுக்கு மறுக்கப் பட்டுள்ளது இந்து சமுதாயத்தையே அவமதிப்ப தாகும்.

என்று 1883இல் அது சாடியிருப்பது சுட்டத்தக்கது.

தமிழ் நேஷனல் பத்திரிகை

1907இல் தூத்துக்குடியிலிருந்து வெளிவந்த மாத இதழ் இது. 'இதில் சுதேசி விஷயமாயுள்ள சமாசாரங்களும், இராசாங் கத்து விஷயங்களும்... இன்னும் மற்ற அநேக விஷயங்களும் பிரசுரிக்கப்படும்' என முழக்கமிட்டது. வ.உ.சி.யின் சுதேசி கப்பல் சங்கம் குறித்த விவரங்களை இது வெளியிடத் தவறவில்லை.

இந்தியா

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து 'நெருப்பு மழை' பொழிந்த முதல் தமிழ் இதழ். 1908இல் சென்னையிலிருந்து வெளி வந் தது. ஆசிரியர் பாரதியார்.

> பாரதியாரின் இயற்கையான ஆவேச நடையும் ஆளுமையும் 'இந்தியா'வைச் சக்தி வாய்ந்த இதழாகச் செய்தது. கார்ட்டூன்கள் இந்தியாவின் பிரசார எரிசரங்களாக விளங்கின.

எனும் கூற்று இவ்விதழின் ஆற்றலைத் தெளிவாகச் சுட்டுகிறது. 'தென்னாட்டைத் தட்டி எழுப்பிய பெருமை இவ்விதழுக்கு உண்டு' என்று திரு.வி.க. பாராட்டுகிறார்.

விஜயா

1909இல் தொடங்கப்பட்டது. 'தமிழ் ஜனங்கள் அறிவு, செல்வம், வல்லமை, ஸ்வதந்திரம் முதலிய நன்மைகளனைத்தும் பெற வழிகாட்டுவது' என ஆசிரியர் பாரதியார் குறிப்பிட்டிருக் கிறார். முனைப்பான தீவிரவாதிகளின் இதழ் என்று கருதப்பட்டது விஜயா.

சூரியோதயம்

1908இல் தொடங்கிய இவ்விதழின் துணையாசிரியர் பரலி. சு. நெல்லையப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. 'சுதந்திரம் இல்லை யேல் முன்னேற்றம்இல்லை' என்பது இப் பத்திரிகையின் குறிக் கோளாக இருந்தது.

ஞானபாநு

1913இல் தொடங்கப்பட்ட இதழைச் சுப்பிரமணிய சிவா நடத்தினார் - மனைவி மீனாட்சி பெயரில்.

> உறங்கிக் கிடக்கும் தமிழ்ச் சாதியாரை அறிவாகிய சாட்டையால் அடித்து எழுப்பி, அவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தை யும் உண்டுபண்ணி, அவர்களை முன்னிலையிற் கொண்டு வர வேண்டும் என்பதே இப்பத்திரிகையின் நோக்கம் (சூன் 1915)

என்று சிவா தெரிவித்திருக்கிறார். சிவா சிறை சென்ற நேரங்களில் வ.உ.சி. இப்பத்திரிகைக்குப் பொறுப்பாசிரியராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

தேசபக்தன்

1917இல் தொடங்கப்பட்டது. ஆசிரியர் திரு.வி.க. நாளித ழான தேசபக்தன் பெயருக்கேற்பவே செயல்பட்டான். 'தேசபக்தன் சுதந்திரத்தை விரும்புகிறான். சுய ஆட்சி கேட்கிறான்' (7.3. 1918) என்று திரு.வி.க. குறிப்பிடுகிறார்.

நவசக்தி

1920இல் வார இதழாக வெளிவந்தது. திரு.வி.க. ஆசிரியர் பொறுப்பில் இருந்து நடத்தினார். தொடர்ந்து இருபது ஆண்டு களுக்கு இவ்விதழின் மூலம் உரிமைப் போர்க்குரலை ஒலிக்கச் செய்தார்.

தமிழ்நாடு

1919இல் சேலத்தில் வார இதழாகத் தோன்றியது. 1927 இல் நாளிதழ் ஆயிற்று. ஆசிரியர் பா. வரதராசலு. 'விடுதலைப் போரில் வெடிகுண்டு' என விளங்கியதாக இவரைக் குறிப்பிடுவ துண்டு. இவரது தலையங்கங்களை இந்து, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களும் எடுத்தாண்டது நினைவு கூரத்தக்கது.

ஊழியன்

1920இல் காரைக்குடியிலிருந்து வெளிவந்த தனவைசிய ஊழியன் பிறகு ஊழியன் என்று மாற்றம் கண்டது. செட்டி நாட்டின் பங்களிப்பு இது. ஆசிரியர் ராய. சொக்கலிங்கம், காந்தியை தலை வராக ஏற்று, விடுதலைப் பிரசாரத்தில் துணிகரமாக ஈடுபட்டது இதன் சிறப்பு.

மேலும் சில

இவ்வாறு இந்திய விடுதலைப் போரில் மக்களை வீறு கொள்ளச் செய்து தொண்டாற்றிய பெருமை படைத்தவற்றுள் சுதந்திரச் சங்கு (1930), காந்தி (1931), ஆனந்த விகடன், தினமணி, ஜனசக்தி ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

விடுதலைப் போராட்டத்துக்கு உரமிட்டு நீர் பாய்ச்சிய தமிழ் இதழ்கள் எண்ணிறந்தன. காலத்தின் கோலத்தை, ஆங்கிலேயரின் அவலத்தைத் தோலுரித்துக் காட்டியதோடு, இந்திய நாட்டு மக்களை உறக்கத்திலிருந்து விழித்தெழுமாறு செய்து, சுதந்திரக் கனி பறிக்கத் தூண்டியும் விட்டன. இதில் அவை முழு வெற்றியடைந்தன. இந்திய விடுதலைப் போராட்டமும் இதழ்களும் நெருங்கிய உறவு கொண்டு விளங்கின என்ற உண்மையை மட்டும் மறுப்பதற்கில்லை.

குறிப்புகள்

1. ம.பொ. சிவஞானம், விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப.224
2. அ.மா. சாமி, தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி, ப.206
3. B.S. Kesavan, History of Printing and Publishing in India Vol.I, p.68
4. தேசியம் வளர்த்த தமிழ், ப.136
5. தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி, ப.127
6. பெ.சு. மணி, சுதந்திரத்துக்குப் பாடுபட்ட பேனாக்கள், தினமணி சுதந்திரப் பொன்விழா மலர், 1997, ப.143

பயன்பட்ட நூல்கள்

தமிழ்

1. சம்பந்தன், மா.சு., தமிழ் இதழியல் வரலாறு, தமிழர் பதிப்பகம், சென்னை, 1987

2. சாமி, அ.மா., தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி, நவமணி பதிப்பகம், சென்னை, 1987

3. சிவஞானம், ம.பொ., விடுதலைப் போரில் தமிழ் வளர்த்த வரலாறு, இன்ப நிலையம், சென்னை, 1970

4. சுப்பிரமணியன், ச.வே. (பதி.), திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை, 1977

5. திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1974

ஆங்கிலம்

Kesavan. B.S., History of Printing and Publishing in India, Vol.I, National Book Trust, New Delhi, 1985

கட்டுரையாளர்

1.	அதியமான், பழ.	நிகழ்ச்சிப் பொறுப்பாளர் சென்னை வானொலி நிலையம் சென்னை – 600 004.
2.	அரசு, மா.ரா.	தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி சென்னை – 600 030.
3.	கனக சுந்தரம், வெ.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை இராணி மேரி கல்லூரி சென்னை – 600 004.
4.	கடிகாசலம், ந.	இணைப்பேராசிரியர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை – 600 113.
5.	குமாரி, சி.	விரிவுரையாளர் தமிழ்த்துறை அண்ணா ஆதர்ச மகளிர் கல்லூரி சென்னை – 600 040.
6.	குருநாதன், இராம.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி சென்னை – 600 030.
7.	செயப்பிரகாசு, நா.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி சென்னை – 600 030.
8.	தனசேகரன், பொன்.	முதுநிலை செய்தியாளர் தினமணி சென்னை – 600 002.
9.	நாகலிங்கம், அ.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை இந்துக் கல்லூரி பட்டாபிராம் சென்னை – 600 072.

10.	பத்மநாபன், ரா.அ.	61, கடற்கரைச் சாலை இலட்சுமிபுரம் திருவான்மியூர் சென்னை – 600 041.
11.	பூரணச் சந்திரன், க.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை பிஷப் ஈபர் கல்லூரி திருச்சி – 620 017.
12.	மணி, பெ.சு.	11, இராம கிருஷ்ணாபுரம் இரண்டாவது தெரு மேற்கு மாம்பலம் சென்னை – 600 033.
13.	மதிவாணன், பா.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை கரந்தைக் கலைக் கல்லூரி தஞ்சாவூர் – 613 002.
14.	வளவன், சா.	இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி சென்னை – 600 030.

பதிப்பாசிரியர்

1.	சுந்தரமூர்த்தி, இ.	பேராசிரியர் – தலைவர் தமிழ் மொழித்துறை சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை – 600 005.
2.	அரசு, மா.ரா.	தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி சென்னை – 600 030.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்
சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்மொழித் துறையும்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையமும்

இணைந்து நடத்தும்

இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

கருத்தரங்க அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம்.

இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழித்துறையில் (மெரினா வளாகம் திருவள்ளுவர் சிலை எதிரில்) 13, 14.10.97 ஆகிய இரு நாட்களில் நடைபெற உள்ளது.

அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை

இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம், சென்னை